டாக்டர் பஞ்சாவின்

மாஸ்டர் - கீ

டு

ஹோமியோபதிக்

மெட்டீரியா மெடிகா

இரண்டாம்

பாகம்

ஆசிரியர்

S. சுப்பிரமண்யம்.

மாஸ்டர் கீ

டு

ஹோமியோபதிக்

மெட்டீரியா மெடிகா

(இரண்டாம் பாகம்)

—(o)—

மூல ஆசிரியர்
டாக்டர் K. C. பஞ்சா.

தமிழ் ஆக்கம்
டாக்டர் V. S. சுப்ரமண்யம்,
டைரக்டர், தி ஹோமியோபதி ஹௌஸ்,
மதராஸ்-28.

—(o)—

(உரிமை பெற்றது)

—(o)—

Published by
THE HOMOEOPATHY HOUSE
MADRAS-28.

—(o)—

1956.

First Edition April 1956

TAMIL TRANSLATION
COPY RIGHTED
BY
THE PUBLISHERS.

Printed by V. Kuppusami Chetty at Sri Rama & Co.,
(Bharathamata Press), 39, Anderson St., Madras-1.

பொருள் அடக்கம்

ஔஷதங்களின் பெயர்கள்		பக்கம்
அக்னஸ் காஸ்டஸ்	....	435–437
அங்குஸ்டுரா	....	444–445
அப்ஸிந்தியம்	...	435
அபிஸ் மைக்ரா	....	,,
அபோஸினம் கன்னபினம்	....	445–446
அம்ப்ரா க்ரிஸியா	...	440–441
அம்மோனியம் காஸ்டிகம்	....	441–442
அம்மோனியம் மூரியாடிகம்	....	442–443
அமிலெனம் நைட்ரோஸம்	....	443–444
அர்ஜண்டம் மெட்டாலிகம்	....	446–448
அரேலியா ரஸிமோஸா	....	446
அல்லியம் ஸடீவம்	....	438–439
அலுமென்	....	440
அஸ்டெரியாஸ் ரூபென்ஸ்	....	452–453
அஸபோடிடா	....	449–450
அஸாரம் யுரோபியம்	....	451–452
ஆக்ஸாலிக் ஆஸிட்	....	533–534
ஆரம் மூரியாடிகம் நேட்ரநேட்டம்	....	453
இரிடியம்	....	502
எக்இனீஷியா அங்குஸ்டிபோலியா	...	494
எக்ஸ்–ரே	....	583–584
எலாப்ஸ் கொரால்லினஸ்	....	495
ஐலாந்தஸ்	....	437–438
ஓபியம்	....	139–147
ஓவியாண்டர்	....	531–533
ஔஷிமம் கானம்	....	530–531
க்ரடேகஸ்	....	483

க்ரனேடம்	....	498
க்ரொடேலஸ் ஹாரிடஸ்	....	485–488
க்ரோகஸ் ஸடீவா	....	483–485
க்ரோடன் டிக்லியம்	....	489–491
க்ளோனுயின்	....	496–498
கல்கேரியா அயோடேட்டா	....	462
,, ஆர்ஸனிகா	....	,,
,, ஸல்ப்யுரிகா	....	463
கலேடியம் ஸெகினம்	....	460–461
கன்னபிஸ் இண்டிகா	....	466–467
கார்டுஸ் மரியேனஸ்	....	470
கார்பாலிகம் ஆஸிடம்	....	467–470
காலி ஆர்ஸெனிகோஸம்	...	504
,, ப்ரொமேடம்	....	504–507
,, மூரியாடிகம்	....	507–508
,, ஸல்ப்யுரிகம்	....	508–509
காலின்ஸோனியா கனடென்ஸிஸ்	...	481
காலெண்டுலா	...	463–465
காலோட்ரோபிஸ்	...	465–466
கொராலியம் ரூப்ரம்	...	482–483
கோக்கஸ் காக்டி	...	480
கோகா	...	478–480
கோபைவா	...	482
கோலெஸ்டெரினம்	...	475
சிமாபிலா அம்பெல்லேடா	...	472–474
சின்னினம் ஆர்ஸனிகோஸம்	...	474–475
செனபோடியம் ஆந்தல்மெண்டிகம்	...	472
ஞாபால்லியம்	...	498
ட்யுபர்குலினம்	...	413–419
ட்ரில்லியம் பெண்டுலம்	...	575–577
டபாகம்	...	559–56

டாரெண்டுலா க்யுபன்ஸிஸ்	...	561–562
,, ஹிஸ்பானியா	...	562–564
டிப்தெரினம்	...	492–493
டெரெபிந்திஞ	...	566–568
டெல்லூரியம்	...	564–566
டோலிகோஸ் பூரியென்ஸ்	...	493–494
த்லாஸ்பி பர்ஸா பெஸ்டோரிஸ்	...	571–573
தூஜா	...	396–412
தெரிடியன்	...	568–571
தைராய்டினம்	...	573–575
நக்ஸ் மாஸ்சாடா	...	527–530
,, வாமிகா	...	128–139
நாஜா	...	525–527
நேட்ரம் கார்பானிகம்	...	90– 96
,, பாஸ்பாரிகம்	...	107–110
,, மூரியாடிகம்	...	97–107
,, ஸல்ப்யூரிகம்	...	110–116
நைட்ரிக் ஆஸிட்	...	116–128
ப்ரூனஸ் ஸ்பைனோஸா	...	538–539
ப்ளம்பம்	...	186–192
ப்ளாட்டா ஓரியண்டாலிஸ்	...	457
பரீரா ப்ரவா	...	534–535
பல்ஸடில்லா	...	208–216
பாடியாகா	...	454
பாரிடா அயோடடா	...	455
,, மூரியாடிகா	...	,,
பாஸ்பரஸ்	...	160–172
பாஸ்பாரிக் ஆஸிட்	...	154–160
பிக்ரிக் ஆஸிட்	...	178–181
பிளாட்டினம் மெட்டாலிகம்	...	181–186
பிஸ்மதம்	...	455–456

புபோ ர்ரஞ	...	459–460
பெட்ரோலியம்	...	147–154
பெட்ரோஸெலினம்	...	536
பைடோலக்கா	...	172–178
பைரோஜன்	...	216–223
பைஸோஸ்டிக்மா	...	537–538
போடோபில்லம்	...	192–199
போவிஸ்டா	...	457–459
மங்கானம் அஸடிகம்	...	514–517
மலாண்ட்ரினம்	...	513–514
மாரம் வேரம் டுக்ரியம்	...	42– 46
மில்லபோலியம்	...	520–522
மூரியாடிக் ஆஸிட்	...	86– 90
மூரெக்ஸ் பர்பூரியா	...	524–525
மெக்னீஷியா கார்பானிகா	...	25– 30
,, பாஸ்பாரிகா	...	36– 41
,, மூரியாடிகா	...	30– 36
மெதாரினம்	...	46– 58
மெபைடிஸ்	...	519–520
மெர்கூறியஸ் கரோஸிவஸ்	...	58– 65
,, ஸயனைட்	...	65– 67
,, ஸொலுபுலிஸ்	...	67– 78
மெலிலோடஸ்	...	518–519
மெஸெரியம்	...	78– 85
மோஸ்சஸ்	...	522–523
யுரேனியம் நைட்ரிகம்	...	577
யூபடோரியம் பர்போலியேட்டம்	....	495–496
யூர்டிகா யுரென்ஸ்	...	577–578
ரடான்னியா	...	541
ரஸ் டாக்ஸிகோடெண்ட்ரன்	....	234–247
ரஸ் வெனெடா	...	542

ரானங்குலஸ் பல்போஸஸ்	...	539–541
ரினினஸ் கம்யுனிஸ்	...	542–543
ரீயம்	...	224–227
ரூடா க்ராவியோலென்ஸ்	....	256–262
ரூமெக்ஸ் க்ரிஸ்பஸ்	....	248–255
ரொபீனியா	....	543
ரோடோடெண்ட்ரன்	...	227–234
லாக்டிகம் ஆஸிடம்	...	509
லாபிஸ் ஆல்பஸ்	....	510
லிதியம் கார்பானிகம்	...	513
லியம் டிக்ரினம்	....	511–513
லெப்டாண்ட்ரா	...	510–511
லகபோடியம்	...	13– 25
லொபேலியா இன்ப்ளேடா	....	9– 13
வலேரியானு	...	578–579
வின்கா மைனர்	....	581–582
விஸ்கம் ஆல்பம்	...	583
வெர்பாஸ்கம்	...	580–581
வெராட்ரம் ஆல்பம்	...	420–428
,, விரைட்	...	579–580
வைபுர்னம் ஓபுலஸ்	...	581
வைபேரா	...	582–583
ஜட்ரோபா	...	502–504
ஸ்ட்ரமோனியம்	...	351–359
ஸ்ட்ரிக்னினம்	...	556–557
ஸ்டாபிஸாக்ரியா	...	343–350
ஸ்டான்னம் மெட்டாலிகம்	...	333–343
ஸ்டிக்டா	...	554–555
ஸ்டில்லிங்கியா	...	555–556
ஸ்பாஞ்சியா டோஸ்டா	...	327–332
ஸ்பைஜீலியா	...	320–327

ஸபடில்லா	...	544–546
ஸபீனு	...	262–270
ஸர்ஸபரில்லா	...	552–554
ஸல்ப்யுரிக் ஆஸிட்	...	374–381
ஸல்பர்	...	359–374
ஸாங்வினேரியா கனடென்ஸிஸ்	...	270–280
ஸாண்ட்டோனினம்	....	551–552
ஸாம்புகஸ்	...	546–548
ஸானிகுலா	....	548–551
ஸிங்க்கம் மெட்டாலிகம்	....	428-434
ஸிபிலினம்	...	381–396
ஸிம்பிடம்	....	557–558
ஸிமெக்ஸ்	...	475
ஸின்னமோனம்	...	477
ஸின்னுபரிஸ்	...	476–477
ஸிஸ்டஸ் கனடென்ஸிஸ்	...	477–478
ஸீகேல் கார்னூட்டம்	...	281–288
ஸீயனோதஸ் அமெரிகேனஸ்	...	471
ஸெலெனியம்	...	288–295
ஸேபியா	...	296–308
ஸைக்ளெமன்	...	491–492
ஸைலீஷியா	...	308–320
ஸைஜிஜியம் ஜம்போலனம்	...	558–559
ஸோரினம்	...	199–207
ஹிப்போஸேனியம்	...	499
ஹைட்ரோபோபினம்	...	500–501
ஹைட்ரோஸியனிக் ஆஸிட்	...	499–500
அனுபந்தம்		585

மாஸ்டர் கீ டு ஹோமியோபதிக் மெட்டீரியா மெடிகா

இரண்டாம் பாகம்

லொபேலியா இன்ப்ளேடா

(LOBELIA INFLATA)

முன்னுரை :—ஒரு சில வியாதிகளுக்கே இது உபயோக மாகிறது. காசம், சீரணக் கோளாறுகள் ஆகியவைகளில் சிற்சில சமயங்களில் தேவைப்படும்.

உடம்பு முழுவதும் சுருக் சுருக் என்று குத்தும் உணர்ச்சி இவ்வௌஷதத்தின் மிக விசேஷமான குறியாய் இருக் கிறது. டாக்டர் H. C, அல்லென், "முக்கிய குறிகள், விசே ஷக் குறிகளும் ஒப்பிடுதலும்" எனப்பெயர் உள்ள அவ ருடைய புகழ்பெற்ற புத்தகத்தில் இக்குறியை எழுதத் தவறி விட்டார்.

இவ்வௌஷதத்தின் விசேஷக் குறிகளில் ஒன்றாகிய வியாதி உள்ளே அமுக்கப் படுதல் என்னும் விஷயத்திலிருந்து இது ஸோரா விஷத்தை நீக்கக் கூடியது என்பது புலனாகும்.

பிறவியிலிருந்து தோன்றும் மேகக் இரந்தி வியாதிக் கும் ஏற்றதே.

லொபேலியா தேவைப்படும் கேசுகளில் பெரும்பாலான வைகளில் கீழ்க்காணும் முக்கிய குறிகள் காணப்படும்.

1. அளவு கடந்த உடற் சோர்வு; தசைகளில் தளர்ச்சி. 2. குமட்டல், வாந்தி. 3. நாட்பட்ட சீரணக் கோளாறுகள்.

4. வயிற்றில் ஒன்றுமே இல்லாத உணர்ச்சி. 5. குத்தும் உணர்ச்சி. மார்பில் தோன்றும் இறுக்கும் உணர்ச்சியினால் மூச்சுத் திணறல்.

பொதுவான குறிகள்

தகுதி :—அதிகக் கருமை இல்லாத தலை மயிர், நீலக் கண்கள், சிவந்த உடல், உள்ளவர்களுக்கு ஏற்றது. உடல் பருத்தல். க்ஷயரோகம் தோன்றும் உடல் வாகு.

மனம் :—அதிக மனச் சோர்வும் உற்சாகக் குறைவும்; இறந்து விடுவோமென்றும் மூச்சு அடைத்துப் போகுமென்றும் வியாதியஸ்தர் நினைப்பார்.

உடல் :—நீடித்திருக்கும் பலவீனம். களைப்பு. வலிப்புகள். உடல் முழுவதும் குத்துவது போல் அறிப்பு. திடீரென்று உடல் வெளுத்தல். வயிற்றில் பலவீனமும் ஒன்றுமே இல்லாத உணர்ச்சியும். நாக்கின் வலது பக்கத்தில் மட்டும் அடை போல் கன்மான அழுக்கு.

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):— குறிகள் பொதுவாக மாலையிலும் இரவிலும் அதிகமாகும், குளிரில் நின்றாலும் சிறிதளவு வேலையினால், மாடிப் படிகளில் ஏறுதல், இறங்குதல் ஆகியவைகளாலும் மூச்சுத் திணறல் கூடுதலாகும். கருவுற்ற பெண்களுக்குக் குமட்டல், வாந்தி முதலிய மயற்கைக் கோளாறுகள் காலை வேளையில் அதிகமாய் இருத்தல். சூடான உணவை உட்கொண்டால் வாந்தி உண்டாகும்.

உபாதி குறைதல் :—கால்களிலிருந்து இரத்தம் மார்பில் வந்து சேருவது போல் தோன்றி அதனால் மார்பில் உண்டாகும் கனமான அல்லது அழுக்குவது போன்ற உணர்ச்சி வேகமாய் நடந்தால் குறையும்.

விசேஷக் குறிகளின் விளக்கம்

கடுமையான குமட்டலும் வாந்தியும்: ஏராளமாய் உமிழ் நீர் உற்பத்தியாகுதல்: ஏராளமான வியர்வை:—கடுமை யான குமட்டலும் வாந்தியும். இடைவிடாத குமட்டலும் உமிழ்நீர் உற்பத்தியும் காணப்படும். கருவுற்ற பெண் களுக்கு வாயிலிருந்து உமிழ்நீர் பெருக்கெடுத்து ஓடுவது டன் குமட்டலும் வாந்தியும், வாந்தி செய்யும் போது முகத்தில் குளிர்ந்த வியர்வை ஏராளமாய் உண்டாகும். நல்ல பசியுடன் வாயில் ஏராளமான உமிழ் நீர் சுரத்தல். நல்ல பசி, குமட்டல், ஏராளமான வியர்வை, அளவு கடந்த களைப்பு முதலிய குறிகளுடன் பல நாட்களாக இருந்து வரும் வாந்தி.

அளவு கடந்த வலி:—இடுப்புப் பாகத்தில் மிகக் கடுமையான புண்ணுள்ள வலி. எவ்வளவு மெதுவாகத் தொட்டாலும், மிருதுவான தலையணை மீது பட்டாலும் தாங்க முடியாத வலி உண்டாகும். அந்த இடத்தைத் தொட ஆரம்பித்தாலே உறக்கக் கதறுவார். உடுத்தியுள்ள ஆடை மேலே படாதபடி முன்பக்கமாய்க் குனிந்து உட்காருவார்.

அளவு கடந்த மூச்சுத் திணறல்:—மூச்சு நின்று போகுமென்று தோன்றுமளவுக்குக் கடுமையான மூச் சுத் திணறல் (கக்குவாய் இருமல்); அதனால் மூச்சுவிடுவ தற்காக வாயைத் திறந்து வைத்திருக்க நேரும். சிறி தளவு வேலை செய்தாலும் மாடிப்படிகளில் ஏறினாலும் இறங்கினாலும் காற்று வீசினாலும் சுவாசிக்கக் கஷ்டம் உண்டாகும். காச வியாதியில் மார்பை இறுக்கும் உணர்ச்சியினால் சுவாசிக்க மிகவும் சிரமம் தோன்றும.

உருண்டை உணர்ச்சி :—(காச வியாதியில்)

தொண்டையினுள்ளே உருண்டையான பொருளை வைத்து அழுக்கும் உணர்ச்சி. தொண்டையினுள்ளே வேற்றுப் பொருள் இருக்கும் உணர்ச்சி. விழுங்கும் போது குரல் வளையில் ஏதோ ஒன்று எழுந்திருப்பது போல் உணர்ச்சி தோன்றி உணவு தொண்டைக்குக் கீழ் இறங்காமல் தடை செய்யும். வயிற்றில் உருண்டையான பொருள் அல்லது கனமான சுமை இருக்கும் உணர்ச்சி.

வியாதி உள்ளே அழுக்கப்படுதல்:—கழிவுகள் அல்லது சரும வியாதிகளை உள்ளே அழுக்கியதால் தோன்றும் கெடுதலான விளைவுகளை லொபேலியா நீக்குகிறது. காதுகளிலிருந்து வந்து கொண்டிருந்த கழிவை அடக்கியதால் அல்லது காதுகளின் உள்ளே இருந்த கரப்பான் படையை அழுக்கியதால் காதுகளில் அடிக்கடி வலி உண்டாவதும் காது கேளாமல் போவதும். மேலே சொல்லப்பட்ட காரணங்களால் காதுகளில் மணி அடிப்பது போன்ற ஓசையும் உண்டாகலாம். கழிவுகளைத் தடை செய்ததால் தோன்றும் இடைவிடாத தலைவலிகள். மாதவிடாயில் போக்கு நடுவில் தடைப்பட்டு அதனால் சுரத்துடன் இடுப்பில் கடுமையான வலி. மாதவிடாய் தடைப் பட்டதால் இடைவிடாத குமட்டலும் உமிழ்நீர் ஏராளமாய் உற்பத்தியாவதும். கழிவுகளைத் தடை செய்ததால் ஏற்படும் மற்ற குறிகளையும் இது நீக்கும். உடம்பில் அறிப்புடன் சொரிந்தால் அடை அடையாகத் தடிக்கும் இயல்புள்ள சருமக் கோளாறை அழுக்கியதால் ஏற்படும் குமட்டலும் வாந்தியும்.

குத்தும் உணர்ச்சி:—உடம்பு முழுவதும், கைகால் விரல்களில்கூட, வேடிக்கையான குத்தும் உணர்ச்சி காணப்படுவது குறிப்பிடத் தக்கது. இக்குறி பல

சமயங்களில் காச நோய் ஏற்படுவதற்கு முன்னதாகவோ அல்லது அதனுடன் சேர்ந்தோ தோன்றும். உடம்பின் உள்ளேயிருந்து ஆயிரக் கணக்கான ஊசிகள் உடலைத் துளைத்துக் கொண்டு வெளியே வரும் உணர்ச்சி.

நீங்காத குணம் :—நீங்காத குணமுள்ள வியாதிகளுக்கு லொபேலியா ஏற்றது. சுவாசகோசக் கோளாறுகளில் சரிவர குணம் ஏற்படாமல் இருக்கும் போதும், முக்கியமாக க்ஷயரோகச் சின்னங்கள் தென்படும் போதும் லொபேலியா இன்றியமையாதது (க்ளார்க்).

மற்ற குறிகள்

இருதயம் வேலை செய்யாமல் நின்று விடும் என்ற உணர்ச்சி. இருதயப் பாகத்தில் உள்ளூர வலி.

ஒப்பிடுதல் :—லொபேலியாவில் இருதயத்தின் மேல் பாகத்திலும் லிலியம் டிக்ரினத்தில் இருதயத்தின் கீழ் நுனியிலும் வலி இருக்கும்.

லைகபோடியம்

(LYCOPODIUM)

முன்னுரை :—மிக ஆழ்ந்தும் உடலில் பல நாட்கள் தங்கியும் வேலை செய்யக்கூடிய ஔஷதம் இது. ஒரு தடவைக்குமேல் கொடுக்க வேண்டிய அவசியம் இருப்பது மிக அபூர்வம். மூவகை விஷங்களையும் இது நீக்க வல்லமை உள்ளது.

லைகபோடியத்தின் அபூர்வமான குணங்கள் ஹானிமனால் கண்டு பிடிக்கப்பட்ட வீரியப்படுத்தும் முறையினாலேயே வெளிப்பட்டன. அதற்கு முன்பாக மாத்திரைகளின் மேலே தடவவும் உடம்பில் ஏற்படும் காயங்களின்

மேலே தூவும் மாவாகவுமே லகபோடியம் உபயோகிக்கப் பட்டு வந்தது.

லகபோடியத்தின் மிகச் சிறந்த குறிகளில் சில கீழே எழுதப் பட்டுள்ளன. 1. மாலே 4 மணியிலிருந்து இரவு 8 மணி வரை உபாதிகள் அதிகமாய் இருத்தல். 2. வியாதிகள் வலது பக்கத்திலிருந்து இடது பக்கம் பரவுதல். 3. வயிற்றில் அளவு கடந்த வாயு உப்பிசம். 4. தூங்கி யெழுந்தவுடன் குழந்தை கோபமாய் இருத்தல். 5. மூக்கின் நுனித் தோல் விசிறுவது போல் விரிந்து சுருங்குதல். 6. மூத்திரத்தில் சிவப் பான மணல். 7· தூங்கும்போது பாதிக் கண்கள் திறந்திருத் தல். 8. வாய் திறந்திருக்கும். 9. மிகவும் பசியாய் இருப்பார்; ஆனல் மிகச் சீக்கிரமாகவும் சுலபமாகவும் வயிறு நிறைந்து விடும்.

பொதுவான குறிகள்

தகுதி :—"கூர்மையான அறிவும் பலவீனமான உட லும்" உள்ளவர்கள், விசேஷமாகக் குழந்தைகள். உட லின் மேல் பாகமும் கழுத்தும் மெலிந்து இடுப்புக்குக் கீழே நீர்ச்சுரப்பு இருப்பது போல் பருத்து இருப்பவர் கள். அடிக்கடி சுவாச கோசங்கள், கல்லீரல் ஆகிய உறுப்புகளில் வியாதி தோன்றும் உடல்வாகு கொண்ட வர்கள். மூத்திரக் கற்கள் தோன்றும் உடல்வாகு உள்ளவர்கள் (அச்சமயத்தில் மூத்திரத்தில் சிவந்த நிற முள்ள வண்டல் தங்கும்). தலே மட்டும் வயதுக்கு ஏற்றபடி நன்றாக வளர்ந்து உடல் மெலிவும் பலவீன மும் வியாதியில் அடிபட்ட தோற்றமும் உள்ள குழந்தைகள். வியாதியாய் இருக்கும் சமயங்களில் அதிகக் கோபமும், பரபரப்பும் கட்டுக்கு அடங்காமல் நடக்கும் குணமும் கொண்ட குழந்தைகள்; தூங்கி

எழுந்தவுடன் முகம் கடுத்து எல்லோரையும் கோபத்துடன் தள்ளி தன் ஆடைகளைத் தூக்கி எறியும். உடல் மெலிந்து தோல் கருங்கிக் கிழவர்கள் போல் தோற்றம் அளிக்கும் குழந்தைகள்.

லகபோடியம் கிழவர்களையும் குழந்தைகளையுமே விசேஷமாகத் தாக்குகிறது. உடல் வெளுத்து, அழுக்குப் படிந்து இருக்கும்; முகம் அதிக சுருக்கங்களுடன் கண்களைச் சுற்றி நீல நிறமுள்ள வளையங்களுடனும் மஞ்சள் அல்லது மண்ணைப் போல் மங்கி இருக்கும்; உடம்பு முழுவதுமே சருமத்தில் சுருக்கம் காணப்பட்டாலும் முகத்தில் அதிகமாகக் காணப்படும். நெற்றியில் சுருக்கங்கள்; வயதுக்கு மீறிய கிழட்டுத் தோற்றம்.

உடலில் வேருன்றி நாளுக்கு நாள் அதிகமாய்க் கொண்டுவரும் நாட்பட்ட வியாதிகள்.

உடலின் இயற்கைச் சூடு குறைவாகுதல்; கை கால்கள் சில்லென்றிருக்கும். குளிர்ச்சியான பானங்கள் ஒத்துக் கொள்வதில்லை. கோளாறுன ஊட்டம். சீரண சக்தி அறிந்து போகுதல்.

மனக்குறிகள் : பயம் : தனியாய் இருக்கப் பயம். "ஏதாவது நேர்ந்துவிடுமென்று பயப்படுதல், தான் எதையாவது மறந்து போய் விடுவோமென்று பயப்படுதல்". பொதுக் கூட்டங்களில் எழுந்து பேசப் பயப்படுதல்; பேசிப் பழக்க மூள்ளவர்களுக்கும் சிற்சில சமயங்களில் இவ்விதமான பயம் தோன்றும். ஆனால் பேச ஆரம்பித்தவுடன் பயம் மறைந்து எடுத்த காரியம் ஒழுங்காய் நிறைவேறும். இக்குறி ஸைலீஷியாவிலும் இருக்கிறது.

வருத்தம் :—காலையில் தூங்கி எழுந்தவுடன் வருத்த

மாய் இருத்தல். சினேகிதரை வரவேற்கும் போது அல்லது இலவசமாகக்! கொடுக்கப்படும் பொருளைப் பெற்றுக் கொள்ளும் போது அளவு கடந்த வருத்தத்துடன் அழுதல், பழய சினேகிதரைச் சந்திக்கும் போதும் இப்படியே. பிறர் அவருக்கு நன்றி செலுத்தினாலும் கூட கதறியழுவார்.

கோபம்:—தூங்கி யெழுந்தவுடன் முகத்தைக் கடுத்துக் கொண்டு கோபமாய் இருத்தல். உதைக்கும், கதறும், கேவலமாய் கடந்து கொள்ளும். சண்டை போட விரும்புதல்.

குழப்பம்:—குழம்பிய பேச்சு; ஞாபக சக்தி குறைதல். மனதில் நினைப்பதை வெளியிடச் சரியான வார்த்தைகள் வராமை. தவருன வார்த்தைகளைப் பேசுவார், எழுதுவார்.

கோழைத்தனம்:—தன்னம்பிக்கை அழிதல்; கோழைத்தனம்; ஒரு முடிவுக்கு வர முடியாமை.

உடல்:—சுத்தமான காற்றை மிகவும் விரும்புவார் (அல்லது சுத்தமான காற்றில் அதிக வெறுப்பும் இருக்கலாம்). சுத்தமான காற்றினால் குளிரும் உணர்ச்சி தோன்றும். அடிக்கடி நீர்க் கோர்வை உண்டாகும் உடல்வாகு. நீர்ச் சுரப்பும் வேக்காடும் உள்ள வீக்கங்கள். எலும்புகள் ஒழுங்கான அமைப்பு இல்லாமலும் வளைந்தும் இருக்கும். கால்கள் வளைந்திருத்தல்; குதிகால்களில் பலவீனம். முகத்தில் ஏராளமான சுருக்கங்கள்; நெற்றியில் சுருக்கங்கள். குழந்தைகளின் உடம்பில் சிற்சில இடங்களில் தோல் உறிந்தும் ஊனீர்க் கசிவுடனும் இருக்கும். சருமம் அதிக வறட்சியாய் இருக்கும். அடிக்கடி முதுகில் சுளுக்கு விழும். பாதிக் கண்களைத்

திறந்து கொண்டு தூங்குவார். வாயைத் திறந்து கொண்டு தூங்குவார். வாயில் உமிழ்நீர் அதிகமாய் உற்பத்தியாகுதல். எப்பொழுதும் கீழே படுத்துக் கொண்டிருக்க விருப்பம். ஆண்தன்மைக் குறைவு. கை கால்களில் மத மதப்பு. ஒரு கால் (வலப் பக்கம்) சூடாகவும் மறு கால் சில்லென்றும் இருக்கும். சருமத்தில் உறிவு உண்டாகுதல்.

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே):- சிரணக் கோளாறுகள், தொண்டைப் புண், தலைவலி போன்ற கோளாறுகள் குளிர்ச்சியான உணவுகளாலும் பானங்களாலும் அதிகமாகும். எல்லா உபாதிகளும் மாலை 4 மணியிலிருந்து இரவு 8 மணிவரை கூடுதலாக இருக்கும். உபாதிகள் மாலை 4 மணிக்கு அல்லது 4 மணிக்கு மேல் 6 மணிக்குள் அதிகமாகலாம். அல்லது மாலை 4 மணிக்கு உபாதி அதிகமாக ஆரம்பித்து இரவு முழுவதும் அப்படியே இருக்கலாம். மாலை 3 மணி, 4 மணி, 5 மணி ஆகிய நேரங்களிலும் உபாதி உக்கிரமாகக் கூடும். மாலையிலிருந்து நள்ளிரவு வரை அதிகமாய் இருப்பதும் உண்டு. சாப்பிட்ட பிறகு, எவ்வளவு குறைவான அளவு உட்கொண்டாலும் உபாதிகள் அதிகமாகும். படுக்கையின் சூட்டினால் தலைவலி அதிகமாவதும் உடலில் அறிப்பும். கல்லீரல் பற்றிய கோளாறுகளில் வலது பக்கமாய்ப் படுத்தால் உபாதிகள் அதிகமாகும். பால் குடித்தால் உபாதிகள் அதிகமாகும். மாதவிடாய் அடக்கப் பட்டதால் ஏற்படும் உடல் மெலிவு முதலிய கோளாறுகள். ரொட்டியில் வெறுப்பும் உட் கொண்டால் உபாதிகள் அதிகமாவதும். இரவில் எந்தப் பக்கமாய்ப்படுத்தாலும் வேதனையாய்இருத்தல். சாப்பிட்ட உடனேயே வயிற்றில் வலி. தூங்கி யெழுந்தவுடன் கோபம் (மனக்குறிகளில் கோபம் என்ற தலைப்பின் கீழே பார்க்கவும்). டிப்தீரியாவில் தூங்கி எழுந்த வுடனும் குளிர்ச்சி

யான பானங்களைக் குடித்தா லும் (லாச்சஸிசுக்குஎதிரிடை) உபாதிகள் அதிகரித்தல். தூங்கி எழுந்தவுடன் இருமல் அதிகமாகும். குழந்தை மூக்கைத் தேய்த்துக் கொண்டு தூக்கத்திலிருந்து திடுக்கிட்டு எழுந்திருக்கும்.

பயம், கோபம், அவமானம், தன் வெறுப்பை வெளியே காட்ட முடியாமல் வேதனைப் படுதல் ஆகிய காரணங் களால் தோன்றும் கோளாறுகள்.

உபாதி குறைதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):—வயிறு பற்றிய குறிகள் மேலே உள்ள ஆடை களைத் தளர்த்திவிட்டால் குறையும். சூடான பானங்களைக் குடித்தால் சௌகரியம் தோன்றும், முதுகில் உண்டாகும் வலிகள் மூத்திரம் கழித்தால் சௌகரியப்படும். ஈரக்கசி வுள்ள பருவக்காலங்களில் அதிகமாகி அசைவினாலும் சூட்டி னாலும் குறையும் நாட்பட்ட வாதரோகம்.

விசேஷக் குறிகளின் விளக்கம்

வலது பக்கம் தாக்கப் படுதல் : வலது பக்கத்திலிருந்து இடது பக்கம் செல்லுதல் :—உடலின் வலப் பக்கம் உண்டா கும் கோளாறுகள்; விசேஷமாக வலப் பக்கம் ஆரம்பித்துப் பிறகு இடது பக்கம் செல்லும் கோளாறுகள். தொண்டைப் புண், மார்ச்சளி, சுவாச கோச வேக்காடு, சரும வியாதி கள், சினைப்பையிலும் கருப்பையிலும் மற்ற இடங்களி லும் ஏற்படும் வலிகள், ஆகிய கோளாறுகளில் வியாதி வலது பக்கத்திலிருந்து இடது பக்கத்துக்குச் சென்றுல் லகபோடியத்தை நினைக்க வேண்டும். வலது பக்க அரை இடுக்கில் உண்டாகும் குடல் பிதுக்கம், விசேஷமாகச் சிறுவர்களுக்கு ஏற்படும் போது.

கீழ் இறங்கும் குணம் :—உடல் மெலிவு கீழே இறங் கும், அதாவது மெலிவு உடலின் மேல்பாகத்தில் ஆரம்

பித்துப் பிறகு கீழ்ப்பாகத்துக்குப் பரவும். உடலின் மேற் பகுதி மெலிந்திருத்தல். டிப்தீரியாவில் கெட்ட சதை தொண்டையின் மேல்பாகத்தில் தோன்றிப் பிறகு கீழ்ப்பக்கம் இறங்கும்.

வாயு உப்பிசம் :— வயிற்றில் அளவு கடந்து வாயு அடைந்திருத்தல். அடிவயிற்றில் இடைவிடாமல் வாயு உறுமும் ஓசை, விசேஷமாகக் கீழ்ப்பாகத்தில். லகபோடியத்தில் அடி வயிற்றின் கீழ்ப்பாகத்தில் வாயு உப்பிசம் இருக்கும். கார்போ வெஜியைக் கவனிக்கவும். ஏப்பம் விடுவதினால் உப்பிசம் குறைவதில்லை.

புளிப்புக் குணம் :—வாய் புளிப்பாய் இருத்தல் : புளிப்பான ஏப்பம். புளிப்பான வாந்தி. மேல் வயிற்றில் எரிச்சல். வயிற்றில் புளிப்பு.

வேலை செய்யாமை :—மலப்பை அதன் வேலையைச் செய்யாமல் மலச்சிக்கலை உண்டாக்கும். மலம் கழிக்கப் பயனற்ற தூண்டுதல். மலம் கடினமாகவும், கழிக்கச் சிரமமாகவும், கொஞ்சமாகவும் இருக்கும். மலத்தின் பெரும்பகுதி வெளியே வராமல் தங்கி விட்ட உணர்ச்சி; மலப்பை சுருங்கி மலம் கழிக்கும்போது வெளியே பிதுங்கும். மூத்திரப்பை வேலைசெய்யாமல் இருத்தல். மூத்திரம் பையில் தங்காமல் எப்பொழுதும் ஒழுகிக் கொண்டே இருக்கும். உட்கார்ந்து அதிக நேரம் கழிந்த பிறகே மூத்திரம் வெளியாக ஆரம்பிக்கும்; மெல்லிய தாரையாக வெளியாகும்.

அளவு மீறிய உணர்ச்சி :—ஓசைகளைத் தாங்க முடியாது. கடுமையான வாசனையைப் பிடிக்கமுடியாது. கல்லீரல் பக்கத்தில் தொட்டால் அதிக வலி உண்டா

கும். வலியுள்ள இடங்களில் அமுகினால் வலி மிக அதிகமாகும். வலியுள்ள பக்கத்தைக் கீழே வைத்துப் படுக்க முடியாது. மன உணர்ச்சிகளும் அதிகரிக்கும். சிறிய விஷயங்களும் வேதனையை உண்டாக்கும். பிறர் நன்றி செலுத்தும் போதும் இலவசமாகப் பொருள் பெற்றுக்கொள்ளும்போதும் உணர்ச்சி மிகவும் அதிக மாகி அழவும் செய்வார்.

திடீர்க் குணம் :—குறிகள் திடீரென்று தோன்றும். உடலில் சூடான உணர்ச்சிகள் திடீரென்று உண்டாகும். வலிகளும் மற்ற கோளாறுகளும் திடீரென்று தோன் றும்; திடீரென்று மறையும். சாப்பிட்டுக் கொண்டிருக் கும்போது திடீரென்று வயிறு நிறைந்துவிட்ட உணர்ச்சி உண்டாகும்.

தளர்ச்சி :— இயற்கைக்கு மாறான வழிகளிலும் அளவுகடந்தும் சிற்றின்பத்தில் ஈடுபட்ட இளைஞர் களுக்கு மானி சிறுத்துச் சில்லிட்டுத் தளர்ந்து ஆண் தன்மை குறைந்து விடுதல்; வயதானவர்களுக்குப் புணர்ச்சியில் அதிகரித்த ஆசையும் மானி போதிய அளவு விரைக்காமல் ஆண் தன்மைக் குறைவு தோன்றுதலும். புணர்ச்சி செய்துகொண்டிருக்கும்போது தூங்கிப் போய் விடுவார். புகையிலையை அதிகமாய் உபயோகித்த தினால் உண்டாகும் ஆண் தன்மைக் குறைவு. குழந்தை கள் படுக்கையில் மூத்திரம் கழித்தல்.

வறட்சி :—சருமம், விசேஷமாக உள்ளங்கைகள், மிகவும் காய்ந்திருக்கும். சளிச்சவ்வுகள் உலர்ந்துபோய் இருக்கும். யோனி காய்ந்திருக்கும்: புணர்ச்சி செய்யும் போதும் பிறகும் யோனியில் எரிச்சல். "மூக்கு, குரல் வளை, தொண்டை, மார்பு ஆகிய இடங்களில் வறட்சி

யும் எரிச்சலும் உள்ள நீர்க்கோர்வை." "உடல் மெலிந்த சிறுவர்களுக்கு வறண்ட, அலைக்கழிக்கும் குணமுள்ள இருமல்."

புண்ணுய் இருத்தல்:—தோலில் மடிப்பு விழும் இடங்கள், ஸ்தனக்காம்புகள், ஆசனவாய் முதலிய இடங்களில் புண்ணுய் இருத்தல். குழந்தைகளுக்கு உடம்பின் சிற்சில இடங்களில் தோல் உறிந்திருத்தல்.

விசித்திரமான நிலைமைகள்:—அதிகப் பசி இருந்தாலும் மிக எளிதில் திடீரென்று வயிறு நிறைந்து விட்ட உணர்ச்சி; "இரண்டு மூன்று வாய் உணவு சாப்பிட்ட வுடனே வயிறு நிரம்பி வேதனை தரும் அளவுக்கு முட்டிப் போய்விட்டதாக அவருக்குத் தோன்றும், "வயிறு உப்பி விட்டதுபோல் அவருக்குத் தோன்றும்." சாப்பிட்ட உடனேயே வயிற்றில் வேதனை (நக்ஸ் வாமிகாவில் சாப்பிட்டுச் சிறிது நேரம் சென்ற பிறகு வேதனை உண்டாகும்). "வழக்கமாக நடைபெறும் விஷயங்களில் மனக்குழப்பம் ஆனல் பழக்கமில்லாத விஷயங்களைப் பற்றித் தெளிவாய்ப் பேசுவார்." ஒரு பாதம் (வலது) சூடாகவும் மறு பாதம் (இடது) சில்லென்றும் இருக்கும். இரவில் பசி உண்டாகி விழித்துக் கொள்வார், ஒரு சமயம் சிரிப்பார், மறு சமயம் கதறுவார்; இவ்விதம் மாறி மாறி வரும். குளிர் உணர்ச்சி தோன்றிய மறுகணமே வியர்வை தோன்றுதல். கிழவர்களுக்குப் புணர்ச்சியில் பலமான ஆசை இருந்தாலும் மானி போதிய அளவு விரைக்காது. எரிச்சலுடன் கூடிய வலிகள் குட்டினுல் தணியும். பகலில் தூக்கக் கலக்கம், இரவில் தூக்கம் வராமை. வயிற்றுப்போக்கும் மலச்சிக்கலும் மாறி மாறித் தோன்றுதல்.

மற்ற குறிகள்.

டிப்தீரியாவில் வியாதி மூக்கில் அல்லது வலது பக்கம் ஆரம்பித்து இடது பக்கம் பரவும் (லாச்சஸிஸில் இதற்கு எதிரிடை). முகம் பழுப்புக் கலந்த சிவப்பாய் இருக்கும்; மூக்கு வழியாய் மூச்சுவிட முடியாமை; தூங்கியெழுந்தவுடனும் குளிர்ந்த தண்ணீர் குடித்தாலும் உபாதிகள் அதிகமாகும். (லாச்சஸிஸில் உபாதிகள் சூடான பானங்களால் அதிகமாகிக் குளிர்ந்த பானங்களால் குறையும்).

சுவாசகோச வேக்காட்டில் கல்லீரல் பற்றிய கோளாறுகளும் சேர்ந்து வியாதி சிக்கலாய் மாறும்போது லைகபோடியம் தேவையாகும் (செலிடோனியம், மெர்கூரியஸ் சொலு). நுனிமூக்குத்தோல் விசிறுவதுபோல் விரிந்து சுருங்கும். தூங்கும்போது பாதிக்கண்கள் திறந்தே இருக்கும். மார்பில் பலமான ஓசை. தடித்த எழுத்திலுள்ள இம்மூன்று குறிகளும் சுவாச கோச வேக்காட்டில் சேர்ந்து இருந்ததை நான் பல சமயங்களிலும் பார்த்திருக்கிறேன். இப்படிச் சேர்ந்திருப்பது இவ்வியாதிக்கு இவ்வௌஷதமே தகுந்தது என்பதை உறுதிப்படுத்தும் முக்கிய குறி. லைகபோடியம் 200–ல் ஒரே ஒரு வேளை ஔஷதத்தினால், மந்திரவாதியின் மந்திரக்கோல் பட்டது போல, மிகச் சீக்கிரமாக வியாதி குணம் ஆகி இருக்கிறது. சிற்சில சமயங்களில் மற்றொரு மிக முக்கியமான குறியும் காணப்படலாம்; அதாவது வாய் திறந்து கீழ்த் தாடை தொங்குவதே. கன்னங்களில் வட்டமாகச் சிவந்திருத்தல், மயக்கம் ஆகியவை மற்ற குறிகள். டைபாய்டு சுரம், ஒழுங்காகச் சிகிச்சை செய்யப்படாத சுவாச கோச வேக்காடு.

பிள்ளைப் பெற்ற பிறகு தலை மயிர் கொட்டுதல்; வழுக்கை விழுதல்.—கைகள் கனமாய்த் தோன்றுதல். பாதங்கள் எப்பொழுதும் சில்லென்று இருக்கும். தலை மயிர் அகாலத்தில் நரைத்தல். தலைப் பொடுகு. யோனியிலி ருந்து காற்று வெளிப்படுதல். மலம் கழிக்கும் போது ஒவ்வொரு தடவையும் பிறப்பு உறுப்புகளிலிருந்து இரத் தம் வெளிப்படுதல். கருவில் உள்ள சிசு குட்டிக்கரணம் போட்டுக் கொண்டிருப்பது போலத் தோன்றுதல். மூத்திரம் கழிப்பதற்கு முன் குழந்தை கதறுதல். நீர்க் கோர் வையில் மூக்கு காய்ந்து இரவில் அடைத்துப் போய்விடும், வாயினுல் மூச்சு விட வேண்டிவரும். மூக்கில் பொறுக் குகளும் ரப்பர் போல் நீளும் குண முள்ள சளிக் கட்டும். பித்தக் கற்களால் கடுமையான வயிற்று வலி. கால் களில் அகத்த இரத்தக் குழாய்கள் வீங்கிச் சுருட்டிக் கொள்ளும். பாதங்களில் நீர்ச் சுரப்பு. பிறப்பு உறுப் புகளில் நீர்ச் சுரப்புள்ள வீக்கம். ஒழுங்காகச் சிகிச்சை செய்யப்படாத சுவாச கோச வேக்காடு வியாதியினுல் தோன்றும் சுவாச கோச க்ஷயம். "காற்றுக் குழாய்களில் நாட்பட்ட பிடிவாத குணம் உள்ள நீர்க் கோர்வை."

உறவு:—ஸல்பர், கல். கார்ப், கார்போ வெஜி. ஆகியவை களுக்குப் பிறகு நன்முக வேலை செய்கிறது. கிராபைடிஸ், லாச்சஸிஸ், லேடம், பாஸ்பரஸ், ஸைலீஷியா ஆகியவை லீகபோடியத்துக்குப் பிறகு நன்முக வேலை செய்கின்றன. காபியா க்ரூடா பகை. ஐயோடியம், செலிடோனியம், லாச் சஸிஸ் ஆகியவை லீகபோடியத்துக்கு முன்பும் பிறகும் வேலைசெய்யும்.

ஒப்பிடுதல்:—எரிச்சலுள்ள வலிகள் குட்டினுல் குறை தல் (ஆர்ஸனிகம், காப்ஸிகம்). நிலை கொள்ளாமல் தவிக் கும் குணம் அசைவினுல் சௌகரியம் (ரஸ் டாக்ஸ்). தித்

திப்புப் பொருள்களில் அதிக விருப்பம் (அர்ஜண்டம் நைட்ரிகம், ஸல்பர்), ஒரு கால் சூடாகவும் மற்றொரு கால் சில் லென்றும் இருத்தல் (சைனு, டிஜிடாலிஸ், இபிகாக்). இர வில் பசியுடன் எழுந்திருத்தல் (கோனியம், ஸோரினம்). இரவில் மூக்கு அடைத்துக் கொள்வது (அம்மோனியம் கார்ப், நக்ஸ் வாமிகா, ஸாம்புகஸ்). குழந்தையின் மூத்திரம் பட்ட துணிகளில் சிவப்பான மணல் காணப்படுதல் (பாஸ் பரஸ்). அடிக்கடி பசி ஏற்படுதல், விசேஷமாக இரவில் (இக்னேஷியா. சைனு) மனைவியை இழந்தவர்களுக்குச் சிற் றின்பத்தைப் பெற முடியாததால் உண்டாகும் கோளா றுகள் (கோனியம், பிக்ரிக் ஆஸிட், கல். கார்ப்; பிளாடினு). யோனியிலிருந்து காற்று வெளிப்படுதல் (ப்ரோமியம், லாக் கானினம், நக்ஸ் வாமிகா, ஸாங்வினேரியா). இவைகளில் வேறு எந்த ஔஷதமும் தேவைப்படும் குறிகள் காணப் படாவிட்டால், ப்ரோமியம் இக்கோளாறைக் குணம் செய்து விடும். இவ்விதம் என் அனுபவத்தில் இரண்டு கேஸுகளைக் குணம் செய்திருக்கிறேன். குழந்தை பாதிக் கண்களைத் திறந்து கொண்டு தூங்கும் (ஸல்பர்). சுரத்தினால் ஏற் படும் விளைவுகள் (ஸோரினம்).

குறிப்புகள் :—நாட்பட்ட வியாதிகளைச் சிகிச்சை செய்ய ஆரம்பிக்கும் போது லகபோடியம் குறிகளுக்கு ஏற்ற ஔஷத மென்று மிகத் தெளிவாய் இருந்தாலொழிய அதைக் கொடுக்காமல் இருப்பதே நலம்; ஸோரா விஷத் தைப் போக்கும் வல்லமையுள்ள வேறு ஔஷதத்தை முதலில் கொடுப்பது சிறந்த முறை.

"லகபோடியத்துக்கு முன் ஸோரா விஷத்தைப் போக் கும் வல்லமை இல்லாத ஏதோ ஒரு ஔஷதம் அடிக்கடி தேவைப்படும் (பல சமயங்களில் நக்ஸ் வாமிகா)" என்று ஜெ. பி. பெல் (J. B. Bell) எழுதுகிறார். இதை நூலாசிரி யரும் ஆமோதிக்கிறார்.

"லகபோடியம் உபயோகித்த பிறகு கார்போ வெஜியை எட்டு நாட்களுக் கொரு முறையாக ஒவ்வொரு வேளை கொடுத்து வந்தால் அது ஒழுங்காக வேலை செய்யு மென்று சொல்லப்படுகிறது.

மெக்னீஷியா கார்பானிகா

(MAGNESIA CARBONICA)

முன்னுரை :—அதிகப் புளிப்புக் குணமும் நரம்புச் சோர்வும் இவ்வௌஷதத்தில் காணப்படுகின்றன. பல சமயங்களிலும் வயிற்றுப் போக்கில் இவ்வௌஷதம் தேவைப்படும். அப்பொழுது இவ்வௌஷதத்தின் குறிகள் தெள்ளத் தெளிவாய்க் காணப்படும். "வயிற்றுக் கடுப்புக்கும் சிறு குழந்தைகளுக்கும் உபயோகப்படும் ஔஷதங்களின் முதல் வரிசையிலே இவ்வௌஷதத்தை வைக்க வேண்டும்."

ஆழ்ந்தும் உடலில் பல நாட்கள் தங்கியும் வேலை செய்வதுடன் ஸோரா விஷத்தை நீக்கவும் செய்யும்.

பொதுவான குறிகள்

தகுதி :—கோப குணமும் பயந்த சுபாவமும் உள்ளவர்கள், விசேஷமாகக் குழந்தைகள்; தசை நார்கள் தளர்ந்து விடுதல், புளிப்பு நாற்றம். வாழ்க்கையில் எல்லை மீறிய கவலைகளுக்கு உட்பட்டு உடல் தளர்ந்து விட்ட பெண்கள். கருவுற்றிருக்கும் பெண்கள் (கருவுற்ற சமயங்களில் அதிகப்படியான சுமையைத் தாங்க வேண்டியிருப்பதால் அவர்களையும் உடல் தளர்ந்து விட்ட பெண்களின் வரிசையிலே சேர்க்கப்படுகிறது). உடல் மெலிவு, தசைகள் தளருதல், வாயு உப்பிசம்.

மனம் :—பகல் முழுவதும் வியர்வையுடன் கவலைப் பட்டுக் கொண்டிருத்தல். பொதுவாக உடலில் சூடுள்ள உணர்ச்சி.

உடல் :—அடிவயிறு வாயு சேர்ந்து உப்பி இருக்கும். உடம்பு முழுவதும் புளிப்பு நாற்றம் வீசும். அல்பமான பசி. வாய் காய்ந்திருத்தல். நாக்கில் வெண்மையான அழுக்கு. அதிகத் தாகம். "எப்பொழுதும் உடல் சோர்ந்து தளர்ச்சியுடன் இருக்கும். குளிரும் உணர்ச்சியும் சில்லிப்பும். சருமம் காய்ந்திருக்கும்.

உபாதி கூடுதல் :—பருவ நிலையில் மாறுதல்கள் தோன்றும் போது உபாதிகள் அதிகமாகும். உணர்ச்சிகள் அதிகரித்தல் என்னும் தலைப்பின் கீழ்ப் பார்க்கவும்.

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே) :— கருவுற்ற காலத்தில் பல் வலி, இரவில் அதிகமாகும். மாதவிடாய்ப் போக்கு இரவில் மட்டும் அல்லது படுத்துக் கொண்டிருக்கும் போது மட்டும் வெளியாகும்; நடக்கும் போது நின்று விடும். மூன்று வாரங்களுக்கு ஒரு முறை உபாதிகள் திரும்பத் தோன்றுதல். ஓய்வு, பால் குடித்தல், மாதவிடாய் உள்ள காலம் ஆகியவைகளால் உபாதிகள் கூடுதலாகும். தாய்ப் பால் குடிக்கும் குழந்தைகளுக்குப் பால் சீரணமாகாமல் அப்படியே மலத்துடன் வெளிப்படும். ஒவ்வொரு நாளும் மாலையில் சுரம் தோன்றுதல்.

உபாதி குறைதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே):— அசைவினால் உபாதிகள் குறைவது மிகவும் குறிப்பிடத் தக்கது. கடுமையான நரம்பு வலிகள் அசைவினால் சௌகரியமாகும். இரவில் நரம்பு வலிகள், இரவு முழுவதும் வியாதியஸ்தர் நடந்து கொண்டே இருப்பார். சிறிது ஓய்வெடுத்தாலும் வலிகள் மிகக் கடுமையாகும். மாதவிடாய்ப்

போக்கு நடக்கும் போது நின்றுவிடும். ஓய்வாய் இருக்கும் போது தோன்றும். குறிகள் நடந்தால் சௌகரியமாகும்.

விசேஷக் குறிகளின் விளக்கம்

சோர்வு:—உடலில் அசதி, விசேஷமாகக் கால்களிலும் உட்கார்ந்திருக்கும் போதும். சிறிது தூரம் நடந்தால் அதிகமான களைப்பை உண்டாக்கும். களைப்பை நீக்காத தூக்கம்; தூங்க ஆரம்பித்த போது இருந்ததை விடத் தூங்கி யெழுந்தவுடன் சோர்வு அதிகமாய் இருத்தல். உடல் முழுவதும் களைத்துப் போய் வலியுடன் இருக்கும்: நிலை கொள்ளாமை. உடலின் உயிர்த் தண்ணீர் சேதமாகும் போது சைனு எப்படி உபயோகமாகிறதோ அதே போல நரம்புகள் சோர்ந்து போனால் மெக்னீஷியா கார்ப் உபயோகப்படும்" என்று க்ளார்க் குறிப்பிடுகிறார்.

பச்சை நிறம்:—மலம் பச்சையாய்த் தண்ணீர் போல், நுரையுடன் தவளைகள் வாழும் குளம் குட்டைகளில் காணப்படும் பாசி போல் இருக்கும். பச்சை நிறமுள்ள மலத்தின் மேல் மெழுகு போன்ற வெண்மையான உருண்டைகள் மிதந்து கொண்டிருத்தல்.

விருப்பம்:—பழங்கள், புளிப்பான பானங்கள் ஆகியவைகளில் அதிக விருப்பம். க்ஷயரோக முள்ளவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு மாமிசத்தில் ஆசை அளவுகடந்திருத்தல்.

புளிப்புக் குணம்:—வாயில் புளிப்புச் சுவை; புளித்த ஏப்பம்; புளித்த வாந்தி; புளிப்பான மலம்; புளிப்பான வியர்வை; மூக்சுக் காற்று புளிப்பு வாசனை அடித்தல்; உடல் முழுவதுமே புளிப்பு நாற்றம் வீசும்.

வறட்சி:—சருமம் வறண்டிருக்கும். சளிச் சவ்வு

கள் காய்ந்திருக்கும். வறட்சி யுள்ள நீர்க் கோர்வை; சளி கொஞ்சங் கூட இருக்காது; வாயினுல் தான் மூச்சு விட முடியும். "மூக்கு காய்ந்திருக்கும்; கண் விழிகளி லும் அதிக வறட்சி தோன்றி இமைகள் ஒன்றோ டொன்று ஒட்டிக் கொண்டு கண்களைத் திறக்கும் போது மிகவும் கஷ்டமாய் இருக்கும்."

கடுமை :—கடுமையான நரம்பு வலிகளில் சௌகரி யம் ஏற்படுவதற்காக வியாதியஸ்தர் நடந்து கொண்டே இருப்பார். உடம்பின் மேல் அதிக வறட்சியும் கடுமை யான அறிப்பும். வாயின் மேற் கூரை, கன்னங்கள், கண்கள், மூக்கு முதலிய இடங்களில் கடுமையான வலி; சூடான ஒற்றிடங்கள் கொடுத்தால் குறைவாகும். கடு மையான, வெறி பிடிக்கச் செய்யும் வலிகளைக் கண் டால் மெக். கார்பை நினைக்க வேண்டும். கடுமையான தாகம் (தண்ணீர் குடிக்க) விசேஷமாக மாலையிலும் இரவிலும்,

உணர்ச்சி அதிகரித்தல் :—குளிர் காற்று, குளிர் காலம் ஆகியவை ஒத்துக் கொள்ளாது. எவ்வளவு மெது வாய்த் தொட்டாலும் திடுக்கிடுதல் (காலி கார்புடன் ஒப் பிடவும்). இத்தகைய உணர்ச்சி அதிகரிப்பு மிக அதிக மாகும் போது கடுமைக் குணமாய் உரு மாறுகிறது.

க்ஷயரோக நிலைமை :—க்ஷயரோகத்தில் காணப்படுவ தைப் போல் மொச்சைக் கொட்டை யளவு பெரியதாக உள்ள கோழை வெளியேறுதல்; மிகுந்த நாற்றம் வீசும். ஏராளமான முண்டுகளுடன் மூகம் உப்பி இருக்கும்.

க்ஷய ரோக நிலைமை உள்ள போது கீழ் உள்ள விசேஷக் குறிகள் காணப்படும். களைப்பும் தளர்ச்சியும்,

விசேஷமாக நடந்தால்; குளிரும் உணர்ச்சியும் சில்லிப் பும்; சருமம் காய்ந்திருத்தல்; உடல் மெலியும்; தசை கள் உறுதி குறைந்து கொள கொள வென்று மாறும்; தலை மயிரும் நகங்களும் ஒழுங்காக வளருவதில்லை; தலையின் பின்பக்கம் பள்ளம் விழுதல்; மாமிசத்தில் அளவு கடந்த விருப்பம்; தொண்டையில் அறிக்கும் உணர்ச்சி யினால் வறண்ட இருமல்; இந்த இருமல் விட்டு விட்டு அடிக்கடி வரலாம். இருமும் போது இரத்தம் வெளிப் படும்.

தளர்ச்சி:—விரைப் பையினுள் குடல் பிதுக்கம் உண் டாகும். அரை யிடுக்குகளில் குடல் பிதுக்கம். நடக் கும் போது அல்லது உட்கார்ந்த இடத்திலிருந்து எழுந் திருக்கும் போது மூத்திரம் தானாகவே வெளிபாகுதல். மானி விரைப்பதில்லை; புணர்ச்சியில் ஆசை குறைதல்.

மற்ற குறிகள்

விவேகப் பற்கள் (மனிதர்களுக்கு 20 அல்லது 21 வயதில் முளைக்கும் கடைசிக் கடைவாய்ப் பற்களை விவேகப் பற்கள் என்று வழங்குகிறோம். அறிவு தக்க வளர்ச்சியடைந்து நல்லது கெட்டதை அறியும் விவேகம் இச்சமயத்தில் ஏற்படுகிறது) முளைக்கும் போது உண் டாகும் உடல் கோளாறுகள். நரம்புக் கோளாறினால் காது செவிடாகுதல். திடீரென்று காது கேளாமல் போய்விடுதல். நரம்பு வலியில் அனேகமாக இடது பக்கமே தாக்கப்படும் (விசேஷமாக முகத்தின் இடது பக்கம்). வயிற்றிலும் குடல்களிலும் விட்டு விட்டுத் தோன்றும் கோளாறுகள்; சளிச் சவ்வுகள் ஏராளமான நீர்களைச் சுரக்கும். மாதவிடாய் தோன்றுவதற்கு முன்

தொண்டையில் புண் உண்டாகும் (லாக் கானினம்). மாதவிடாய்ப் போக்கு கார குண மூள்ளதாகவும் கறுப்பு நிறமாகவும் பிசின் போலவும் கழுவுவதற்குச் சௌம்மாகவும் இருக்கும். வெட்டும், இறுகிப் பிடிக்கும் வயிற்று வலி.

உறவு :—சாமோமில்லாவுக்கு முன்பும் பிறகும் வேலை செய்கிறது.

ஒப்பிடுதல் :—கருவுற்ற பெண்களின் பல் வலி (ரடான் னியா). பால் ஒத்துக் கொள்ளாமை (லாக் கான்; லாக் டூப், லாகபோடியம், நைட்ரிக் ஆஸிட், ஸைலீஷியா).

மெக்னீஷியா மூரியாடிகா
(MAGNESIA MURIATICA)

முன்னுரை :—இவ்வௌஷதம் ஆழ்ந்து வேலை செய் கிறது. ஸோரா விஷத்தை நீக்குகிறது. முக்கியமாக கல் லீரலில் வியாதி தோன்றும் சமயங்களில் தேவைப்படு கிறது. நாட்பட்ட கல்லீரல் வியாதிகளில் மிகவும் உப யோக மூள்ள இரு ஔஷதங்கள் பல சமயங்களிலும் கவ னியாமல் விடப்படுகின்றன. அவை மெக்னீஷியா மூரும் மெக்னீஷியா கார்பும் தான்.

மலச் சிக்கலில் இவ்வௌஷதம் தேவையாகும் போது குறிகள் மிகத் தெளிவாய்க் காணப்படுகின்றன.

பொதுவான குறிகள்

தகுதி :—பயந்த சுபாவம்; நிலை கொள்ளாமை; பர பரப்பு. கருப்பை பற்றிய வியாதிகளுடன் சேர்ந்து சிக் கலாகி விட்டு விட்டுத் தோன்றும் குணமும் சங்கா குணமும் உள்ள கோளாறுகள் உள்ள பெண்கள்.

குறைவான உடல் வளர்ச்சியும் எலும்பு மூனைகளில் வீக்கமும் உள்ள குழந்தைகளுக்குப் பல் மூளைக்கும் போது உண்டாகும் கோளாறுகள். கல்லீரல் கோளாறுகள் உள்ள ஆண்கள்.

மனம் :—கோபம், வருத்தம், சண்டை போடும் குணம்; பிறருடன் பேச வெறுப்பு. தனியாய் இருக்க விரும்புதல். ஓசைகளைப் பொறுக்க முடியாது.

உடல் :—தலையில் அடிக்கடி வியர்வை உண்டாகும். சுரப்பிகளில் வீக்கம். பசி குறைதல். வாயில் கெட்ட சுவை. இடுப்பிலும் முதுகிலும் அடிபட்டது போலவும் எரிச்சலாய் இருப்பது போலவும் உணர்ச்சி. ஒவ்வொரு நாளும் காலையில் குளிரும் உணர்ச்சி; படுக்கையில் படுத்தவுடன் மறைந்து விடும். பகலில் கொட்டாவிகள் விட்டுக் கொண்டு தூக்கக் கலக்கமாக இருப்பார். பகலில் தூங்க அதிக ஆவல். தூக்கத்தினால் களைப்பு நீங்காமை. காலையில் களைப்பாய் இருத்தல். பாதங்களில் வியர்வை, ஈறுகள் வீங்கி அல்ப காரணங்களாலும் இரத்தப் பெருக்கெடுக்கும்.

உபாதி கூடுதல் :—வியாதியஸ்தருக்குக் குளிர் ஒத்துக் கொள்ளாது. அடிக்கடி நீர்க்கோர்வை உண்டாகும். (நீர்க்கோர்வை உள்ள போது சௌகரியம் ஏற்படுவதற்காக வியாதியஸ்தர் தன் தலையைத் துணியால் மூடிச் சூடு உண்டாகும்படிச் செய்வார்). கடற்கரைப் பக்கங்களில் இருந்தால் உபாதிகள் கூடுதலாகும் (கல்லீரல் கோளாறுகளும் சுவாச கோசக் கோளாறுகளும் தோன்றும்). கடலில் செல்லும் போது மலச்சிக்கல், உப்பு, உப்புச் சேர்ந்த உணவு, உப்புத் தண்ணீரில் அல்

லது கடலில் குளித்தல், கடற்கரை ஓரமாக வசித்தல் ஆகிய எல்லாக் காரணங்களும் மெக்னீஷியா மூர் தேவைப் படும் வியாதியஸ்தரின் வியாதிகளை அதிகமாக்கும்.

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே):— வலியுள்ள இடங்களைத் தொட்டாலும் அமுக்கினாலும் வலி அதிகரிக்கும். உணவுப் பொருள் பற்களின் மீது படும் போது பல்வலி கூடுதலாகும். தலைவலி ஒன்று மட்டுமே அமுக்குவதினால் தணியும். கடல் தண்ணீரில் குளித்தால் இரத்தம் துப்புதல்; அதிக பலவீனம். விரைகளிலும் இந்திரிய சுரம்புகளிலும் புணர்ச்சி செய்த பிறகு வலி. வலது பக்கமாய்ப் படுத்தால் கல்லீரல் பற்றிய வியாதிக் குறிகள் வெளியே தோன்றும். பாலினால் உண்டாகும் கோளாறுகள் என்ற தலைப்பின் கீழே பார்க்கவும்.

உபாதி குறைதல் :—இருதயப் படபடப்பு ஓய்வாய் இருக்கும் போது தோன்றும். நடக்கும்போதும் இடது பக்கமாய்ப் படுத்தாலும் சௌகரியமாகும்.

விசேஷக் குறிகளின் விளக்கம்

நாட்பட நீடிக்கும் குணம் :—மாதக் கணக்கில் அல்லது வருஷக் கணக்கில் அசீரணம், பித்தக் கோளாறுகள் ஆகியவைகளால் அடிக்கடி துன்பப் பட்டு வரும் பெண்களைச் சிகிச்சை செய்யும் போது இவ்வௌஷதத்தை நினைக்க வேண்டும். நெடு நாட்களாக வயிற்றுப் போக்கு அடிக்கடி ஏற்படும் குணம். "நாட்பட்ட கல்லீரல் கோளாறுகளில் வலியும் தொட்டால் புண்ணுள்ள உணர்ச்சியும், வலி முதுகெலும்பு, மேல் வயிறு ஆகிய இடங்களில் பரவி இருத்தலும், உணவு உட்கொண்டால் இவை அதிகமாகும்."

உடல் மெலிவு : உருக் குலைவு : கல்லீரல் விசேஷமாகத்

தாக்கப் படுதல்: விருப்பு:—சரியான உடல் வளர்ச்சி இல்லாமல் எலும்பு மூனைகளில் வீக்கமும் தித்திப்புப் பொருள்களில் அதிக விருப்பமும் உள்ள குழந்தைகளுக்கு மிகவும் ஏற்றது. கல்லீரல் கடினமாகிப் பருத்து, நடந்தாலும் அதைத் தொட்டாலும் அமுக்குவது போன்ற வலி உண்டாகும். வலது பக்கமாய்ப் படுத்தால் வலி அதிகரிக்கும். கல்லீரலில் இசிவு வலிகளும் இருக்கலாம்.

பாலினால் உண்டாகும் கோளாறுகள்:—பாலைச் சீரணிக்கச் சக்தி யில்லாத குழந்தைகள். பல் மூனைக்கும் காலத்தில் குழந்தைகளுக்குப் பால் சீரணமாகாமை; பால் குடித்தால் வயிற்றில் வலி தோன்றி சீரணமாகாமலேயே பால் மலத்துடன் வெளியேறும் (மெக். கார்ப்).

வலிமை குறைதல்:—குடல்களின் வலிமை குறைதல். அளவு குறைந்து, கடினமாய் மாறி, மெதுவாகவும் கஷ்டத்துடனும் மலம் வெளிப்படும். மலத்தை வெளியே தள்ளும் சக்தி குறைதல். அடிவயிற்றுத் தசைகளைச் சுருக்கவோ அல்லது கீழே அமுக்கவோ செய்தால் தான் மூத்திரம் வெளியாகும். மூத்திரம் சொட்டுச் சொட்டாக வெளியாகுதல். சிறிதளவு மூத்திரம் உள்ளேயே தங்கி இருக்கும் உணர்ச்சி இடைவிடாமல் இருக்கும்; மூத்திரப் பையின் பலவீனம்.

நிலை கொள்ளாமை: பரபரப்பு: கவலை:—நிலை கொள்ளாமை அளவு கடந்து காணப்படும்; வியாதியஸ்தருக்குச் சும்மா இருப்பது பெரிய சுமையாய்த் தோன்றும். சும்மா இருக்கும்படி வலுக்கட்டாயம் செய்தால் உடனே கவலை உண்டாகும். நிலை கொள்ளாமையுடனும் உடல் முழுவதும் காணப்படும் பர பரப்புடனும்

கவலை. மாலையில் படுத்துக் கொண்டு கண்களை மூடிய வுடன் வேதனை தோன்றுதல்.

வலிப்புகள்: தசைகளில் இழுப்பு:—அடிக்கடி வலிப்பு களும் சங்கா குண பலவீனமும் தோன்றுதல். அதிகத் தூக்கக் கலக்கத்துடன் இரவும் பகலும் சங்கா குண வலிப்புகள் பல முறை தோன்றுதல். அடிக்கடி மயக் கம். இரவில் கால் தசைகளில் இழுப்பு. வெள்ளை ஒழுக்கு தோன்றுவதற்கு முன் அடி வயிற்றில் தசை இழுப்பு. நடக்கும் போது வலிப்புகளும் வலிகளும் முதுகில் அதிகமாய் இருக்கும்; தொடைகளுக்குப் பர வும். உடல் பயிற்சி செய்த பிறகு வெள்ளை ஒழுக்கு; கருப்பையில் வலிப்புகளுடன் நடக்கும் போது வெள்ளை ஒழுக்கு.

மஞ்சள் நிறம்:—உடம்பு முழுவதும் மஞ்சளாய் இருத்தல்; மஞ்சட் காமாலை; கண்களின் வெள்ளை விழி கள் மஞ்சளாய் இருத்தல்; கல்லீரல் கோளாறுகள். மூத்திரம் மஞ்சளாய் இருக்கும். நாக்குப் பெரியதாகி மஞ்சள் நிறத்துடனும் பற்களின் சுவடுகள் படிந்தும் இருக்கும்.

கறுப்பு நிறம்:—மாதவிடாய்ப் போக்கு கறுப்பாய்க் கட்டிகளுடன் இருக்கும். மாதவிடாயின் போது ஒவ் வொரு தடவையும் மனதில் அதிகப் பரபரப்பு ஏற்படும். ஏராளமாய்க் கறுப்பு நிறத்துடனும் கட்டிகளுடனும் பிசின் போலவும் உள்ள மாதவிடாய்ப் போக்கு. அச் சமயத்தில் தசைகளில் இழுப்பு, முதுகு வலி, தொடை கள் வரை பரவும் வலிகள் முதலியவை உண்டாகும்.

வெண்மை நிறம்:—சரக்கட்டி போல் வெள்ளை நிற முள்ள மலம்.

முடிச்சுகள் :—மலம் கடினமாய், ஆட்டுப் புழுக்கை போல் பல முடிச்சுகளுடன் இருக்கும்; நெருப்பில் சுடப் பட்டது போல் நொறுங்கும். ஆசனவாய் சமீபம் வந்த வுடன் நொறுங்க ஆரம்பிக்கும்; இக் கோளாறுகள் பல் முளைக்கும் போது குழந்தைகளிடம் காணப்படும்.

மற்ற குறிகள்

வாயில் வெண்மையான நுரை இடைவிடாமல் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். மாதவிடாயின் இடைக் காலங்களில் கருப்பையிலிருந்து இரத்தப் பெருக்கு; இர வில் அதிகமாகி சங்கா குணத்தை உண்டாக்கும். நீர்க் கோர்வைக்குப் பிறகு சுவை, வாசனை இவ்விரண்டை யும் அறிந்து கொள்ளும் சக்தி அழிதல். ஒவ்வொரு மாலையிலும் குளிரும் உணர்ச்சி; படுக்கையில் படுத்த வுடன் மறைந்து விடும். நாடாப் புழுக்கள்.

ஒப்பிடுதல் :—கல்லீரல் பருத்தல். தொட்டால் வலி, வலது பக்கமாய்ப் படுத்தால் உபாதிகூடுதல் (மெர்கூரியஸ் சொலுபுலிஸ்). பாதங்களிலும் தலையிலும் வியர்வை (ஸைலீஷியா). ஈரம்பு சம்பந்தமான நீலிகொள்ளாமை (ஸிங்க்கம் மெட்) ஸிங்க்கம் மெட்டாலிகத்தில் கால்களில் பரபரப்புக் காணப்படும்; மெக்னீஷியா மூரில் உடம்பு முழுவதும் பரபரப்புக் காணப்படும். குழந்தைகளுக்குக் கல்லீரல் பருத்தல் (கல்கேரியா ஆர்ஸ்) மூத்திரம் சொட்டுச் சொட்டாய் வெளிப்படுதல் (க்ளமேடிஸ். ஹிப்பார் ஸல்பர்). மலதவிடாய்ப் போக்கு கறுப்பாகவும் கட்டி தட்டியும் இருத்தல் (சாமோமில்லா).

கப்பல் மாலுமிகள் கடலை விட்டுக் கரை சேர்ந்த வுடன் காசம் முதலிய பல கோளாறுகளால் கஷ்டப்படு வார்கள்; அக்கோளாறுகள் அவர்கள் கடலில் சென்று

விட்டால் மறைந்துபோகும். அவர்களுக்கு புரோமியம் தேவைப்படும். ஆனல் மெக்னீஷியா மூர் கடலில் சென்ற வுடன் தோன்றும் கோளாறுகளுக்குத் தகுந்தது.

மெக்னீஷியா பாஸ்பாரிகா

(MAGNESIA PHOSPHORICA)

முன்னுரை :—நரம்பு சம்பந்தமுள்ள கோளாறு களுக்கும் வலிப்புகளுக்கும் மிகச் சிறந்த ஔஷதம்.

பொதுவான குறிகள்

தகுதி :—ஒல்லியாய் இளைத்த உடலும் நரம்பு சம் பந்தமான கோளாறுகளும் உள்ளவர்களுக்கு மூக்கிய மாக ஏற்றது. கருநிற முள்ள உடல்.

மனம் :—வியாதி யுள்ள இடங்களில் காணப்படும் வலியைப் பற்றி எப்பொழுதும் புலம்பிக் கொண்டே இருத்தல். மந்த குணமும் தெளிவாய்ச் சிந்தனை செய்ய முடியாமையும். "எப்பொழுதும் தன் வலிகளைப் பற் றியே பேசிக் கொண்டிருப்பாள்."

உடல் :—அல்ப வேலையினலும் உடலில் களைப்பு. எப்பொழுதும் உடலில் அசதி, சோர்வு, களைப்பு. படிக்க ஆரம்பித்தால் தூக்கம் வருதல்.

உபாதி கூடுதல் :—குளிர் காலத்தில் வியாதியஸ்தரின் குறிகள் அதிகமாகும்; குளிர் காற்று மேலே பட்டாலும் அதிகமாகும். குளிர்ந்த தண்ணீரில் குளித்தாலும் அதிக மாகும். ஆடைகளைக் களைவது என்றல் பயத்தை உண்டாக் கும். பயம் என்ற தலைப்பின் கீழ்ப் பார்க்கவும்.

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே) :— நரம்பு சம்பந்தமுள்ள வலிகள் தொடுவது, அமுக்குவது,

குளிர்காற்று ஆகியவைகளால் கூடுதலாகும். உணவு உட்கொள்ளும் போதும் பானங்களைக் குடிக்கும் போதும் விசேஷமாக அவை குளிர்ச்சியாய் இருந்தால் பல்வலி அதிகரிக்கும். குழந்தைகளுக்குப் பல் முளைக்கும் காலத்தில் சுரம் இல்லாமல் வலிப்புகள் மட்டும் தோன்றுதல். பல் முளைக்கும் குழந்தைகளுக்கு விக்கல். குளிர்ச்சியான தண்ணீரில் நின்று கொண்டிருந்ததால் அல்லது ஈரக் களி மண்ணில் வேலை செய்ததால் உண்டாகும் கோளாறுகள். பள்ளியில் படிக்கும் பெண்களின் தலைவலி. அசைவினால் அதிகமாகும் வாதரோகம்.

குளிர் காற்று, குளிர் காற்று வீசுதல், குளிர்ந்த தண்ணீரில் குளித்தல் அல்லது வேலை செய்தல், தொடுவது, அசைவு, சாப்பிடுதல். (முக்கியமாகக் குளிர்ச்சியான பொருள்கள்), மல்லாந்து படுத்தல், இரவு நேரம் ஆகிய காரணங்களால் உபாதிகள் அதிகமாகும்.

உபாதி குறைதல்:—சூடுள்ள அறைகளில் அல்லது இடங்களில் இருந்தாலும் சூட்டினாலும் சௌகரியம் ஏற்படும்.

உபாதி குறைதல்:—(ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):—சூட்டினாலும் சூடுள்ள தண்ணீரில் குளித்தாலும் உபாதிகள் குறையும். அடிவயிற்றில் வலிகள் தோன்றியவுடன் வியாதியஸ்தரை எழுந்து நடமாடச்செய்யும். நடந்தால் வலிகள் தணிந்திருக்கும். (குளிர்ந்த தண்ணீரைக் குடித்தால் வயிற்றுவலி தோன்றும்). சூட்டினாலும் வயிற்றை அமுக்கினாலும் வலி குறையும். வாதரோக வலிகள் சூட்டினால் தணியும். மன உணர்ச்சிகள் அதிகரித்தல், அதிக உழைப்பு அல்லது கஷ்டப்பட்டுப் படித்தல் முதலிய காரணங்களால் தோன்றும் தலைவலி, இறுக அமுக்கினாலும் சூடான ஒற்றிடங்களாலும் குறைவுபடும். (மெக். பாலின் தலைவலி பின்தலையில் ஆரம்பிக்கிறது. அவ்விடத்தில்தான்

அதிகமாகவும் இருக்கிறது. அங்கேயிருந்து தலை முழுவதும் பரவுகிறது.)

விசேஷக் குறிகளின் விளக்கம்

வலிப்புகள்:—"பல வகை வலிப்புகள்—தொண்டையில், கக்குவாய் இருமலில், வாய்ப் பூட்டு. கால் ஆடு தசைகளில் இழுப்பு, விக்கல், தனுர்வாயு, முகத் தசைத் துடிப்பு, அடிக்கடி மூத்திரம் அடக்கப்படுதல் முதலிய கோளாறுகளில் காணப்படும்." சுரம் இல்லாமல் உண்டாகும் வலிப்புகள். வாந்தி யெடுக்கவரும் உணர்ச்சியுடன் இரவும் பகலும் ஓயாமல் விக்கல் ஏற்படுதல். பல் முளைக்கும் குழந்தைகளுக்கு விக்கலும் வலிப்புகளும். கோழை இல்லாமல் அடிக்கடி, வறண்ட, கடுமையான இருமல் தோன்றி ஒவ்வொரு தடவையும் நீண்ட நேரம் நீடித்திருக்கும். மாதவிடாயின் போது வலிகள் விட்டு விட்டுத் தோன்றுதல். "கை கால்கள் விரைத்து விரல்கள் மடங்கி அடிக்கடி வலிப்புகள் தோன்றும்." அடிக்கடி கேவிக் கேவி அழுதல். அடிக்கடி கொட்டாவி விடுதல்; தாடைப் பூட்டு நழுவி விடுமோ என்று நினைக்கும் அளவு கடுமையாய் இருக்கும்.

கருவுற்ற பெண்களுக்கு கால்களில் தசை இழுப்பு. எழுத்து வேலை செய்வோர், விரல்களின் உதவி கொண்டு வாசிக்கப்படும் பிடில், வீணை, முதலிய கருவிகளைக் கையாள்வோர் ஆகியவர்களுக்கு ஏற்படும் தசை இழுப்பு. பல நாட்கள் இடைவிடாமல் சக்திக்கு மீறி வேலை செய்ததினால் ஏற்படும் தசை இழுப்பு. விரல்களில் தசை இழுப்பு உண்டாகி அவை மடங்கி விடும்; விரைத்துப் பார்ப்பது போல் கண்கள் திறந்திருக்கும். தசை இழுப்புடன் வலிகள் இவ்வெளஷதத்தின் முக்கிய

குறியாகும். அடி வயிற்றில் தசை இழுப்புகள். வயிற்றுக் கடுப்பில் கடுமையான தசை இழுப்பு.

கண் இமைகள், அல்லது முகத் தசைகள் இடைவிடாமல் துடித்தல். முகத் தசைத் துடிப்பில் கை கால்கள் கோணக் கோண இழுக்கப்படுதல். உடலிலுள்ள எல்லாத் தசைகளிலும் துடிப்புகள்.

நரம்பு சம்பந்தம்:—நரம்பு சம்பந்த மூள்ள வலிகள், சூட்டினால் சௌகரியமாகும். கடுமையான வலிகள். முகத்தில் நரம்பு வலி; கண்களுக்கு மேற் புறத்திலோ அல்லது கீழ்ப் புறத்திலோ நரம்பு வலி; வலது பக்கத்தில் இருக்கும். விட்டு விட்டுத் தோன்றும்; சிறிது நேரம் நீடித்திருக்கும்; மின்னலைப் போல் தோன்றி மறையும் வலிகள்; தொடுவது; குளிர் காற்று, அமுக்குவது ஆகிய காரணங்களால் வலி கூடுதலாகி உடலின் மீது சூடு பட்டால் குறையும். விலா வெலும்புகளுக்கு நடுவில் நரம்பு வலி. பல் வலி சூட்டினாலும் சூடான பானங்களைக் குடித்தாலும் குறைவாகும்; சாப்பிட்டாலும் குடித்தாலும், விசேஷமாக அவை குளிர்ச்சியாய் இருந்தால் பல் வலி கூடுதலாகும். கதீட்டர் (Catheter) என்று அழைக்கப்படும் கருவியை மூத்திரக் குழாயினுள்ளே செலுத்தி மூத்திரத்தை வெளியேற்றியதால் மூத்திரப் பையில் நரம்பு சம்பந்த மூள்ள வலி ஏற்படுதல்.

திடீர்க் குணம்:—வலிகள் திடீரென்று தோன்றுதல்; மின்னல் போல் இருத்தல்; திடீரென்று இடம் மாறும்; வியாதியஸ்தரைக் கதறச் செய்யும். களைப்படையச் செய்யும்; நிலை கொள்ளாமல் செய்யும். வலிகள் மின்னல் போல் தோன்றுவதும் அவ்வாறே மறைவதும்.

இடம் மாறுதல்:—ஒவ்வொரு நாளும் இரவில் நரம்பு

வலிகள் தோன்றி அடிக்கடி இடத்தை மாற்றிக் கொண்டே இருக்கும்.

கடுமைக் குணம் :—நரம்பு வலிகளும் தசை இழுப்பு களும் எப்பொழுதும் கடுமையாகவே இருக்கும். திடி ரென்று வலிகள் தோன்றி வியாதியஸ்தரைக் கதறச் செய்யும். கொட்டாவி வந்த வண்ணமாகவே இருக்கும். அதனல் கண்ணீர் பெருகும். "ஒரு நிமிஷத்துக்கு 30 கொட் டாவி; அறுபது நாட்களுக்கு ஏற்பட்டு உயிருக்கு ஆபத் தை உண்டாக்கியது (மெக்னீஷியா பாஸ் மிக விரைவில் வியாதியை நீக்கியது)." தொடை நரம்பு வாதத்தில் வலிகள் கடுமையாகவும் மின்னல் போல் அதிர்ச்சியுட னும் வலது பக்கத்தில் அதிகமாகவும் இருத்தல். காது களில் கடுமையான நரம்பு வலி.

பயம் :—குளிர் காற்றைக் கண்டால் பயம்; வியாதி யுள்ள பாகங்களைத் தொடுவது; ஆடை அல்லது போர் வையை நீக்குவது; அசைவு, குளிர்ந்த தண்ணீரில் ஆடை களைச் சுத்தம் செய்தல் அல்லது குளித்தல் ஆகியவை களிலும் பயம்.

மாறித் தோன்றும் குணம் :—வயிற்றுப் போக்கு நின்ற வுடன் வலிப்புகள் தோன்றும். மூக்கில் ஒரு சமயம் அடைப்பும் மறு சமயம் வெள்ளையான, தண்ணீர் போன்ற கழிவு ஏராளமாகவும் தாராளமாகவும் பெருக் கெடுப்பதும்.

வலது பக்கமே வியாதிகள். அதிகம் :—மெக்னீஷியா பாசுக்கும் வலது பக்கத்துக்கும் நெருங்கிய உறவு இருக் கிறது.

முறை வைத்துத் தோன்றுதல் :—இருபத்து மூன்று நாட்களுக்கு ஒரு தடவையாக வலிப்புகள் தோன்றுதல்.

மற்ற குறிகள்

இறுக்கும் வலியுடன் அடிவயிற்றில் வாயு உப்பிசம்; அதனால் வியாதியஸ்தர் தன் உடலை முன் பக்கமாய் இரண்டாக வளைப்பார். சூட்டினாலும் பலமாய்த் தேய்ப்பதினாலும் வலி குறையும். காச வியாதியில் மார்பில் அமுக்கும் உணர்ச்சி. மாதவிடாய் வழக்கத்தைவிட முன்னதாகத் தோன்றும்; போக்கு கறுப்பாகவும் கயிறு போல் இழுபடும் குணமுள்ளதாகவும் இருக்கும்; போக்கு தோன்றுவதற்கு முன் வலி கடுமையாகவும் தோன்ற ஆரம்பித்தவுடன் குறைவாகவும் இருக்கும் (லாச்சஸிஸ், ஸிங்க்கம்). சூட்டினாலும் உடலை இரண்டாய் வளைத்தாலும் வலிகள் குறையும்.

ஒப்பிடுதல் :—ஒவ்வொரு நாளும் இரவில் நரம்பு வலிகள் கடுமையாகத் தோன்றுதல்; சூட்டினால் குறையும் (ஆர்ஸனிகம் ஆல்பம்). பின்தலையிலிருந்து கண்களுக்கு வரும் தலைவலி (ஸைலீஷியா). குளிர்ந்த தண்ணீரில் நின்றதால் உண்டாகும் நரம்புவலி (கல். கார்ப்.). பல் முளைக்கும் போது வலிப்புகள் (பெல்லடொன்னா). பெல்லடொன்னாவில் சுரமும் இருக்கும். மெக். பாசில் சுரம் இருப்பதில்லை. வயிற்று வலியுடன் ஏப்பம் (காலோஸிந்திஸ், நக்ஸ் வாமிகா, பல்ஸடில்லா). விலாவெலும்புகளின் நடுவிலே நரம்பு வலி (ரானங்குலஸ்).

குறிப்பு :—மெக். பாஸ் சூடான தண்ணீருடன் கலந்து கொடுக்கப்பட்டால் மிகச் சிறப்பாய் வேலை செய்கிறது என்று சொல்கிறார்கள். குறைந்த வீரியங்களை அவ்விதம் கொடுக்கலாம். உயர்ந்த வீரியங்களைத் தனியாகத்தான் கொடுக்கவேண்டும்.

மாரம் வேரம் டூக்ரியம்

(MARUM VERUM TEUCRIUM)

முன்னுரை :—ஹோமியோபதி மெட்டீரியா மெடிகாவில் உள்ள முக்கியமான ஔஷதங்களில் ஒன்றாக இதைச் சேர்க்கமுடியாது என்பதில் சந்தேகம் இல்லை. ஆயினும் மனித இனத்தில் சர்வ சாதாரணமாகக் காணப்படும் குடல் பூச்சி, புழுக்களை ஒழிக்க இது பல சமயங்களிலும் தேவையாய்த்தான் இருக்கிறது. மூக்கினுள் வளரும் கெட்ட சதையை நீக்குவதில் இதன் வேலை அபாரமாய்த் தான் இருக்கிறது. "பூச்சி புழுக்களும் கெட்ட சதை வளர்ச்சியும் க்ஷயரோக சம்பந்தம் இருக்கிறதென்று நினைக்க இடம் அளிக்கின்றன. க்ஷயரோகக் கேசுகளுக்கு நான் டூக்ரியம் மாரம், டூக்ரியம் ஸ்கரோட் இவ் விரு ஔஷதங்களையும் உபயோகித்திருக்கிறேன்" என்று அந்தப் புகழ் பெற்ற ஆசிரியர் ஜே. எச். க்ளார்க் எழுதியிருக்கிறார். அது மிக உண்மையான விஷயமே.

ஸோரா விஷத்தை நீக்கும் வல்லமையும் இதற்கு உண்டு.

பொதுவான குறிகள்

தகுதி :—கிழவர்களுக்கும் குழந்தைகளுக்கும் ஏற்றது. அளவுக்கு மிஞ்சி ஔஷதங்களை உட்கொண்டு அதனால் உடலில் உணர்ச்சிகள் மிக அதிகமாகிக் குறிகளுக்குத் தக்க ஔஷதங்களைக் கொடுத்தாலும் அவை பயனற்றுப் போகும் போது சில சமயங்களில் இவ் வௌஷதம் தேவைப்படும். க்ஷயரோக சம்பந்தம் இருப்பதாகத் தோன்றும் நிலைமை.

மனம் :—உணர்ச்சிகள் அதிகரித்துப் படபடப்பாய்

இருத்தல். சில சமயங்களில் உணர்ச்சிகள் மிகவும் அதிக மாகிப் பிறர் பேசிக் கொண்டிருப்பதைக் காது கொடுத் துக் கேட்பதாலேயே களைப்பு உண்டாகும். பாட வேண்டுமென்று அடக்க முடியாத ஆவல்.

உடல் :—கைகளிலும் கால்களிலும் மத மதப்பும் ஊசியினல் மெதுவாகக் குத்தும் உணர்ச்சியும், பல் வேறு இடங்களில் அறிப்பு. பாயும் வலிகள். சருமம் மிகவும் காய்ந்திருக்கும்; வியர்வை துளிக்கூட உண்டாவ தில்லை. வாயின் மேல் கூரையிலும் காதுகளிலும் அறிப்பு. கால் விரல்களின் நகங்கள் கீழ்ப் பக்கமாக வளைந்து சதையிலும் பதியும். புண்களும் இரக்கலரம். உண்ணும் உணவு வயிற்றுக்குப் போதுமானதாய் இல் லாதது போல் பசி உணர்ச்சி; அதனல் தூக்கம் வராமை. அசாதாரணமான பசி. வாசனை அறியும் சக்தி அழிதல். அதிகச் சோம்பேறித்தனம்; மனதாலோ, உடலாலோ உழைத்து வேலை செய்ய விருப்பம் இல்லாமை.

உபாதி கூடுதல் :—நடுப்பகலில் பொதுவான பல வீனம் இருப்பது போல் தோன்றுதல்.

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே) :— உபாதிகள் மாலையிலும் இரவிலும் அதிகமாகும். தலைவலி குனிந்தால் கூடுதலாகும். வறண்ட இருமல், தொண்டை யில் குருகுருப்பு உணர்ச்சியினல் தோன்றும். இருமுவதி னல் குரு குருப்பு உணர்ச்சி அதிகமாகும். கெட்ட சதை வளர்ச்சி ஈரக்கசிவுள்ள பருவக்காலங்களில் கூடுதலாகும்.

உபாதி குறைதல் :—திறந்த இடங்களில் உடற் பயிற்சி செய்ய விருப்பம்; அதனல் களைப்பு ஏற்படுவ தில்லை; மாறுக சௌகரியத்தைத் தரும்.

விசேஷக் குறிகளின் விளக்கம்

வேதனை (அறிப்பு, ஊரும் உணர்ச்சி, ஊசி குத்தும் உணர்ச்சி:—உடம்பு முழுவதும் வேதனை தரும் உணர்ச்சி.

கீரைப் புழுக்களால் ஆசனவாயில் அதிகமான அறிப்பும் மாலையில் படுத்துக் கொண்டவுடன் இடைவிடாத வேதனையும் தோன்றும். இவ்விதமான ஆசனவாய் அறிப்பினால் தூக்கம் கெட்டுப் போகும். மூக்கைக் குடைதல்; மூக்கினுள்ளே குத்தும் உணர்ச்சி. மலம் கழித்த பிறகு ஆசனவாயில் ஊரும் உணர்ச்சி. ஆசனவாயில் ஊரும் உணர்ச்சி மாலையிலும் படுக்கையின் சூட்டினாலும் அதிகமாகும். குழந்தை அடிக்கடி தன் மூக்கைத் தேய்த்துக் கொள்ளும். கெட்ட சதை வளரும் இடத்துக்கு அருகில் கடிப்பது போன்ற உணர்ச்சி. வறண்ட இருமல்; தொண்டையிலும் குரு குருப்பான உணர்ச்சி. "உட்கார்ந்து கொண்டிருக்கும் போது கால்களில் மத மதப்பும் ஊசி குத்தும் உணர்ச்சியும் உண்டாகும்."

இயற்கைக்கு மாறான வளர்ச்சிகள் (கெட்ட சதை வளர்ச்சி, சதைக்கட்டிகள் முதலியவை):—மூக்கினுள் கெட்ட சதை வளர்ச்சி, கெட்ட சதை வளர்ச்சியினால் கீழே வைத்துப் படுக்கும் பக்கத்தில் உள்ள மூக்குத்துவாரம் அடைபட்டுப் போகும். கருப்பை அல்லது யோனியில் கெட்ட சதை வளர்ச்சி. கருப்பையில் கட்டிகள், இழைகளில், விசேஷமாக கீழ் இழையின் உட்புறத்தில் கட்டிகள். மேக வெட்டைக்குப் பிறகு மூத்திரக்குழாயில் கெட்ட சதை வளர்ச்சி (இவ்வளவுதத்தின் தாய்த்திரவத்தை ஊசிமூலம் கொடுத்துக் குணம் ஏற்பட்டிருக்கிறது).

நாட்பட்ட நீர்க்கோர்வை; பெரிய, ஒழுங்குக்கு உட்

படாத சளிக்கட்டிகள் வெளியேறுதல். மூக்கின் உட்புறத்திலிருந்து கட்டிகட்டியாகச் சளி வெளியாகும் நாட்பட்ட நீர்க்கோர்வை.

விக்கல்: தும்மல் :—கடுமையான விக்கல். குழந்தைக்குப் பால் கொடுத்தவுடன் உடலைக் குலுக்கும் விக்கல். சாப்பிடும்போது துன்பத்தைத் தரும் விக்கல். அடிக்கடி தும்மல்.

குழகுழப்புச் சுவை :—கோழையைத் துப்பக் கனைக்கும்போது தொண்டையில் குழகுழப்பான சுவை.

அடைப்பு :—கீழே வைத்துப் படுக்கும் பக்கத்திலுள்ள மூக்குத் துவாரத்தை அடைக்கும் குண முள்ள கெட்ட சதை வளர்ச்சி. "மூக்குத் துவாரங்கள் அடைபட்டு விட்ட உணர்ச்சி; மூக்கைச் சிந்தினாலும் அல்லது தும்மினாலும் அடைப்பு நீங்காமை (ஸ்டிக்டா)"

மற்ற குறிகள்

கால்விரல்களின் நகங்கள் விரல்களின் தசையினுள்ளே புதைந்து விட்டதுபோல் அவ்விடங்களில் வலி. நகங்களில் சீழ் உள்ள தழிகள், நடக்கும் போது தள்ளாடுதல், ஒருகாலின்மீது மற்றொரு காலை வைத்தல். மிக வேகமாக உடல் வலிமையும் எடையும் குறைதல். வாதரோகம், கீல்வாயு சம்பந்தமுள்ள வியாதிகள். தெள்ளுப்பூச்சி கடித்துவிட்டதுபோல் உணர்ச்சி.

ஒப்பிடுதல் :—மூக்கில் கெட்ட சதை வளர்ச்சி (பாஸ்ப்ரஸ், ஸாங்வினேரியா, ஸைலீஷியா). நகங்கள் உட்புறமாக வளருதல் (நைட்ரிக் ஆஸிட்). கடுமையான விக்கல் (ஸிகுடா, கேலகபோடியம், மெக். பாஸ், நக்ஸ் வாமிகா). தன்னை யறியாமலேயே பாடுதல் (க்ரோகஸ், கேலகபோடியம்).

உறவு :—முன்னும் பிறகும் வேலை செய்யக் கூடியவை **கல். கார்ப், நேட்ரம் பாஸ்.**

குறிப்புகள் :—சில சமயங்களில் ஆசனவாயிலிருந்து புழுக்கள் வெளிப்படுதல் மலம் கழிந்த பிறகு ஆசனவாயில் ஊரும் உணர்ச்சி, அறிப்பு, உடல் வெளுப்பு, முதலிய குறிகளுடன் இருந்த வயிற்றுவலி (பூச்சிகளால் ஏற்படும்) க்கேசு ஒன்று என்னிடம் வந்தது. இவ்வலி தித்திப்புப் பொருள்களைச் சாப்பிட்டால் அதிகமாகும். இவ் வௌஷதத்தை முதலில் 1x வீரியத்திலும் பிறகு 3x வீரியத்திலும் பல வேளைகள் கொடுத்துக் குணம் செய்து விட்டேன்.

தடித்த எழுத்துக்களில் மேலே கொடுக்கப்பட்டுள்ள குறிகள் இவ்வௌஷதத்தின் ஒரு அனுபவக்குறியாகவே மதிக்கப்படவேண்டும். மற்றுமுள்ளவர்களுக்கும் இதே போன்ற அனுபவம் ஏற்பட்ட பிறகே இதை உண்மையான குறியென்று முடிவு கூறலாம்.

மெதாரினம்

(MEDORRHINUM)

முன்னுரை :—கோளாறுன உடல் வாகைத் திருத்த உபயோகமாகும் மிக உயர்ந்த ஔஷதங்களில் இதுவும் ஒன்று.

குறிகள் ஒத்திருந்தால்தான் இவ்வௌஷதத்தை உபயோகிக்கலாம் என்பதைச் சொல்லவேண்டியதில்லை.

கீல் வாதம், வாதரோகம், நரம்புவலி, மூள்ளந் தண்டைப் பற்றிய வியாதிகள், சினைப்பைகளில் நாட்பட்ட வேக்காடு சினைப்பைக்குழாய்களின் வேக்காடு, கருப்பையிலும் சினைப்பைகளிலும் பலவிதமான கெட்ட சதை வளர்ச்சி (விஷத்தன்மை வாய்ந்ததாகவும் இருக்கலாம்)

முதலிய சில வியாதிகளில், வியாதியஸ்தருக்கு அதற்கு முன் மேக வெட்டை ஏற்பட்டிருந்தால் 1M போன்ற உயர்ந்த வீரியங்களில் மெதாரினத்தை ஒரு வேளை கொடுத்தால் அவை பணியும். ஆனால் இவ்விதக் கேசுகளில் மெதாரினத்தின் குறிகள் ஒன்றுகூட காணப்படுவதில்லை. அப்படிக் காணப்படாமல் இருப்பதே அக்கேசுகளுக்கு ஏற்றது மெதாரினம் என்று முடிவு கூறுகிறது.

ஆனால் ஏதாவது ஒரு கேசில் இவ்வௌஷதம் தேவைப்படும் குறிகள் காணப்பட்டால் அவ்வியாதியஸ்தருக்கு முன் மேக வெட்டை ஏற்பட்டது இல்லையே என்ற காரணத்துக்காக மெதாரினத்தை உபயோகிக்கத் தயங்க வேண்டியது இல்லை. ஆயினும் இவ்வௌஷதம் தேவைப்படும் கேசுகளில் மேகவெட்டை விஷம் இருப்பதுதான் விசேஷமாகக் கருதப்படுகிறது.

நாட்பட நீடித்தல், பிடிவாத குணம், விஷத்தன்மை, மேக வெட்டை வியாதி ஏற்பட்டிருத்தல், குறிகளுக்கு மிகவும் ஏற்றது என்று கொடுக்கப்படும் ஔஷதங்களால் வியாதி குறைவதோ குணமாவதோ இல்லை, முதலிய குறிகள் ஒன்றுகச் சேர்ந்துள்ள நிலைமைகளில் உடனே மெதாரினத்தை நினைக்கவேண்டும்.

பொதுவான குறிகள்

தகுதி:—மேக வெட்டை அமுக்கப்படுதல் அல்லது ஒழுங்காகச் சிகிச்சை செய்யப்படாமை, மிகவும் ஏற்றதென்று தேர்ந்தெடுத்துக் கொடுக்கப்பட்ட ஔஷதத்தினால் குணம் ஏற்படாமை அல்லது நீடித்த குணம் தோன்றுமை ஆகிய உடல் கோளாறுகள் உள்ளவர்களுக்கு முக்கியமாகத் தகுந்தது. முள்ளந்தண்டிலும் உணர்ச்சி நரம்புகளிலும் உண்டாகும் நாட்பட்ட

கோளாறுகளுக்குப் பல சமயங்களிலும் உபயோகப்படு கிறது. மேக வெட்டை விஷம் உடலில் ஊறி இருப்ப தால் உண்டாகும் கோளாறுகள். அடிவயிற்றில் நாட் பட்ட கோளாறுகள் உள்ள பெண்கள். மேக வெட்டை அல்லது மேகக் கிரந்தி விஷம் உடலில் கலந்திருப்பதால் வயதுக்குத் தக்க வளர்ச்சி இல்லாமல் நரித்திருக்கும் குழந்தைகள். ஆரம்ப நிலைமையில் உள்ள சுவாச கோச க்ஷயம்.

மனம் :—ஞாபக சக்தி குறைதல் : ஒரு இடத்தில் மனதைச் செலுத்த முடியாமை. பெயர்களையும். சொல்ல வந்த விஷயத்தின் முடிவான வார்த்தைகளையும் மறந்துவிடுவார்; வார்த்தையை முடிக்க முடியாமல் போகும். பேசிக்கொண்டே இருக்கும் போது நடுவில் அவ்விஷயத்தை மறந்துவிடுவார். அவளுடைய குறி களைச் சொல்ல அதிக சிரமப்படுதல், விஷயத்தை மறந்து போய் விடுவதால் கேள்வியைத் திருப்பித் திருப்பிக் கேட்கவேண்டி வரும். தனக்குப் பைத்தியம் பிடித்து விடுமென்று பயப்படுவார். மிகவும் அவசரம். தன் வியாதி குணமாகுமென்ற நம்பிக்கையை இழந்து விடுவார். தற்கொலை செய்துகொள்ளும் எண்ணங் களுடன் ஏக்கம் பிடித்திருப்பார். மனக் குழப்பம். உணர்ச்சிகள் அதிகமாகுதல். சிறிய விஷயங்களாலும் கோபம் ஏற்படும். அதிகச் சுயநலம் பாராட்டுவார். அழாமல் பேச முடியாது. பகலில் கோபமாகவும் இரவில் குதூகலமாகவும் இருப்பார். உணர்ச்சிகள் மிகவும் அதிகமாகிச் சிறிய ஓசைகளாலும் திடுக்கிடுவார். பல குறிகள் அவைகளைப் பற்றி நினைக்கும்போது அதிகரிக் கும். நேரம் மிகவும் மெதுவாகச் செல்வதுபோல் தோன்றும்.

உடல் :—அல்ப காரணங்களாலும் விபர்வை உண்டாகும். உடல் இளைத்தல். "முதுகைக் கூனிக்கொண்டு விகாரமாய் நடப்பார்." உடல் முழுவதும் நடுங்குதல் (அவ்வாறு வியாதியஸ்தருக்குத் தோன்றும்): அதிகப் பயம்; நாளுக்கு நாள் உடல் பலவீனம் அதிகமாகி முடிவில் அதிகமான சோர்வு தோன்றும். தலைமயிர் காய்ந்து, சுருட்டை விழுதல். காதுகேட்பது குறையும் அல்லது முழுவதும் செவிடாகும். முகம் பச்சை நிற மாய்ப் பளபளவென்றும் இருக்கும். முகத்தில் சில இடங்களில் வேக்காடு. பற்களின் நுனிப்பாகம் ரம்பம் போல் பல கூர்களுடன் இருக்கும் அல்லது சாக்கட்டி போலவும் மிகச் சிக்கிரத்தில் சொத்தையாவது மாகவும் இருக்கும். உப்பு, திராட்சை, ஐஸ் கட்டி, புளிப்புப் பொருள்கள், ஆரஞ்சுகள், பச்சை நிறமுள்ள பழங்கள், ஊக்கத்தை உண்டாக்கும் பொருள்கள், புகை இலை ஆகியவைகளில் விருப்பம். வாய் காய்ந்து நெருப்புச் சுட்டது போன்ற உணர்ச்சியுடன் இருக்கும். உள்ளங் கால்களிலும் உள்ளங்கைகளிலும் எரிச்சல். பாதங்களில் எரிச்சல்; அதனால் காலை மூடியிருக்கும் துணியைக் கழன்தெறிந்து விசிறிக்கொள்வார். உடலில் கெட்ட நாற்றம். காற்றுப் பசி. முள்ளந்தண்டு புண்ணாக இருக்கும் உணர்ச்சியுடன் தொட்டால் வலி உண்டாகும். நகங்களைக் கடித்தல். கணுக்கால்களில் பலவீனம். பாதங்களிலிருந்து முழங்கால்கள் வரை வீங்கி இருத்தல்; நீர்ச்சுரப்பும் இருக்கும். பாதங்களில் சில்விப்பும் வியர்வையும். நடக்கும்போது அடிக்கடி கணுக்கால் மூட்டு நழுவுதல். இமைகளின் ஓரங்களில் வேதனை உணர்ச்சி தவறாமல் காணப்படுதல். முழங்கால்களை

மூட்டுக் கொடுத்துக் குப்புறப்படுத்துக் கொண்டு தூங்குதல்.

உபாதி கூடுதல் :—அல்ப காரணங்களாலும் வியாதியஸ்தருக்கு வியர்வை உண்டாகும். குளிர் கொஞ்சங் கூட ஒத்துக்கொள்ளாது. மேலே காற்று வீசினால் தாங்கமுடியாது. அதே சமயத்தில் அவருக்குக் காற்றுப் பசியும் இருக்கும் அதாவது வீசிற வேண்டுமென்று மிகவும் விரும்புவார்.

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):— விடியற்காலையில், முக்கியமாக 3 மணியிலிருந்து 4 மணி வரையில் குறிகள் அதிகமாகும். மேகவெட்டை விஷமுள்ள வியாதியஸ்தர்கள் எல்லோருக்கும் உபாதிகள் அதிகமாகும் குறிப்பிடத்தக்க நேரம் இதுவே. உடலைச் சிரமப்படுத்தி வேலை செய்ததால் அல்லது கனமான பொருள்களைத் தூக்கியதால் கீழ்முதுகில் ஏற்படும் பிடிப்பு வலி. பல குறிகள் அவைகளைப் பற்றி நினைக்கும்போது கூடுதலாகும். மேகவெட்டை சம்பந்தமுள்ள காசநோய், விடியற்காலை இரண்டு மணியிலிருந்து நான்கு மணி வரை அதிகமாய் இருக்கும். காலையிலிருந்து மாலை வரையில் குறிகள் அதிகமாய் இருத்தல் (**ஸிபிலினத்தில்** இதற்கு எதிராய் இருக்கும்.)

உபாதி குறைதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே):— முதுகைப் பின்பக்கமாக எவ்வளவு வளைக்க முடியுமோ அவ் வளவு தூரமும் வளைத்தால் தான் மலத்தைக் கழிக்க முடியும். மூத்திரக்காய்ப் பகுதியில் கடுமையான வலி முதுகு வலி). ஏராளமாய் மூத்திரம் வெளியானால் குறையும் வயிற் றைக் கீழே வைத்துப் படுத்தால், அதாவது முகம் குப்புறப் படுத்து நாக்கை வெளியே நீட்டிக் கொண்டிருந்தால் இருமல் குறையும். குப்புறப் படுத்தால் வியாதியஸ்தருக்குப்

பொதுவாக சௌகரியமாய் இருக்கும். ஈரக்கசிவுள்ள பருவக் காலங்களில் சௌகரியம்.

விசேஷக் குறிகளின் விளக்கம்

நாட்பட நீடித்தல் : பிடிவாத குணம் :—மேக வெட்டை காரணமாகத் தோன்றிய நாட்பட்ட கோளாறுகள். சினைப் பைகளின் நாட்பட்ட வேக்காடு. சினைப்பை குமாய்களின் வேக்காடு, அடிவயிற்றுக் கோளாறுகள். பெண்களுக்குக் கருப்பையிலும் சினைப்பைகளிலும் விஷத் தன்மை வாய்ந்த கெட்ட சதைகள், சதைக் கட்டிகள் ஆகியவை வளருதல் முதலிய வியாதிகள் மேக வெட்டை விஷத்தின் காரணமாகவோ அல்லது அக்காரணம் இல்லாமலோ தோன்றுதல். பிடிவாத குண முள்ள வாத ரோகம். பிடிவாத குண முள்ள நீர்க் கோர்வை. பிசின் போல் ஒட்டும் குண முள்ள கோழை ஏராளமாய் வெளியாகும் மிகப் பிடிவாத குண முள்ள காற்றுக் குமாய் வியாதிகள்; சில சமயங்களில் கோழையுடன் இரத்தமும் வரலாம். மூக்குத் துவாரங்களின் மேல் பக்கத்தில் பிடிவாத குண முள்ள அடைப்பு; வாசனை யறியும் சக்தி அழிதல். பிடிவாதமான வெள்ளை ஒழுக்கு. சினைப்பைப் பாகத்தில் நாட்பட்ட வலி.

தொட்டால் வலி :—காய்ப்புகளைத் தொட்டால் அதிக வலி உண்டாகும். உள்ளங் கால்களில் தொட்டால் வலி.

எரிச்சல் :—உள்ளங் கைகளிலும் உள்ளங் கால்களிலும் எரிச்சல். பாதங்களில் எரிச்சல். அவைகளை மூடியுள்ள துணிகளைக் களைந்தெறிந்து விடுவார், குழந்தையின் மூத்திரம் அதன் உடலைப் பயங்கரமாக

வெந்து போகச் செய்யும். மூலாயில் கடுமையான எரிச் சலுள்ள வலி.

அறிப்பு:—ஆசனவாயில் கடுமையான அறிப்பு. உள் ளங் கால்களில் வலியுடன் எரிச்சல். அறிப்பும் புண் ணுள்ள உணர்ச்சியும். யோனியின் உள்ளேயும் வெளி யிலும் கடுமையான அறிப்பு; அதை நினைத்தால் மேலும் அதிகமாகும். மூக்கில் கடுமையான அறிப்பு. உடம்பு முழுவதுமே அறிப்பும் அதை நினைத்தால் அதிக மாவதும் இருக்கலாம். மண்டைத் தோலில் கடுமை யான அறிப்பு. பொடுகுகள் ஏராளமாய் உதிரும்.

வியர்வை:—அல்ப காரணங்களாலும் வியர்வை. பாதங்கள் சில்லென்றும் வியர்வை கசிந்து கொண்டும் இருக்கும். பல நாட்களாக இருந்து வரும் கால்களின் வியர்வை, குளிர் காலத்தில் அதிகரிக்கும். இரவில் வியர்வை. விடாமல் வியர்த்துக் கொண்டே இருத்தல். இரவில் ஏராளமான வியர்வை.

சிவந்த நிறம்: செப்பு நிறம்:—பிறந்து சில நாட்களே ஆன இளம் குழந்தைகளுக்கு ஆசனவாய்ப் பக்கத்தில் நெருப்புப் போல் சிவந்த சருமக் கோளாறு தோன்றுதல். செப்புப் போல் கன்றிய சிவப்பு நிற முள்ள திட்டுகள்.

கடுமை:—எல்லா உணர்ச்சிகளும் கடுமையாய் இருத் தல்; தொட்டால் கடுமையான வலி; கடுமையான எரிச் சல், ஏராளமான வியர்வை, அதிகச் சிவப்பு ஆகியவை களையும் சேர்த்துக் கொள்ளலாம். உள்ளங் கால்களில் வலி மிகக் கடுமையாய் இருப்பதால் வியாதியஸ்தர் முழங் கால்களை ஊன்றி நடக்க வேண்டி வரும். வாத ரோக வலிகள் மிகக் கடுமையாய் இருக்கும். கல்லீரலில் பயங்

கரமான வலி. இரவு, பகல் எந்நேரத்திலும் மானி அடிக்கடியும் கடுமையாகவும் விரைத்தல். நிலை கொள்ளாமல் தவிப்பதும் கால்களில் பரபரப்பும் மிகக் கடுமையாய் இருக்கும். வயிற்றின் உட்புறத்திலுள்ள நரம்புகளில் கடுமையான, நரக வேதனையை அளிக்கும் வலி. மூத்திரக் காய்களில் கடுமையான வலி; மேல் மூத்திரக் குழாய்களில் மூத்திரக் கற்கள் வெளிப்படும் போது காணப்படுவதைப் போன்ற கடுமையான வலி. மாதவிடாயில் கடுமையான வலி; பயங்கரமான கீழ் இழுக்கும் வலி இருக்கும்; முழங் கால்கள் மடங்கி விடும்.

மண்டைத் தோலில் ஏராளமான பொடுகு, அடக்க முடியாத கொட்டாவி அடிக்கடி. தோன்றுதல், கடுமையான கோப குணம், எல்லையற்ற சுய நலம், தித்திப்புப் பொருள்களில் தீராத ஆவல் ஆகியவைகளையும் சேர்க்கலாம்.

சுரப்பிகள் தாக்கப்படுதல்:—"எலும்பு மூலைகளில் வீக்கம், எலும்புகள் கோளாறுக வளருதல் முதலிய குறிகளுடன் உடலில் உள்ள பல சுரப்பிகளில் வேக்காடு தோன்றுவதற்கு மேக வெட்டை நோய் உள்ள குடும்பங்களில் பிறப்பதே காரணம் என்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது; வியாதியஸ்தர்களுக்குக் கடலோரங்களில் வசித்தால் சௌகரியம் ஏற்படும்" என்று கில்பெர்ட் (Gilbert) கூறுகிறார்.

இறுக்கும் உணர்ச்சி: சுருங்குதல்:—வலிகளால் உடம்பு முழுவதும், முக்கியமாகத் தொடைகளில் இறுக்கக் கட்டிய உணர்ச்சி உண்டாகும். தொடை நரம்புகளிலும் கணுக் கால்களிலும் இழுப்பது போலவும் அவை சுருங்கிப் போய்விட்டது போலவும் உணர்ச்சி.

உடலில் உள்ள ஒவ்வொரு மூட்டிலும் வலியுடன் விரைப்பு. கணுக் கால்களில் வீக்கமும் வலியுடன் விரைப்பும். முதுகு விட்டுப் போகுதல். உட்கார்ந்து விட்டு எழுந்திருக்கும் போது அல்லது நகர ஆரம்பிக்கும் போது முதுகு விரைப்பாக இருத்தல். கால்களில் விரைப்பும் விட்டுப் போன உணர்ச்சியும். "தொடையின் முன் பக்கத்தில் முழங்கால் வரை உள்ள தசை சுருங்கி விடுதல்" முள்ளந் தண்டு உள்ள இடம் முழுவதும் சுருங்கியும் விரைப்பாகவும் இருக்கும் உணர்ச்சி. தாடைகளிலும் நாக்கிலும் அடிக்கடி விரைப்பு உண்டாகுதல். இருமும் போது மார்பு சுருங்கி விட்டது போன்ற உணர்ச்சியுடன் அதிகமான வலி.

சில்லிப்பு:—கைகள் சில்லென்றிருத்தல். கால்கள் சில்லென்றிருத்தல். மார்பிலும் ஸ்தனங்களிலும் சில்லிப்பான உணர்ச்சி. கால்கள் வியர்வையுடன் சில்லிடுதல். உடம்பு சில்லென்றிருக்கும். ஆயினும் போர்வையை உதறித் தள்ளுவார். உடலில் சில்லிப்பும் குளிர்ந்த வியர்வையினல் குளித்து விடப்பட்டது போலவும் இருக்கும். "க்ஷீணம் ஏற்படும் நிலைமை; எங்கேரமும் விசிறுவதை விரும்புவார்; சுத்தமான காற்று வேண்டுமென்று அதிக ஆவல்". கண்களில் குளிர்ந்த காற்று வீசும் உணர்ச்சி. "ஸ்தனங்கள், முக்கியமாக ஸ்தனக் காம்புகள், தொட்டால் பனிக் கட்டி போல் மிகவும் சில்லிப்பாய் இருக்கும்; மற்ற இடங்கள் சூடாய் இருக்கும் (மாதவிடாய் உள்ள போது)."

புண்ணுள்ள உணர்ச்சி:—உணர்ச்சி அதிகரிப்பு: ஸ்தனங்களிலும் ஸ்தனக் காம்புகளிலும் தொட்டால் வலியும் புண்ணுள்ள உணர்ச்சியும். நாட்பட்ட மேக வெட்டையில்

மெல்லிய போக்கு வெளிப்படும் போது மூத்திரக் குழாய் முழு வதும் புண்ணுய்த் தோன்றுதல்.

கெட்ட நாற்றம்:—குழந்தைகளின் உடம்பில் அளவு கடந்த நாற்றம் வீசுதல். வெள்ளை ஒழுக்கு தண்ணீர் போல நீர்த்தும் காரமாகவும் பட்ட இடங்களைப் புண் ணுக்கு வதாகவும் அழுகிய மீன் நாற்றத்துடனும் இருக் கும். ஆசன வாயிலிருந்து அழுகிய மீன் போல் நாறும் ஈரக் கசிவு வெளிப்படுதல். உடலில் கெட்ட நாற்றம். மாதவிடாயில் போக்கு ஏராளமாகவும் கறுப்பு நிறமாக வும் கட்டிகளுடனும் நாற்றமாகவும் இருக்கும்; கறை யை நீக்குவது மிகவும் சிரமமாய் இருக்கும்.

மற்ற குறிகள்

எல்லா எலும்புகளும் மூட்டிலிருந்து நழுவி விட்ட உணர்ச்சி. குழந்தைகள் தம் பிறப்பு உறுப்புகளைச் சேஷ்டை செய்தல். மேக வெட்டை வியாதியுள்ள குடும்பங்களில் பிறந்த குழந்தைகளுக்கு உண்டாகும் கோளாறுன உடல் வளர்ச்சி. அரைச் செவிடு. க்ஷய ரோக முள்ளவர்களுக்கு நகங்கள் உள்பக்கமாய் வளைந்து வளருதல் கால்களை விரைப்பாக நீட்ட ஆவல். சதை அழுகுதல். வெள்ளைச் சத்து கலந்த மூத்திரம். "வாத ரோகக் குறிகளுடனும் உடலின் ஆரோக்கியக் குறை வுடனும் நாட்பட்ட மேக வெட்டையில் தோன்றும் நீடித்த வெள்ளை ஒழுக்கு." "அல்ப வேலை செய்தாலும் மூச்சு அடைப்பதும் மூச்சுத் திணறுவதும்." இளைஞர் களுக்கு மேக வெட்டை காரணமாக ஆண் தன்மை குறைதல் (தூஜா). மேக வெட்டை காரணமாகப் பெண்களுக்கு மலட்டுத் தன்மை தோன்றுதல். கெட்ட சதை வளர்ச்சி. மூக்குத் துவாரங்களின் மேல் பகுதி

யிலிருந்து கெட்டியான, பழுப்பு நிற முள்ள அல்லது இரத்தம் தோய்ந்த சளி அடிக்கடி தொண்டைக்கு வருதல். சரப்பிட்ட வுடனேயே அகோரப் பசி. பந்து போன்ற மலத்தினுல் குடல்களில் இறுக்கும் உணர்ச்சியும் அவை வேலை செய்யாமல் போவதும். இரவில் படுக்கையில் மூத்திரம் கழித்தல்; ஒவ்வொரு இரவிலும் அம்மோனியா போல் நாற்றமும் நல்ல நிறமும் கொண்ட மூத்திரம் ஏராளமாய்ப் படுக்கையில் கழிக்கப்படுதல்; இக்கேசுகளில் குறிகளுக்கு மிக ஏற்ற ஔஷதத்தினுல் குணம் ஏற்படாமல் இருந்தாலும் மேக வெட்டை சம்பந்தம் காணப்பட்டாலும் மெதாரினம் தேவை. இடது தோள்பட்டை யெலும்பின் மேல் பக்கத்தில் வாத ரோக வலி. அசைவினுல் அதிகமாகும். தோள்பட்டையிலும் (வலது), கையிலும் வாத ரோக வலி. மூட்டுகளில் நாட்பட்ட வாத ரோகம், கடலின் அருகே இருக்கும் போது அதிகமாகவும் இருக்கும். நாற்காலியிலிருந்து எழுந்திருக்கும் போது முழங்கால்களில் பல வீனம், கால் தசைகளில் வாத ரோக வலிகள். க்ஷய ரோகிகளுக்கு ஏற்படும் உடல் அசதி; உடல் வலிமை குறைந்திருத்தல். மேக வெட்டை விஷ முள்ள குழந்தைகளுக்கு ஏற்படும் காலரா போன்ற வயிற்றுப் போக்கும் உடல் மெலிவும். கை கால்களிலும் நரம்புச் சக்தி மிகவும் குறைந்து போய் அல்ப வேலை செய்தாலும் களைத்துப் போகுதல்." விரல் எலும்பு மூட்டுகள் வீங்கியும் பருத்தும் இருத்தல். கணுக்கால்களில் வீக்கமும் வலியுள்ள பிடிப்பும். வெளிக்காதின் நடுவில் கடுமையான வலிகள். கருப்பையின் வாயில் வேக்காடும் புண்

ணும். இருதயம் உள்ள இடத்தில் ஒன்றுமே இல்லாமல் பள்ள மாய் இருக்கும் உணர்ச்சி. மேக வெட்டை சம்பந்த முள்ள பாலுண்ணிகள். பாதங்களில் நீர்ச் சுரப்பு. மூச்சுத் திண றலும் மார்பில் இறுகக் கட்டிய உணர்ச்சியும். தாராள மாகக் காற்றை உள்ளே இழுக்க முடியும்; ஆனால் வெளி யேற்ற முடியாது. முறை வைத்துத் தோன்றும் தலை வலிகள், வலி காலையிலிருந்து மாலை வரை இருக்கும்.

"புற்று, கவாச கோச க்ஷயம், கெட்ட சதை வளர்ச்சி, மலட்டுத் தன்மை ஆகியவை மேக வெட்டை விஷத்திலிருந்து தோன்றியிருப்பதை நான் கண்டிருக் கிறேன். விஷத் தன்மை வாய்ந்த இரத்த சோகை பல சமயங்களில் மேக வெட்டையினால் தோன்றுகிறது. மேக வெட்டையில் வியாதியை உள்ளே அமுக்கும் போது விழித்திரையில் வேக்காடு தோன்றுகிறது. மேகக் கிரந்தியில் வியாதி உள்ளே அமுக்கப்படாத நிலைமையிலும் விழித்திரை வேக்காடு தோன்றுகிறது."

உறவு:—இபிகாக் (வறண்ட இருமல்) முறிவாகும். ஸல்பர் நட்பாகும்.

ஒப்பிடுதல்:—சரியாக நடக்க முடியாமை (பிக்ரிக் ஆஸிட்). க்ஷீண நிலைமை, உடல் சில்லிடுதல், போர்வையைத் தூர எறிதல் (காம்போர, ஸீகேல்). குளிர்ந்த வியர்வை யுடன் க்ஷீணம் (வெராட்ரம் ஆல்பம்). அழாமல் பேச முடி யாது (காலி கார்ப், பல்ஸடில்லா, ஸேபியா). நேரம் மெது வாகச் செல்லுதல் (அர்ஜண்டம் நைட்). அல்ப காரணங் களாலும் கோபம் உண்டாகுதல் (பிரயோனியா, சாமோ மில்லா, இக்னேஷியா, நக்ஸ் வாமிகா, ஸல்பர்). பைத்தி யம் பிடித்து விடுமோ என்று பயப்படுதல் (கல். கார்ப்). மூத்திரம் மிக மெதுவாக வெளிப்படுதல் (க்ளமேடிஸ், கோனியம், ஹிப்பார் ஸல்பர், நைட்ரிக் ஆஸிட், நக்ஸ்

வாமிகா). சாவை எதிர்பார்த்தல் (ஆர்ஸனிகம் ஆல்பம்). ஆசனவாயில் கடுமையான அறிப்பு (கல். கார்ப், ஸல்பர், டேக்ரியம்). தொண்டை புண்ணுய்த் தோன்றுதல் (காஸ்டிகம், பாஸ்பரஸ்). அழுகிய மீன் நாற்றம் (ஸானிகுலா).

குறிப்புகள் :—அழுக்கப்பட்ட மேக வெட்டையைப் பல சமயங்களில் வெளியே வரும்படிச் செய்து பிறகு அவ் விஷத்தால் தோன்றிய கோளாறுகளைக் குணம் செய்கிறது.

விபசரியஸ்தருக்கோ அல்லது அவருடைய தாய் தகப் பனுக்கோ மேக வெட்டை அழுக்கப்பட்ட விஷயம் காணப் பட்டால் உடனே மெதாரினத்தை நிறுத்த வேண்டும்.

மேக வெட்டை அல்லது வாத ரோகம் இவ்வியாதி களின் ஆரம்ப நிலைமையில் மெதாரினத்தை ஒரு வேளை கொடுத்தாலும் வியாதி பயங்கரமான அளவுக்கு அதிக மாகும். ஆதலால் இவ்வியாதிகளின் ஆரம்ப காலத்தில் இவ்வௌஷதத்தைக் கொடுக்கக் கூடாது.

இரு நூறுக்குக் குறைந்த எந்த வீரியமும் பிரயோச னப்படாது. இரண்டாவது வேளை உபயோகிக்க வேண் டிய அவசியமே அனேகமாய் ஏற்படுவதில்லை.

மெர்கூரியஸ் கரோஸிவஸ்

(MERCURIUS CORROSIVUS)

முன்னுரை :—விசேஷக் குறிகளைப் பற்றிய வரையில் மெர்கூரிபஸ் கரோஸிவஸ், மெர்கூரியஸ் ஸொலுபுலிஸ் ஆகிய இவ்விரு ஔஷதங்களும் ஒன்று போலவே வேலை செய்கின்றன. ஆனல் மெர்கூரியஸ் சொலுபுலிசின் வியா திகள் மந்த குண முள்ளவையாய் இருக்கும். மெர். கரோ வின் வியாதிகள் சற்று சுறு சுறுப்பாக இருக்கும்; கடு மையாகவும் இருக்கு மென்று கூறலாம்.

வயிற்றுக் கடுப்பு வியாதியை எதிர்த்துப் போராட மற்ற எல்லா ஹோமியோபதி ஔஷதங்களையும் விட இது சிறந்த தென்று பல சமயங்களிலும் கருதப்படுகிறது. ஆனல் இக்கருத்து முற்றிலும் தவருனது; உண்மைக்கு மாருனது. குறிகள் கடுமையாக இருப்பதும் இடை விடாத கடுப்பும் தான் இவ்வௌஷதம் தேவை என்பதைக் குறிக்கும் குறிகளாகும். இதைத் தவிர சிற்சில சமயங் களில் இவ்வௌஷதத்தின் முக்கிய மூத்திரக் குறிகள் (மூத்திரப் பையில் எரிச்சல், இடை விடாத கடு கடுப்பு, மல மூத்திரம் கழிக்க இடை விடாத தூண்டுதல்) இருந்தால் தான் நிச்சயமாக நிர்ணயிக்க முடியும்.

அகோனைட் கொடுக்கப்பட வேண்டிய பல கேசுகளில் மெர். கரோ. அனுவசியமாகக் கொடுக்கப்படுகிறது என்று நான் நினைக்கிறேன்.

பொதுவான குறிகள்

தகுதி :—மேகக் கிரந்தியினல் ஆண்களுக்கு உண்டா கும் வியாதிகள். வயிற்றுக் கடுப்பு, கோடைக் கால வயிற்றுப் போக்கு முதலிய சூடல் கோளாறுகள்.

மெர். கரோ. ஆண்களுக்கும் மெர். சொலு. பெண் களுக்கும் ஏற்றவை என்று டெஸ்டே (Teste) சொல்லு கிறார். இதன் உண்மையை என்னல் அறிய முடிய வில்லை. இதை ஒரு "விஞ்ஞேதமான உண்மை" என்று அவர் மதிக்கிறார்.

மனம் :—ஏக்கம், அதனல் தூக்கம் வராமை. யோசனை செய்வது கஷ்டமாய் இருக்கும். தடை பட்ட பேச்சு.

உடல் :—சிறிய, பலவீனமான நாடியுடன் முகமும் கை களும் சில்லென்றிருந்தல். ஏராளமான உமிழ் நீர் சுரத்தல்.

தீராத தாகம். மயக்கம் வருவது போலிருத்தல், பலவீனம், நடுக்கம். மூச்சுக் காற்று நாற்றம் வீசுதல். மேல் உதடு வீங்குதல். உடம்பு முழுவதும் பொதுவாக நீர்ச் சுரப்புடன் இருத்தல். அடிக்கடி கொட்டாவி விடுவதும் சோம்பல் மூறிப்பதும். சூடுள்ள உணவில் வெறுப்பு; குளிர்ச்சியான பொருள்களில் விருப்பம். கால் குதிரை முகத் தெலும்பில் வலி.

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே) :— மலம், முத்திரம் கழித்த பிறகு உபாதி கூடுதலாவது மிகவும் குறிப்பிடத் தக்கது. மலம் கழித்த பிறகு கடுப்பு அதிக மாகும். (மலம் கழித்த பிறகு கடுமையான வலிகளாவது இடை விடாமல் ஏற்படும்). மலம் கழித்த பிறகு வியர்வை (முன்னதாகவும் உண்டாகலாம்). மூத்திரம் வெளியான பிறகு மூத்திரக் குழாயிலிருந்து இரத்தப் பெருக் கெடுத்தல். தொண்டை வீங்கி திரவப் பொருள்களை விழுங்க முடியாமல் போகும். விழுங்க முயற்சி செய்தால் (அது கெட்டியாய் இருந்தாலும் சரி, திரவமாய் இருந்தாலும் சரி) கடுமையான வலிப்புகள் தோன்றி உடனே வாந்தியாகும். திரவ உருவிலுள்ள பொருள்களை விழுங்க முயற்சித்தால் தொண்டையிலும் வயிற்றிலும் வலிப்புகள்.

காலை, இரவு, அசைவு, குளிர், புளிப்புப் பொருள்கள், பின் பனிக்காலம், பகலில் அதிகச் சூடும் இரவில் அதிகக் குளிரும் உள்ள பருவக் காலங்கள் ஆகியவைகளால் உபாதிகள் அதிகரிக்கும். ஒவ்வொரு அசைவிலும் வியர்வை தோன்றுதல்.

விசேஷக் குறிகளின் விளக்கம்

கடுமை : வேகமாய் விருத்தியாகுதல் : இடை விடாமல் இருத்தல் (கடு கடுப்பு : வலிப்புகள் : எரிச்சல்; தாகம் : வலிகள் : வேக்காடு) :—குறிகள் கடுமையாய் இருத்தல், மிக

வேகமாக விருத்தியாகுதல், இடை விடாமல் காணப் படுதல் ஆகியவை விசேஷக் குறிகளாகும். இம்மூன்று குறிகளுடன் அடைப்பிலே காட்டப்பட்டுள்ள குறிகள் அனேகமாகச் சேர்ந்து காணப்படுகின்றன.

மெர். கரோ. கடுமையான வேக்காடுள்ள நிலைமை களைத் தோன்றச் செய்கிறது. ஆசனீ வாயில் கடுமை யான கடுப்பு மலம் கழித்த பிறகும் தொடர்ந்து இருக்கலாம். மலம் கழித்த பிறகு கடுப்பு அதிகமாகவும் ஆகலாம். வேதனை தரும் கடுப்பும் திருகுவது போன்ற வலிகளும் இடை விடாமல் இருத்தல். ஆசன வாயில் அதிகக் கடுப்பு, மலம் கழிந்த பிறகும் அப்படியே இருக்கும். மலம் கழிக்கும் போது உபாதி ஒழிந்தபாடில்லை என்ற உணர்ச்சி இடை விடா மல் நீடித்திருக்கும் கடுப்பு. மலம் கொஞ்சமாகவும் இரத்தம் தோய்ந்து துண்டு துண்டாகவும் அல்லது குழ குழப்பாக வும் கடுமையான கடுப்புடனும் வெளியாகும். போனி யில் கடுமையான வேக்காடு. மானியும் விரைகளும் அளவு மீறி வீங்கி இருக்கும். மூத்திரக் குழாயில் கடுமை யான எரிச்சலுடன் மூத்திரப் பையில் கடுப்பு; மூத்திரத்துடன் சேர்ந்து அல்லது மூத்திரம் வெளியான பிறகு சளிப் பொரு ளும் இரத்தமும் வெளிப்படும்; அதிக வலியுடன் சொட்டுச் சொட்டாக வெளியேறும். ஒரே சமயத்தில் ஆசன வாயி லும் மூத்திரப் பையிலும் அதிக எரிச்சலும் கடுப்பும். "தொண்டையில் கடுமையான வேக்காடும் வீக்கமும் எரிச் சலும்; அத்துடன் ஈறுகளும் வீங்கி அல்ப காரணங்களாலும் இரத்தப் பெருக் கெடுக்கும். விழுங்க முயற்சிக்கும் போது தொண்டையில் கடுமையான வலிப்பு. வெளிச்சத்தில் அளவு கடந்த கண் கூச்சமும் காரமான கண்ணீர் பெருகு வதும். தூங்க ஆரம்பித்த வுடன் உடல் முழுவதும் நடுக்கத்துடன் கடுமையாகத் திடுக்கிட்டு எழுந்திருத்தல்.

உப்புக் கரிப்பு உள்ள உமிழ் நீர் ஏராளமாய்ச் சுரத்தல். குளிர்ந்த தண்ணீர் குடிக்க ஆவலுடன் தீராத தாகம். குழிப் புண்களிலும் வேக்காடுள்ள இடங்களிலும் கடுமையான எரிச்சல். ஏராளமான இரத்தப் பெருக்கு அல்லது இரத்தம் மட்டும் வெளிப்படுதல் (வயிற்றுக் கடுப்பு). தூக்கத்தில் கடுமையான விக்கல். அங்கு மிங்கும், குறிப்பாக மார்பில் குத்துவது போலவும் கிழிப்பது போலவும் வலிகள். கனவுகள் கூட கடுமைக் குணம் உள்ளவையாக இருக்கும். மூத்திரக் குழாய்களைக் கொஞ்சம் கொஞ்சமாய் ஆனல் இடை விடாமல் தாக்கி அவைகளின் நீர் பிரிக்கும் சக்தியை அழிக்கும் வியாதி.

புண்கள் (தொண்டையில் இருப்பது போன்ற). பறங்கிப் புண்கள் ஆகியவை மிக வேகமாகப் பெரியதாகுதல். (அழுகிய பறங்கிப் புண்களிலிருந்து மெல்லிய, காரகுணமுள்ள போக்கு வெளிப்படுதல்).

இறுக்கும் உணர்ச்சி:—தொண்டை, ஆசனவாய், மூத்திரப்பை முதலிய இடங்களில் இறுக்கும் உணர்ச்சி. குறிகள் வேறோர் இடத்தில் குறிப்பிடப் பட்டுள்ளன. மார்பில் இறுக்கும் உணர்ச்சியினல் மார்புத் தசைகளை உபயோகித்து மூச்சு விடுதல். மானிக் கொண்டையை மூடி இருக்கும் தோல் கொண்டையின் பின் பக்கம் மடங்கி முன் பக்கம் இழுக்க முடியாமல் போகுதல்.

தோல் உறிதல்: துகில் விழுதல்:—புண்ணை உண்டாக்கும் குணமுள்ள கழிவுகள். நீர்க்கோர்வை, கண்ணீர்ப் பெருக்கு, ஆசனவாய், முதலிய இடங்களிலிருந்து வெளியாகும் நீர் ஆகியவை. காரமான சீழுடனும் சதை தின்னப் பட்டு ஆழமான குழி விழுந்த புண்களுடனும் இருத்தல். மெர்கரோவின் காரகுணமுள்ள கழிவுகள் புண்களைப் பரவச்

செய்வதுடன் அந்த இடங்களிலுள்ள சதையைத் தின்று துளை விழவும் செய்யும். இவை யாவும் மேகக் கிரந்தி வியாதியில் உண்டாகும் புண்களில் காணப்படலாம். மூக்கு, தொண்டை, பறங்கிப் புண்கள் ஆகியவைகளிலும் காணப்படலாம். எரிச்சல் பல சமயங்களிலும் இருக்கும். மூக்குத் துவாரங்களின் நடுவிலுள்ள குருத்தெலும்பில் துளை விழச் செய்யும் குணமுள்ள நாட்பட்ட சளி. கண்களின் கரு விழிகளில் புண்களும், துளைவிழும் அறிகுறிகளும் காணப் படுதல்.

சில்லிப்பு :—பாதங்கள் பனிக்கட்டி போல் சில்லென்றிருத்தல். சிறிதளவு உடற்பயிற்சி செய்தாலும் திறந்த இடங்களில் இருக்கும் போதும் உடலில் குளிரினால் நடுக்கம். அனேகமாக இச்சமயங்களில் வயிற்றுவலியும் சேர்ந்திருக்கும். கவலையுடன் குளிர்ந்த வியர்வை. அனேசமாக நெற்றியில் மாத்திரம் ஏற்படும். குளிரும் உணர்ச்சி, விசேஷமாகப் படுக்கையில் படுத்துக் கொண்டிருக்கும் போது. மலம் கழித்த பிறகு உடலில் சில்லிப்பு.

குறைவாய் இருத்தல்: அமுக்கப் படுதல் :—சூடான மூத்திரம் சொட்டுச் சொட்டாக வெளிப்படும். மூத்திரம் கொஞ்சமாகவும் சூடாகவும் இரத்தம் கலந்தும் வெளியாகாமல் அடக்கப்படும் அல்லது அமுக்கப்படும். வயிற்றுக் கடுப்பில் கடுமையான கடுப்புடன் சிறிதளவு மலம் வெளிப்படும் (முன்னமேயே விவரிக்கப் பட்டிருக்கிறது). அளவு குறைந்த மூத்திரத்தில் செங்கல் தூள்போன்ற வண்டல் தங்குதல்.

இரத்தப் பெருக்கு :—மூத்திரம் கழிந்த பிறகு மூத்திரக் குழாயிலிருந்து இரத்தப் பெருக்கு. வயிற்றுக் கடுப்

பில் ஏராளமாய் வெறும் இரத்தம் மட்டும் வெளியாகும். இரத்தம் கலந்த மூத்திரம். மாதவிடாய் வழக்கத்தை விட மிக முன்கூட்டித் தோன்றுவதும் ஏராளப் போக்குடனும் இருக்கும். ஸ்தனக் காம்புகளில் வெடித்து இரத்தப் பெருக்கு தோன்றும்.

கழிவுகள் அமுக்கப் படுவதும் அதன் விளைவுகளும்:— மேகவெட்டை அமுக்கப் பட்டதினால் விரைகள் வீங்குதல். மேகவெட்டையைக் கோபைவா வினால் அமுக்கிய பிறகு வாதரோக வலிகள் உண்டாகுதல்.

நாற்ற குணம்:—மூச்சுக் காற்று நாற்றமாய் இருத்தல். இரவில் நாற்ற முள்ள வியர்வை. வயிற்றுக் கடுப்பில் மலம் கொஞ்சமாய், இரத்தம் கலந்து, குழகுழப்பாய் இருப்பதுடன் சிற்சில சமயங்களில் நாற்றமாகவும் இருக்கும்.

மேகக் கிரந்தியின் விளைவுகள்:—மேகக் கிரந்தியினால் ஏற்படும் பற்பலக் கோளாறுகள், மேகக் கிரந்தியின் சருமத் தடிப்பு. அரையிடுக்கிலுள்ள சுரப்பிகளும் மற்ற சுரப்பிகளும் வீங்குதல். பறங்கிப் புண்கள் கல் போன்று கடினமாகி அவைகளின் அடியில் மெழுகு போன்ற பசைப் பொருள் காணப்படும். மேகக் கிரந்தியினால் உண்டாகும் விழித்திரை வேக்காடு. "விழித்திரை நிறம் மங்கித் தடித்து விரியவோ சுருங்கவோ செய்யாது."

வெடிப்புகள்:—உள்ளங்கைகள், உள்ளங்கால்கள், ஸ்தனக் காம்புகள், வாயின் மூலைகள் ஆகிய இடங்களிலும் மற்ற இடங்களிலும் வெடிப்புக்கள்.

மற்ற குறிகள்.

கைகளிலும் கால்களிலும் பாரிசவாதம்; நடுக்கம். பெரியம்மை—கெட்ட சதை வளர்ச்சி. வெட்டும் வலியு

டன் வயிற்று வேக்காடு. மூத்திரத்துடன் வெள்ளைச் சத்து வெளியாகும், விசேஷமாகக் கருவுற்ற பெண்களுக்கு. மேக வேட்டை காரணமாக ஏற்படும் கண் வேக்காடு. கண் கள்ளைச் சுற்றியுள்ள எலும்புகளில் கிழிக்கும் வலி. கடு மையான எரிச்சலுடனும் மூத்திரம் கழிக்கத் தூண்டுத லுடனும் மேக வெட்டையில் பசும் மஞ்சள் அல்லது மெல்லிய இரத்தம் போன்ற கழிவு வெளிப்படும். இர வில் மானி அதிக வலியுடன் விரைத்தல்.

ஒப்பிடுதல் :—கால் குதிரை முகத் தெலும்பில் வலி (லாச்சஸிஸ்). குளிர்ந்த தண்ணீரில் விருப்பம் (ஆர்ஸனி கம், பாஸ்பரஸ்). குளிர்ச்சியான உணவை விரும்புதல் (பாஸ் பரஸ்). லகபோடியத்தில் சூடான பானங்களை விரும்பு வார். அவைகளால் உபாதிகள் குறையும். மூத்திரம் கழிந்த பிறகு முத்திரக் குழாயிலிருந்து இரத்தப் பெருக்கு (ஹிப்பார் ஸல்பர்). ஒவ்வொரு அசைவினாலும் வியர்வை தோன்றுதல் (பிரயோனியா, கல். கார்ப், சைனு, ஹிப்பார் ஸல்பர், ஸோரினம், ஸேபியா). மலம் கழித்த பிறகு உடம் பில் குளிரும் உணர்ச்சி (கந்தாரிஸ், டயஸ்கோரியா, பெட் ரோலியம்).

மெர்கூரியஸ் ஸயனைட்

(MERCURIUS CYANIDE).

முன்னுரை :—டிப்தீரியா என்னும் வியாதிக்கு இது மிகவும் உபயோக முள்ளது. அனேகமாக எல்லாக் கேசு களிலும் தேவைப்படும். முப்பதாவது வீரியத்தில் வேக மாகவும் வியக்கத்தக்க முறையிலும் வேலை செய்கிறது. விஷத்தன்மை வாய்ந்த பல டிப்தீரியாக் கேசுகளில் ஒன்று அல்லது இரண்டு வேளை ஔஷதம் வியாதி முன்னேறுமல் தடுத்துக் காப்பாற்றியிருக்கிறது. டிப்தீரியாவில் நாளும்

இவ்வௌஷதத்தை 200 வீரியத்தில் உபயோகித்து நல்ல பலனைக் கண்டிருக்கிறேன்; ஆனல் ஒவ்வொரு கேசிலும் முதலில் 30 வீரியத்தில் தான் கொடுத்தேன்.

இவ்வௌஷதத்தின் வியாதிகள் வாய், தொண்டை, குரல்வளை ஆகிய இடங்களைத் தாக்குகின்றன.

டிப்தீரியா வியாதிக்கு இது தடுப்பு ஔஷதமாகவும் உபயோகப்படும். ஆனல் மற்ற ஔஷதங்களைப் போலவே பெருவாரியாக வியாதி தோன்றும்போது காணப்படும் குறிகள் இருப்பது அவசியம். எல்லாக் கேசுகளிலும் கண்ணை மூடிக்கொண்டு கொடுப்பதில் அர்த்தமே இல்லை.

முக்கியமான குறிப்புகள் :—1. விஷத்தன்மை. 2. அழுகும் குணம். 3. சில்லிப்பு. 4. நீல நிறம். 5. விழுங்குவது சிரமமாய் இருக்கும் அல்லது முடியவே முடியாது. 6. வியர்வை தோன்றும் குணம். 7. அதிகச் சோர்வு. 8. உடலில் நடுக்கம். 9. இரத்தப் பெருக் கெடுக்கும் உடல்வாகு.

முக்கிய குறிகள்

விஷத் தன்மை வாய்ந்த டிப்தீரியாவில், தொண்டையில் அதிகச் சிவப்பு; வியாதியுள்ள இடங்கள் அழுகி இருத்தல்; கடுமையான சோர்வு; மூக்கிலிருந்து ஏராளமான இரத்தப் பெருக்கு; வாயில் இடை விடாமல் உமிழ் நீர் ஊறுதல்; விழுங்கும் போது அதிகக் கஷ்டம் அல்லது விழுங்கவே முடியாமலும் போகுதல்.

டிப்தீரியாவின் போலிச் சதை தொண்டை முழுவதும் ஏற்பட்டு அதற்குக் கீழும் மூக்குக்கும் கூடப் பரவும்.

டிப்தீரியா மிக வேகமாய் விருத்தியாகி அழுகிய, நாற்றமுள்ள புண்கள் உண்டாகுதல்.

சில சமயங்களில் சோர்வு மிக முன்னதாகவே தோன்றி வேகமாக விருத்தியாகி அளவு மீறிக் காணப்படும்.

பலவீனத்தினால் எழுந்து நிற்க முடியாமல் போகும்.

பேச்சாளர்களுக்கு நாட்பட்ட தொண்டைப் புண். தொண்டை பச்சைப் புண்ணாய் வலித்தல்; சில இடங்களில் தோல் உறிந்திருப்பது போல் காணப்படும். பேசினால் தொண்டையில் வேதனை. பேசினால் தொண்டைக் கர கரப்பும் வலியும்.

இரத்தப் பெருக்குகளில் இரத்தம் கறுப்பாகவும் இடைவிடாமலும் வெளியாகும்.

உள் நாக்கு நீர்ச் சுரப்புடன் வீங்கி இருக்கும்.

இருதயப் பலவீனம்.

வேகமாக மூச்சு விடுவதும் இருதயம் துடிப்பதும்.

வாயின் மேற் கூரையிலும் தொண்டையிலும் மிருதுவாய் உள்ள இடங்கள் அழுகிப் போகுதல்.

கெட்ட சதை வளரும் தொண்டை வேக்காடு.

தொண்டைச் சுரப்பிகளில் வீக்கம்.

மெர்கூரியஸ் ஸொலுபுலிஸ்

(MERCURIUS SOLUBULIS)

முன்னுரை :—மெர்கூரியஸ் என்பது பாத ரஸமே ஆகும். பாத ரசத்தை அப்படியே வீரியப்படுத்தித் தயாரிக்கப்படும் போது மெர்கூரியஸ் ஸொலுபுலிஸ் என்றும் ரசாயன முறைப்படி அதைப் பொடியாக மாற்றி அப் பொடியை வீரியப்படுத்தித் தயாரிக்கப்படும்போது மெர்கூரியஸ் விவஸ் என்றும் பெயர்கள் வழங்கப்படுகின்றன. மெர்கூரியஸ் விவஸ், ஹானிமனால் கண்டு பிடிக்கப்பட்டது.

ரசாயன முறைப்படி இவை இரண்டும் வெவ்வேறுக இருந் தாலும் குறிகளைப் பற்றிய வரையில் இரண்டுக்கும் வித்தி யாசம் எதுவுமே இல்லை யென்று சொல்லலாம்.

மேகக் கிரந்தி விஷத்தை நீக்கும் ஔஷதங்களில் இதை அரசன் என்று கூற வேண்டும்.

இதன் குறிகள் பலவாகவும் பலவகைப்பட்டதாகவும் இருக்கின்றன. இதன் முக்கிய குறிகள் பின் வருமாறு: 1. சூடு, குளிர் இரண்டுமே ஒத்துக் கொள்வதில்லை. 2. உபா திகள் இரவில் அதிகரித்தல். 3. வலது பக்கமாய்ப் படுத்தால் உபாதிகள் அதிகமாகுதல். 4. உடலில் சூடு கண்டால், விசேஷமாகப் படுக்கையின் சூட்டினால் உபாதிகள் அதிகரித் தல். 5. ஏராளமான வியர்வையும் அதனால் சௌகரியம் ஏற்படாமையும். 6. நாற்ற குணம். 7. நாக்கு தடித்தும் பற்களின் சுவடுகள் படிந்தும் இருத்தல். 8 நாக்கில் ஈரப் பசையுடனும் ஏராளமான உமிழ் நீர்ச் சுரப்புடனும் கடுமை யான தாகம். 9. எல்லாச் சுரப்பிகளும் தாக்கப்படுதல். 10. நடுக்கம். 11. புண்ணாகும் குணம். 12. சீழ்க் கட்டும் குணம். 13. வாயில் கெட்ட சுவை. 14. மயிர்க் கூச்செடுக்கும் குளிர். 15. கடு கடுப்பு மலம் கழிந்த பிறகும் விடாமல் இருக்கும், மலம் கழிக்க இடை விடாத தூண்டுதல்.

பொதுவான குறிகள்

தகுதி :—அதிகக் கறுமை இல்லாத தலை மயிரும் கொள கொளப்பான சருமமும் தசைகளும் உள்ளவர் களுக்கு மிகவும் ஏற்றது. பெண்கள், சிறுவர்கள். சுரப்பிகளில் வீக்க முள்ள சிறுவர்கள். மேகக் கிரந்தி வியாதியுள்ளவர்கள். ஸோரா விஷ முள்ளவர்களுக் கும் மேக வெட்டை விஷம் உள்ளவர்களுக்கும் கூட சில சமயங்களில் ஏற்றதாகும். "ஸோரா விஷ முள்ள இளம் குழந்தைகளுக்குச் சிகிச்சை செய்யும் போது பல

சமயங்களிலும் கல்கேரியா, லைலீஷியா, மெர்கூரியஸ் இம் மூன்றில் ஏற்றது எது என்பதை மிகக் கவனமாகப் பார்த்துக் கொடுக்க வேண்டும். ஏனென்றால் தவறு நேர்ந்து விட்டால் அதை இலகுவில் மாற்ற முடியாது." இதைத் தவிர மெர்கூரியசுக்கும் லைலீஷியாவுக்கும் உள்ள பகைமைக் குணம் காரணமாக நிலைமை மிகவும் சிக்கலாகவும் ஆகிறது.

மனம்:—பகுத்தறிவை இழந்து விடுவோ மென்ற பயத்துடன் நிலை கொள்ளாமை அதிகமாய் இருக்கும். ஞாபக சக்தி குறைதல். கேள்விகளுக்கு மெதுவாகப் பதில் சொல்வார். எல்லா விஷயங்களிலும் அதிக அலட்சியம். பிறருடன் பேசப் பிடிக்காமையும் வெறுப்பும். மன உறுதி இல்லாமை. அறிவுத் திறன் குறையும்; மூடத் தன்மை. அவசரமாகவும் மிக வேகமாகவும் பேசுதல். வாழ்க்கையில் சலிப்பு. அவநம்பிக்கை.

உடல்:—முக்கிய குறிகளைக் கவனிக்கவும். இங்கேயும் ஒரு சில முக்கிய குறிகளைச் சுருக்கமாய் எழுதுகிறேன்.

அதிகக் களைப்பு; நடுக்கம்; வியர்த்துக் கொண்டே இருத்தல், மஞ்சட் காமாலை. நீர்ச் சுரப்புள்ள வீக்கங்கள். மனதில் பரபரப்பு; அவசரம். அல்ப காரணங்களாலும் உடலில் சில்லிப்பும் அதிகச் சூடும் தோன்றும். அளவு மீறிய உமிழ் நீர் சுரத்தல். பற்களின் சுவடுகள் படிந்துள்ள தடித்த நாக்கு. வாயில் கெட்ட சுவை. சிறுகளில் வீக்கமும் இரத்தப் பெருக்கும். அல்ப காரணங்களாலும், ஏகாளமாகவும் வியர்வை தோன்றும், ஆனால் சௌகரியம் எதுவும் ஏற்படாது. வாயிலிருந்து கெட்ட நாற்றம் வீசுதல். வாயில் ஈரப் பசையுடன் அதிகத் தாகம். மயிர்க் கூச்

செடுக்கும் குளிர். உடல் மெலிவு. மதமதப்பு. முகம் நிறம் மங்கியும் உப்பியும் இருக்கும். இடைவிடாத பசியுடன் சீரண சக்திக் குறைவு.

உபாதி கூடுதல் :—குளிர், சூடு இரண்டும் வியாதியஸ்தருக்கு ஒத்துக் கொள்ளாது. பருவ நிலையில் அதிகக் குளிர் உள்ள போதும் உபாதிகள் தவறுமல் அதிகமாகும். வியாதியஸ்தரை ஒரு தர்மாமீட்டர் என்றே சொல்லலாம். படுக்கையினுல் சூட்டினுல் உபாதிகள் மிகவும் அதிகமாகும். குளிர் காற்று வீசினுல், வீசேஷமாகத் தலையின் மீது வீசினுல், உபாதிகள் அதிகரிக்கும். ஈரக் கசிவும் குளிரும் உள்ள பருவக் காலங்களிலும் இதைப் போலவே.

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):— இரவில், ஈரக் கசிவும் மழையும் உள்ள பருவக் காலங்கள், வலது பக்கமாய்ப் படுத்தல், வியர்வை தோன்றும் போதும் அதன் பிறகும், தொடுவது, அமுக்குவது ஆகியவைகளாலும் உபாதிகள் அதிகமாகும். படுக்கையின் சூட்டினுல் கோளாறுகள் கூடுதலாகி, இரவில் வியாதியஸ்தர் தன் போர்வை முதலானவைகளைத் தூக்கி எறிவார். உடம்பைத் திறந்து கொள்வதால் சில்லிப்புக் கண்டு உபாதிகள் மறுபடியும் அதிகமாகும்.

இரவில் கடுமையான பல் வலி. எலும்பு வலிகள் இரவில் அதிகமாகும். கண்களைப் பற்றிய கோளாறுகள் நெருப்பைப் பார்த்தாலும் அதன் ஒளியைப் பார்த்தாலும் கூடுதலாகும். சாப்பிட்ட பிறகு உபாதிகள் அதிகரிக்கும்; எவ்வளவு கொஞ்சமாகச் சாப்பிட்டாலீம் வயிற்றில் கனத்த உணர்ச்சி தோன்றும். வலது பக்கமாய்ப் படுத்தால் இருமல் அதிகமாகும். கல்லீரல் பற்றிய வலிகள் வலது பக்கமாய்ப் படுத்தால் அதிகமாகும். சுவாச கோச வேக்காட்டில் வியாதியஸ்தரால் வலது பக்கம் படுக்க முடியாது.

உபாதி குறைதல் :—பருவ நிலையில் அதிகச் சூடோ, குளிரோ இல்லாமல் மிதமாய் இருக்கும் போது வியாதியஸ்தருக்குச் சௌகரியமாய் இருக்கும். காலையிலும், ஓய்வாய் இருக்கும் போதும் வியாதியஸ்தருக்குச் சௌகரியமாய்த் தோன்றும். நடக்கும் போது அல்லது உட்கார்ந்திருக்கும் போது இருப்பதைவிடப் படுக்துக் கொண்டிருந்தால் மிகவும் சௌகரிய மேற்படுவதாகத் தோன்றும். கருப்பை நழுவுதல் புணர்ச்சி செய்த பிறகு சௌகரியமாய் இருக்கும்.

விசேஷக் குறிகளின் விளக்கம்

வியர்வை :—பெரும்பாலான கோளாறுகளில் ஏராளமான வியர்வை தோன்றுவதும் அதனால் வியாதி தணியாமல் இருப்பதும். சிற்சில சமயங்களில் வியர்வை தோன்றும் போது உபாதிகள் அதிகமாவதும் உண்டு. வியர்வையுடன் இரவில் கிழிக்கும் வலிகள். வியர்வை துணிகளில் மஞ்சள் நிற முள்ள கறையை உண்டாக்கும். வியர்வை எண்ணெய் போல் இருக்கலாம். இரவில் தொடைகளிலும் கால்களிலும் குளிர்ந்த, பிசு பிசு வென்று ஒட்டும் தன்மையுள்ள வியர்வை. சருமத்தில் இடைவிடாத வறட்சி காணப்படும் போது மெர்கூரியஸ் உபயோகமாகாது.

நாற்றம் :—உடம்பு கெட்ட நாற்றம் அடிக்கும். மூச்சுக் காற்று அதிக நாற்றமாய் இருப்பதால் வியாதியஸ்தர் இருக்கும் அறை முழுவதும் நாற்றம் வீசும். வியர்வை நாற்றமாகவும் நெடியுடனும் இருக்கும். நாட்பட்ட சளியில் மூக்கிலிருந்து மிக அதிகமான நாற்றம் அடிக்கும். கிழிக்கும் வலிகளுடன் காதுகளிலிருந்து இரத்தம் கலந்த நாற்ற முள்ள சீழ் வருதல். மலம், மூத்திரம் இரண்டும் நாற்றமாய் இருக்கும். அழுகிய தயிர்

போல் நாற்றத்துடன் மூக்கிலிருந்து கார குண முள்ள சளி அல்லது நீர் வெளிப்படுதல். உமிழ் நீர் நாற்றமாய் இருக்கும். வாயில் அழுகிய, கெட்ட சுவை,

உமிழ் நீர்ப் பெருக்கு:—வாயில் உமிழ் நீர் பெருகுவது மிகவும் குறிப்பிடத் தக்கது. உமிழ் நீர் ஏராளமாய் உற் பத்தியாகி தூங்கும் போது வழியும்; குழ குழப்பாகவும் இரத்தம் கலந்தும் இருக்கும். உமிழ் நீர் சோப்புப் போலவும் கயிறு போல் இழுபடும் குண முள்ளதாக வும் இருக்கலாம். உமிழ் நீர் நாற்றமாகவும் ஒரு வித் மான மனதுக்குப் பிடிக்காத திக்திப்புச் சுவையுடனும் இருக்கும். தாளம்மை, தொண்டைச் சுரப்பிகளின் வேக்காடு, டிப்தீரியா முதலிய வியாதிகளில் ஏராளமான உமிழ் நீர் உற்பத்தியாவது விசேஷமாகக் காணப்படும். உமிழ் நீர் நாற்றமாகவும் இருக்கும்.

நடுக்கம்: பாரிசவாதம்:—இவ்வௌஷதம் தேவைப் படும் எல்லா வியாதிகளிலும் நடுக்கம் இருக்கும். உடம்பு முழுவதும் பொதுவான நடுக்கம். கை கால்களில், குறிப்பாகக் கைகளில் நடுக்கம், அதனால் எழுத முடியா மல் போகும். தலையில் நடுக்கம், நாக்கில் நடுக்கம், அதனால் பேச முடியாமல் போகும். பொதுவான பல வீனமும் கை கால்களில் நடுக்கமும். சிறிதளவு வேலை செய்தாலும் அதிகக் களைப்பும் உடல் நடுக்கமும் உண் டாகும், நடுக்கு வாதத்துக்கு மிகச் சிறந்த ஔஷதங் களில் இது ஒன்று. நடுக்கம் சிற்சில சமயங்களில் மிகக் கடுமையாகி அதனால் வியாதியஸ்தரைப் படுக்கையி லிருந்து தூக்கிப் போடும் அல்லது நடக்க ஆரம்பித்த வுடன் கீழே தள்ளிவிடும். குளிரினால் உண்டாகும் முகப் பாரிச வாதத்துக்கு இடது பக்கமாய் இருந்தா

லும் வலது பக்கமாய் இருந்தாலும் இது அனேகமாக எல்லாக் கேசுகளிலும் குணத்தை ஏற்படுத்தும்.

புண்ணுகுதல்:—புண்கள் குழி அதிகம் இல்லாமல் சுற்றளவு மட்டும் அதிகமாய் இருக்கும். புண்களின் அடியில் குழ குழப்பாள பசைப் பொருள் ஒட்டிக் கொண்டிருக்கும். அதிகக் குழியில்லாமல் மிருதுவாக இருக்கும் பறங்கிப் புண்; அதன் விளிம்புகள் வெளிப்பக்கமாக மடிந்திருக்கும்; அதன் அடிப்பாகத்தில் தயிர்க் கட்டி போன்ற அல்லது பசை போன்ற பொருள் காணப்படும். புண்கள் ஆழமாகக் குழிந்தும் போகக் கூடும். சுற்றளவிலும் அதிகமாகலாம். புண்களின் உருவம் ஒழுங்காக இருக்காது; விளிம்புகள் கோணல் மாணலாய் இருக்கும். புண்கள் பார்ப்பதற்கு விகாரமாகவும் அழுகியிருப்பதுபோலவும் தோன்றும். புண்கள் ஒன்றோடொன்று சேர்ந்து பெரியதாகும். வாயில் எந்த இடத்திலாவது புண் இருந்தால் அதனுடன் ஏராளமான உமிழ் நீர்ப் பெருக்கு காணப்படும். தொண்டைச் சுரப்பிகளில் புண். குழி இல்லாமலும் அல்ப காரணங்களால் இரத்தம் பெருக் கெடுக்கும் குணமும் உள்ள புண்கள்.

சீழ்ப் பிடித்தல்: எரிச்சல்: கொட்டும் வலிகள்:—சீழ் உண்டாகும் குணம் காணப்படுகிறது. சீழ் விசேஷமாக இரத்தம் கலந்த சீழ், உடம்பிலுள்ள எந்த துவாரத்திலிருந்தும் வெளியாகலாம். "எரிச்சலும் கொட்டும் வலிகளும் உள்ள சீழ்க் கட்டிகளின் குழிகளில் சீழ்த் தோன்றுதல்." சினைப்பைகளில் எரிச்சல். கொட்டும் வலிகள். சீழ் உடன் அல்லது சீழ் இல்லாமல் சுரப்பிகளில் வீக்கம். சுரப்பிகள் சீழ்ப் பிடித்து சீழ் மிக ஏராளமாய் வெளியேறும் போது விசேஷமாகத் தகுந்தது.

குறைவான வீரியங்களில் கொடுத்தால் சீக்கிரமாகச் சீழ் உண்டாகும்படிச் செய்கிறது. உயர்ந்த வீரியங் களில் கொடுக்கப்பட்டால் சீழ் உண்டாகாமல் தடை செய்து விடுகிறது. சுவாச கோச வேக்காட்டில் இரத் தப் பெருக்கு ஏற்பட்டு சுவாச கோசங்களில் சீழ்ப் பிடித் தல். புண்களில் சீழ் மிகக் கொஞ்சமாகவும் தண்ணீர் போல் மிகவும் நீர்த்தும் அல்லது நீர்த்திருப்பதுடன் இழுபடும் குண முள்ளதாகவும் இருக்கும்.

சுரப்பிகள் தாக்கப்படுதல் :—கீழ்த் தாடை, அக்குள் கள், காதுப் பக்கம் அரையிடுக்குகள் ஆகிய இடங் களிலுள்ள சுரப்பிகளில் வேக்காடு, வீக்கம், சீழும் தோன்றலாம்; விசேஷமாக மேகக்கிரந்தி வியாதியுள்ள வர்களுக்கு ஏற்படும் போது. இரத்த சோகை, உடல் மெலிவு ஆகிய குறிகளுடன் சுரப்பிகள் பருத்தல். சீழ்ப் பிடித்தல், உமிழ் நீர்ப் பெருக்கு ஆகிய தலைப்புகளின் கீழேயும் பார்க்கவும்.

இறுகிய உணர்ச்சி :—தலையைத் துணியினால் இறுகக் கட்டி இருப்பது போல மண்டைத் தோலில் விரைப் பாய் இருக்கும் உணர்ச்சி. சில உறுப்புகள் அளவு சுருங்கி விட்டது போலத் தோன்றுதல். தொடைகளின் பின்பக்கத் தசைகள் மிகவும் குட்டையாகி விட்டது போல் உணர்ச்சி.

சில்லிப்பு :—சுரம், வேக்காடுள்ள நிலைமைகள் ஆகிய வைகளில் மயிர்க் கூச்சலுடன் குளிரும் உணர்ச்சி. சில்லிப் பான, கச கச வென்ற வியர்வை. வயிற்றுப் போக்கில் ஒரு தடவை மலம் வெளியானதிலிருந்து மறு தடவை வெளியாகும் வரை சில்லிப்பு உணர்ச்சி. சீழ்க் கட்டி களில் சில்லிப்பான உணர்ச்சி. அடிக்கடி குளிர்ச்சியான

வீக்கங்கள் உண்டாவதும் அவை மெதுவாகச் சீழ்ப் பிடிப்பதும். மானி சிறுத்துச் சில்லிட்டுத் தளர்ந் திருக்கும்.

இரத்தப் பெருக்கு: இரத்தம் கலந்திருத்தல்:—வயிற் றுக் கடுப்பு: எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாய் இரத் தம் வெளிப் படுகிறதோ அவ்வளவுக் கவ்வளவு அவ் வியாதிக்குத் தக்க ஔஷதம் இதுவே என்பது உறுதியாகும்." மலம் குழகுழப்பாகவும் இரத்தம் கலந்தும் வலியுடனும் மயக்க உணர்ச்சியுடனும் வெளியாகும். இரவில் இரத் தம் கலந்த இந்திரியம் நழுவுதல். கக்குவாய் இருமலில் இருமும்போது ஒவ்வொரு தடவையும் மூக்கிலிருந்து இரத்தம் கொட்டுதல்.

பச்சைப் புண் உணர்ச்சி:—வெள்ளை ஒழுக்கு காரமாக வும் எரிச்சலுடனும் இருக்கும்; அறிப்பும் புண்ணுள்ள உணர்ச்சியும் காணப்படும்; எல்லாக் குறிகளும் இரவில் தவரு மல் அதிகமாகும். மூக்கில் ஏற்படும் நீர்க் கோர்வையில் வெளிவரும் நீர் தாராளமாகவும் காரமாகவும் தோலை அரிப்பதாகவும் அதிகத் தும்மல்களுடனும் இருக்கும்; மூக்குத் துவாரங்கள் வெந்ததுபோல் புண்ணாய் இருத் தல்.

பசும் மஞ்சள் நிறம்; செப்புப் போன்ற நிறம்: கறுப்பு நிறம்:—காதுகளிலிருந்து பச்சையான, நாற்றமுள்ள, காரமான சீழ் வெளிப்படுதல். பச்சை நிறமும் குழ குழப்புமுள்ள மலம், கண் வேக்காட்டில் பச்சையான அல்லது பசும் மஞ்சள் நிறமுள்ள பீளை. [illegible] டையில் போக்கு கெட்டியாகவும் பசும் மஞ்சள் நிற மாகவும் இருக்கும்; பகலைவிட இரவில் அதிகமான போக்கு இருக்கும். மேகக் கிரந்தி விஷமுள்ள குழந்தை

களுக்குப் பற்கள் கறுப்பாகவும் மிகச் சீக்கிரத்தில் சொத்தையாவதுமாக இருத்தல் (ஸ்டாபிஸாக்ரியா).

வினேதக் குறிகள் :—கருப்பமாய் இல்லாத பெண்களுக்கு மாதவிடாய்ப் போக்கு வெளியாகாமல் ஸ்தனங்களில் பால் கட்டுதல்; சிறு பெண்களுக்கும் பையன்களுக்கும் மார்பில் பால் உற்பத்தியாகுதல். ஈறுகளை எவ்வளவு மெதுவாகத் தொட்டாலும் இரத்தப் பெருக்கு ஏற்படுதல். இருமலிலும் கக்குவாய் இருமலிலும் இரண்டு தடவை அதிக இடை வெளி இல்லாமல் இருமல் தோன்றி மூன்றுவது தடவை அதிக நேரம் கழித்து உண்டாகுதல். இருமலில் வலது பக்கமாகப் படுக்கவே முடியாது வயிற்றுக் கடுப்பில் மலம் கழிக்கும்போது கடுகடுப்பு அதிகமாய் இருந்தாலும் மலம் வெளியான பிறகு மிகவும் அதிகமாகும்; மலம் வெளியான பிறகு கடுகடுப்புக் கொஞ்சங் கூடக் குறைவதில்லை யென்று வேண்டுமானாலும் சொல்லலாம், மலம் கழித்த பிறகு கடுமையான கடுகடுப்பும் இடைவிடாத தூண்டுதலும் தோன்றி உபாதி ஒழிந்த பாடில்லையே என்ற உணர்ச்சி உண்டாகும். இடைவிடாமல் மானியைச் சேஷ்டை செய்து கொண்டிருக்கும் சிறுவர்கள் (இதனால் அதிக உடல் மெலிவு உண்டாகி மரணத்தில் முடியலாம்). பற்களின் நுனிப் பாகம் சொத்தை விழுந்திருக்கும்; ஆனால் அடிப்பாகம் நன்றாய் இருக்கும். குடித்த தண்ணீரின் அளவைவிட அதிகமான மூத்திரம் கழிக்கப் படுதல்; அடிக்கடி மூத்திரம் கழிக்கத் தூண்டுதல் (இக்குறியைத் தடித்த எழுத்துக்களில் நான்தான் போட்டிருக்கிறேன்)

மற்ற குறிகள்

வறட்டு அறிப்பும் சொறிந்தால் இரத்தம் வருவதும். மாதவிடாய்க் காலங்களில் ஒவ்வொரு தடவையும் ஸ்தனங்

களில் அவை சீழ்ப் பிடித்து விடுமோ என்று நினைக் கும்படி வலி உண்டாகும். மேகவெட்டையினல் மானிக் கொண்டையை மூடியுள்ள தோல் பின் பக்கம் இழுக் கப் படுதல். அத்தோல் வீங்கிச் சூடாகவும் நீர்ச் சுரப்புட னும் தொட்டால் வலியுடனும் இருக்கும். மலத் துடன் உருண்டையான புழுக்கள் வெளியாகுதல். வலது சுவாசகோசத்தின் கீழ் அடுக்கு வியாதியுற்று குத்து வலிகள் மூதுகுக்குச் செல்லும். எலும்புகளில் அவை உடைந்துபோய் விட்டதுபோல் உணர்ச்சி. ஸ்தனங்களில் சுரக்கும் பால் நல்ல தரமாய் இல்லாததால் குழந்தை அதைக் குடிக்க மறுத்தல்.'' சுறுகள் சிவந்து. பஞ்சுபோல் தளர்ந்து பற்களை விட்டு விலகி, புண்களுடன் இருக்கும். எலும்பு கள் வலுவிழந்து வளையும். எலும்புகள் மிகச் சுலப மாக முறிந்து போகும். தித்திப்புப் பண்டங்கள் ஒத் துக் கொள்வதில்லை; மாமிசத்திலும் வெண்ணெய்யிலும் வெறுப்பு. காமத்தைக் கிளப்பும் அறிப்பு. குடும் சில் லிப்பும் மாறி மாறித் தோன்றும். இரவில் படுக்கையை விட்டு எழுந்திருந்து அங்கு மிங்கும் நடக்க வேண்டி ஏற்படும்.

உறவு:—பெல்லடொன்னு, ஹிப்பார் ஸல்பர், லாச்ச ஸிஸ், ஸல்பர் ஆகியவைகளுக்குப் பிறகு இது நன்முக வேலை செய்யும். ஸைலீஷியா பகை யாதலால் அதற்கு முன்னதாகவோ அல்லது பிறகோ மெர்கூரியஸைக் கொ டுக்கக் கூடாது. மெர்கூரியசின் கெடுதலான விளைவுகளை ஆரம் மெட், ஹிப்பார் ஸல்பர், லாச்சஸிஸ், மெஸரியம், நைட்ரிக் ஆஸிட், ஸல்பர் ஆகியவை நீக்குகின்றன.

ஒப்பிடுதல்:—பற்களில் சொத்தை விழும் விஷயமாக மெஸரியம் மெர்கூரியசுக்கு நேர் எதிராக இருக்கிறது. மெஸரியத்தில் பற்களின் நுனி நன்முய் இருக்கும்; அடிப்

பாகத்தில் சொத்தையாய் இருக்கும். நெற்றியில் குளிர்ந்த வியர்வை. (வெராட்ரம் ஆல்பம்). குழந்தைகளின் சுரப்பி வியாதிகள் (கல்கேரியா, ஸைலீஷியா). மிக நாற்ற முள்ள மூச்சுக்காற்று (பாப்டீஷியா, கார்பாலிக் ஆஸிட், காலி பாஸ், நைட்ரிக் ஆஸிட், ஸைலீஷியா). கல்லீரல் வலிகள் தொட்டாலும் வலது பக்கமாய்ப் படுத்தாலும் அதிகமாகுதல் (மெக்னீஷியா மூர்). கொட்டு வலிகள், நாற்ற முள்ள மூச்சுக் காற்று, சிறுநீர்ப் பைகளின் வேக்காடு (அபிஸ்). உடம்பில் கெட்ட நாற்றம் (ஸோரினம், மெதாரினம்). மாத விடாய்க் காலத்தில் ஒவ்வொரு தடவையும் ஸ்தனங்களில் சீழ்ப் பிடித்து விடுமோ என்று தோன்றக் கூடிய வலிகள் (லாக் கானினம், கோனியம்). நீர்க் கோர்வை கண்களில் தங்குதல் (டல்கமாரா).

குறிப்புகள் :—சர்க்கரை தின்னுதல், பூச்சிக் கடி, வெள்ளைப் பாஷாணம், அல்லது செப்பு காய்ச்சப்படும் போது ஆவிபடுதல் முதலிய காரணங்களால் ஏற்படும் கோளாறுகளை மெர்கூரியஸ் நீக்கும்.

மெஸரியம்
MEZEREUM

முன்னுரை :—மெர்கூரியசுக்குச் சமமாகத் தாவர வர்க்கத்தில் மெஸரியம் இருக்கிறது. ஆனால் இரண்டும் ஒன்றுக் கொன்று முறிவாக இருப்பது ஆச்சரியப்படத் தக்க விஷயமே. குறைந்த வீரியத்தில் கொடுக்கப்பட்ட மெர்கூரியசை முறிக்கச் சில சமயங்களில் அதே ஔஷதத்தை உயர்ந்த வீரியத்தில் கொடுப்பது உண்டு. இப்படிக் குறைந்த வீரியத்தை உயர்ந்த வீரியம் முறிக்க என்ன காரணம் இருக்கிறதோ அக் காரணத்தினாலேயே மெர்கூரியசும் மெஸரியமும் ஒன்றை யொன்று முறிக்கின்றன.

பாத ரஸம், சாராயம் ஆகியவைகளால் தோன்றும் திய விளைவுகளை மெஸரியம் நீக்குகிறது. "பாதரஸ விஷம் நரம்பு மண்டலத்தைத் தாக்கி நரம்பு வலி தோன்றும் போது மெஸரியம் அதை முறிக்க மிகவும் சிறந்தது" என்று பாரிங்டன் குறிப்பிட்டுள்ளார்.

பொதுவான குறிகள்

தகுதி :—அதிகக் கறுமை இல்லாத தலைமயிர் உள்ள வர்கள்; பன உறுதி இல்லாதவர்கள்; மந்த குணம் உள்ள வர்கள் ஆகியவர்களுக்கு ஏற்றது. மேகக் கிரந்தி உள்ள வர்கள். "வாதரோகம், கீல்வாதம், மேகக் கிரந்தி இம் மூன்று வியாதிகளும் சேர்ந்துள்ள நிலைமை. ஸோரா விஷம் அதிகமாகியுள்ள அறிகுறிகள்.

மனம் :—ஞாபக சக்திக் குறைவு: மிக எளிதிலே மனம் குழம்பி விடுதல். தன்னைச் சுற்றி இருக்கும் மனி தர்களையும் நடக்கும் விஷயங்களையும் கொஞ்சங்கூட லட்சியம் செய்ய மாட்டார். மெதுவாக விஷயங்களைப் புரிந்து கொள்ளுதல். எண்ணங்கள் அடிக்கடி மறந்து போகுதல். மூன்கோபம். அல்ப காரணங்களாலும் கோபப்படுதல்.

உடல் :—வாயில் அதிக உமிழ்நீர் உற்பத்தியாகுதல். வயிற்றில் பலமான ஓசையை உண்டாக்கும் உபாசம். உடலில் குளிருடனும் நடுக்கத்துடனும் தோன்றும் வலிகள். உடலில் கனமான உணர்ச்சியும் சோர்வுறித் தனமும். உடம்பு மிகவும் லேசாக இருக்கும் உணர்ச்சி. குழந்தைகளுக்கு அடி வயிற்றில் உப்பிசத்து உடல் மெலிவு அல்லது மிகவும் பருத்திருத்தல். வியாதி உள்ள இடங்கள் வாடிப்போகும்.

உபாதி கூடுதல் :—வியாதியஸ்தருக்குக் குளிர் காற்று கொஞ்சங்கூட ஒத்துக் கொள்ளாது.

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே) :— படுக்கையின் சூட்டினால் உபாதிகள் அதிகமாகும். குளிர் காற்று, ஈரக் கசிவு, சூடு, பருவ நிலைமையில் திடீ ரென்று ஏற்படும் மாறுதல்கள், தொடுவது முதலிய கார ணங்களாலும் கூடுதலாகும். தலை வலிகளில் எவ்வளவு மெதுவாகத் தொட்டாலும் வலி அதிகரிக்கும். அம்மைத் தடுப்பு ஊசி குத்திக் கொண்டதினால் உண்டாகும் கரப் பான் படையும் அறிப்புள்ள சருமக் கோளாறுகளும்.

உபாதி குறைதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே) :- வயிற்று வலிகள் பால் குடித்தால் குறையும். தலையை நன்றாய் மூடிக் கொண்டால் தலை வலி குறையும். காற்றை வாயால் இழுத்தால் பல் வலி மட்டுப்படும்.

விசேஷக் குறிகளின் விளக்கம்

கடுமை :—வலிகள் கடுமையாய் இருக்கின்றன. கோபம் சிறிதளவே தோன்றினாலும் அதன் பிறகு கடுமையான தலைவலி. வலியினால் கண்ணீர்ப் பெருக்கு உண்டாகும். இரவில் மட்டும் கடுமையான பல்வலி. இர வில் முகத்திலும் பற்களிலும் கடுமையான நரம்பு வலி காதுகளுக்குப் பரவும்; சாப்பிட்டவுடன் தோன்றும் அல்லது அதிகமாகும். பாத எலும்புகளில் கடுமையான வலி, நடக்கும் போது அதிகரிக்கும். பிற்பகலிலும் மாலையிலும் கடுமையான பசி. கடுமையான வேக்கர நள்ள சுரம். பெரிய காற்றுக் குழாயின் கீழ்ப் பாகத்தில் இருமல் வேண்டும் என்ற தூண்டுதல். இருமலினால் கோழை வெளியாகாது.

கடுமையான அறிப்பு : இரத்தப் பெருக்கு :—கரப்பான்

படையில் கடுமையான அறிப்பு; படுக்கையில் படுத்தாலும் தொட்டாலும் அதிகமாகும். மண்டைத் தோலில் பிடுங்குவது போல் அறிப்பு. புண்கள் கூடக் கடுமையாக அறிக்கும்: நெருப்புப் போல் எரியும். கடுமையான அறிப்புள்ள சிவப்பான சரும வியாதிகள் மேலே உள்ள காரணங்களால் அதிகமாகும். சருமத்தில் பொறுக்க முடியாத அறிப்பு; சொரிந்தவுடன் வேறு இடத்தில் அறிப்பு உண்டாகும். அறிப்பினால் தூங்க முடியாமை. குழந்தை இடைவிடாமல் முகத்தைச் சொறிந்து கொள்ளும்; அதனால் முகத்தில் இரத்தம் வெள்ளிவரும்; வேக்காட்டுடன் முகம் சிவத்தல். புண்களிலிருந்து அடிக்கடி இரத்தம் பெருக்கெடுத்தல். புண்களில் துணி ஒட்டிக் கொண்டு பிடித்து இழுத்தால் இரத்தம் பெருகும். மேக வெட்டையில் மூத்திரக் குழாயிலிருந்து இரத்தம் வெளிப்படுதல்.

அதிக உணர்ச்சி :—நாக்கினால் தொட்டாலும் பல் வலி அதிகமாகும். எலும்புகளில் வலி, எவ்வளவு மெது வாய்த் தொட்டாலும் பொறுக்க முடியாது. மண்டைத் தோலையும் தலை மயிரையும் தொட்டால் வலியுள்ள உணர்ச்சி உண்டாகும்.

பச்சை நிறக் கழிவுகள் :—கழிவுகள் பச்சை நிறமாய் இருப்பது இவ்வௌஷதத்தின் மிக முக்கியமான தோர் குறி. ஸோரா, மேகக் கிரந்தி ஆகிய இரு வகை விஷங்கள் உள்ளவர்களுக்கும் மூக்கிலிருந்து பச்சை நிறமுள்ள கழிவு வெளிப்படுவதைப் பார்த்து இக்குறியின் உண்மையை அறிந்திருக்கிறேன்.

உருக்குலைவு : சொத்தை விழுதல் :—பற்களின் அடிப்பாகம் சொத்தையாகி மேல் பாகம் நன்றாய் இருக்கும்.

புற்கள் மிக வேகமாய்ச் சொத்தையாகுதல். எலும்பு களில் புண் தோன்றுதல். பாதரஸத்தை அளவு மிஞ்சி உபயோகித்ததினால் எலும்புகளில் சொத்தை விழுதல்.

புண்ணுகுதல் : பொறுக்குத் தட்டுதல் : வெண்மை நிறம் ;—கொப்பளங்களால் சூழப்பட்ட பெரிய புண்கள். கெட்டியான. வெளுத்த மஞ்சள் நிறமுள்ள பொறுக்கு கள் உண்டாகும் புண்கள், பொறுக்குகளின் உள்ளே சீழ்க் கட்டுதல் உடம்பில் பல இடங்களில் வெண்மை யான பொறுக்குகள். வாயைச் சுற்றிலும் பொறுக்கு. தலையில் சாக்கட்டியைப் போலக் காணப்படும் பொறுக்குகள். பொறுக்குகள் முன் பக்கத்தில் புருவங் கள் வரையிலும் பின் பக்கத்தில் பிடரிக் கழுத்து வரையிலும் பரவி இருக்கும். தலை முழுவதும் தோல் போன்ற கனமான பொறுக்கு உண்டாகி அப் பொறுக்கின் மேலே சிற்சில இடங்களில் சீழ்த் தோன்று தல். தலை மயிர் ஒன்றோடொன்று ஒட்டிக் கொண்டு சடையாக மாறும். தலையில் பல இடங்களில் வெண்மை யான பொறுக்குகள் உண்டாகி மேடாய் இருக்கும். அப் பொறுக்குகளின் அடியில் சீழ் வைத்து அதனால் பேன் முதலிய பூச்சிகள் உற்பத்தியாகும். காய்ந்த, வெண்மை யான தலைப்பொடுகு.

சிவந்த நிறம் : பள பளப்பு :—முகத்தில் சிவந்த நிற முள்ள வேக்காடு. புண்களைச் சுற்றி நெருப்புப் போல் சிவந்து பளபளப்பாய் இருக்கும். மலத்தில் பள பளப் பான துணுக்குகள் காணப்படுதல்.

சில்லிப்பு : நடுக்கம் :—சில்லிப்பு உணர்ச்சியுடனும் சிறிது கூடக் குளிர் ஒத்துக் கொள்ளாத குணத்துடனும் பல விதமான வலிகள். உடலின் வெளிப் பக்கத்தில் சில்லிப்

புடன் உள்ளே எரிச்சல். மலம் கழிப்பதற்கு முன்பும் கழித்த பிறகும் சில்லிப்பு உணர்ச்சியும் நடுக்கமும். காதுகளின் மேல் குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருக் கும் உணர்ச்சி. பல இடங்களில் சில்லிப்பான உணர்ச்சி யுடன் அறிப்பும் எரிச்சலும். "வலிகள் திடீரென்று தோன்றும்; பிறகு அவ்விடங்களில் சில்லிப்பும் புண் ணுள்ள வலியும் மத மதப்பும் தோன்றும்."

புலன் உணர்ச்சிகள் குறைதல்:—பார்வைக் குறைவு அல்லது வயதானவர்களுக்கு ஏற்படும் பார்வை மங்கு தல். காது கேளாமை. காதுகள் அடைத்துப் போனது போல் தோன்றுதல். சாப்பிடும் போது கொஞ்சங் கூடக் காது கேட்காது. மூக்கில் காய்ந்து போன உணர்ச்சியுடன் வாசனை அறியும் சக்தி குறைதல்.

வறட்சி: வெடிப்புகள்:—உதடுகள் விங்கி வெடித்துத் தோல் உறியும். நாக்கில் ஆழமான வெடிப்புகள். மூக் கில் காய்ந்து போன உணர்ச்சியுடன் வாசனை அறியும் சக்தி குறைதல். கண்களில் வறட்சியும் கனமான உணர்ச்சியும். வாயின் மூலைகளில் வெடிப்புகள்.

விரைப்பு: பிடிப்பு: இறுக்கும் உணர்ச்சி:—தசைகளை எலும்புகளுடன் கட்டியுள்ள தசை நார்களில் விரைப்பு. கழுத்துத் தசைகளில் வலியும் விரைப்பும். மார்பின் தசைகளில் பிடிப்பு. மார்பில் இறுகக் கட்டிய உணர்ச்சி. தொண்டையின் சுற்றளவு குறுகிவிட்ட உணர்ச்சி. கை கால்கள் குட்டையாகி விட்ட உணர்ச்சி. சப்பைகளில் வலியுடன் கால்கள் குட்டையாகி விட்ட உணர்ச்சி. எலும்புகளில் அதிகப் புண் இருப்பது போலவும் அவை பருத்து விட்டது போலவும் உணர்ச்சி.

எலும்புகள், தாக்கப்படுதல்:—எலும்புகள், குறிப்பாக நீளமான எலும்புகள், வேக்காட்டுடன் வீங்குதல். எலும்புகளில் இரவில் வலி தோன்றி மேலிருந்து கீழே இறங்கும். எலும்பு வலிகள் தொட்டால் மிகவும் அதிகமாகும். எலும்புகளின் மேல் தோலில் வேக்காடு.

வியாதியுள்ள பக்கங்கள்: செல்லும் திசைகள்:—உடலின் ஒரு பக்கத்திலேயே வியாதி அதிகமாய்க் காணப்படும்; மேலிருந்து கீழே இறங்கும்; உள்ளே யிருந்து வெளியே வரும்; வலமிருந்து இடம் வரும். கண்களைச் சுற்றியுள்ள நரம்பு வலிகள் நாலா பக்கங்களிலும் பரவி மேல் பக்கம் பாயும். சதைக் கட்டிகள் முதலில் உட்புறத்தில் மிருதுவாகிப் பிறகு வெளிப் புறத்தில் மிருதுவாகும்.

வியாதி உள்ளே அமுக்கப்படுதல்: அதன் விளைவுகள்:—ஸோரா விஷ சம்பந்தமான சரும வியாதிகளை உள்ளே அமுக்கியதால் காது செவிடாகுதல். சுரப்பிகளைப் பற்றிய வியாதிகள், மேகக் கிரந்தி ஆகியவைகளாலும் கரப்பான் படை உள்ளே அமுக்கப்பட்டதாலும் தோன்றும் தலை வலி. சரும வியாதிகளை அமுக்கியதால் தோன்றும் காதுக் கோளாறுகள். கரப்பான் படை உள்ளே அமுக்கப்படுதல், மேகக் கிரந்தியில் உண்டாகும் சருமக் கோளாறுகள் உள்ளே அமுக்கப்படுதல் ஆகிய காரணங்களால் வியாதி தோன்றியதாகத் தெரிந்தால் அச் சமயத்தில் இவ்வௌஷதத்தை நினைக்க வேண்டும். காரீய செந்தூரம் அல்லது பாதரஸம் சேர்ந்த களிம்புகளை உபயோகித்ததினால் சரும வியாதிகள் அமுக்கப் பட்டிருந்தால் இவ்வௌஷதம் நிச்சயமாய்த் தேவைப் படும்.

மற்ற குறிகள்

எரிச்சலுடனும் புண்ணுள்ள வலியுடனும் உள்ள வயிற்றுப் புற்று. "சருமத்தில் சாதாரணமாகக் கொழுப்புப் பொருள் இல்லாத இடங்களில் தோன்றும் கரப்பான் படையில் விசேஷமாக உபயோகப்படும்". வாத ரோகத்தில் "வலிகள் மாலையில் ஆரம்பித்து இரவு முழுவதும் நீடித்துக் காலையில் மறைந்து விடும் (ஸிபிலினம்). விரைகளில் வீக்கம். விரைப் பையில் (வலி இல்லாமல்) வீக்கம். மானிக் கொண்டையை மூடியுள்ள தோலில் பின் புறத்தில் ஏராளமான குழகுழப்பு நீர் உற்பத்தியாகுதல். வயதானவர்களுக்கு உண்டாகும் உடல் அறிப்பு, படுக்கையில் படுத்துச் சூடு கண்டவுடன் அதிகமாகும்.

ஒப்பிடுதல்:—சொத்தைப் பற்கள் (க்ரியோட்). பற்களின் அடிப்பாகத்தில் சொத்தை (அம்மோனியம் கார்ப், தூஜா). மூத்திரத்துடன் இரத்தம் வெளியாகும் மேக வெட்டை (கந்தாரிஸ், ஹிப்பார் ஸல்பர், நைட்ரிக் ஆஸிட், தூஜா). கண்களைப் பற்றிய நரம்பு வலி (ஆர்ஸனிகம், ஸ்பைஜீலியா).

குறிப்புகள்:—"ஜனவரி, பிப்ரவரி ஆகிய மாதங்களில் பெருவாரியாகத் தோன்றும் வியாதிகளுக்குப் பல சமயங்களிலும் மெஸரியம் தேவைப்படும்" என்று அல்லென் கூறுகிறார். இவ்வௌஷதச் செடி பிப்ரவரி, மார்ச்சு ஆகிய மாதங்களில் பூக்க ஆரம்பிக்கும். அதற்குச் சற்று முன்னதாக செடியின் பட்டையை எடுத்து ஔஷதம் தயாரிக்கப்படுகிறது. அல்லென் சொல்லும் விஷயத்துக்கும் இதற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமோ?

மூரியாடிக் ஆஸிட்
(MURIATIC ACID)

முன்னுரை:—டைபாய்டு சுரத்தின் கடைசி நிலைமையில் பாரிசவாதப் பலவீனம் தோன்றி அதனால் கீழ்த்தாடை தொங்கிப் போய் வியாதியஸ்தர் படுக்கையின் கால்பக்கம் நழுவி வருவதும் மல மூத்திரங்கள் வியாதியஸ்தரின் விருப்பம் இல்லாமல் வெளிப்படுவதுமான குறிகள் காணப்படும் போது இவ்வௌஷதம் தேவைப்படுகிறது. இதன் முக்கிய குறிகள் மற்ற டைபாய்டு சுரத்திலுள்ளவை போலவே இருக்கின்றன. இரத்தத்தில் விஷப் பொருள் சேர்ந்திருப்பதை எதிர்த்துப் போரிடுகிறது. உடல் வலிமை குறைந்து, அழுகும் நிலைமையில் உபயோகப்படும் ஔஷதம் இது.

பொதுவான குறிகள்

தகுதி:—கறுப்பான தலை மயிர், கறுப்பான கண்கள், கறுத்த உடல் ஆகியவை உள்ளவர்களுக்குத் தகுந்தது.

மனம்:—கோப குணம். அதிகமான நிலை கொள்ளாமை. பலமாக முனகுதல். வருத்தம். பிறருக்குத் தெரியாமல் கஷ்டப்படுதல். நினைவு தவறுதல்.

உடல்:—விசேஷக் குறிகளின் விளக்கத்தின் கீழ்க் குறிகளைப் பார்க்கவும். அவை அனேகமாகப் பின் வரும் குறிப்புகளை ஒட்டியே காணப்படும். பாரிச வாதப் பலவீனம்; அதிகச் சோர்வு; அழுகும் தன்மை. மற்ற குறிகளாவன; கால்கள் சில்லென்றிருத்தல். படுக்கைப் புண்கள். தலைச் சுற்றல். நாடி மூன்று துடிப்புகளுக்கு ஒரு தடவை மறைந்திருத்தல். மூக்கிலிருந்து இரத்தப் பெருக்கு. மாமிசம் வாய்க்குக் கொஞ்சம் கூட நன்றாய்

இருக்காது; அதைக் கண்டால் அல்லது நினைப்பது கூட அவருக்குப் பிடிக்காது. நீர்ச் சுரப்புள்ள வீக்கங்கள்.

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே) :— வியர்வை தோன்றும் போது உபாதிகள் அதிகரிக்கும். கண்களைத் திருப்பினாலும் வலப் பக்கமாகப் படுத்தாலும் தலைச் சுற்றல் தோன்றும். கண்களைத் திருப்பினால் தலை வலி அதிகரிக்கும். மூலங்களில் தொட்டால் தாங்க முடியாத அளவுக்கு வலி முதலியவை அதிகமாகும்.

விசேஷக் குறிகளின் விளக்கம்

நிலை கொள்ளாமை :—வியாதியஸ்தர் சிறிது கூட ஓய்வாய் இருக்க மாட்டார்; அளவு கடந்த மனப்பரபரப்பு உண்டாகும். ஆனால் இரத்தத்தில் விஷப் பொருள்கள் கலந்திருப்பதால் மிகச் சீக்கிரத்தில் அதிகப் பலவீனம் தோன்றும், கீழே படுத்துக் கொள்ள விரும்புவார்; அத்துடன் பாரிச வாதப் பலவீனத்தை வெளியிடும் குறிகளும் தோன்றும்.

தசைகளில் பாரிச வாதப் பலவீனம் :—மலமும் மூத்திரமும் வியாதியஸ்தரின் விருப்பம் இல்லாமலேயே வெளிப்படுதல். மூத்திரம் மெதுவாக வெளியாகுதல். உட்கார்ந்து அதிக நேரம் கழிந்த பிறகே மூத்திரம் வெளிப்பட ஆரம்பிக்கும். மூத்திரம் கழிக்கும் போது முக்கினால் மலப்பை வெளியே நழுவிவரும். மலம் கழிக்காமல் மூத்திரம் கழிக்க முடியாது. சிறிது அபான வாயுவை வெளியேற்றும்போது மூத்திரமும் தானாகவே வெளிப்படும். இக்குறிகள் டைபாய்டு போன்ற சுரங்களில் விசேஷமாக வியாதி முற்றிவிட்ட நிலைமையில் அதிக உடல் சோர்வுடன் தோன்றும். வியாதியஸ்தர் படுக்கையின் கால் பக்கம் நழு

விச் சென்று விடுவார். சிறிது நேரத்துக் கொருமுறை அவரைத் தூக்கிப் போட வேண்டிவரும். கீழ்த் தாடை தொங்கிப்போய் வாய் பிளந்து விடும். வயிற்றுப் போக்கில் மூத்திரம் கழிக்கும்போது மலம் தானுகவே வெளிப்படும்: அபானவாயுவை விடும்போதும் மலம் வெளியாகும். மூத்திரம் பிரியும் போதும் அபானவாயு வெளியாகும் போதும் ஆசனவாயில் பிதுக்கம். தொடைகளில் பல வீனம் உண்டாகி நடை தள்ளாடும். நாக்கு ஈயத்தைப் போல் நனக்கும்; அதனுல் பேசுவதற்குச் சிரமம் உண் டாகும். கடுமையான உடல் சோர்வு. கீழே உட்கார்ந்த வுடன் அவருடைய கண் இமைகள் மூடிக் கொள்ளும்.

அழுகு நாற்றம். புண்ணுகுதல் :—மூச்சுக் காற்று நாற் றமாய் இருத்தல். மூத்திரம் கழிக்கும்போது அழுகிய நாற்ற முள்ள மலம் தானுகவே வெளியாகும். "கால்களில் அழுகிய நாற்ற முள்ள புண்கள்; புண்களின் விளிம்பு களில் எரிச்சல்" அழுகிய நாற்றமுள்ள கழிவுகளுடன் பிறப்பு உறுப்புகளில் புண்கள்.

வறட்சி: வெடிப்பு: இரத்தப் பெருக்கு :—நாக்கு உலர்ந்து, சுருங்கி இருத்தல், வாயும் தொண்டையும் காய்ந்திருக்கும். "உதடுகள், புண்ணுய், வெடித்தும் தோல் உறிந்து கொண்டும் இருக்கும்." "உதடுகளில் கறடு முறடான வெடிப்புகளும் மூக்குக் காற்று நாற்றம் வீசுவதும்."

உணர்ச்சிகள் அளவு மீறி அதிகரித்தல் :—ஆசன வாயைத் தொட்டால் அளவு கடந்த வேதனை; இக்குறி மூல வியாதியுடன் சேர்ந்திருக்கலாம் அல்லது சேரா மலும் இருக்கலாம். மூலங்களில் வேக்காடு, வீக்கம், நீல நிறம் ஆகியவைகளுடன் ஆசனவாய் வீங்கிப் புண்

ணுகி வலியுடனும் தொட்டால் அதிக வேதனையுடனும் இருக்கும்; ஆசன வாயில் கடுமையான குத்து வலிகள்; சிறு வர்களுக்குத் திடீரென்று மூலம் தோன்றுதல். எவ்வளவு மெதுவாய்த் தொட்டாலும் பொறுக்க முடியாது; பிறப்பு உறுப்புகளில் (பெண்) படுக்கை விரிப்புப்படுவது கூடத் தாங்க முடியாது.

நீல நிறம்:—வியாதியுள்ள இடங்கள் நீலமாய் இருக்கும்; உதாரணமாக நாக்கு, புண்கள், மூலங்கள், முதலியவை. நாக்கு புண்ணுகவும் நீலமாகவும் இருத்தல்.

எரிச்சல்:—எரிச்சல் ஒரு முக்கியமான குறி. மூலங்களைத் தொட்டால் எரிச்சல். உதடுகளில் எரிச்சல். அழுகிய நாற்றமும் வலியு முள்ள புண்களின் விளிம்புகளில் எரிச்சல்.

இரத்தப் பெருக்கு:—இரத்தம் கொட்டும் மூலங்கள். கறும் பழுப்பு நிறமுள்ள மலம் இரத்தம் கலந்து வெளிப்படும். குடல்களிலிருந்து வரும் இரத்தப் பெருக்கில் இரத்தம் கறுப்பாப் இருக்கும். "கடுமையான இரத்தப் பெருக்கு"

மற்ற குறிகள்

இருதயத் துடிப்பு முகத்தில் ஏற்படுவது போல் தோன்றுதல். வெய்யில் பட்டால் அதிகமாகும் கரப்பான் படை முதலிய சரும வியாதிகள். பெரியம்மைக் கொப்புளங்கள் கறுப்பாய் இருத்தல். சிற்றின்ப ஆசையை அடக்கியதால் உண்டாகும் ஆண் தன்மைக் குறைவு. காதுகளில் ஊதுவது போன்ற ஓசைகளுடன் காது செவிடாகுதல். மாதவிடாயின் போது மூலம் தோன்றுதல். பற்களின் மேல் ஊத்தை படிதல். புறங்கைகளில் கரப்பான் படை.

உறவு :—பிரயோனியா, மெர். சொலு; ரஸ் டாக்ஸ் ஆகியவைகளுக்குப் பின் இது நன்முக வேலை செய்கிறது.

ஒப்பிடுதல் :—டைபாய்டு சுரத்திலுள்ளது போன்ற அபாய நிலைமைகள் (பாஸ்பாரிக் ஆஸிட்டில் சோர்வு கொஞ்சம் குறைவாய் இருக்கும், அல்ட்சியமாய் இருப்பார். மூரியாடிக் ஆஸிட்டில் அதிகமாகப் பேசமாட்டார்), மாதவிடாய்க் காலங்களில் மூலம் (அம்மோனியம் கார்ப், காலின் ஸோனியா, கிராபைடிஸ், பாஸ்பரஸ், பல்ஸடில்லா, ஸல்பர்). மூலங்களில் அதிக வேதனை (பெல்லடோன்னு, காஸ்டிகம், ஹமாமெலிஸ்). மாமிசத்தைக் கண்டாலும் நினைத்தாலும் வெறுப்பு (நைட்ரிக் ஆஸிட்).

குறிப்புகள் :—அளவு மீறி அபினியை உபயோகித்ததால் தசைகளில் உண்டாகும் பலவீனத்தை இவ்வௌஷதம் நீக்கு மென்று ஹெரிங் கூறுகிறார். ஹெரிங் இவ்வௌஷதத்தைத் தன் உடலிலேயே பரீக்ஷை செய்திருக்கிறார். ஹானிமனும் அவ்வாறே செய்துள்ளார். இவர்களுக்கு ஹோமியோபதியர்கள் என்றென்றும் கடமைப்பட்டுள்ளனர்.

நேட்ரம் கார்பானிகம்
(NATRUM CARBONICUM)

முன்னுரை :—ஸோரா விஷத்தை நீக்கும் ஔஷதங்களில் இதுவும் ஒன்று. இவ்வௌஷதத்தில் உபாதி கூடுதல் குறைதல் குறிகளே முக்கியமான குறிகளாய் விளங்குகின்றன.

பொதுவான குறிகள்

தகுதி :—அதிகக் கறுமை இல்லாத தலைமயிர் உள்ளவர்களுக்கு ஏற்றது. மனதாலோ உடலாலோ வேலை

செய்ய வெறுப்புடன் மந்த குணம் மேலிட்டுள்ளவர் களுக்கும் தகுந்தது. கோடைக் காலத்தின் வெப்பத் தைத் தாங்க முடியாமல் உடலில் பலவீனம் தோன்றும் இயல்புள்ளவர்கள்.

மனம்:—ஏக்கம் பிடித்திருத்தல்; வாழ்க்கையில் வெறுப்பு. "அளவு கடந்த ஏக்கமும் திகில் படுவதும்; எந்நேரமும் வருத்தப்பட்டுக் கொண்டே இருத்தல்." புயல் காற்று வீசும் போது கவலையும் நிலை கொள்ளா மல் தவிப்பதும். ஞாபக மறதி; எழுதும் போது தவ றுகள் செய்தல். சங்கீதம் கேட்டால் மனக் குறிகள் அதிகமாகும். பிறருடன் சேர்ந்திருக்க வெறுப்பு; தன் குடும்பத்தினர்களுடன் சேர்ந்திருக்கவும் வெறுப்பு.

உடல்:—கால்களில் அதிகப் பலவீனம், விசேஷ மாகக் காலை வேளைகளில். தட்டுத் தடுமாறி நடத்தல். முகம் நீலமாய்க் கண்களைச் சுற்றி நீல வளையங்களுடன் காணப்படும். முகம் உப்பி இருக்கும். வயிற்றில் அதிக வாயு உப்பிசம். புளிப்பு. கணுக் கால்களில் பலவீனம். சாப்பிட்ட பிறகு தூக்கக் கலக்கம். அல்ப காரணங்களாலும் வியர்வை தோன்றுதல்.

உபாதி கூடுதல்:—வெய்யில் உடல் மீது படும்படி நின்று கொண்டிருப்பது வியாதியஸ்தருக்கு ஒத்துக் கொள்ளாது. மூளையை அதிகமாய் உபயோகித்து வேலை செய்தாலும் அதிக உடல் உழைப்பும் வியாதியஸ்தர் உடலைத் தாக்கும். குளிர் காற்றில் அதிக வெறுப்பு. காற்று வேகமாய் வீசினால் உபாதிகள் அதிகமாகும். பருவ நிலைமையில் ஏற்படும் மாறுதல்கள் ஒத்துக் கொள்ளாமை. மனம் என்ற தலைப்பைப் பார்க்கவும்.

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே) :— பால் குடித்தல், தாவர உணவு, உடம்பில் அதிகச் சூடு ஏற்படும் சமயங்களில் குளிர்ந்த பானங்களைக் குடித்தல் ஆகிய காரணங்களால் உபாதிகள் கூடுதலாகும். வெய்யில் சூடு, காஸ் லைட் (Gas Light) என்னப்படும் விளக்கு ஆகிய காரணங்களால் உபாதிகள் தோன்றும் அல்லது அதிகரிக்கும். பௌர்ணமி நாட்களிலும் ஒன்று விட்டொரு நாளும் உபாதிகள் அதிகமாகுதல்.

தாவர உணவு அல்லது கஞ்சிப் பொருள் உள்ள உணவு ஆகியவைகளை உட் கொண்டால் அசீரணம் அதிகமாகும். **கோடைக் காலத்தின் வெப்பத்தினால் அதிகப் பலவீனம் உண்டாகுதல்.** சிறிது காற்று அடித்தாலும் நீர்க் கோர்வை அதிகமாகும்; ஒன்று விட்டொரு நாளும் அதிகமாகும். **சிறிதளவு மன உழைப்பினாலும் தலை வலி உண்டாகும்.** மாடிப் படி ஏறும் போதும், **இரவிலும் இடது பக்கமாய் படுத்துக் கொண்டாலும் கடுமையான இருதயப் படபடப்பு ஏற்படும்.** வெய்யலில் அடிபட்டு மயக்கம் தோன்றிய பிறகு, **யோசனை செய்ய முடியாமை, மூளை கலங்கி விட்டது போன்ற உணர்ச்சி முதலிய கெடுதலான விளைவுகள் தோன்றுதல். சிறிதளவு மன அல்லது உடல் உழைப்பினாலும் அதிகக் களைப்பு. பால் குடித்தால் வயிற்றுப் போக்கு தோன்றுதல்.** மன வேலை செய்த பிறகும், வெய்யிலில் நின்று வேலை செய்தாலும் தலைச் சுற்றல். **தித்திப்புப் பண்டங்களைச் சாப்பிட்டால் பல் வலி.**

உபாதி குறைதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):— அடி வயிற்றிலுள்ள எல்லா உறுப்புகளும் வெளியே வந்து விடும் போல் தோன்றும் கீழ் இழுக்கும் உணர்ச்சி (உட்கார்ந்திருக்கும் போது அதிகமாய் இருக்கும்) நடந்தால் சௌகரியமாய் இருக்கும்.

விசேஷக் குறிகளின் விளக்கம்

பலம், பல வகைகளிலும் குறைவாய் இருத்தல் :—கணுக் கால்களில் அல்ப காரணங்களாலும் மூட்டு நழுவுதல், சுளுக்கிக் கொள்ளுதல். கணுக் கால்களில் பலவீனம், அதனால் தட்டுத் தடுமாறி நடத்தல். நடை பாதையில் புல் போன்ற சிறு பொருள் காலில் இடறினாலும் தட்டுத் தடுமாறுதல் அல்லது கீழே விழுதல் (சில சமயங்களில் இடறுவதற்கு ஒரு பொருளும் இல்லா விட்டாலும் தடுமாறுவார், கீழே விழுவார்). கால்களில் மிகுந்த பலவீனம், விசேஷமாகக் காலை வேளைகளில். தேவையான அளவு புணர்ச்சி செய்ய முடியாமை; மானியின் விரைப்பு பலம் குறைந்திருக்கும்; மிகச் சீக்கிரமாக இந்திரியம் வெளிப்பட்டு விடுதல்; புணர்ச்சி செய்த பிறகு தவறாமல் வியர்வை தோன்றுதல். சீரணச் சக்தி மிகவும் குறைதல். பழய சுளுக்குகள். அடிக்கடி நீர்க் கோர்வை உண்டாகும் குணம். நேட்ரம் கார்ப் இக் குணத்தைப் போக்குகிறது. இக் குணத்தை அல்பம் என்று மதிக்க முடியாது; வியாதியஸ்தருக்குக் கடுமையான துன்பம் உண்டாகும். வெளிப்படும் நீர் அனேகமாகத் தண்ணீர் போல் நீர்த்தும் வெள்ளையாகவும் இருப்பதுடன் ஏராளமாகவும் இருக்கும்.

சீரண சக்திக் குறைவு :—சீரண சக்தி மிகவும் குறைவாகும். புளிப்பான ஏப்பங்கள்; வயிற்றில் அதிக வாயு உப்பிசம்; பாலில் வெறுப்பு; தாவர உணவு, கஞ்சிப் பொருள்கள் ஆகியவைகளை உட் கொண்டால் அசீரணம் அதிகமாகும்.

உணர்ச்சிகள் அதிகரித்தல் :—திறந்த இடங்களில் உபாதிகள் அதிகமாகும். லேசாகக் காற்று வீசுதல்,

ஓசை, சங்கீதம், உணவு விஷயமாக நேர்ந்த தவறுகள், பருவ நிலையில் மாறுதல்கள், சிறிய தடை (நடக்கும் போது தடுக்கி விழும் விஷயம் மேலே குறிக்கப்பட்டுள்ளது), அல்பமான சுளுக்கு ஆகிய யாவும் அவருக்கு ஒத்துக் கொள்ளாது. ஓசைகள் நம்ப முடியாத அளவுக்குப் பலமாகக் கேட்கும். கண்களுக்கு வெளிச்சத்தைக் கண்டால் ஆகாது. ஒளியுள்ள வெளிச்சத்தைக் கண்டவுடன் கண்களில் வலி தோன்றும்.

உணர்ச்சிகள் விஷேதமாய் அதிகரித்தல்:—புயல் காற்று வீசும் போது மிகவும் பயந்து கொள்வார்; கட்டிலின் கீழ் ஒளிந்து கொள்வார். மனக் குறிகள் சங்கீதம் கேட்டால் அதிகமாகும். காலையில் மனதினுல் வேலை செய்யாமல் இருக்கும் போது உடம்பில் அதிகப் பரபரப்பு. மனச் சோர்வுடனும் முன் கோபமாகவும் இருத்தல், விசேஷமாகச் சாப்பிட்ட பிறகு இவை தோன்றும்; உணவு வயிற்றிலிருந்து கீழே குடல்களுக்கு இறங்க இறங்க மனச் சோர்வு படிப் படியாகக் குறைந்து வரும். இவ் வௌஷதத்தின் மனச் சோர்வு அசீரணத்தை ஒட்டித் தோன்றுகிறது. (நேட்ரம் மூரின் மனச் சோர்வு மலச் சிக்கலின் அளவை ஒட்டி இருக்கிறது).

எதிர்க் குண முள்ள நிலைமைகள்:—குறிகள் வெய்யிலினுல் அதிகமாவதுடன் குளிர்ந்த காற்றினுலும் ஆடைகளை மாற்றிக் கட்டிக் கொள்ளும் போது கூட அதிகமாகின்றன. வயிற்றில் ஒன்றுமே இல்லாத உணர்ச்சி (காலை 10 முதல் 11 மணிவரை அதிகமாய் இருக்கும்); சாப்பிட்டால் இவ்வுணர்ச்சி குறையுமாயினும் பிறகு மனச் சோர்வு அதிகரிக்கும். சீரணம் மிக மெதுவாக நடைபெற்றாலும் எப்பொழுதும் எதையாவது தின்று

கொண்டே இருக்க விரும்புதல். குளிர்ந்த தண்ணீர் குடிக்க அதிகத் தாகம்; ஆனால் குடித்தவுடன் உபாதிகள் கூடுதலாகும்.

வேதனை யளிக்கும் குறிகள் :—சருமத்திலும் சளிச் சவ்வுகளிலும் வேதனை உணர்ச்சிகள். கைகளிலும் முகத்திலும் வெடிப்புகள். சருமம் காய்ந்து கறடு முறடாகி வெடிப்புகளுடன் இருக்கும். தெள்ளுப் பூச்சி கடித்தது போல் உடல் முழுவதும் அறிப்பு. அழுகுணிச் சிரங்குகள். பாலுண்ணிகள், அவைகளைத் தொட்டால் அதிக வலி. கரப்பான் படை. அரைக்கடி, மூக்கு, வாய், கண்கள், ஆசன வாய் முதலிய இடங்களில் புண்ணாய் இருத்தல். பெண்ணின் பிறப்பு உறுப்புகளிலும் தொடை இடுக்குகளிலும் தோல் உறிந்திருத்தல். கால் விரல்களின் இடைகளிலே வெடிப்புகளும் தோல் உறிந்திருத்தலும். மானியின் கொண்டையில் அல்ப காரணங்களாலும் புண் உண்டாகுதல். குஷ்டரோக சம்பந்தமான சிரங்குகள்.

கெட்டியான, பச்சையான, நாற்ற முள்ள கழிவுகள் :— "மூக்கிலிருந்து கெட்டியான, மஞ்சளான, பச்சையான, நாற்ற முள்ள சளி வெளியாகுதல்; சாப்பிட்ட பிறகு பல சமயங்களில் இச்சளி கொஞ்சங் கூட இருப்பதில்லை." மேக வெட்டை, வெள்ளை ஒழுக்கு ஆகிய இரு வியாதிகளிலும் கழிவு கெட்டியாகவும் மஞ்சளாகவும் கயிறு போல் இழுபடும் குண முள்ளதாகவும் இருக்கும்.

மற்ற குறிகள்

ஆணைத் தழுவியவுடன் யோனியிலிருந்து சளிப் பொருள் வெளியாகும்; இதனால் மலட்டுக் குணம் உண்

டாகும். நன்ருய் நசுக்கிய ஆரஞ்சுப் பழத்தைப் போன்ற மலம்; வெளியேறும் போது வலியும் கவலையும் நடுக்கமும். குளிர்ந்த வியர்வையும் தோன்றும். முட்டாள் போல் நடந்து கொள்ளுதல்.—மூக்குச் சளியில் பெரும் பகுதி வாய் வழியாகவே வெளிப்படும். எப்போதும் காறி உமிழ்ந்த வண்ணமாகவே இருப்பார். காதுகள் அடைத்துப் போய் விட்டது போல் செவிட்டுத் தன்மை. குழந்தைகள் போல் கொன்னிக் கொன்னிப் பேசுதல். தைராய்டு சுரப்பியில் கடினமான வீக்கம். கண்டமாலையில் வலியும் அமுக்கும் உணர்ச்சியும் இருக்கும். புறங் கைகளில் பாலுண்ணிகள். தொடைத் தசைகளில் உள்ள நார்கள் சுருங்கிவிட்ட உணர்ச்சி. நீர்க் கோர்வை மூக்குத் துவாரங்களில் மேல் பகுதிக்கும் தொண்டைக்கும் கூடப் பரவுதல்; பகலில் ஏராளமான கழிவுகளும் இரவில் மூக்கடைப்பும் இருக்கும்.

உறவு:—முன்னும் பிறகும் வேலை செய்யக் கூடியது **ஸேபியா**. பின் வேலை செய்யக் கூடியவை: **கல். கார்ப்; நக்ஸ் வாமிகா, பல்ஸடில்லா, ஸேபியா, ஸல்பர்.** கீழே இழுக்கும் உணர்ச்சியில் **ஸேபியா** கொடுக்கப்பட்ட பிறகு நன்ருய் வேலை செய்யும்.

ஒப்பிடுதல்:—கைகளில் வெடிப்பு (**கல். கார்ப்**) முகத்தில் வெடிப்பு (**காலி கார்ப்**). கோடைக் கால வெப்பத்தினல் பலவீனம் (**ஆண்டிகம் க்ரூடம்**). அடி வயிற்றிலுள்ள எல்லா உறுப்புகளும் கீழே நழுவி விடுமென்று தோன்றும் கீழ் இழுக்கும் உணர்ச்சி (**அகேரிகஸ், லிலியம் டிக், முரெக்ஸ், ஸேபியா**). காலை 11 மணிக்கு வயிற்றில் பலவீனமான பசியுள்ள உணர்ச்சி (**ஸேபியா, ஸல்பர்**). மனச் சோர்வும் முன் கோபமும், விசேஷமாகச் சாப்பிட்ட பிறகு (**பிரயோனியா, நக்ஸ் வாமிகா, பல்ஸடில்லா**).

நேட்ரம் மூரியாடிகம்

(NATRUM MURIATICUM)

முன்னுரை :—நேட்ரம் மூர் ஆழ்ந்து வேலை செய்யும்; ஸோரா விஷத்தை நீக்கும். மலேரியா சுரங்களை எதிர்த்துப் போராடப் பல சமயங்களிலும் தேவைப்படுகிறது. இக் கேசுகளில் விலை மதிக்க முடியாது என்று கருதப்படும் இரு முக்கியமான குறிகள் காணப்படும். அதிக உப்புச் சேர்ந்த பொருள்களில் விருப்பம்; நீண்ட நேரம் குளிர் நிலைமை நீடித்திருத்தல் என்பவை தான் அவ்விரண்டும்.

பொதுவான குறிகள்

தகுதி :—வியாதியினால் பலவீனமான, இரத்த சோகையுள்ள நபர்களுக்கு ஏற்றது. வயதானவர்கள். நீர்க் கோர்வைக் கோளாறுகளுடன் சேர்ந்து காணப்படும் இரத்த சோகை வியாதியஸ்தர்கள். உடல் கொழுக்கும் குணமுள்ள இளைஞர்கள். ஸோரா விஷ அதிகரிப்பு; சுரப்பிகளைப் பற்றிய வியாதிகள், க்ஷயரோகம் முதலிய கோளாறுகளை உடையவர்கள். நீர்ச் சுரப்பு. உடல் மெலிவு. மலேரியா சுரத்தினால் உருக் குலைந்த உடலையுடையவர்கள்.

மனம் :—எதற் கெடுத்தாலும் அழும் குணம்; ஆறுதல் வார்த்தைகளைச் சொன்னால் மனக் கோளாறை அதிகரிக்கும். அதாவது வருத்தத்தையும் அழுகையையும் அதிகமாக்கிச் சில சமயங்களில் கோபத்தையும் உண்டாக்கும். அழுவதற்காகத் தனியே இருக்க விரும்புதல். சில சமயங்களில் அழும் போதே கடகடவென்று வாய் விட்டுச் சிரிப்பார். குழந்தைக்கு அதனுடன் பேசினால் கோபம் உண்டாகும்; அல்ப காரணங்களாலும்

கோபம் வரும்; சமாதானம் செய்தால் கோபம் மேலும் அதிகமாகும்.

நேட்ரம் மூர் பெண்களுக்குத் தகுந்த ஔஷதம். தகாத ஆணிடத்தில் காதல் கொண்டு அது தவறுனது என்று நன்றுகத் தெரிந்தும் காதலைக் கைவிட முடியாமல் தவிக்கும் சங்கா குண முள்ள பெண்களுக்கு விசேஷமாகத் தகுந்தது. நேட்ரம் மூர், வியாதியஸ்தரின் மனதில் வேலை செய்து இழந்த புத்தியை மீட்டுத் தருகிறது.

சிரிப்பு என்பது சிறிது கூட இல்லாமல் அல்ப காரியங்களாலும் கோபம் கொள்வார். அளவுக்கு மிஞ்சிச் சிரிப்பார்; முடிவில் கண்களில் நீர் பெருகி அவள் அழுது கொண்டிருந்தாளோ என்று தோன்றும். பேசும் போதும் எழுதும் போதும் தவறுகள் செய்தல், கவனக் குறைவு; குழப்பம்; தாறுமாறுய் நடந்து கொள்ளுதல். வீட்டினுள்ளே திருடர்கள் இருப்பது போல் கனவுகள்; விழித்துக் கொண்டவுடன் வீடு முழுவதும் சுற்றிப் பார்த்துத் திருடர்கள் இல்லை யென்று திருப்தி வந்த பிறகே தூங்க முடியும். கனவு அவ்வளவு உண்மையாகத் தோன்றும். கொலை, நெருப்புப் பிடித்தெரிதல் முதலிய பயங்கரமான கனவுகள்.

உடல்:—அதிக இளைப்பு; முகத்தை விட உடலே அதிகம் இளைத்திருக்கும். எல்லா இடங்களையும் விடக் கழுத்தில் தான் இளைப்பு நன்றுகத் தெரியும். சுகமான வாழ்க்கை நடத்தி வரும் போதும் உடல் இளைத்தல். முகம் வெளுத்துப் பள பளப்பாய், எண்ணெய் தடவியது போல் காணப்படும். மேல் உதடு வீங்கியிருத்தல். நாக்கின் மேற்புறம் மேடும் பள்ளமுமாய் இருக்கும். கடுமையான தாகம். கணுக்கால்களில் பலவீனமும் அவை அல்ப

காரணங்களாலும் திரும்பி விடுவதும். சாப்பிடும் போது முகத்தில் வியர்வை, வாயின் மூலைகள் புண் ணாகவும் வெடித்தும் பொறுக்குகளுடனும் இருக்கும். தூங்கி விழிக்கும் போது உடல் அசதி தோன்றுதல். பல இடங்களில் சில்விப்பு. மூத்திரம் வெளியாகும் போது அதில் வேகம் இருக்காமை. ஸ்தனங்கள் சிறுத் தல். கால்களில் நீர்ச் சுரப்புடன் வீக்கம். உமிழ் நீர் ஏரா ளமாய்ச் சுரக்கும்; உப்புக் காரிப்பாய் இருக்கும். நாக் கில் மயிர் உள்ள உணர்ச்சி.

உபாதி கூடுதல்:—அடிக்கடி நீர்க் கோர்வை தோன் றும் குணம். நேட்ரம் மூர். வியாதியஸ்தருக்கு உடலில் குளிர்ந்த உணர்ச்சி இருக்கும். உடல், மனம் இவ்விரு வகைப்பட்ட குறிகளும் திறந்த இடங்களில் இருக்கும் போது பொதுவாகச் சௌகரியமாய் இருக்கும். வியர் வை தோன்றினால் தவறாமல் நீர்க் கோர்வை பிடித்துக் கொள்ளும்.

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):— வெய்யில், கோடைக் கால வெப்பம், காலை வேளை, தூங்கி எழுந்தவுடன், காலை 10 முதல் 11 மணி வரை, பௌர் ணமி நாட்கள், சாப்பிடுதல், ரொட்டி, கொழுப்புப் பொருள்கள், புளிப்பான பழங்கள், ஒயின் ஆகியவைகளை உட் கொள்ளுதல், மன உழைப்பு ஆகிய பல காரணங் களால் உபாதிகள் கூடுதலாகும். பெண்கள் பருவ மடை யும் சமயத்திலும் உபாதிகள் அதிகரிக்கும் **பள்ளியில் படிக்கும் பெண்களின் தலை வலிகள்.** கடல் அருகே இருந் தால் மலச் சிக்கல் உண்டாகும். கண்களை அதிகம் உப யோகித்து வேலை செய்தால் உண்டாகும் தலை வலி.

காதலில் ஏமாற்றம், பயந்து கொள்ளுதல் உடலின்

உயிர்த் தண்ணீர் வெளியேறுதல், பிறப்பு உறுப்புகளை இயற்கைக்கு விரோதமாய்ச் சேஷ்டை செய்து சிற்றின்பம் அடைதல், கொயினுவை அளவு மிஞ்சி உட் கொள்ளுதல், சூடு போடுதல் முதலிய காரணங்களால் தோன்றும் கெடுதலான வியாதிகளிலும் மேக வெட்டையில் அர்ஜண்டம் நைட்ரிகத்தை உபயோகித்துச் சுட்ட பிறகு மெல்லிய நீர் வெளிப்படும் நிலைமையிலும் இவ்வௌஷதம் உபயோகப்படும். "கொயினுவை உபயோகித்துத் தீராத வியாதி என்று தீர்மானிக்கப்பட்ட முறைச் சுரம்."

உபாதி குறைதல் :-வியாதியஸ்தருக்குத் திறந்த இடங்களில் இருக்கும் போது, செய்யும் வேலை சக்திக்கு உட்பட்டதாக இருந்தால், தவறாமல் சௌகரியம் உண்டாகும். கடற் கரையில் வசித்தல், வயிறு காலியாய் இருத்தல், வழக்கமாய் உள்ள வேளையில் சாப்பிடாமல் இருத்தல் ஆகிய காரணங்களாலும் உபாதிகள் குறையும்.

உபாதி குறைதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே) :- முதுகு வலி அமுக்கினாலும் கடினமான பொருள்களின் மீது முதுகை வைத்துப் படுத்தாலும் குறைவாய் இருக்கும். நிறைந்த உணர்ச்சி ஆடைகளை இறுகக் கட்டினால் குறையும். வலது பக்கமாய்ப் படுத்தால் சௌகரியமாய் இருக்கும். முறைச் சுரங்களில் குளிர் உள்ள நிலைமையில் சூட்டினாலும் உடம்பைக் கனமாகப் போர்த்தி வைத்தாலும் குளிர் அடங்காது; குளிர்ந்த பானங்களைக் குடித்தால் அடங்கும். இவ்வகைச் சுரத்தில் வியர்வையினால் சௌகரியம் ஏற்படுவதுடன் கால்கள் வலியும் நீங்கும்; தலை வலி வியர்வையினால் குறையலாம் குறையாமலும் இருக்கலாம். வியர்வை உள்ள நிலைமையில் எல்லா உபாதிகளும் குறைந்து விடும். ஆனால் வியர்வையினால் பல வீனம் தோன்றும்.

விசேஷக் குறிகளின் விளக்கம்

வறட்சி:— உதடுகளிலிருந்து ஆசனவாய் வரையுள்ள எல்லா சளிச் சவ்வுகளும் காய்ந்திருக்கும். வாய்த் தொண்டை, யோனி முதலிய இடங்களில் வறட்சி. சரும மம் காய்ந்திருக்கும். யோனி வறண்டிருப்பதால் புணர்ச்சி செய்யும் போது வலியும், எரிச்சலும். வாய் காய்ந்து சருமம் வறண்டு, இரத்த சோகையுள்ள பெண்களுக்கு ஏற்படும்.

வெடிப்புகள்:— உதடுகளில், விசேஷமாக நடுவில், காய்ந்து வெடித்திருக்கும். "மேலுதட்டின் நடுவில் ஆழமான, வலியுள்ள வெடிப்பு ஒரு முக்கிய குறியாகக் குறிக்கப்பட்டுள்ளது. ஆனால் கீழ் உதட்டின் நடுவில் இக்குறி இருப்பதைப் பார்த்திருக்கிறேன். அதுவும் முக்கிய குறி யென்றே நான் நம்புகிறேன்" என்று நாஷ் சொல்கிறார். நகங்களைச் சுற்றியுள்ள சருமம் காய்ந்தும் வெடித்தும் இருக்கும். சுரக்கொப்புளங்கள், உதடுகளைச் சுற்றி நல் முத்துக்களைப் போல் காணப்படும். உதடுகள் காய்ந்து வலியுடன் வெடித்துப் புண்ணாய் இருக்கும். ஆசனவாய் காய்ந்து வெடித்துப் போய் இருக்கும். "சிரமப்பட்டு மலம் கழித்ததினால் ஆசனவாய் கிழிந்து இரத்தம் கொட்டி அவ்விடத்தில் புண்ணாய் இருக்கும் உணர்ச்சியை உண்டாக்கும்" காய்ந்த, கடினமான, நொறுங்கிப் போகும் மலம், ஆசன வாயைக் கிழித்தல் அல்லது புண்ணுள்ள உணர்ச்சியையும் எரிச்சலையும் உண்டாக்கும். விரல் நுனிகளில் வெடிப்பு.

கண்ணீர்ப் பெருக்கு:— கண்ணீர் கார குணம் உள்ளதாக இருக்கலாம். இருமும் போது கண்ணீர் பெருகி முகத்தில் வழிந் தோடும். (கக்குவாய் இருமல்) தும்மும்

போது கண்ணீர் பெருகுதல். வியாதியுள்ள பக்கத்தில் உள்ள கண்ணிலிருந்து கண்ணீர் பெருகுதல். நீர்க் கோர்வையுடன் ஏராளமான கண்ணீர் உற்பத்தியாகும்.

சில்லிப்பு உணர்ச்சி:— கைகள், பாதங்கள், இருதயம் ஆகிய இடங்களில் சில்லிப்பான உணர்ச்சி. இருதயத்தில் சில்லிப்பான உணர்ச்சியுடன் அவ்வுறுப்பு நடுங்குவது போலவும் தோன்றுதல். "மனதினுல் வேலை செய்தால் இருதயத்தில் சில்லிப்பு உணர்ச்சி தோன்றும்" முறைச் சுரத்தில் குளிர் நிலைமை நீண்ட நேரம் நீடித்திருக்கும். ஆனல் காலை பத்து அல்லது 11 மணிக்கு குளிர் இல்லாமலேயே சுரம் தோன்றுவதும் உண்டு. காலை 10 அல்லது 11 மணிக்கு அதிகத் தாகத்துடன் குளிர் கடுமையாகவும் நீண்ட நேரம் நீடித்தும் இருக்கும்; குளிர் பாதங்கள், கை விரல்கள், கால் விரல்கள், அல்லது கீழ் முதுகில் ஆரம்பிக்கும். அச்சமயம் உதடுகளும் நகங்களும் நீல நிறமாகும். (நக்ஸ் வாமிகா).

இளைப்பு:— பொதுவான உடல் இளைப்பு. கழுத்தில் மட்டும் அதிகமாய் இருக்கும். கழுத்து மெலிந்து சுருங்கிப் போய்க் காணப்படும். இளைப்பு உடம்பின் மேற் பாகத்திலிருந்து கீழே பரவும். "கழுத்துப் பட்டை எலும்புகள் முன்னுக்கு வந்தும் கழுத்து சிறுத்தும் இருக்கும்; ஆனல் சப்பைகளும் கால்களும் எப்போதும் போல் சதைப் பிடிப்புடன் இருக்கும்" (கெண்ட்). ஸ்தனங்களிலுள்ள சுரப்பிகள் இளைத்தல்.

நீர்ச் சுரப்பு:— நாட்பட்ட நீர்ச் சுரப்புகளுக்கு ஏற்றது. அடி வயிற்றில் நீர்ச் சுரப்பு. கால்களில் நீர்ச்சுரப்பு தோன்றினுல் அதற்கு இவ்வௌஷதம் மிகச் சிறந்தது.

தாராளமாய், ஏராள்மாய் உள்ள கழிவுகள்:— ஏராளமான நீர் தாராளமாய் வெளிப்படும் நீர்க் கோர்வை, சுவை, வாசனை அறியும் சக்திகள் மறைதல்; தும்மலும் இருக்கும். யோனியிலிருந்து கெட்டியான, வெண்மை நிறமுள்ள, கண்ணுடி போல் ஊடுருவிப் பார்க்கக் கூடிய கழிவுப் பொருள் ஏராளமாய் வெளிப்படுதல். ஏராளமான உமிழ் நீர்ச் சுரப்பு; உப்புக் கரிப்பாய் இருக்கும்.

வேலை செய்யாமை:— பேச்சு உறுப்புகள் பலம் குறைந்து விட்டது போல் பேசும்போது சிரமம் தோன்றும். குழந்தை மிகத் தாமதமாய்ப் பேசுதல், கற்றுக் கொடுக்கப்படும் விஷயங்களை மெதுவாகப் புரிந்து கொள்ளுதல். "உட்கார்ந்து அதிக நேரம் கழிந்த பிறகே மூத்திரம் வெளியாவதற்கு மற்ற குறிகளும் காணப்பட்டால் இவ்வௌஷதம் உபயோகப்படும். அதிக நேரம் சென்ற பிறகு வெளிப்படும் மூத்திரம் சொட்டுச் சொட்டாக ஒழுகும். வேக்மே இருக்காது". பல நாட்களுக்கு நீடித்திருக்கும் மலச் சிக்கல்.

தளர்ச்சி:— நடக்கும் போதும். இருமும் போதும், சிரிக்கும் போதும் மூத்திரம் தானுகவே வெளியாகும். இருமும் போது கண்ணீர் பெருகி முகத்தில் வழிந்தோடும். புணர்ச்சிக்குப் பிறகு மிகச் சீக்கிரத்தில் இந்திரியம் தானுகவே நழுவுதல்:

இறுக்கும் உணர்ச்சி:—இருதயம், மார்பு, தொண்டை, மண்டைத் தோல், ஆசனவாய், மலப்பை, கருப்பை, யோனி, தொடை நரம்புகள் ஆகியவைகளில் இறுகக் கட்டியிருப்பது போல் அல்லது அவை சுருங்கிப் போய் விட்டது போன்ற உணர்ச்சி. தொடை நரம்புகளில் வலி

யுடன் சுருக்கம். ஆசனவாய் அடைத்துப் போய் விட்டது போல் தோன்றுதல். கருப்பையில் கவ்வும் வலிகள். ஆசனவாய் அடைத்துப் போய் விட்ட உணர்ச்சியுடன் மலச்சிக்கல். வெடிப்புகள் என்ற தலைப்பின் கீழே பார்க்கவும்.

மயிர் உதிருதல்:— இக் குறியைத் "தளர்ச்சி" என்ற வகையிலும் சேர்க்கலாம். ஏராளமான மயிர் கொட்டுதல் (தொட்டவுடனேயே). மீசை மயிரும் கொட்டும். பெண்களின் பிறப்பு உறுப்புகளிலுள்ள மயிர் கொட்டுதல், குறிப்பாகத் தாய்ப்பால் கொடுக்கும் பெண்களுக்கு மயிர் கொட்டுவதுடன் யோனிக்கு மேலுள்ள முளை போன்ற உறுப்பில் வேக்காடு. ஆண்களுக்கு மானிக்கு மேலுள்ள மயிர் உதிருதல்.

விருப்பு: வெறுப்பு:— உப்பு, உப்பிட்ட பொருள்கள், கசப்பு அல்லது புளிப்பான பொருள்கள், மீன், பால் ஆகியவைகளை அதிகமாய் விரும்புதல். ரொட்டி, மாமிசம் ஆகியவைகளில் வெறுப்பு. புணர்ச்சியில் வெறுப்பு. ஆண்களிடம் வெறுப்பு.

விநோதமான குறிகள்:— நன்றுகவும் மனதுக்குத் திருப்தியாகவும் சாப்பிடுவார், ஆயினும் உடல் இளைக்கும், அதிகப் பசி இருந்தாலும் உணவில் ஆசை சிறிது கூட இருப்பதில்லை. அடிக்கடி அழும் சுபாவம், தேறுதல் கூறினால் அழுகை அதிகமாகும். கனவின் விளைவுகள் விழித்துக் கொண்ட பிறகும் காணப்படும். இரத்த சோகையும் முகத்தில் எண்ணெய் போன்ற வியர்வையும், புணர்ச்சி செய்த பிறகு மிகச் சீக்கிரத்தில் இந்திரியம் தானாகவே நழுவுவதுடன் புணர்ச்சி செய்து முடித்த வுடனேயே ஆசை அதிகமாகும். மாதவிடாய் வழக்

கத்தைவிட முன்னதாக ஏராளமான போக்குடன் தோன்றும் அல்லது தடைப்பட்டுத் தாமதமாகக் குறைவான போக்குடனும் தோன்றும்.

இருதயம், விசேஷமாகத் தாக்கப்படுதல்:—உடலில் ஏற்படும் ஒவ்வொரு அசைவினாலும் விசேஷமாக இடது பக்கமாய்ப் படுத்தவுடனும் இருதயத்தில் கடுமையான பட படப்பும் கவலையும் தோன்றும். இருதயம் பட பட வென்று துடித்தல். பலவீனமான, மயக்கம் வருவது போன்ற உணர்ச்சியும் ஏற்படும். இருதயத் துடிப்புகள் உடம்பைக் குலுக்கும்.

தலை வலிகள்:—மெர். சொலுவில் பல வகைச் சுரங்கள் இருப்பதைப் போலவும் ரஸ்டாக்ஸில் ஏராளமான இசிவும் வலிகளும் காணப்படுவதைப் போலவும் இவ் வௌவுதத்தில் ஏராளமான தலை வலிகள் உள்ளன.

பள்ளியில் படிக்கும் பெண்களின் தலை வலி. இவர்கள் அனேகமாக இரத்த சோகையுடன் இருப்பார்கள். சூரிய உதயத்திலிருந்து சூரிய அஸ்தமனம் வரை விடாமல் இருக்கும் தலை வலி. பார்வையில் ஓரளவு மங்கலுடன் தோன்றும் தலை வலிகள். இருமினல் தலை வலி மிகவும் அதிகமாகும். விட்டு விட்டுத் தோன்றும் தலை வலி. கண்களுக்கு அதிக வேலை கொடுத்ததினல் ஏற்படும் தலை வலி. மலேரியா சம்பந்த முள்ள தலை வலி கடல் ஓரங்களில் அதிகமாகும். செம்மட்டி கொண்டு அடிப்பது போன்ற தலை வலி. உடைக்கும் தலை வலியுடன் முறைச் சுரம். முறை வைத்துத் தோன்றும் குண முள்ள, தலையின் முன் பக்கத்தில் காணப்படும், தலை வலிகள்; மண்டை வெடித்து விடும் என்று தோன்றும் அளவுக்குக்

கடுமையாய் இருக்கும். அல்லது சிறிய சம்மட்டிகளால் அடிப்பது போலவும் இருக்கும்.

மற்ற குறிகள்.

முறைச் சுரத்தில் குளிருடன் வாந்தி. பலவீனத்தை உண்டாக்கும் வியாதிகளுக்குப் பிறகு கண் பார்வை குறைதல். இமைகளின் சளிச் சவ்வில் வேக்காடு. உடலின் உயிர்த் தண்ணீர் வெளியேறியதால் மூளைச் சோர்வு. ஆசன வாயைச் சுற்றி கடி. ஈறுகளில் அழுகிய நாற்ற மூள்ள வேக்காடு. விரைப்பை வீக்கம். முதல் மாதவிடாய் தோன்றும் போது கஷ்டப்படுதல். நாக்கில் மயிர் இருக்கும் உணர்ச்சி. நாக்கு சிவந்த திட்டுகளுடன் மேடும் பள்ளமுமாய் இருக்கும்; நாக்கின் இரு பக்கங்களிலும் படர் தாமரை இருப்பது போல் தோன்றும். உள்ளங்கைகளில் பாலுண்ணிகள். உடம்பில் அறிப்பும் சொறிந்தால் வில்லைகளாகத் தடிப்பது முள்ள சரும வியாதி. திடீரென்று தோன்றிய போதும் நாட்பட்டு உள்ள போதும் நேட்ரம் மூரிஞல் குணமாகக் கூடும். உடம்பு முழுவதும் அறிப்பு, விசேஷமாகக் கடுமையான உடற் பயிற்சி செய்த பிறகு தோன்றும் குண முள்ளதாய் இருத்தல். காலையில் தோன்றி மாலையில் மறையும் குண முள்ள புருவங்களில் உண்டாகும் நரம்பு வலி.

உறவு :—முன்பும் பிறகும் வேலை செய்பவை: அபிஸ், காப்ஸிகம், ஸேபியா. ஸேபியா, தூஜா ஆகியவைகளுக்கு முன்பும் காலி மூர், காலி பாஸ், காலி ஸல்ப், நேட்ரம் ஸல்ப், கல். பாஸ், பெர். பாஸ் ஆகியவைகளுக்குப் பிறகும் உபயோகிக்கப்படலாம்.

ஒப்பிடுதல் :—அழுங் குணம் (பல்ஸடில்லா). பல்ஸடில்லாவில் தேறுதல் செய்தால் சௌகரியம் ஏற்படும்.

பள்ளியில் படிக்கும் பெண்களின் தலை வலி (கல். கார்ப்; க்ளோனுயின், கால்மியா, ஸாங்வினேரியா, ஸ்பைஜீலியா, தலை வலி காலையில் ஆரம்பித்து மாலையில் மறைதல் (க்ளோனுயின், கால்மியா, பாஸ்பரஸ், ஸாங்வினேரியா, ஸ்பைஜீலியா, ஸ்டான்னம்). அதிகப் பசியும் ஆனல் உடல் இளைப்பும் (ஐயோடியம்). கடி (ஸேபியா, பாரிடா கார்ப், டெல்லூரியம்). இருமலுடன் மூத்திரம் ஒழுகுதல் (காஸ்டிகம், பல்ஸடில்லா). இருதயப் பாகத்தில் சில்லிப்பு உணர்ச்சி (பெட்ரோலியம்). முகத்தில் எண்ணெய்போன்ற வியர்வை (பிரயோனியா). தூங்கிய பிறகு உபாதிகள் அதிகரித்தல் (லாச்சஸிஸ், ஸல்பர்). நாக்கில் மயிர் உள்ள உணர்ச்சி (ஸைலீஷியா). ஆசன வாய் அடைபட்டு விட்ட உணர்ச்சி (பெல்லடொன்ன, லாச்சஸிஸ்). யோனி காய்ந்திருத்தல்: புணர்ச்சி செய்யும் போது வலி (கிராபைடிஸ், நைட்ரிக் ஆஸிட்). எண்ணெய் தடவியது போல் பளபளப்பான சருமம் (ப்ளம்பம், ஸெலனியம், தூஜா).

குறிப்புகள்:—இக்னேஷியா முற்றினுல் நேட்ரம் மூர். சுர முள்ள போது ஒரு பொழுதும் இவ்வௌஷதத்தைக் கொடுக்கக் கூடாது. "நாட்பட்ட வியாதிகளில் குறிகளுக்கு ஏற்றபடி தேவைப்படும் வேறு ஒரு ஔஷதத்தை இடையில் கொடுக்காமல் நேட்ரம் மூரை அடிக்கடி கொடுப்பது கூடாது" என்று H. C. அல்லென் கூறுகிறூர்.

நேட்ரம் பாஸ்பாரிகம்

(NATRUM PHOSPHORICUM)

முன்னுரை:—லாக்டிக் ஆஸ்ட் (Lactic Acid) என்று வழங்கப்படும் புளிப்புப் பொருள் உடலில் அதிகமாகி விட்ட காரணங்களால் உண்டாகும் கோளாறுகளுக்கு இது ஏற்ற தோர் ஔஷதம். இரத்தத்துடன் சேர்ந்து

உடல் முழுவதும் சுற்றி வரும் இப்புளிப்புப் பொருள் வியாதி யற்ற நிலைமையில் கார்பானிக் ஆஸிட்டாகவும் (Carbonic Acid) தண்ணீராகவும் மாறுகிறது. இவ்விதம் மாறுவதற்கு இரத்தத்திலுள்ள நேட்ரம் பாஸ் என்னும் உயிருப்பே காரணம்.

உடம்பில் இந்த உயிர் உப்பின் அளவு குறைந்துவிடும் போது, நாட்பட நீடிக்கும் அசீரணம், குடல் கோளாறுகள், வாத ரோகம் முதலிய பல வியாதிகள் தோன்றுகின்றன.

டாக்டர் ஷூஸ்லரின் சிந்தாந்தப்படி குறைந்த விட்ட இவ்வுயிருப்பை நுண்ணிய அளவுகளில் உபயோகித்தால் அதிகப் புளிப்பு உள்ள நிலைமையை எதிர்த்துப் போராடி அந் நிலைமையால் தோன்றிய வியாதிகள் குணம் செய்யப் படுகின்றன.

உபாதி கூடுதல், குறைதல் :—வெண்ணெய், குளிர்ந்த பானங்கள், குளிர்ச்சியான உணவு, பால், பழம், கொழுப்பு, சர்க்கரை, புளிப்பான பண்டங்கள் ஆகியவைகளால் உபாதிகள் அதிகரிக்கின்றன. பல கோளாறுகள் மன வேலையில் கூடுதலாகின்றன. இடது பக்கமாய்ப் படுத்தாலும் பல உபாதிகள் அதிகமாதப். திறந்த இடங்களில் இருக்க வெறுப்பு.

விசேஷக் குறிகளின் விளக்கம்

மஞ்சள் நிறக்கழிவுகளும் அழுக்கும் :—நாக்கின் பின் பக்கத்தில் மஞ்சள் நிறமுள்ள, ஏடை போல் படிந்துள்ள அழுக்கு, வாய் மேற் கூரையின் பின்பக்கத்திலும் இதே போன்ற அழுக்கு. மேலண்ணம், தொண்டைச்சுரப்பிகள், உள்நாக்கு ஆகியவைகளிலும் இதைப்போன்ற அழுக்குக் காணப்படும். கண்களிலிருந்து பொன்னைப்

போல் மஞ்சள் நிறமுள்ள ஏடை போன்ற பீலை உற் பத்தியாகுதல். ஏடை போன்ற கழிவுகளுள்ள கரப் பான் படை. கழிவுகள் மஞ்சளாகவும் தேன் போல வும் இருக்கும். சருமத்தில் பொன்போல் மஞ்சள் நிற முள்ள பொறுக்குகள்.

புளிப்புக் குணம் :—புளித்த ஏப்பம், புளித்த வாந்தி, மலம், கோழை; வியர்வை, வெள்ளை ஒழுக்கு முதலிய எல்லாக் கழிவுகளும் புளிப்பு நாற்றம் வீசும். பாலையும் சர்க்கரையையும் அளவுக்கு மிஞ்சிக் கொடுத்த காரண மாகக் குழந்தைகளுக்கு வயிறு புளித்துப் போகுதல். புளிப்பான, தயிர்க்கட்டிகள் வாந்தி செய்யப்படுதல்.

மற்ற குறிகள்

நுனி நாக்கில் மயிர் உள்ள உணர்ச்சி. தொண்டை யில் உருண்டையான பொருள் உள்ள உணர்ச்சி. இந்திரியம் தானாக நழுவிய பிறகு முதுகில் பலவீனமும் முழங்கால்களில் நடுக்கமும். புணர்ச்சியில் அளவு கடந்து ஈடுபட்டதால் தோன்றும் கோளாறுகள். நடக்கும் போது திடீரென்று கால்கள் துவண்டு பாரிச வாதம் ஏற்பட்டு விடுமென்று தோன்றுதல். இளைஞர்களுக்கு ஏற்படும் கொடிய வகையைச் சேர்ந்த சுவாச கோச க்ஷயம். இறந்தவர்களைப் பற்றியும் சிற்றின்ப விஷய மாகவும் கனவுகள், ஒரு நாள் மலச்சிக்கலும் மறு நாள் வயிற்றுப் போக்கும். மஞ்சட் காமாலை. புளிப்பான கட்டிகள் வாந்தி செய்யப்படுவதுடன் கூடிய முறைச் சுரம். புளிப்புக் குறிகளுடன் குழந்தைகளுக்கு ஏற்படும் வயிற்று வலி. குழந்தை மூக்கினுள் குடையும். இந்திரி யம் நீர்த்து இருக்கும். மன, உடல் வேலைகளைச் செய்யப் பயம். விரைப்பை, மானிக் கொண்டையை மூடிய

தோல், ஆசனவாய் ஆகியவைகளில் அறிப்பு. சாப்பிட்ட பிறகு கவலையுடன் இருதயப் படபடப்பு. கைகள், கால்கள், பாதங்கள் ஆகியவைகளில் சில்விப்பு. இருமினால் அல்பமான வேலை செய்தாலும் வியர்வை. வியாதி பிடித்த சருமம்.

தேட்ரம் ஸல்ப்யுரிகம்

(NATRUM SULPHURICUM).

முன்னுரை :—"தசைகளில் உறுதி இல்லாமல் கொள கொள்ளவென்று தொய்ந்திருத்தல், உடலில் அதிக நீர்க்கட்டு, இரத்தத்தில் அதிக நீர்" முதலிய குறிகளுள்ள உடல் வாகைச் சீராக்கும் தலை சிறந்த ஔஷதங்களில் இதுவும் ஒன்று.

"இரத்தத்தில் அதிகமான தண்ணீர் உள்ளவர்களுக்கு சுரக்கசிவுள்ள பருவக்காலம், தண்ணீர் உள்ள இடங்களுக்கு அருகாமையில் வசித்தல், காற்றோட்டமில்லாத சுரக்கசிவுள்ள வீடுகளில் குடியிருத்தல் முதலிய காரணங்களால் உபாதிகள் அதிகமாகி இதற்கு மாறுன நிலைமைகளால் சௌகரியம் ஏற்படும்."

"உடலுக்குத் தேவையான நீரை நேட்ரம் மூர் ஒரு சில இடங்களில் மட்டும் தேங்கச் செய்து மற்ற இடங்களில் வறட்சியை உண்டாக்குகிறது; நேட்ரம் ஸல்போ உடல் வேலையில் ஏற்படும் கோளாறுகளினால் உற்பத்தியாகும் தேவையற்ற நீரை இழுத்து உடலிலிருந்து அதை வெளியேறச் செய்கிறது".

பொதுவான குறிகள்

தகுதி :—மேகவெட்டை வியாதியில் அடிப்பட்ட நிலைமை. மேகவெட்டை அமுக்கப்பட்ட வரலாறு

உள்ள வியாதியஸ்தர்கள். இரத்தத்தில் அதிக நீரினால் கஷ்டப்படுகிறவர்கள். மேகவெட்டை விஷத்தினால் மிகக் கொடிய முறையில் தாக்கப்படுவோர். மேக வெட்டை உள்ள குடும்பத்தில் பிறந்ததினால் அவ்விஷம் ஏறியுள்ள உடலுள்ளவர்கள்.

மனம் :—வருத்தம்: அடிக்கடி அழும் குணம். ஏக்கமும் அடிக்கடி பைத்தியம் பிடித்தலும். சங்கீதம் கேட்ட பிறகு மாலை மாலையாகக் கண்ணீர் வடித்தல். பிறருடன் பேசவோ அல்லது பிறர் தன்னுடன் பேசுவதோ பிடிக்காது. யோசனை செய்யச் சக்தி இல்லாமை. தற்கொலை செய்து கொள்ளத் தூண்டுதலுடன் வாழ்க்கையில் வெறுப்பு.

உடல் :—சீரணம் மெதுவாக நடைபெறுதல். பசி இல்லாமையும் உணவில் வெறுப்பும். ரொட்டியிலும் மாமிசத்திலும் வெறுப்பு. மூச்சுத்திணறல், விசேஷமாக நடக்கும்போது. அடி வயிற்றில் வாயு ஏராளமாய் உற்பத்தியாகுதல். ஆடைகளைக்களையும்போது அறிப்பு. பற்கள் ஆட்டங்கண்டு விழுந்துவிடும். மூத்திரம் அளவு குறைவதுடன் கீழ் முதுகில் வலி. பாதங்களில் நீர்ச் சுரப்பு. எந்த வியாதி தோன்றினாலும் உடம்பு மெதுவாகவே தேற ஆரம்பிக்கும்.

உபாதி கூடுதல் :—ஈரக்கசிவுள்ள பருவ நிலைமை, தண்ணீரில் நனைதல், குளித்தல். ஈரக்கசிவுள்ள, காற்றோட்டமில்லாத வீடுகளில் குடியிருத்தல் முதலிய காரணங்களால் உபாதிகள் அதிகமாகும். வறட்சியான பருவநிலை ஈரக்கசிவுள்ளதாக மாறும்போது ஒவ்வொரு தடவையும் வியாதியஸ்தருக்குக் கோளாறுகள் அதிகரிக்கும். தண்ணீர் உள்ள உணவுப்பொருள்கள், கடல் காற்று, தண்ணீ

ரையே ஆதாரமாய்க்கொண்டு வளரும் செடி கொடி கள், ஆகியவை அவருக்கு ஒத்துக்கொள்ளாது. உடம் பில் குளிர் உணர்ச்சி, படுக்கையில் படுத்துக்கொண்ட பிறகும் கூடு ஏற்படாமை. கூடுள்ள அறையில் இருக்க விரும்பமாட்டார்.

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே :—இள வேனிற்காலத்திலும் பருவமிலைமையில் கூடு ஏற்படும் போதும், மாலையில் வீசும் குளிர் காற்றி லும் உபாதிகள் கூடுதலாகும். பல கோளாறுகள் ஓய்வாய் இருக்கும்போது அதிகரிக்கின்றன. தலையில் அடிபட்ட தால் ஏற்படும் மூளைக்கோளாறுகள். பல குறிகள் காலை வேளையில் அதிகமாகும்.

மாதவிடாய்க் காலங்களில் மூக்கிலிருந்து இரத்தப் பெருக்கு. காச வியாதி காலை வேளையில் அதிகமாய் இருக் கும். மாலையில் எண்ணெய் விளக்கின் வெளிச்சத்தில் படிக்கும்போது கண்களில் வலி. ஈரக்கசிவும் குளிரும் உள்ள பருவக்காலங்களில் வாத ரோகம் அதிகமாகும். நீர்க் கோர்வை ஏற்பட்டால் ஒவ்வொரு தடவையும் காச வியாதியில் முடியும். இள வேனிற்காலங்களில் ஒவ்வொரு ஆண்டும் தவறுமல் தோன்றும் சரும வியாதிகள். மாலை யில் வீசும் ஈரக்கசிவுள்ள காற்றினால் மார்பில் அமுக்கும் உணர்ச்சி. இடது பக்கமாய்ப் படுத்தால் கல்லீரல் கோளாறுகள் கூடுதலாகும். காச நோய் விடியற்காலை 4 மணி முதல் 5 மணி வரை அதிகரிக்கும். குளிர்ச்சியான உணவு, குளிர்ச்சியான பானங்கள் ஆகியவைகளால் வயிற் றுப்போக்கு அதிகமாகும். ஆடைகளைக் களையும் போது அறிப்பு.

உபாதி குறைதல்:—உடம்பில் குளிரும் உணர்ச்சி இருந்த போதிலும் திறந்த இடங்களில் இருப்பதையே

வியாதியஸ்தர் பெரிதும் விரும்புவார். திறந்த இடங்களில் உலாவிக் கொண்டிருந்தால் சௌகரியமாய் இருப்பதாகத் தோன்றும்.

உபாதி குறைதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே) :—பல் வலி குளிர்ந்த காற்றினாலும் குளிர்ச்சியான தண்ணீரை வாயினுள் வைத்திருந்தாலும் குறையும். குறிகள் ஓய்வாய் இருக்கும்போது தோன்றும். நடந்து கொண்டிருந்தால் சௌகரியமாகும்.

சில குறிகள் இடம் மாறினால் குறையும். "அடிக்கடி இடத்தை மாற்ற வேண்டும்; ஆனால் அவ்வாறு செய்யும் போது வலி உண்டாகிறது; சௌகரியம் ஏற்படுவதில்லை (காஸ்டிகம்)." வலியினால் அடிக்கடி தன் இடத்தை மாற்ற நேரும்.

விசேஷமான குறிகள்

உருக்கமான சங்கீதம் கேட்டால் அவருக்கு வருத்தம் உண்டாகும்.

தற்கொலை செய்து கொள்ளத்தூண்டுதல் : தன் உயிரை அழித்துக் கொள்ளாமலிருக்க மிகவும் சிரமப்பட்டு மனதைக் கட்டுப்படுத்திக் கொள்ள நேரும்.

காலையில் தூங்கி எழுந்து நடமாட ஆரம்பித்தவுடன் தண்ணீர் போன்ற, மஞ்சள் நிறமுள்ள மலம் மிக வேகமாக வெளியாகுதல்.

மேக வெட்டையில் : மஞ்சளும் பச்சையும் கலந்த கழிவு வெளிப்படுதல்; கெட்டியாய் இருக்கும்; வலி இருக்காது; அதிக நீர்க் கட்டுள்ள உடலுள்ளவர்களுக்கு மிகவும் ஏற்றது. நாட்பட்ட, உள்ளே அமுக்கப்பட்ட மேக வெட்டை.

சுக்கிலச் சுரப்பிகள் பருத்தல் :—மூத்திரத்தில் சீழும்

சளிப் பொருளும் காணப்படும்; மேக வெட்டை விஷ முள்ளவர்கள். "இவ்வௌஷதம் பல சமயங்களில் சுக் இலச் சுரப்பிகள் பருத்திருந்த கேசுகளைக் குணம் செய் திருக்கிறது" என்று கெண்ட் கூறுகிறார்.

க்ஷய ரோகம் தோன்றும் என்ற நிலைமை. வறண்ட இருமல் முதலில் ஏற்பட்டுப் பிறகு மார்பிலிருந்து வலிகள் தாவுதல்.

"மார்பில் ஒன்றுமே இல்லாத காலி உணர்ச்சி, மார்பு பலவீனமாய் இருக்கும் உணர்ச்சி; இதனால் இருமும் போது பலவீனத்தைப் போக்க மார்பைத் தன் கைகளால் தாங்கிக் கொள்வார்."

"வலியினாலும் புண்ணுள்ள உணர்ச்சியினாலும் மார்பைப் பிடித்துக் கொள்ள நேருதல்; மார்பு தூள் தூளாகப் போய் விடும் என்ற உணர்ச்சி."

மேக வெட்டை சம்பந்த முள்ள சுவாச கோச வேக்காடு :— இடது சுவாச கோசத்தின் கீழ் அடுக்கு விசேஷமாகத் தாக் கப்பட்டிருக்கும். மார்பில் புண் உள்ள உணர்ச்சியுடன் இருமல்: எழுந்து உட்கார்ந்து இரு கைகளாலும் மார் பைப் பிடித்துக் கொள்ள நேரும்; மார்பில் ஒன்றுமே இல்லாத காலி உணர்ச்சி: காலையில் இளகிய சீழ்ப் போன்ற கோழை வெளியாகுதல்: மேக வெட்டை விஷ முள்ளவர்களுக்கு ஏற்படும் மார்ச் சளியிலும் சுவாச கோச வேக்காட்டிலும் இவ்வௌஷதத்தைக் கொடுக்காமல் குணம் செய்வது மிகவும் கடினம்" என்று கெண்ட் கூறுகிறார்.

இளகிய இருமலுள்ள காச வியாதி, விசேஷமாகச் சிறு வர்களுக்கு; சளியினால் கள கள வென்ற ஓசை. பொது வான மார்ச் சளி காச வியாதியாக மாறுதல்.

முள்ளந் தண்டு வேக்காட்டில் முதுகில் வலிப்புகளும் கழுத்து பின் பக்கமாய் வளைக்கப்படுவதும். மூளையின் அடிப்பாகத்தில் நசுக்குவது போலவும் பிடுங்குவது போலவும் கடுமையான வலிகள் இருக்கலாம். முதுகு வில் போல் வளைக்கப்படுதல்.

அடி வயிற்றில் வலியுடன் கூடிய வாயு உப்பிசம்.

தூங்கி யெழுந்து நிற்க ஆரம்பித்த உடனே வயிற்றுப் போக்கு: குடல்களில் பலமான இரைச்சல், பிறகு அதிக வாயுவினுல் கடபுட என்ற ஒசையுடனும் நாலா பக்கங்களிலும் சிதறிக் கொண்டும் மலம் வேகமாய் வெளிப்படுதல். அடிக் கடி மலம் வெளியாவதில்லை; அனேகமாக வலி இருக் காது.

மற்ற குறிகள்

பாதங்களில் நீர்ச் சுரப்புள்ள வீக்கம். "ஆசன வாய் அருகே கெட்ட சதை வளர்ச்சி, மிருதுவான மாமி சம் போலவும் பச்சை நிறக் கழிவுடனும் இருக்கும்." கைகள், உள்ளங் கைகள், கண்களைச் சுற்றிலும், மண் டைத் தோல், மார்பு, முகம், முதலிய இடங்களில் பாலுண்ணிகள் தோன்றுதல். மேக வெட்டை சம்பந்த முள்ள கெட்ட சதை வளர்ச்சி. பித்தக் கற்கள். பித் தக் கற்கள் இருந்த பல கேசுகளைக் குணம் செய்திருப்ப தாக இவ்வௌஷதத்தை டாக்டர் கெண்ட் புகழ்ந்து பேசு கிறார். கடி, சருமம் மஞ்சள் நிறமாகி, ஆடைகளைக் கழையும் போது அறிக்கும். மலேரியா உள்ள ஊர்களில் ஏற்படும் காச வியாதி. கடுமையாகத் தோன்றும் காச வியாதி: பச்சை நிற முள்ள, சீழ்ப் போன்ற கோழை. தலையில் அடிபட்டதால் தோன்றும் காக்கை வலிப்பு. அடிவயிற்றைத் தாக்கும் க்ஷயம்; நாட்பட்ட வயிற்றுப்

போக்கு; குடல்களில் இடை விடாத வேதனையும் மலம் கழிக்கத் தூண்டுதலும். மானியில் அல்லது அத்ன் கொண்டையில் கடுமையான அறிப்பு. தேய்க்க வேண்டி வருதல். "விரைப் பையிலும் மானிக் கொண்டையை மூடியுள்ள தோலிலும் நீர்ச் சுரப்பு." "அடிவயிற்றில் வாயு அங்கு மிங்கும் தள்ளப்படுதல்."

ஒப்பிடுதல்:— பல்வலி குளிர்ச்சியினால் குறைதல் (காபியா, பல்ஸடில்லா). வலியினால் அடிக்கடி இடம் மாற நேருதல், (ரஸ் டாக்ஸ்). இமைகளில் சிறிய கொப்பளங்கள் (தூஜா). யோசனை செய்யச் சக்தி இல்லாமை (நேட்ரம் கார்ப், கந்தாரிஸ், பிக்ரிக் ஆஸிட்), பாதங்களில் நீர்ச்சுரப்பு (அபிஸ். பிரயோனியா, காலி கார்ப், லேகபோடியம், ஸேபியா). மாத விடாயின் போது மூக்கிலிருந்து இரத்தப் பெருக்கு (அம்ப்ரா, பிரயோனியா, பல்ஸடில்லா, ஸேபியா, ஸல்பர்). மாத விடாய் மிகத் தாமதமாகத் தோன்றுவதும் மிகக் குறைவான போக்குடன் இருப்பதும் (கிராபைடிஸ்; ஸேபியா). நீர்க் கோர்வை பிடிக்கும் போது ஒவ்வொரு தட வையும் தவறாமல் காச நோயில் முடிதல் (ஹிப்பார் ஸல்பர்). பாலுண்ணிகள் உண்டாகும் உடல் வாகு (நைட்ரிக் ஆஸிட், தூஜா). மார்பில் ஒன்றுமே இல்லாத காலி உணர்ச்சி (பிரயோனியா, ஸ்டான்னம்).

நைட்ரிக் ஆஸிட்

(NITRIC ACID)

முன்னுரை:— இவ்வௌஷதம் மூன்று வகையான விஷங்களையும் எதிர்த்துப் போரிட வல்லமை பொருந் தியதாய் இருந்தாலும் குறிப்பாக மேகக் கிரந்தி விஷத் துக்கே தேவைப் படுகிறது. தகுதி என்ற தலைப்பின் கீழ்

விவரிக்கப்பட்டுள்ள நாட்பட்ட கோளாறுகளைச் சிகிச்சை செய்ய இது விலை மதிக்க முடியாததோர் ஔஷதமாகும்.

இதன் விசேஷத் தன்மை வாய்ந்த முக்கியமான குறிகளாவன. 1. ஊசியினால் குத்துவது போன்ற வலிகள். 2. அளவு கடந்து உணர்ச்சிகள் அதிகரித்தல். 3. அழுகும் குணம். 4. கடுமையான வாடை வீசும் மூத்திரம். 5. உடல் வலிமை குன்றியவர்கள்; அல்ப காரணங்களாலும் வயிற்றுப் போக்கு தோன்றுதல்.

மற்ற முக்கியமான குறிகளாவன: 1. அல்ப காரணங்களாலும் இரத்தப் பெருக்கு. 2. பல நாட்களுக்கு கீடித்திருக்கும் சீழ்ப் பிடிப்பு. 3. தோல் உறிதல். 4. ஏராளமான வியர்வை. 5. நம்பிக்கை இழந்து பிரலாபித்தல். 6. அதிக பலவீனம். 7. அதிக மூச்சுத் திணறல். 8. பால், கொழுப்பு உணவுகள் ஆகியவைகளால் உபாதிகள் கூடுதலாகுதல். 9. கற கற என்ற ஒசையுடன் சுவாசித்தல். 10. அடிக்கடி நீர்க் கோர்வை உண்டாகும் உடல் வாகு.

பொதுவான குறிகள்

தகுதி:—மெலிந்த உடலும் உறுதியான தசைகளும் உள்ளவர்கள். கறுத்த உடலுள்ளவர்கள்; பரபரப்பான குண முள்ளவர்கள். கறுப்பான உடலுடன், கறுப்பான தலை மயிர், கறுப்பான கண்கள். உடல் தளர்ச்சியுற்று வயிற்றுப் போக்குடன் உள்ள கிழவர்கள். அதிக நீர்க் கட்டு உள்ள உடலுள்ளவர்கள்.

அடிக்கடி நீர்க் கோர்வை பிடிப்பதும் வயிற்றுப் போர்க்கு ஏற்படுவதுமான குறிகளுடன் நாட்பட்ட வியாதிகள் உள்ளவர்கள். மலச் சிக்கல் உள்ளவர்களுக்கு இவ்வௌஷதம் அனேகமாகத் தேவைப்படுவது இல்லையென்று ஹானிமன் கூறுகிறார். இது தவறு என்றும்

மலச் சிக்கல் நைட்ரிக் ஆஸிட்டின் ஒரு முக்கிய குறி என்றும் மலச் சிக்கல் இருக்கிறது என்பதற்காக நைட்ரிக் ஆஸிட்டைக் கொடுக்காமல் இருக்க வேண்டிய அவசியமில்லை யென்றும் க்ளார்க் கூறுகிறார். என்னுடைய அனுபவத்தில் நைட்ரிக் ஆஸிட் தேவைப்படும் வியாதியஸ்தர்களுக்கு அடிக்கடி வயிற்றுப் போக்கு தோன்றும் குணம் இருப்பது தெரிகிறது. மலச்சிக்கல் குறியை மிகவும் சாதாரணமானதாகவே மதிக்க வேண்டும், க்ஷய ரோகம், மேக வெட்டை, நாட்பட்ட மேகக் கிரந்தி ஆகிய வியாதிகளில் பல சமயகங்ளிலும் காணப்படும் வயிற்றுப் போக்குக்கு நைட்ரிக் ஆஸிட் தேவையாகிறது.

உடல் தளர்ந்து மிகுந்த பலவீனமும் உள்ளவர்களுக்கு அடிக்கடி அல்லது எப்பொழுதும் வயிற்றுப் போக்கு தோன்றினால் அச் சமயங்களில் நைட்ரிக் ஆஸிட் மிகவும் ஏற்றது. மலச் சிக்கலும் வயிற்றுப் போக்கும் மாறி மாறி ஏற்படுவதும் இருக்கலாம்,

மனம்:— தான் பிழைப்போமா என்ற கவலை; சாவைப் பற்றிய பயமும் கூடவே இருக்கும். தடித்த எழுத்தில் குறிப்பிட்டுள்ள இக்குறி என் அபிப்பிராயத்தில் மிக விசேஷமானது. சாவுப் பயத்துடன் தன் ஆரோக்கியத்தைப் பற்றிக் கவலைப்படுதல் என்று மூலப் புத்தகங்களில் எழுதப்பட்டுள்ளது.

அல்ப காரணங்களாலும் திடுக்கிடுதல், பயப்படுதல். அறிவுத் திறமை குறைந்து மன வேலை செய்யத் தகுதி யில்லாமல் போகுதல். அளவு கடந்த ஞாபக மறதி. மேகக் கிரந்தி சம்பந்தமான ஏக்கம். தற்கொலை செய்து கொள்ள விரும்புதல்.

உடல்:— அடிக்கடி வயிற்றுப் போக்கு ஏற்படும் குணம். கடுமையான வாடை வீசும் மூத்திரம். ஊசியினால் குத்தும் வலிகள். உடல் நடுக்கம், கால்களில் கனத்த உணர்ச்சி, கீழே படுத்துக்கொள்ள விரும்புதல் ஆகிய குறிகளுடன் கால்களில் பலவீனம். இக்குறி விசேஷ மாகக் காலையிலும் மாலையிலும் காணப்படும். அளவு கடந்து உடல் மெலிதல். சருமத்தில் செப்புப் போல் நிற முள்ள புள்ளிகள். சுரப்பிகள் வீங்குதல். பாலுண்ணி கள். காதுகளிலும் எலும்பு மூட்டுகளிலும் உடையும் ஓசை. முகம் வெளுத்து, மஞ்சளாய், குழி விழுந்திருக் கும். கண்கள் குழி விழுந்திருக்கும். அதிக வேதனையை அறிவிக்கும் முகக் குறிகள் இருப்பது நைட்ரிக் ஆஸிட் ஏற்றது என்று முடிவு செய்ய உதவும், அனேகமாக வியாதியஸ்தருக்குத் தாகம் இருக்காது. கைகளிலும் கால் களிலும் நீர்ச் சுரப்பு. சருமம் காய்ந்திருத்தல், விரைப் பாய் இருத்தல். உள்ளங்கைகளில் வெடிப்புகள். நடந் தால் அல்லது மாடிப் படி ஏறினால் மூச்சுவிடத் திணறு தல். ஓசையுடன் மூச்சுவிடுதல், விசேஷமாக மனவேலை செய்யும்போது வாயிலிருந்தும் மூக்கிலிருந்து அழுகிய நாற்றம் வீசுதல். பகல் வெளிச்சத்தைப் பார்க்க முடியா மல் கண்களில் கூச்சம். கண்களில் ஒளியே இருக்காது.

உபாதி கூடுதல்:— வியாதியஸ்தருக்கு இடைவிடாத குளிர் உணர்ச்சி இருக்கும். குளிர் உடலுக்கு ஒத்துக் கொள்ளாது, எப்பொழுதும் நீர்க்கோர்வை பிடிக்கும் தன்மை. பருவ நிலைமையிலும் வெப்ப தட்ப நிலைமை யிலும் மாறுதல்கள் தோன்றும் போது உபாதிகள் மிக வும் கடுமையாய் இருத்தல். நைட்ரிக் ஆஸிட் வியாதியஸ் தர்களுக்குச் சில சமயங்களில் உணர்ச்சி மிகவும் அதிக

மாகி ஹோமியோபதி ஔஷதங்களாலும் உபாதி கூடுதலாகும். உயர்ந்த வீரியங்களிலுள்ள ஔஷதங்களைக் கொடுக்கும் போது இக்குறி தவறுமல் காணப்படும்.

என்னுடைய அனுபவத்தில் இரண்டு கேசுகளைப் பார்த்திருக்கிறேன். 200 வீரியத்திலுள்ள எந்த ஹோமியோபதி ஔஷதத்தைக் கொடுத்தாலும் அவ் வௌஷதத்தின் முக்கியமான குறிகளில் சில வியாதியஸ்தருக்குத் தோன்றும். ஒரே ஒரு வேளை மட்டும் ஔஷதம் சாப்பிட்ட போதிலும் ஔஷதப் பரீக்ஷைக்கு உட்பட்டவர்களைப் போல அதன் செயற்கை வியாதிக் குறிகள் உண்டாயின.

உடல் உழைப்பு, மன உழைப்பு, நடத்தல், நின்று கொண்டிருத்தல் ஆகிய காரணங்களால் உபாதிகள் அதிகரிக்கும். மாலை, இரவு, நள்ளிரவு, தூங்கி எழுந்தவுடன் ஆகிய நேரங்களிலும் உபாதிகள் அதிகமாகும்.

பால் சிரணமாவதில்லை, அல்லது மிகவும் சிரமப்பட்டுச் சிரணமாகும். மலம் வெளியான பிறகு கனப்பு. கல்லீரலில் குத்து வலிகள், நடந்தால் அதிகமாகும். நாட்பட்ட இருமல் பனிக் காலங்களில் கூடுதலாகும். குளிர் காலம் தோன்றும் போது ஒவ்வொரு தடவையும் தவறுமல் நீர்க்கோர்வை பிடித்தல். இரவில் எலும்பு வலிகள் அதிகமாகும்; வண்டியில் சவாரி செய்தால் வலி குறைவாகும்.

உபாதி குறைதல்:— வண்டியில் சவாரி செய்தால் சில குறிகள் குறைவாகின்றன.

விசேஷக் குறிகளின் விளக்கம்

வண்டியில் சவாரி செய்தல்; அதன் விசித்திரமான விளைவுகள்:— காது கேளாமை, வண்டியில் சவாரி செய்

யும் போதும் ரயிலில் பிரயாணம் செய்யும் போதும் காது கேட்கும். காக்கை வலிப்பில் வண்டியில் சவாரி செய்தால் அல்லது ரயிலில் பிரயாணம் செய்தால் வலிப்புகள் குறையும். எல்லா மனக் கோளாறுகளும் வண்டியில் சவாரி செய்யும் போது குறைவாகும். வண்டியில் சவாரி செய்தால் உபாதிகள் குறையும் என்ற இக்குறியில் ஒரு முக்கிய விஷயம் இருப்பதைக் கவனிக்க வேண்டும். மேடு பள்ளமோ, குண்டு குழிகளோ இல்லாமல் சம தளமாய் உள்ள பாதைகளில் ஆட்டமோ, குலுக்கலோ இல்லாமல் வண்டி போகும்போது தான் உபாதிகள் மட்டுப்படும் என்பதே அது.

உணர்ச்சிகள் அதிகரித்தல்:— உடம்பில் அளவு மீறிய வேதனை உணர்ச்சி. முன் கோபமும் அகம்பாவமும் மிகுதியாய் இருக்கும். மன உணர்ச்சிகள் மிகவும் அதிகமாகுதல். அதனால் யோசனை செய்ய ஆரம்பித்தால் எண்ணங்கள் மறந்து போகும். அல்ப காரணங்களாலும் திடுக்கிடுதல். சிறிதளவு அசைவினாலும் மயக்கம் தோன்றும்.

தொடுதல், அதிர்ச்சி அல்லது அசைவு ஆகிய காரணங்களால் உணர்ச்சி மிகவும் கூடுதலாகும். மேடு பள்ளங்கள் இல்லாத சாலைகளில் வண்டிகள் ஓடும்போது உண்டாகும் ஓசையை அவரால் பொறுக்க முடியாது. சிறிதளவு அதிர்ச்சி, தெருவில் வண்டிகள் ஓடும் ஓசை, தரையில் பிறர் நடக்கும்போது ஏற்படும் அதிர்ச்சி ஆகியவைகளால் தலைவலி அதிகமாகும். குல்லாய், தலைப்பாகை, தொப்பி ஆகியவை தலையை அமுக்கியிருந்ததால் தோன்றும் தலைவலி. மண்டைத்தோலில் உணர்ச்சி அதிகரித்துச் சீப்பால் வாரும்போது வலி உண்டாகும்.

மிருதுவான உணவை மெல்லும்போது நாக்கில் வலி தோன்றும். புண்களைத்தொட்டால் துரும்பு கொண்டு குத்துவதுபோல் வலிகள் ஏற்படும். புண்களையும் மற்ற சருமக்கோளாறுகள் உள்ள இடங்களையும் தொட்டால் இரத்தப்பெருக்கு தோன்றும். புண்களைத் தொட்டால் எரிச்சலும் ஏற்படும். அல்பமான வலிகளும் பல சமயங்களில் கடுமையாகத் தோன்றும். வண்டியில் பிரயாணம் செய்யும்போது வண்டி திடீரென்று நின்று விட்டால் தலைபற்றிய குறிகள் விஷேதமாக அதிகரிக்கும். அல்ப காரணங்களாலும் நீர்க்கோர்வை பிடிக்கும். அல்ப காரணங்களாலும் புரை ஏறும். பாலுண்ணிகளைக் கழுவிச் சுத்தம் செய்யும்போது இரத்தப்பெருக் கெடுக்கும்.

அழுகும் குணம்: கார குணம்: விஷத்தன்மை:— நைட்ரிக் ஆஸிட்டின் கழிவுகள் பட்ட இடங்களில் தோலை உரிக்கும் குணமுள்ளவைகளாய் இருக்கின்றன. தண்ணீர்போல் நீர்த்து, மஞ்சள் அல்லது பழுப்பு நிறமும் நாற்றமும் உள்ளவைகளாய் இருக்கின்றன. நாற்றமில்லாமல் இருப்பது மிக அரிது. வாயிலிருந்து அழுகிய பிணநாற்றம் வீசும். உமிழ் நீர் கெட்ட நாற்றம் அடிக்கும். மூக்கிலிருந்து வெளிப்படும் கழிவுகள், பாதங்களில் வியர்வை, இரவில் வியர்வை, வெள்ளை ஒழுக்கு, மலம், மூத்திரம் ஆகிய யாவும் நாற்றமாய் இருக்கும். மூத்திரம் தாங்கமுடியாத நாற்றத்துடனும் கடுமையான வாடையுடனும் அல்லது குதிரை மூத்திரம்போல் நெடியுடனும் வெளியாகும். வெள்ளை ஒழுக்கு சளிப்பொருள்களுடன் நாற்றமாகவும் பட்ட இடங்களைப் புண்ணாக்குவதாகவும் இருக்கும். யோனியிலிருந்து சிவப்பும்

பழுப்பும் கலந்த நிறமுள்ள நாற்றமான கழிவு வெளியாகுதல். சரிவரச் சீரணமாகாத உணவுப் பொருள்களும் நாற்றமும் உள்ள மலம் வெளிப்படுதல்.

விஷத்தன்மை பற்றிப் பேசுவோம். அழுகும் குணமுள்ள புண்கள். சுற்றிலும் பரவும் புண்கள். எலும்புகள் அழுகுதல், மிக வேகமாகப் பரவுவதும் நாற்றமும் கொள்வதுமான விஷத்தன்மை புண்களுக்கு இருக்கும். பல நாட்களுக்கு நீடிக்கும் பிடிவாத குணமுள்ள சீழ்ப் பிடித்தல்.

புண்ணுகுதல் : வெடிப்புகள் :—அடிக்கடி புண் உண்டாகும் தன்மை. புண்களும் வெடிப்புகளும் சளிச் சவ்வுகள் உள்ள உடல் துவாரங்களில், சளிச்சவ்வும் சருமமும் இணைந்துள்ள இடங்களில் தான் பெரும் பாலும் காணப்படுகின்றன. உதாரணமாக வாய், மூக்கு, ஆசனவாய், மலட்டை, யோனி ஆகியவை. வாயின் மூலைகள் வெடித்துப் புண்ணுகி இருக்கும். ஆசனவாயில் நீர்க்கசியும் வெடிப்புகள். நாக்கில் வெடிப்பு.

நைட்ரிக் ஆஸிட் தேவைப்படும் புண் கிழ் உள்ள குணங்களைக் கொண்டதாய் இருக்கும். நாற்றம் வீசும்; விளிம்புகள் ஒழுங்காய் இல்லாமல் கோணல் மாணலாய் இருக்கும்; புண்ணின் உட்புறத்தில் பச்சை மாமிசம் இருப்பதுபோல் தோன்றும்; மெர்கூரியஸ் சொலுபுலிஸில் இருப்பதைவிட அதிகமான குழியுடன் இருக்கும்; ஆயினும் ஆழமாகப் போவதைவிட அதன் சுற்றளவே அதிகமாகும். ஏராளமான மூலைகள் காணப்படும்; அம் மூலைகளிலிருந்து மெதுவாய்த் தொட்டாலும் கழுவிச் சுத்தம் செய்யும் போதும் இரத்தம் பெருக்

கெடுக்கும். எரிச்சல், குறிப்பாகப் புண்ணைத் தொடும் போது, தோன்றும். பாதரஸத்தைக் கண்மூடித்தன மாய் உபயோகித்ததினாலும், மேகக் கிரந்தியினாலும் ஏற்படும் புண்கள். ஊசி குத்தும் வலிகள் என்ற தலைப்பையும் பார்க்கவும்.

இரத்தப் பெருக்கு :—சருமக் கோளாறுகள் உள்ள இடங்களையும் புண்களையும் தொட்டால் இரத்தப் பெருக்கெடுக்கும். சுவாசகோச க்ஷய ரோகத்தில் அடிக்கடி இரத்தப் பெருக்கெடுத்தல்; இரத்தம் நல்ல சிவப்பாகவும் ஏராளமாகவும் இருக்கும்; மார்பைத் தொட்டால் வலி; கோழை நாற்றமாகவும், இரத்தம் கலந்தும், அழுக்குப் படிந்த பச்சை நிறச் சீழுடனும் இருக்கும், மேகக் கிரந்தி விஷம் இருப்பதுபோல் தோன்றுதல். டைபாய்டு, டைபஸ் முதலிய சுரங்களில் குடல்களிலிருந்து ஏராளமான, நல்ல சிவந்த நிறமுள்ள இரத்தம் பெருக்கெடுத்தல். குடல்களிலிருந்து ஏற்படும் இரத்தப் பெருக்குக்கு இது மிகச் சிறந்ததோர் ஔஷதமென்று லிலியந்தால் கூறுகிறார். இரத்தம் நல்ல சிவப்பு நிறமாகவும் ஏராளமாகவும் இருக்க வேண்டுமென்ற குறியை நான் இதனுடன் சேர்ப்பேன். இது தவிர வியாதியஸ்தருக்கு உடல் சோர்வும் இருக்கவேண்டும். செய்வதற்கு இனி ஒன்றுமில்லையென்று அல்லோபதியர்களால் கைவிடப் பட்டு சாவை எதிர்பார்த்துக் கொண்டிருந்த, டைபாய்டு சுரத்தின் கடைசி நிலைமையில் இருந்த ஒரு வியாதியஸ்தரை நைட்ரிக் ஆஸிட் 200 ஒரே வேளை கொடுத்துக் காப்பாற்றியிருக்கிறேன்.

கருப்பையின் வாயில் புண் இருக்கும் காரணமாகக் கருப்பையிலிருந்து நீடித்துக் வெளிப்படும் இரத்தப்

பெருக்கு. இரத்தம் கொட்டும் குணமுள்ள பாலுண்ணிகள், ஈறுகள் தளர்ந்து, புண்ணுகி இரத்தப் பெருக்கெடுக்கும். மலம் கழித்த பிறகு ஆசன வாய் வழியாய் ஏராளமான இரத்தம் பெருகுதல். மானியின் கொண்டையில் மேக வெட்டை சம்பந்தமுள்ள கெட்ட சதை வளர்ச்சியும் அச்சதையைத் தொட்டால் இரத்தம் பெருக்கெடுப்பதும்.

ஊசி குத்தும் வலிகள் :—வியாதியுள்ள இடங்களில் ஊசியினால் குத்துவது போலவும் துரும்புகள் இருக்கும் உணர்ச்சியுடனும் வலிகள். குழிப்புண்கள், தொண்டை, ஆசனவாய், கால் விரல் நகங்கள் உட்புறமாகச் சதையைக் குத்திக்கொண்டு வளருதல், மூத்திரக் குழாய் (மேகவெட்டையில்) ஆகிய இடங்களில் இவ்வித வலி உண்டாகும். சில சமயங்களில் இவ்வலிகள் திடீர் என்று தோன்றுவதும் அவ்வாறே மறைவதுமாக இருக்கும்.

கட்டிய உணர்ச்சி :—வியாதியுள்ள இடங்களிலும் எலும்புகளிலும் அவைகளைச் சுற்றிக்கட்டியிருப்பது போன்ற உணர்ச்சி தோன்றும்.

சுரப்பிகள், விசேஷமாகத் தாக்கப்படுதல் :-சுரப்பிகளில் வேக்காடு, வீக்கம், சீழ்ப்பிடித்தல், மேகக்கிரந்தி விஷமுள்ள குடும்பங்களில் பிறந்தவர்களுக்கு ஏற்படும் சுரப்பிகள் சம்பந்தமான கோளாறுகள். கல்லீரல் மிகவும் பருத்திருக்கும்; மஞ்சட் காமாலை; களிமண் போல் நிறமுள்ள மலம்.

எலும்புகள், விசேஷமாகத் தாக்கப்படுதல் :—எலும்புகளில் புண்கள். காதுப்பக்கமுள்ள எலும்புகள் சொத்தையாகுதல். எலும்புகளில் வலி, இரவில் அதிக

மாகும். மேகக்கிரந்தியினால் எலும்புகளில் வலி. எலும்புகளில் வேக்காடும் தொட்டால் வலி தோன்று வதும். எலும்புகள் வலிமை குறைந்து வளைய ஆரம் பித்தல்.

உடையும் ஓசை:—மெல்லும்போது காதுகளில் உடையும் ஓசை; நடக்கும்போது எலும்பு மூட்டுகளில் உடையும் ஓசைகள்.

வியர்வை;—மிக எளிதிலே வியர்வை தோன்றுதல்; அதன் பிறகு நீர்க்கோர்வை; நாற்றமுள்ள வியர்வை; அக்குள்களிலும் பாதங்களிலும் நாற்ற முள்ள வியர்வை.

தாக்கப்படும் இடங்கள்:-இவ்வௌஷதத்துக்கு உடல் துவாரங்களின் ஓரங்களுடன் அதிக உறவு இருக்கிறது.—தொண்டை, வாய் (விசேஷமாக அதன் மூலைகள்), ஆசனவாய், எலும்புகள், ஆணின் பிறப்பு உறுப்புகள், வலது கண், கல்லீரல் ஆகியவை தாக்கப்படும். பொது வாக உடலிலுள்ள எல்லாத் துவாரங்களையும் நைட்ரிக் ஆஸிட் தாக்குகிறது.

மற்ற குறிகள்

கண்களின் உள் மூலைகளில் கண்ணீர்க்குழாய்களைப் பற்றிய பவுத்திரச் சிரங்கு.—வாயில் உமிழ் நீர் அதிகம் உற்பத்தியாகுதல்.—பச்சைச் சளி மலத்துடன் வெளிப் படும். மூத்திரம் வெளியாகும் போதே சில்லென்று இருப் பது போல் தோன்றும்—வெள்ளை ஒழுக்கில் கழிவு பழுப் பாகவும் மாமிசம் போலவும் தண்ணீர் போல் நீர்த்தும் அல்லது கயிறு போல் இழுபடும் குண முள்ளதாகவும் இருக்கும். இரவில் ஏராளமாய் நாற்ற முள்ள வியர்வை தோன்றும். பல நாட்களாகத் தூங்காமல் இருந்ததி

னல் அல்லது பல நாட்களாக இருந்து வரும் மனக் கவலையினல் தோன்றும் கோளாறுகள். நெருங்கிய நண்பனை இழந்து விட்டதால் ஏற்படும் மனத் துயரம். மலம் கழித்த பிறகு (மூலம் அல்லது ஆசன வெடிப்பு களில்) மலப் பையோ ஆசன வாயோ கிழிந்து விட்டது போல் வலிகள்; கடுமையான, வெட்டுவது போன்ற வலிகள்; பல மணி நேரம் நீடித்திருக்கும். ஸ்தனங் கள் ஒட்டிப் போகுதல். பாலுண்ணிகளிலிருந்து நீர்க் கசிவு. மானிக் கொண்டை நீர்ச் சுரப்புடன் இருத்தல், யோனியிலிருந்து இரத்தம் கலந்த நீர் வெளிப்படுதல்: பனி வெடிப்புகள் கிழிந்தும் வலியுடனும் இருக்கும். சருமம் விரைப்பாய் இருக்கும். காலரா வியாதியைப் பற்றி மிகுதியான பயம். டிஜிடாலிஸ் அடிக்கடி கொடுக் கப்பட்டதால் தோன்றும் கெடுதலான விளைவுகள்.

உறவு:—முன்னும் பிறகும் வேலை செய்யக் கூடியது. ஆர்ஸனிகம் ஆல்பம். லாச்சஸிஸை நைட்ரிக் ஆஸிட் முறிக்கும். கல், கார்ப், ஹிப்பார் ஸல்பர், மெர், சொலு. நேட்ரம் கார்ப், பல்ஸடில்லா, தூஜா ஆகியவைகளுக்குப் பிறகு இவ்வௌஷதம் நன்றாக வேலை செய்யும், சுவாச கோச கூயத்தில் கல். கார்ப், அல்லது! காலி கார்ப், கொடுத்த பிறகு பல சமயங்களிலும் இது தேவைப்படும். "காலி கார்புக்குப் பிறகு மிக நல்ல முறையில் வேலை செய்கிறது" என்று அல்லென் குறிப்பிட்டிருக்கிறார்.

ஒப்பிடுதல்;—கண்ணீர்க் குழாய்களின் பவுத்திரச் சிரங்குகளில் (ப்ளுவாரிக் ஆஸிட், பல்ஸடில்லா, ஸைலீ ஷியா, பெட்ரோலியம்.) முகம் மஞ்சள் நிறமாய் வியாதி யுள்ள தோற்றம் அளித்தல் (ஸேபியா). முள்ளந்தண்டில் அடிபடுதல் (ஆர்னிகா, ஹைபரிகும், ரஸ் டாக்ஸ்). சாதாரண வலிகளும் கடுமையாகத் தாக்குதல் (அகோனைட், சாமோ

மில்லா, ஹிப்பார் ஸல்பர்). கயிறுபோல் நீளும் கழிவுள்ள வெள்ளை ஒழுக்கு (காலி பைக்), துரும்பு இருப்பதுபோல் வலிகள் (அர்ஜ்ண்டம் நைட்ரிகம், ஹிப்பார் ஸல்பர்). கரு விழியில் புண்கள் ஏற்பட்டுத் துளை விழும் போல் தோன்றுதல் (ஸைலீஷியா, கல். கார்ப்). பச்சை நிறமுள்ள வெள்ளை ஒழுக்கு (தூஜா).

குறிப்புகள் :-"மண், சாக்கட்டி, சுண்ணாம்பு ஆகியவை களைத்தின்ன ஆவல்" என்னும் குறி நைட்ரிக் ஆஸிடில் இருக்கிறது. இதை முக்கியமான குறியென்று சில ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். இத்தகைய குறி இருந்த ஒரு வியாதியஸ்தருக்கு முதலில் அலுமினா கொடுத்ததில் குணம் தெரியவில்லை. அதனால் நைட்ரிக் ஆஸிடையும் கொடுத்தேன் பலன் எதுவும் தெரியவில்லை. இக்குறி பற்றி ஹானிமன் எழுதிய மெட்டீரியா மெடிகாவில் ஒரு வரி கூட எழுதப் படவில்லை, ஆகவே இதை ஒதுக்கித்தள்ளி விடலாம் என்று நான் நினைக்கிறேன்.

நக்ஸ் வாமிகா

(NUX VOMICA)

முன்னுரை :—நாகரிகம் மிகுந்த இக் காலத்தில் சாதாரண மனிதன் ஒருவன் நடத்தும் வாழ்கையின் நிலை மைகளும் நக்ஸ் வாமிகா விலுள்ள முக்கியம் என்று மதிக் கப்படும் குறிகளும் மிகவும் ஒற்றுமையாய் இருக்கின்றன. நமது மெட்டீரியா மெடிகாவில் பல வியாதிகளுக்குத் தேவையாகும் விலை மதிப்புக்கூற முடியாத சிறந்த ஔஷ தங்களில் இதுவும் ஒன்று.

1. கூர்மையாகக் கவனம் செலுத்த வேண்டிய மன வேலை. 2. நாற்காலியிலேயே நாள் முழுவதும் உட்காந் திருக்க நேருதல். 3. உயர்தர வாழ்க்கை (ஊக்கம் தரும்

பொருள்கள், காப்பி, மிளகு, மிளகாய், கொத்தமல்லி, கருவேப்பிலை, இஞ்சி, பெருஞ்சீரகம், பெருங்காயம் போன்ற உணவுக்குச் சுவைதரும் பொருள்கள், சத்து அதிக முள்ள உணவு, சாராயம் முதலியவைகளில் அதிகமாய் ஈடுபடுதல். 4. இடை விடாமலும் ஊக்கத்துடனும் வேலை செய்வதால் கோபகுணம் உண்டாவதுடன் இரவில் மதுபானங்களிலும் பெண்களிடமும் மித மிஞ்சி ஈடுபட விரும்புதல். 5. இக் கெட்ட பழக்கங்களால் இரவில் அதிக நேரம் கண் விழித்திருத்தல். 6. மது பானங்களால் சீரணக்கோளாறுகளும் தோன்றுதல், 7. இக்காரணங்களால் டானிக்குகள், பித்தத்தைத் தணிக்கும் மாத்திரைகள், மலமிளக்கி மாத்திரைகள், பல விதமான ஔஷதங்கள் முதலிய பொருள்களை அடிக்கடி உபயோகித்தல், ஆகிய இக்குறிகள் ஒன்றுக்கொன்று ஆதாரமாய் (நாகரீக வாழ்க்கையின் விளை பொருள்களாய்) உற்பத்தியாகின்றன.

அதிர்ஷ்டவசமாக மேலே சொல்லப்பட்ட காரணங்களால் உற்பத்தியாகும் குறிகள் யாவும் நக்ஸ் வாமிகாவிலும் காணப்படுகின்றன. நாகரிக வாழ்க்கையில் அதிகம் ஈடுபட்டு உடலைக் கெடுத்துக்கொள்வோர் பெரும்பாலும் ஆண்களே யாதலால் நக்ஸ் வாமிகா ஆண்களின் ஔஷதம் என்றும் வழங்கப்படுகிறது.

பொதுவான குறிகள்

தகுதி:—மேலே குறிப்பிட்டுள்ள குணங்கள் உள்ளவர்களுக்கு விசேஷமாய் ஏற்றது. 1. திட்டப்படியும் கவனமாகவும் காரியம் செய்வார்கள், ஆனால் அல்ப காரணங்களாலும் கோபம் வந்து விடும் குணம். எதற் கெடுத்தாலும் சண்டை போடுதல், பழி வாங்க வேண்டு மென்ற எண்ணம், பிறக்குக் கெடுதி செய்யும் எண்ணம், பொறுமை

ஆகிய குணங்கள் உள்ளவர்கள். 3. ஓயின், அபினி, கஞ்சா, போன்ற போதை யூட்டும் பொருள்கள், காப்பி, புகை இலை, அதிக உப்பும், உறைப்பும் சேர்த்துத் தயாரித்த உணவுப் பொருள்கள், இஞ்சி, மிளகாய், மிளகு போன்ற உணவுக்குச் சுவை கொடுக்கும் பொருள்கள் ஆகியவைகளை அளவு மீறி உட் கொள்ளும் குணம் உள்ளவர்கள். 4. ஏக்கமும் வருத்தமும் உள்ளவர்கள், சாப்பிட்ட பிறகு இவை அதிகரிக்கும். 5. உணர்ச்சிகள் அதிகரித்து ஓசை, சங்கீதம், பேச்சு, அதிக வாசனை ஆகியவைகளைத் தாங்க முடியாமல் போகுதல். 6. மெலிந்த உடலும் கறுத்த தலை மயிரும் உள்ளவர்கள். 7. நாற்காலியில் உட்கார்ந்த வண்ணமே வாழ்க்கை நடத்துவோர். 8. அளவு மீறி மனதினால் வேலை செய்தல். 9. சிரணக் கோளாறுகளாலும் மலச் சிக்கலாலும் துன்பம் அடைவோர். 10. அளவு மீறிய குடிப் பழக்கமும் சிற்றின்ப ஈடுபாடும்; உடல் மெலிந்திருக்கும். கோப குணம், உடம்பில் பரபரப்பும் பயப்படும் குணமும். 11. அல்லோபதி ஔஷதங்கள், ஹோமியோபதி யல்லாத மற்ற வகை ஔஷதங்கள், கூட்டு ஔஷதங்கள், ஆகியவைகளை அளவு மிஞ்சிச் சாப்பிட்டவர்கள்.

மேலே கடைசியாகக் குறிக்கப்பட்டுள்ள குறி விஷயமாக அளவு மீறி ஔஷதம் சாப்பிட்ட எல்லோருக்குமே இவ்வௌஷதத்தைக் கொடுப்பது கூடாது என்னும் விஷயத்தை அறிவிக்க "குறிகள் ஒத்திருந்தால் தான்" என்ற வார்த்தைகளைத் தடித்த எழுத்தில் அவ்லென் சேர்த்திருக்கிறார். இதை முழுவதும் உண்மை என்று கூற முடியாது. பல கேசுகளில் இரண்டு அல்லது

மூன்று நாட்களுக்கு நக்ஸ் வாமிகாவை முறிவு ஔஷத மாகச் சில வேளைகளாவது கொடுத்தால் தான் தெளிவான குறிகள் தோன்றுகின்றன "இவ்விதக் குணங்கள் உள்ள வியாதியஸ்தர்களுக்குச் சில நாட்கள் நக்ஸ் வாமிகாவைக் கொடுப்பது நலம்; அதனால் அவர்களுடைய சில குறிகள் மறைந்து ஒழுங்கான குறிகள் மட்டும் தங்கி நிற்கும்" என்று கெண்ட் சொல்கிறார்.

மனம்:—தற் கொலை செய்து கொள்ள எண்ணம், ஆயினும் சாவதற்கு அஞ்சுவார். கோழைத்தனம், பிறரிடம் நம்பிக்கை இல்லாமை, சந்தேகிக்கும் குணம், எந்த விஷயத்திலும் சஞ்சலம், உறுதி இல்லாமை. நேரம் மிக மெதுவாகச் செல்வது போல் தோன்றுதல். சமயத்துக்கு ஏற்ற வார்த்தைகளை நினைவுக் கொண்டு வரச் சிரமப்படுதல். தகுதி, உணர்ச்சிகள் அதிகரித்தல் ஆகிய தலைப்புகளின் கீழேயும் பார்க்கவும்.

உடல்:—வெளுத்து, மஞ்சளாய் உள்ள உடல். ஒரு கன்னம் சிவந்து சூடாகவும் மறு கன்னம் வெளுத்தும் இருத்தல். வயிற்றுப் பாகத்தில் அமுக்கினால் வலியும் வேதனையும் தோன்றும். இடுப்பைச் சுற்றி ஆடைகளை இறுகலாக அணிய முடியாது. சிறிதளவு உணவே உட் கொண்டாலும் வயிறு மிகவும் நிறைந்து விட்ட உணர்ச்சி. உணவில் வெறுப்புடன் பசி. சாப்பிட ஆரம்பித்த உடனேயே வயிறு நிறைந்து விட்டது போல் திருப்தி ஏற்படும் குண முள்ள பசி. கசப்பான அல்லது புளிப்பான ஏப்பங்கள். கசப்பான தண்ணீர் எதிர் கழிக்கப்படுதல். பகலிலும் உணவு உட் கொண்ட பிறகும் தூக்கக் கலக்கம். விடியற் காலை 2 அல்லது 3 மணிக்கு விழித்துக் கொள்வார். பிறகு ஒன்று அல்லது

இரண்டு மணி நேரம் தூக்க மில்லாமல் படுக்கையில் புறண்ட வண்ணம் இருப்பார். அதன் பிறகு ஆழ்ந்து தூங்க ஆரம் பித்துப் பொழுது விடிந்து வெகு நேரமான பின் விழித்துக் கொள்வார். உடல் அசதியும் களைப்பும் நீங்காமல் அப்படியே இருக்கும். அயர்ந்த தூக்கம் வருவதில்லை. சற்றுக் கண் அயர்வதும் உடனே விழித்துக் கொள்வதுமாக இருப்பார். இடை விடாத குமட்டல். மூச்சுக் காற்று புளித்த நாற்றம் வீசும். வாயில் உமிழ் நீர் அதிகமாய்ச் சுரக்கும். இரவில் அதிக உமிழ் நீர் சுரத்தல். சாப் பிட்ட பிறகு இரண்டு அல்லது 3 மணி நேரங்களுக்கு மூளையை உபயோகித்து வேலை செய்ய முடியாது. காலை யில் கண் விழித்த வுடன் உடலில் அசதியும் களைப்பும். மலம் ஒழுங்காக வெளியாகாமை. குடலில் சிறிதளவு மலம் தங்கிவிட்ட உணர்ச்சி. அடிக்கடி மயக்கமாய் வருதல். கண்கள் இரத்தம் போல் சிவந்திருக்கும். அல்ப விஷயங்களாலும் புணர்ச்சியில் ஆவல் தோன் றும். புணர்ச்சியில் அளவு மீறி ஈடுபட்டு உடல் சோர்வு உண்டாகுதல். டானிக்குகள், கசப்பான அல்லது கார வாசனை யுள்ள பொருள்கள் ஆகியவைகளில் விருப்பம். சுரம் உள்ள நிலைமைகளில் மஞ்சட் காமாலை ஏற்படும் குணம்.

உபாதி கூடுதல்:—குளிர் காற்று, திறந்த இடங்கள் ஆகியவை வியாதியஸ்தருக்கு ஒத்துக் கொள்ளாது. சிறிதளவு குளிர் காற்று வீசினாலும் உபாதிகள் அதிக மாகும். ஆடையைக் களையவும், போர்வைகளை நீக்கவும் வெறுப்பு. கோடைக் கால வெப்பத்தைக் தாங்க முடி யாது. காலையில், கண் விழித்த வுடன் உபாதிகள் அதிகமாகுதல்.

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):— காப்பி, ஓயின், குளிர்ந்த உணவு, குளிர்ந்த தண்ணீர் ஆகியவைகளால் உபாதிகள் அதிகரித்தல். இந்திரியம் தானுகவே கழுவிய பிறகு தோன்றும் கோளாறுகள்- பௌர்ணமி நாட்களில் வழக்கமாக மாதவிடாய் வெளிப்படுதல். உடல், மனம், இருவகையான உழைப்பினாலும் உபாதிகள் கூடுதலாகுதல். வண்டியில் பிரயாணம் செய்யும் போது உபாதிகள் அதிகரிக்கும்.

உபாதி குறைதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):— மலம் கழித்த பிறகு உபாதிகள் மிக அதிகமான அளவுக்குக் குறைந்திருத்தல். திறந்த இடங்களில் இருக்கும் போது காச நோய் சௌகரியமாய் இருக்கும். குளிர்ந்த தண்ணீரில் குளித்தால் அல்லது குளிர்ந்த தண்ணீரினால் ஆசன வாயைக் கழுவினால் உபாதிகள் மட்டுப்படும் குணமுள்ள மூலம்.

விசேஷக் குறிகளின் விளக்கம்

விட்டு விட்டுத் தோன்றும் குணம்:—நல்ல நினைவுடன் வலிப்புகள்; கோப தாபங்களாவ் ஏற்படும். எல்லாத் தசைகளிலும் தனுர் வாயு வியாதியில் காணப்படுவதைப் போன்ற விரைப்புடன் வலிப்புகள்; சில நிமிஷங்களுக்கு வலிப்புகள் மறையும். அச்சமயத்தில் தசைகளின் விரைப்பும் குறையும். வியாதியஸ்தரை இறுகப் பிடித்துக் கொண்டால் உடனே வலிப்புகள் நின்று விடும். "வலிப்பு ஏற்பட்ட போது உடலைப் பலவந்தமாக நீட்டி விட்டதால் வலிப்பு கணிசமான அளவுக்குக் குறைந்தது." "வலிப்பு உள்ள போது முகம் சிவந்து கண்கள் மூடியப்படி இருத்தல்." வலிப்புகள் அனேகமாகக் கால்களிலேயே ஆரம்பிக்கும்; உடல் கூடு அதிகமாவது இல்லை. உடலின் பல இடங்களில் சுருங்குவது போல் வலிப்புகள்.

உணர்ச்சிகள் அதிகரித்தல் :—சிறிதளவு வலியையும் தாங்க முடியாது; லேசான வாசனையும் பிடிக்காது; சிறிய ஓசையும் அசைவையும் பொறுக்க முடியாது. அவ்வளவு தூரம் உணர்ச்சிகள் அதிகரிக்கும். எவ்வளவு மெதுவாகத் உடலைத் தொட்டாலும் வலிப்புகள் மீண்டும் தோன்றிவிடும். எதற் கெடுத்தாலும் பயப்படும்குணம். சங்கீதத்திலுல் உணர்ச்சிகள் மிக அதிகமாகிக் கண்ணீர் விடுவார். குறிகளுக்குத் தக்க ஹோமியோபதி ஔஷத மும் அவருக்கு ஒத்துக் கொள்ளாது. குற்றம் இல்லாத வார்த்தைகளும் அவருக்கு கோபத்தை ஊட்டும். சிறிய கோளாறு இருந்தாலும் அது பெரியதாகத் தோன்றும். வலிகள் மிகவும் அதிகமாய் இருக்கின்றன என்ற உணர்ச்சியினுல் வலியைப் பொறுத்துக் கொண்டு கஷ் டப் படுவதை விடச் சாவதே மேல் என்று நினைப்பார். அல்பமான வேலை செய்தாலும் மயக்கம் வருதல். வாசனை மூக்கில் பட்டாலும் மயக்கம் தோன்றும். பிர சவ சமயத்தில் வலி தோன்றும் போது ஒவ்வொரு தட வையும் மயக்கமாய் விடுதல்.

கடுமைக் குணம் :—வலிகள் கடுமையாய்த் தோன்றும். வலிப்புகள் மிகக் கடுமையாய் இருப்பதால் வியாதியினுல் தாக்கப்பட்ட தசைகள் மிகவும் கடினமாக ஆகும்; "வியாதியஸ்தர் படும் கஷ்டமும் உடல் பல விதமாய் வளைக்கப்படுவதும் பார்ப்பதற்குக் கோரமாய் இருக் கும்." "தொண்டையை மிக மெதுவாகத் தொட்டா லும் தொண்டையில் அடைப்பு ஏற்பட்டு மூச்சு முட்டு தல்." பிரசவ வலிகள் கடுமையாகவும் விட்டு விட்டும் தோன்றுதல்; மயக்கத்தை உண்டாக்கும்; மலம் அல்லது மூத்திரம் கழிக்கத் தூண்டுதலை உண்டாக்கும். தற் கொலை

செய்து கொள்ள அல்லது தன் கணவனையோ மற்றவர்களையோ கொலை செய்து விடக் கடுமையான தூண்டுதல்கள்.

வேலை செய்யாமை: பயன் அற்ற தூண்டுதல்:— மலச்சிக்கலில் அடிக்கடி மலம் கழிக்கத் தூண்டுதல் இருக்கும். ஆனால் மலம் வெளியாகாது அல்லது ஒவ்வொரு தடவையும் சிறிதளவு மட்டும் வெளிப்படும்; குடலினுள்ளே மலம் தங்கி இருக்கும் உணர்ச்சி, பயனற்ற பிரசவ வலிகள். வலிகள் மலப்பைக்குப் பரவி அடிக்கடி மல மூத்திரம் கழிக்கத் தூண்டுதலை உண்டாக்கும். வலியுடன் அடிக்கடி மூத்திரம் கழிக்கப் பயனற்ற தூண்டுதல்.

பாரிச வாத நிலைமைகள்:—மூத்திரப்பையில் மூத்திரம் நிரம்பி இருக்கும்; ஆனால் அதைக் கழிக்க முடியாது; அல்லது வலியுடன் சொட்டுச் சொட்டாக வெளியாகலாம். "கிழவர்களுக்குச் சுக்கிலச் சுரப்பிகள் பருத்து மூத்திரம் ஒழுகிக்கொண்டே இருத்தல்". முகம், ஒருகை, தனிப்பட்ட தசைகள் ஆகியவைகளில் பாரிச வாதம். நடக்கும்போது கால்களைத் தேய்த்து நடப்பார்; மேலே தூக்கி வைத்து நடக்க முடியாது. "வியாதிக்குள்ளான பாகங்களை ஓரளவுக்கு உபயோகிக்க முடியும்". அரை குறையான பாரிச வாதம்; ஆனால் அப்பாகங்களை உபயோகப்படுத்தும் போது வலியுள்ள இழுப்புகளும் விட்டு விட்டு வரும் தசைச் சுருக்கமும் ஏற்பட்டு ஒன்றும் செய்ய முடியாமல் போகும். அதிக ஞரம்புப் பலவீனம்; உடல் நடுக்கம். நடந்து கொண்டிருக்கும்போது குழந்தை மிகச் சுலபமாகத் தூங்கிவிடும். மானியில் போதிய அளவு விசைப்பு இருப்பதில்லை. புணர்ச்சி செய்து கொண்டிருக்கும்போது மானி

துவண்டு போகும். திக்குவாய். சொற்களைச் சரியானபடி உச்சரிக்க முடியாமை.

புளிப்புக் குணம்:—வாயில் புளிப்புச் சுவை. மூச்சுக் காற்று புளிப்பு நாற்றம் வீசுதல். புளிப்பான அல்லது கசப் பான ஏப்பங்கள். மேல் வயிற்றில் எரிச்சல்.

குமட்டல்:—வயிற்றில் வேதனையுடன் கூடிய குமட் டல் உள்ளபோது விசேஷமாகத் தேவைப்படுகிறது; குமட்டல் இடைவிடாமல் இருக்கும். சாப்பிட்ட உட னேயும் காலையிலும் தோன்றும். "வாந்தி செய்ய மட்டும் முடியுமானால் எனக்கு மிகவும் சௌகரியமாய் இருக்கும்" என்று வியாதியஸ்தர் நினைப்பார்.

அமுக்கும் உணர்ச்சி, கல் இருப்பது போல்:—உணவு உட்கொண்டு ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் கழித்து வயிற்றில் கல் இருப்பது போல் அமுக்கும் அல்லது கனமாய் இருக்கும் உணர்ச்சி.

சிவசிவப்பு:—கண்கள் இரத்தம் போல் சிவத்தல். சுரத்தில் முகம் சிவந்து சூடாய் இருக்கும். சில்லிப்பு என் னும் தலைப்பின் கீழேயும் பார்க்கவும். முகம் சிவக்கும் போது மூக்கையும் வாயையும் சுற்றி அதிகமாய்ச் சிவந் திருக்கும்.

சில்லிப்பு:—"அதிகச் சூடு; உடம்பு முழுவதும், நெருப்புப் போல் சுடுதல்; குறிப்பாக முகம் சிவந்தும் சூடாகவும் இருக் கும், இவ்வளவு சூடு இருந்தபோதிலும் வியாதியஸ்தரால் உடம்பை அசைக்கவோ அல்லது போர்வையைச் சிறிதளவு விலக்கவோ, முடியாது. அவ்வாறு செய்தால் சில்லிப்பு உண் டாகும்". இக்குறியில் "சிறிதளவு" என்பது மிகவும் முக்கியமானது. குளிர், சூடு. வியர்வை ஆகிய சுரத்தின் ஒவ்வொரு நிலைமையிலும் வியாதியஸ்தர் போர்த்திக் கொண்டே இருக்க நேரும்.

பொய் உணர்ச்சி :—கந்தகம் எரியவிடப்படுவது போலவும், அழுகிய தயிர் போலவும் பலவிதமான நாற்றங்கள் தன் மூக்கில் படுவது போல் வியாதியஸ்தருக்குத் தோன்றும்.

மற்ற குறிகள்

மாதவிடாய் வழக்கத்தைவிட மிக முன்னதாகத் தோன்றுதல்; போக்கு ஏராளமாகவும் பல நாட்களுக்கு நீடித்தும் இருத்தல்; போக்கு தோன்றும் போது காணப்பட்ட கோளாறுகள் அது மறையும் வரை விடாமல் இருத்தல். முதுகு வலியில் படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்து கொண்ட பிறகே திரும்ப முடியும்; புணர்ச்சியில் அளவு மீறி ஈடுபட்டதால் அல்லது இயற்கைக்கு மாறான வழிகளில் சிற்றின்பத்தைப் பெற்றதால் இவ்வித முதுகு வலி தோன்றும். இளங் குழந்தைகளின் நச்சுத் தும்மல்கள். வயிற்றுக் கடுப்பில் மலம் கழித்த பிறகு வலியும் கடுகடுப்பும் குறிப்பிடத்தக்க அளவுக்குச் சிறிது நேரம் குறைவாய் இருக்கும். "பல சமயங்களிலும் மலம் சளியுடனும் இரத்தத்துடனும் கலந்திருக்குமென்றாலும் அதன் அளவு குறைவாய்த்தான் இருக்கும்". நீர்க்கோர்வையின் ஆரம்பத்தில் மூக்கு காய்ந்து அடைபட்டிருக்கும்; அல்லது இரவில் மூக்கு அடைபட்டுப் பகலில் நீர் வடியும் அல்லது காலையில் நீர் வழிந்தோடும். கூடான அறையில் இருக்கும்போது நீர்க்கோர்வை அதிகமாகவும் குளிர்ந்த காற்றில் இருக்கும்போது சௌகரியமாகவும் இருக்கும்.

உறவு :—அனேகமாக எல்லா வியாதிகளிலும் ஸல்பர் இவ்வௌஷதத்துக்கு முன்னும் பிறகும் நல்ல வேலை செய்கிறது. ஆர்ஸனிகம், இபிகாக், பாஸ்பரஸ், சேபியா, ஸல்பர் ஆகியவைகளுக்குப் பிறகு நக்ஸ் வாமிகா நன்றாய் வேலை செய்யும். பிரயோனியா, பல்ஸடில்லா, ஸல்பர், ஆகியவை

நக்ஸ் வாமிகாவுக்குப் பிறகு கல்ல குணம் தரும். லிங்கம் பகையாகும். நக்ஸ் வாமிகாவுக்கு முன்னே அல்லது பிறகோ கொடுக்கக் கூடாது.

ஒப்பிடுதல் :—விடியற் காலையில் 3 மணிக்குக் கண் விழித்தல், பிறகு தூக்கம் வராமை (ஆர்ஸனிகம், கல். கார்ப்; லேபியா, காலி கார்ப்). புத்தி மாறுட்டம் ஏற்பட்டு விடுமோ என்று பயப்படுதல் (கல். கார்ப், லைகபோடியம், ஸல்பர்). இயற்கைக்கு மாறுன வழிகளில் சிற்றின்பத்தை அடைந்ததால் ஆண் தன்மை குறைதல் (கல். கார்ப், ஸல் பர்). இயற்கைக்கு மாறுன வழிகளில் சிற்றின்பத்தை அடைந்ததால் உண்டாகும் கெடுதலான விளைவுகள் (சைனு, கல். கார்ப், கோபால்ட், கோனியம், லைகபோடியம், நேட்ரம் மூர்). வயிற்றில் கல் இருப்பது போல் அமுக்கும் உணர்ச்சி நக்ஸ் வாமிகாவில் உணவு உட் கொண்டு ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் கழிந்த பிறகு தோன்றும். காலி பைக்ரமிகத்திலும் நக்ஸ் மாஸ்சாடாவிலும் சாப்பிட்ட உடனேயே அவ்வுணர்ச்சி தோன்றுகிறது. முகம் சிவந்து சூடாய் இருத்தல் (பெல்லடொன்னு). இடை விடாத குமட் டல் (இபிகாக்).

குறிப்புகள் :—பசி இல்லாதவர்களுக்குக் குறிகளைக் கவ னிக்காமலேயே நக்ஸ் வாமிகாவைக் கொடுப்படுகிறதென்று கெண்ட் சொல்லுகிறார். "அது பசியை அதிகரிக்கிறது, ஆனல் வியாதியஸ்தருக்கு ஆபத்தை விளைவிக்கிறது."

நக்ஸ் வாமிகாவின் குறிகள் காலை வேளையில் கூடுதலா கும் குணம் உள்ளவை. ஆதலால் நக்ஸ் வாமிகாவைக் காலை வேளையில் உட் கொள்வது கூடாது. மனம், உடல் ஆகிய இரு வகையான உழைப்பினலும் உபாதிகள் அதிக மாகும் குணம் நக்ஸ் வாமிகாவில் இருப்பதால் மனமும் உடலும் சோர்வுற்றிருக்கும் போது நக்ஸ் வாமிகாவை உப யோகிப்பது கூடாது. இக்காரணத்தினல் தான் "நக்ஸ்

வாமிகா உடலும் மனமும் ஒய்வாய் இருக்கும் போது கொடுக்கப்பட வேண்டு மென்று கூறப்படுகிறது. படுக்கப் போகு முன் கொடுப்பது நலம் அல்லது படுப்பதற்கு சில மணி நேரம் முன்னதாகக் கொடுப்பது மிகவும் நலம். ஆனல் உணவு உட் கொள்வற்குச் சற்று முன்னதாகவோ அல்லது உணவு உட்கொண்ட உடனேயோ கொடுப்பது கூடாது.

"எந்த ஒளஷதமும் வியாதியஸ்தருக்கு ஒத்துக் கொள்ளாத" சமயங்களில் அக்கேசுகளில் காணப்படும் கெடுதலான உணர்ச்சி அதிகரிப்பையும் மற்ற கோளாறுகளையும் நக்ஸ் வாமிகா பல சமயங்களிலும் குணம் செய்து விடுகிறது என்று க்ளார்க் எழுதுகிறார்.

ஓபியம்

(OPIUM)

முன்னுரை :—உலகில் ஓபியத்தைத் தவிர வேறு எந்த ஒளஷதமும் அவ்வளவு கெடுதி செய்ய வில்லை (முதலில் சௌகரியம் செய்வது போல் காண்பித்து விட்டு)" என்று ஹானிமன் குறிப்பிட்டிருக்கிறார்.

ஒவ்வொரு ஒளஷதத்தினலும் உடலில் முதல் வரிசைக் குறிகள், இரண்டாம் வரிசைக் குறிகள் என்னும் இரண்டு விதக் குறிகள் தோன்றுகின்றன. இவ்விரண்டு விதக் குறிகளையும் ஹானிமன் பிரித்துக் காட்டினர். ஹோமியோபதி ஒளஷதங்களைத் தேர்ந் தெடுக்க முதல் வரிசைக் குறிகளையே ஆதாரமாய்க் கொள்ள வேண்டு மென்றும் இரண்டாம் வரிசைக் குறிகளை அல்ல என்றும் ஹானிமன் கருதினர். ஓபியத்தின் முதல் வரிசைக் குறிகளிலிருந்து வெளிப்பட்ட அதன் முக்கியமான குறிகளில் ஒன்று எல்லா வியாதிகளிலும் வலி இல்லாமல் இருப்பதாகும். ஆனல் ஹானிமனல் நடத்தப்பட்ட ஓபிய ஒளஷதப் பரீட்சையில்

வியாதிக் குறிகளுடன் கடுமையான வலிகள் காணப்பட்டன. ஹானிமனைப் பின் பற்றியவர்கள் ஔஷதங்களின் இருவகைக் குறிகளையும் ஒன்றுகவே மதித்தனர். ஆனால் அவ்வௌஷதங்கள் வீரியப் படுத்தப்பட்ட நிலைமையில் ஔஷதப் பரீட்சைக்கு உபயோகப்படுத்தப் பட்டிருக்க வேண்டும்.

பொதுவான குறிகள்

தசுதி :—அதிகக் கறுப்பு இல்லாத தலை மயிர், தளர்ந்த தசைகள், இருக்க வேண்டிய அளவு உடல் வேதனை இல்லாத நிலைமை. குழந்தைகள், சிறுவர்கள். குடியில் ஈடுபட்டவர்கள்.

மனம் :—அலட்சியமாகவும் அதிக ஏக்கத்துடனும் இருத்தல். மூடத்தனம். கெடுதல் நேரப்போகிறது என்று தீர்மானமாய் எண்ணுதல். நினைவு தவறும். தன் உடல் கஷ்டங்களை மறந்து விடுதல். எல்லாம் கனவு போல் தோன்றுதல். மன உறுதி இல்லாமை. வீட்டுக்குப் போக வேண்டுமென்று விரும்புவார். பொய்யான கற்பனைகள். தான் தன்னுடைய வீட்டில் இல்லையென்று நினைத்தல்; இவ்விதமான பொய்யான கற்பனையின் விளைவு பல நாட்களுக்கு நீடித்திருக்கும். சுண்டெலிகள், தேள் முதலிய பிராணிகளைக் காண்பதாகப் பொய்த் தோற்றங்கள்; ஓடிப்போக விரும்புவார். ஞாபக சக்தி முற்றிலும் அழிதல். "அமைதியாய் இருத்தல்; தன் வியாதியைப் பற்றி ஒரு வார்த்தைகூடப் பேசமாட்டார். தனக்கு அது வேண்டும், இதுவேண்டுமென்று கேட்கமாட்டார். "உடம்பு முழுவதும் பொய் நிறைந்தவர்கள்"

உடல் :—முகம் கறுஞ்சிவப்பாய், உப்பியும் வீங்கியும் இருக்கும். கீழ்த் தாடை தொங்குதல். முகத் தோற்றம்

விகாரமாய் மாறி விடுதல். குரல் பலவீனமாகும். கண் கள் பாதி திறந்து மேல் பக்கமாய்த் திரும்பி இருக்கும். கண்களின் கருமணிகள் விரிந்திருத்தல். அதிகத் தூக்கக் கலக்கமிருந்தாலும் தூங்க முடியாமை. நாடி முழு அளவுடனும் மெதுவாகவும் துடித்தல். மூனகலுடன் புத்தித் தடுமாற்றம். மூத்திரம் அளவு குறைதல், வெளி யாகாமல் தங்கி இருத்தல் அல்லது உற்பத்தியாகாமை. பலமாகவும் குறட்டையுடனும் மூச்சு விடுதல். மலம் தானுகவே வெளிப்படுதல் அடி வயிறு கடினமாகவும் உப்பியும் இருத்தல். நெற்றியில் குளிர்ந்த வியர்வை.

உபாதி கூடுதல் :—வியாதியஸ்தருக்குக் குளிர் காற்று ஒத்துக் கொள்வதில்லை. ஆனல் தலையைத் திறந்து கொண்டிருந்தால் சௌகரியமாய்த் தோன்றும். படுக்கை மிகவும் சூடாய் இருப்பது போல் தோன்றி அதனல் அதன் மேல் படுக்க முடியாமல் போகும். வியர்வை ஏற்படும் போதும் தூங்கும் போதும் தூங்கியெழுந்த உடனும் உபாதிகள் அதிகமாகுதல்.

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே) :— உடலில் அதிகச் சூடு ஏற்படும் போது உபாதிகள் மீண்டும் தோன்றும் அல்லது அதிகமாகும். பயம், திடீரென்று சந்தோஷமான செய்தி கேட்டல், கரிக் கட்டை எரியும் போது வெளிப்படும் புகையைச் சுவாசித்தல், சாராயம் குடித்தல், காரிய விஷம் உடம்பில் சேருதல் ஆகிய கார ணங்களால் தோன்றும் கோளாறுகள். காக்கை வலிப் பில் தூங்கும் போது வலிப்புகள் தோன்றுதல். பயந்து கொண்டதினல் மயக்கத்துடன் கருச் சிதைவு நேரும் போல் தோன்றுதல், பிள்ளைப் பெற்ற பிறகு வெளியாக வேண்டிய கழிவு நின்று போகுதல்.

உபாதி குறைதல் :—குளிர்ந்த காற்றுள்ள திறந்த

இடங்களையும் தலையைத் திறந்து வைத்துக் கொள்ளவும் விரும்புவார்.

விசேஷக் குறிகளின் விளக்கம்

உயிர்ப்புச் சக்தியின் தூண்டுதல் இல்லாமை :—குறிகளுக்கு ஏற்றதாய் இருக்கும் ஔஷதங்களாலும் உடலில் வேலை செய்ய முடியாமை: உயிர்ப்புச் சக்தியின் தூண்டுதல் இல்லாததால் ஔஷதங்களால் ஒருவித நன்மையும் ஏற்படாமை.

வலி இல்லாமை :—அனேகமாக எல்லா வியாதிகளிலும் வலி தெரியாத நிலைமை உண்டாகும். தன் வியாதியைப் பற்றி ஒரு வார்த்தைகூடப் பேசமாட்டார். தனக்கு அது வேண்டும் இது வேண்டுமென்று கேட்கமாட்டார்.

உணர்ச்சி இல்லாமை :—தன்னைச் சுற்றிலும் நடப்பது என்ன என்பதை உணர முடியாத நிலைமை. உடல் முழுவதுமே உணர்ச்சி குறைந்திருத்தல்.

உணர்ச்சி மிகவும் அதிகரித்தல் :—மிகக் கூர்மையாகக் காது கேட்பதால் தூக்கம் வராமை; தொலைவில் கடியாரங்கள் மணி அடிப்பதும் கோழிகள் கூவுவதும் அவரைத் தூங்க வொட்டாமல் செய்யும்.

மந்த குணம் :—ஒபியத்தின் வியாதிகள் எல்லாவற்றிலும் மந்தமான குறிகள் காணப்படுகின்றன. மூளை மந்தமாகுதல். மூடத்தனம். உறுப்புகள் சுறு சுறுப்பாய் வேலை செய்யாமை.

மயக்கமான நிலைமை. குழந்தைகளுக்கு காலராவைப் போன்ற வயிற்றுப் போக்குடன் மயக்கம். மயக்கத்துடன் கூடிய தூக்கம். தூங்கி எழுந்த பிறகு உடல் அசதி நீங்காமை. குடல்கள் வேலை செய்யாததால் மலச்சிக்கல்.

மூத்திரப்பை வேலை செய்யாததால் மூத்திரம் வெளியாகாமல் தேங்குதல். வியாதியினால் தாக்கப்பட்டுள்ள உறுப்புகளில் உற்பத்தியாக வேண்டிய நீர் உற்பத்தியாகாமை; கருப்பை தாக்கப்பட்ட போது மாதவிடாய் தோன்றுமை; பிரசவ சமயத்தில் வலிகள் திடீரென்று மறைந்துபோய் குறட்டை விடுதல், மயக்கம், தசைகளில் இழுப்புகள் முதலிய குறிகளுடன் மயக்கம் தோன்றுதல். குரல் பலவீனமாகுதல். மலம் வெளியே வருவதும் உள்ளே செல்வதுமாக இருக்கும். குடல்கள் மிகவும் மந்தமாகிக் கடுமையான பேதி ஔஷதங்களாலும் பலன் ஏற்படாமை. குடல்கள் அடைத்துப் போய் விட்டது போல் தோன்றும். "மூத்திரப்பை நிரம்பி இருக்கும்; ஆனால் அதை வெளியேற்றச் சக்தி இருக்காது; கதீட்டரின் (Catheter) உதவியினால்தான் வெளியேற்ற முடியும்" பிள்ளைப் பெற்ற பிறகு மூத்திரம் வெளியாகாமல் தேங்குதல்; சுரம் அல்லது திடீர் வியாதிகளிலும் ஏற்படலாம்.

திடீர் என்று தோன்றும் சருமவியாதிகளில் சருமக் கோளாறு திடீரென்று கருகி பாரிசவாதம் தோன்றுதல். தூங்க ஆரம்பித்தவுடன் மூச்சு நின்று விடுதல்.

குறட்டையுடன் சுவாசித்தல் :—காற்றை உள்ளே இழுக்கும்போதும் வெளியே விடும் போதும் உறத்த ஓசையும் குறட்டையும் தோன்றும், குறட்டையுடன் சுவாசித்துக் கொண்டு ஆழ்ந்த தூக்கம்; முகம் சிவந்திருத்தல்; கண்கள் பாதி மூடியிருக்கும்; கண்கள் இரத்தம் போல் சிவந்திருக்கலாம்; உடம்பு முழுவதும் சூடான வியர்வை. மெதுவாகவும் குறட்டையுடனும் சுவாசித்துக் கொண்டு நினைவு சிறிதளவுகூட இல்லாமல் இருத்தல். தசைகளில் விட்டு விட்டு விரைப்பு ஏற்படும் வலிப்புகளில் வலிப்பு

இல்லாத சமயங்களில் குறட்டையுடன் சுவாசிப்பது காணப்பட்டால் ஓபியம் தேவைப்படும். மூளை இரத்தக் குழாய் வெடிப்பும் குறட்டையுடன் சுவாசிப்பதும்.

உப்பி இருத்தல்:—முகம் உப்பி, கருஞ்சிவப்பாகவும் சூடாகவும் இருத்தல். தலையிலுள்ள அசுத்த இரத்தக் குழாய்கள் உப்பி இருத்தல். முகத்திலும் தலையிலு முள்ள அசுத்த இரத்தக் குழாய்கள் வீங்குதல். உதடு களில் வீக்கம்.

தளர்ச்சி:—எல்லாத் தசைகளும் தளர்ந்திருத்தல்; முகத் தசைகள் தளர்ந்து போய் அதனால் கீழ் உதடும் கீழ்த் தாடையும் தொங்குதல். புணர்ச்சியில் ஆசையும் ஆண் தன்மையும் குறைதல். தானாகவே மலம் வெளி யாகுதல்.

பாரிசவாத நிலைமைகள்:—"மூளை, நாக்கு, குடல்கள், சுவாச கோசங்கள் முதலியவைகளில் பாரிச வாதம்; வலி இல்லாத நிலைமை." "குடிப் பழக்க முள்ளவர் களுக்கும் வயதானவர்களுக்கும் உண்டாகும் மூளை இரத்தக் குழாய் வெடிப்பு. பிறகு மயக்கத்துடன் பாரிசவாதம்." பாரிச வாதத்தினால், மலம் கழிக்க வேண்டு மென்ற தூண்டுதல் ஏற்படாமை. மலமும் மூத்திரமும் வியாதியஸ்தருக்குத் தெரியாமலேயே வெளிப்படுதல்.

உடல் மெலிவு:—குழந்தையின் உடம்பில் சுருக்கங் கள் விழுதல்; ஓட்டி உலர்ந்து போன கிழவன் போல் தோற்றம் அளித்தல்.

வியர்வை:—வியர்வையுடன் கூடிய கோளாறுகள். சூடான, உடலைத் தகிக்கும் வியர்வை. கால்களைத் தவிர மற்ற எல்லா இடங்களிலும் சூடான வியர்வை ஏராளமாய்

உற்பத்தியாகி வியர்வையில் முழுகி எழுந்தது போல் தோன்றும். (இது மிகவும் கெடுதலான குறி). வியர்வை ஆறுகப் பெருகும் போதும் உடல் முழுவதும் எரிச்சல். நெற்றியில் சூளிர்ச்சியான வியர்வை.

மற்ற குறிகள்

கருப்பையில் உள்ள சிசு கடுமையாக அசைதல். உடல் முழுவதும் நடுக்கம். மலம் கடினமாய், உருண்டையாய்க் கறுப்பான பந்துகள் போல் இருக்கும். குடிகாரர்களுக்குச் சுவாச கோசங்களிலிருந்து இரத்தப் பெருக்கு. மந்த குணத்துடன் அல்லது வலிப்புகளின் இடையில் மயக்கத்துடன் பிள்ளைப் பெற்ற பிறகு ஏற்படும் வலிப்புகள். பழக்கமில்லாதவர்கள் அருகிலே வந்தால் குழந்தைகளுக்கு வலிப்புகள் தோன்றுதல்; கண்கள் பாதி திறந்து மேல் பக்கம் ஏறிக் காணப்படும். காரீய விஷம் உடலில் சேர்ந்ததால் ஏற்படும் வயிற்று வலி. தூங்கும் போது படுக்கை விரிப்புகளைக் குடைதல். குடல்களில் அடைப்பு. மலம் வாந்தி செய்யப்படுதல். வலிப்பு ஏற்படுவதற்கு முன்னும் ஏற்படும் போதும் கதறுதல். ஓபியத்தைப் பச்சையாக அதிக அளவில் கொடுத்துச் சிகிச்சை செய்யப்பட்ட கேசுகளில் காணப்படும் இடை விடாத வயிற்றுப் போக்கு.

உறவு:—ஓபியத்தை அளவு மீறிக் கொடுத்ததினால் ஏற்படும் கெடுதலான விளைவுகளைக் குறிகள் ஒத்திருந்தால் வீரியப்படுத்தப்பட்ட ஓபியம் நீக்கும் என்று H. C. அல்லென் எழுதுகிறார். "குறிகள் ஒத்திருந்தால்" என்ற பகுதியைத் தைரியமாக எடுத்து விடலாம் என்பது என் அபிப்பிராயம்.

என்னுடைய வியாதியஸ்தர் ஒருவர். நீண்ட நாட்களாக வயிற்றுப் போக்கினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்

தார். அதற்கு ஒரு வருஷத்துக்கும் மேலாக அல்லோபதி முறைப்படி ஔஷதத்தினால் சிகிச்சை செய்யப்பட்டார். சிறிது காலத்துக்குச் சௌகரியமாய் இருந்தது. போகப் போக அந்த ஔஷதத்தினால் தளர்ந்த மலத்தைக் கட்டுப் படுத்த முடியவில்லை. முடிவாக ஏறக்குறைய 15 நிமிஷங் களுக்கு ஒரு தடவை கொஞ்சங் கொஞ்சமாக மலம் வெளி யாகத் தொடங்கி சில மாதங்கள் அப்படியே இருந்து வந்தது. குடல்களின் தசைகள் பயங்கரமான அளவுக்குத் தளர்ந்து விட்டன. அதே ஔஷதம் 200 வீரியத்தில் ஒரு சில வேளைகளில் மிகச் சீக்கிரமாய் குணம் செய்து விட்டது. இந்நிலைமை ஏற்படக் காரணம் என்ன என்பதைத் தேடிக் கண்டுபிடிக்கத்தான் எனக்குப் பல நாட்கள் ஆகிவிட்டன.

அலுமினா, பாரிடா கார்ப், பிரயோனியா, பாஸ்பரஸ், ப்ளம்பம் ஆகியவை ஔஷதத்துக்கு முன்னும் பிறகும் நன்றாய் வேலை செய்யும்.

ஒப்பிடுதல் :—உயிர்ப்புச் சக்தி இல்லாமை (அம்ப்ரா, சைனா, கார்போ விஜி, ஸல்பர்). திடீரென்று சந்தோஷச் செய்தி கேட்டால் ஏற்படும் கெடுதலான விளைவுகள் (காபியா). குழந்தைகளுக்கும் கிழவர்களுக்கும் ஏற்றது (பாரிடா கார்ப்). பயந்து கொண்டதால் ஏற்படும் கோளாறுகள்; பயம் உள்ளுரவே இருத்தல் (அகோனைட், ஹயஸ்யாமஸ்). படுக்கை மிகவும் சூடாகத் தோன்றுவதால் அதில் படுத்துக்கொள்ள முடியாது (ஆர்னிகா, பிரயோ னியா). பயத்தினால் வலிப்புகள் (இக்னேஷியா). தான் தன்னுடைய வீட்டில் இல்லையென்று நினைத்தல் (பிரயோ னியா). சுவாச கோசங்களின் பாரிச்வாதம் (ஆண்ட்டிம் டார்ட், லாகபோடியம், லாச்சஸிஸ்). குறட்டையுடன் சுவா சித்தல் (ஆர்னிகா). குழந்தைகளின் உடல் மெலிவு (அப்ரொ டேனம், நேட்ரம் மூர், ஸானிகுலா). உடல் சுருங்கிக் கிழவன் போல் தோற்றமளிக்கும் குழந்தை (அர்ஜண்டம் நைட்

ரிகம்). மூளையில் அதிக இரத்தம் சேருதல் (ஹெல்லபோரஸ்).

குறிப்பு :—குறட்டையுடன் சுவாசிப்பது எப்பொழுதோ ஒரு தடவை மட்டும் ஏற்பட்டால் அதற்கு ஓபியம் உபயோகப்படாது. இடைவிடாமல் இருக்க வேண்டும்.

குறிகளுக்குத் தகுந்த ஔஷதங்களால் குணம் ஏற்படாமல் போகும் சமயங்களில் ஓபியத்தைக் கொடுக்கலாமென்றும் அதன் பிறகு லாச்சஸிஸ் பல சமயங்களிலும் கொடுக்கப்படலாமென்றும் லிலியந்தால் கூறுகிறார்.

பெட்ரோலியம்

(PETROLEUM)

முன்னுரை :—ஸோரா விஷத்தை நீக்கும் மிகச் சிறந்த ஔஷதங்களில் பெட்ரோலியமும் ஒன்று. சருமத்துக்கும் (விசேஷமாக சருமத்தில் மடிப்புகள் உள்ள இடங்கள், பிறப்பு உறுப்புகள்) பெட்ரோலியத்துக்கும் நெருங்கிய உறவு உண்டு.

பொதுவான குறிகள்

தகுதி :—அதிகக் கறுப்பு இல்லாத தலைமயிரும் உடலும் உள்ளவர்களுக்கு ஏற்றது. நாட்பட நீடிக்கும் குண முள்ள சீரணக் கோளாறுகள்; கருவுற்ற பெண்களுக்கு ஏற்படும் எல்லா வகைச் சீரணக் கோளாறுகளுக்கும் தகுந்தது. "மெலிந்து, இளைத்து இருப்பார்; சுவாச கோச க்ஷயம் ஏற்படுமோ வென்று தோன்றும் நிலைமை." நெடு நாட்கள் நீடிக்கும், உடலில் ஊறிப் போய் உடலைத் தின்று விடும் குண முள்ள வியாதிகள். சிறு பெண்களுக்கு ஏற்படும் சூதக பாண்டு என்றழைக்கப்படும் மாதவிடாய்க் கோளாறுகளுடன் தோன்றும் இரத்த சோகை.

மனம்:—கோபம், பிறரைக் கடிந்து கொள்ளுதல். அல்ப விஷயங்களிலும் குற்றம் கண்டு பிடித்தல். எதைக் கண்டாலும் மன வேதனை. தனக்குச் சாவு நெருங்கி விட்டது என்று நம்பி தன் விவகாரங்களைத் தீர்த்து வைத்து விட அவசரப்படுவார்.

உடல்:—தலை மயிர் உதிருதல். அக்குள்களில் நாற்ற முள்ள வியர்வை. கால் எலும்பு மூட்டுகளில் உடையும் ஓசை. காலையிலும் மாலையிலும் அதிகச் சோர்வு. சருமத்தின் ஆரோக்கியம் குன்றுதல். உள்ளங் கால்களிலும் உள்ளங் கைகளிலும எரிச்சல். சிற் சில இடங்களில் மட்டும் வியர்வை. மாமிசத்தில் வெறுப்பு. அடிக்கடி அல்பமான பசி ஏற்படுதல். வாயிலிருந்து கெட்ட நாற்றம் வீசுதல்.

உபாதி கூடுதல்:—பருவ நிலையில் மாறுதல்கள் ஏற் படும். திறந்த இடங்களில் இருக்க வியாதியஸ்தருக்கு அசௌகரியம் ஏற்படும். திறந்த இடங்களில் இருக்க வியாதியஸ்தருக்கு வெறுப்பு. அடிக்கடி நீர்க் கோர்வை பிடித்துக் கொள்ளுதல். புயல் காற்று வீசும் போது வியாதியஸ்தருக்கு அசௌகரியம் உண்டாகும்.

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):— கண்களை மூடியவுடன் தலைச்சுற்றல். படுக்கையிலிருந்து எழுந்திருந்தவுடன் தலையைச் சுற்றுதல். வண்டியில் போகும் போது குமட்டல். வண்டிகள், ரயில் அல்லது கப்பல் ஆகிய வைகளில் பிரயாணம் செய்யும் போது உண்டாகும் கோளாறுகள். புயல்காற்று தோன்றுவதற்கு முன்பும் காற்று அடித்துக் கொண்டிருக்கும் போதும் தோன்றும் அல்லது அதிகமாகும் கோளாறுகள். குளிர் காலத்தில் தோன்றும் குணமுள்ள கரப்பான் படை. காப்பேஜ்

(Cabbage) எனப்படும் முட்டைக்கோசு, புளிப்புச் சுவையுள்ள உணவுப் பொருள்கள் ஆகியவைகளைச் சாப்பிட்ட தாலும் கருவுற்ற பெண்களுக்கும் ஏற்படும் வயிற்றுப் போக்கு. வயிற்றுப்போக்கு பகலில்தான் வெளிப்படும். இரவில் ஒரு தடவைகூட ஏற்படாது. வயிறு காலியாய் இருக்கும் சமயங்களில் வலி.

உபாதி குறைதல்:—வயிற்று வலி அடிக்கடி சாப்பிட்டுக் கொண்டே இருந்தால் குறைவாய் இருக்கும்.

விசேஷக் குறிகளின் விளக்கம்

நாட்பட நீடிக்கும் குணம்:—நாட்பட்ட வயிற்றுப் போக்கு, நாட்பட்ட சீரணக் கோளாறுகள், நாட்பட்ட சரும வியாதிகள், மேகவெட்டை, நாட்பட்ட காதுச் சீழ் இவை போன்ற பல நீடித்த வியாதிகளையும் எதிர்த்துப் போராடும் குணம் பெட்ரோலியத்துக்கு இருக்கிறது. நாட்பட்ட சுளுக்குகளைக் கூட குணம் செய்கிறது.

வயதானவர்களுக்குப் பால் போன்ற போக்கு மூத்திரக் குழாய் வழியாக வெளியாகுதல். நாட்பட்ட மேக வெட்டை, மூத்திரச் சுருக்குடன் மூத்திரக் குழாயின் மேற் பகுதியில் அறிப்பு. சுக்கிலச் சுரப்பிகளுக்கு அருகே உள்ள மூத்திரக் குழாய்ப் பகுதியில் வேக்காடு. நாட்பட்ட நீர்க் கசிவுள்ள கரப்பான் படை; படையுள்ள இடங்களில் தோல் உறிந்திருக்கும். காதுகளிலிருந்து அழுகிய நாற்ற முள்ள சீழ் நீண்ட நாட்களாய் வெளியாகுதல்.

புண்ணுய் இருத்தல்: ஈரக் கசிவு: கறடு முறடாய் இருத்தல்: வெடிப்பு: கொப்பளங்களுடன் இருத்தல்: அறிப்பு: இரத்தப் பெருக்கு: எரிச்சல்: புண்ணுகும், சீழ்ப் பிடிக்கும் குணம்:—இவை பெட்ரோலியத்தின் சரும வியாதிகளில் காணப்படும் பல வகைப்பட்ட குறிகளாகும். சருமத்

தைப் பற்றிய வரையில் மண்டைத் தோல் (முக்கியமாக தலையின் பின் பக்கம்). முகம், காதுகளுக்குப் பின் உள்ள இடங்கள், விரைப்பை, பிறப்பு உறுப்புகள், சருமத்தில் மடிப்பு விழும் பாகங்கள் ஆகிய இடங்களைப் பெட்ரோலியம் விசேஷமாய்த் தாக்குகிறது. இவ்விடங்களில் பல வகைப்பட்ட கரப்பான் படைகள் அல்லது மற்ற சரும வியாதிகள் உண்டாகும்.

சருமம் வியாதியுற்று, அழுக்குப் படிந்து, கடினமாய், கறடு முறடாய், தடித்தும் இருக்கும்; சருமம் தோல் உறிந்து புண்ணாகும். சிறிய காயமும் சீழ்ப் பிடித்தல். காயங்கள் இலகுவில் ஆறுவதில்லை. உள்ளங் கைகள் கறடு முறடாகவும் வெடிப்புகளுடனும் இருக்கும். விரைப் பையில் நீர்க் கசிவுடன் கூடிய அல்லது நீர் இல்லாமல் வறண்டிருக்கும் சரும வியாதிகள். குளிர் காலங்களில் விரல் நுனிகள் கறடு முறடாய் வெடித்திருக்கும்; வலி இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம். பிறப்பு உறுப்புகளில் கடி போன்ற சரும வியாதி; அவ்வுறுப்புகளின் மேலும் தொடைகளிலும் பரவுதல்; அறிப்பு ஏராளமாய் இருக்கும். கைகளில் வெடிப்பு குளிர்காலத்தில் கூடுதலாகும். அதிகப் புண்ணுள்ள உணர்ச்சியுடன் ஆசன வாயில் வெடிப்புகள். பாதங்களில் காய்ப்புகள். குளிர்காலத்தில் வலியும் அறிப்பும் உள்ள பனியினால் ஏற்படும் சருமக் கோளாறுகள். கண் இமைகளின் ஓரங்களில் வேக்காடு. அறிப்பும் எரிச்சலுமுள்ள சிறு கொப்பளங்கள். சருமத்தில் கொப்பளங்கள் உண்டாகிக் கெட்டியான, மஞ்சள் நிற முள்ள பொறுக்குகளாய் மாறும்; அல்லது அவை உடைந்து புண் உண்டாகி அப் புண்ணின் சுற்றளவு கொஞ்சங் கொஞ்சமாக

அதிகமாகும். சளிச் சவ்வுகளில் அடை அடையாகப் புண்களும் அப் புண்களின் ஓரங்கள் கடினமாய் இருப் பதும். சருமமும் சளிச் சவ்வும் ஒன்று சேரும் இடங்களில் புண்ணாய் இருப்பதும் வெடிப்புகளும்.

உள்ளங் கைகளிலும் உள்ளங் கால்களிலும் கூடான உணர்ச்சியும் எரிச்சலும் அதனால் அவைகளைப் போர்வையினால் மூடாமல் வைத்திருக்க விரும்புவதும்.

உணர்ச்சி அதிகரித்தல்:—காது கேட்கும் உணர்ச்சி, தொடு உணர்ச்சி, வாசனை அறியும் உணர்ச்சி ஆகியவை அதிகரித்தல். சருமத்தில் (உடம்பு முழுவதும்) தொட்டால் கடுமையான உணர்ச்சி; உடுத்தும் ஆடை மேலே படுவதும் உராய்வதும் வலியைத் தரும்.

சேர் விரோதமான ஒரு குறியும் இருக்கும். அதுவும் விசேஷத் தன்மை யுள்ளதே. வயதானவர்களுக்குக் காது கேளாமை.

தலையின் பின் பக்கம், விசேஷமாகத் தாக்கப்படுதல்:—பின் தலையில் தோன்றும் பிடிவாத குண முள்ள தலை வலிக்கு மிகச் சிறந்த ஔஷதம் இது. பின் தலையில் தோன்றும் கரப்பான் படை. "வலி பின் தலையிலிருந்து ஆரம்பித்துக் கண்களுக்குச் சென்று சிறிது நேரம் பார்வை மறைவதும் மயக்கமும் காணப்படும்." கப்பலில் பிரயாணம் செய்யும் போது உண்டாவதைப் போலுள்ள பின் தலையில் தலைச் சுற்றல்.

சில்லிப்பு உணர்ச்சி:—சரும வியாதியுள்ள இடங்களில் நீர்க்கசிவு தோன்றிச் சொறிந்து விட நேரும். இதனால் இரத்தப் பெருக் கெடுத்து அவ்விடங்களில் சில்லிப்பு உணர்ச்சி உண்டாகும். அடி வயிற்றில் சில்லிப்பான உணர்ச்சி, கருப் பையில் சில்லிப்பு உணர்ச்சி. திட்டு திட்டாகச் சில இடங்களில் சில்லிப்பு உணர்ச்சி.

நாற்ற குணம்:—பாதங்களில் தொட்டால் வலியுடன் நாற்ற முள்ள வியர்வை. அக்குள்களில் நாற்ற முள்ள வியர்வை உண்டாகி கடுமையான நெடி அடிக்கும்; வியாதியஸ்தர் இருக்கும் அறை முழுவதும் நாற்றம் வீசும்.

சீரணக் கோளாறு (காலியாய் இருத்தல்: வேதனை: உணவு உட் கொண்டால் சௌகரியம் ஏற்படுதல்):—வயிறு காலியாய் இருக்கும் சமயங்களில் வயிற்றில் வலி தவறாமல் தோன்றும்; எதையாவது தின்று கொண்டே இருந்தால் சௌகரியமாய் இருக்கும். சீரண சக்தி குறைதல். சீரணமாகும் போது வேதனை. சாப்பிட்ட பிறகு, எவ் வளவு குறைவாய்ச் சாப்பிட்டாலும் வயிறு நிறைந்து விட்ட உணர்ச்சி. வயிறு காலியாய்ப் பலவீனமாய் இருப்பது போல் தோன்றுதல்.

சாப்பிட்ட பிறகு உபாதிகள் அதிகமாவதும் உண்டு. சாப்பிட்ட பிறகு தலைச் சுற்றல், வயிற்றில் வாயு சேருதல், கடுமையான மூச்சுத் திணறல் (ஏப்பம் விட்டால் சௌகரியம்), குமட்டல், மந்த குணம், அடி வயிற்றில் வலி அல்லது அமுக்கும் உணர்ச்சி, வேதனை, புளிப்புத் தட்டுதல், தலையில் இரத்தம் சேருதல் முதலிய குறிகள் உண்டாகும்.

அளவு கடந்த பசி:—வயிற்றுப் போக்குடன் அளவு கடந்த பசி. சாப்பிட்ட பிறகு வயிற்றில் வலி; ஆனால் சாப்பிடாமல் இருக்க முடியாது; பசி அவ்வளவு கொடூரமாய் இருக்கிறது. மலம் கழித்த பிறகு வயிற்றில் காலியாய்ப் பசியுள்ள உணர்ச்சி உண்டாகி வியாதியஸ்தரைச் சாப்பிடத் துரத்தும்.

வறட்சி:—காதுகளிலும் மூக்கிலும் வறட்சியும் காய்ந்திருப்பது போல் வேதனையை உண்டாக்கும்

உணர்ச்சியும். கடுமையான தாகத்துடன் வாய் மிகவும் காய்ந்திருத்தல். தொண்டை காய்ந்து எரிச்சல் உண்டாகும். பசை யுள்ள பொருளை லேசாகத் தடவியிருப்பது போல் கண் இமைகளில் காய்ந்த உணர்ச்சி.

திடீர்க் குணம்:—உபாதிகள் திடீரென்று தோன்றி அவ்வாறே மறைதல்.

குமட்டல்:—ரயிலிலும் கப்பலிலும் பிரயாணம் செய்யும் போது உண்டாகும் கோளாறுகள். கரு வுற்றிருக்கும் போது பெண்களுக்கு உண்டாகும் குமட்டல்.

பாரிச வாத நிலைமைகள்:—இடது பாகத்தைப் பீடிக்கும் பாரிச வாதம்; அதிக பலவீனம்.

வியாதி உள்ளே அமுக்கப்படுதல்:—சரும வியாதிகள் அமுக்கப்பட்டால் வயிற்றுப் போக்கை உண்டாக்கும்.

பொய்த் தோற்றங்கள்:—இரண்டாய் இருக்கும் உணர்ச்சி: தன் அருகே இரண்டு குழந்தைகள் இருப்பது போல் (தாயாருக்கு) பொய்த் தோற்றம். தான் இரண்டு நபர்களாக இருப்பதாக அல்லது தன் பக்கத்தில் இன்னொருவர் படுத்துக் கொண்டிருப்பது போல் பொய்த் தோற்றம். தன் ஒரு கால் இரண்டு கால்களாய் இருப்பதாக நினைப்பார்., கண்களுக்குப் புலப்படாத பொருள்களைத் தான் பார்ப்பதாக நினைக்கும் குணம்.

மற்ற குறிகள்

"மார்பில் அமுக்கும் உணர்ச்சி; குளிர்ந்த காற்றினால் அதிகமாகும்." கண்ணீர்க் குழாய்களில் பவுத்திரச் சிரங்கு. முட்டையின் வெள்ளைப் பொருள் போன்ற வெள்ளை ஒழுக்கு. "உடல் முழுவதும் பயங்கரமான வேதனை, யோனி, ஆசன வாய், ஆகிய இடங்களில் உணர்ச்சி

அதிகரித்துத் தூக்கம் வராமை." காரீய விஷம் உடலில் சேருதல்.

உறவு :—முன்னும் பிறகும் நன்முக வேலை செய்யக் கூடியது ஸேபியா.

ஒப்பிடுதல் :—உள்ளங்கைகளிலும் உள்ளங்கால்களிலும் எரிச்சல் (லாச்சஸிஸ், மெதாரினம், ஸாங்வினேரியா, ஸேபியா, ஸல்பர்), தான் இரண்டு நபர்களாய் இருப்பதாக நினைத்தல் (அனகார்டியம், கன். இண்டிகா, பாப்டீஷியா, லாச்சஸிஸ், நக்ஸ் மாஸ்சாடா. ஸ்ட்ரமோனியம்). நாட்பட்ட சுளுக்கு (ரஸ் டாக்ஸ்). மாமிசத்தில் வெறுப்பு (கல். கார்ப், சைனு, கிராபைடிஸ்). கப்பலில் பிரயாணம் செய்யும் போது தோன்றும் கோளாறுகள் (ஆர்னிகா, காக்குலஸ், டபாகம்). கருவுற்ற காலங்களில் குமட்டல் (காக்குலஸ், ஸேபியா), சாப்பிட்டால் வயிற்றுவலி குறைதல் (செலிடோனியம்). சருமக் கோளாறுகள் குளிர் காலத்தில் கூடுதலாகிக் கோடையில் குறைதல் (அலுமினு).

பாஸ்பாரிக் ஆஸிட்
(PHOSPHORIC ACID)

முன்னுரை :—பாஸ்பாரிக் ஆஸிட் மன உணர்ச்சி அதிகரித்த நிலைமைக்கு ஏற்றதோர் ஔஷதம். காதல் நோயால் தாக்கப்பட்டவர்கள், தாயகம் திரும்ப வேண்டு மென்ற தாபமுள்ளவர்கள், மனச்சோர்வும் அலட்சிய குணமும் உள்ளவர்கள் ஆகியவர்களுக்கு ஏற்றது. சிற்றின்ப நினைவுகளிலே அதிகம் ஈடுபட்டு அதனால் உடலின் உயிர்த் தண்ணீர் வெளியேறிப் பலவீனமடைதல் என்பதையும் கடைசியாகச் சேர்த்துக் கொள்ளலாம்.

பொதுவான குறிகள்

தகுதி :—ஏற்கனவே திடகாத்திரமாய் இருந்து உடலின் உயிர்த் தண்ணீர் (அனேகமாக இந்திரியம்)

வெளியேறியதால் பலவீனமடைந்தவர்களுக்கு விசேஷமாகத் தகுந்தது; கடுமைக் குணமுள்ள திடீர் வியாதிகள்; ஏமாற்றம், அவமானம் அல்லது வருத்தம், கவலை, காதலில் ஏமாற்றம், உற்றூர் உறவினரிடமிருந்து பிரிந்திருத்தல் முதலிய காரணங்களால் ஏற்படும் மன உணர்ச்சிகளில் அதிகரிப்பு. பணிவான குணமுள்ளவர்கள். ஒல்லியாகவும் உயரமாகவும் மிக வேகமாக வளரும் சிறுவர்களுக்கும் இளைஞர்களுக்கும் ஏற்றது. கல். கார்பைப் போல் வேகமாகவும் உடல் பருத்தும் உள்ள வளர்ச்சி பாஸ்பாரிக் ஆஸிடுக்கு இல்லை. இப்படி வேகமாய் வளருவோருக்கு முதுகிலும் கை கால்களிலும் அடிபட்டது போன்ற உணர்ச்சியும் வலியும் உண்டாகும்.

மனம்:—சாந்தமும் பணிவுமுள்ள குணம். எந்த விஷயத்தைப் பற்றியும் கவலைப்பட மாட்டார்; மனச்சோர்வுடனும் அலட்சியமாகவும் இருப்பார். தன் உபாதியைப் பற்றிக் கவலையுடன் விசாரித்தல். ஞாபக சக்தி மிகவும் குறைவாய் இருத்தல். தான் மனதில் நினைப்பதை வெளியிட முடியாது, சரியான வார்த்தைகளை நினைவுக்குக் கொண்டுவரத் திண்டாடுதல். பேச வெறுப்பு.

உடல்:—மிகுந்த பலவீனமாய் இருப்பதாக நினைப்பார். கைகளில் பலவீனமும் நடுங்குவதும் (எழுதும் போது). நடந்த பிறகு அதிகக் களைப்பு. அடிக்கடி வியர்வை உண்டாகுதல். மிகுந்த பலவீனமாய் இருந்தாலும் சிறிது நேரம் தூங்கினால் களைப்பு நீங்கி விட்டது போல் தோன்றுதல். வியாதி பிடித்த முகக்களையுடன் உடல் மெலிவு; கண்களைச் சுற்றி நீல நிறமுள்ள வளையங்கள். பேசினால் மார்பில் பலவீனம் தோன்றும்.

அல்பமான பசி உண்டாகி அதனல் தூக்கத்திலிருந்து விழித்துக் கொள்ளுதல். சிற்றின்ப விஷயமான கனவு களுடன் இந்திரியம் தானுகவே வெளிப்படுதல். ரொட்டி யில் வெறுப்பு; அது வாய்க்குக் கசப்பாய் இருக்கும். உப்பும் உறைப்புமுள்ள பண்டங்களில் விருப்பம். மூக்கினுள்ளே விரல்களை நுழைத்துக் குடையும் குணம். இளமையிலேயே தலைமயிர் நரைத்தல்.

உபாதி கூடுதல் :—வருத்தம், ஏமாற்றம், அவமானம், மன அதிர்ச்சி, காதலில் ஏமாற்றம், தாயகம் திரும்ப வேண்டுமென்ற துடிப்பு ஆகிய மன உணர்ச்சிகளின் விளைவாக ஏற்பட்ட கோளாறுகள் நீண்ட நாட்களாய் இருத்தல். உடலின் உயிர்த் தண்ணீர் வெளியாகி விட்ட தால், குறிப்பாக அளவு கடந்த சிற்றின்ப ஈடுபாட்டினல் இந்திரியம் வெளியாகி விட்டதால் ஏற்படும் பலவீனம்.

விசேஷக் குறிகளின் விளக்கம்

உயிர்த் தண்ணீர் வெளியேறுதல்: பலவீனம் : தளர்ச்சி :— இந்திரியம் செலவழிந்து விட்டதால் ஏற்படும் கடுமையான பலவீனம். அடிக்கடி இந்திரியம் நழுவி மிகுதியான பலவீனத்தை உண்டாக்கும். ஒரே இரவில் பல தடவை கள் இந்திரியம் நழுவும். இவ்விதம் இந்திரியம் செல வழிந்து விடுவதினல் வியாதியஸ்தரின் உடல், மனம் இரண்டும் பலவீனமடையும். வியாதியஸ்தர் வருத்தமாக வும் தலையைக் குனிந்து கொண்டும் தன் வியாதி குணமாகும் என்ற நம்பிக்கை இல்லாமலும் இருப்பார். ஆயினும் இயற்கைக்கு மாறுன வழிகளில் சிற்றின்பத்தைப் பெற வேண்டுமென்ற ஆவல் கட்டுக் கடங்காமல் இருக்கும். தான் செய்யும் இழிவான செயலைப்பற்றி வியாதியஸ்தர் மிக வும் மனம் புழுங்குவார். குழந்தைக்குத் தாய்ப்பால்

கொடுத்ததால் பெண்களுக்கு உண்டாகும் பலவீனம். அளவு மீறிச் சிற்றின்பத்தில் ஈடுபட்டதால் பலவீனம், தளர்ச்சி அல்லது ஆண் தன்மைக் குறைவு. மானி விரைத்த சிறிது நேரத்துக்குள் இந்திரியம் வெளிப்படுதல் அல்லது விரைப்பே இல்லாமலும் இந்திரியம் நழுவும். புணர்ச்சி செய்த பிறகு இந்திரியம் நழுவுதல். மலம் கழிக்கும் போது முக்கினால் இந்திரியம் வெளியாகும். இக் கடைசி மூன்று குறிகளும் தளர்ச்சி என்னும் முக்கிய குறிக்கு அடையாளங்களாகும். மேலும் சில உதாரணங்களையும் தருகிறேன். மலமும் மூத்திரமும் வியாதியஸ்தரின் முயற்சி இல்லாமல் தாமாகவே வெளியாகுதல். இருமும்போது மூத்திரம் ஒழுகுதல்.

அதிகக் கழிவு உள்ள போதும் பலவீனம் இல்லாமை :— வயிற்றுப்போக்கு பல நாட்களாய் நீடித்திருந்த போதிலும் பலவீனம் ஏற்படுவதில்லை அல்லது போக்கின் அளவுக்குத் தக்க பலவீனம் இல்லாமல் குறைவாகவே இருக்கும். போக்கு வெளியாகும் போது வலி கூட ஏற்படுவதில்லை. ''தண்ணீர் போன்ற வயிற்றுப் போக்கு, பல சமயங்களில் சீரணமாகாத உணவுத் துண்டுகள் கலந்து, இடைவிடாமலும் வலியில்லாமலும் பல வீனத்தை ஏற்படுத்தாமலும் வெளிப்படும்''. வியர்வையோ, வயிற்றுப் போக்கோ வியாதியஸ்தருக்குப் பல வீனத்தை உண்டாக்காது.

ஏராளமாய் இருத்தல் :— அடிக்கடியும், ஏராளமாகவும் இந்திரியம் நழுவிப் பலவீனத்தை ஏற்படுத்தும். இரவில் தண்ணீர் போல் நீர்த்தும் தெளிவும் உள்ள மூத்திரம் ஏராளமாய் வெளியாகும். மூத்திரத்தைப் பிடித்து வைத்தால் பாத்திரத்தின் அடியில் கனமான, வெண்மையான மேகம்

போன்ற வண்டல் படியும். இரவில் படுக்கையில் குழந்தைகள் ஏராளமான அளவு மூத்திரம் கழித்தல். இரவில் மூத்திரம் கழிக்க விழிப்பு உண்டாகி ஏராளமான அளவு மூத்திரம் கழிக்கப்படுதல். இரவிலும் காலை வேளை நெருங்கும் போதும் ஏராளமான வியர்வை. க்ளார்க் கண்டறிந்த விஷயம் சுவை மிகுந்ததாய் இருக்கிறது. வாயு உப்பிசத்தைக் கழிவுகளில் ஒன்றாய்க் கருதினால் பாஸ்பாரிக் ஆஸிட்டில் எல்லாக் கழிவுகளும் ஏராளமாய் இருக்கின்றன என்னும் முக்கிய குறிக்கு அதுவும் ஓர் உதாரணம்", ஒவ்வொரு தடவையும் ஏராளமான அபானவாயு வெளிப்படுதல். மாதவிடாய் வழக்கத்தை விட முன்னதாகத் தோன்றும்; பல நாட்கள் நீடித்திருக்கும்; ஏராளமான போக்குடன் இருக்கும். மாதவிடாய் ஏற்பட்டுச் சில நாட்கள் கழிந்த பிறகு அறிப்புடன் ஏராளமான வெள்ளை ஒழுக்கு.

வியாதி உள்ளே அமுக்கப்படுதல் :—சரும வியாதிகளை உள்ளே அமுக்கியதால் தோன்றும் கோளாறுகள். இவ் வெளஷதத்தின் பிரத்தியேகமான சரும வியாதிகள் உள்ளே அமுக்கப்பட்டால் சந்தேகமில்லாமல் தேவைப்படும். இப்பிரத்தியேகமான சரும வியாதிகள் அனேகமாக மேகவெட்டை விஷத்தினால் தான் தோன்றுகின்றன. குடும்எரிச்சலும் உள்ள மேகவெட்டையினால் உண்டாகும் கெட்ட சதை வளர்ச்சிகள். மானியின் கொண்டையில் பல பாலுண்ணிகள் முளைத்திருத்தல். மானியிலும் விரைப்பையிலும் சருமக் கோளாறுகள்.

வெளுப்பு :—தலைமயிர் காலத்துக்கு முன்னதாகவே வெளுத்தல் (நரைத்தல்). மூத்திரம் வெளிப்படும்போது தெளிவாக இருந்தாலும் மறு கணமே பால் போல்

வெண்மையாய் மாறுதல். மூத்திரத்தில் வெண்மையான பாகு போன்ற பொருள் கலந்திருத்தல். வெள்ளையான மலம்.

உணர்ச்சி அதிகரித்தல் :—வெளிச்சம், ஓசை, வாசனை ஆகியவைகளைத் தாங்க முடியாது.

மார்பில் பலவீனம் :—பேசினாலும், இருமினாலும், அதிக நேரம் உட்கார்ந்திருந்தாலும் மார்பில் பலவீனமான உணர்ச்சி. மார்பின் பலவீனத்தினால் மூச்சுவிடக் கஷ்டம் உண்டாகும். பேசவே முடியாமல் போகும்.

மற்ற குறிகள்.

அழுகிய நாற்றம் வீசும் சீழுள்ள புண்கள்; வலி இருப்பதில்லை.—கை அல்லது காலை வெட்டி எடுத்த பிறகு மிகுதி இருக்கும் துண்டுப் பகுதியில் நரம்பு சம்பந்தமான வலி. அடி வயிற்றில் உப்பிசத்துடனும் உறுமும் ஓசையுடனும் வயிற்றுப்போக்கு; பல சமயங்களிலும் மலத்துடன் சீரணமாகாத உணவுத் துண்டுகள் கலந்திருக்கும். ஆனால் எதிர்பார்க்கக்கூடிய அளவுக்கு அதிகமான பலவீனம் இல்லாமை. டைபாய்டு போன்ற விஷத்தன்மை வாய்ந்த சுரங்களில் தன்னைச் சுற்றி நடப்பது தெரியாமல் நினைவு இழந்து படுத்திருப்பார். எழுப்பிவிட்டால் முழு நினைவும் வந்துவிடும் (ஆர்னிகா, பாப்டீஷியா). மூத்திரத்தில் சர்க்கரை இருத்தல், ஏராளமான மூத்திரம் வெளிப்படுதல். எலும்புகள் வீங்குவதும் புண்ணாவதும். குளிர் அல்லது சூடு உள்ள நிலைமையில் அடிக்கடி மூத்திரம் கழித்தல், நாற்றமுள்ள, சீழைப் போன்ற கோழையுடன் இருமல், அத்துடன் மார்பில் வலி.

உறவு :—சைனு முன்னும் பிறகும் வேலை செய்கிறது.

ஒப்பிடுதல் :—பேசினுல் மார்பில் பலவீனம் தோன்று தல் (ஸ்டான்னம்). உணவைக் கண்டால் குமட்டல் (கோல் சிகம், கலகபோடியம், மோஸ்சஸ், ஸ்பைஜீலியா). கோல் சிகத்திலும் யூபடோரியம் பர்போலியேட்டத்திலும் இருப்ப தைப் போல உணவின் வாசனை பட்டால் குமட்டல் என் னும் குறி பாஸ்பாரிக் ஆஸிடில் இல்லை. ஒரு இரவில் பல முறை இந்திரியம் நழுவுதல் (நக்ஸ் வாமிகா). மலம் கழிக் கும் போது முக்கினுல் இந்திரியம் நழுவுதல் (நேட்ரம் மூர், ஸெலனியம், ஸல்பர்).

பாஸ்பரஸ்

(PHOPHORUS)

முன்னுரை :—பாஸ்பரஸ் சளிச் சவ்வுகளை உருக் குலைக் கிறது. எலும்புகளை, விசேஷமாகக் கீழ்த் தாடை எலும் பையும் காலிலுள்ள குதிரை முக வெலும்பையும் நாசம் செய்து விடுகிறது.

பாஸ்பரஸ் வியாதியஸ்தர்களுக்குப் பருவ நிலையில் எந்த விதமான மாறுதல் ஏற்பட்டாலும் அசௌகரியம் உண்டாகும். புயல் காற்றும், விசேஷமாக இடியுடனுள்ள புயல் காற்றும் அவருக்கு ஒத்துக் கொள்ளாது. "இடி இடித்து புயல் காற்று அடிக்கும் போது தலை வலி வந்து விடும்." இவ்விதத் தலை வலிகளைப் பாஸ்பரஸ் குணம் செய்திருக்கிறது. பாஸ்பரஸ் வியாதியஸ்தர்களைக் கால நிலையை அறிவிக்கும் மனிதக் கருவி என்றே கூறலாம்.

பொதுவான குறிகள்

தகுதி :—உயரமாகவும் மெலிந்தும் உள்ள உடலுடன் தைரியம் வாய்ந்தவர்கள். மிக வேகமாய் வளர்ந்து முதுகு கூனிவிடும் இளைஞர்கள் (ஆண், பெண் இரு

பாலாரும்). வெளுத்தும் இரத்த சோகையுடனும் இருப்பவர்கள். சருமம் மிருதுவாக இருக்கும். புரு வங்கள் நீளமாகவும் புருவ மயிர் பட்டுப் போல் மிருது வாகவும் இருக்கும். தலை மயிர் மிருதுவாய் இருக்கும். இன்பமாய்ப் பழகுவார். உடலிலிருந்து உயிர்த் தண் ணீர் செலவழிந்து போய் விட்டதால் ஏற்படும் பல வீனம். சுவாச கோச க்ஷயம் உள்ளவர்கள். சுவாச கோச க்ஷய மூள்ள குடும்பத்தில் பிறந்ததால் அவ்வியாதி ஏற்படும் போல் தோன்றுதல். குழந்தைப் பருவத்தில் எலும்பு வியாதிகளால் தாக்கப்பட்டவர்கள். காலையில் வயிற்றுப் போக்கு ஏற்படும் கோளாறுள்ள கிழவர்கள். "மாதவிடாய் சம்பந்தமான இரத்த சோகையுடன் மிக வேகமாக வளர்ந்து வந்த பெண்களுக்குத் திடீரென்று பலவீனமும் உடல் வெளுப்பதும் மாதவிடாய்க் கோளா றுகளும் தோன்றுதல்." அல்ப காரணங்களாலும் பிடி வாத குண முள்ள இரத்தப் பெருக்கு ஏற்படும் உடல் வாகு உள்ளவர்கள். இள வயதிலேயே கிழட்டுத் தன் மை ஏற்படுதல்.

கூர்மையான புத்தி இருக்கும். "இருந்தாலும் அதற்குத் தகுந்தபடி உடல் வலிமை இருக்காது." எல்லா விஷயங்களையும் மிகச் சுலபமாகப் புரிந்து கொள் வார். உணர்ச்சி அதிக மூள்ளவர். மனம் என்ற தலைப் பின் கீழே பார்க்கவும்.

மனம்:—வருங்காலத்தைப் பற்றியோ அல்லது தன் வியாதியின் முடிவு பற்றியோ அதிகக் கவலையில் ஆழ்ந் திருத்தல். ஒரு சமயம் அலட்சியமாகவும் மறு சமயம் கோபமாகப் பேசுவதும் காரியங்களைச் செய்வது மாக வும் இருப்பார். "பரபரப்பு. பலவீனம். அல்ப காரணங்

களாலும் திடுக்கிடுதல். மன வேலை செய்யப் பயப்படுதல். மிக எளிதிலே கோபம் ஏற்பட்டுத் தூக்கி எறிந்து பேசுவார். மந்த குணம்; மெதுவாகப் பதில் சொல்வார்; மெதுவாக நடப்பார். வாழ்க்கையில் வெறுப்பு. "நிலை கொள்ளாமை, பரபரப்பு, இடை விடாமல் நடந்து கொண்டே இருப்பார், ஒரு விஷயம் கூட உட்கார மாட்டார், நிற்க மாட்டார்." "அறையின் மூலைகளிலிருந்து கொண்டு பலர் தன்னைப் பழிப்பதாய் நினைத்தல்." (உடலின் உயிர்த் தண்ணீர் சேதமாகிவிட்டதால், குறிப்பாக அளவு மீறிச் சிற்றின்பத்தில் ஈடுபட்டு இந்திரியம் செலவழிந்து விட்ட போது இத்தகைய விசித்திரமான மனக் குறிகள் உண்டாகும்).

உடல்:—உடல் மெலிவு. எலும்பு மூட்டுகள், குறிப்பாக முழங்கால் மூட்டுகளில் பலவீனம். சில உறுப்பு களை அசைக்க முடியாமல் பிடிப்பாக இருத்தல். மூத்தலில் அடிக்கடி சளுக்கு விழுதல். உள் உறுப்புகள் பல வற்றில் இரத்தப் பெருக்கு உண்டாகுதல். சிறிய காயங் களிலிருந்தும் ஏராளமான அளவு இரத்தம் பெருக் கெடுக்கும். உதடுகளில் வெடிப்பு; கீழ் உதட்டின் நடுவில் வெடிப்பு. படுத்திருக்கும் போதும் கைகள், பாதங் கள், முழங்கால் ஆகியவை சில்லென்று இருக்கும். பனிக் கட்டியைப் போலவே குளிர்ச்சியாய் இருப்பதும் உண்டு. பசி, விசேஷமாக இரவில் தோன்றும்; இரவில் பசி தோன்றி விழித்துக் கொள்வார்; புளிப்பான பொருள்களில் நாட்டம் கொள்வார். அளவற்ற பசி; "அடிக்கடி சாப்பிட வேண்டும், இல்லாவிட்டால் மயக்கம் உண்டாகும்." வியர்வை கந்தக நாற்றம் வீசும். தலைச் சுற்றல். முகம் வியாதிக் களையுடன் நிறம் கறுத்

திருக்கும்; கண்கள் குழி விழுந்து சுற்றிலும் நீலமான வலையமிட்டுக் காணப்படும். கண்களைச் சுற்றி உப்பி இருத்தல்; முகம் முழுவதுமே உப்பி இருக்கும். இரவில் ஏராளமான வியர்வை. சுரப்பிகளில் வீக்கம். வயிறு ஒட்டிப் போய்க் காலியாய் இருக்கும் உணர்ச்சி; சில சமயங்களில் ஸல்பரில் காணப்படுவதே போல காலை 11 மணிக்கும் இவ்வுணர்ச்சி ஏற்படலாம். காது கேட்பது குறைவாகும்; குறிப்பாக மனிதர்கள் பேசுவது காதில் விழாது. மூச்சு விடத் திணறுதல்: அடிக்கடி விழித்துக் கொள்வதும் சிறிய தூக்கம் தூங்குவதும்.

உபாதி கூடுதல்:—வியாதியஸ்தருக்கு மிக எளிதிலே நீர்க் கோர்வை உண்டாகும்: அத்துடன் தவறுமல் மார்ச் சளி தோன்றும் குணமும் இருத்தல். மூக்கிலுள்ள நீர்க் கோர்வை கீழே இறங்குதல். "பருவ நிலையில் திடீரென்று மாறுதல் ஏற்படும் போதும், விசேஷமாக இடியுடன் புயல் காற்று வீசும் போதும் வியாதியஸ்தருக்குக் கவலையும் பயமும் தோன்றி அச்சமயம் உள்ள எல்லா உபாதிகளும் கூடுதலாகும்" என்று பாரிங்டன் எழுதியிருக்கிறார்.

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):—இடது பக்கமாகவோ, முதுகைக் கீழே வைத்தோ அல்லது வலியுள்ள பாகத்தைக் கீழே வைத்துப் படுத்தால் உபாதி அதிகமாகும். மன உணர்ச்சிகள் சற்றே அதிகரித்தாலும், கூடான உணவு, உப்பு ஆகியவைகளைச் சாப்பிட்டாலும், பருவ நிலையில் திடீரென்று மாறுதல் ஏற்படும் போதும், குளிர் காற்றினாலும், அளவு மீறிச் சிற்றின்பத்தில் ஈடுபட்டதாலும், மன வேலை செய்து சோர்வு தோன்றினாலும், காலை, மாலை ஆகிய நேரங்களிலும் உபாதிகள் கூடுதலாகும்.

இடது பக்கமாய்ப் படுத்தால் இருமல் அதிகமாகும். மார்பில் அல்லது இடது சுவாச கோசத்தின் கீழ்ப் பகுதியில் கடுமையான வலி. இடது பக்கமாய்ப் படுத்தால் மிகவும் அதிகமாகும். இரவில் இடது பக்கமாய்ப் படுத்தால் மனக் கவலை உண்டாகும். சூடான இடத்திலிருந்து குளிர்ந்த இடத்துக்குப் போனால் இருமல். பேசுவது, சிரிப்பது, வாய் விட்டுப் படிப்பது, பானங்களைக் குடித்தல், உணவு உட்கொள்ளுதல் ஆகிய காரியங்களால் இருமல் அதிகரிக்கும். முழங்காலில் பலவீனம், நடந்தால் அதிகமாகும். அளவு மிஞ்சி உப்பைத் தின்றதால் உண்டாகும் கோளாறுகள். சலவைத் தொழிலில் ஈடுபட்ட பெண்களுக்கு ஏற்படும் பல் வலி அல்லது துணி துவைத்தால் பல் வலி தோன்றுதல், தொண்டைக் கட்டு மாலையில் அதிகரிக்கும்.

உபாதி குறைதல்:—சாப்பிட்டால், உடம்பைத் தேய்த்து விட்டால், உட்கார்ந்து கொண்டால் சௌகரியம் உண்டாகும்.

குளிர்ந்த பானங்களில் அதிக விருப்பம்; அவைகளைச் சாப்பிட்டால் உபாதிகள் சௌகரியமாகும். குடித்த பானங்கள் வயிற்றினுட் சென்று சூடானவுடன் வாந்தி செய்யப்படும். பனிக் கட்டி, மிகக் குளிர்ச்சியான பானங்கள், அல்லது உணவு ஆகியவைகளை உட்கொண்டால் சிறிது நேரம் வாந்தி இல்லாமல் இருக்கும். அவை வயிற்றினுள்ளே சூடான மறுகணமே வாந்தி மீண்டும் ஆரம்பித்து விடும். இரத்தம் வாந்தியாகும் போகும் போது குளிர்ந்த தண்ணீரைக் குடித்தால் சௌகரியமும் ஏற்படும்.

விசேஷக் குறிகளின் விளக்கம்

எரிச்சல்:—பாஸ்பரஸின் மிக முக்கிய குறிகளில் ஒன்று எரிச்சல். வாய், வயிறு, ஆசன வாய், முதுகெலும்பு, கைகள், மார்பு, சுவாச கோசங்கள் முதலிய இடங்

களில் எரிச்சல். தோல்பட்டை எலும்புகளின் இடையில் எரிச்சல். முது கெலும்பில் பல இடங்களில் எரிச்சல். முது கெலும்பில் கடுமையான எரிச்சல் கீழிருந்து மேலே ஓடுதல். உள்ளங் கால்களில் எரிச்சல். உள்ளங் கைகளில் எரிச்சல்.

இரத்தப்பெருக்கு :—அடிக்கடி இரத்தப் பெருக் கெடுக்கும் உடல் வாகு, சிறிய காயங்களிலிருந்தும் ஏராள மான இரத்தம் வெளியாகும் (ஒரு குண்டூசி குத்தினால் கூட அதிக அளவில் இரத்தப் பெருக்கு உண்டாகும்). உடலிலுள்ள பற்பல உறுப்புகளிலிருந்தும் துவாரங்கள் வழியாகவும் இரத்தம் வெளிப்படலாம். இரத்தம் ஏராளமாகவும் அடிக்கடியும் வெளிப்படும். தாராள மாய் வெளியாவதும் சிறிது நேரம் நிற்பதுமாய் இருக் கும். ஒரு சமயம் கொஞ்சமாகவும் மறு சமயம் ஏராளமாகவும் மாறி மாறி இரத்தம் பெருக் கெடுத்தல். குடல்களிலிருந்து மாமிசத்தைக் கழுவிய தண்ணீர் போன்ற இரத்தம் கலந்த கழிவுகள். மாதவிடாய்க்குப் பதிலாக சுவாச கோசங்களிலிருந்தோ, மூக்கிலிருந்தோ இரத்தம் கொட் டுதல். மாதவிடாயில் போக்கு குறைவாய் இருக்கும் போது மூக்கு, வயிறு, ஆசனவாய், மூத்திரக்குழாய் முதலிய ஏதோ ஒரு இடத்திலிருந்து இரத்தம் பெருகு தல். "வறட்சியுடனும் பிடிப்புடனும் கனப்பைத் தரும் இருமல் உண்டாகி இரத்தம் துப்பப்படுதல்." மூக்கில் கெட்ட சதை வளர்ந்து அல்ப காரணங்களாலும் இரத்தப் பெருக்கெடுத் தல்.

மூக்கு, சுவாச கோசங்கள், குடல்கள் ஆகியவைகளி லிருந்து இரத்தம் கலந்த கழிவுகள் வெளியாகுதல். மஞ்சள் நிறமுள்ள, இரத்தம் தோய்ந்த கோழை மிக விசேஷ மான குறியென்று பாரிங்டன் அபிப்பிராயப்படுகிறார்.

திடீர்க் குணம்:—குறிகள் திடீரென்று தோன்றுதல்; திடீரென்று உடல் சோர்வு தோன்றும்; திடீரென்று மயக்கம்; திடீரென்று வியர்வை; திடீரென்று கடுமையான வலிகள், திடீரென்று கண் பார்வை மறைதல். மனதுக்குப் பிடிக்காத விஷயங்களால் வியாதியஸ்தருக்குத் திடீரென்று உடல் சோர்ந்து விடும் (பாரிச வாதச் சோர்வு). மலப்பையினுள் ஏதாயினும் ஒரு பொருள் நுழைந்து விட்டால் உடனே வயிற்றுப் போக்கு.

காலி உணர்ச்சி:—வயிற்றின் உட்புறம் கூடாகவும் காலியாகவும் இருப்பது போல் தோன்றும் (அடி வயிறு முழுவதுமே பலவீனமாகவும் காலியாகவும் தோன்றுதல்). தலையிலும் மார்பிலும் கூட இவ்வுணர்ச்சி ஏற்படலாம்.

பிடிப்பு; விரைப்பு; மார்பில் (இடது பக்கம்) நடு மார்பெலும்புக்கு மேலே இறுகக் கட்டிய உணர்ச்சி. இரும்மல் மார்ச்சளி, சுவாசகோச வேக்காடு ஆகியவைகளிலும் இருதயக் கோளாறுகளிலும் மார்பில் இறுகிக் கட்டிய உணர்ச்சி. வறண்ட இரு லும் மார்பில் இறுகக் கட்டிய உணர்ச்சியும்; இரத்தம் துப்புவதும் ஏற்படலாம். எலும்பு மூட்டுகளில் அதிகப் பிடிப்பு; வலியும் இருக்கலா மென்ரு லும் பிடிப்பே அதிகமாய்க் காணப்படும். மூழங்காவிலிருந்து பாதங்கள் வரை பிடிப்பு. வாதரோகப் பிடிப்பு காலையில் அதிகமாகும்; விசேஷமாகக் கிழவர்களுக்கு ஏற்படும். சில இடங்களில் விரைப்பாய் இருத்தல். கனமான பொருள் மேலே வைக்கப்பட்டிருப்பது போல மார்பில் கனத்த உணர்ச்சி. மூளையில் பிடிப்பு இருப்பது போல் தோன்றுதல்.

வியர்வை :—இரவில் ஏராளமாக பிசு பிசுவென்று ஒட்

டும் குணமுள்ள வியர்வை, தூங்கும் போது அதிகமாகும். அதனால் சௌகரியம் ஏற்படாது.

பொய்த் தோற்றம்:—விளக்கைச் சுற்றிப் பச்சை நிறமுள்ள ஜோதி இருப்பதாகத் தோன்றும். 'ஒரே ஒரு நிறம் மட்டும் காணப்படும் போது பல வகையான நிறங்களைக் காண்பதாகச் சொல்வார்.'' ஆகாயத்தில் கறுப்பான புள்ளிகள் இருப்பது போல் தோற்றம். பார்க்கும் பொருள்கள் யாவும் சிவப்பாய்த் தோன்றுதல். படிக்கும் போது எழுத்துக்கள் சிவந்த நிறமாய் இருப்பது போல் தோன்றும்.

தலைச் சுற்றல்:—பல வியாதிகளுடன் தலைச் சுற்றல் சேர்ந்து காணப்படும், பாஸ்பரஸில் பல வகைப்பட்ட தலைச் சுற்றல்கள் இருக்கின்றன, ஒவ்வொரு வகையும் வெவ்வேறு காரணங்களால் கூடுதலாவதும் குறைவு படுவதுமாக இருக்கும். உட்கார்ந்திருக்கும் போது தலைச் சுற்றல். படுக்கையிலிருந்து எழுந்திருக்க முயற்சி செய்யும் போது அப்படியே பின் பக்கமாயச் சாய்ந்து விடுவார். நடக்கும் போது கள் குடித்தவர் போல் தள்ளாடுதல். மனதில் எண்ணிய விஷயங்களை மறக் கடிக்கும் தலைச்சுற்றல்.

விருப்பு:—நிறையச் சாறும் சுவையும், ஊக்கம் தரும் குணமும் உள்ள பழங்களை விரும்புதல்.. மீன், குளிர்ச்சியான பால், புளிப்பான பொருள்கள், உப்பு உறைப்புள்ள உணவு ஆகியவைகளில் விருப்பம்.

உணர்ச்சி அதிகரித்தல்:—லேசான வாசனை, வெளிச் சம், ஓசை, தொடுவது, புயல் காற்று ஆகிய காரணங் களால் உபாதிகள் மிகவும் அதிகமாகுதல். சிறிதளவு வேலை செய்தாலும் கால்களில் நடுக்கம். சிறிது தூரம்

நடந்தவுடன் பாரிசவாதம் வந்து விட்டது போல் சோர்வு. மலம் கழிந்த பிறகு களைப்பாய் இருத்தல்.

கடுமை: வேகம்: ஏராளமாய் இருத்தல் :—கடுமையான தாகம். பனிக்கட்டிபோல் குளிர்ந்த தண்ணீரைக் குடிக்க வேண்டுமென்று விரும்பு மளவுக்கு எரிச்சலுடன் தாகம். கடுமையான பசி, சாப்பிட்ட உடனேயும் ஏற்படும். கடுமையான அழுகையுடன் வருத்தமாய் இருத்தல். கடுமையான கோபம் உண்டாகும். கடுமையான சிற்றின்ப ஆசையால் வெறிபிடிக்கச் செய்யும்; பிறப்பு உறுப்புகளைப் பிறர் கண்ணில் படும்படித் துணியை விலக்கிக் கொள்வார். பிரும்மசர்ய வாழ்க்கையை மேற்கொண்ட வர்களுக்கும் இயற்கைக்கு மாறுன முறைகளில் சிற்றின் பத்தைப் பெறும் வழக்க முள்ளவர்களுக்கும் சிற்றின் பத்தில் அளவு மீறி ஈடுபட்டவர்களுக்கும் உண்டாகும் ஆண் தன்மைக் குறைவில் வியாதியஸ்தருக்குச் சிற்றின் பத்தில் கடுமையான ஆசைகள் ஏற்கனவே இருந்திருந் தால் இவ்வௌஷதம் தேவை. முதுகெலும்பில் கீழே இருந்து மேல் பக்கம் போகும் கடுமையான எரிச்சல். மார்பிலும் வயிற்றிலும் கடுமையான கிழிக்கும் வலிகள். கடுமைக் குணமுள்ள சுவாச கோச வேக்காடு. பயங்கர மான கனவுகள், கடுமையான புத்தித் தடுமாற்றம் (சாதாரணப் பிதற்றலுடனும் மந்த குணத்துடனும் இருக்கலாம்). ஏராளமான இரத்தப் பெருக்கு, ஏராள மான, களைப்பை உண்டாக்கும் வியர்வை. வயிற்றில் சென்ற உணவு குமட்டல் இல்லாமல் கவளம் கவளமாக எதிர் கழிக்கப் படுதல். மலம் ஏராளமாகவும் குழாயிலிருந்து தண்ணீர் கொட்டுவது போல் வேகமாகவும் வெளிப் படும். தலைமயிர் கொத்துக் கொத்தாகக் கொட்டும். பற்கள் மிக வேகமாய்ச் சொத்தையாகுதல்.

கண் பார்வை மறைதல் :-குருடாக்கும் குணம் பாஸ்பரஸில் இருக்கிறது. அளவு மீறிச் சிற்றின்பத்தில் ஈடுபட்டதால், உடலின் உயிர்த் தண்ணீர் செலவழிந்து போய் விட்டதால், டைபாய்டு சுரத்துக்குப் பிறகு, மின்னல் தாக்கியதால் ஆகிய காரணங்களால் குருடாகுதல். திடீரென்று (ஒரு விதமான காரணமும் தெரியாமல்) கண்கள் குருடாய்ப் போகும் போதும் உபயோகமாகும். விழிகளில் மெல்லிய தோல் வளருவதைப் பாஸ்பரஸ் தடை செய்திருக்கிறது, குணமாக்கியும் இருக்கிறது.

விசேஷமாகத் தாக்கப்படும் இடங்கள் :—எலும்புகளில் சொத்தை விழுதல், விசேஷமாகக் கீழ்த்தாடை (அதிலும் விசேஷமாக இடது பக்கம்). மேல் தாடை எலும்பில் சொத்தை விழுதல். தலை எலும்பில் மூண்டுகள் தோன்றுதல்; கிழிக்கும் வலிகள் உண்டாகும், இரவில் வலி அதிகமாகும், தொடை எலும்பில் மூண்டுகள், சுரப்பிகளில் வீக்கமுள்ள குழந்தைகளுக்கு முதுகெலும்பில் சொத்தை விழுதல். சப்பைகளிலும் மூழங்கால்களிலும் வெள்ளை வீக்கங்கள். கழுத்துப்பட்டை எலும்புகளிலும் குதிரை முகவெலும்புகளிலும் வீக்கம். இடது சுவாச கோசத்தை விட வலது சுவாச கோசமே அதிகம் தாக்கப் பட்டிருக்கும். மார்பில் கூர்மையான குத்து வலிகளுடன் சுவாசகோச வேக்காடு; இரும்பில் உண்டாகும் துருவைப் போல் கறுப்பான கோழை; வலது சுவாச கோசத்தின் கீழ்ப் பகுதியிலே வியாதி காணப்பட்டால் விசேஷமாகப் பயன் படும்.

தளர்ச்சி :—ஆசனவாய் திறந்த வண்ணமே இருக்கிறது என்ற உணர்ச்சியுள்ள வயிற்றுப்போக்கு. எப்பொழுதும் திறந்தே இருக்கும் ஆசனவாய் வழியே கடு கடுப்புடன் சளிப் பொருள் கசிதல். ஆசனவாய் அடிக்கடி திறந்து கொள்ளும்.

மற்ற குறிகள்

ஸ்தனங்களில் சீழ்க்கட்டி தோன்றும் போது எரிச்சல், பாயும் வலிகள், அக்கியைப் போல் தோற்றம், சிவந்த புள்ளிகள் அல்லது கோடுகள், தண்ணீர்போல் நீர்த்தும் நாற்றமும் உள்ள சீழ் ஆகிய குறிகள் காணப்படும். சுரப்பிகளிலும் எலும்பு மூட்டுகளின் அருகேயும் பவுத்திரச் சிரங்குகள். மலம் நீளமாய், மெலிந்து இறுகி நாயின் மலம் போல் காணப்படுவதுடன் சிரமப்பட்டுத்தான் வெளியாகும். தானுகவே மலம் வெளிப்படுதல்; ஆசனவாய் திறந்தே இருக்கும். பேச முடியாது; குரல்வளையில் அவ்வளவு வலி இருக்கும். குரல்வளை காய்ந்து புண்ணுய் இருக்கும். பேசவே முடியாதபடி குரல் கம்மி விடும். "முள்ளந்தண்டின் வியாதியால் படிப்படியாகப் பாரிசவாதம் வளர்ந்து வியாதியுள்ள தசைகள் ஓரளவு சுருங்கிப் போகும்." பெண்களுக்கு, விசேஷமாகக் கணவனை இழந்தவர்களுக்குச் சிற்றின்பத்தில் அளவு மீறிய ஆசை உண்டாகுதல். பெரிய புண்ணைச் சுற்றிலும் பல சிறிய புண்கள். திறந்திருக்கும் ஆசனவாய் வழியே வலியில்லாமல் இரத்தமும் சளிப்பொருளும் வெளிப்படுதல். ஆப்பரேஷன் செய்த பிறகு வாந்தி தோன்றுதல். வயிற்றில் துளையை உண்டாக்கும் புண்களுடன் காப்பிப் பொடி போன்ற பொருள் வாந்தி செய்யப் படுதல். சாப்பிட்ட பிறகு ஏராளமான ஏப்பம் விடுதல். முதுகெலும்பின் கீழ் நுனியை அமுக்கினுல் வலி தோன்றுதல். கல்லீரல் பருத்தும் கடினமாகவும் இருத்தல்; விஷத்தன்மை வாய்ந்த மஞ்சட் காமாலை. காயம் பட்டதின் காரணமாகச் சுரப்பிகளில் வீக்கம். நடக்கும்போது கணுக்கால்களில் சுளுக்கிக் கொண்டது போல் வலி. மூத்திரம் அளவு குறைந்து கெட்டியாகவும் கலங்கியும் இருக்கும். வயிற்றிலிருந்து களகள வென்ற ஓசை ஆரம்பித்துக்

கீழே குடல்களில் இறங்கிப் பிறகு வியாதியஸ்தரின் முயற்சியோ விருப்பமோ இல்லாமல் மலம் வெளியாகுதல் (டைபாய்டு சுரத்தில்).

உறவு :—ஆர்ஸனிகம், அல்லியம் ஸிபா இவ்விரண்டும் பாஸ்பரசுக்கு முன்னும் பிறகும் வேலை செய்யும். பாஸ்பரசுக்குப் பின் காஸ்டிகம் கொடுக்கப்படக் கூடாது. காபியாவும் நக்ஸ் வாமிகாவும் பாஸ்பரசை முறிக்கும்.

ஒப்பிடுதல் :—இரவில் பசி (சின். ஸல்ப், ஸோரினம், பல்ஸடில்லா, இக்னேஷியா, லைகபோடியம்). முதுகு ஒடிந்து போய்விடு மென்று நினைக்கும் அளவுக்கு முதுகு வலி (பிக்ரிக் ஆஸிட்). காம வெறியுள்ள புத்தி மாறாட்டம் (ஹயஸ்யாமஸ்). இளைஞர்கள் வேகமாக வளருதல் (ஐயோடியம்). மன வேலை செய்யப் பயப்படுதல் (காலி பாஸ், லைகபோடியம், ஸைலிஷியா). சிரமப்பட்டு மன வேலை செய்வதைத் தாங்க முடியாமை (நக்ஸ் வாமிகா). அடிக்கடி கண்கள் குருடாகுதல் (காஸ்டிகம். மெர்கூரியஸ் சொலு ஸைலிஷியா இவ்விரண்டையும் இதற்கு அடுத்தபடியாகச் சொல்லலாம்). காயம்பட்ட பிறகு சுரப்பிகள் வீங்குதல் (கோனியம்). தலை மயிர் கொத்துக் கொத்தாகக் கொட்டுதல் (நேட்ரம் மூர்). கருப்பையில் புற்று தோன்றியதால் மாதவிடாய் இடைக் காலங்களில் இரத்தப் பெருக்கு (லாச்சஸிஸ், நைட்ரிக் ஆஸிட், ஸீகேல்). சிறியகாற்றுக் குழாய்களில் வியாதி தோன்றும் போது ஏற்படும் மார்ச் சளி (இபிகாக்) மலம் கழித்த பிறகு பலவீனம் (கோனியம், நக்ஸ் வாமிகா). சிறு காயங்களிலிருந்தும் ஏராளமான இரத்தம் கொட்டுதல் (லாச்சஸிஸ்). டைபாய்டு சுரம் வந்து போன பிறகு கேளாமை (ஆர்ஸனிகம், பெட்ரோலியம்). மூலையில் பிடிப்பு (கிராபைடிஸ்). அல்ப காரணங்களாலும் ஏற்படுகிடும் குணம் (காலி கார்ப், நேட்ரம்மூர்).

குறிப்புகள் :—"இருதயத்தையும் சுவாச கோசங்களையும்

வலிமை பொருந்தியவையாகச் செய்ய உதவும் நமது டானிக் பாஸ்பரஸ் ஆகும்.'' (லிலியந்தால்).

"பாஸ்பரஸ் கொடுப்பதற்குச் சில மணி நேரம் முன்னதாக நக்ஸ் வாமிகாவை உயர்ந்த வீரியத்தில் ஒரே ஒரு வேளை கொடுப்பது பல சமயங்களிலும் நல்லது; அல்லோபதியர்களிடமிருந்து நம்மிடம் வரும் வியாதியஸ்தர்களுக்கு மிகவும் நல்லது" என்று J. B. பெல் கூறுகிறார்.

"பற்களைப் பிடுங்கிய பிறகு நல்ல சிவப்பான இரத்தம் பெருக் கெடுத்தால் பாஸ்பரஸ் மிகவும் உபயோக முள்ளது" என்று கெண்ட் சொல்கிறார்.

கொடுமை வாய்ந்த இவ்வெளஷதத்தை மிகவும் ஜாக்கிரதையாக உபயோகிக்க வேண்டும். முற்றிய நிலைமையிலுள்ள சுவாச கோச க்ஷயத்தில் இவ்வெளஷதத்தை மிக உயர்ந்த வீரியங்களில் கொடுக்கக் கூடாது. இவ்வித சமயங்களில் 30 அல்லது 200 வீரியம் போதுமானது. கடுமையான சுர முள்ள எல்லா வியாதிகளிலும் பாஸ்பரஸின் குறிகள் காணப்பட்டு அவ்வெளஷதம் கொடுக்கப்பட்டால் ஒரே ஒரு வேளையில் சுரம் தணிந்துவிடும். சுரம் தணிந்த பிறகு இரண்டாவது வேளை கொடுத்தால் நீக்க முடியாத கெடுதியைச் செய்துவிடும்.

பைடோலக்கா

(PHYTOLACCA)

முன்னுரை :—ஆழ்ந்தும் நீண்ட நாட்கள் உடலில் தங்கியும் வேலை செய்கிறது. மேகக் கிரந்தி, நாட்பட்ட மேக வெட்டை ஆகியவைகளால் தோன்றும் கோளாறுகளுக்கு விசேஷமாக ஏற்றது.

முக்கியமான குறிகளாவன : 1. புண்ணுள்ள உணர்ச்சி.

2. இசிவு வலி. 3. புண்ணுகுதல். 4. கல் போல் கடினமாகு தல். 5. சுரப்பிகளில் வீக்கம். 6. வேகமாகத் தோன்றுவதும் மறைவதும் (வலிகள்). 7. சோர்வு. 8. நிலை கொள்ளாமை.

பொதுவான குறிகள்

தகுதி :— வாத ரோகம், மேகக் கிரந்தி உள்ளவர்கள். பாதரஸத்தை உட் கொண்டதாலும் நாட்பட்ட மேக வெட்டையினாலும் தோன்றும் கோளாறுகள்.

மனம் :—உயிரின் மீது சிறிது கூட ஆசை இல்லை. தான் சாவது நிச்சயம் என்று முடிவு செய்தல். பற்களை அல்லது சுறுகளைக் கடித்துக் கொள்ள அடக்க முடியாத ஆவல்; இக்குறி குழந்தைகளுக்குப் பல் முளைக்கும் போது காணப்படலாம்.

உடல் :—அதிகக் களைப்பும் சோர்வும். எலும்பு களும் வேக்காட்டுடன் வீங்கி இருக்கும். உடம்பு முழு வதும் புண்ணுகவும் விரைப்பாகவும் இருப்பது போல் தோன்றுதல். வலிகள் இடம் மாறுதல். வாய் கசத் தல். துணுக்குகள் கலந்த கழிவுகள். சுற்றிலும் நீல நிற முள்ள வளையங்களுடன் கண்கள் குழிக்குள் சென்று விடுதல்.

உபாதி கூடுதல் :—குளிரும் ஈரக் கசிவு முள்ள பரு வக் காலங்கள் வியாதியஸ்தருக்கு ஒத்துக் கொள்ளாது.

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே) :— படுக்கையின் சூடு, மாதவிடாய்க் காலம், வலது பக்கமாய்ப் படுத்தல், விடியற்காலை 3, 4 அல்லது 5 மணி, காற்றில் நிற்பது முதலிய காரணங்களால் உபாதிகள் அதிகரிக்கும்.

டிப்தீரியாவில் சூடான பானங்களைக் குடிக்க முடியாது. வலியுள்ள போது இடை விடாமல் நடக்க ஆவல் (நிலை

கொள்ளாத தன்மை) ஆனல் நடந்தால் வலிகள் அதிக மாகும். நாட்பட்ட வாத ரோகம் மழைக் காலங்களில் அதிகரிக்கும்.

உபாதி கூடுதல் குறைவில் மாறுபாடுகள்: குளிர் காற்று, குளிர் காலம், குளிர்ந்த அறை ஆகிய காரணங் களால் உபாதி அதிகரிக்கும். அதே சமயத்தில் படுக்கையின் சூட்டினலும் அதிகமாகும். இது மெர். சொலுபுலிசைப் போல் இருக்கிறது.

விசேஷக் குறிகளின் விளக்கம்

இசிவு வலி: புண்ணுள்ள உணர்ச்சி:—உடம்பு முழு வதும் புண்ணுய் இசிவுடன் காயம் பட்டது போல் வலி; நிலை கொள்ளாமல் அங்கு மிங்கும் நடக்க விரும்புவார்; ஆனல் நடக்க முயற்சித்தால் இசிவு வலிகளும் புண் ணுள்ள உணர்ச்சியும் அதிகமாகும்.

வேகம்:—மின்விசை போல் வலிகள் பறக்கும்; பாய் வது போல் இருக்கும். வேகமாக இடம் மாறும். திடீரென்று தோன்றுவதும் மறைவதுமாய் இருக்கும்.

இடம் மாறுதல்: பரவுதல்: மாறித் தோன்றுதல்:—வலி கள் இடம் மாறிக் கொண்டே இருக்கும். ஸ்தனக் காம்புகளில் புண் உள்ள போது குழந்தை பால் குடிக்க ஆரம்பித்தால் வலி ஸ்தனக் காம்புகளிலிருந்து உடல் முழு வதும் பரவும். முது கெலும்பின் மேல் பக்கத்திலும் கீழ்ப் பக்கத்திலும் கூடத் தாவும். குடல்களில் இருந்த வலி மறைந்த வுடன் கால்களில் வலி தோன்றுதல். இருதயத்தில் வலி; வலி வலது கைக்குப் பரவும். தலையின் மூன் பக்கத்திலும் மார்பிலும் இருந்த வலிகள் பின் தலைக்கும் முதுகுக்கும் இடம் மாறுதல். தொடை நரம்பு வாத வலிகள் இடுப்பிலிருந்து தொடைகளின் பின் பக்கம் வழி

யாகக் கீழே இறங்குதல். டிப்தீரியாவிலும் தொண்டைச் சுரப்பிகளின் வேக்காட்டிலும் விழுங்கும் போது வலி கள் காதுகளுக்குப் பரவும் அல்லது பாயும்.

சுரப்பிகள் தாக்கப்படுதல்: முண்டுகள் உண்டாகுதல்: கல் போல் கடினமாகுதல்:—ஸ்தனங்கள் மிகவும் கடினமாய் வீக்கம், சூடு, எரிச்சல், வலி ஆகிய குறிகளுடன் காணப் படும். ஸ்தனங்களில் வேக்காடு தோன்றிய காலத்திலிருந்தே அவை கடினமாய் இருந்திருந்தால் இவ்வௌஷதம் விசேஷ மாக உபயோகமாகும்; ஆரம்பத்திலிருந்தே ஸ்தனங் களில் கடினமான உருண்டைகள் உண்டாகும் தன்மை காணப்படும் (இதற்கும் பசு மாடுகளின் மடிகள் கல் போல் கடினமாய்ப் போவதற்கும் பைடோலக்கா அனேக மாக ஒரு சஞ்ஜீவியே). ஸ்தனங்களிலும் அதன் காம்பு களிலும் தொட்டால் வலி உண்டாகுதல்; ஸ்தனங்களில் சீழ்க் கண்ட பிறகும் இக்குறிகள் விடாமல் காணப்பட் டால் பைடோலக்கா தேவையாகும். ஸ்தனங்களில் வலி யுடன் கூடிய முண்டுகள் ஏராளமாய்க் காணப்படும். ஸ்தனக் காம்புகள் வலியுடன் வெடித்தும் தோலுறிந் தும் இருக்கும். அக்குள்களிலுள்ள சுரப்பிகள் பருத் திருத்தல். கீழ்த் தாடையிலும் காதின் அருகிலும் உள்ள சுரப்பிகளில் வேக்காடு. கழுத்தின் வலப்பக்க முள்ள சுரப்பிகள் கடினமாய் இருத்தல். குணமும் ஆகாமல், சீழும் பிடிக்காமல் வீக்கமாகவே ஸ்தனங்கள் இருக்கும்; ஊதா நிறமாகவும் கல் போல் கடினமாகவும் இருக்கும். தலையில் மேகக் கிரந்தியினால் தோன்றும் முண்டுகள்.

புண்ணாகுதல்:—விரைகளில் வேக்காடு; சீழ்ப் பிடித் துப் பவுத்திரச் சிரங்கு போன்ற புண் தோன்றும். தொண்டையில் புண்கள். பிறப்பு உறுப்புகளில் புண்கள்.

பறங்கிப் புண். மேகக் கிரந்தியினால் உண்டாகும் சரு மக் கோளாறுகளும் புண்களும், விசேஷமாக முகத்தில். இங்கே "முகத்தில்" என்பதை நான்தான் தடித்த எழுத் தில் போட்டிருக்கிறேன். இவ்விசேஷக் குறி என் அனுப வக் குறிப்புகளிலிருந்து எடுக்கப்பட்டது. மேகக் கிரந் தியின் இரண்டாவது அல்லது மூன்றாவது நிலையில் தான் இச்சருமக் கோளாறுகள் தோன்றுகின்றன. புற்று நோயினால் ஏற்படும் புண்கள். புண்கள் அச்சில் வார்த்தது போல் இருக்கும். அவைகளின் அடியில் வெண்ணெய் போன்ற பொருள் ஒட்டிக் கொண்டிருக் கும்; சீழ் தண்ணீர் போல் நீர்த்தும் நாற்றமாகவும் இரத் தம் கலந்தும் இருக்கும்; பாயும் வலிகளும் உண்டாகும். ஸ்தனங்களில் வாய் பிளந்து பவுத்திரச் சிரங்கு போல் தோற்றத்துடன் அதிக வலியுள்ள புண்கள்; அவை களிலிருந்து நாற்ற முள்ள இரத்தம் கலந்த சீழ் வெளிப் படுதல்.

வெடிப்பு :—ஸ்தனக் காம்புகள் வெடித்துப் புண்ணாகி வலியுடன் இருக்கும்; குழந்தை பால் குடிக்கும் போது கடுமையான வலி; வலி உடல் முழுவதும் பரவுதல். ஆசன வாய் மலவடித்திருத்தல்.

கழிவுகளின் தன்மை :—நாற்றம் வீசுதல்; காரமாய், கெட்டியாய், நூல் போல் இழுபடும் தன்மையுடன் துணுக்குகளாகவும் இருக்கும். மலம், மாதவிடாய்ப் போக்கு முதலிய கழிவுகள் இவ்விதம் இருக்கும்.

சோர்வு :—பைடோலக்காவின் சோர்வு சிற்சில சமயங் களில் மிக வேகமாகத் தோன்றும்; மிகக் கடுமையாய் இருக்கும். ஆதலால் தான் டிப்தீரியாவுக்கு முக்கிய மான ஔஷதங்களில் ஒன்றாய் இருப்பதுடன் அவ்வியா

திக்குப் பிறகு தோன்றும் பாரிச வாதத்துக்கும் இது ஏற்றதாகிறது.

எரிச்சல் :—பொதுக் கூட்டங்களில் பேசுவோருக்கு நாட்பட்ட குரல் வளை வேக்காட்டுடன் தொண்டையில் கடுமையான எரிச்சல். டிப்தீரியா வியாதியிலும் மற்ற சில சமயங்களிலும் தொண்டையினுள் நெருப்புத் துண்டுகள் இருப்பதைப் போன்ற எரிச்சல். எரிச்சலுடன் ஸ்தனங்களில் வேக்காடு. ஏராளமான கண்ணீர்ப் பெருக்குடன் கண்களில் கடுமையான எரிச்சல்.

மற்ற குறிகள்

கைவிரல் மூட்டுகள் வீங்கிக் கடினமாகிப் பள பளவென்று மின்னுதல். டிப்தீரியா, மேக வெட்டை, மேகக் கிரந்தி அல்லது பாதரசம் கலந்த ஔஷதங்களை உட் கொள்ளுதல் முதலிய காரணங்களால் வாத ரோகமும் நரம்புகளில் வலியும் தோன்றுதல். உள் நாக்கு நீண்டு நீர்ச் சுரந்து கண்ணுடிக் குண்டு போலவே பளபளப்பாய் இருக்கும் (தொண்டைப் புண்). விழுங்கும் போது (டிப்தீரியாவில்) நாக்கின் வேர்ப் பாகத்தில் அதிக வலி. தொண்டைச் சுரப்பிகள், உள் நாக்கு, தொண்டையின் பின் பக்கம் ஆகிய இடங்களில் சாம்பல் நிற மூள்ள கெட்ட சதை ஒட்டிக் கொண்டிருத்தல் (டிப்தீரியாவில்). மூத்திரத்தைப் பிடித்து வைத்தால் பாத்திரத்தின் அடியில் சாக்கட்டி போன்ற வண்டல் படியும். தாய்ப் பால் கொடுக்கும் பெண்களுக்கு ஸ்தனங்களிலிருந்து கெட்டியான, தரம் கெட்டுப் போன பால் வெளிப்படும்; அளவும் குறையும். கடி. குதிகால்களில் வலியுடன் வாதரோகம்.

ஒப்பிடுதல் :—மாதவிடாய்க் காலத்தில் ஸ்தனங்களில்

வலி (கல். கார்ப்., கோனியம்). வெட்கம் இல்லாமை அதா வது பிறப்பு உறுப்புகளை வெளியில் தெரியும்படி ஆடை களை விலக்குதல் (ஹயஸ்யாமஸ்) காயம் பட்டுப் புண்ணுய் இருக்கும் உணர்ச்சி (ஆர்னிகா).

பிக்ரிக் ஆஸிட்

(PICRIC ACID)

முன்னுரை :—இவ்வௌஷதத்தின் வேலையை ஒரே ஒரு வார்த்தையில் சொல்ல வேண்டுமானுல் அவ்வார்த்தை **பலவீனம்** என்பதேயாகும். உடல், மனம் இரண்டிலும் பலவீனம். வியாதியஸ்தர் "ஐந்து அடி அடித்துப் போரில் போடப்பட்ட நெல்லுத்தாளை"ப் போல இருப்பார்.

பிக்ரிக் ஆஸிடின் உப்பு நல்ல மஞ்சள் நிறமுள்ள ஊசிகள் போல் இருக்கும். "குத்து மதிப்பாக" ஔஷதங் களை உபயோகிக்கும் வழக்கம் இவ்வௌஷதத்திலும் காணப்படுகிறது. **பிக்ரிக் ஆஸிட்** தேவைப்படும் வியாதி யஸ்தருடைய கண்கள், சருமம், மூத்திரம் ஆகியவை நல்ல மஞ்சள் நிறமாய் இருக்கும்.

பொதுவான குறிகள்

தகுதி :—கறுத்த உடலும் கை கால் விரல்களில் அழுக்குப் படிந்த தோற்றமும் உள்ளவர்கள். இரத்த சோகையுள்ளவர்கள்; வியாதியால் உடல் வலிமை குறைந்து இருப்பவர்கள்; மஞ்சட் காமாலை உள்ளவர் கள். உடலிலும் மனதிலும் சோர்வு உள்ளவர்கள்.

மனம் :—தனியே இருக்க விரும்புதல். அலட்சியம். வேலை செய்ய மனம் இல்லாமை. ஆண்களுடன் கலந்து பேச அவருக்கு விருப்பம் இருக்குமாயினும் கல்யாணம்

என்ற பேச்சை அவரால் பொறுக்க முடியாது. மன வேலை, உடல் வேலை இரண்டிலும் வெறுப்பு.

உடல்:—பார்வை மங்கிக் குழம்பி இருக்கும். கண்கள், சருமம், மூத்திரம் ஆகியவை நல்ல மஞ்சள் நிறமாய் இருக்கும். உடல் களைத்துக் கனமாய் இருப்பது போல் தோன்றும். நல்ல தூக்கம் இருந்த போதிலும் களைப்பு நீங்காமை. பகலில் தூக்கக் கலக்கமாக இருந்தாலும் இரவில் தூக்கம் வருவதில்லை. மதமதப்பு. எறும்பு ஊருவது போல் இருத்தல். பாதங்களில் சில்லிப்பு.

உபாதி கூடுதல்:—மழைக்காலம் ஒத்துக் கொள்வதில்லை.

உபாதி கூடுதல்:-(ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே):—கண் கோளாறுகள் செயற்கை வெளிச்சத்தைப் பார்க்கும் போது அதிகமாகும். சிறிதளவு மன வேலை செய்தாலும் உபாதிகள் கூடுதலாகும். தலைவலி மன வேலை செய்தால் அதிகரிக்கும்.

உபாதி குறைதல்:—தலையைத் துணியினால் இறுகக் கட்டினால் தலைவலி குறையும்.

விசேஷக் குறிகளின் விளக்கம்

உடல் சோர்வு:—உடல் முழுவதும் சோர்வுடன் கனமாய் இருக்கும் உணர்ச்சி. குறிப்பாகக் கால்களில் இக் குறி காணப்படும்; சிறிது தூரம் நடப்பது போன்ற உடல் வேலைகளால் அதிகமாகும். பலவீனம் மிகவும் அதிகமாய் இருப்பதால் வியாதியஸ்தர் கீழே படுத்துக் கொள்ள விரும்புவார். (மூத்திரத்தில் சர்க்கரை, அல்புமென் எனப்படும் வெள்ளைச் சத்து, பாஸ்பேட்டுகள்

ஆகியவை காணப்படும். மூத்திரத்துடன் ஏராளமான பாஸ்பேட்டுகள் வெளியேறுதல்). களைத்த உணர்ச்சி காலையில் தூங்கி எழுந்திருக்கும் போது அதிகமாகும்; திறந்த இடங்களில் சென்றால் குறையும்; பேசவும் எந்த விதமான வேலையாய் இருந்தாலும் அதைச் செய்யவும் விருப்பம் இல்லாமை. ஊக்கத்துடன் புத்தகங்களைப் படித்தால் முதுகெலும்பில் எரிச்சலும் அதிக பலவீனமும் ஏற்படுதல். அளவு மீறிச் சிற்றின்பத்தில் ஈடுபட்டதால் உண்டாகும் களைப்பு. நரம்புச் சோர்வு.

மனச் சோர்வு:—படித்தாலும் அதிகமான மன வேலை செய்தாலும் மூளை சோர்ந்து விடுதல். சிறிது நேரம் படித்தாலும் எழுதினாலும் மனச் சோர்வு; சிறிதளவு படித்தாலும் முதுகெலும்பில் எரிச்சலும், முடமான உணர்ச்சி, வலியுள்ள உணர்ச்சி, கனத்த உணர்ச்சி, வயிற்றுப் போக்கு முதலிய கோளாறுகளும் தோன்றுதல். மன உறுதி இல்லாமை. சிறிதளவு மன வேலையினாலும் தலைவலி தோன்றுதல்.

பாரிச வாத நிலைமைகள்:—உடல் அசதியும் சோர்வும் படிப்படியாக அதிகரித்து முடிவில் பாரிச வாத நிலைமை களையோ அல்லது பூரணமான பாரிச வாதத்தையோ தோற்றுவிக்கும்.

வெடித்தல்:—பிக்ரிக் ஆஸிட் ஒரு பெரிய வெடி மருந்து. அதனால்தானே என்னவோ, வெடித்தல் அதன் முக்கிய குறிகளில் ஒன்றாய் இருக்கிறது. தலை வெடித்துப் போய்விடுமோ என்று நினைக்கக் கூடிய கடுமையான தலைவலி. மானி அதிக நேரம் அல்லது இரவும் பகலும் இடைவிடாமல் விரைத்த வண்ணமே இருக்கும். மானி மிகவும் பருத்துப்போய் வெடித்துப் போய்விடு

மென்று தோன்றுதல். (சிற்றின்பத்தில் ஆசை. பாஸ்பரஸில் தழுவிக் கொள்ளப் பலமான ஆசை இருக்கும்).

மற்ற குறிகள்

படிப்படியாக அதிகரிக்கும் விஷத்தன்மை வாய்ந்த இரத்த சோகை (மேகக் கிரந்தி விஷத்தினுல் தோன்றியது). மேகக் கிரந்தியினுல் உண்டாகும் பாலுண்ணிகள். வருத்தம், கவலை ஆகியவைகளால் ஏற்படும் தலை வலி. எண்ணெய் போல் தோன்றும் மஞ்சள் நிறமுள்ள மலம். மூத்திரத் துவாரத்தில் வலியுள்ள சிரங்குக் கட்டிகள். வாய்ப் பக்கமும் முகத்திலும் சிவந்த நிறமும் வலியுமுள்ள சிரங்குக் கட்டிகள். எழுத்து வேலை செய்வோர், டைப் அடிப்போர் ஆகியவர்களுக்குக் கைகளில் ஏற்படும் பிடிப்பு.

ஒப்பிடுதல் :—அளவு மீறிச் சிற்றின்பத்தில் ஈடுபட்டதால் ஏற்படும் சோர்வு (பாஸ்பாரிக் ஆஸிட்). பெண்கள் எதிரே நிற்கும் போது (எந்தப் பெண்ணுய் இருந்தாலும்) சிற்றின்ப நினைவு உண்டாகும் (கோனியம்). முதுகில் எரிச்சல் (லகபோடியம், பாஸ்பரஸ்).

பிளாட்டினம் மெட்டாலிகம்

(PLATINUM METALLICUM)

முன்னுரை :—பிளாட்டினம் தங்கத்தைவிட விலை உயர்ந்த உலோகம். அதனுல் தானே என்னவோ, பிளாட்டினம் வியாதியஸ்தர் கர்வம் பிடித்தவராகவும் மமதை உள்ளவராகவும் இருக்கிறார். பெண்களுக்கே பெரிதும் பயன்படும் ஔஷதம் இது.

பொதுவான குறிகள்

தகுதி :—கறுத்த தலை மயிர், மெலிந்த உடல், தைரியம், மாதவிடாய் அடிக்கடி தோன்றுவதும்

ஏராளமான போக்குடன் இருப்பதும் ஆகிய இக் குணங்கள் உள்ள பெண்கள்.

மனம்:—1. கர்வம். கர்வமும் மமதையும் கொண்டு ஒருவரையும் மதிக்கமாட்டார். அன்பும் மரியாதையும் காட்டப்பட வேண்டியவர்களைக்கூட மதிக்கமாட்டார். எல்லா மனிதர்களும் எல்லாப் பொருள்களும் தன்னை விட அறிவிலும் உருவிலும் குறைந்தவர்களாகத் தோன்றும். 2. பிறரைக் கொலை செய்யத் தூண்டுதல். தன் குழந்தையையே கொலை செய்யத் தூண்டுதல் உண்டாகும். தன் கணவனைக் கொலை செய்ய வேண்டு மென்று தூண்டுதல். 3. பொய்யான மனத் தோற்றம். தான் மிகப் பெரியவளாகவும் மற்ற பொருள்களும் மனிதர்களும் உருவத்தில் மிகச் சிறியவர்கள் என்றும் தாழ்ந்த அந்தஸ்து உள்ளவர்களென்றும் நினைத்தல். தன் உடம்பின் உயரமும் அகலமும் அதிகரித்து வரும் உணர்ச்சி. 4. பயம். சாவு நெருங்கி விட்டது என்ற பயத்துடன் ஏக்கம். அதிக மனத் துயரம்: தன் அறிவு அழிந்து விடுமென்றும் தான் சீக்கிரத்தில் இறந்து விடுவோமென்றும் தோன்றும். 5. மன வேதனை. அல்ப காரணங்களாலும் மன வேதனை அடைதல். 6. சிற்றின்ப வெறி. ஆசை அளவு கடந்திருத்தல்.

உடல்:—முகத்தின் நிறம் அடிக்கடி மாறும். உடல் உறுப்புகளைத் துணியினால் கட்டியிருக்கும் உணர்ச்சி. ஒரு வாய் உணவு உட்கொண்டவுடன் பசி மறைந்து விடுதல். சங்கா குணத்தில் பந்துகள் தோன்றும் குறி. கால்களின் ஆடு தசைகளில் இழுப்பு. மலம் தீய்ந்து கடினமாய் இருக்கும். கால்களை அகற்றி வைத்துக் கொண்டு தூங்குதல்.

விசேஷக் குறிகளின் விளக்கம்

சிற்றின்ப ஆசை அதிகரித்தல்:—அளவு கடந்த சிற்றின்ப ஆசை, குறிப்பாக மணமாகாத கன்னிப் பெண்களுக்கு, சிற்றின்ப எண்ணங்கள், சிற்றின்பத்தில் ஈடுபட விருப்பம். பிறப்பு உறுப்புகள் ஆகியவை உரிய காலத்துக்கு முன்ன தாகவே பெரியதாகிவிடுவதுடன் அளவு கடந்தும் இருக்கும். பருவமடைவதற்கு முன்பாகவே இயற்கைக்கு விரோத மான வழிகளில் சிற்றின்பம் அடைதல். காமவெறி. பிள்ளைப்பெற்று அறையில் உள்ள போது கூடத் தோன்றலாம். தூங்கும்போது பிறப்பு உறுப்புகள் முழு வதும் வெளியில் தெரியும்படி ஆடைகளை விலக்கிக் கொள்ளும் பழக்கம். சிற்றின்பத்தைப் பற்றிய கனவுகள்.

உணர்ச்சி அதிகரித்தல்:—பிறப்பு உறுப்புகளில் மிக அதிகமான உணர்ச்சி ஏற்படும். அவ்விடங்களில் மெல்லிய துணி படுவதையும் அவளால் பொறுக்க முடியாது; பிறப்பு உறுப்புகளைப் பரிசோதனை செய்யும் போது வலிப்பு கூட உண் டாகலாம்; புணர்ச்சி செய்யும் போது அனேகமாக மயக்கம் வந்து விடும். பயம், வருத்தம், கர்வம், மனவேதனை ஆகிய உணர்ச்சிகளின் காரணமாக மனக் கோளாறு உண்டாகும்.

அறிப்பு: ஊறும் உணர்ச்சி:—பிறப்பு உறுப்புகளின் வெளிப்புறத்திலும் கருப்பையிலும் காமத்தைத் தூண் டும் அறிப்பு, ஊருவது போலவும் ஊசி குத்துவது போலவும் மத மதப்பாகவும் உள்ள உணர்ச்சிகள். பெண்ணின் பிறப்பு உறுப்புகளின் உள், வெளி இடங் களிலும் ஊசியினால் குத்தும் உணர்ச்சி.

குடல்களின் பலவீனம்:—மலச் சிக்கல்; குடல்களின் பல வீனத்தினால் மலத்தைக் கஷ்டப்பட்டுக் கழிக்க

நேரும். மலம் கழிக்க அடிக்கடி தூண்டுதல்; ஆனால் வெளியாகாது. மலப்பையிலும் ஆசன வாயிலும் மிருதுவான களி மண்ணைப்போல் மலம் ஒட்டிக் கொள்ளும். "வெளியூர்ப் பிரயாணம் செய்ய வேண்டிய அலுவல் உள்ளவர்களுக்கு அடிக்கடி பல வகைப்பட்ட உணவுகளையும் தண்ணீரையும் சாப்பிட நேருவதால் உண்டாகும் மலச்சிக்கல்." காரீய விஷம் உடம்பில் சேர்ந்ததால் தோன்றும் மலச்சிக்கல். பிளாட்டினுவில் மிகப் பிடிவாதகுணமுள்ள மலச்சிக்கல் இருக்கிறது.

இழுப்புகள்: வலிப்புகள்:—சுருங்குவது போலவும் நசுக்குவது போலவும் உள்ள தலைவலி. மாதவிடாய் தோன்றும் போது தசைகளில் சுருங்கும் உணர்ச்சி. தாடையில் இழுப்புகள். கால் ஆடுதசைகளில் இழுப்புகள். மூக்கின் அடிப்பாகத்தில் இழுப்புகள். கண்களில் இழுப்பது போல் வலிகள். காதுகளில் இழுப்பது போல் வலிகள்.

வலியுடன் கூடிய மாதவிடாயில் கொடுமையான வலிகளுடன் போக்கு கறுப்பாகவும் கட்டிகளுடனும் வெளிப்படும். போக்கு தோன்றுவதற்கு முன் வலிப்புகளும் கீழே இழுக்கும் உணர்ச்சியும் காணப்படும்.

மாதவிடாய் வழக்கத்தைவிட மிக முன்னதாகத் தோன்றும், போக்கு ஏராளமாய் இருக்கும்; பல நாட்களுக்கு நீடிக்கும். கறுப்பாகவும் கட்டிகளுடனும் வெளிப்படும்; நாற்றம் வீசும்; அதிக உணர்ச்சியும் சிற்றின்பத்தில் அதிக ஆசையும் தோன்றும்; மேலே எழுதியுள்ளபடி வலிப்புகளும் கீழே இழுக்கும் உணர்ச்சியும் காணப்படும்.

மதமதப்பு :—வலிகள் அல்லது இழுப்புகளுக்குப்

பிறகு அந்த இடங்களில் மதமதப்பு. முகத்தின் வலப் பக்கம் சில்லிப்பு, ஊருவது, மதமதப்பு ஆகிய உணர்ச்சி களுடன் இருக்கும்.

மாறித் தோன்றுதல் :—உடல் குறிகளும் மனக் குறி களும் மாறி மாறித் தோன்றும்; அதாவது உடல் குறி கள் மறைந்தவுடன் மனக் குறிகள் தோன்றும்; மனக் குறிகள் மறைந்தவுடன் உடல் குறிகள் தோன்றும். குணமும் மாறுபடும்; ஒரு சமயம் சந்தோஷமாகவும் மறு சமயம் வருத்தமாகவும் இருப்பார். ஒரு சமயம் சிரிப்பார், மறு சமயம் கதறுவார்.

முறை வைத்துத் தோன்றும் குணம் : செல்லும் திசை :— குறிகள் முறை வைத்துத் தோன்றும். வலிகள் வல மிருந்து இடம் செல்லும், (இடது பக்கத்தை விட வலது பக்கமே அதிகமாய்த் தாக்கப்பட்டிருக்கும்).

மற்ற குறிகள்

மலட்டுத் தன்மையுடன் சிணைப்பைகளில் வேக் காடு. தனுர்வாயு சம்பந்தமுள்ள உடல் விரைப்பு. அடி வயிற் றில் இசிவு வலியுடன் பெண்ணின் பிறப்பு உறுப்புப் பக்கமாகக் கீழே இழுக்கும் உணர்ச்சி. வலிகள் கொஞ்சங் கொஞ்சமாக அதிகமாகி அதே போல் கொஞ்சங் கொஞ்சமாகக் குறையும்.

ஒப்பிடுதல் :—பருவம் ஆகுவதற்கு முன்பாகவே இயற் கைக்கு மாறுன வழிகளில் சிற்றின்பம் அடைவதால் தோன்றும் கோளாறுகள் (ஸ்டாபிஸாக்ரியா). மிருதுவான களி மண்ணைப்போல் ஒட்டிக் கொள்ளும் மலம் (அலுமினு). வலிகள் கொஞ்சங் கொஞ்சமாக அதிகரிப்பதும் அதே போல் குறைவதும் (அர்ஜண்டம் நைட்ரிகம், ஸ்டான்னம்) மண மாகாத கன்னிகளுக்குப் பிறப்பு உறுப்புகள் அளவு

கடந்து வளர்ந்திருத்தல் (**காலி பாஸ்**). வெளியூர்ப் பிரயாணம் செய்வோரின் மலச்சிக்கல் (**இக்னேஷியா**). நெருப்பில் கருகியது போன்ற மலம் (**பிரயோனியா**).

ப்ளம்பம்

(PLUMBUM)

முன்னுரை :—காரீயம் கலந்த வர்ணங்களைப் பூசியுள்ள வீடுகளில் குடியிருப் போரில் சிலருக்கு வயிற்று வலி முதலிய கோளாறுகள் உண்டாகின்றன. தண்ணீரில் கரையாத, ஆவியாகவும் மாறாத இப்பொருளினால் எப்படிக் கோளாறுகள் உண்டாகின்றன என்பதை ஹானிமன் கண்டு பிடித்த வீரியப்படுத்தும் முறையை ஏளனம் செய்வோரால் அறிய முடியவில்லை.

மிகவும் சுவையுள்ள வேறொரு விஷயமும் கவனிக்கப் பட்டிருக்கிறது. காரீயம் சம்பந்தமுள்ள வேலைகளில் ஈடுபடும் பெண்களுக்கு அடிக்கடி கருச்சிதைவு உண்டாகிறது, காரீயத்தை நேரிடையாகக் கையாளாத பெண்களுக்கும் அவர்களுடைய கணவர்கள் காரீயத்தைக் கையாண்டு வருபவர்களாய் இருந்தால் கருச்சிதைவு மிகவும் அதிகமாய் ஏற்படுகிறது.

ஒரு பெண்ணின் உடலின் காரீய விஷம் சேர்ந்து விட்டால் கருச்சிதைவு நேருகிறது. கருப்பையில் வளரும் சிசுவின் அளவுக்குத் தக்கபடி விரிந்து கொடுக்க வேண்டிய கருப்பைத் தசைகள் காரீய விஷத்தினால் அவ்வாறு விரிந்து கொடுக்க முடியாமல் போவதே கருசிதைவதற்குக் காரணமாகும். ஆணின் இந்திரியத்தில் கலந்துள்ள காரீய விஷம் பெண்ணின் கருப்பையில் இந்திரியம் சேர்ந்து கரு உண்டாகும் போதும் இவ்விதமே விஷமம் செய்கிறது. முதல்

வகையைவிட இரண்டாவது வகையில் காரீயம் அதிக சூட்சுமமான முறையில் இருக்கிறது. ஆகவே குறைந்த வீரியங்களைவிட உயர்ந்த வீரியங்களே மிக நன்முக வேலை செய்யுமென்பது இதிலிருந்து தெளிவாகிறது.

ஒரு பெண்ணின் உடலினுள்ளே அவள் கணவன் மூலம் காரீயம் புகுந்து விடும் மர்மமான இவ்விஷயம் ஹானிமனால் வெளியிடப்பட்ட வீரியப்படுத்தும் கொள்கையை உறுதி செய்கிறது.

பொதுவான குறிகள்

தகுதி :—மூதுகெலும்பில் தோன்றும் வியாதிகளுக்குத் தகுந்தது. மெதுவாகவும் படிப்படியாகவும் அதிகரிக்கும் குணமுள்ள வியாதிகள் (விடாமல் இருக்கும்), சில நாட்களுக்கு மறைந்தது போல் இருந்து விட்டு மீண்டும் தோன்றும். வியாதி அல்பமாக இருந்தாலும் மெதுவாகவே வளர்ந்தாலும் அதன் "மற்ற குறிகள் கடுமையாய் இருக்கும்", சுவாசகோச க்ஷயம் தோன்றும் உடல் வாகு.

மனம் :—எந்த விஷயத்தையும் புரிந்து கொள்ளக் கஷ்டமாக இருக்கும். ஞாபக சக்திக் குறைவு அல்லது அழிவு; தான் நினைத்ததை வெளியே சொல்ல ஏற்ற வார்த்தைகள் ஞாபகத்துக்கு வராமை. "பிறரை ஏமாற்றும் குணம்; தனக்கு வியாதி இருப்பதாகப் பாசாங்கு செய்தல்; தன் வியாதியை மிகைப்படுத்திச் சொல்லுதல்". உடல் உணர்ச்சிக் குறைவு (ஊசியினால் குத்தினால் உடனே வலி தெரியாது). தன்னைக் கொலை செய்து விடுவார்களென்று நினைத்துப் பயப்படுதல். மேகக் கிரந்தியினால் ஏற்படும் மூளைக் கோளாறுகளில் மற்ற குறிகளும் ஒத்திருந்தால் இவ்வௌஷதம் தேவைப்

படும். கொஞ்சங் கொஞ்சமாக எல்லா விஷயங்களிலும் சிரத்தை குறைந்து வரும்.

உடல் :—மஞ்சட்காமாலையில் வெள்ளை விழிகள், சருமம், மூத்திரம் மலம் ஆகியவை மஞ்சளாய் இருத்தல், முகம் வெளுத்து வியாதி பிடித்தது போல் தோன்றும். எண்ணெய் தடவியது போலவும் பளபளப்பாகவும் இருக்கும். உடல் முழுவதும் வெளுத்து, மஞ்சளாய் அல்லது சாம்பல் நிற மாய்ப் பிணம் போல் காணப்படும்; கன்னங்கள் ஒட்டிப் போகும். ஈறுகளின் ஓரங்களில் நீல நிறமுள்ள கோடு தெளிவாய்த் தென்படும்; ஈறுகளில் வீக்கமும் காரீயத்தின் நிறமுள்ள கோடும் இருக்கும்; கடினமான சிரங்குகளுடன் ஈறுகளில் வலி. பல உறுப்புகளில் எரிச்சல். குறிகள் மெதுவாக அதிகரிக்கின்றன; சில சமயங்களில் சில நாட்களுக்கு மறைந்திருந்து பிறகு மறுபடியும் தோன்றும். காய்ந்தும் அதிக உணர்ச்சியுடனும் உள்ள சருமம். சாப்பிடும் பொருள்கள் யாவும் புளிப்புத் தட்டுதல். பாதங்களில் நாற்றம் வீசும் வியர்வை. "உடம்பைக் கோணல் மாணலாக வைத்துக் கொண்டு படுத்துக் கொள்ளும் பழக்கம் ஏற்படுதல்". பற்கள் உள் கூடாய்ச் சொத்தை விழுந்து நொறுங்கும்; கறுப்பாக நிறம் மாறும். பார்வை மங்கும். கண்ணின் கருமணிகள் சுருங்கிவிடும். வாயில் தித்திப்புச் சுவை. எதைச் சாப்பிட்டாலும் தித்திப்பாகவே தோன்றும்; வாயில் தித்திப்பான உமிழ்நீருடன் நுரை.

உபாதி குறைதல்:—இறுக அமுக்கினாலும் தேய்த்தாலும் வலிகள் குறையும். பின் பக்கமாக உடலை வளைத்தால் வயிற்று வலி குறையும்.

விசேஷக் குறிகளின் விளக்கம்

உட்புறம் இழுத்தல்:—ஆசனவாய், தொப்பூழ், விரை

கள் ஆகியவை உட்புறம் இழுக்கப்படுதல். உட்புறம் இழுக்கப்படலாம்; அல்லது உட்புறம் இழுக்கப்படும் உணர்ச்சியும் இருக்கலாம். ஆசனவாய் உட்புறம் இழுக்கப்பட்டு வலியுடன் சுருங்கிவிடும். அடி வயிற்றுத் தசை முதுகெலும்புடன் சேர்த்துக் கட்டப் பட்டிருக்கும் உணர்ச்சியுடன் கடுமையான வயிற்று வலி. வயிற்றுவலியில் அடி வயிறு உட்புறம் இழுக்கப்பட்டு (பள்ளம் விழுந்து) இருக்கும். தொப்பூழ்ப் பக்கத்தில் ஏதோ ஒன்று இழுக்கும் உணர்ச்சியும் தொப்பூழ் உட்புறம் இழுக்கப்பட்டிருப்பதும். ஆசனவாய் உட்புறம் இழுக்கப் படும் குறியுடன் அதிக வேதனையும் உள்ள மூலம். கன்னங்கள் உட்புறம் இழுக்கப்பட்டுக் குழி விழுந்திருத்தல். மூத்திரக் காய்கள் சுருங்கி இருத்தல்.

வலிப்புகள்: வயிற்று வலி: தசைச் சுருக்கங்கள்:— பல வியாதிகளுடன் வயிற்று வலி சேர்ந்து தோன்றுகிறது. யோனி, கருப்பை, மூத்திரப்பை, தொண்டை முதலிய பல உறுப்புகளில் வலிப்புகள். கருச் சிதைவுடன் கருப்பையில் வலிப்புகள். பாரிச வாதம் தோன்றுவதற்கு முன்னுல் கை கால்களிலுள்ள தசைகளில் வலியும் சுருங்துவதும் நடுக்கமும் ஏற்படும். மலச் சிக்கலுடன் வயிற்று வலி. காக்கை வலிப்பு அல்லது அதைப் போன்ற வலிப்புகள்.

உடல் மெலிவு:—மிக வேகமாகவும் அளவு கடந்தும் உடம்பு இளைத்தல். தசைகள் நாளுக்கு நாள் இளைத்தல். கை கால்கள் இளைத்து உடல் மட்டும் பருமனுய் இருக்கும்.. பாரிச வாயுவினுல் தாக்கப்பட்ட உடல் பகுதிகள் இளைத்தல்.

பாரிச வாதமும் பாரிச வாத நிலைமைகளும்:—குடல் களின் பாரிச வாதத்தினுல் மலச்சிக்கல் உண்டாகும்.

மலம் கழிக்க முக்க முடியாது. மூத்திரம் கழிக்க வேண்டுமென்ற உணர்ச்சி இல்லாததால் (மூத்திரப் பையின் பாரிச வாதம்) மூத்திரம் கழிக்க முடியாமை. அறிவு பற்றிய பாரிச வாதத்தினால் (அப்படியும் சொல்லலாம்) விஷயங்களைச் சீக்கிரத்தில் புரிந்து கொள்ள முடியாமை, தான் நினைத்த செய்தியைப் பிறருக்குச் சொல்லச் சரியான வார்த்தைகள் நினைவுக்கு வராமை ஆகிய குறிகள் காணப்படும்.

உடலின் ஒரு பக்கத்தில் மட்டும் பாரிச வாதப் பலவீனம். ஒரு சில தசைகளில் மட்டும் பாரிச வாதம். குழந்தைகளுக்கு ஏற்படும் பாரிச வாதம். மணிக்கட்டுகள் தொங்குதல். பயானோ (Piano) வாத்தியத்தை வாசிப்போருக்கு சக்திக்கு மீறி வாசித்ததினால் நீட்டுத் தசைகளில் ஏற்படும் பாரிச வாதம். ப்ளம்பம் நீட்டுத்தசைகளையே அனேகமாகத் தாக்குகிறது. அதனால் உறுப்புகளை நீட்டுவது சிரமமாய் இருக்கும் அல்லது நீட்டவே முடியாமலும் போகும். சில சமயங்களில் மடக்குத் தசைகளிலும் பாரிச வாதம் ஏற்படலாம். நாளுக்கு நாள் அதிகமாகி வரும் பாரிச வாதம். தொண்டையில் பாரிச வாதம் உண்டாகி விழுங்க முடியாமல் போகும். உடல் மெலிந்து பலவீனத்துடன் ஆண் தன்மை முற்றும் அழிந்து போய்விடுதல்.

மாறித் தோன்றுதல்:—மலச் சிக்கலும் வயிற்றுப் போக்கும் மாறி மாறித் தோன்றும்; வயிற்று வலியும் நினைவுத் தடுமாற்றமும் மாறி மாறித் தோன்றும்; வயிற்று வலியும் பாரிச வாதமும் மாறி மாறித் தோன்றுதல்; தலைக் குறிகளும் அடிவயிற்றுக் குறிகளும் மாறி மாறி வருதல்.

செல்லும் திசை: பரவும் குணம்:—பெரும்பாலும் வலது பக்கமே தாக்கப்படுகிறது. குறிகள் இடமிருந்து வலம் செல்லும். அடிவயிற்றில் கொடூரமான வலி தோன்றி அது உடல் முழுவதும் பரவும். "அடி வயிற்றில் பயங்கரமான இறுக்கிப் பிடிக்கும் வலிகள்; வலிகள் எல்லாப் பக்கங்களுக்கும் பரவுதல்". "அடி வயிற்றில் கடுமையான வலிகள்; வியாதிபஸ்தரைப் பலமாய்க் கதறச் செய்யும்; இவ்வலிகள் மூளையைத் தாக்கி நினைவுத் தடுமாற்றம் உண்டாகலாம்; சுவாச கோசங்களைத் தாக்கி மூச்சுத் திணற வைக்கலாம்; அல்லது வேறு உறுப்புகளைத் தாக்கலாம்". "இரவில் அடி வயிற்றில் ஏதோ ஒரு உணர்ச்சி தோன்றி அதனால் மணிக்கணக்காக வியாதிபஸ்தர் தன் உடலை சோம்பல் முறித்துக் கொண்டே இருப்பார். பல பக்கங்களிலும் உடலை முறித்தல்".

மற்ற குறிகள்

மூத்திரக்காய்க் கோளாறுகளில் மூத்திரத்தில் வெள்ளைச் சத்தும் சர்க்கரையும் காணப்படுதல்.—மேக வெட்டைக்குப் பிறகு மூத்திரக் குழாய் அடைபட்டுப் போகுதல். குடல் பகுதிகள் ஒன்றுக்குள் மற்றொன்று செருகிக் கொண்டு வயிற்று வலியும் மலம் வாந்தி செய்யப்படுவதும் தோன்றும். மலச்சிக்கலில் மலம் கடினமாய்க் கறுப்பான உருண்டையான துண்டுகளாய் ஆட்டுப் புழுக்கை போல் காணப்படும்; பேந்து போல் உருண்டையான மலம் மிகச் சிரமத்துடன் வெளியாகும். கருப்பையில் வளர்ச்சி இல்லாததால், உள்ளே வளரும் சிசுவின் உருவத்துக்குத் தக்கவாறு கருப்பையின் தசைகள் வளர்ச்சியடையாததால் போதிய இடமில்லாமல் கரு

சிதைந்து விடுதல். கருப்பையில் சிசுவுக்கு இடம் இல்லை யென்ற உணர்ச்சி வியாதியஸ்தருக்கு உண்டாகும்.

உறவு :—காரீயத்தினால் உண்டாகும் கெடுதலான விளைவுகளை அலுமினா, ஆர்ஸனிகம் ஆல்பம், ஆண்ட்டிம். க்ரூடம், பெல்லடொன்னா, ஹிப்பார் ஸல்பர், நக்ஸ் வாமிகா, ஒபியம், பெட்ரோலியம், பிளாட்டினா, ஸல்ப்யூரிக் ஆஸிட், ஸிங்கம் மெட். ஆகியவை முறிக்கும். "ஸல்ப்யூரிக் ஆஸிடை நிறையத் தண்ணீர் விட்டுக் கலந்து ஷர்பத் போல் சாப் பிடுவது காரீயத்தினால் ஏற்பட்ட கோளாறுகளுக்கு மிக வும் சிறந்தது" என்று க்ளார்க் கூறுகிறார்.

ஒப்பிடுதல் :—தலைக் குறிகளும் அடிவயிற்றுக் குறி களும் மாறி மாறித் தோன்றுதல் (போடோபில்லம்), ஆசன வாய் உள்ளே இழுக்கப்பட்ட உணர்ச்சியுடன் வேதனையளிக்கும் மூலம் (லாச்சஸிஸ்). முகம் எண்ணெய் தடவியது போலவும் பள பளப்பாகவும் இருத்தல் (நேட்ரம் மூர், ஸானிகுலா, தூஜா), பேசும் போது தகுந்த வார்த்தை கள் கிடைவுக்கு வரச் சிரமப்படுதல் (அனகார்டியம், லாக் கானினம்). முதுகெலும்பிலிருந்து ஆரம்பமாகும் வியாதி கள் (பாஸ்பரஸ், பிக்ரிக் ஆஸிட், ஸிங்க்கம்). தொப்பூழ் உள்ளே இழுக்கப்படுதல் (போடோபில்லம்).

போடோபில்லம்

(PODOPHYLLUM)

முன்னுரை :—இவ்வௌஷதம் கல்லீரலிலும் உணவுப் பாதையிலும் விசேஷமாக வேலை செய்கிறது. சிறு குடலி லும் மலப்பையிலும் மேலும் விசேஷமாக வேலை செய் கிறது. வயிற்றுப் போக்கு, காலராவை ஒத்த வயிற்றுப் போக்கு, மலப்பை நழுவி வெளியே வருதல் ஆகியவை களில் பல சமயங்களிலும் தேவைப்படுகிறது.

போடோபில்லத்தைத் "தாவர இனத்திலுள்ள பாத ரஸம்" என்று அழைக்கின்றனர். மெர்கூரியலில் காணப் படும் கீழ்க் கண்ட குறிகள் போடோபில்லத்திலும் இருக் கின்றன. வாயில் கெட்ட நாற்றம். ஏராளமான உமிழ் நீர் உற்பத்தி, பற்களின் சுவடுகள் படிந்த நாக்கு. அதிக இரத்தம் சேர்ந்தும் வலியுடனும் இருக்கும் கல்லீரல் ஆகி யவை.

பொதுவான குறிகள்

தகுதி:—பொதுவாகத் திரூர் வியாதிகளிலேயே போடோபில்லம் உபயோகிக்கப்படுகிற தாயினும் நாட் பட்ட வியாதிகளிலும் தேவைப்படும். மெர்கூரியலைப் போலவே ஆழ்ந்து வேலை செய்வதுடன் மெர்கூரியலை முறிக்கவும் வல்லமை உள்ளதாய் இருக்கிறது.

பித்தம் அதிகரித்த நிலைமைகளுக்கு ஏற்றது. பாத ரஸத்தை அளவு மீறி உபயோகித்ததினால் அந்நிலைமை ஏற்பட்டிருந்தால் மிகவும் ஏற்றது.

மனம்:—வாழ்க்கையில் வெறுப்பு. மனச் சோர்வு; தான் இறந்து விடுவோ மென்று நினைத்தல் அல்லது தனக்குக் கடுமையான வியாதி இருப்பதாய் எண்ணுதல் (சீரணக் கோளாறுகளில்).

உடல்:—வாயிலிருந்து கெட்ட நாற்றம் வீசுதல். பற்களின் சுவடுகள் படிந்த நாக்கு. புளிப்புப் பொருள் களில் ஆவல்; ஆனால் அவைகளைச் சாப்பிட்டால் உபாதி கள் அதிகரிக்கும். பசியே இல்லாமை. தொண்டையை அடைத்தல் அல்லது வெறும் குமட்டல். அடிக்கடி தொண் டையை அடைத்தல். உடம்பு சில்லென்றும் கசகச வென் றும் வியர்வையுடனும் இருக்கும். மஞ்சட் காமாலை. மூத்திரம் கறும் பழுப்பு நிறமாய் இருக்கும். மலம்

வெளியான பிறகு மயக்கமும் ஒன்றுமே இல்லாத காலி உணர்ச்சியும். நடக்க ஆரம்பித்தவுடன் கால்களில் பிடிப்பு.

விசேஷமான குறிகளாவன: ஈறுகளை அல்லது பற்களைக் கடித்துக் கொள்ள அதிக ஆவல். கண்கள் பாதி மூடியிருக்கும்; தலையில் வியர்வை. எதிரொலிக் குறிகள் என்னும் தலைப்பின் கீழே பார்க்கவும். நாக்கில் எரிச்சல். வலது தோள்பட்டை யெலும்பின் கீழே வலி. குளிர் உள்ள நிலைமையிலும் சூடு உள்ள நிலைமையிலும் வாய் ஓயாமல் பேசுதல் (இது சந்தேகமில்லாமல் ஒரு மனக் குறி) கருவுற்ற முதல் சில மாதங்களில் குப்புரப் படுத்தால் தான் சௌகரியமாய் இருக்கும். வாயில் ஒட்டும் குண முள்ள சளி, பற்களை மூடிக் கொண்டிருக்கும். கல்லீரல் பகுதியில் கைகளால் தேய்க்க அடிக்கடி தூண்டுதல் ஏற்படும். அடி வயிற்றில் பலவீனமான காலி உணர்ச்சி அல்லது வேதனை உணர்ச்சி. மலேரியா சுரத்தில் சூடு அதிகமாகும் போதும் வியர்வை ஏற்பட்டுக் கொண்டிருக்கும் போதும் தூங்கும் குணம்.

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):— காலையில் வயிற்றுப் போக்கு. விடியற் காலை 2 முதல் 4 மணிக்குள் வயிற்றுப் போக்கு. கோடைக் காலத்திலும் குழந்தைகளுக்குப் பல் முளைக்கும் காலங்களிலும் ஏற்படும் கோளாறுகள். உணவு உட் கொண்டால் அல்லது தண்ணீர் குடித்தால் வயிற்றுப் போக்கு அதிகமாகுதல்.

விசேஷக் குறிகளின் விளக்கம்

கர்ஜனை செய்யும் குடல்கள்: ஏராளமான கழிவுகள்: அடிக்கடி வெளிப்படுதல்: வேகமாய் வெளிப்படுதல்;—மலம் வெளிப்படுவதற்கு முன்னால் குடல்களில் தண்ணீர் குமிழ் விட்டுக் கொண்டு ஓடுவது போல் பலமான இரைச்சல்.

மலம் கழிக்கத் திடீரென்று தூண்டுதல் உண்டாகும். பிறகு ஓடையிலிருந்து வேகமாய் ஓடிவரும் தண்ணீரைப் போல் வேகமாக தண்ணீர் போன்ற மலம் ஏராளமாய் வெளிப்படும். அடிக்கடி தூண்டுதலும் மலம் வெளிப்படுவதும்; மலம் நாற்றமாய் இருக்கும். அடிவயிற்றில், குறிப்பாக உயரே செல்லும் பெருங்குடல் பகுதியில் உறுமும் ஓசை ஏற்பட்டால் அதற்கு போடோபில்லம் ஏற்றதென்பது உறுதியாகும் என்று நாஷ் கருதுகிறார்.

நாற்றகுணம்:-போடோபில்லத்தின் மலம் அனேகமாக எல்லாச் சமயங்களிலும் நாற்றமாய் இருக்கும். மலம் நாற்றமாய் இல்லை யென்றால் அதற்குப் போடோபில்லம் ஏற்றதல்ல என்று கூடச் சொல்லலாம். வாயிலிருந்து கெட்ட நாற்றம் வீசும். உடம்பு நாறும். வியர்வை நாற்றமாய் இருக்கும். அபான வாயு அதிக நாற்றம் அடிக்கும்; அழுகிப் போன மீன் போல் நாற்றம் வீசும்.

புண்ணுள்ள வலி: பச்சைப் புண்ணுய் இருத்தல்:—அடி வயிறு புண்ணுய் இருப்பது போல் உணர்ச்சியுட் அமுக்கினால் வலியும். வயிற்றுப் போக்குடன் அல்லது மாதவிடாய்ச் சமயத்தில் அடி வயிற்றில் புண்ணுள்ள உணர்ச்சி காணப்படும். கருப்பை பருத்துத் தொட்டால் அதிக வலி உண்டாகும். ஆடை பட்டால் கூட வலி உண்டாகும். மாதவிடாய் தோன்றுவதற்கு முன்பும் வெளியாகிக் கொண்டிருக்கும் போதும் அடி வயிற்றில் அதிகப் புண்ணுள்ள உணர்ச்சி. கல்லீரல் பகுதியில் தொட்டால் புண் உள்ள உணர்ச்சியுடன் வலியும் அவ் வலி முதுகுப் புறம் செல்வதும். போடோபில்லம் சருமத்தில் பச்சைப் புண்ணை உண்டாக்குகிறது. பிறப்பு உறுப்புகளிலுள்ள சருமம் பச்சைப் புண்ணுய் அறிப்புடன் இருக்கும்.

வேதனை :—புண்ணுள்ள உணர்ச்சி, பச்சைப் புண் ணுய் இருத்தல், வேதனை ஆகிய இவை மூன்றும் ஒரு இனத்தைச் சேர்ந்தவையே. கல்லீரலில் மிகுந்த வேதனை ஏற்பட்டு அதனல் வியாதியஸ்தர் கல்லீரல் பகுதி யைத் தன் கைகளால் இடை விடாமல் தேய்த்துக் கொண் டும் ஆட்டிக் கொண்டும் இருப்பார். மனதில் ஏற்படும் வேதனையும் விசித்திரமாய்த் தான் இருக்கும். பரபரப் பாகவும் நிலை கொள்ளாமலும் இருத்தல்.

எதிரொலிக் குறிகள் :—சீரணக் கோளாறுகள், குடல் கோளாறுகள் ஆகியவைகளால் மூளை தாக்கப்படுதல். வியாதியஸ்தர் (பல சமயங்களிலும் குழந்தையாகத் தான் இருக்கும்) இரவு முழுவதும் பற்களைக் கடிப்பார்; தூங்கும் போது முக்குவார், முனகுவார்; கண்கள் பாதி மூடியிருக்கும்; அதிக மந்த குணம் (தூக்கக் கலக்கம்); தலை சூடாய் இருக்கும்; இருபக்கங்களிலும் தலையை உருட்டிக் கொண்டிருத்தல். பல் முளைக்கும் காலத்திலும் இதே போல் மூளை தாக்கப்பட்டுக் குறிகள் தோன்றும்.

நம்ப முடியாத தளர்ச்சி :—மலம் வெளியான பிறகு ஒவ்வொரு தடவையும் மலம் கடினமாய் இருந்தாலும் இளகி இருந்தாலும் மலப்பை ஒரு அங்குல நீளத்துக்கு நழுவிக் கீழே பிதுங்கும். மலம் கழிக்கும் போது அனேகமாகப் பலமாய் முக்க வேண்டி இருக்கும். போடோபில்லம் கேசுகளில் மலம் வெளியாவதற்கு முன்போ, வெளியாகும் சமயத்திலோ அல்லது பிறகோ எந்த சமயத்திலும் மலப்பை வெளியே நழுவி வரக் கூடும். ஸல்பரில் கடினமான மலம் வெளியான பிறகு தான் மலப்பை நழுவி வரும்.

கனமான பொருள்களைத் தூக்கியதால் அல்லது சக்

திக்கு மீறி உடல் வேலை செய்ததினால், குறிப்பாகப் பிள்ளைப் பெற்ற பிறகு, கருப்பை நழுவி வெளியே வருதல். பிள்ளைப் பெற்ற பிறகு அடி வயிறு தளர்ந்து தொங்குதல். கீழ் முதுகில் வலியுடன் கருப்பை நழுவுதல். கருவுற்ற காலங்களில் ஆசனவாய் நழுவுவதுடன் மூலம். பிறப்பு உறுப்புகளில் கீழே இழுக்கும் உணர்ச்சி. கல்லீரல் கீழே இழுக்கப்படுவது போல் தோன்றுதல். பிள்ளைப் பெற்ற பிறகு கடுமையான வலிகளும் கீழ் இழுக்கும் உணர்ச்சியும் ஏற்படுதல். மலம் வெளிப்படும் போது பிறப்பு உறுப்புகள் கீழே விழுந்து விடும் போல் தோன்றுதல்.

புளிப்புக் குணம்:—உண்ணும் உணவு புளித்துப் போய் புளிப்பு ஏப்பம் வருதல். வயிற்றில் வேதனையுடன் பிற்பகலில் அதிகப் புளிப்புத் தோன்றுதல்.

சூடு:—மலம் கழிக்கத் தூண்டுதலுடன் குடல்களில் சூடான உணர்ச்சி. வயிற்றில் சூடான உணர்ச்சி. சூடான, புளிப்பான ஏப்பம். சூடான, மஞ்சள் அல்லது பச்சை நிற முள்ள மலம். தலை சூடாய் இருத்தல்; தலையை இரு பக்கங்களிலும் உருட்டுதல் (ஒரு எதிரொலிக் குறி).

மாறித் தோன்றுதல்:—மேலே கூறப்பட்ட இரண்டு குறிகளை விட இது விசேஷமான தென்றே சொல்லப்பட வேண்டும். வயிற்றுப் போக்கு மூறை வைத்து மலச் சிக்கலுடன் மாறி மாறித் தோன்றும். வயிற்றுப் போக்கும் தலை வலியும் மாறி மாறித் தோன்றும். வயிற்றுப் போக்கு தோன்றியவுடனே பல நாட்களாய் நீடித்திருந்த தலை வலி மறைந்து போகும். குளிர் காலத்தில் தலை வலியும் கோடைக் காலத்தில் வயிற்றுப் போக்குமாக மாறி மாறி வருதல். ஒரு சமயம் விரைப்பை

வேக்காடும் மறு சமயம் கண்களில் வேக்காடுமாக மாறி மாறித் தோன்றும்.

எதிர்க் குண முள்ள குறிகள்:—மலத்தில் பித்தம் ஏராளமாய் இருக்கும் அல்லது சிறிது கூட இருக்காது. பித்தம் கலக்காத வெண்மையான மலம். போடோபில்லத்தில் வயிற்றுப் போக்கு மிகக் கடுமையாய் இருந்தாலும் வலி இருப்பதில்லை. ஆனால் சில சமயங்களில் மலம் கழிக்கு முன்பும் கழிக்கும் போதும் கழித்த பிறகும் வயிற்று வலி இருக்கலாம்.

தாக்கப்படும் பக்கங்கள்:—முக்கியமாக வலப் பக்கமே தாக்கப்பட்டிருக்கும். தொண்டை, சினைப்பை, மேல் வயிறு ஆகிய உறுப்புகளின் வலது பக்கம் தாக்கப்பட்டிருக்கும். மத மதப்புடன் வலது சினைப்பையில் வலி, வலது பக்கத் தொடையின் கீழேயும் ஓடும்.

மற்ற குறிகள்

அடி வயிற்றில் பலவீனமான அல்லது காலியாய் இருக்கும் உணர்ச்சி. சாப்பிட்டு இரண்டு அல்லது மூன்று மணி நேரம் சென்ற பிறகு வயிற்றில் வேதனை. மஞ்சட் காமாலையுடன் பித்தக் கற்களால் ஏற்படும் வயிற்று வலி. பல் முளைக்கும் போது வயிற்றில் வாயு சேர்ந்து உப்பிக் காலியில், விசேஷமாக விடியற் காலியில், பச்சை நிறமும் புளிப்பு நாற்றமு முள்ள மலம் வெளியாகுதல். குளித்து விடும் போது குழந்தைகளுக்கு உண்டாகும் வயிற்றுப் போக்கு; அழுக்குக் கலந்த, தண்ணீர் போன்ற வயிற்றுப் போக்கு. பாகு போன்ற சளிப் பொருள் கலந்த மலம். குருணை அரிசி போன்ற வண்டல் தங்கும் தண்ணீர் போன்ற மலம். மஞ்சட் காமாலை. "அளவு கடந்த பித்

தக் குறிகளுடன் கூடிய ஏறி இறங்கும் குண முள்ள சுரம்.'' இளம் பெண்களுக்கு மாதவிடாய் அடக்கப் படுதல்.

ஒப்பிடுதல்:—குடல், கருப்பை பற்றிய கோளாறு களுடன் தலை வலி மாறி மாறித் தோன்றுதல் (**ஆலோ**). மலப்பை கீழே நழுவுதல், விசேஷமாகக் குழந்தைகளுக்கு (**சைனு, சின்னினம் ஸல்ப்**). உணவு உட் கொண்டவுடனே வயிற்றுப் போக்கு (**ஆலோ, ஆர்ஸனிகம், சைனு, லகபோ டியம், மெர். சொலு**). ஈறுகளைக் கடித்தல் (**பைடோலக்கா**). நெருப்புச் சுட்டது போன்ற நாக்கு (**ஸாங்வினேரியா**). வலது தோள்பட்டையின் கீழே வலி (**செலிடோனியம்**).

போடோபில்லத்தில் வயிற்றுப் போக்கு விடியற் காலை யில் அதிகமாய் இருக்கும். ஆனல் **ஸல்பர், ஆலோ, ஸோரி னம்,** ரூமெக்ஸ் ஆகிய ஔஷதங்களில் காணப்படுவதைப் போல வியாதியஸ்தரைப் படுக்கையிலிருந்து எழுந்திருந்து ஓடச் செய்யும் குண முள்ள வயிற்றுப் போக்கு **போடோ பில்லத்தில்** இல்லை.

ஸோரினம்

(PSORINUM)

முன்னுரை:—''நமக்கு மிக நன்மை செய்யும் ஒரு பொருள் அப்பழுக்கற்ற தங்கத்திலிருந்து வந்தாலும் சரி, சாக்கடைக் கும்பியிலிருந்து வந்தாலும் சரி, அது எங் கிருந்து வந்தது என்பதைப் பற்றி நாம் விசாரிக்கவோ கவலைப்படவோ கூடாது'' என்று J. B. பெல் வயிற்றுப் போக்கு என்னும் வியாதி பற்றித் தான் எழுதிய நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.

பொதுவாகப் பார்க்கும் போது **ஸோரினம்** ஸோரா

விஷ முள்ள நிலைமைகளுக்கு ஏற்றதாகத் தோன்றினாலும் அந்த ஒரு காரணத்தை வைத்து ஸோரா விஷத்தால் தோன்றும் குறிகளை எதிர்க்க அவ்வௌஷதத்தை உபயோகிப்பது மிக ஆபத்தான விஷயமாகும். மொத்தக் குறிகளையும் ஆராய்ந்து பார்க்கும் போது ஸோரினம் ஒரு கேசுக்கு ஏற்றதாய் இல்லாவிட்டால் அதைக் கொடுக்கக் கூடாது. மிகுந்த எச்சரிக்கையுடன் உபயோகிக்கப்பட வேண்டிய மிகச் சில ஔஷதங்களில் ஸோரினமும் ஒன்று

பாஸ்பரஸைப் போல் ஸோரினம் வியாதியஸ்தரும் கால நிலையை அறிவிக்கும் மனிதக் கருவியாக இருப்பார்.

ஒரு வியாதியஸ்தரிடம் அருவருக்கத் தக்க நாற்றம் அல்லது பழக்க வழக்கங்களோ அல்லது வியாதி பிடித்த சருமமோ இல்லை யென்றால் அவருக்கு ஸோரினம் ஏற்றதல்ல. மிக முக்கியமான குறிகளாவன. 1. உடலில் அருவருக்கத்தக்க நாற்றம். 2. வியாதி பிடித்த சருமம். 3. உடல் கழிவுகள் அழுகிய மீன் போல் நாறும். 4. அளவு மீறிய அறிப்பு. 5. சிறிதளவு குளிரும் ஒத்துக் கொள்ளாமை. 6. நள்ளிரவில் பசி உண்டாகுதல். 7, கறும்பழுப்பு நிறமும் தண்ணீர் போல் நீர்த்தும், நாற்றமுமுள்ள மலம். 8. ஏராளமான வியர்வை.

பொதுவான குறிகள்

தகுதி :—சுரப்பிகள், சருமம் இவை பற்றிய வியாதிகள் உள்ளவர்களுக்கும் அடிக்கடி சரும வியாதிகள் ஏற்படும் தன்மையுள்ளவர்களுக்கும் விசேஷமாக ஏற்றது. குறிகளுக்கு ஏற்றபடி தேர்ந்தெடுத்துக் கொடுக்கப்பட்ட ஔஷதங்களால் குணம் ஏற்படுவதில்லை அல்லது மிகவும் மெதுவாக வேலை செய்வதும் சில நாட்களுக்கு மட்டுமே குணம் செய்வதாகவும் இருக்கின்றன என்ற நிலைமையுள்ள வியாதிகள். கடுமையான வியாதிகளுக்குப் பிறகு உடல்

தேரூமலேயே இருப்பவர்கள், சரும வியாதி உள்ளே அமுக்கப்பட்ட வரலாறு உள்ளவர்கள். உடல் இளைத்து வெளுத்து வியாதித் தோற்றமும் முன் கோபமும் உள்ள குழந்தைகள். உடம்பில் அருவருப்பை உண்டாக்கும் நாற்றத்தை உடையவர்கள். மேகக் கிரந்தி உள்ள குடும்பங்களில் பிறந்தவர்கள் அல்லது மேகக் கிரந்தி வியாதியின் மூன்றுவது நிலைமை உள்ளவர்கள். உடல் நலம் சீர்குலைந்து திறந்த இடங்களில் தலைகாட்டியவுடன் தலைச்சுற்றல் உண்டாகுதல்.

மனம் :—1. நம்பிக்கை இழத்தல். வியாதி தோன்றிய வுடன் வியாதியஸ்தருக்குத் தான் பிழைப்போம் என்ற நம்பிக்கை போய்விடும். 2. முன் கோபம். வியாதியுள்ள குழந்தைகள் இரவும் பகலும் தூங்காமல் அழுது கொண்டும் கோபித்துக் கொண்டும் இருத்தல். உணர்ச்சிகள் அதிகரித்து எல்லா விஷயங்களிலும் வேதனை உண்டாகுதல். 3. கவலை. பயம். கவலை, குறிப்பாக வண்டிகளில் ஏறிச் செல்லும்போது தோன்றும், தான் இறந்து விடுவோமென்று பயப்படுதல். தன் வியாபாரம் நசித்துப் போய்விடும் என்று பயப்படுதல். 4. பரபரப்பு. மன உணர்ச்சிகள் அதிகமாகும் சமயங்களில் உடலில் நடுக்கம் தோன்றும். பரபரப்புடன் நிலை கொள்ளாமை, அல்ப காரணங்களாலும் திடுக்கிடுதல். 5. வருத்தம். மத சம்பந்தமான ஏக்கம். அளவு கட்டுந்த வெறுப்பு. "தன் குடும்பத்துடன் சேர்ந்து சந்தோஷமாக இருக்காமல் அங்கே தனக்கு ஒன்றுமில்லை என்று நினைத்தல்." தற்கொலை செய்து கொள்ள வேண்டு மென்ற எண்ணங்கள்.

உடல் :—தகுதி, முன்னுரை ஆகிய தலைப்புகளின் கீழே பார்க்கவும். உள்ளங்கைகளில் வியர்வை, விசேஷமாக

இரவில் ஏற்படும். உடல் வெளுத்து. மெலிந்து கனைப் புற்று இருப்பார். சிறிதளவு வேலை செய்தாலும் பல வீனம். மலேரியா சுரம் ஏற்படுவதற்கு முன்னதாகக் காணப்படுவதைப் போல் உடம்பு முழுவதும் கனமாய்த் தோன்றும். புளிப்பான பொருள்களில் விருப்பம். முகத்தில் செப்பின் நிறத்தையொத்த சருமக் கோளாறு கள். மேல் உதட்டில் வீக்கம். உடல் முழுவதும் வலி யுடன் அல்ப காரணங்களாலும் சளுக்கு விழுவதும் காயம் படுவதும். வியாதி தோன்றுவதற்கு முதல் நாள் வழக்கத்துக்கு மாறுக உடம்பில் ஒரு வியாதியும் இல்லாமல் சுகமாய் இருப்பது போல் தோன்றுதல். உட்காரும் போது தூங்குதல். வழக்கத்துக்கு விரோதமாய் நல்ல தூக்கம் உண்டாகும். திருடர்கள், ஆபத்து நிறைந்த விஷயங் கள் ஆகியவைகளைப் பற்றிய பயங்கரமான கனவுகள். சுரத்தில் வியர்வையில்லாமல் சருமம் வறண்டிருக்கும்.

உபாதி கூடுதல்:—குளிர் காற்றும் பருவ நிலைமைகளில் மாறுதல் ஏற்படும் போதும் வியாதியஸ்தருக்கு ஒத்துக் கொள்ளாது. கோடைக் காலத்திலும் தகிக்கும் வெய் யல் அடிக்கும் போதும் கூட வியாதியஸ்தர் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை கம்பளியால் போர்த்திக் கொண்டு இருப்பார். திறந்த இடங்களில் இருக்க வெறுப்பு. தலையைத் திறந்து வைத்திருக்க வெறுப்பு. தண்ணீரில் குளிக்க வெறுப்பு.

ஸோரினம் வியாதியஸ்தர் பருவ நிலையை அறிவிக்கும் ஒரு மனிதக் கருவியென்று சொல்லப்படுகிறது. இது ஏன்? வான நிலையில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளை அவர் உடல் அளந்து பருவ நிலையை முன்கூட்டியே அறிவிக் கிறது. புயல் காற்று வீசுவதற்கு ஒன்றிரண்டு நாட்

களுக்கு முன்னதாக ஸோரினம் வியாதியஸ்தருக்கு உடலில் ஒருவிதப் பரபரப்புத் தோன்றும். புயல் காற்று அடிக்கும்போது அவருக்கு வியாதி தோன்றும்; மூலக் கோளாறுகள் உண்டாகும். புயல் காற்றுள்ள போது அவரால் தாங்க முடியாது. வெய்யலும் அவருக்கு ஒத்துக்கொள்ளாது.

விசேஷக் குறிகளின் விளக்கம்

கெட்ட நாற்றம் :—தேய்த்துக் குளித்த பிறகும் உடம்பில் கெட்ட நாற்றம் அடிக்கும். எல்லாக் கழிவுகளும் அளவு கடந்த நாற்றமாய் இருக்கும்; அழுகிய மீன் போல் நாறும். மலம், வெள்ளை ஒழுக்கு, வியர்வை, மாத விடாய்ப் போக்கு, காதுகளில் நீடித்துள்ள வியாதிகளில் வெளிப்படும் சீழ், தண்ணீர் ஆகியவை, உமிழ் நீர் ஆகியவும் நாற்றமாய் இருக்கும். மலம், கருப்பையிலிருந்து வெளிப்படும் கழிவு (வெள்ளை ஒழுக்கு), காதுகளிலிருந்து வெளியாகும் கழிவுகள் (நாட்பட்ட காதுச்சீழ்) ஆகியவை சகிக்க முடியாத நாற்றம் வீசும், மலத்தின் நாற்றம் வீடு முழுவதும் வியாபித்து விடும். மலம் கறும் பழுப்பு நிறமாகவும் தண்ணீர் போலவும் சகிக்க முடியாத நாற்றத்துடனும் வெளிப்படும். வாயில் அழுகிய சுவை. அழுகிப்போன முட்டையைப் போல் அபான வாயு நாற்றம் வீசுதல்.

வியாதி பிடித்த தோற்றம் :—சருமம் காய்ந்திருக்கும் : வியர்வையே இருக்காது; அழுக்குப் படிந்தது போல இருக்கும். சருமத்தில் அங்கு மிங்குமாகச் சில இடங்களில் மஞ்சளாய் இருக்கும். நன்றாகக் குளித்தாலும் மாறுதல் ஏற்படுவதில்லை. சருமம் மிருதுவாய் இல்லாமல், தடிப்பாய், எண்ணெய் தடவியது போல் பள பளப்பாய் இருக்கும்.

முகம் வியாதி பிடித்த தோற்றம் தரும். வாயின் ஓரங்களில் புண்ணுள்ள வலியும் பல சமயங்களில் அவ்விடங்கள் புண்ணாகவும் காணப்படும். தலைமயிர் காய்ந்து பளபளப்புக் குறைந்து அல்ப காரணங்களாலும் சிடுக்கு விழும். அடிக்கடி தலையைச் சிவிக் கொள்ள நேரிடும்.

பொறுக்க முடியாத அறிப்பு:—படுக்கையின் சூட்டினால் சருமத்தில் கடுமையான அறிப்பு; கடுமையான அறிப்புள்ள சரும வியாதிகள். படுக்கையின் சூட்டினால் சொல்ல முடியாத அளவுக்கு அறிப்பு அதிகமாகும். ஆனால் உடம்பைத் திறந்து கொண்டாலோ குளிர் எடுக்கிறது. காதுகளில் "உஸ்" என்ற ஓசையும் அது திடீரென்று நின்றவுடன் கடுமையான அறிப்பு உண்டாவதும். கோடைக் காலத்தில் அறிப்புடன் கூடிய சரும வியாதிகள் தோன்றுதல் அல்லது கடுமையாகுதல்.

மாறித் தோன்றுதல்:—தலைவலியும் பல் வலியும் மாறி மாறித் தோன்றுதல். இருமல் குறைந்தவுடன் முறை வைத்துத் தோன்றும் குணமுள்ள தலைவலி உண்டாகும். சருமக் கோளாறுகள் குளிர் காலத்தில் குறைந்து குளிர் காலம் கழிந்தவுடன் முறை வைத்துத் தோன்றும் தலைவலி தோன்றுதல்.

வியாதி உள்ளே அமுக்கப் படுவதால் உண்டாகும் கோளாறுகள்:—கந்தகம் அல்லது ஈய செந்தூரம் கலந்த களிம்புகளைத் தடவியதாலும் அவைகளால் சரும வியாதி உள்ளே அமுக்கப் பட்டதாலும் உண்டாகும் கோளாறுகள். அறிப்பு, அல்லது கரப்பான் படை உள்ளே அமுக்கப் பட்டதால் ஏற்படும் நாட்பட்ட இருமல்.

தன் கை கால்கள் உடம்பின் மீது படுவது தாங்க முடி

யாமை :—காச நோயில் கீழே படுத்து இரு கைகளையும் உட லின் மீது படாமல் பிரித்து வைத்திருந்தால் சௌகரியமாய் இருக்கும். வியாதியஸ்தருக்கு அளவு கடந்த பலவீனம் இருப்பதால் அவருடைய கைகள் மார்பின் மீது படும் போது அமுக்குவது போல் உணர்ச்சியும் மூச்சுவிடக் கஷ்டமும் உண்டாகும்.

வியர்வை :—திடீர் வியாதிகளுக்குப் பிறகு ஏராளமாய் வியர்வை உற்பத்தியாகி அதனால் எல்லா உபாதிகளும் தணியும். சிறிதளவு வேலை செய்தாலும் வியர்வை தோன்றும்.

இரத்தப் பெருக்கு :—இரத்தம் வாந்தி செய்யப் படு தல். மலம் இரத்தம் தோய்ந்திருத்தல், இரத்தம் கலந்த கோழை வெளிப்படுதல். சுவாசகோச க்ஷயரோகம் உள்ளவர்களுக்கு ஸோரினம் ஏற்றதாகவே தோன்று கிறது.

ஸோரினம் தேவைப்படும் சுவாசகோச க்ஷய ரோகத் தில் காணப்படும் குறிகளில் சிலவற்றைக் கீழே கொடுத்திருக்கிறேன். வலது பக்கத்திலிருந்து மார்பு முழுவதும் மெதுவாய் அமுக்கிக் கொண்டிருக்கும் உணர்ச்சி; மூச்சு விடச் சிரமம், உட்கார்ந்திருக்கும் போது அதிகமாகும்; படுத்தால் சிரமம் இருக்காது; பேசினால் அளவு கடந்த களைப்பு; மார்பின் உட்புறத்தில் புண்ணுய் இருப்பது போல் வலி; நெடுநேரம் இருமிய பிறகே கோழை வெளியாகும்.

பசி:—ஸோரினம் தேவைப்படும் வியாதிகளில் அவை தோன்றுவதற்கு முன்னே அல்லது சேர்ந்தோ பசி காணப்படும். முறை வைத்துத் தோன்றும் தலைவலி யில் வலி ஏற்படுவதற்கு முதல் நாள் அதிகப் பசி உண் டாகும். கீழேயும் பார்க்கவும்.

மற்ற குறிகள்

திடீர் வியாதிகளுக்குப் பிறகு தகுந்த காரணம் எது வும் இல்லாமல் அதிக பலவீனமும் பசி இல்லாமையும் நீடித்திருக்கும்.

கோடையில் மறைந்து குளிர் காலத்தில் தோன்றும் குணமும் வறட்சியும் செதில் செதிலாகத் தோல் உரியும் தன்மையும் உள்ள சருமக் கோளாறுகள்.

"வேறு ஏதோ ஒரு ஔஷதத்தினால் உடலில் இருந்த அறிப்பு மட்டும் நீங்கி கொப்பளங்களோ அல் லது கட்டிகளோ நீங்காமல் இருக்கும் போது ஸோரினம் உபயோகப்படும் (பாரிங்டன்).

"வயிற்றுப் போக்கு தோன்றுவதற்கு முன்னால் அடிக்கடி அல்பமான பசி உண்டாகுதல்."

நள்ளிரவில் பசி உண்டாகும்; எழுந்திருந்து எதையாவது சாப்பிட நேரும்.

நாட்பட்ட தலைவலியில் வலி வருவதற்குமுன் கண் களுக் கெதிரில் பளிச்சு பளிச் சென்று ஒளி வீசுதல், பார்வை மங்குதல், பார்வை மறைதல், கண்களின் முன்னே புள்ளிகள் தோன்றுதல் ஆகியவைகளில் ஏதோ ஒன்று ஏற்படும்.

வியாதியுள்ள பகுதிகளைத் தண்ணீரினால் கழுவ விரும்புதல்.

மார்பின் நடு எலும்பின் கீழ் புண்ணுள்ள உணர்ச்சி.

விரல் நகங்களைச் சுற்றிலும் சருமக் கோளாறுகள்.

தொண்டைச் சுரப்பி வேக்காட்டில் அச் சுரப்பி களில் அதிக வீக்கம், விழுங்குவது சிரமமாய் இருக்கும்; வலி உண்டாகும்; எரிச்சல் காணப்படும்: விழுங்கும்

போது கடுமையான வலிகள் காதுகளுக்குப் பரவும். வலது பக்கத்தில் புண்ணும் இருக்கும். அடிக்கடி தொண்டைச் சுரப்பிகளில் வேக்காடு தோன்றும் தன்மையை ஸோரினம் நீக்குகிறது.

குளிர் காலம் ஆரம்பித்தவுடன் ஒவ்வொரு வருஷமும் இருமல் உண்டாகும்.

அறுவடைக் காலங்களில் ஏற்படும் சுரம்; ஒவ்வொரு வருஷமும் சுரம் தவறாமல் தோன்றும். நாள் கணக்குக் கூடப் பிசகாது.

மூச்சுத் திணறல்; திறந்த இடங்களில் மூச்சு விட முடியாது; நின்று கொண்டிருக்கும் போது அல்லது உட்கார்ந்திருக்கும் போது மூச்சுவிட முடியாது; வீட்டுக்குப் போய்க் கீழே படுத்துக் கொண்டால்தான் ஒழுங்காக மூச்சுவிட முடியும் என்று நினைத்தல்.

பௌர்ணமி நாட்களில் மூத்திரம் ஒழுகிக் கொண்டிருத்தல், மன உணர்ச்சிகள் சிறிது அதிகரித்தாலும் கடுமையான கோளாறுகள் உண்டாகும். வலது பாதத்தைவிட இடது பாதம் சில்லிப்பாய் இருக்கும். வெள்ளை ஒழுக்கில் சகிக்க முடியாத நாற்றமுள்ள பெரிய கட்டிகள் கலந்திருக்கும்; இடுப்பில் கடுமையான வலியும் காணப்படும். முதுகு வலியுடன் பிடிவாத குணமுள்ள மலச்சிக்கல். தொண்டையிலிருந்து, நாற்றம் வீசும் கழிவுப் பொருள் வெளிப்படுதல் (காலி மூர்). "உள்ளே அமுக்கவோ அல்லது குணப்படுத்தவோ முடியாத, பல வருஷங்களாய் நீடித்துள்ள மேக வெட்டை; குறிகளுக்குத் தகுந்த ஔஷதத்தினாலும் பலன் கிடைப்பதில்லை."

பல்ஸடில்லா

(PULSATILLA)

முன்னுரை :—பல்ஸடில்லா பல வியாதிகளில் உபயோக மாகிறது; ஹோமியோபதி வைத்தியருக்கு விலை மதிப்புக் கூற முடியாத ஓர் ஔஷதமாகும். பெரும்பாலும் பெண் களின் ஔஷதமென்றே சொல்லலாம். ஏனெனில் அனேக மாக எல்லாப் பெண்களும் சாந்தகுணம் உள்ளவர்களாக வும் எளிதிலே அழும் சுபாவ முள்ளவர்களாகவும் (குறிப் பாக அவர்களுக்கு வியாதி ஏற்படும் போது) இருக் கின்றனர்.

மனக்குறிகளையே முக்கிய ஆதாரமாய்க்கொண்டு உப யோகிக்கப்படும் ஔஷதங்களில் பல்ஸடில்லாவும் ஒன்று.

பொதுவான குறிகள்

தகுதி :—மந்தகுணம் உள்ளவர்கள்; சீக்கிரத்தில் ஒரு முடிவுக்கு வரமுடியாமல் தயங்கும் சுபாவம் உள்ள வர்கள்; கோழைத்தனம், கண்ணீர்விடுதல், வெளியில் காண்பித்துக் கொள்ளாமல் உள்ளுர வருந்திக் கொண் டிருத்தல்; மங்கிய தலைமயிர், நீலக்கண்கள், வெளுத்த முகம் ஆகிய இலட்சணங்கள் உள்ளபெண்கள்; பெண் களுக்கும் குழந்தைகளுக்கும்; குறைவான, பல நாட் களுக்கு நீடித்திருக்கும் மாதவிடாய்ப் போக்குடன் உடல் பருத்துள்ள பெண்கள். வழக்கத்தை விடச் சில நாட் கள் தாமதமாகவே மாதவிடாய் தோன்றும் குண முள்ள பெண்கள்.

மனம் :—பயந்த சுபாவம்: வருத்தம்; பணிந்து போகும் குணம். மிக எளிதிலே அழுவார் அல்லது சிரிப் பார். தன்னுடைய வியாதிக்குறியை அழுகை இல்லாமல் அவளால் சொல்லமுடியாது. வருத்தமோ, சந்தோஷமோ

எதுவாய் இருந்தாலும் அழுகையே வரும். மன உணர்ச்சிகள் அதிகரித்தல். அல்ப காரணங்களாலும் கோபம் உண்டாகும்.

உடல்:—ஒவ்வொரு நாளும் காலையில் கண் விழித்த வுடன் வாயில் கெட்ட சுவை. காலையில் வாய் மிகவும் காய்ந்திருக்கும்; ஆனல் தாகம் இருக்காது. காய்ந்த உதடுகளை நாக்கினல் நக்கிக் கொள்வார்; ஆனல் தண்ணீர் குடிக்க மாட்டார். தாகம் இல்லாமல் வாய் மிகவும் காய்ந்திருக்கும் உணர்ச்சி. தாகம் இல்லாத நிலைமைகள். சுவை அறியும் சக்தி அழிதல். கொழுப்புப் பொருள்கள், மாமிசம், பால் ஆகியவைகளில் வெறுப்பு. ரொட்டி சாப்பிட்டால் வயிற்றில் கல்போல் கனமாய்த் தோன்றும், கொழுப்புச் சத்துள்ள உணவு (பன்றி மாமிசம்) வயிற்றைக் கெடுத்துவிடும். கை கால்கள் அடிக்கடி மறத்துப் போகுதல். அடிக்கடி கை கால்களை நீட்டிச் சோம்பல் முறிக்கும் குணத்துடன் நிலை கொள்ளாமல் இருத்தல். வியாதியுள்ள பாகங்களில் சதை குறைந்து ஒட்டிப் போகும். உடலின் மற்றப் பகுதியை விடத் தலையை மிக உயரமாய் வைத்துக்கொள்ள நேருதல். தலையின்மேல் கைகளை வைத்துக்கொண்டு படுத்திருத்தல். உடலின் ஒரு சில இடங்களில் மட்டும் வியர்வை.

உபாதி கூடுதல்:—வியாதியஸ்தருக்குக் குளிரும் உணர்ச்சி இருந்தபோதிலும் திறந்த இடங்களில் இருக்க விரும்புதல். உடம்பில் குளிருகிறது என்று எப்பொழுதும் சொல்லிக்கொண்டே இருப்பார்; இருந்தாலும் திறந்த இடங்களில் இருக்கும்போது அவருக்குச் சௌகரியமாய் இருப்பதாகத் தோன்றும். சூடான அறைகளிலும் சூடான காற்று, சூடான படுக்கை ஆகியவைகளாலும் உபாதிகள் கூடுதலாகும். பெண்களுக்குப் பருவமடையும் காலத்தில் தோன்

றும் கோளாறுகள் பல்ஸடில்லாவின் விசேஷக்குறிகள்.
கின்றன. பருவமடையும் காலத்தில் இரத்தசோகை, மார்ச்சளி, சுவாசகோச க்ஷயம் முதலிய கடுமையான வியாதிகள் தோன்றிய வரலாறுகளுடன் அதிலிருந்து தன் உடம்பு நேராய் இல்லையென்றும் கூறும் பெண்களுக்கு முதல் முதலாக ஆராயப் படவேண்டிய ஔஷதம் பல்ஸடில்லா தான்.

உபாதிகூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே):- நடமாட ஆரம்பித்தவுடன்; ஒய்வாய் இருக்கும்போது; இடதுபக்கமாக அல்லது வலிஇல்லாத பக்கமாகப் படுத்தால்; மாலை நேரங்களில்; நிறையச் சத்து உள்ள உணவை உட்கொண்டால்; வெண்ணெய்யையும் கொழுப்புச் சத்துள்ள உணவையும் உட் கொண்டால்; சாப்பிட்டு அதிக நேரம் கழித்து; ஆகிய காரணங்களால் உபாதிகள் கூடுதலாகும்.

மாலையில் வியாதி அதிக மாவதற்கு ஓர் உதாரணம் தருகிறேன்; சில்லிப்பு உணர்ச்சி மாலையில் கூடுதலாகும். கிழ்க்காணும் குறிகளையும் வியாதி மாலையில்அதிகரிக்கும் வகையில்சேர்த்துக் கொள்ளலாம். முதல் தூக்கம் தூங்க ஆரம்பிக்கும்போது கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டிருப்பார்; அதாவது இரவின் முற்பகுதியில் தூக்கம் வராது. மாலை நேரம் நெருங்கியவுடன் பிசாசுகளைப் பற்றிய பயம் தோன்றும். மழையில் நனைந்ததால் அல்லது கால்களில் குளிர்ந்த தண்ணீர் பட்டதால் ஏற்படும் வாத ரோகம். சில்லிப்பு உணர்ச்சி சூட்டினால் அதிகமாகும். சூடான அறையில் தாராளமாய் மூச்சு விட முடியாது.

கொயினை, பாதரஸம், டீ (தேயிலைப்பானம்), ஐஸ்க்ரீம் (Ice Cream) ஆகியவைகளை அளவுமீறி உட்கொண்டதால் ஏற்படும் கோளாறுகள்.

உபாதி குறைதல் (ஒவ்வொரு குறிக்கும்தனித்தனியே):-

மெதுவாக நடமாடுவதால் வலிகள் குறையும். மெதுவாக நடமாடினால் முதுகுவலி குறையும். அமுத்தித்தேய்த்தாலும் அமுக்குவதினாலும் சில குறிகள் குறைவாகும். குளிர்ந்த உணவு அல்லது பானங்களைச் சாப்பிடுதல் அல்லது குளிர்ந்த ஒற்றிடங்கள் ஆகியவைகளால் உபாதிகள் குறைவாகும். வாயில் குளிர்ந்த தண்ணீரை வைத்துக் கொண்டிருந்தால் பல்வலி தணியும்.

விசேஷக் குறிகளின் விளக்கம்

இடைவிடாமல் மாறுதல்; மாறி மாறித் தோன்றுதல் :— குறிகள் எப்பொழுதும் மாறியவண்ணமே இருக்கும்; மலம் ஒரு சமயம்போல் மற்றொரு சமயம் நிறத்திலோ தன்மையிலோ ஒன்றுபோல் இருப்பதில்லை. இடைவிடாமல் மாறிக்கொண்டே இருக்கும். சுரத்தில் குளிர் ஒரு தடவைபோல் மற்றொரு தடவை இருப்பதில்லை. வியாதிபஸ்தர் "ஒரு மணிநேரம் தனக்கு ஒருவித வியாதியும் இல்லாதவர் போலவும் மறுசமயமே (தீராத வியாதி வந்துவிட்டது போல்) தவிப்பதுமாக" இருப்பார். இரத்தப் பெருக்கு சில நிமிஷங்கள் அடங்கிப்போய்ப் பிறகு இரட்டிப்பு வேகத்துடன் வெளிப்படும்; "நின்றுவிட்டது போல் தோன்றும்; ஒன்றிரண்டு மணிநேரம் கழிந்த பிறகு மீண்டும் ஆரம்பிக்கும்" மாதவிடாய்ப் போக்கு நின்று நின்று வெளிப்படும். வியாதியஸ்தருடைய குணமும் அடிக்கடி மாறும். ஒரு சமயம் அடக்கமாகவும் குதூகலமாகவும் இருப்பார்; மறுசமயம் முன்கோபமும் சிடுசிடுப்பும் கண்ணீர் விட்டு அழுவதுமாய் மாறுவார். அழுகையுடன் பல சமயங்களிலும் கோபகுணம் சேர்ந்திருக்கும். சுரத்தில் கூடு அடிக்கடி ஏறி இறங்கும்." "ஒரு வகைக் குறிகள் தோன்றியவுடன் வேறொரு வகைக் குறிகள் மறைந்துவிடும்."

தாகம் இல்லாமை:—அனேகமாக எல்லாக் கோளாறுகளுடனும் தாகம் இல்லாமை சேர்ந்து காணப்படும். வாய் காய்ந்திருந்தாலும் தாகம் இருப்பதில்லை. முறைச் சுரங்களில் சூடுள்ள நிலைமையில் மட்டும் தாகம் இருக்கும்; ஆனால் வியாதியஸ்தருக்குச் சூடான உணர்ச்சியும் உடல்மேல் சூடும் சேர்ந்திருந்தால் தாகம் இருக்காது. குளிர்நிலைமையில் தாகம் இருக்காது; சூடுள்ள நிலைமையில் தாகம் இருக்காது அல்லது குளிர் மறைந்தவுடன் தாகம் ஆரம்பித்துச் சூடு அதிகமாக ஆகக் குறைந்து சூடு உச்சநிலையில் இருக்கும்போது மறைந்துவிடும். பிறகு சுரம் தணிய ஆரம்பித்தவுடன் தாகம் ஆரம்பிக்கும்; ஆனால் வியர்வை ஏற்படும் நிலைமையில் தாகம் கடுமையாய் இருக்கும். பல்ஸ டில்லாவில் காணப்படும் விநோதமான இத்தாகம் ஒரு விசேஷக் குறியாகும்.

கெட்டியான, காரம் இல்லாத, பசும் மஞ்சள் நிறமுள்ள கழிவுகள்:—சளிச்சவ்வுகளிலிருந்து இவ்விதக்கழிவுகள் வெளியாகும். மூக்கில் நீர்க்கோர்வை, கோழை, கபம், வெள்ளை ஒழுக்கு, காதுகளில் சீழ், கண்வேக்காடு, மேக வெட்டை முதலிய பல வியாதிகளிலும் நிலைமைகளிலும் இத்தகைய கழிவுகள் காணப்படும்.

தாவும் குணம்:—அங்கு மிங்கும் சஞ்சாரம் செய்து கொண்டே இருக்கும் வலிகள்; திடீரென்று ஒரு இடத்திலிருந்து வேறு ஒரு இடத்துக்குத் தாவும்; பல சமயங்களிலும் மூட்டுகளில் வீக்கமும் சிவ சிவப்பும் இருக்கும்.

ஒரு பக்கமே வியாதிகள் இழுத்தல்:—ஒரு பக்கத்தில் மட்டும் தலைவலி. ஒரு பக்கம் மட்டும் வியர்வை; இடது பக்கத்தில் மட்டும் வியர்வை அல்லது வலது பக்கத்தில்

மட்டும் இருக்கும். சுரத்தில் இங்கிலமை ஏற்படும். ஒரு பக்கத்தில் மட்டும் வலிகள்.

சில்லிப்பு உணர்ச்சி:—குடுள்ள இடங்களில் இருக்கும் போதும் உடலில் உள்ளுரக் குளிரும் உணர்ச்சி இடை விடாமல் இருக்கும். வலிகளுடன் சில்லிப்பும் சேர்ந்து தோன்றும். வலி எவ்வளவு கடுமையாய் இருக்கிறதோ அவ்வளவு கடுமையாகச் சில்லிப்பும் இருக்கும். சளிப்பொருளும் இரத்தமும் கலந்த மலத்துடனும் சில்லிப்பு உணர்ச்சியுடனும் காணப்படும் வயிற்றுக் கடுப்பு.

கசப்புச் சுவை:—நாக்கில் கெட்ட, கசப்பான சுவை. சாப்பிட்ட பிறகும் தண்ணீர் குடித்த பிறகும் கூட வாய் கசத்தல். வாயில் கெட்ட சுவை. விசேஷமாக விடியற் காலையில். எந்தப் பண்டமும் வாய்க்கு நன்றாய் இருப்பதில்லை அல்லது சுவையே தெரியாது. எல்லா வகை உணவுகளும் கசப்பாய்த் தெரிதல். கோழை கசப்பாய் இருத்தல்.

திடீர்க் குணம்:—வலிகள் திடீரென்று தோன்றும்; கொஞ்சங் கொஞ்சமாகக் குறையும். அல்லது மிக வேகமாக அதிகரித்து உச்ச நிலைமையை அடைந்தவுடன் திடீரென்று மறையும்.

வியாதியின் உருவ மாற்றம்:—தாடைகளைப் பற்றிய வியாதி மறைந்து ஸ்தனங்களை அல்லது விரைகளைத் தாக்குதல்.

மற்ற குறிகள்

மேக வெட்டையை உள்ளே அமுக்கியதால் விரை வேக்காடு, முத்திரப்பை வேக்காடு முதலிய கோளாறுகள்

தோன்றுதல். பிரசவ வலிகள் பல மில்லாமலும் ஒரு வலிக்குப் பிறகு மறு வலி அதிக நேரம் கழித்து ஏற்படுவதாகவும் இருக்கும். பாதங்களைத் தண்ணீரில் நனைத்தால் மாதவிடாய்ப் போக்கு உள்ளே அமுங்கி விடுதல். மாதவிடாய் மிகவும் தாமதமாய்த் தோன்றும்; போக்கு குறைவாயும் சில நாட்களுக்கு மட்டும் வெளியாகும். "மல்லார்ந்து படுத்தால் உடனே மூத்திரம் கழிக்க வேண்டிய உணர்ச்சி உண்டாகும்." கிறுக்கட்டிகள், விசேஷமாக மேல் இமைகளில்; சத்து நிறைந்த அல்லது கொழுப்பு மிகுந்த உணவை உட்கொள்வதால் இக்கட்டிகள் தோன்றும். வலிகள் விட்டு விட்டு வரும்; மூச்சுத் திணறலையும் மயக்கம் வரும் உணர்ச்சியையும் உண்டாக்கும். சுத்தமான காற்றை விரும்புவார். "பரபரப்பு. கணுக்கால்களில் கடுமையாய்க் காணப்படும்." தாக்கப் பட்ட காலைத் தொங்கவிட்டால் உபாதிகள் கூடுதலாகும். சின்னம்மை. அசுத்த இரத்தக் குழாய்கள் புடைத்திருக்கும். கீழ் உதட்டின் நடுவில் வெடிப்பு. வேக்காடுடன் அழுகியுள்ள புண்கள். பாதங்களில் நீர்ச் சுரப்புள்ள வீகசம், மாலையில் அதிகமாகும். மணமாகாத கன்னிப் பெண்களுக்கு ஸ்தனங்களில் பால் உண்டாகுதல்.

உறவு :—அர்ஜண்டம் நைட்ரிகம், லகபோடியம், ஸல்ப்யூரிக் ஆஸிட் ஆகியவை பல்ஸடில்லாவுக்கு முன்னும் பிறகும் நன்றாக வேலை செய்யும். அர்ஜண்டம் நைட்ரிகம் சரி வர வேலை செய்யா விட்டால் பல்ஸடில்லாவைக் கொடுக்க வேண்டும். காலி பைக்ரமிகம், லகபோடியம், லேபியா, ஸைலிஷியா, ஸல்பர் ஆகியவை பல்ஸடில்லாவுக்குப் பின் நன்றாக வேலை செய்யும்.

ஒப்பிடுதல் :—மாதவிடாய்க் காலத்தில் யோனி வழியாய்ப் போக்கு வெளியாகாமல் மூக்கிலிருந்து அல்லது

சுவாச கோசங்களிலிருந்து இரத்தப் பெருக் கெடுத்தல் (பிரயோனியா, பாஸ்பரஸ்). திறந்த இடங்களில் சௌகரியம் (ஸல்பர்). சூட்டினுல் உபாதிகள் அதிகரித்தல் (அபிஸ், ஐயோடியம்). கண்ணீர் விட்டு அழும் குணம் (ஸேபியா). [பல்ஸடில்லா வியாதியஸ்தர் தன் வியாதியைப் பற்றிச் சொல்லும் போது அழுவார். ஸேபியா வியாதியஸ்தர் அவருடைய வியாதியைப் பற்றி விசாரிக்கும் போது அழுவார். பல்ஸடில்லா வியாதியஸ்தர் தேறுதல் கூறினுல் அழுகையை நிறுத்துவார். நேட்ரம் மூர் வியாதியஸ்தருக்குத் தேறுதல் கூறினுல் கோபம் உண்டாகும்; அழுகை அதிகமாகும்.] மிக வேகமாக இடம்மாறும் வலிகள் (பென்ஸாயிக் ஆஸிட், காலி கார்ப், லாக்டிக் ஆஸிட், மங்கானம், லேடம்). சில்லிப்புடன் கூடிய வலிகள் பல்ஸடில்லாவில் காணப்படுகின்றன. ஆனல் காலி கார்பானிகத்தில் வலிகளுக்குப் பிறகு சில்லிப்பு உண்டாகும். வாயில் குளிர்ந்த தண்ணீரை வைத்திருந்தால் பல்வலி குறைதல் (பிரயோனியா, காபியா). திறந்த இடங்களில் இருக்க விரும்புதல் (கலகபோடியம், காலி ஸல்ப், பாஸ்பரஸ், ஸல்பர். டியுபர்குலினம்). குறைவான போக்குள்ள மாதவிடாய் (கிராபைடிஸ்). பல்ஸடில்லாவில் போக்குடன் சேர்ந்து வலி தோன்றும்; லாச்சஸிஸில் போக்கு வெளிப்பட ஆரம்பித்தவுடன் வலி குறையும். குளிர்ந்த தண்ணீரில் கால்களை நனைத்தால் மாதவிடாய்ப் போக்கு நின்று விடுதல் (ரஸ் டாக்ஸ், லொபேலியா), காலையில் இமைகள் ஒன்றோடொன்று ஒட்டிக் கொண்டிருத்தல் (அர்ஜண்டம் நைட்ரிகம், கல். கார்ப், கிராபைடிஸ்). சத்துள்ள அல்லது கொழுப்புச் சத்து மிகுந்த உணவை உட்கொண்டதால் ஏற்படும் சீரணக் கோளாறுகள் (காலி மூர்). சின்னம்மைக்குப் பிறகு வயிற்றுப் போக்கு (கார்போ வெஜி, சைனு). முதல் மாதவிடாய் தாமதமாய்த் தோன்றுதல் (காஸ்டிகம், கிராபைடிஸ், காலி கார்ப், ஸேபியா). விரைகளும் இந்திரிய நரம்புகளும் வீங்கி வலியுடன் இருத்தல் (க்ளமேடிஸ், ரோ

டோடெண்ட்ரன்). ஏறக்குறைய மாலை வேளையில் சுரம் (இக்னேஷியா, தூஜா).

குறிப்புகள் :—பல்ஸடில்லா முற்றினுல் **ஸைலீஷியா**. "நாட்பட்ட வியாதிகளைச் சிகிச்சை செய்ய ஆரம்பிக்கும் போது முதன் முதலாகக் கொடுக்கப்பட வேண்டிய சிறந்த ஔஷதங்களில் பல்ஸடில்லாவும் ஒன்று" என்று H. C. அல்லென் குறிப்பிட்டிருக்கிறார்.

பைரோஜென்
(PYROGEN)

முன்னுரை :—மாட்டிறைச்சியைத் தண்ணீரில் போட்டு அழுக வைத்து ஏறக் குறைய இரண்டு வாரங்கள் வெய்யல் படும்படி வைத்துப் பிறகு அதிலிருந்து **பைரோஜென்** ஔஷதம் தயாரிக்கப் படுகிறது. ஒரு சில வியாதிகளில் மட்டுமே இது உபயோகமாகிறது என்றாலும் உடலில் விஷப் பொருள்கள் சேர்ந்து தோன்றும் பல வகைப்பட்ட கோளாறுகளிலும் ஹோமியோபதி வைத்தியர்களுக்கு அக்கோளாறுகளை அடக்கியாள மிகப்பெரிய ஆயுதமாக இவ்வௌஷதம் விளங்குகிறது. குறிப்பாக 30, 200 ஆகிய வீரியங்களில் நன்றாக வேலை செய்கிறது. (இவ் வீரியங்களில் உபயோகம் செய்து வியக்கத்தக்க நற்பயனை நான் கண்டிருக்கிறேன்).

கீழ்க் காணும் வியாதிகளில் **பைரோஜென்** முக்கியமாகத் தேவைப்படுகிறது.

சீழ்ப் புண்கள், மலச்சிக்கல், வயிற்றுப் போக்கு வயிற்றுக்கடுப்பு, கரப்பான் படை, டைபாய்டு சுரம், விடாமல் அடிக்கும் சுரம். (சுவாசகோச க்ஷயம் போன்ற வியாதிகளில்), இன்புளுயன்ஸா சுரம், குடல்களில் புண், சுவாசகோச க்ஷயம். அழுகிய நாற்றம் கலந்த காற்றைச்

சுவாசித்ததால் ஏற்படும் கோளாறுகள். பிள்ளைப் பெற்ற பிறகு ஏற்படும் சுரம். சிழ் இரத்தத்தில் கலந்து ஏற்படும் சுரம். இருதயம் வேலை செய்யாமல் நின்று விடும் போல் தோன்றுதல். பொதுவான க்ஷயம், புண்கள் (பிடிவாத குணமுள்ளவை, விஷத்தன்மை வாய்ந்தவை).

பொதுவான குறிகள்

தகுதி :—நிலை கொள்ளாமை, உடம்பு முழுவதும் புண்ணைப் இருக்கும் உணர்ச்சி, இசிவு வலி முதலிய குறிகளுடன் இரத்தத்தில் விஷப்பொருள்கள் கலந்த நிலைமைகளுக்கு விசேஷமாக ஏற்றது; மரம், செடி, கொடிகள், இறந்த பிராணிகளின் உடல்கள் ஆகியவை அழுகி அதிலிருந்து வரும் காற்றை அல்லது பாதாள சாக்கடைகளிலிருந்து வரும் கெட்ட காற்றைச் சுவாசித்ததினால் தோன்றும் வியாதிகள். கருச்சிதைவு, பிள்ளைப் பேறு ஆகியவைகளுக்குப் பிறகு உடலில் விஷப்பொருள் சேருதல்; பிள்ளைப்பெற்ற பிறகு கருப்பையிலிருந்து வெளியாக வேண்டிய கழிவுப் பொருள் தண்ணீர் போல் நீர்த்தும், காரமாகவும் மிகுந்த கெட்ட நாற்றத்துடனும் இருக்கும்; அல்லது கழிவு சிறிது கூட வெளியாகாமல் அடக்கப்படுதல். பிணத்தை அறுக்கும் போது ஏற்படும் காயங்கள்.

"கை கால்களில் வலியுடன் தோன்றும் எல்லா சுரங்களுக்கும் பைரோஜெனியம் தகுந்தது."

விஷம் கலந்த நிலைமைகளில் "குறிகளை அனுசரித்து மிகவும் ஏற்றதென்று தேர்ந்தெடுத்துக் கொடுக்கப்படும் ஔஷதங்களால் குணம் ஏற்படாமை அல்லது குணம் நீடித்ததாக இல்லாமை."

முன்னொரு காலத்தில் (பல வருஷங்களுக்கு முன்ன தாகவும் இருக்கலாம்) உடலில் விஷம் கலந்த நிலைமை தோன்றி அதிலிருந்து உடல் நலம் ஒழுங்காய் இல்லை யென்று கூறும் வரலாறு உள்ள நாட்பட்ட கோளாறு கள். இவ்விதமான கேசுகளில் பெரும்பாலானவைகளில் வியாதியஸ்தருக்கு அடிக்கடி சீழ் உள்ள புண்கள் அல் லது சீழ்க்கொள்ளும் தன்மையுள்ள ஏதோ ஒரு வகை சருப வியாதி தோன்றும். சீழ்ப் பிடிக்கும் உடல் வாகைக் குறிகள் ஒத்திருந்த போதிலும் வேறு ஔஷ தங்களால் நீடித்த குணம் ஏற்படாமல் போகுமானால் அச்சமயங்களில் பைரோஜெனியம் அனேகமாகப் பயன் படும்.

கருச்சிதைவு அல்லது பிள்ளைப்பேறு நடந்த பிறகு உட லில் விஷம் கலந்து சுரம் ஏற்பட்டதாகவும் அதிலிருந்து தன் உடல் நலம் ஒழுங்காய் இல்லை என்று ஒரு வியாதி யஸ்தர் கூறினால் நாம் பைரோஜெனியத்தை நினைக்க வேண்டும்.

மனம்:—வாய் ஓயாமல் பேசுதல். எப்பொழுதும் ஏக்கம், பைத்தியக்கார எண்ணங்கள். கைகளும் கால் களும் ஏராளமாய் இருக்கும் உணர்ச்சி. மனக்குழப்பம். பொய்த் தோற்றங்கள். தான் இரண்டு பேர்களாய் இருப்பதாகத் தோன்றுதல். தான் மிகவும் பணக்காரர் என்று நினைத்தல். மன உணர்ச்சிகள் அதிகரித்தல். நிலைகொள்ளாமை.

உடல்:—கன்னங்கள் சிவந்து சூடாகவும் எரிச்சலுட னும் இருக்கும். மூச்சுக் காற்று சகிக்க முடியாத நாற்ற மாய் இருக்கும். நெற்றியில் ஏராளமான குளிர்ந்த வியர்வை. முகம்: வெளுத்துக் குழி விழுந்திருக்கும்.

பற்களில் ஊத்தை படிதல். நாக்கின் நடுவில் பழுப்பு நிறமுள்ள கோடு. மூக்கின் நுனி விசிறுவது போல் விரிந்து சுருங்கும். சேர்ந்தாற்போல் சில நிமிஷங்களுக்கு ஒரு பக்கமாய்ப் படுக்கமுடியாது; அடிக்கடி பக்கம் மாறிப் படுத்தால் அவருக்குச் சௌகரியமாய் இருப்பதாகத் தோன்றும். உடம்பு முழுவதும் இசிவு வலி. மிருதுவான படுக்கையும் கல்போல் கடினமாய் இருப்பதாக உணர்ச்சி. உடல் வெளுத்துச் சில்விட்டுச் சாம்பல் நிறமாய் இருக்கும். மூத்திரம் அளவு குறையும் அல்லது சிறிதுகூட வெளியாகாது. மலமும் மூத்திரமும் தாமாகவே வெளியாகுதல் (விஷப்பொருள் கலந்து தோன்றும் சுரங்களில்). வியர்வையினல் அனுகூலம் ஏற்படாமை. உடம்பு முழுவதும் குளிர்ந்த வியர்வை. தூக்கக்கலக்கம்; இரவு முழுவதும் கனவுகள் காண்பார்.

உபாதி குறைதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே). நிலை கொள்ளாமை: உடலில் உள்ள புண்ணுள்ள உணர்ச்சியைத் தணிக்க இடைவிடாமல் அசைந்து கொண்டே இருக்க நேருதல். சூட்டினல் வலிகள் குறையும். சூட்டினல் சிற்சில குறிகள் குறைகின்றன. சூடான தண்ணீர் குடித்தாலும் சூடான தண்ணீரில் குளித்தாலும் உபாதிகள் குறைவாய் இருத்தல்.

விசேஷக் குறிகளின் விளக்கம்

விஷம் கலந்த நிலைமை: அழுகிய நிலைமை:—தகுதி என்ற தலைப்பின் கீழே பார்க்கவும். மலம், மூத்திரம், உடல், சுவை, மூச்சுக்காற்று, வாந்தி செய்யப்படும் பொருள்கள் முதலிய எல்லா வகைக் கழிவுகளும் சுரக்கப்படும் நீர்களும் கெட்ட, அழுகிய அல்லது அழுகிய மீன் போன்ற நாற்ற முள்ளவைகளாய் இருக்கும். ருச்சிதைவு, பிள்ளைப்

பேறு ஆகியவைகளுக்குப் பிற்கு உடலில் விஷப் பொருள்கள் சேர்ந்து உண்டாகும் சுரம். நாற்றமுள்ள வியர்வை ஏராளமாய் உற்பத்தியாகுதல். பிள்ளைப் பெற்ற பிறகு கருப்பையிலிருந்து வெளியாகும் கழிவும் மாதவிடாய்ப் போக்கும் சகிக்க முடியாத நாற்றம் வீசும். ஆப்பரேஷன் செய்த பிறகு உடலில் அளவு கடந்து விஷப் பொருள் சேர்ந்து உண்டாகும் சுரம். தித்திப்பான சுவை; சகிக்க முடியாத நாற்றத்துடனும் இருக்கும். சீழ்ப் போலவும் சுவை இருக்கலாம். தன் உடலின் நாற்றத்தைக் கண்டு அவருக்கே வெறுப்பு ஏற்படும். கிழவர்களுக்கு அசுத்த இரத்தக் குழாய்கள் சுருட்டிக் கொண்டு நாற்றமும் பிடிவாத குணமுமுள்ள புண்கள் தோன்றுதல். அளவு மீறிய அழுகிய நாற்றமுள்ள டிப்தீரியா.

இசிவு வலி; புண்ணுள்ள உணர்ச்சி :—கை கால்களில் அல்லது உடல் முழுவதுமே இசிவு வலி, புண்ணுய் இருப்பது போல் தோன்றுதல், அடிபட்ட உணர்ச்சி; உடல் சோர்வு; தசைகளில் புண்ணுள்ள உணர்ச்சி, படுக்கை கல்போல் கடினமாய்த் தோன்றுதல். எல்லா எலும்புகளிலும் இசிவு வலி. விழிகளைச் சுழற்றினுல் அவைகளில் வலி.

கடுமைக் குணம் : எரிச்சல் :—சீழ்க் கட்டிகளில் கடுமையான எரிச்சல். பிள்ளைப் பெற்ற பிறகு ஏற்படும் சுரத்தில் கடுமையான சில்லிப்பு. சூடு மிகக் கடுமையாக இருக்கும். 106 டிகிரிக்குக்கூட ஏறும். கடுமையான சூடுடன் கூடான வியர்வை. குளிர் உணர்ச்சி உள்ளபோது காளவாய் போன்ற பெரிய அடுப்புகளின் அருகே உட்கார்ந்து அதன் சூடான காற்றைச் சுவாசிக்க விரும்புவார். இரவில் சுவாசகோசங்களில் சூடு உண்டாகிவிட்டது போல் உணர்ச்சி ஏற்பட்டுத் திறந்த இடங்களில் சென்று சுத்த

மான காற்றைச் சுவாசிக்க விரும்புவார். அதனால் சௌகரியம் ஏற்படும்.

நெருப்புப் போன்ற சிவ சிவப்பு :—நாக்கு சுத்தமாகவும் வார்னீஷ் பூசியது போல் வழ வழப்பாகவும் நெருப்புப் போல் சிவந்தும் இருக்கும். சிலநாட் கழித்து நாக்கு கறுப்பாகவும் மிகவும் காய்ந்தும் போகும். (நாக்கு காய்ந்து வெடித்து இருக்கலாம்). சுரங்களில் சூடுள்ள நிலைமைகளில் கன்னங்களில் வட்டமாகச் சிவந்திருத்தல். "ரோஜாப்பூப் போல் சிவந்த கோடுகள்."

விஷேதமான குறிகள் :—நாடி மிக வேகமாய்த் துடிக்கும். உடலிலுள்ள சூட்டுக்குத் தக்கபடி இல்லாமல் மிகவும் அதிகமாய் இருத்தல். அல்லது அதிகமான சூடு இருக்கும் போது நாடி மிகமெதுவாகச் செல்லுதல். சூடு அடிக்கடி ஏறி இறங்கும். ஒரு சமயம் சூடு அதிகமாகவும் மறு சமயம் குறைவாகவும் இருக்கும்.

கழிவுகள் அளவு குறைந்திருத்தல்; அடக்கப்படுதல் :—மூத்திரம் அளவு குறையும் அல்லது அடக்கப்படும். பிள்ளைப் பெற்ற பிறகு கருப்பையிலிருந்து வெளியாகும் கழிவுப் பொருள் (முதலில் தண்ணீர் போல் நீர்த்தும் பழுப்பு நிறமாகவும் அதிக நாற்றத்துடனும் இருந்து விட்டு) அடக்கப்படுதல். அதனால் குளிரும் சுரமும் நாற்றமுள்ள வியர்வை ஏராளமாய்ப் பொழிவதும் தோன்றும். "கிழித்துவிட்ட சீழ்க்கட்டியிலிருந்து வெளி வரும் சீழின் அளவு குறைந்து விட்டால் அதிக வலி உண்டாகும்" (கெண்ட்).

இரத்தப் பெருக் கெடுக்கும் குணம் :—இரத்தத்தில் விஷப் பொருள் சேர்ந்ததினால் தோன்றும் இரத்தப் பெருக்கு. இரத்தம் கறுப்பாய் இருக்கும். கருப்பையி

லிருந்து ஏற்படும் இரத்தப்பெருக்கில் குறிகள் ஒற்றுமை யாய் இருந்து இபிகாக் கொடுக்கப்பட்டும் அதனல் குணம் காணவிட்டால் பைரோஜெனியம் கொடுக்கப் பட வேண்டு மென்று இங்லிங் (Yingling) என்பவர் கூறு கிறார்.

அடிக்கடி மூத்திரம் கழித்தல் :—சுரம் தோன்றிய உடனேயே அடிக்கடி மூத்திரம் கழிக்க உணர்ச்சி ஏற்படும். இரவில் மூத்திரம் கழிக்க மூன்று தரம் எழுந்திருப்பார்.

மற்ற குறிகள்

தலையை இரு பக்கங்களிலும் மாறி மாறி உருட்டு தல். பாதங்களிலும் கால்களிலும் அதிக வீக்கம்; முகம் உப்பி இருக்கும். நாட்பட்ட மலேரியாச் சுரம். உடல் முழுவதும் சில்லிப்பான வியர்வை. "பெருங் குடலில் ஏற்படும் புண்களுக்கு மிகவும் நல்லது" என்று க்ளார்க் கூறுகிறார். அழுகிய நாற்றமுள்ள காற்றைச் சுவாசித்ததாலும் விஷப்பொருள்கள் உடலில் கலந்த தாலும் ஏற்படும் சுரங்களில் இருதயம் வேலை செய்யா மல் நின்றுவிடுமோ என்று தோன்றும் நிலைமை. சிசு வயிற்றினுள்ளே இறந்து பல நாட்களாகி அழுகிப் போய் வெளியே வராமல் கறுப்பான சகிக்க முடியாத நாற்றமுள்ள கழிவுகள் வெளிப்படுதல். இருதயப்பாகத் தில் கனத்த உணர்ச்சி; தனக்கு ஒரு இருதயம் இருக்கிற தென்று தெளிவாக உணருவார்; இருதயம் துடிப்பதும் சிறுவதும் அவருக்குக் காது கேட்கும்; அதனல் தூக்கம் தடைப்படும். முதுகில் தோள் பட்டைகளின் இடையில் குளிர் ஆரம்பிக்கும்; உடம்பு முழுவதும் பொதுவாகக் காணப் படும் கடுமையான குளிர். எலும்புகளிலும் கை கால்

களிலும் குளிர். இவ்விதமான குளிர் விஷப்பொருள் கலந்த சுரம் தோன்றுவதற்கு முன் அறிவிப்புக் குறியாகும். உடல் சூடு 103 முதல் 106 டிகிரி வரை இருக்கும்; நாடி வேகமாகவும் அளவு குறைந்தும் நிமிஷத்துக்கு 140 முதல் 170 தடவைகளும் ஒழுங்கு இல்லாமலும் செல்லும். குமட்டல் இடை விடாமல் காப்பிப் பொடி போன்ற நிறத்துடன் நாற்றமாகவும் மலம் போலவும் இருக்கும். மலம் வெளிவராமல் அடைபடுதல். தூங்கும் போது மார்பில் அமுக்கும் உணர்ச்சியினல் கதறுவார். சுவாசகோச க்ஷயத்தில் ஏற்படும் விடாச்சுரம். "மெத்துவாக முன்னேறிவரும் விடாச்சுரம்."

உறவு :—பிரயோனியா, லாச்சஸிஸ், ரஸ் டாக்ஸ் ஆகிய வைகளுக்குப் பிறகு நன்முக வேலை செய்கிறது.

ஒப்பிடுதல் :—சீழ்க் கட்டிகளில் கடுமையான எரிச்சல் (ஆர்ஸனிகம் ஆல்பம், அந்த்ராஸினம், டாரண்டுலா குபன்ஸிஸ்). பிணத்தை அறுக்கும்போது ஏற்பட்ட காயங்கள் (ஆர்ஸனிகம்). மூச்சுக் காற்று சகிக்கமுடியாத நாற்றமாய் இருத்தல் (பாப்டீஷியா, மெர்கூரியஸ் ஸொலு; ஸல்பர்). சருமம் சாம்பல் நிறமாய் இருத்தல் (ஸீகேல்). உடலில் புண்ணுள்ள உணர்ச்சியுடன் கூடிய டைபாய்டு சுரம்; படுக்கை கல்போல் கடினமாய்த் தோன்றுதல் (ஆர்னிகா, பாப்டீஷியா, ரஸ் டாக்ஸ்).

குறிப்பு :—"அதன் முக்கிய உபயோகங்கள் மனதிலே பதிந்துவிட்டால் வரையறுத்துக் கூறமுடியாத பல நிலைமைகளில் அது தேவைப் படுமென்பது தெளிவாய்த் தெரியும்."

———

ரீயம்

(RHEUM)

முன்னுரை :—சில உபயோகமான குறிகளுள்ள ஔஷதம் இது. குழந்தைகளுக்கு ஏற்படும் வயிற்றுப் போக்கில் பல சமயங்களிலும் தேவைப்படுகிறது.

முக்கிய குறிகள்

தகுதி :—குழந்தைகளுக்கு ஏற்றது, விசேஷமாகப் பல் முளைக்கும் காலங்களிலும் தாய்ப் பால் அருந்தும் காலங்களிலும். கருவுற்ற போதும் குழந்தைகளுக்குத் தாய்ப் பால் கொடுக்கும் போதும் பெண்களுக்கு ஏற்படும் வியாதிகளிலும் ஏற்றது.

புளிப்புக் குணம். நன்றாகத் துடைத்தாலும் அல்லது குளித்தாலும் கூடக் குழந்தையின் உடல் புளிப்பு நாற்றம் வீசும். எவ்வளவு தடவைகள் குளித்துவிட்டாலும் அல்லது நாற்றம் உண்டாகாதபடிக் கவனமாய்ப் பார்த்துக் கொண்டாலும் புளிப்பு நாற்றத்தைப் போக்கமுடியாது; உடம்பு முழுவதும் நாற்றம் இருக்கும். மலம் புளிப்பு நாற்றம் அடிக்கும். வாந்திப் பொருள் புளிப்பாய் இருக்கும். புளிப்பு நாற்றமுள்ள மலத்துடன் பச்சை நிற முள்ள, தண்ணீர்போல் நீர்த்த சளிப் பொருள் கலந்திருக்கும்; வயிற்று வலியும் இருக்கும்; மலம் கழித்த பிறகு கடுகடுப்பு. மூச்சுக் காற்று புளிப்பு நாற்றம் வீசும். "ஆசன வாயில் கடுப்பு, கவ்வும் வலிகள் ஆகியவைகளுடன் புளிப்பும் குமுகுமுப்புமுள்ள மலம் வெளிப்படும் வயிற்றுப் போக்கு.

கார குணம்:—ரீயம் தேவைப்படும் குழந்தையின் மலம் காரமாகவும் புளிப்பாகவும் இருப்பதைப்

போலவே அதன் குணமும் இருக்குமென்று பிளாக்வுட் (Blackwood) கூறுவது மிகப் பொருத்தமாகவே இருக்கிறது. இரவு முழுவதும் குழந்தை கதறும், பாடாய்ப் படுத்தும். குழந்தை கோபமாய்ப் பொறுமை இல்லாமல் இருக்கும்; பல பொருள்களைக் கேட்கும், கதறி அழும். பல பொருள்களை வேண்டுமென்று கேட்டாலும் அதற்குப் பிரியமான விளையாட்டுப் பொருள்களில் வெறுப்பு உண்டாகும். மலம் கழிக்கத் தூண்டுதலுடனும் புளிப்பு நாற்றமுள்ள மலத்துடனும் குழந்தைகள் கதறுதல். பல வகையான உணவுப் பொருள்களை வேண்டுமென்று கேட்கும். ஒரு வாய் போட்டுக் கொண்டவுடனேயே அதில் வெறுப்பு அல்லது குமட்டல் உண்டாகும். அல்லது உணவு உட்கொண்ட பிறகு மிகச் சீக்கிரத்திலேயே இவை தோன்றும். உணவில் விருப்பம் இல்லாமல் விசித்திரமான பசி.

அடிவயிற்றில் புரட்டல்:—ரீயத்தின் வயிற்று வலியும். விசித்திரமாக இருக்கும். ஒரு கையையோ காலையோ அல்லது உடலின் ஏதோ ஒரு பகுதியையோ போர்வையை விட்டு வெளியே நீட்டினால் உடனே அடிவயிற்றில் புரட்டல் கண்டு வயிற்றுவலி கடுமையாகும். இதற்குக் காரணம் என்னவென்று சொல்லமுடியாது. வயிற்றுவலி மலம் கழித்த பிறகும் நீங்காமல் இருக்கும். வியாதியஸ்தர் எழுந்து நின்றால் வயிற்று வலியும் கூடுதலாகும்.

பழய குப்பையைக் கிளறுதல்:—ஏற்கனவே வியாதி இருந்த இடங்களில் ரீயம் வலிகளை உண்டாக்கும். முன் ஏதோ ஒரு சமயத்தில் புறை ஓடிய வேக்காடு இருந்த இடங்கள், ஸோராவிஷ சம்பந்தமுள்ள சருமக்கோளாறு

ஆகியவைகளில் சூடான உணர்ச்சியையும் எரிச்சலையும் தோற்றுவிக்கிறது. அத்துடன் நிற்காமல் தொடைகளிலும் மற்ற இடங்களிலும் ஆரோக்கியமாய் இருந்து வரும் அசுத்த இரத்தக் குழாய்களையும் தாக்குகிறது.

இவ்விதமான நிலைமைகள் ரீயத்தினால் குணமாக்கப் படும். ரீயத்தில் க்ரைஸோபேனிக் ஆஸிட் (Chrysophanic Acid) எனப்படும் காடிப்பொருள் இருப்பதே இதற்குக் காரணமாய் இருக்கலாம். இக்காடி ஸோரா விஷத்தை நீக்கும் வல்லமை உள்ளது. கடி எனப்படும் படர்தாமரை வியாதியைக் குணம் செய்வதில் மிகவும் சக்தி வாய்ந்தது. க்ரைஸோபேனிக் ஆஸிட்டை 3X வீரியத்தில் ஒன்றிரண்டு வேளைகள் கொடுத்த உடனேயே கடி எவ்வளவு வேர் ஊன்றியதாய் இருந்தாலும் நீங்கிவிடுவதை நான் பார்த்திருக்கிறேன். ஆனால் குறிகளுக்குத் தக்கபடி வேறு ஔஷதங்கள் உபயோகமாகும் சமயங்களில் இவ்வௌஷதம் வேலைசெய்யாது. இது ஆச்சரியமாய் இருக்கிற தாயினும் உண்மையான விஷயமே.

தொந்திரவுக் குணம்:—தொந்திரவை அளிக்கும் மூத்திரப்பை. தொந்திரவை அளிக்கும் சுக்கிலப்பை. தொந்திரவு உள்ள தூக்கம். மூத்திரம் கழிக்க மூத்திரப் பையைப் பலமாக அமுக்கவேண்டும். வழக்கத்துக்கு மாறுக ஏராளமான இந்திரியம் வெளிப்படுதல். தூங்கும் போது படுக்கையில் புறண்டுகொண்டே இருத்தல். சுரத்தில் உடலின் வெளிப் புறத்தில் ஒல்லிப்பு எதுவும் இல்லாமல் வெடவெட வென்று உடல் நடுங்கும். கீழே வைத்துப் படுக்கும் பக்கத்திலுள்ள கை உணர்ச்சி குறைந்து மதமதப்பாகுதல்.

வியர்வை:—"மண்டைத் தோல், மூக்கு, வாய் அல்லது மேலுதடு ஆகியவைகளில் வியர்வை. முகத்தில்,

குறிப்பாக வாயையும் மூக்கையும் சுற்றி, குளிர்ந்த வியர்வை. உடலின் மேல் பாகத்தில் வியர்வை.

உறவு :—மெக்னீஷியா கார்புக்கு முன்பும் பிறகும் ரீயம் நன்றாக வேலைசெய்யும்.

ஒப்பிடுதல் :—குழந்தைகள் இரவு முழுவதும் அழுது கொண்டு அலைக்கழித்தல் (ஸோரினம்). மலம் கழிக்கும் போது உடலில் குளிர் நடுக்கம் (மெர். சொலு). புளிப்பான மலம் (கல். கார்ப், ஹிப்பார் ஸல்பர், மெக். கார்ப்) உடல் புளிப்பு நாற்றம் வீசுதல் (ஹிப்பார் ஸல்பர், மெக். கார்ப்).

குறிப்பு :—ரீயத்தில் ஸைலீஷியாவைப் போல் வியர்வையும் க்ரைஸோபேனிக் ஆஸிடைப் போல் ஸோரா விஷச் சருமக்கோளாறுகளும் காணப்படுகின்றன. சீன நாட்டில் விளையும் இவ்வௌஷதச் செடியின் வேரில் இவ்விரண்டு பொருள்களும் காணப்படுவது ஒரு விநோதமான உண்மையாகும்.

ரோடோடெண்ட்ரன்

(RHODODENDRON)

முன்னுரை :—ஹிமாலய மலையில் ரோடோடெண்ட்ரன் செடி வளருகிறது. இச்செடியில் ஆயிரக்கணக்காண வகைகள் இருக்கின்றன. எத்தனை ஆயிரம் என்றுதான் ஒருவருக்கும் தெரியாது. மலையின் அடிவாரங்களில் இச் செடிகள் சற்று உயரமாகவும் உயரே போகப் போக வளர்ச்சி குறைந்து கொண்டே வந்து முடிவில் குத்துச் செடிகளாகவும் புதராகவும் மாறுகின்றன. புயல் காற்றையும் கடுமையான குளிரையும் தாங்கும் வல்லமை உள்ளது. பனிப்புயல் அடிக்கும் பிரதேசங்களில் மற்ற செடி கொடி

கள் பட்டுப்போகும் போது இது மட்டும் வாடாமல் வதங் காமல் தலை நிமிர்ந்து தனியரசு செலுத்துகிறது. பனி, புயல், அதிகக் காற்று ஆகியவைகளைத் தாங்க முடியாத உடல்வாகு உள்ளவர்களுக்கும் அக்காரணங்களால் உபாதிகள் அதிகமாகும் குணமுள்ள நிலைமைகளிலும் ரோடோடெண்ட்ரன் உபயோகப்படுவதற்கு இதுவே காரணம். நமது மெட்டீரியா மெடிகாவில் உள்ள ரோடோ டெண்ட்ரன் மூடுபனிகளும் புயல்களும் கடுமையான குளி ரும் உள்ள ஸைபீரியா நாட்டில் வளரும் செடி. பனி ரோஜா என்று புலவர்கள் இதற்குப் பெயர் புனைந்துள்ளனர்.

வீரியப்படுத்திய நிலைமையில் பாஸ்பரஸைப் போலவே ரோடோடெண்ட்ரனும் பருவநிலை அறியும் மனிதக் கருவிகள் போல் உள்ளவர்களுக்கு ஏற்றதாகிறது.

பொதுவான குறிகள்

தகுதி :—புயல் காற்றைக் கண்டால் பயம், இடி இடித் தால் அதை விடப்பயப்படுதல், புயல் காற்றுத் தோன்று வதற்கு முன் உபாதிகள் கூடுதலாகுதல் ஆகிய குணங் கள் உள்ளவர்களுக்கு விசேஷமாகத் தகுந்தது. கீல் வாயு உள்ள குடும்ப வரலாற்றை உடையவர்கள்.

மனம் :—புயலைக் கண்டால் நடுக்கம்; இடி இடிக்கும் போது மிகவும் நடுங்குதல். அதிக ஞாபக மறதி. மன தில் நினைத்த விஷயம் திடீரென்று மறந்து போகுதல். எழுதும் போது நடுவில் சில வார்த்தைகளை எழுதாமல் விட்டு விடுதல்.

உடல் :—மூத்திரத்தின் அளவு அதிகமாகும்; நாற்றம் வீசும். கால்களிலும் பாதங்களிலும் வீக்கம்; நீர்ச் சுரப் புடன் இருக்கலாம், கால்களும் பாதங்களும் தூங்கிப் போனது போல் உணர்ச்சிக் குறைவாய் இருத்தல்.

சூடான இடங்களில் இருக்கும் போதும் பாதங்களில் அளவு கடந்த சில்லிப்பு. உடம்பு முழுவதும் பொது வான வியர்வை, மனதுக்குப் பிடித்தமான தோர் வாசனை யுடன் இருக்கும், கால் மேல் கால் குறுக்காகப் போட்டுக் கொண்டால் தான் தூக்கம் வரும். எறும்பு ஊரும் உணர்ச்சி யுடன் வியர்வை. ஓயின் சிறிதளவு உட்கொண்டாலும் குடி மயக்கம் உண்டாகுதல்.

உபாதி கூடுதல், குறைதல்:—இதற்கு அடுத்த இரண்டு பாராக்களையும் பார்க்கவும். மாதவிடாயில் போக்கு நின்ற பிறகு மிகச் சீக்கிரத்திலேயே மீண்டும் தோன்று தல். ஓய்வாய் இருக்கும் போது வலிகள் மிகக் கடுமை யாய் இருக்கும். மழைக் காலத்தில் வயிற்றுப் போக்கு; உணவு சீரணமாகாமலேயே வெளியே வரும். பழங் களைத் தின்றதால் ஏற்படும் வயிற்றுப் போக்கு.

விசேஷக் குறிகளின் விளக்கம்

பருவ நிலையைக் காட்டும் கருவியைப் போல் இருத்தல் : பயம் :—ரோடோடெண்ட்ரன் வியாதியஸ்தர் பருவ நிலை யைக் காட்டும் பரோமீட்டர் (Barometer) எனப்படும் கருவியைப் போல் இருப்பார். பேய்க் காற்று அடிக்கும் பருவக் காலங்களில் வீட்டுக்குள்ளே அடக்கமாக இருக் கும் போதும் அவருக்கு உபாதிகள் கூடுதலாகும். இது மட்டு மல்ல. புயல் அல்லது இடியுடன் மழை தோன்று வதற்கு முன்பும் அவருடைய உபாதிகள் அதிகரிக்கும். இதனால் புயல், மழை, இடியுடன் மழை ஆகியவை தோன்றுமென்று முன்னதாக வியாதியஸ்தருக்குத் தெரிந்து விடும்.

பருவநிலை கோளாறாக இருக்கும் போது மறைந்தி

ருந்த உபாதிகள் மீண்டும் தோன்றுகின்றன. தலைவலி, வயிற்றுப் போக்கு, வயிற்றுக் கடுப்பு, பல்வலி, கண்களில் வலி, தசைகளில் துடிப்பு, முதலிய பல தோளாறுகள் மழை. காற்று அல்லது புயல் காற்று தோன்றுவதற்கு முன் அதிகமாகும் அல்லது ஏற்படும்.

பருவ நிலையிலுள்ள கோளாறு சிறிது நேரம் மறைந்திருந்து வெய்யல் அடிக்குமானால் அச் சமயத்தில் வியாதியஸ்தருக்குத் தன் வியாதிகளெல்லாம் பஞ்சாய்ப் பறந்து போய்விட்டன என்ற மன நிம்மதி ஏற்படும்.

பயப்படும் குணம், புயல் காற்றைக்கண்டு பயம், இடியைக் கண்டு பயம். பயத்தினால் தான் பேசிக் கொண்டிருந்த விஷயத்தை மறந்து விடுதல். மறுபடி அதை நினைவுக்குக் கொண்டுவரச் சிறிது நேரம் யோசனை செய்ய நேருதல். மனக் குழப்பம். தான் பேச வந்த விஷயங்களை மறந்து விடுவார். தற் செயலாகப் பிறர் தொட்டாலும் அதிகமாகப் பயப்படுதல்.

வாதரோகம்:-மற்ற விஷயங்களில் காணப்படுவதைப் போலவே வாதரோகத்திலும் ரோடோடெண்ட்ரன் உபயோகமாவதற்கு வலிகளின் தன்மையைவிட அவ்வலிகளைக் கூடுதல் அல்லது குறைதல் செய்யும் காரணங்களே முக்கியமாகக் கருதப்படுகிறது. குளிர், ஈரக்கசிவு, காற்று உள்ள பருவக்காலங்களில் வலிகள் தோன்றுகின்றன அல்லது கூடுதலாகின்றன. ரோடோடெண்ட்ரத்தின் வலிகளும் பிடிப்பும் அசைய ஆரம்பித்தவுடன் குறைகின்றன; இடை விடாமல் நடந்து கொண்டிருந்தாலும் குறைவாய் இருக்கின்றன; ஓய்வாய் இருக்கும் போது கூடுதலாகின்றன. வலியுள்ள இடங்களில் சூடு உண்டா

கும்படித் துணியினால் சுற்றி வைத்தால் வலிகள் குறை வாகும். ஓய்வாய் இருக்கும் போது வலிகள் மிகக் கடு மையாகவும் இருக்கலாம்.

ரோடோடெண்ட்ரன் தேவையாகும் வாதரோகங் களில் பாதிக்கப்பட்ட மூட்டுகளில் நார்ப் பொருள் சேர்ந்து வீக்கம் ஏற்படும். ரஸ் டாக்ஸைப் போல் சுண் ணும்புப் பொருள் சேருவது கிடையாது.

கால் பெருவிரல் எலும்பு மூட்டில் நார்ப் பொருள் சேர்ந்து வீங்கும்போது இது மிகவும் உபயோகமுள்ளது. வாதரோகம் காரணமாக ஏற்படும் இவ் வீக்கத்தைக் காய்ப்பு என்று தவருக மதிப்பதும் உண்டு. சிறு எலும்பு மூட்டுகளையும் அவைகளை இணைக்கும் தசை நார்களையும் தாக் கும் நாட்பட்ட வாதரோகம் என்பதை விசேஷக் குறிப்பாகக் கூறலாம்.

பக்கங்கள்; திசைகள் : மாறித் தோன்றுதல் : அங்கு மிங் கும் போகுதல் :—வலிகள் உள்ளேயிருந்து வெளியிலும் மேலிருந்து கீழும் பரவுகின்றன. வலிகள் கீழே இறங்கி கை விரல்களுக்கும் கால் விரல்களுக்கும் கூடப் பரவும். இந்திரிய நரம்பில் சுருங்கி விட்ட உணர்ச்சி, கீழே தொடை வரையிலும் மேலே அடிவயிறு வரையிலும் பரவிக் காணப்படும்.

வலது பக்கம் தாக்கப்பட்டிருந்தால் மிகச்சிறப்பாய் வேலை செய்கிறது. வலது கை அல்லது வலது கால், அடி வயிற்றின் வலது பக்க வலியம் ஆகியவைகளில் ஏற்படும் கோளாறுகள். வலது பக்க அரையிடுக்கில் இழுப்பது போன்ற வலி. இரு பக்க விரைகளையும் விரைப் பையைத் தொட்டுக் கொண்டிரும் இரு தொடை களின் உட்புறத்தையும் அது தாக்குகிறது.

பிள்ளைப்பெற்ற பிறகு கருப்பையில் எரிச்சலும் கை கால்களில் வலியும் மாறி மாறித் தோன்றுதல். சில் லிப்பும் குடும் மாறி மாறி ஏற்படுதல். முதலில் ஒரு பக்க விரையிலும் பிறகு மறு பக்க விரையிலும் நசுக்கு வது போல் வலி. ஒரு கண்ணின் கருமணி விரிந்தும் மறு கண்ணின் கருமணி சுருங்கியும் இருத்தல். மூக்கின் இடது, வலது துவாரங்கள் மாறி மாறி அடைத்துக் கொள்ளுதல் என்னும் இக் குறிகளையும் சேர்த்துக் கொள்ளலாம்.

விரைகள் விசேஷமாகத் தாக்கப்படுதல்: கடினமாய் இருத் தல் : நசுக்கப்பட்ட உணர்ச்சி :—ரோடோடெண்ட்ரன் ஆனின் பிறப்பு உறுப்புகளையே விசேஷமாகத் தாக்குகிறது, அதி லும் விரைகளை. விரைகள் கடினமாகி வீங்குதல்; விசேஷமாக வலது விரைமட்டும். இக் கோளாறு மேக வெட்டைக்குப் பிறகு அல்லது வாதரோகமுள்ள வியாதியஸ்தர்கள் குளிரில் சென்றதால் அல்லது குளிர்ந்த கல்லின்மேல் உட்காருதல் போன்ற காரணங்களால் உண்டாகும். விரைகள் ஏறி இருக்கும். "விரைகள். முக்கியமாக விரைகளின் மேல் பாகம், வீங்கி வலியுடன் தொட் டால் அதிக வலியுடன் காணப்படும்."

இந்திரிய நரம்புகளில் இழுக்கும் வலி (இவ்வலி தொடைகளுக்கும் அடி வயிற்றுக்கும் பரவி இருக்க லாம்) ஓய்வாய் இருக்கும் போது தோன்றி அசைவினு லும் சூட்டினாலும் தணிந்திருக்கும்.

விரைகளிலும் மானிக் கொண்டையிலும் நசுக்கி விடப்பட்ட உணர்ச்சி.

விரைப்பை சுருக்கங்களுடனும் வியர்வையுடனும் அதிக அறிப்புடனும் இருக்கும்.

கடுமைக் குணம்:—விரை வேக்காட்டில் மூச்சை அடைக்கும் அளவுக்குக் கடுமையான வலி இருக்கலாம். விரைகளில் நசுக்கப்பட்டது போல் வலிகள். பீதியை உண்டாக்கும் அளவுக்குக் கடுமையான நரம்பு வலிகள். வியாதியஸ்தரைப் பேசவோ மூச்சுவிடவோ முடியாமல் செய்துவிடும் கடுமையான சுவாசகோச உறை வேக் காட்டு வலிகள். வாத ரோகத்தில் வலி எலும்புகளையே தாக்கிவிட்டது போல் கடுமையாய் இருத்தல். கடுமை யான, சித்திரவதை செய்வது போலுள்ள பல்வலி. சுறுகள் பற்களை விட்டு விலகி இருக்கும்.

மற்ற குறிகள்

பலமான ஓசைகள்: காதுகளில் நீண்ட நேரம் எதி ரொலித்துக் கொண்டே இருத்தல். படிக்கும் போது அல்லது எழுதும் போது பார்வை மங்குதல். மிக விரை வில் கண்கள் களைத்துப் போகுதல். தலைச் சுற்றலுடன் காதுகளில் இடைவிடாத ஓசை. சிறுவர்களுக்கு ஏற் படும் விரைப்பை வீக்கம், சுளுக்கிக் கொண்டதுபோல் மணிக்கட்டுகளில் வலி. கால் அடி எடுத்து வைக்கும் போது குதியங்கால்களில் வலி. சருமத்தின் உட்புறமோ அல்லது வெளிப்புறமோ எறும்பு ஊரும் உணர்ச்சி. சிறிதளவு உடல் பயிற்சி செய்தாலும் வலியுடன் அசதி. பல்வலி திடீரென்று நின்று விட்டு இரண்டு அல்லது மூன்று மணி நேரம் கழித்து மறுபடியும் தோன்றும். பழம் தின்ற பிறகு வயிற்றுப் போக்கு. சுரத்துடனும் தலை வலியுடனும் மாதவிடாய் தோன்றுதல். யோனி யில் ஏற்பட்ட கட்டிகளை இது குணம் செய்திருக்கிறது. மின்விசை பாய்ந்தது போல் மயிர்கள் குத்திட்டு நிற்கும்.

ஒப்பிடுதல் :—ரோடோடெண்ட்ரத்தின் வலிகளும் பிடிப்பும் அசைய ஆரம்பித்தவுடனேயே குறைகின்றன. ரஸ் டாக்ஸில் அசைய ஆரம்பிக்கும் போது வலிகளும் பிடிப்பும் அதிகமாகி இடைவிடாமல் சிறிது நேரம் நடந்த பிறகு குறைய ஆரம்பிக்கும். ஓய்வினால் வாதநோக வலிகள் அதிகமாவது இரு ஔஷதங்களிலும் காணப்படுகிறது.

விரை வேக்காட்டில் அவை நசுங்கிவிட்ட உணர்ச்சி (ஆரம் மெட், சாமோமில்லா); நாட்பட்ட, கடினமான விரை வேக்காடு (க்ளமேடிஸ், பல்ஸடில்லா).

புயல்காற்று ஏற்படுவதற்குச் சற்று முன்னதாக உபாதிகள் அதிகமாகுதல் (அகேரிகஸ், லாச்சஸிஸ், நேட்ரம் கார்ப், பாஸ்பரஸ், ரோடோடெண்ட்ரன், ஸைலீஷியா.)

எறும்பு ஊருவதுபோல், கடிப்பதுபோல் உணர்ச்சி (பாஸ்பாரிக் ஆஸிட், பிளாட்டினா, ரோடோடெண்ட்ரன், ஸீகேல்). கால் கட்டைவிரல் எலும்பு மூட்டில் நார்ப் பொருள் சேருதல் (கோல்சிகம், லேடம்). ரோடோடெண்ட்ரத்தின் உபாதிகள் சூட்டினால் குறையும். லேடத்தின் உபாதிகள் சில்லிப்பினால் குறையும். ஒரு கண்ணின் கருமணி விரிந்தும் மறு கண்ணின் கருமணி சுருங்கியும் இருத்தல் (கல். கார்ப். பைடோலக்கா). ஓசை எதிரொலித்தல் (காஸ்டிகம், பாஸ்பரஸ், பாஸ்பாரிக் ஆஸிட்). சிறுவர்களுக்கு விரைப்பை வீக்கம் (பிரயோனியா, அப்ரொடேனம், கல். கார்ப், பல்ஸடில்லா, ஸைஸீஷியா).

ரஸ் டாக்ஸிகோடெண்ட்ரன்

(RHUS TOXICODENDRON)

முன்னுரை :—மிகக் கொடிய விஷமுள்ள ஒரு வகைக் கொடியிலிருந்து இது தயாரிக்கப் படுகிறது. விளையாடும் போது இக் கொடியின் அருகே ஓடிப்போன பந்தை எடுப்

பதற்காகச் சென்ற ஒரு இளம் பெண் அக்கொடியின் ஒரு இலையைக் கூடத் கையால் தொடாமல் மிகக் கவன மாகத்தான் பந்தை எடுத்தாள். இருந்தபோதிலும் அவ ளுக்குக் கடுமையான கோளாறுகள் தோன்றின என்று க்னார்க் ஓர் உதாரணம் கூறியிருக்கிறார். இக் கொடியி லிருந்து வெளிப்படும் ஆவி பட்டால்கூட மனித உடலில் கோளாறுகள் தோன்றுகின்றன. உண்மை இப்படி இருக்கும்போது வீரியப்படுத்தும் தத்துவத்தை ஏளனம் செய்ய இடமுண்டா ?

டைபாய்டு சுரம், வாதரோகம், பாரிசவாதம், அக்கிப் படுவன் முதலிய வியாதிகளில் காணப்படும் குறிகளை ரஸ் டாக்ஸ் தோற்றுவிக்கிறது. மிகத் தெளிவான குறி கள் பல இதில் காணப்படுகின்றன.

பொதுவான குறிகள்

தசுதி :—வாதரோகம் தோன்றும் உடல்வாகு உள்ள வர்களுக்கு ஏற்றது. ஸோரா விஷம், க்ஷயரோகம் ஆகிய கோளாறுகள் உள்ளவர்களுக்கும் ஏற்றது. மிக நாட்பட்ட வாதரோகக் கோளாறுகள். இரத்தத்தில் விஷப் பொருள் கலந்த நிலைமைகள். மிக எளிதிலே உடம்பில் சளுக்கு விழுதல். லேசான பொருள்களைத் தூக்கினாலும் சளுக்கிக் கொள்ளும். பிள்ளைப் பெற்று அறையில் இருந்துவரும் பெண்கள். மேகக்கிரந்தியி னால் சில காலம் கழித்து ஏற்படும் கோளாறுகள்.

மனம் :—நிலை கொள்ளாத்தன்மை மிக அதிகமாய் இருக் கும் ;. அடிக்கடி பக்கம் மாறிப் படுப்பார், உட்காருவார். மாலை நேரத்தில் அதிகக் கவலை. தான் இறந்து விடுவோ மென்ற பயம். தற்கொலை செய்துகொள்வதை விரும்பு வார். தனக்கு விஷம் கொடுத்து விடுவார்களென்ற

பயத்துடன் நினைவுத்தடுமாற்றம். புலன் உணர்ச்சிகள் மங்கிவிடுதல். மெதுவாகப்பதில் சொல்லுதல்.

உடல்:—தசைகளின் நுனிகள் சுருங்கிப் போய்விட்டது போல் உடலின் பல்வேறு இடங்களில் இழுக்கும் உணர்ச்சியும் விரைப்பும். வியாதியுள்ள பாகங்களில் லேசாகக் குத்தும் உணர்ச்சி. நாக்கில் பற்களின் சுவடுகள் படிந்திருக்கும். நாக்கின் ஒரு பக்கத்தில் மட்டும் வெண்மையான அழுக்குப் படிந்து இருக்கும். நாக்கு மிகவும் காய்ந்து, சிவந்து வழுவழுப்பாய் இருக்கும் அல்லது காய்ந்து சிவந்து வெடித்திருக்கும்; அல்லது காய்ந்து கறுப்பு நிறமாய் நுனியில் மட்டும் முக்கோண உருவத்தில் சிவந்து இருக்கும். "நுனியில் முக்கோண உருவத்தில் சிவசிவப்பும் மற்ற இடங்களில் உலர்ந்துபோன பழுப்பு நிறமுள்ள சளிப் பொருளும் பற்களின் சுவடுகளும் காணப்படும்." அதிகக் கனைப்புடன் மலம் தானாகவே வெளியாகுதல். மயக்கத்தைப் போன்ற ஆழ்ந்த தூக்கம். கீழ் இமைகளில் கிறுக்கட்டிகள். வாயில் அழுகிய சுவை. பாலில் விருப்பம். வாயின் மூலைகள் புண்ணாய் இருத்தல். மேல் உதட்டில் சிவசிவப்பும் சிறு கொப்பளங்களும் இருத்தல். பற்களின் மேல் ஊத்தை படிந்திருத்தல். சுரப்பிகள் வீங்குதல். கல்போல் கடினமாகுதல்.

உபாதி கூடுதல்:—குளிர்ந்த காற்று, விசேஷமாக, குளிரும் ஈரமும் உள்ள மழைக் காலங்கள், வியாதியஸ்தருக்கு ஒத்துக் கொள்வதில்லை.

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே):—ஓய்வு, ஈரத்தில் அடிபடுதல்; ஈரக்கசிவுள்ள மழைக் காலம், மூடு பனிக் காலம், தண்ணீர் சேர்ந்த பற்றுகள், குளிர்ந்த தண்ணீரில் குளித்தல், கடலில் குளித்தல், ஏரி,

குளம் அல்லது ஆறுகளில் கோடைக் காலங்களில் நீண்ட நேரம் குளித்தல், பனிப்புயல், குளிர்ந்த தண்ணீரைக் குடித்தல் ஆகிய காரணங்களால் உபாதிகள் கூடுதலாகும். ஓய்வினுல் உபாதிகள் அதிகரித்தல் என்பதற்கு உதாரணமாக இரவு முழுவதும் படுத்திருந்து (ஓய்வு) காலையில் கண் விழித்தவுடன் உபாதி அதிகரிப்பதைச் சொல்லலாம். ரஸ்டாக்ஸில் காலையில் கண் விழித்தவுடன் சிற்றின்பத்தில் கடுமையான ஆசை தோன்றும் குறி இருக்கிறது. இதை ஓய்வினுல் உபாதி கூடுதல் என்பதுடன் சேர்க்கலாமா? குளிர் காற்று, மழையில் அடிபடுதல், விசேஷமாக வியர்த்துக் கொண்டிருக்கும் போது மழையில் நனைதல் அல்லது குளிர்ந்த தண்ணீரில் குளித்தல், உடலைப் போர்த்தியுள்ள போர்வையைத் திறத்தல், அளவுக்கு மிஞ்சிய உடல் உழைப்பு, நள்ளிரவுக்குப் பிறகு ஆகிய காரணங்களால் உபாதிகள் கூடுதலாகும். ஓய்வாக உட்கார்ந்து விட்டுப் பிறகு எழுந்து நடமாட ஆரம்பித்தவுடன் உபாதிகள் அதிகமாகும். குளிர் காலத்திலும் கோடைக் காலத்தின் இடை நாட்களிலும் புயல் அடிப்பதற்கு முன்பும் உபாதிகள் அதிகரிக்கும். ஆயுத சிகிச்சையில் ஏற்படும் காயங்களால் பிறகு உண்டாகும் கோளாறுகள்.

இடது பக்கமாய்ப் படுத்தால் இருதயத்தில் வலியும் பட படப்பும் தோன்றும்.

உபாதி குறைதல்:-இடை விடாமல் நடந்துகொண்டே இருத்தல். பொதுவான சூடு (துணியினுல் சுற்றுதல், சூடான தண்ணீரில் குளித்தல்), உடலைத் தேய்த்தல் ஆகியவைகளால் உபாதிகள் குறையும்.

விசேஷக் குறிகளின் விளக்கம்

நிலை கொள்ளாமை :—படுக்கையில் இடை விடாமல் புறண்டு கொண்டே இருக்கும் குறியுடன் நிலை கொள்ளாமை

மிகவும் அதிகமாய் இருத்தல். புறள்வதினுல் வலிகளும் புண்ணுள்ள உணர்ச்சியும் சிறிது நேரத்துக்குக் குறைவாய் இருக்கும். ஒரு விதமான வேதனை உணர்ச்சி இருந்தால் அதுவும் புறள்வதினுல் சிறிது நேரம் குறைவாய் இருக்கும். படுக்கையில் அடிக்கடி புறண்டு படுக்கும் ஆவலை அவரால் அடக்க முடியாது. இவ்வாறுன அசைவினுல் சிறிது நேரத்துக்கு உபாதிகள் குறைவாய் இருப்பதால் மேன் மேலும் அவ்வாறு அசைந்து உபாதிகளைக் குறைவாக்க விரும்புவார்.

பாரிசவாத நிலைமை: பாரிசவாதம் :—ரஸ் டாக்சுக்கு "மிகப் பெரிய பாரிசவாத வைரி" என்று லிலியந்தால் பட்டம் கொடுத்திருக்கிறார்.

பாரிசவாத நிலைமைகளில் ரஸ் டாக்ஸ் தேவைப்படும் கேசுகளில் கீழ்க்காணும் முக்கியமான குறிகள் காணப்படும். 1. ஈரத்தில், குளிரில் அடிபடுதல். 2. சுளுக்குகள், சக்திக்கு மீறிய உடல் வேலை செய்தல். 3. வலியுடன் பிடிப்பு. 4. ஊசி குத்தும் வலிகளும் மத மதப்பான உணர்ச்சியும். 5. வியாதியுள்ள மூட்டுகள் வீங்கி இருத்தல் (அவ்விடங்களில் அமுக்கினுல் அதிகமான குழி விழுவதில்லை). 6. தொட்டால் புண்ணுள்ள உணர்ச்சி (வியாதியுள்ள பாகங்களில்). 7. ஓய்வினுல் உபாதிகள் அதிகமாகுதல்; நடக்க ஆரம்பிக்கும் போது மட்டும் உபாதிகள் அதிகமாகுதல்; இடை விடாமல் நடந்து கொண்டே இருந்தால் சௌகரியம் ஏற்படுதல்.

மற்ற எல்லாக் குறிகளையும்விட வியாதியை உண்டாக்கிய காரணமே ரஸ் டாக்ஸில் முக்கியமாக மதிக்கப்படுகிறது. ஈரமுள்ள தரையில் படுத்தல், குளிர் காற்றில் அடிபடுதல், குளிர்ச்சியான கல்லின் மேல் உட்

கார்ந்திருத்தல் ஆகியவை வியாதி உண்டாகக் காரணங்களாகும்; உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே) என்ற தலைப்பின் கீழேயும் பார்க்கவும். பிள்ளைப் பெற்ற பிறகும், அளவு மீறிச் சிற்றின்பத்தில் ஈடுபட்டதாலும். மலேரியா, அல்லது டைபாய்டு முதலிய சுரங்களுக்குப் பிறகும் தோன்றும் பாரிசவாதம்.

இமைகளில் பாரிசவாதம் ஏற்பட்டுவிட்டது போல் விரைப்பாய் இருத்தல். கைகளிலும் கால்களிலும் பாரிசவாதம் சம்பந்தமுள்ள விரைப்பு ஏடக்க ஆரம்பிக்கும்போது முதலில் மிகஅதிகமாகக் காணப்படும். ஒரு சில இடங்களில் மட்டும், ஒரு கால் அல்லது ஒரு கையில் மட்டும் பாரிசவாதம். மலப்பையிலும் மூத்திரப்பையிலும் பாரிசவாதம். ஒரே ஒரு பக்கத்தில் மட்டும் மேல் அல்லது கீழ்ப் பகுதியில் பாரிசவாதம்.

இடை விடாத அசைவினால் சௌகரியம் :—வலிகள், புண் உள்ள உணர்ச்சி, விரைப்பு ஆகியவை இடைவிடாத அசைவினால் குறைகின்றன. ஆயினும் இவ்வாறு அசைவதால் வியாதியஸ்தர் களைத்துப் போய் விடுவார். ஸ்தனக்காம்புகளில் புண்ணுள்ள உணர்ச்சி; குழந்தை வாய் வைத்துக் குடிக்க ஆரம்பிக்கும் போது அதிகமாகிப் பிறகு குழந்தை குடித்துக் கொண்டே இருந்தால் குறைவாய் இருக்கும் என்பதையும் இடை விடாத அசைவினால் சௌகரியம் என்ற வகையில் சேர்க்க வேண்டும். என்னுடைய ஒரு அனுபவத்தையும் குறிப்பிடுகிறேன். காதுப் பக்கமுள்ள (வலது பக்கம்) சுரப்பிகளில் வலியுடன் வீக்கம் தோன்றியது. கழுத்தில் ஓர் அளவு விரைப்பும் வலியும் பிடிப்பும் இருந்தது. இவை கழுத்தை அங்கு மிங்கும் அசைத்துக் கொண்டே இருந்

தால் குறைவாய் இருந்தன. சீழ்ப் பிடிக்கும் படியான நிலைமைக்கு வந்துங்கூட ரஸ் டாக்ஸை ஒரே ஒரு வேளை கொடுத்தவுடன் மந்திரவாதியின் மந்திரக் கோல் பட்டதைப் போல வியாதி அடங்கிப் போய்விட்டது. "அடிக்கடி கொட்டாவி விட்டுக்கொண்டே இருக்க விரும்புதல், முடிவில் இனிக் கொட்டாவி விட்டால் தாடை உடைந்து போய்விடும் போல் தோன்றும் போது தான் நிறுத்துவார்." இதையும் இடைவிடாத அசைவினுல் செளகரியம் என்ற வகையில் சேர்ந்த மறை முகமாய் இருக்கும் ஒரு குறியென்று மதிக்கலாம். என் வியாதியஸ்தர் ஒருவருக்குக் கொட்டாவி விட அடக்க முடியாத ஆசை இருந்தது. இவ்வௌஷதத்தினுல் அவ்வாசையை நீக்கினேன். விழுங்கும்போது அடிக்கடி புறையேறுதல், அசைய ஆரம்பிக்கும் போது உபாதி அதிகமாகுதல் என்ற விசேஷக் குறியுடன் இதைச் சேர்க்கலாம். அடிக்கடி விழுங்கிக்கொண்டே இருந்தால் செளகரியமாய் இருக்கலாம். இவ்வொரு குறியே இவ்வௌஷதம் தேவைப்படும் வியாதிகள் பலவற்றிலும் காணப்படும் பாரிசவாத நிலைமையை எடுத்துக் காட்டுகிறது.

மெட்டூரியா மெடிகாவைப் படிக்கும் போது நாம் அறிந்துகொள்ள வேண்டிய அதன் சிறப்பு இங்கேதான் அடங்கி இருக்கிறது. ஔஷதத்தின் உயிர் நாடியை அறிதல் என்றும் இதைச் சொல்லலாம். ஹோமியோபதி ஔஷதங்களை உபயோகிப்போர் அம் முறைபில் சிறந்த கலை வாணர்களாய்த் திகழ வேண்டும்.

இசிவு வலி: கிழிக்கும் வலி: புண் உள்ள உணர்ச்சி: காயம் பட்ட உணர்ச்சி: பிடிப்பு: முடமான உணர்ச்சி:— ரஸ் டாக்ஸ் தேவைப்படும் வாத ரோக வியாதிகளுடன்

இக் குறிகள் யாவும் சேர்ந்து காணப்படும். டைபர்ய்டு சுரத்திலும் இன்புளுயன்ஸா சுரத்திலும் புண்ணுள்ள காயம் பட்ட உணர்ச்சி இருந்தால் அக்கேசுகளுக்கு ரஸ் டாக்ஸ் தேவைப்படும் என்பதை அறிந்து கொள்ளலாம். மார்பிலிருந்து எதையாவது கிழித்து எறிந்து விடுமென்று நினைக்கும் அளவுக்குப் பயங்கரமான இருமல், கால்களில் கிழிக்கும் வலிகளுடன் வயிற்றுப் போக்கு. இருதய வியாதியுடன் இடது கையில் மதமதப்பும் முடமாய் விட்டது போன்ற உணர்ச்சியும் காணப்படுவது ஒரு விசேஷமான குறி. வியாதியுள்ள பாகங்களில் அவை கிழித்து ஏறியப்படுவது போன்ற வலி. உடம்பு முழுவதும் புண்ணுய் இருப்பது போலவும் காயங்கள் இருப்பது போலவும் வலி.

சுளுக்குகள் : சக்திக்கு மீறிய உடல் வேலை செய்ததால் ஏற்படும் வலிகள் :—சுளுக்குகள், சக்திக்கு மீறி வேலை செய்தல், மிகப்பளுவான பொருள்களைத் தூக்கியதால், முக்கியமாகக் கைகளை தலைக்குமேல் மிக உயரத்தில் நீட்டியதால் தசைகளிலும் தசைகளை எலும்புகளுடன் சேர்த்துக் கட்டியுள்ள நார்களிலும் புண்ணுள்ள வலி ஆகியவைகளுக்கு மிகவும் உபயோகமுள்ளது. பிள்ளைப் பெற்ற பிறகு பெண்களுக்கு உபயோகமாகும் ஒரு ஔஷதம் இது. ஏனென்றால் பிள்ளைப் பெறும் சமயத்தில் உடலை மிகவும் கஷ்டப்படுத்த வேண்டியிருந்திருக்கும். பேச்சாளர்களுக்குக் குரல்வளை பாதிக்கப்பட்டு தொண்டைக்கம்மல் உண்டாகும். அளவு மீறிச் சிற்றின்பத்தில் ஈடுபட்டதால் பாரிசவாத நிலைமைகள் போன்ற கோளாறுகள் ஏற்படுதல். உடல் வேலை செய்த பிறகு மூக்கிலிருந்து இரத்தப் பெருக்கு தோன்றுதல். இவ்

விதம் அளவு மீறிச் செய்யப்படும் காரியங்களால் நரம்பு கள் தாக்கப்படுகின்றன. சுளுக்கிக் கொண்டது போல் வலிகள்.

கனவுகளில் கூட சக்திக்கு மீறி வேலை செய்வது காணப்படும். உடலை மிகவும் சிரமப்படுத்தி வேலை செய்வது போலவும், படகில் ஏறித் துடுப்பால் தள்ளு வது போலவும் நீந்துவது போலவும் கனவுகள் காணு வார்.

கொப்பளங்கள்: அக்கிப்படுவன் (எரிச்சல், மெதுவாய்க் குத்தும் உணர்ச்சி: அரிப்பு):—பெரிய கொப்பளங்கள் உள்ள அக்கிப்படுவன், சருமத்தில் ஏற்படும் வேக்காடு அக்கிபோல் மாறுதல். சுரமுள்ள போது வாயைச் சுற்றிலும் மேலுதட்டிலும் கொப்பளங்கள். கொப்ப ளங்கள் உள்ள கடி நோய். "அது (ரஸ் டாக்ஸ்) கொப்ப ளங்கள் உள்ள சரும வியாதியை உண்டாக்குகிறது; நீர்ச்சுரப்பு, எரிச்சல், அறிப்பு, மெதுவாகக் குத்தும் உணர்ச்சி முதலிய குறிகள் பிறகு தோன்றுகின்றன". அபிஸை விட ரஸ் டாக்ஸ் அதிகமான அறிப்பை உண் டாக்குகிறது. மண்டைத்தோல், முகம், பிறப்பு உறுப்பு கள் ஆகிய இடங்களில் அக்கி ஏற்படும்போது ரஸ் டாக்ஸ் விசேஷமாகப் பயன்படும். வியாதியுள்ள இடம் மங்கிய சிவப்பாய் இருக்கும். பெரியம்மையில் ஏற்படும் சருமக் கோளாறுடன் ஏராளமான அறிப்பு.

விழுங்குதல் குறிகள்:—உணவில் விருப்பம் இல்லாமல் பசிமட்டும் இருத்தல். சாப்பிட வேண்டுமென்ற ஆவல் எதுவும் இல்லாமல் வயிற்றில் பசிக்கும் அல்லது ஒன் றும் இல்லாமல் காலியாக இருக்கும் உணர்ச்சி. அகோர மான பசி சிறிது நேரம் உட்கார்ந்திருந்தவுடன் மாய

மாய் மறைந்து போகும். வாயில் எண்ணெய் இருப்பது போல் குழகுழப்பாய் இருக்கும் உணர்ச்சி இருந்தாலும் உணவு வாய்க்கு நன்றாகவே இருக்கும். இரத்தம் வாயினுள் வந்திருப்பது போன்ற சுவையுடன் இருமல், ஆனால் ஒரு பொட்டு இரத்தம்கூட காணப்படுவதில்லை. "உடம்பு முழுவதும் அடிபட்டது போன்ற வலியுடன் நெருப்பின் அருகே இருக்கும் போதும் குளிரும் உணர்ச்சி." கீழ்முதுகு வலியில் ஆரம்பத்தில் வியாதியஸ்தருக்கு அசைவினால் அனுகூலம் ஏற்பட்டாலும் ஏற்படாவிட்டாலும் ரஸ் டாக்ஸ் முக்கிய ஔஷதம் என்று லிலியந்தால் எழுதுகிறார். ரஸ் டாக்ஸ் வியாதியஸ்தருக்கு உணவு விஷயத்தில் உண்டாகும் விருப்புகள் இந்தியர்களாகிய நமக்கு ஆச்சரியத்தை அளிக்கும். அதாவது அவ்வியாதியஸ்தருக்கு சுவையுள்ள பண்டங்கள் தான் பிடிக்கும் என்பதில்லை. வெறுக்கத்தக்க நண்டு நத்தைகளில்கூட விருப்பம் ஏற்படும். மூச்சுவிடும் போது காற்று மிகச் சூடாக மூக்குத் துவாரங்களை எரித்துவிடுவதுபோல் தோன்றும். இடைவிடாமல் கடுமையான தும்மல். இடைவிடாமல் கொட்டாவி விடுதல். குளிர்ந்த தண்ணீரை விரும்புவார், ஆனால் குடித்தவுடன் வாந்தி செய்யப்படும்.

தளர்ச்சி :—அதிகக் களைப்புடன் தானாகவே மலம் வெளிப்படுதல். விரைப்பை தளர்ந்து தொங்குதல். அடி வயிறு தளர்ந்து அடி எடுத்து வைக்கும்போது ஒவ்வொரு தடவையும் உள்ளுர ஆடுதல். நடக்கும் போது அல்லது தலையை ஆட்டும் போது மூளை தனியாக ஆடுவது போல் தோன்றுதல். பொதுவான உடல் சோர்வு.

பக்கங்கள் :—அனேகமாகக் கீழ் உள்ள பக்கங்களை

வியாதியினால் தாக்கப்படும். அடிவயிற்றின் வலது பக்க வலீயம். உடலின் இடது பக்கம், இடது கை, இடது மார்பு, இடது கால்.

திசைகள்:—முகத்தில் தோன்றும் அக்கிப் படுவன் இடது பக்கத்திலிருந்து வலது பக்கம் பரவும். சீழ்ப் பிடிக்கும் குணம் உள்ள அக்கிப் படுவன், விசேஷமாக அது கணுக்கால்களில் ஆரம்பித்து மேல்பக்கம் பரவுமானால். அக்கிப் படுவன் மண்டைத் தோலுக்குப் பரவுதல்.

மற்ற குறிகள்

வயிற்றுக் கடுப்பு அல்லது காச நோயுடன் மாறி மாறித் தோன்றும் குணமுள்ள சரும வியாதிகள். ரஸ் டாக்ஸில் உள்ள உபாதிகூடுதல் குறைதலுடன்கூடிய தொடைநரம்பு வாதம் (இடது பக்கம்). அரையிடுக்குகளிலுள்ள சுரப்பிகளில் வீக்கம். "மிக மோசமான சுவாசகோச வேக்காட்டு வியாதியில் அதிக சுரத்துடன் செங்கல் தூள் போன்ற அல்லது இரத்தம் கலந்த கோழை மிகவும் சிரமப்பட்ட பிறகு வெளியேறுதல் (பாஸ்பரஸ்)." கையைப் படுக்கைக்கு வெளியே நீட்டினால் இருமல் உண்டாகும். மானிக் கொண்டையை மூடியிருக்கும் தோல் கொண்டையின் பின்பக்கம் சென்று முன்பக்கம் இழுக்க முடியாமல் போகுதல். விரைப்பை வீங்கித் தடித்தல்; இத்துடன் பொறுக்கமுடியாத அறிப்பும் சேர்ந்து காணப்பட்டால் சந்தேகமில்லாமல் அக்கேசுக்கு ஏற்றது ரஸ் டாக்ஸ் என்று கூறலாம். பனியினால் ஏற்படும் சருமக் கோளாறுகள். மலம் இரத்தம் கலந்தும் தண்ணீர்போல் நீர்த்தும் மாமிசம் கழுவிய நீர் போலவும் இருக்கும்.

உறவு:—பிரயோனியா முன்னும் பிறகும் நன்முக வேலை செய்கிறது. அபிசுக்கு ரஸ் டாக்ஸ் பகை. ஆதலால்

அபிசை ரஸ் டாக்சுக்கு முன்போ பிறகோ கொடுப்பது கூடாது. இப்பகை சரும வியாதிகளில் மிகத் தெளிவாகத் தென்படுகிறது.

ஒப்பிடுதல்:—வாத ரோக சம்பந்த முள்ள பாரிச வாதம் (காஸ்டிகம்). பற்களின் சுவடுகள் படிந்த நாக்கு (ஆர்ஸனிகம், செலிடோனியம், மெர். சொலு, ஸேபியா). சுர முள்ள போது மேல் உதட்டின் மேல் கொப்பளங்கள் (ஆர் ஸனிகம், நேட்ரம் மூர்). வாயின் மூலைகள் புண்ணாய் இருத் தல் (நைட்ரிக் ஆஸிட்). குளிர்ச்சியான பாலில் விருப்பம் (பாஸ்பரஸ், ஸ்டாபிஸாக்ரியா, ட்யுபர்குலினம்). பாகு போன்ற மலம் (ஆலோ. காலி பைக். கோல்சிகம்). தற் கொலை செய்து கொள்ள நினைத்தல் (ஆர்ஸனிகம், ஆரம் மெட், ஹிப்பார் ஸல்பர், நைட்ரிக் ஆஸிட், நக்ஸ் வாமிகா. தண்ணீரில் நின்று கொண்டு வேலை செய்ததால் உண்டா கும் கோளாறுகள் (கல். கார்ப்). டைபாய்டு சுரத்தின் ஆரம்பத்தில் மூக்கிலிருந்து இரத்தப் பெருக்கு (பாஸ்பாரிக் ஆஸிட்). குளிர்ந்த தண்ணீரில் விருப்பம்; ஆனல் குடித்த வுடன் வாந்தி செய்தல் (ஆர்ஸனிகம்). விழுங்கும் போது அடிக்கடி புறை யேறுதல் (காலி கார்ப்). இரவில் உமிழ் நீர் ஏராளமாய் உற்பத்தியாகுதல் (சாமோமில்லா, நக்ஸ் வாமிகா, பாஸ்பரஸ்). இரத்தம் கலந்த மூத்திரம் சொட் டுச் சொட்டாக வெளியேறுதல் (பல்ஸடில்லா). மூச்சுக் காற்று சூடாய் இருத்தல் (கல். கார்ப், ஸல்பர்). ரஸ் டாக் ஸில் சீழ்ப் பிடிக்கும் குணமும் அதிகமான அறிப்பும் காணப்படும். அபிசில் இந்த இரண்டு குணங்களும் காணப்படுவதில்லை.

முகத்தில் தோன்றும் அக்கிப் படுவனில் ஆரம்பத்தில் வியாதி யுள்ள இடம் மஞ்சள் கலந்த சிவந்த நிறமாய் இருந்தால் அபிசும் மங்கிய சிவப்பு நிறமாய் இருந்தால் ரஸ் டாக்சும் உபயோகமாகும். லாச்சஸிசில் முகம் கரு நீல

மாய் இருக்கும். பெல்லடோன்னாவில் முகம் கல்ல சிவப்பாய் இருக்கும்.

அபிஸ் மெல்லிபிகாவில் அக்கி முகத்தின் இடது பக்கத்தில் குறுக்கு வாட்டில் பரவும். ரஸ் டாக்ஸில் இடது பக்கத்திலிருந்து வலது பக்கத்துக்குப் பரவும். அபிஸ் கேசுகளில் வியாதி பரவிய வுடன் மிக விரைவில் அவ்விடங்களில் நீர்ச் சுரந்து வீங்கும். ரஸ் டாக்ஸ் அக்கிப் படுவன் அனேகமாகக் கொப்பளங்கள் சேர்ந்தே இருக்கும்.

குறிப்புகள் :—இளம் பிள்ளை வாத வியாதி மிகவும் அதிகமாய் உள்ள அமெரிக்காவில் அதை எதிர்த்துப் போராட ஓர் திட்டம் ஆரம்பிக்கப் போவதாக சமீபத்தில் ரேடியோ மூலம் அறிவிக்கப்பட்டது, நம் நாட்டிலுள்ள பெரிய பட்டணங்களிலும் இக்கேசுகள் தோன்ற ஆரம்பிக்கின்றன. இவ்வியாதிக்கு ஹோமியோபதி வைத்திய முறையிலே அனேகமாய் ஓர் சஞ்சிவி என்று மதிக்கப்படும் ஔஷதமும் இருப்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அது நமது மெட்டீரியா மெடிகாவில் உள்ள மிக முக்கியமான ஔஷதங்களில் ஒன்றாகிய ரஸ் டாக்ஸ் தான். இவ்விதமான இளம் பிள்ளை வாதக் கேசுகளில் பெரும் பான்மையானவை வாத ரோகம் உள்ள போது குளிர் தாக்கிய காரணத்தாலேயே தோன்றுகின்றன. இது ரஸ் டாக்ஸின் விசேஷக் குறிகளில் ஒன்று அல்லவா? "தாதிகள் குழந்தைகளைப் பூங்காவுக்கு அழைத்துச் சென்று அங்கே அவைகளை வண்டியிலிருந்து எடுத்து ஈரமும் குளிரு முள்ள தரைகளில் படுக்க வைக்கின்றனர். இதனால் சில நாட்களில் இளம் பிள்ளை வாதம் உண்டாகிறது. ரஸ் டாக்ஸ் இக்கேசுகளைக் குணம் செய்யும். ஏனென்றால் வியாதிக் குறிகள் ரஸ் டாக்ஸில் காணப்படுவதைப் போலவே இருக்கின்றன" என்று கெண்ட் எழுதுகிறார்.

இவ்வியாதி ஏற்படும் குழந்தைகளில் அனேகமாக

எல்லோருக்கும் உடலில் ஸோரா விஷம் மிக அதிகமாக இருக்கிறது என்றும் சிலருக்குப் பரம்பரை பரம்பரையாக இருந்து வரும் க்ஷயரோகச் சின்னங்கள் இருக்கின்றன என்றும் நான் நினைக்க வேண்டி இருக்கிறது. இவ் விரண்டு வகையான உடல் நிலைமைகளுக்கும் ரஸ் டாக்ஸ் ஏற்றது தான். இதைத் தவிர இளம் பிள்ளை வாதக்கேசுகளில் சில பிறவியிலிருந்தே மேகக் கிரந்தி விஷத்தால் பீடிக்கப்பட்டுள்ள குழந்தைகளாய் இருக்கின்றன. நல்ல வேளையாக மேகக் கிரந்தியினால் ஏற்படும் இவ்விதக் கேர்ளாறுகளை அடக்கவும் ரஸ் டாக்ஸ் வலிமை பொருந்திய தாய் இருக்கிறது.

சென்ற சண்டையின் போது வானத்திலிருந்து வீசப் படும் குண்டுகளுக்குப் பயந்து வேறு ஒரு ஊரில் குடியேறிச் சில காலம் அங்கு தங்கி இருந்தேன். அச்சமயத்தில் மூன்று பசுக்களுக்குக் கன்றுகளை ஈன்ற பிறகு பாரிசவாதம் கண்டு என்னிடம் சிகிச்சைக்குக் கொண்டு வரப்பட்டன. அப் பசுக்கள் கட்டப்பட்டிருந்த கொட்டில் எந்த நிமிஷம் இடிந்து விழுமோ என்ற மோசமான நிலைமையில் இருந் தது. இத்தகைய கொட்டிலில் ஈரத் தரையில் தான் பசுக் கள் படுத்திருக்குமாம். அந்த ஊரோ கடல் மட்டத்துக்கு மேல் 7000 அடி உயரத்தில் இருக்கிறது. அடிக்கடி மூடு பனியும் குளிரும் ஏற்படும். இம் மூன்று கேசுகளும் இரண்டு அல்லது மூன்று வேளை ரஸ் டாக்ஸ் கொடுத்த வுடன் மிக விரைவில் குண மடைந்தன. ஔஷதத்தில் ஒரு சொட்டு எடுத்துச் சிறிது தண்ணீரில் கலந்து ஒவ்வொரு வேளையும் கொடுக்கப்பட்டது.

ரூமெக்ஸ் க்ரிஸ்பஸ்
(RUMEX CRISPUS)

முன்னுரை :—ரூமெக்ஸ் அனேகமாக ஒரு இருமல் ஔஷதமே யாகும். ரூமெக்ஸின் இருமல் என்ருல் அது சாமான்யமான தல்ல. ஆனல் குறிகள் ஒத்திருந்தால், காலோஸிந்திஸ் அதற்கே உரிய குறிகள் உள்ள வயிற்று வலியில் குணம் செய்வதைப் போல், ரூமெக்சும் இருமலை வியக்கத்தக்க முறையில் மிக விரைவில் குணம் செய்து விடுகிறது.

பொதுவான குறிகள்

தகுதி :—ஸோரா விஷம் அதிகரித்துள்ளவர்கள் ; க்ஷயரோகம் தோன்றும் அறிகுறிகள் உள்ளவர்கள். "திடீரென்று ஏற்படும் அல்லது நாட்பட்ட நீர்க் கோர்வை" நாட்பட்ட, முற்றிய நிலையிலுள்ள க்ஷய ரோகக் கேசுகள்.

மனம் :—உற்சாகம் குறைந்திருத்தல், மூன்கோபம் மனவேலை செய்யப் பிரியம் இல்லாமை.

உடல் :—அசதியும் சோர்வும். மார்பில் புண்ணுள்ள உணர்ச்சி. கடுமையான தும்மல்கள். நாக்கும் வாயும் நெருப்புச் சுட்டதுபோல் தோன்றுதல். வாய் காய்ந் திருத்தல், நடுமார்பெலும்பு சுளுக்கிக் கொண்டது போல் தோன்றுதல்.

உபாதி கூடுதல்:—வியாதியஸ்தருக்குக் குளிர் ஒத்துக் கொள்வதில்லை. அடிக்கடி நீர்க்கோர்வை பிடிக்கும். பருவநிலையில் ஏற்படும் கடுமையான மாறுதல்களால் உபாதிகள் அதிகமாகும். உடலில் குளிரும் உணர்ச்சி; நெருப்பின் அருகே இருக்க விரும்புவார். நன்முகச் சூடு

உண்டாகும்படி நிறையப் போர்வைகளைப் போர்த்திக் கொள்ள விரும்புவார். முக்கியமாகத் தலையை நன்றாகப் போர்த்திக் கொள்ளவேண்டும்.

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):— குளிர் காற்று ஒத்துக் கொள்ளாமை என்ற தலைப்பின் கீழேயும் பார்க்கவும். இடது பக்கமாய்ப் படுத்தால் இருமல் அதிகமாகும். இருமல் பகலில் மட்டும் இருக்கும். ஒரு அறையிலிருந்து வேறு ஒரு அறைக்குச் சென்றாலும் ஆழ்ந்து காற்றை உள்ளே இழுத்தாலும் மூச்சு விடும் போது ஒழுங்கு தவறினாலும், அதாவது வழக்கத்தைவிடச் சற்று அதிகமான அளவு காற்றை உள்ளே இழுத்தல் அல்லது சற்று வேகமாக மூச்சு விடுதல், இருமல் அதிகமாகும். தொண்டையைத் தொட்டால் அல்லது அமுக்கினால் உடனே இருமல் உண்டாகும். விடியற் காலையிலும் காலை 5 மணியிலிருந்து 10 மணி வரையிலும் வயிற்றுப் போக்கு அதிகமாகும். இருமல் இரவு 11 மணிக்கு அதிகமாகும் (தூக்கத்தினால் வியாதி அதிகரிப்பதற்கு இது ஓர் உதாரணம் என்று சொல்லக் கூடாது); இவ்விருமல் கர்ண கடூரமாகவும் சிற்றிருமல்களாகவும் இருக்கும். விடியற் காலை 2 மணியிலிருந்து 5 மணி வரையிலும் இருமல் அதிகமாய் இருக்கும். மாடிப்படி ஏறும் போது இருதயப் படபடப்பு. சருமத்தில் முறை வைத்து அறிப்பு உண்டாகும்.

உபாதி குறைதல்:—நன்றாக உடம்பைப் போர்த்திக் கொண்டால் வியாதியஸ்தருக்குச் சௌகரியமாய்த் தோன்றும்.

உபாதி குறைதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):—தலையைத் துணியால் மூடிக் கொண்டவுடன் இருமல் நின்றுவிடும். குளிர் காற்று உள்ளே செல்ல முடியாதபடி

வாயை இறுக மூடிக் கொண்டவுடன் இருமல் நின்றுவிடும். சூடான காற்றினுல் உபாதிகள் குறைவதற்கு இது ஓர் உதாரணம். சருமத்தில் ஏற்படும் அறிப்பு சூட்டினுல் நீங்கும். வலது பக்கமாய்ப் படுத்தால் இருமல் தணியும்.

விசேஷக் குறிகளின் விளக்கம்

வேதனை; அறிப்பு: கடுமைக்குணம்: குளிர்காற்று ஒத்துக் கொள்ளாமை:—காதுகளின் உட்புறத்தில் அறிப்பு. மூக்கைக் குடைய அதிக ஆவல். நாற்றமுள்ள அபான வாயு வெளியாவதுடன் ஆசனவாயில் அறிப்பு. தொண்டையில் குருகுருவென்ற குடையும் உணர்ச்சியினுல் இருமல் உண்டாகும். இவ்வுணர்ச்சி கீழே சுவாசக் குழாய்ப் பிரியும் இடத்திலும் பரவும். குடையும் உணர்ச்சியைப் பற்றி ஒப்பிடுதல் என்ற தலைப்பின் அடியிலும் பார்க்கவும். வறண்ட, இடைவிடாமல் ஏற்படும், கடுமையான, கலைப்பை உண்டாக்கும் குணமும் உள்ள இருமல்.

மேலே சொல்லப்பட்ட பல வகை இருமல்களும் குளிர் காற்றைச் சிறிதளவு உள்ளே இழுத்தாலும் அதிகமாகும். உள்ளிழுக்கும் காற்றின் அளவை அல்லது வேகத்தை அதிகரிக்கும் எல்லாக் காரணங்களாலும் இருமல் அதிகரிக்கும்.

குளிர்காற்று (சற்றே குளிர்ந்த) கொஞ்சங்கூட ஒத்துக் கொள்வதில்லை என்ற இக்குறிக்குக் கீழே கொடுக்கப்பட்டுள்ள சருமவியாதிக் குறிகளையும் உதாரணமாகச் சொல்லாம். உடலின் பல்வேறு இடங்களிலும், விசேஷமாகக் கால்களில், உண்டாகும் அறிப்பு குளிரினுல் அதிகமாகும். ஆடைகளைக் களைதல், போர்வையை நீக்குதல் அல்லது திறந்த இடங்களில் அல்லது குளிர் காற்றில் எவ்விதமாவது உடலின் மீதுள்ள ஆடை-

விலகுதல் முதலிய காரணங்களாலும் அறிப்பு கூடுதலாகும். இவ்விதம் குளிர் காற்று உடம்பின்மேல் படுவதால் சில சமயங்களில் கடுமையான அறிப்பு உண்டாகும். அறிப்பும் சொறிந்தால் வில்லை வில்லையாகத் தடிப்பதுமான குறிகளுள்ள சரும வியாதி திறந்த இடங்களில் தோன்றும் அல்லது அதிகமாகும்.

விடியற் காலையில் குடல்களில் மிக அதிகமான வேதனை தோன்றி அதன் விளைவாய் வியாதியஸ்தரைப் படுக்கையிலிருந்து விரட்டியடிக்கும் வண்ணம் மலம் கழிக்க மிக அவசரமான தூண்டுதல் தோன்றும்.

இருமல் மிகக் கடுமையாய் இருப்பதால் இருமும் போது (பெண்களுக்கு) மூத்திர ஒழுக்கு ஏற்படும்; விடியற் காலையில் ஏற்படும் வயிற்றுப் போக்கில் இரைதலும் மலமும் தானாகவே வெளிப்படலாம். மார்பின் அடித்தளத்தில் குடையும் உணர்ச்சியினால் இருமல் தோன்றும். ஐந்து முதல் பத்து நிமிஷங்களுக்கு இடைவிடாமல் இருமல் ஏற்பட்டுக் களைப்பை உண்டாக்கும். மிகக் கஷ்டப்பட்டுச் சிறிதளவு கோழை வெளிப்படும் கடுமையான இருமல்; இருமலினால் தலை துண்டுதுண்டாக வெடித்துப்போய் விடுமோவென்று நினைக்கும் அளவுக்குத் தலையில் கடுமையான வேதனை; ஒவ்வொரு தடவையும் சேர்ந்தாற்போல் இருமல் ஏற்படும்போது மார்பிலிருந்து ஒவ்வொரு கணமும் இரத்தம் வெளியே கொட்டும் என்று தோன்றும். ஒவ்வொரு தடவையும் இருமிய பிறகு களைப்புத்தட்டும். இவ்விதம் அதிக நேரம் நீடிக்கும் இருமல் வெறுக்கத் தக்க கக்குவாய் இருமலுடன் உறவு உள்ளதே.

கடுமையான நீர்க் கோர்வையுடன் தோன்றும்

இன்புளுயன்ஸா : அதைத் தொடர்ந்து மார்ச்சளி உண்டாகும். தாராளமான பெருக்குள்ள நீர்க் கோர்வையில் கடுமையான தும்மல் : இரத்தப் பெருக்கு ஏற்படும்.

வியாதியஸ்தருக்குக் குளிர்ந்த பருவக்காலம் சிறிதளவும் ஒத்துக் கொள்வதில்லை. குளிர் தாக்கும்போது ஒவ்வொரு தடவையும் அது எலும்பு மூட்டுகளைப் பாதிப்பதுபோல் தோன்றும்.

திடீர்க் குணம் :—காலையில் மலம் கழிக்கத் திடீரென்று தூண்டுதல் உண்டாகும். இருமும்போது மூத்திரமோ அல்லது மலமோ திடீரென்று தானாகவே வெளிப்படும். மூக்கின் உட் புறத்தில் திடீரென்று குடையும் உணர்ச்சி உண்டாகிப் பிறகு தாராளமான நீர்ப் பெருக்குடன் கடுமையான தும்மல் மிக வேகமாக ஏற்படும்.

வறட்சி : குறைவான கழிவுகள் : பிசுக்கென்று ஒட்டிக் கொள்ளும் குணம் :—வாய், குரல்வளை, பெரிய சுவாசக் குழாய் ஆகியவைகளில் வறட்சி. மூக்கு காய்ந்திருத்தல். மூக்குத் துவாரங்களின் நுனியில்கூட காய்ந்த உணர்ச்சி காணப்படுதல். அதிக நேரம் இருமிய பிறகும் கோழை சிறிதளவே வெளிப்படுதல் அல்லது கொஞ்சங்கூட வெளிப்படாமை. தொண்டையினுள்ளே பிசுக்கென்று ஒட்டும் குணமுள்ள கோழை இருந்தாலும் வியாதியஸ்தரால் அதை வெளியேற்ற முடியாது. சிறிதளவு கோழை வெளியேறும் போது அதனால் வியாதியஸ்தருக்குச் சௌகரியம் ஏற்படுவதில்லை.

ஏராளமான கழிவுகள் :—"குறைவான கழிவுகள்," ஏராளமான கழிவுகள் ஆகிய ஒன்றுக்கொன்று எதிராகவுள்ள இரு குறிகளும் இவ்வௌஷதத்தில் காணப்படு

கின்றன. மூக்கு, தொண்டை, மார்பு ஆகிய இடங்களி லிருந்து ஏராளமான கழிவுகள் வெளிப்படுதல். மூக்கி லிருந்து கொஞ்சங்கூட இடை விடாமல் நீர்ப்பெருக்கு வெளியாகலாம். கோழை ஏராளமாகவும் நீர்த்தும் நுரைகளுடனும் இருக்கும்.

புண் உள்ள உணர்ச்சி :—கழுத்துப்பட்டை எலும்பின் கீழே புண் உள்ள உணர்ச்சி அல்லது தோல் உரிந்து போய் விட்டது போல் தோன்றுதல். மார்பின் உட்புறமாகிய இவ் விடத்திலும் குறிப்பாக இடது பக்கக் கழுத்துப்பட்டையின் கீழும் இத்தகைய புண்ணுள்ள உணர்ச்சி காற்றை உள்ளே இழுக்கும்போது வலியுடனும் எரிச்சலுடனும் தோன்றும். தொண்டையிலுள்ள கோழையைக் காறித் துப்பும் போது இரு கழுத்துப்பட்டை எலும்புகளின் கீழும் புண்ணுள்ள உணர்ச்சி உண்டாகும். இருமும் போது குரல்வளையிலும் பெரிய காற்றுக் குழாயிலும் புண் இருப்பது போல் தோன்றுதல். நடுமார்பெலும் புக்குப் பின்புறத்தில் தோல் உரிந்துவிட்டது போல் தோன்றுதல். நாக்கின் ஓரங்களில் தோல் உரிந்து விட் டது போல் தோன்றுதல். நாக்கும் வாயும் நெருப்பி னால் சுடப்பட்டது போல் தோன்றுதல். கண்களில் சுரப்பசை வற்றிவிட்டது போல் வலி.

இடது பக்கமே வியாதிகள் அதிகம் :—இவ்வெளஷ தத்துக்கும் உடலின் இடது பக்கத்துக்கும் நெருங்கிய உறவு இருக்கிறது. இடது கழுத்துப் பட்டையெலும்பின் கீழே புண்ணுள்ள உணர்ச்சி. இடது சுவாசகோசத்தின் நடுவில் வலி. (க்ஷயரோகத்தில்) இடது சுவாசகோசத் தில் குத்தும் வலிகள்.

மற்ற குறிகள்

பகல் வேளையில் மட்டும் இருமல். கோழையை

வெளியே கொண்டு வரக்கூடிய அளவுக்குப் பலமாகத் தன்னால் இருமல் முடியாது என்று நினைத்தல். மார்பில் வலியும் புண்ணுள்ள உணர்ச்சியும். தோள்பட்டை யெலும்புகளின் இடையில் இசிவு வலி. "நடுமார்பெலும்பின் மத்யபாகத்தில் பின் பக்கத்தில் வலியுடன் இருமல்." காலை வேளையில் உண்டாகும் வயிற்றுப் போக்கில் மலம் பழுப்பு நிறமாகவும் தண்ணீர்போல் நீர்த்தும், ஏராளமாகவும் நாற்றத்துடனும் அனேகமாக வலி இல்லாமலும் வெளியாகும்.

மூற்றிவிட்ட சுவாசகோச க்ஷயம். "மூற்றிவிட்ட சுவாசகோச க்ஷயத்தில் வியாதியஸ்தரின் கஷ்டத்தைத் தணிக்க உதவும் விலையுயர்ந்த ஔஷதங்களில் ரூமெக்சும் ஒன்று; பல சமயங்களில் ரூமெக்ஸ் வியாதியஸ்தரின் ஆயுளை மேலும் ஓராண்டுக்கு விருத்தி செய்யும். ரூமெக்ஸ், பல்ஸடில்லா, ஸெனகா, ஆர்ஸனிகம் ஆல்பம், நக்ஸ் வாமிகா ஆகிய இவ் வௌஷதங்களின் துணை கொண்டு சுவாசகோச க்ஷயமுள்ள வியாதியஸ்தரின் கடைசி நாட்களை ஓட்டுப் போடலாம்" என்று கெண்ட் எழுதுகிறார். என்னுடைய அபிப்பிராயத்தில் இவ்விதம் ஓட்டுப்போட உதவுவதற்கு மற்றுமொரு ஔஷதமும் இருக்கிறது. அது டிரோஸிரா. மூற்றிய சுவாசகோச க்ஷயத்தில் டிரோஸிராவை எந்தெந்தக் குறிகளைக் கொண்டு உபயோகிக்கலாம் என்று கெண்ட் குறிப்பிட வில்லை. முன்னதாகவே குறிப்பிடப்பட்ட குடையும் உணர்ச்சி என்ற வ்சேஷக்குறியும் உபாதி கூடுதல் குறைதலும் இருந்தால் சந்தேகம் இல்லாமல் இவ்வௌஷதத்தை உபயோகிக்கலாம். கழுத்துப் பட்டையெலும்புகளின் அடியில் அல்லது நடுமார்பெலும்பின்

மத்திய பாகத்தில் பின்புறத்தில் வலி இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம். இடது சுவாசகோசத்தில் குத்தும் வலிகள் இருக்கலாம்.

ஒப்பிடுதல்:—விடியற் காலையில் வயிற்றுப் போக்கு (ஆலோ, நேட்ரம் ஸல்ப், போடோபில்லம், ஸல்பர்). காலையில் அதிகரிக்கும் குணமுள்ள பழுப்பு நிறமுள்ள வயிற்றுப் போக்கு (நேட்ரம் ஸல்ப், ஸல்பர்). இடை விடாமல் தும்மல் (ஆர்ஸனிகம், ஸபடில்லா). சுவாச கோச க்ஷயத்தில் இரவில் இருமல் (கோனியம், டிரோஸிரா, ஹயஸ்யாமஸ், பாஸ்பரஸ், பல்ஸடில்லா). வெவ்வேறு சூடுள்ள இடங்களில் அல்லது அறைகளில் செல்லும் போது இருமல் தோன்றுதல் (பாஸ்பரஸ், ஸ்பாஞ்சியா). குளிர்ச்சியான காற்று அடிக்கும் ஒவ்வொரு தடவையும் எலும்பு மூட்டுகள் பாதிக்கப்படுதல் (கல். பாஸ்). பகலில் மட்டும் இருமல் (பெர்ரம் மெட், மங்கானம்). கீழே படுத்தவுடன் குடையும் உணர்ச்சியுடன் வேதனை தரும் இருமல் (ஹயஸ்யாமஸ், கோனியம்).

"தொண்டையின் மேல் பக்கத்தில் ஏற்படும் வேதனை அல்லது குடையும் உணர்ச்சியினால் இருமல் உண்டாகும் போது பெல்லடோன்னா. ரூமெக்ஸ் இருமல் தொண்டையில் இன்னும் சிறிது கீழே, அதாவது கழுத்துப்பட்டையெலும்புக்குச் சற்று மேலாக உள்ள இடத்தில் ஏற்படும் குடையும் உணர்ச்சியினால் தோன்றுகிறது. பாஸ்பரஸில் இதையும் விடக் கீழே அதாவது கழுத்துப்பட்டையெலும்புகளுக்கும் கீழே ஏற்படும் குடையும் உணர்ச்சியினால் இருமல் உண்டாகிறது." இவ்வாறு குறிப்பிட்டவர் பாரிங்டன்.

ரூடா க்ராவியோலென்ஸ்

(RUTA GRAVEOLENS)

முன்னுரை:–ரூமெக்ஸ், ஐரிஸ் வர்ஸிகலர், லாக் கானினம் முதலிய முக்கிய ஔஷதங்கள் பல சமயங்களில் கவனிக் கப்படாமல் விடப்படுகின்றன: ரூடாவும் இவ்வகையைச் சேர்ந்தது தான். பல விஷயங்களில் ரூடா ரஸ் டாக்ஸை ஒத்திருக்கிறது.

பொதுவான குறிகள்

தகுதி :—நல்ல உடல்கட்டும் நல்ல இரத்தமும் உள்ளவர்களுக்கு ஏற்றது.

மனம் :—தன் மீதும் பிறர் மீதும் அதிருப்தியும் அடிக்கடி அழுவதும்.

உடல் :—கீழே வைத்துப் படுக்கும் உடல் பாகத்தில் புண்ணுய் இருக்கும் உணர்ச்சி. உடலின் எந்தப் பாகத் தைக் கீழ வைத்துப் படுத்தாலும் அவ்விடத்தில் வலி தோன்றுதல், காயம் பட்டதுபோல் இருத்தல். "உடம் பில் மிகவும் அதிகமான அலுப்பும் பலவீனமும் மனத்தளர்ச்சி யும் உண்டாகுதல்."

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):– குளிர்ச்சியான பருவக் காலம், குளிர்ச்சியும் ஈரக்கசிவும் உள்ள பருவக் காலம் ஆகியவைகளால் உபாதிகள் கூடுத லாகும். காயங்கள், சுளுக்குகள், உடலை மிகச் சிரமப் படுத்தி வேலை செய்தல், துணி தைத்தல், மிகச் சிறிய அச் செழுத்துக்களைப் படித்தல் முதலிய நுட்பமான வேலை களில் அளவு மீறி ஈடுபட்டதால் கண்களில் உண்டாகும் வலி, மலம் கழிக்கும் போது முக்குதல் முதலியவைகளால் உபாதிகள் தோன்றும்.

அளவு மிஞ்சி உடல் வேலை செய்தல், அடிதடிக் காயங்கள் என்னும் தலைப்பின் கீழும் பார்க்கவும்.

உபாதி குறைதல்:—முதுகைக் கீழே வைத்துப் படுத்தால் முதுகுவலி குறையும்.

விசேஷக் குறிகளின் விளக்கம்

அளவு மிஞ்சி உடல் வேலை செய்தல்: அடிதடிக் காயங்கள்:—எலும்புகளிலும் எலும்புகளின் மேல் தோலிலும் அடிதடிகளால் ஏற்படும் உபாதிகளுக்கு ரூடா ஏற்றது. எலும்புகளில் காயம் பட்டால் இன்னும் விசேஷமாக ரூடா உபயோகப்படும். இவ்விதமான அடிதடிகளால் அதிகமான புண் உள்ள உணர்ச்சியும் காயம் பட்ட உணர்ச்சியும் தோன்றும். எலும்புகளையும் தாக்கியுள்ள காயங்கள். அளவுமீறி வேலை செய்த உடல் பாகங்களுக்கும் தகுந்தது என்றாலும் தசை நார்கள் உள்ள பாகங்களில் அதிக வேலையினால் வலி உண்டாகும் போது ரூடா மிகவும் நன்மை தரும். எலும்பு முறிவுகள், முக்கியமாக எலும்பு மூட்டுகள் நழுவுதல்.

மார்பில் அடிதடி பட்ட காரணமாகத் தோன்றும் சுவாசகோச கூயம்.

சளுக்கு விழுந்த பிறகு, முக்கியமாக மணிக்கட்டுகளிலும் கணுக்கால்களிலும், மூடமான உணர்ச்சி. அடிதடி பட்ட பிறகு குடல்கள் வேலை செய்யாததினால் அல்லது மலம் உருண்டைகள் ஒன்றோடொன்று மோதிக் கொண்டு சுடலை அடைத்துக் கொள்வதால் ஏற்படும் மலச்சிக்கல்.

நுட்பமான தையல் வேலை, சிறிய அச்செழுத்துக்களைப் படித்தல், மிகவும் கவனமாய்ப் படித்தல், கடியா

ரம் தயாரித்தல், மரம், கல் ஆகியவைகளில் செதுக்கிச் சிற்ப வேலை செய்தல் முதலிய காரியங்களில் ஈடுபடு வோருக்குப் பார்வை பலவீனம் அடைந்து மங்கலாகுதல். தூரத்துக்கு ஏற்றபடி கண்கள் விரிந்து சுருங்காமை. அளவுமீறிக் கண்களுக்கு வேலை கொடுத்தால் கீழ் உள்ள குறிகள் தோன்றும். 1. கண்கள் சிவந்து சூடாகவும் வலி யுடனும் இருக்கும். 2. இரவில் கண்கள் நெருப்புப் பந்துகள் போல் எரியும். 3. படிக்கும்போது கண்களில் எரிச் சல், இசிவு வலி, தளர்ந்துவிட்ட உணர்ச்சி. 4. தலைவலி.

கனமான சுமைகளைத் தூக்கிச் சென்றதால் வயிற் றில் தளர்ச்சி உண்டாகி நாட்பட்ட அசீரணம் தோன்று தல்.

காயம்பட்ட, முடமான, சுளுக்கிக்கொண்ட உணர்ச்சி:— உடல் என்ற தலைப்பைப் பார்க்கவும். முதுகெலும்பில் அடிபட்டு முடமாய் விட்டதுபோல் தோன்றுதல். மணிக்கட்டுகள் சுளுக்கிக் கொண்டதுபோல் இருத்தல். தலையில் காயம்பட்டதுபோல் அல்லது அடிபட்டது போல் உணர்ச்சி. கண்களில் களைத்த உணர்ச்சி. தொடை களில் உள்ள நரம்புகள் குட்டையாய் விட்டதுபோல் தோன்றுதல். பிரசவ சமயத்தில் உடம்பு முழுவதும் முடமான உணர்ச்சியும் புண்ணுள்ள வலியும் இருப்ப துடன் கருப்பை தேவையான அளவு சுருங்குவதில்லை.

அமுக்கும் உணர்ச்சி:—கண்களின் உட் புறத்தில் எலும்பை ஓட்டினாற்போல் அமுக்கும் உணர்ச்சி. புரு வங்களுக்கு மேலே அமுக்கும் உணர்ச்சி. மூக்கின் அடிப் பாகத்தில் அமுக்கும் உணர்ச்சியுடன் அங்கிருந்து இரத் தப் பெருக்கு. மூத்திரப்பையில் எப்பொழுதும் மூத்தி ரம் நிரம்பி இருப்பதுபோல் அமுக்கும் உணர்ச்சி, சில

சமயங்களில் மூத்திரம் வெளியான பிறகும் காணப்படும். மூத்திரப்பையில் அமுக்கும் உணர்ச்சியுடன் சில சமயங்களில் திடீரென்றும் மூத்திரம் கழிக்கத் தூண்டுதல் உண்டாகும்; பச்சை நிறமுள்ள மூத்திரம் கொஞ்சமாய் வெளிப்படும்.

தளர்ச்சி :—பிள்ளைப்பெற்ற பிறகு மலப்பை நழுவுதல். இக்குறி உண்மையில் ரூடாவில் உள்ள காயம் ஏற்படுத்தும் தன்மைக்கு ஓர் உதாரணமே. ஆனால் காயத்தை ஏற்படுத்தாமல் தளர்ச்சியை உண்டாக்கும் குணமும் ரூடாவுக்கு இருக்கிறது. மலப்பை நழுவுதல் என்பதே இவ் வௌஷதத்தின் மிக முக்கிய குறியாகும். மலம் கழிக்க முயற்சி செய்த மறுகணமே மலப்பை நழுவினால் அதற்கு ரூடா தான் உபயோகமாகும் என்பதில் சந்தேகத்துக்கு இடமே இல்லை. சிறிதளவு குனிந்தாலும் மலப்பை நழுவும்; அடிக்கடி பயன் இல்லாத மலம் கழிக்கத் தூண்டுதல் ஏற்படும் போதும் மலப்பை நழுவும். மலம் கடினமாய் இருந்தாலும் சரி, இளகி இருந்தாலும் சரி, மலத்தைக் கழித்தவுடன் ஒவ்வொரு தடவையும் தவறாமல் மலப்பை நழுவும்.

நிலை கொள்ளாமை :—நிலை கொள்ளாமல் படுக்கையில் அடிக்கடி புறண்டு படுப்பார், இடம் மாற்றுவார். ரூடா தேவைப்படும் நிலைமைகளிலே நிலை கொள்ளாமை ஒரு துணைக் குறியாகக் காணப்படும். புண்ணுள்ள வலி, இசிவு வலி, காயம்பட்ட உணர்ச்சி ஆகிய குறிகளுடன் நிலை கொள்ளாமை சேர்ந்திருந்தால் அச்சமயங்களில் ரூடா தான் ஏற்ற ஔஷதம்.

கழிவுப் பொருள் தங்குதல் : கடினமாகவும் தடிமனாகவும் மாறும் குணம் :—காயங்களின் விளைவாய் எலும்பின்

மேல் தோல் தடித்துப் பல இடங்களில் கடினமாகி மூண்டுகள் போல் வீக்கம் தோன்றுவதற்கு ரூடா உபயோகப்படும். எலும்பின் மேல் தோல், எலும்பு, தசை நார்கள், எலும்பு மூட்டுகள் ஆகிய இடங்களில் கழிவுப் பொருள் தேங்கும் குணமும் காணப்படும்.

பாரிசவாத நிலைமை :—நாற்காலியிலிருந்து எழுந்திருக்கும் போது கால்கள் துவண்டு போகும்; சப்பைகளும் தொடைகளும் அவ்வளவு பலவீனமாய் இருக்கும். மாடிப்படி ஏறும் போது அல்லது இறங்கும் போது கால்கள் துவண்டுவிடும். சுளுக்கு விழுந்த பிறகு அப் பாகங்களில் வலியும் முடமாய் விட்ட உணர்ச்சியும். முக்கியமாக மணிக் கட்டுகளிலும் கணுக்கால்களிலும் இக்குறிகள் காணப்படும்.

பாரிச வாதம் :—மணிக்கட்டுகளிலும் கணுக்கால்களிலும் வாத ரோக சம்பந்த முள்ள பாரிச வாதம். குளிரில் அடிபட்டதால் முகத்தில் ஏற்படும் பாரிச வாதம். இவ்வித நிலைமைகளில் வியாதியஸ்தர் நல்ல உடற் கட்டும் நல்ல இரத்தமும் உள்ளவராய் இருந்தால் ரூடா மிக நன்முக வேலை செய்யும்.

மற்ற குறிகள்

உள்ளங் கைகளில் பாலுண்ணிகள்; தட்டையாகவும் மிருதுவாகவும் புண்ணுள்ள வலியுடனும் இருக்கும். உட்கார்ந்திருக்கும் போது திடீரென்று தலை சுற்றுதல். நடக்கும் போது அல்லது குதிரைச் சவாரி செய்யும் போது, குறிப்பாகக் குழந்தைகளுக்குத் தோல் உரியும் குணம்.

தொடை நரம்பு வாதத்தில் தொடை யெலும்பின் நடு

விலே உள்ளூர வலி இருக்கும். கவனியாமல் விடப்படு கிற, இவ்வௌஷதத்தின் மிக விசேஷமான குறிகளில் இதுவும் ஒன்று. நாட்பட்ட தொடை நரம்பு வாதத் தினல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த என்னுடைய வியாதியஸ்தர் ஒருவருக்கு ரூடா 200 ஓரே ஒரு வேளை கொடுத்தவுடன் வலி நீங்கியது. அவருக்கு மேலே குறிப் பிடப்பட்டது போன்ற வலி இருந்தது. ஆனல் வியாதி முழுவதையும் அதனல் குணம் செய்ய முடியவில்லே.

உறவு:—எலும்பு மூட்டுகளேப் பற்றிய கோளாறு களில் கல். பாஸ், ரூடாவுக்கு முன்பும் பிறகும் நல்ல வேலே செய்யும். எலும்பு மூட்டுகளில் அடிதடிபட்டபோது சீக்கிரத்தில் குணம் உண்டாக ஆர்னிகாவுக்குப் பிறகும் எலும்புகளில் ஏற்படும் முறிவுகளில் ஸிம்பிடத்துக்குப் பிறகும் ரூடா நன்முக வேலே செய்யும்.

ஒப்பிடுதல்:—நிலே கொள்ளாமை, குளிர் தாக்கியதால் ஏற்படும் வாதரோகம் (ரஸ் டாக்ஸ்). மலப்பை நழுவுதல் (லாச்சஸிஸ், லேகபோடியம், மெர்.சொலு, போடோபில்லம், ஸேபியா, ஸல்பர்). மூத்திரம் கழிக்கும்போது மலப்பை நழுவுதல் என்னும் குறி மூரியாடிக் ஆஸிடைத் தவிர வேறு எந்த ஔஷதத்திலும் இல்லே. கீழே வைத்துப்படுத்த உடல் பாகங்களில் காயம் பட்டதுபோல் புண்ணுள்ள உணர்ச்சி (ஆர்னிகா, பாப்டீஷியா, பைரோஜெனியம்).

குறிப்புகள்:—ரூடா உபயோகப்படும் கேசுகளில் வலி கள் மிகவும் தாமதமாகத் தோன்றும். அதிக வேலே செய் தல், சுளுக்குகள் ஆகிய காரணங்களால் வலி உடனே தோன்றுவதில்லே. ஒரு வாரம் கழித்து அச்சம்பவம் மறந்து போகக்கூடிய சமயத்தில் சுளுக்கு முதலியவை ஏற் பட்ட இடங்களில் புண்ணுள்ள, காயம்பட்ட உணர்ச்சி யுடன் வலி உண்டாகும். ரூடாவின் இக்குறி என்னிடம்

சிகிச்சைக்குக் கொண்டுவரப்பட்ட ஒரு கேசில் இருந்ததைப் பார்த்திருக்கிறேன்.

விலாவெலும்பின் ஒரு பகுதியில் வலி இருந்தது. வலியுள்ள பகுதி கொஞ்சங் கொஞ்சமாக வீங்கி ஒரு அங்குலக் குறுக்களவும் கால் அங்குலக் கனமும் உள்ள வட்டமான தகடுபோல் ஆகியது. இது ஏற்பட்டகாரணம் கண்டு பிடிக்க முடியவில்லை. இந்த எலும்பு வீக்கத்தை ஒரு அல்லோபதி வைத்தியர் மேகக்கிரந்தியினல் தோன்றியிருக்குமென்று சந்தேகப் பட்டார். என் எதிரே வருகிறவர்கள் என் மேல் பட்டு விடுவார்களோ என்ற பயம் ஏற்பட்டது. **ஆர்னிகா 200** வலியை ஓரளவுக்குக் குறைத்தது. அதற்கு மேல் அதனல் ஒன்றும் செய்ய முடியவில்லை. பிறகு **ரூடா 200** ஒரு வேளை சாப்பிட்டவுடன் என் ஆயுளில் என்னலும் மறக்கமுடியாத வண்ணம் மிக விரைவில் முழுவியாதியும் குணமடைந்தது. கிட்டத்தட்ட இரண்டு வாரங்களுக்கு முன் கனமான ஒரு சுமையைத் தூக்கியதால் இவ்வியாதி ஏற்பட்டது. கோளாறு மிக மெதுவாக வளர்ச்சியடைந்து வந்ததால் அதன் காரணம் என்ன வென்பது மறந்துபோய்ப் பிறகு ஒரு சமயம் மின்னல்போல் பளிச்சென்று ஞாபகத்துக்கு வந்தது.

ஸபீன

(SABINA)

முன்னுரை :—ஸபீன பெரும்பாலும் பெண்களுக்கே உபயோகமாகும் ஔஷதம். கருப்பைக்கும் இதற்கும் நெருங்கிய உறவு உண்டு.

பொதுலான குறிகள்

தகுதி :—பெண்களின் நாட்பட்ட வியாதிகள், பிள்

ஊப் பெற்று அறையில் இருக்கும் பெண்கள். கருவுற்ற மூன்றுவது மாதத்தில் வழக்கமாகக் கருச் சிதைவு தோன்றும் குணமுள்ள பெண்கள். கருச் சிதைவு அல்லது உரிய காலத்துக்கு முன்னதாகப் பிரசவ வலிகள் தோன்றுதல் ஆகிய காரணங்களை ஒட்டி உண்டாகும் கோளாறுகள். வாத ரோகம், கீல் வாயு ஆகிய வியாதிகள் உண்டாகும் உடல்வாகு உள்ளவர் கள்.

மனம்: – சங்கீதத்தைச் சகித்துக் கொள்ள முடியாது; அதனால் பரபரப்பும் பயமும் தோன்றும்.

உடல்:— அல்ப காரணங்களாலும் வியர்வை உண்டாகுதல். கை கால்களில் அதிக பலவீனமும் அலுப்பும் மனச் சோர்வும். புளிப்பான பொருள்களில், குறிப்பாக எலுமிச்சம் பழம் சேர்ந்த பானங்களில், விருப்பம். தூங்கும் போது இடது பக்கத்தைக் கீழே வைத்துப் படுத்திருக்கும் குணம்.

உபாதி கூடுதல்:—பொதுவாகக் சூடு வியாதியஸ் தருக்கு ஒத்துக் கொள்வதில்லை. சூடான அறையில் இருப்பதையும் படுக்கையின் சூட்டையும் அவரால் பொறுக்க முடியாது.

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே):— கருப்பையிலிருந்து வெளிப்படும் இரத்தப் பெருக்கு அல்லது கருச்சிதைவு நேர்ந்த பிறகு உண்டாகும் இரத்தப் பெருக்கு சிறிதளவு அசைவினாலும் அதிகமாகும்; ஏராளமாய் இரத்தம் வெளிப்படுவதை நிறுத்த வேண்டுமானால் ஆடாமல் அசையாமல் படுத்திருக்க வேண்டும். (கருப்பையிலிருந்து வெளிப்படும் இரத்தப் பெருக்கு பல சமயங்களில் நடந்தால் குறைவாகும்) கருச்சிதைவு நேருமோ

வென்று சந்தேகப்படும் சந்தர்ப்பங்களில் மூச்சுக் காற்றை உள்ளே இழுக்கும் போது அல்லது ஆழ்ந்து காற்றை உள்ளிழுத்தால் உபாதி கூடுதலாகும். பனிமூட்டம் உள்ள பருவங்களில் காது செவிடாகுதல்; உடல் கலோப்பு ஏற்படும் போதும் காது செவிடாகும். கீல்வாயு கால்கட்டை விரலுத்தாக்கி அது வீங்கிச் சிவப்பாய்ப் பளபளப்பாய் ஆகும்போது அதைச் சிறிதளவு தொட்டாலும் அல்லது சிறிதளவு அசைத்தாலும் உபாதி அதிகமாகும்.

உபாதி குறைதல்:—திறந்த, குளிர் காற்றுள்ள இடங்களில் சௌகரியமாய் இருக்கும்; அறையின் சன்னல் கலைத் திறந்து வைத்துக் கொள்ள வேண்டு மென்று விரும்புவார்.

உபாதி குறைதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):—கருப்பையிலிருந்து ஏற்படும் இரத்தப் பெருக்கில் நடந்து கொண்டிருக்கும் போது பெருக்கு குறைவாய் இருக்கும். மாதவிடாய்க் காலத்தில் ஏற்படும் வலி மலிலார்ந்து படுத்தாலும் கூட்டினாலும் குறைவாகும். கீல் வாயுவில் மூட்டுக்கு மூட்டு தாவிக் கொண்டே இருக்கும் வலிகள், குறிப்பாகக் கால் கட்டை விரல்களிலும் கைகளிலும் ஏற்படும் வலிகள், குளிர்ந்த ஒற்றிடங்களால் குறையும்.

விசேஷக் குறிகளின் விளக்கம்

நிறைந்த, உப்பிய உணர்ச்சி: இரத்தப் பெருக் கெடுக்கும் குணம்:—இவ்விரு விசேஷக் குறிகளுடன் பல சமயங்களிலும் சேர்ந்து காணப்படும் முக்கிய குறிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. 1. பல நாட்களுக்கு நீடிக்கும் தன்மை. 2. ஏராளமாய் இருத்தல். 3. கட்டிகளுடன் இருத்தல். 4. பிரசவத்தில் காணப்படுவதைப் போன்ற கீழே இழுக்

கவும் கறுப்புக் கட்டிகள் கலந்தும் வெளிப்படும் மாத விடாய்.

கருப்பையிலிருந்து ஏராளமான இரத்தம் வெளியாகும் போது வயிற்று வலியும் பிரசவ வலியைப் போல் கீழே இழுக்கும் குணமுள்ள வலிகளும் சேர்ந்து காணப்படும்.

மாதவிடாய்க் காலத்திலும் பிறகும் கருப்பையிலிருந்து இரத்தப் பெருக்கு வெளிப்படும் போது இடுப்பு அல்லது கீழ் முதுகிலிருந்து கூபக எலும்பு வரை பல்வி இருக்கும் வலிகள் காணப்படும். கடுமையான குத்து வலிகள், பாயும் வலிகள், கத்தியினால் குத்துவது போல் இருத்தல்; யோனியிலிருந்து கருப்பைக்குப் பாய்ந்து செல்லும் வலிகள்.

கருப்பையிலிருந்து வெளிப்படும் இரத்தப் பெருக்கு பல நாட்கள் விடாமல் நீடித்திருந்து பிறகு மறையும். ஆனால் இப்படி பெருக்கு மறைந்திருப்பது சில நாட்களுக்குத் தான். அதன் பிறகு பிரசவ வலிக்கூப் போலவும் கீழே இழுக்கும் குணமும் உள்ள வலிகள் தோன்றும். முதலில் ஒரு பெரிய, கறுப்பு நிற முள்ள கட்டி வெளியாகி அதைத் தொடர்ந்து நல்ல சிவந்த நிறமுள்ள இரத்தம் ஏராளமாய் வெளிப்படும். ஸ்ரீலுவில் இவ்விதக் கோளாறு அடிக்கடி ஏற்படும் ஒரு சம்பவம். இரத்தப் பெருக்கு குறைவது போல் தோன்றினால் சிறிது காலத்திற் கெல்லாம் பெருக்கு ஒன்றுக்கு இரண்டாக அதிகமாகும் என்பதற்கே அடையாளமாய் இருக்கும். இவ்வித இரத்தப் பெருக்கு பிரசவம், கருச்சிதைவு ஆகியவைகளுக்குப் பிறகு உண்டாகலாம். அல்லது காரணமே இல்லாமலும் தோன்றுவது உண்டு.

குதிங்கால்களில் விட்டு விட்டு வலி தோன்றுதல்.

மாதவிடாய்க் காலத்துக்கு முன்னதாக அதாவது மாதவிடாய்களின் இடைக்காலத்தில் கருப்பையிலிருந்து இரத்தப் பெருக்கு உண்டாகுதல். அத்துடன் சிற்றின்ப ஆசையும் அதிகரிக்கும்.

ஸபீனு இரத்தப் பெருக்குகளில் இரத்தம் குபீர் குபீர் என்று வெளிப்படும்.

கீழ்முதுகிலிருந்து கூபக எலும்புவரை வலி :—இக்குறி மேலே விவரிக்கப்பட்டுள்ளது. கீழ்முதுகில் உள்ள இழுக்கும் வலி அங்கிருந்து கூபக எலும்புவரை பரவி இருத்தல் என்னும் இக்குறி மற்ற சில வியாதிகளிலும் காணப்படுவது உண்மை. இவ்வித விசேஷக் குறியுடன் மூல வியாதியில் நல்ல சிவந்த நிறமுள்ள இரத்தம் ஏராளமாக வெளிப்படுகிறது.

இவ்வித விசேஷ வலி காணப்படும் முக்கியமான வியாதிகளாவன : அதிகப் போக்குள்ள மாதவிடாய், மாதவிடாய் இடைக் காலங்களில் கருப்பையிலிருந்து இரத்தப் பெருக்கு, வலியுள்ள மாதவிடாய், பிரசவ வலிகள், பிள்ளைப்பெற்ற பிறகு ஏற்படும் வலிகள், மூலம், ஆகியவை.

ஆணின் பிறப்பு உறுப்புகள், விசேஷமாகத் தாக்கப்படுதல் :—வேக்காடும் சீழும் உள்ள மேகவெட்டை; மானிக் கொண்டை கருஞ் சிவப்பாய் இருக்கும் ; புண் இருப்பது போல் வலியும் எரிச்சலும் உண்டாகும். கொண்டையை மூடியுள்ள தோலில் வலியுள்ள உணர்ச்சியும் அதைப் பின் பக்கம் இழுக்கச் சிரமமும் ஏற்படுதல்.

பெண்ணின் பிறப்பு உறுப்புகள், விசேஷமாகத் தாக்கப்

படுதல் :—மேலே முதல் பாராவில் விவரிக்கப் பட்டுள்ள குறிகளுடன் கீழுள்ளவைகளையும் சேர்த்துக் கொள்ள வும். கருச்சிதைவு, காலத்துக்கு மிகு முன்னதாகவே பிரசவ வலிகள் ஏற்படுதல் ஆகியவைகளுக்குப் பிறகு கருப்பை அல்லது சினைப்பைகளில் வேக்காடு தோன்று தல். மாதவிடாய் அடக்கப்பட்டு மிகுந்த நாற்றமும் மாமிசத்தைக் கழுவிய தண்ணீர்போல் தோற்றமும் உள்ள வெள்ளை ஒழுக்கு வெளியாகுதல்; கருப்பையின் பலக் குறைவால் நஞ்சு வெளியாகாமல் இருத்தல்.

மேகவெட்டை விஷத்தின் அறிகுறிகள் :—ஆணின் பிறப்பு உறுப்புகளில் மேகவெட்டை சம்பந்த முள்ள, பாலுண்ணி போன்ற கெட்ட சதை வளர்ச்சி, எரிச்சலுட னும் வலியுடனும் இருக்கும். "ஆண் பெண் பிறப்பு உறுப்புகளில் மேகவெட்டையில் ஏற்படும் பாலுண்ணிகளையும் பாலுண்ணி போன்ற கெட்ட சதை வளர்ச்சியையும் ஸபீனு குணம் செய்துவிடு" மென்று கெண்ட் எழுதிகிறார். பொறுக்கமுடியாத அறிப்பு, எரிச் சல், ஏராளமான மூலைகள் ஆகியவைகளுடன் கூடிய அத்திக்காய் போன்ற பாலுண்ணிகள்.

பிறப்பு உறுப்புகள் கடுமையாய்த் தாக்கப்படுதல் :— நிறைந்த, உப்பிய உணர்ச்சி, இரத்தப் பெருக்கெடுக்கும் குணம் என்னும் தலைப்பின் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள குறிகளிலிருந்து ஸபீனு எவ்வளவு கடுமையாகத் தாக்கிப் பொறுக்க முடியாத கஷ்டங்களைத் தருமென்பது தெரிய வரும்.

ஆண்களைப் பற்றியவரை சிற்றின்ப ஆசை அதிக மாகும் ; விரைப்பு கடுமையாகவும் நீண்ட நேரம் நீடித் தும் இருக்கும். பெண்களுக்கு மிகக் கடுமையான அளவுக்கும் ஆசை அதிகரிக்கக்கூடும்.

மற்ற குறிகள்

கருவுற்ற காலத்தில் உட்கம்பு முழுவதும் கடுமையான அறிப்பு. கீல் வாயுவினல் எலும்பு மூட்டுகளில் மூண்டுகள். வலி திடீரென்று அதிகமாகி மெதுவாகக் குறையும். ஏதோ உயிருள்ள பொருள் இருப்பதுபோல் அடிவயிற்றில் நடுங்கும் உணர்ச்சி.

உறவு:—தூஜாவுக்கு முன்னும், பிறகும் ஸபீனு நன்முக வேலே செய்யும்.

ஒப்பிடுதல்:—மூன்றுவது மாதத்தில் கருச் சிதைவு (க்ரோகஸ், க்ரீஸோட்). மாதவிடாய் இடைக் காலங்களில் போக்கு வெளிப்படுதல் (அம்ப்ரா, ஹமாமெலிஸ்). மாதவிடாய்ப் போக்கு பாதி தண்ணீர் போலவும் பாதி கட்டி கட்டியாகவும் இருத்தல் (பெர்ரம் மெட்டாலிகம்). கருப்பையிலுள்ள வேற்றுப் பொருள்களே வெளியேற்ற உதவுதல் (கந்தாரிஸ்). நஞ்சு வெளியாகாமல் கருப்பையினுள் தங்கிவிடுதல் (காலோபில்லம், கந்தாரிஸ், இபிகாக், ஸீகேல்). சிக்கல் எதுவும் இல்லாமல் நஞ்சு கருப்பையில் தங்கி இருத்தல் (பல்ஸடில்லா, ஸீகேல், காலோபில்லம்).

நஞ்சு வெளியாகாமல் உள்ளே தங்கிவிடுவதைப் பற்றி இப்பொழுது கவனிப்போம். காலோபில்லம் கேசுகளில் உடல் பலவீனத்தினல் நஞ்சு தங்கி விடுகிறது. அத்துடன் இரத்தப் பெருக்கும் தோன்றும். ஜெல்ஸிமியம் கேசுகளில் அடிவயிற்றின் கீழ்ப் பகுதியில் கடுமையான வெட்டும் வலிகளும் அவை முன்பக்கத்திலிருந்து பின்பக்கம் ஓடுவதும் காணப்படும். இக்காரணத்தாலேயே நஞ்சு வெளியாகாமல் தங்கிவிடும். காஸிபியம் கேசுகளில் நஞ்சு கருப்பையுடன் கெட்டியாக ஒட்டிக் கொண்டிருக்கும். இபிகாக்குஞ கேசுகளில் நல்ல சிவந்த நிறமுள்ள இரத்தம் இடைவிடாமல் வெளியாவதுடன் குமட்டலும் திணறலுடன் மூச்சு

விடுவதும் காணப்படும். பல்லடில்லாக் கேசுகளில் இரத்தப் பெருக்கு நின்று நின்று வெளிப்படும். இத்துடன் அழுகிய கதவுகளையும் சன்னல்களையும் விரியத் திறந்துவைத்துக் குளிர்ந்த காற்று வேண்டு மென்று வியாதியஸ்தர் விரும்பும் குறியும் சேர்ந்து காணப்படும். ஸீகேல் கேசுகளில் அனேக மாகச் சிக்கல் எதுவும் இல்லாமல் நஞ்சு தங்கி இருக்கலாம் அல்லது கருப்பை தாறுமாறுகச் சுருங்குவதாலும் நஞ்சு தங்கிவிடலாம். நஞ்சு உள்ளே தங்கி இரத்தப் பெருக்கு ஏற்படும் போது பல்லடில்லாவைக் கொடுத்து அதனல் குணம் காணுத கேசுகளில் சபினாவைக் கொடுக்கலாம் என்று பாரிங்டன் சியாரிசு செய்கிறார்.

ஸாங்வினேரியா கனடென்ஸிஸ்

(SANGUINARIA CANADENSIS)

முன்னுரை :—இச்செடியின் வேரை நறுக்கினல் அல்லது உடைத்தால் இரத்தம் போன்ற சாறு வெளிப்படும். ஆதலால் இச்செடிக்கு இரத்தம் என்ற பொருளைக் குறிக்கும் ஆங்கிலச் சொல்லாகிய ஸாங்வினேரியா என்னும் பெயர் இடப்பட்டுள்ளது. இரத்தப் பெருக்குக்கு இவ் வௌஷதம் உபயோகமாகும் என்பதையும் நீங்கள் பார்க்கப் போகிறீர்கள். இச்செடியின் வேரை வாயில் போட்டு மென்றல் அதிலிருந்து வெளியாகும் சாறு நாக்கைச் சுட்டு விடுகிறது. எரிச்சல் இவ்வௌஷதத்தின் விசேஷக் குறிகளில் ஒன்று.

ஆழ்ந்து வேலை செய்யும் வல்லமை இவ்வௌஷதத்துக்குக் கிடையாது. சுவாச கோச சுயரோகத்தில் சிற்சில கேசுகளில் இவ்வௌஷதம் உபயோகமாகும் குறிகள் தென்பட்டாலும் அந்நிலைமைகளில் வியாதியஸ்தருக்கு ஓரளவு சௌகரியத்தைத்தான் தரும். (முழுவதும் குணம் செய்யாது).

பொதுவான குறிகள்

தகுதி :—சுவாசகோசங்களைப் பற்றிய வியாதிகளில் கல்லீரலும் வியாதியுற்ற சமயங்களில் விசேஷமாக ஏற்றது. மாதவிடாய் மறையும் காலத்திலுள்ள பெண்கள்.

மனம் :—அதிக நம்பிக்கை, தான் பிழைத்துவிடுவோம் என்று தைரியமாய் இருத்தல். (இக்குறி சுவாசகோச க்ஷயமுள்ள வியாதியஸ்தரின் மனோநிலைமையை ஒத்திருக்கிறது. அவ் வியாதியில் காணப்படுவதைப் போன்ற குறிகள் இவ்வௌஷதத்தில் இருக்கின்றன). அனேகமாக எல்லா வியாதிகளுடனும் ஏக்கம்.

உடல் :—உள்ளங்கைகளிலும் உள்ளங்கால்களிலும் எரிச்சல்; அவைகளைக் குளிரவைப்பதற்காகப் படுக்கையை விட்டுத் தரையில் படும்படி வைப்பார். கன்னங்களில் வட்டமாய்ச் சிவந்திருத்தல். தலையிலும் மார்பிலும் அதிக இரத்தம் சேருதல். காதுகளில் வண்டுகள் ரீங்காரம் செய்வது போலவும் உறுமுவது போலவும் ஓசைகள் (மாதவிடாய் மறையும் காலத்தில் பெண்களுக்கு இக்குறி காணப்படும்). உப்பும் உறைப்பும் உள்ள பொருள்களில் விருப்பம். பட்டினி கிடந்தால் பித்தம் அதிகரித்துத் தலைவலி உண்டாகும். அகத்த இரத்தக் குழாய்கள் பருத்திருத்தல். நடக்கும்போது இடது பக்கக் கழுத்துப் பட்டை யெலும்பின் கீழே வலி, மஞ்சட் காமாலை. இருதய பலவீனமும் படபடப்பும். கூடான ஊசிகளால் குத்துவது போன்ற வேதனை தரும் உணர்ச்சி உடல் முழுவதும் பரவும். மூச்சுக் காற்று நாற்றம் வீசும். மலச்சிக்கலும் வயிற்றுப் போக்கும் மாறி மாறித் தோன்றுதல். நாக்கின் நடுவில் சிவந்த நிறமுள்ள கோடு.

உபாதி கூடுதல் :—மூன்றுவிட்டாய்ப்பிறையும் காலை வாயுமுழுநாடிமுறை, வல்லூட்பக்கமாய்ப்படுத்தல், சுரக் குறிவுள்ள பருவக் காலம் ஆகிய காரணங்களால் உபாதிகள் கூடுதலாகும்.

சாப்பிடாமல் இருந்துவிட்டால் தலைவலி தோன்றும். தலைவலி பகலில் சூரிய உதயத்திலிருந்து அஸ்தமனம்வரை அதிகமாய் இருக்கும். வாகனம் ஏறுகையில் பட்டவுடன் காசதோஷம் அதிகரிக்கும்.

உபாதி குறைதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே):- மண்டை இடி எனப்படும் வகையைச் சேர்ந்த தலை வலி இருட்டான அறையில் எவ்விதமான வேலையையும் செய்யாமல் உட்கார்ந்திருந்தால் குறைவாகும். முகத்தில் ஏற்படும் நரம்பு வலியில் மண்டியிட்டுத் தலையைத் தரையில் வைத்து இறுக அமுக்கினால் வலி குறையும்; வலி மேல் தாடையிலிருந்து எல்லாப் பக்கங்களிலும் பரவும். நமது மெட்டீரியா மெடிகாவில் இதைப் போன்ற வக்ரமான் ஒரு குறியை இதுவரை நான் கண்டதே இல்லை. வறண்ட இருமல் வியாதியஸ்தரை இரவில் விழிக்கச் செய்துவிடும். எழுந்திருந்து நேராய் உட்கார்ந்தால் தான் நிற்கும்; வாயு வாய் வழியாகவும் ஆசன வாய் வழியாகவும் வெளிப்படும். மூறை வைத்துத் தோன்றும் மண்டை இடி, தூங்கினால் குறையும்.

விசேஷக் குறிகளின் விளக்கம்

வறட்சி: பச்சைப் புண்ணுள்ள உணர்ச்சி: எரிச்சல் :— மஞ்சட் காமாலை: சருமம் காய்ந்திருக்கும். மூக்கும் தொண்டையும் காய்ந்திருத்தல். "தொண்டையில் பல நாட்களாக நீடித்திருக்கும் வறட்சி: குரல் வளையில் வீங்கி இருக்கும் உணர்ச்சி. வறட்சி, பச்சைப் புண் உள்ள

உணர்ச்சி, எரிச்சல் ஆகிய குறிகளுடன் மெட்டிரியான கோளை வெளியாகுதல்." சிறிய காற்றுக் குமிழ்களில் பச்சைப் புண் இருப்பது போன்ற உணர்ச்சியுடனும் எரிச்சலுடனும் துன்பத்தை அளிக்கும் வறண்ட இரு மல். பச்சைப் புண் உள்ள உணர்ச்சியுடனும் எரிச் சலுடனும் தொண்டைச் சுரப்பிகளில் வேக்காடு. பச் சைப் புண் இருப்பது போன்ற இவ்வுணர்ச்சியும் எரிச் சலும் வியாதியினல் தாக்கப்பட்ட சளிச் சவ்வுகள் எல் லாவற்றிலும் காணப்படும். தாராளமான போக்கு உள்ள நீர்க் கோர்வையில் மூக்கில் எரிச்சலும் பச்சைப் புண் உள்ள உணர்ச்சியும். மார்பில் எரிச்சல். உள்ளங் கைகளிலும் உள்ளங் கால்களிலும் எரிச்சல். கண்களில் எரிச்சல். காதுகள், நாக்கு, தொண்டை, மார்பு, ஸ்த னங்கள் ஆகியவைகளில் எரிச்சல். நாக்கும் தொண்டை யும் பச்சைப் புண்ணுய் இருப்பது போலவும் வெந்து விட்டது போலவும் தோன்றும். நுனி நாக்கில் வெந்து விட்டது போல் தோன்றுதல்.

கார குணம்:—எல்லாக் கழிவுகளும் கார குண முள்ளவைகளாய் இருக்கும். நீர்க் கோர்வையில் வெளி யாகும் போக்கு காரமாகவும் தண்ணீர் போலவும் இருக் கும்; மூக்கு பச்சைப் புண்ணுய் இருக்கும். காரமான, புளித்த, சூடான தண்ணீர் எதிர் கழித்தல்; அதனல் தொண்டையிலும் வாயிலும் தோல் உறிந்து புண்ணு கும்.

நிறைந்த உணர்ச்சி: அதிக இரத்தம் சேருதல்:—தலை சுவாச கோசங்கள், கல்லீரல் முதலிய உறுப்புகளில் அதிக இரத்தம் சேருதல். சுவாச கோசங்களில் அதிக இரத்தம் சேரும் போது முகம் நல்ல சிவந்த நிறமாகி

கன்னங்கள் ஒன்றோ அல்லது இரண்டுமோ கன்றுப்ச் சிவந்திருக்கும். மார்பின் மேல் பகுதியில் அதிக இரத்தம் சேர்ந்து அங்கு நிறைந்து இருக்கும் உணர்ச்சி (அந்தேக மில்லாமல் நிறைந்துதான் இருக்கிறது). நெற்றிப் பொட்டுகளில் உள்ள அசுத்த இரத்தக் குழாய்கள் பருத்திருத்தல். தலையிலுள்ள அசுத்த இரத்தக் குழாய்கள் பருத்திருத்தல். காதுப் பக்க மூள்ள இரத்தக் குழாய்களில் அதிக இரத்தம் சேருவதால் காதுகளில் ரீங்காரம், உறுமுதல் முதலிய ஓசைகள். பெண்களுக்கு மாதவிடாய் மறையும் காலங்களில் உடலில் அலை அலையாகச் சூடான உணர்ச்சி தோன்றுதல்.

வலி தரும் உணர்ச்சிகள்:—பல் வேறு உறுப்புகளிலுள்ள (தலை, முகம், நெற்றிப் பொட்டுகள் முதலியவை) அசுத்த இரத்தக் குழாய்கள் பருத்திருக்கும்; அவைகளைத் தொட்டால் அல்லது அமுக்கினால் வலி உண்டாகும். அல்லது புண்ணுள்ள உணர்ச்சி உண்டாகும். கண் விழிகளில் அவைகளை அசைக்கும் போது வலி. எலும்புகளில் அதிகச் சதையால் மூடப்படாத இடங்களில் வலி. ஸ்தனக் காம்புகளில் புண் உள்ள உணர்ச்சியும் வலியும். ஸ்தனங்களில் வலியுள்ள வீக்கம். மார் பெலும்பின் கீழே இடை விடாத வலி. இவ்வலியுள்ள உணர்ச்சி இவ்வெளஷதத்தின் விசேஷக் குறிகளில் ஒன்று. தாடைகளின் மூலையில் நிறைந்த உணர்ச்சியும் தொட்டால் வலியும். மூக்கின் அடிப் பாகத்தில் வலி.

வட்டமாய்ச் சிவந்திருத்தல்: வட்டமான இடங்களில் எரிச்சல்:—பிற்பகலில் கன்னங்களில் வட்டமாய்ச் சிவந்திருத்தல். இடை விடாமல் இருக்கும் இவ்வித வட்டமான கன்னச் சிவப்பு சுவாச கோச க்ஷய ரோகத்தில் காணப்

படுகிறது. மார்பில் வட்டமான இடத்தில் எரிச்சல்; கூடவே வயிற்றுப் போக்கு தோன்றலாம் (சுவாச கோச வேக்காட்டில்).

நாற்ற குணம்:—மாதவிடாய்ப் போக்கு நாற்றம் வீசும்; போக்கு நல்ல சிவப்பாய் இருக்கும். மூச்சுக் காற்று நாற்றமாய் இருக்கும். அபான வாயு நாற்றமாய் இருக்கும். மூச்சுக் காற்றும் கோழையும் நாற்றம் அடிப்பது வியாதியஸ்தருக்குக் கூடத் தெரியும்; கோழை சீழ்ப் போல் இருக்கலாம். பிசுக் கென்று ஒட்டும் குணம், காற்றம், துருப்பிடித்த நிறம், கோழையை வெளியேற்றக் கஷ்டமாய் இருத்தல் ஆகிய குறிகள் காணப்படும் (சுவாச கோச வேக்காட்டில்).

குமட்டல்:—கூடத் தோன்றும் குறிகளில் குமட்டலும் ஒன்று. பலவீனமான, மயக்கம் வருவது போன்ற உணர்ச்சியுடன் குமட்டல். வயிற்றில் எரிச்சலுடன் குமட்டல், ஏராளமாய் எச்சிலைத் துப்பிக் கொண்டே இருப்பார். வாந்தி செய்தாலும் குமட்டல் குறையாது. ஏராளமான உமிழ் நீர்ப் பெருக்குடன் குமட்டல். எச்சில் துப்புவதுடன் பொறுக்க முடியாத குமட்டல் விட்டு விட்டுத் தோன்றுதல். குமட்டல், வாந்தி ஆகியவைகளுடன் மஞ்சட் காமாலை.

தலை வலி:—குறிப்பிடத் தக்க குறிகளுடன் கூடிய தலை வலிகள் இவ்வௌஷதத்தில் ஏராளமாய் இருக்கின்றன. அவையாவன. 1. நாட்பட்ட மண்டை இடி, முறை வைத்துத் தோன்றும். வார மொரு முறையாகத் தோன்றலாம். 2. சூரியனின் கதிக்குத் தக்கபடி கூடுதலாகிக் குறையும் குண முள்ள தலை வலி. 3. மயக்க உணர்ச்சியுடனும் பொறுக்க முடியாத குமட்டலுடனும் தலை

யில் அதிக இரத்தம் சேருதல். 4. மிக்க கடுமையான துடிப்பது போலவும் வெடிப்பது போலவும் தோன்றும் தலை வலி அல்லது கண்கள் பிதுங்கி வெளியே வந்து விடும் போல் தோன்றுதல். 5. பின் தலையில் ஆரம்பித்து மேலே தலை முழுவதும் பரவி முடிவில் வலது கண்ணுக்கு மேலே தங்குதல். 6. தலை வலி மிகக் கடுமையாய் அதிகரித்து விட்ட போது வியாதியஸ்தருக்கு வேதனை மிகவும் அதிகமாகி ஓசைகளையோ, வாசனைகளையோ அவரால் பொறுக்க முடியாமல் போகும். 7. தலை வலி மிகவும் அதிகமாய் இருக்கும் போது கசப்பான அல்லது புளிப்பான அல்லது இரு சுவையும் கலந்த பொருள் வாந்தியாகும். 8. நிச்சப்தமான, இருட்டான அறையில் புகுந்தவுடன் தன்னுடைய உபாதிகளில் பெரும் அளவு குறைந்து விட்டது போன்ற உணர்ச்சி தோன்றும். 9. ஏராளமாய் மூத்திரம் வெளியானவுடன் உபாதிகள் குறையும். 10. தூக்கம் வந்தால் தூங்கிய பிறகு உபாதி குறையும். 11. வலி கடுமையாய் இருக்கும் போது வியாதியஸ்தர் தலையைத் தலையணையில் வைத்து அழுத்துவார் அல்லது கடினமான ஏதோ ஒரு பொருளின் மீது வைத்து அழுத்துவார். 12. மாதவிடாய் மறையும் காலத்தில் மீண்டும் தோன்றும் தலை வலி.

இவை எல்லாம் ஒன்று சேர்ந்தால் ஸாங்வினேரியாத் தலை வலியைப் படம் பிடித்தது போல் தெளிவாய்க் காட்டும். நம்மிடம் சிகிச்சைக்கு வரும் கேசுகளில் மேலே கூறப்பட்ட குறிகளில் ஒரு சில மட்டுமே சேர்ந்து காணப்படும். அக் கேசுகளுக்கு ஏற்ற ஔஷதம் ஸாங்வினேரியா என்று எழுதிக் கொடுக்க. அதுவே போதும் குறிப்புகள் என்னும் தலைப்பின் கீழே பார்க்கவும்.

வது பக்கமே அதிகம் தாக்கப்படுதல் :—ஸாங்வினேரி யாவுக்கும் உட்சின்வலப் பக்கத்துக்கும் நெருங்கிய உறவு இருக்கிறது. வியாதிக் குறிகள் வலம் இருந்து இடம் செல்லுகின்றன. வினது கண்ணின் மேற்புறத்தில் தலை வலி. தலையின் பின்பக்கத்தில் ஆரம்பித்து வலது கண்ணின் மேற்புறத்தில் தங்கும் தலை வலி. வாத ரோகம் வலது தோள் பட்டையிலுள்ள தசைகளைத் தாக்குதல்; வலிகள் கடுமையாய் இருக்கும்; கையைத் தூக்கித் தலைப் பக்கம் கொண்டு போக முடியாது; ஆனால் அங்கு மிங்கும் அசைக்க முடியும்; அல்லது ஒன்றும் செய்ய முடியாமல் தொங்கும். கொல்லன் உலைக் களத்தில் அல்லது தச்சுப் பட்டரையில் சுத்தியால் அடித்து வேலை செய்யும் போது ஏற்படும் ஒவ்வொரு ஓசையும் வலது காதில் வலியை உண்டாக்கும்.

கற கறப்பான ஓசை; ஊதும் ஓசை :—இழுப்புள்ள இருமல், தொண்டை பச்சைப் புண்ணுய் எரிச்சலுடன் இருக்கும்; இருமும் போது உலோகப் பொருளைத் தட்டினால் ஏற்படுவது போன்ற ஓசை இருக்கும். இவ் வோசையை கற கறப்பான ஊதும் ஓசை என்று பாரிங்டன் விவரிக்கிறார். "கற கறப்பான ஓசை" என்று சொல்ல முடியாமல் சிறிது சன்னமாகவும் "ஊதும் ஓசை" என்று சொல்லவும் முடியாமல் சற்று கட்டையாகவும் அவ் வோசை இருக்கிற தென்றும் அவர் கூறுகிறார்.

இயற்கைக்கு மாறுன வளர்ச்சிகள் :—தொண்டை இழுப்பு வியாதியில் அவ்விடத்தில் போலிச் சவ்வுகள் வளர்ச்சியடைந்து காணப்படலாம். சளிச் சவ்வுகளில் கெட்ட சதைகள் உண்டாகுதல். சளிச் சவ்வுகளில் உண்டாகும் கெட்ட சதைகளிலிருந்து அடிக்கடி இரத்தம் கொட்டு

தல், மாதவிடாய்க் கோளாறுகள் உள்ள இளம் பெண்களுக்கு முகத்தில் பருக்கள் அல்லது வேறு தருமக் கோளாறுகள் தோன்றுதல். விசேஷமாக மாதவிடாய்ப் போக்கின் அளவு குறைந்திருப்பவர்களுக்கு உபயோகப் படும். காய்ப்புகளில் எரிச்சல், புற்று நோய் சம்பந்த முள்ள அல்லது மற்ற வகையான கெட்ட சதை வளர்ச்சிகள், இராஜபிளவை.

மாறித் தோன்றுதல்: உள்ளே அமுக்கப் படுதல்:— வயிற்றுப் போக்கும் மலச்சிக்கலும் மாறி மாறித் தோன்றுதல். நீர்க்கோர்வையில் ஒரு சமயம் காய்ந்தும் மறுசமயம் நீர்வடிந்து கொண்டும் இருத்தல். காற்றுக் குமாய்களிலிருந்த நீர்க்கோர்வை திடீரென்று நின்று வயிற்றுப் போக்கு தோன்றும் (ஸெலெனியம்). கீழ் உள்ளவைகளையும் சேர்க்கலாம். இன்புளுயன்ஸா சுரத்துக்குப் பிறகு குழந்தைகளுக்குக் கக்குவாய் இருமலைப் போன்ற தோர் இருமல் உண்டாகும்; கக்குவாய் இருமலில் வியாதி ஓரளவு குணமாகி விட்டது என்று தோன்றும் சமயத்தில் கடுமையான இருமல் உண்டாகுதல்; வியாதியஸ்தருக்கு நீர்க்கோர்வை பிடிக்கும் போது ஒவ்வொரு தடவையும் தவறுமல் கக்குவாய் இருமல் தோன்றுதல்.

வியாதியின் உருவ, இடமாற்றம்:—வெளிப் பூச்சு ஔஷதங்களை உபயோகித்துச் சருமக்கோளாறு உள்ளே அமுங்கிப் போய் வாதரோகம் (அல்லது கீல் வாயு) என்ற மாற்றுருவெடுத்து இருதயத்துக்குத் தாவுதல்.

இரத்தப் பெருக் கெடுக்கும் குணம்:—மாதவிடாய் மறையும் காலத்தில் கருப்பையிலிருந்து இரத்தப் பெருக்கு; வெளியாகும் இரத்தம் கல்ல சிவந்த நிறமாக

வும் கட்டிகளுடனும் பல சமயங்களில் காற்றமாகவும் இருக்கும்; இத்துடன் மண்டை இடியும் சேர்ந்திருக்கலாம். சுவாசகோச சுரயத்தின் ஆரம்ப நிலையில் சுவாச கோசங்களிலிருந்து இரத்தப் பெருக்கு; விசேஷமாக குறைவான மாதவிடாய்ப் போக்குள்ள பெண்களுக்கு; மார்பில் வலது பக்கத்திலிருந்து தோள்பட்டை வரை எரிச்சலும் குத்து வலிகளும்; கடுமையான மூச்சுத் திணறல்; இரவில் ஏராளமாய் வியர்வை உண்டாகுதல்; வியர்வை சில்லிப்பாய் இருக்கலாம்.

மற்ற குறிகள்

மூத்திரத்தில் மணல் அல்லது கற்கள் தோன்றுவதால் மூத்திரம் வெளியாகாமல் அடக்கப் படுதல். நாட்பட்ட மேகவெட்டையில் பிறப்பு உறுப்பிலிருந்து மெல்லிய நீர் ஒழுகுதல். மேகக் கிரந்தியில் மானிக் கொண்டையிலிருந்து தயிர் போன்ற பொருள் உற்பத்தியாகுதல்.

ஒப்பிடுதல் :—வலது தோள்பட்டையில் வாதரோகம்: மெக். கார்ப், பெர்ரம் மெட், நக்ஸ் மாஸ்சாடா ஆகியவைகளில் இடது தோள்பட்டையில் வாதரோகம் காணப்படுகிறது. ஸாங்வினேரியாவில் தலிவலி வலது கண்ணுக்கு மேலே தங்குகிறது; ஸ்பைஜீலியாவில் இடது கண்ணுக்கு மேலே தங்குகிறது; ஸைலீஷியா, ஸேபியா இவ்விரண்டிலும் இரு கண்களுக்கு மேலேயும் தலிவலி தங்குகிறது; ஸைலீஷியாவில் ஒரு கண்ணுக்கு மேலே மட்டும் வலி தங்கினால் அது அனேகமாய் வலது பக்கமாக இருக்கும். சூரியனின் கதிக்குத்தக்கபடி கூடுதலாகிக் குறையும் குணம் உள்ள தலிவலி (க்னோனுயின், காலமியா. நேட்ரம் மூர், பாஸ் பரஸ், ஸாங்வினேரியா, ஸ்பைஜீலியா, ஸ்டான்னம்). இரு மலுடன் நாற்றமுள்ள மூச்சுக் காற்று (காப்ஸிகம்)

வெறும் தோலால் மட்டும் மூடப்பட்டுள்ள எலும்புகளில் வலி (ரஸ் வென்). ஏழுநாட்களுக்கு ஒரு முன்றாய் முறை வைத்துத் தோன்றும் தலைவலி (ஸல்பர்).

குறிப்புகள் :—முறைவைத்துத் தோன்றும் மண்டை இடியில் குறிகளை அனுசரித்து ஏற்ற ஔஷதம் ஸாங்வினேரியா தான் என்று தெளிவாய் உள்ள சமயங்களில் அவ்வௌஷதம் ஒன்றினால் முழு குணமும் ஏற்படுவது மட்டும் கிடையாதென்று கெண்ட் கூறுகிறார். ஸாங்வினேரியா வைக் கொடுத்து மண்டை இடி நீங்கிய உடனே உடல் வாகை ஒழுங்கு படுத்தும் ஔஷதம் எதுவோ அதைக் கொடுக்காமல் போய்விட்டால் மறைந்த மண்டை இடி மறுபடியும் முன்பு இருந்ததைப் போலவோ அல்லது அதை விட மோசமாகவோ தோன்றுகிறது. நாட்பட்ட மண்டை இடியை மாதக் கணக்கிலும் தோன்றுமல் விரட்டியடிக்கும் குணம் ஸாங்வினேரியாவுக்கு இருந்த போதிலும் நீடித்த குணம் செய்யும் சக்தி அதற்கு இல்லை என்பதை வேறு பலர் அறிந்திருப்பதுபோல் நானும் அறிந்திருக்கிறேன். ஆனால் மண்டை இடி இவ்விதம் மாதக் கணக்கில் உள்ளே மறைந்து இருப்பதால் கெடுதலை விளைவிக்கும் வேறு கோளாறுகள் ஏதாவது தோன்று கின்றனவா என்பதை என்னுடைய அனுபவத்திலிருந்து உறுதியாய்ச் சொல்லமுடியாது. ஆனால் இவ்வாறு தோன்றுவது சாத்தியமே என்று நான் நினைக்கிறேன். பாரிங்டன் ஒருவர் தான் இவ்விஷயத்தில் பின் உள்ளபடி மாறுபாடாய் எழுதியிருக்கிறார். "இவ்வௌஷதம் வியாதியை அடக்குவதுடன் முழு குணத்தையும் ஏற்படுத்துகிறது."

(SECALE CORNUTUM)

முன்னோர் பயிரிடப்படுகிறபோல இவ்வௌவாலத்தை ஏர்கோட் (Ergot) என்ற பெயர் பிள்ளைப்பேற்றுப் பிரசுத்தலைவலி மற்றும் பல நோய்களுக்கும் கருப்பையிலிருந்து இரத்தம் பெருக்கெடுக்கும்போதும் மெத்தப்படித்த அலோபதி டாக்டர்களால் இவ்வௌவாலம் கொடுக்கப்படுவதும் பிரசவ ஆபத்தை விளைவிக்கக் கூடியது. இவ்வௌவாலத்திலுள்ள ஆல்கலாய்ட் கருங்க வைக்கும் சக்தியை உபயோகித்து சிக்கிரம் பிள்ளைப்பெறவோ அல்லது கருவைச் சிதைக்கவோ முயற்சி செய்யும் பெண்கள் தன்பட வாழ்வுக்கு அடிகோலுகிறார்கள். இச் செய்கையினால் விளையும் கோளாறுகளை வாழ்நாள் முழுவதும் உயிர்ந்த சிரிக்கை செய்து வந்தாலும் அறவே நீக்க முடியாது. இவ்வாறு எடுத்துக் காட்டுகிறார் கெண்ட், அதற்கு நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

மேலே விளக்கப்பட்ட கோளாறை எர்காட்டிஸம் (Ergotism) என்று ஆங்கிலத்தில் பெயரிட்டுள்ளனர். அலோபதி வைத்தியத்தால் இது போன்ற பல கோளாறுகள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றன. இளம் பிள்ளைவாத நோயைப்பற்றி இப்போது நாடெங்கும் பேசி வருகின்றனர். ஆகாயத்திலிருந்து மழை, பனி ஆகியவை கீழேவிழுமுன் காரணம் இருப்பதுபோல உடலில் விஷக்கிருமிகள் தோன்றவும் முன் காரணம் ஒன்று இருக்கிறது என்பதை அறியாமல் வியாதி உள்ளவர்களின் இரத்தத்திலும் கழிவுகளிலும் சேர்ந்திருக்கும் விஷக் கிருமிகளைத் தேடிப்பிடித்து அவைகளை வளர்த்து இஞ்செக்ஷன் டியூபுகளாகத் தயாரித்து அவ்வியாதியைத் தடுக்க உதவும் என்று கூறி வருகிறார்கள்.

போட்டு வருகின்றனர். ஆதலே இளம்பிள்ளை வாதமும் மேலே சொல்லப்பட்ட தோலாரு வகையைச் சேர்ந்தது.

இயங்கு தசைகளின் நரம்புகளைத் திமிருடன் தாக்கச் செய்வது எக்கோட்டிஸ்ஸில் மிக விசேஷமான தன்மையாகும். நுட்பமான சுத்த இரத்தக் குமிழ்கள் இடைவிடாமலும் கடுமையாகவும் சுருக்கப்படுகின்றன. அதனால் உட்லின் மேற்புறம் காய்ந்து சில்லென்றிருக்கும்; கால்கள் செத்துவிடலாம். ஒன்பதாவது நூற்றாண்டிலிருந்து பதினேழாவது நூற்றாண்டுவரை (கி. பி. 1816) ஐரோப்பாவில் பல இடங்களில் பெருவாரியாகத் தோன்றி மக்களை நடுங்கச் செய்த பயங்கரமான வியாதிகளைப் பற்றிய தஸ்தாவேஜிகள் நம்மிடம் இருக்கின்றன. அவ்வியாதிகள் எக்கோட்டிஸம் என்ற கோளாறின் விளைவாகவே தோன்றின என்று இப்பொழுது நம்பப்படுகிறது." இதை எழுதியவர் டாக்டர் வில்லாட் ஜட் பியர்ஸ் (Dr. Willard Ide Pierce) என்பவர்.

பொதுவான குறிகள்

தகுதி :—மெலிந்த, சதைப் பிடிப்பு சிறிதளவும் இல்லாத, சுருங்கிப்போன உடலும் பலவீனமான, வியாதி பிடித்தது போன்ற தோற்றமுமுள்ள பெண்களுக்கு ஏற்றது. இவ்வகைக் குறிகளுள்ள குழந்தைகளுக்கும் ஏற்றது. தோலில் மடிப்பு மடிப்பாகச் சுருக்கம் விழுந்துள்ள கிழவர்கள். உடல்மெலிந்து வற்றிப்போய் உள்ள கிழவர்கள்.

மனம் :—வருத்தம்; ஆத்திரகுணம்; பரபரப்பு.

உடல் :—கண்கள் குழிகளுள்ளே சென்று விடும். அவைகளைச் சுற்றி நீல நிறமுள்ள வளையங்கள் காணப்படும். பார்வைப் பலவீனம். முகம் வெளுத்து நிறம் குன்றி இருக்கும். உதடுகள் நீல மாகவோ அல்லது பிணம்போல் வெளுத்தோ இருக்கும். திக்குவாய். தடு

மற்றிப்பேசுதல். அடிக்கடி நாக்கைக் கடித்துக் கொள்வார். மூச்சு விட்ட சிரமம், நகங்களின் அடிப்பாகத்தில் சொத்தை விழுதல், நகங்கள் மேலே தூக்கி இருத்தல். பொதுவான உடல் மெலிவு. பாரிசவாதத்தினால் தாக்கப்பட்டுள்ள உறுப்புகள் மிக வேகமாய் பெலிக்து போகுதல். உடலின் எந்தப் பகுதியிலும் செத்து விட்டது போன்ற உணர்ச்சி தோன்றினால் மீகேல் உப்பாகப்படும். புளிப்பான பொருள்களில் விருப்பம். இயற்கைக்கு விரோதமான, அளவு கடந்த பசி சருமத்தின் அடியில் எறும்பு ஊரும் உணர்ச்சி. சாப்பிட்டவுடனேயே வாந்தி செய்தல். கை கால்கள் பனிக் கட்டிபோல் சில்லிட்டு விடுதல். சூட்டில் வெறுப்பு, போர்த்திக் கொள்வதிலும் வெறுப்பு. தீராத் தாகம்.

உபாதி கூடுதல் :-சூட்டினால் வியாதியஸ்தரின் உபாதிகள் அதிகமாகும்.

உபாதி கூடுதல் :—(ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே) :—சூடான ஒற்றிடங்களால் உபாதிகள் அதிகமாகும் ; சூடான பானங்களைக் குடித்தாலும் மாதவிடாய்க்குச் சற்று முன்னதாகவும் உபாதிகள் அதிகரிக்கும். விழிகளில் சீழ்ப் பிடிக்கும்போது சூடான ஒற்றிடங்கள் கொடுத்தால் அல்லது சூடான தண்ணீர் விட்டுக் கழுவினால் உபாதிகள் கூடுதலாகும்.

உபாதி கூடுதல் :-கைகளிலும் கால்களிலும், விசேஷமாகக் கால்களில பன்னிக்கட்டி போன்ற சில்லிப்பு ஏற்படுதல் ; இவ்வளவு சில்லிப்பு இருந்த போதிலும் வியாதியஸ்தர் தன் அறையின் சன்னல்களைத் திறந்தே வைத்திருக்க விரும்புவார் ; கைகால்களைப் போர்த்திக் கொள்ளாமல் இருக்க விரும்புவார். இரத்தப் பெருக்கு வெளிப்படும் வியாதி

யஸ்தர் அவர் இருக்கும் அறை குளுமையாய் இருந்தாலும் போர்த்திக் கொள்ளாமல் இருக்க விரும்புவார். வயிற்றுப் போக்கு அல்லது வயிற்றில் வேக்காடு உள்ள வியாதியஸ்தர் தன் அடிவயிற்றைத் திறந்து வைத்திருக்க விரும்புவார்.

குளிர்ந்த அறையில் இருத்தல், போர்வையை எடுத்து விட்டு உடலைத் திறந்து வைத்தல், குளிர்ந்த காற்று மேலே வீசுதல் ஆகியவை வியாதியஸ்தருக்குச் சௌகரியத்தைத் தரும்.

விசேஷக் குறிகளின் விளக்கம்

எரிச்சல் :—எல்லா உறுப்புகளிலும் அவ்விடங்களில் நெருப்புப் பொறிகள் வந்து விழுவதுபோல் எரிச்சல். நெருப்பைப் போல் எரியும் நரம்பு சம்பந்தமான வலிகள் : சூட்டினால் தணியும். இவ்வாறு சூட்டினால் தணிவது விதிவிலக்கான ஒரு குறியே. வயிற்றிலும் அடிவயிற்றிலும் எரிச்சல். அங்கு மிங்கும் எரிச்சல்.

இழுப்புகள் : வலிப்புகள் :—கை விரல்களும் கால் விரல்களும் வழக்கம்போல் நெருங்கி இருக்காமல் பிரிந்து விடும் அல்லது பின் பக்கமாய் வளைந்து போகும். இக்குறி பல சமயங்களிலும் காலராவில் காணப்படும். கை விரல்கள் பிரிந்துவிடும் குறியுடன் வலிப்புகள். கம் மெட்டீரியா மெடிகாவில் இது ஓர் அபூர்வமான குறி. முகத்திலும் அடிவயிற்றிலும் உள்ள தசைகளில் இழுப்புகள். கைகள், கால்கள், பாதங்கள் ஆகியவைகளில் இழுப்புகள். இரத்தம் பெருக் கெடுப்பதற்கு முன்பு ஒவ்வொரு தட வையும் கருப்பையில் சுருங்குவதுபோல் வலியுள்ள உணர்ச்சி.

இரத்தப் பெருக்கெடுக்கும் குணம் :—(தண்ணீர்போல்

நீர்த்த, ஏராளமான, நாற்றமுள்ள போக்கு):—கருப்பையி லிருந்து ஏற்படும் இரத்தப் பெருக்கில் இரத்தம் தண்ணீர் போல் நீர்த்தும் கறுப்பாகவும் நாற்றமாகவும் இருக்கும் மாதவிடாய்ப் போக்கு குபீர் குபீர் என்று வெளிப்படும். வெளிப்படுவதற்கு முன் பலமான கீழ் இழுக்கும் வலிகள் உண்டாகும். பிள்ளைப் பெற்ற பிறகு வெளிப்படும் கழிவு அளவு குறைந்தும் நாற்றமாகவும் இருக்கும் அல்லது பல நாட்களாய் தீடித்திருக்கும்; இரத்தம் கலந்து இருக்கும். மாதவிடாய் இடைக் காலங்களில் அல்லது மாத விடாயுடன் சேர்ந்து இரத்தம் கலந்த, தண்ணீர் போல் மெல்லிய போக்கு இடைவிடாமல் ஒழுகிக் கொண்டே இருக்கும். தண்ணீர்போல் நீர்த்துக் கறுப்பு நிறமாய்ச் சகிக்க முடியாத நாற்றத்துடன் உள்ள போக்கு ஸீகேலுக்கே உரிய குறி. இவ்விதமான போக்கின் விளைவாய் அதிக பல வீனம் தோன்றுதல். விசேஷமாக அதற்கு முன்னதாக இரத்தப் பெருக்குகள் ஏற்படாமல் இருந்தால்.

மிகச் சிறிய காயங்களிலிருந்தும் இடைவிடாமல் இரத்தம் வெளியாகுதல்.

பலவீனமான, மெலிந்த உடலுள்ளவர்களுக்கு ஏற்படும் மெதுவான இரத்தப் பெருக்கில் கறுப்பாகவும் தண்ணீர்போல் நீர்த்தும் இடைவிடாமலும் இரத்தம் வெளியாகுமானால் அது எந்த உறுப்பிலிருந்து வந்தா லும் ஸீகேல் தேவையாகும். மூக்கிலிருந்து இரத்தம் வரும் போது அது கறுப்பாகவும் கசிந்து கொண்டும் வெளிப்படும்.

அழுகும் குணம்: சுருங்கும் குணம்: நாற்றம்:—நாற்றத் தைப் பற்றி மேலுள்ள தலைப்பிலே எழுதி விட்டோம். வயிற்றுப் போக்கில் மலம் தண்ணீர் போலவும் பழுப்பு

நிறமாகவும் ஏராளமாகவும் அழுகிய நாற்றத்துடனும் இருக்கும். வியாதியஸ்தரின் விருப்பமும் இல்லாமலே மூக்கு தானாகவே வெளியாகும் அல்லது மிக வேகமாய் வெளிப்படும்; அதிகக் கனப்பை உண்டாக்கும். வெள்ளை ஒழுக்கில் கழிவு நாற்றமாகவும் பச்சை அல்லது பழுப்பு நிறமாகவும் இருக்கும். நீர்க்கிவுளை துவும் இல்லாமல் கை கால்களிலும் சாக்காடு; சருமம் வாடி வதங்கி இருக்கும்; வெளிப்பக்கத்தில் கூடான ஒற்றடங்கள் கொடுத்தால் உபாதி அதிகரிக்கும். கால்விரல் கவில் சாக்காடு. குஷ்ட ரோகத்துக்கு ஸீகேல் நம்முடைய முக்கிய ஔஷதமாகும்.

மதமதப்பு: எறும்பு ஊரும் உணர்ச்சி: குடையும் உணர்ச்சி:—குடையும் அல்லது எறும்புகள் ஊருவதுபோல் தோன்றும் உணர்ச்சி ஸீகேலின் மிக விசேஷமான குறி. பிடிவாத குணமுள்ள சில வகைச் சரும வியாதிகளில் இவ்விசேஷக் குறியை நான் பார்த்திருக்கிறேன். இக் கோளாறுகளை ஸீகேல் மிக விரைவில் குணம் செய்தது. சருமத்தின் அடியில் காணப்படும் இவ்வுணர்ச்சி அவ்விடத்தைத் தேய்த்து விட்டால் சௌகரியமாகும். இத்தப் பெருக்கு ஏற்படுவதற்கு முன் எறும்பு ஊரும் உணர்ச்சியும் ஊசியால் குத்தும் உணர்ச்சியும் தோன்றுதல்.

கை கால்களில் மதமதப்பு. உடலின் ஏதோர ஒரு இடம் செத்துவிட்டது போல் இருத்தல். இது குஷ்ட ரோகத்தில் காணப்படும் குறி அல்லவா? உடல் முழுவதுமே உணர்ச்சி அழிந்து இருக்கலாம்.

தளர்ச்சி: மந்தகுணம்:—கருப்பை வெளியே வருதல். ஆசனவாய் அகலத் திறந்து கொண்டு மலம் தானாகவே

இவ்வியாகுதல். கருப்பையில் உள்ள பொருள்கள் முன் பக்கமாக விழுந்துவிடும் என்று தோன்றுதல். பிரசவ சமயத்தில் வலிகள் மிகவும் குறைவாகவும் ஒழுங்கு இல்லா மலும் இருக்கும்; எல்லாம் தளர்ந்து கட்டவிழ்ந்து தொங்கு வது போலவும் விரியத் திறந்திருப்பது போலவும் தோன் றும்; ஆனல் தசைகள் மந்தமாய் வேலே செய்யும். அத னல் கருப்பைக்கு வெளியே தள்ளும் சக்தி இருக்காது.

நாட்பட்ட குழிப்புண்கள் காய்ந்து சுருங்கிவிட்டது போல் தோன்றும்; தூங்கி வழிந்து கொண்டிருக்கும்.

சில்லிப்பு உணர்ச்சி:—சில்லிப்பு, விசேஷமாய்க் கை கால்களில். உடம்பின் மேல்புறம் தொட்டுப் பார்க்கும் போது சில்லென்று இருக்கும். ஆனல் போர்த்திக் கொள்ள வியாதியஸ்தர் விரும்ப மாட்டார். அவ்வாறு போர்த்திக் கொள்ள வெறுப்பும் இருக்கும்.

மற்ற குறிகள்

கடுமையான, நீடித்த வலிகளுடன் கருப்பையில் பலவகையான கெட்ட சதை வளர்ச்சிகள். "அடிபட்டுக் கரு இரத்தம் ஏராளமாய்க் குழம்பி இருத்தல். இரத்தக் கொப்பளங்கள் தோன்றி முடிவில் அவ்விடங் களில் சாக்காடு தோன்றுதல். கருச்சிதைவு ஏற்படும் போல் தோன்றும் நிலேமை, விசேஷமாக மூன்றுவது மாதத்தில். பிள்ளேப்பெற்ற பிறகு ஏற்படும் வலிகள் கடுமையாகவும் பல நாட்கள் நீடித்தும் இருத்தல்: கருப்பையில் கடுமையான சுருக்கங்கள். பிள்ளேப்பெற்ற பிறகு ஸ்தனங்களில் பால் சுரக்காமை.

ஒப்பிடுதல்:—உடம்பின் மேற்பக்கம் சில்லென்றிருத் தல். ஆனல் போர்த்திக் கொண்டால் பொறுக்கமுடியாது

(தாம்போரா), வயிற்றுப்போக்கில் அசௌகரியத்துடன் திறந்திருத்தல் (அபிஸ் பாஸ்பரஸ்), சிறுவயது முதுகுத்தண்டு சிறு சிதைந்துவிடும் போல தோன்றுதல் (ஐயோடம்), சிறிய காயம் ஏற்பட்டாலும் அதிகமாய் இரத்தம் பெருக விடாமல் இரத்தம் பெருக் கெடுத்தல் (லாசஸிஸ், பாஸ்பரஸ்), சருமத்தின் அடியில் குடையும் உணர்ச்சி (அகோனைட், பாஸ்பரஸ்). ஸ்தனங்களில் பால் சுரக்காமை (கல்கார்ப், காஸ்டிகம், இக்னேஷியா, லாக் காணினம், லாக் டிபன் ரேட்டம், பல்ஸடில்லா). பிரசவ சமயத்தில் போதிய அளவு வலி இல்லாமை (காலோபில்லம், பல்ஸடில்லா).

ஸெலெனியம்

(SELENIUM)

முன்னுரை :—ஸெலெனியம் மிகச் சில வியாதிகளில் தான் தேவைப்படுகிறது; ஆயினும் அதன் குறிகள் பலவும் மிகத்தெளிவாய் இருக்கின்றன. ஒரே ஒரு வியாதியில் இவ்வௌஷதத்தின் விசேஷக் குறிகளோ அல்லது உபாதி கூடுதல் குறைவுகளோ இல்லாவிட்டாலும்கூட ஸெலெனியம் தவறாமல் வேலைசெய்து குணம் செய்கிறது. இவ்விஷயத்தை நானும் பல சமயங்களில் கவனித்திருக்கிறேன். இவ்வளவு நிச்சயமாக ஔஷதம் கொடுத்துக் குணமாகக்கூடிய தனிப்பட்ட வியாதிக் குறி வேறு எதுவுமே நமது மெட்டீரியா மெடிகாவில் இருப்பதாக எனக்கு ஞாபகம் இல்லை. இவ்வியாதிக்குறி கூய சம்பந்தமுள்ள குரல்வளை வேக்காடு; ஆரம்ப நிலையிலுள்ள கூய சம்பந்தமுள்ள குரல்வளை வேக்காடு என்றும் கூறலாம்.

கடைசியாக நம்மிடம் சிகிச்சைக்காக வரும் ஆண்தன்மைக் குறைவுக் கேசுகளில் பெரும்பாலானவை ஸெலெனியம் கேசுகளே என்று நாம் நம்புகிறேன். உண்மையைக்

கூறுமிடத்து, வங்காளத்தில் நான் பல செலெனியம் கேசுகளைப் பார்த்திருக்கிறேன். இவர்கள் எல்லோருக்கும் கோடைக் காலத்தில் உடல்கலைப்பு உண்டாகியது குறிப்பிடத்தக்க குறியாய் இருந்தது.

எலும்புகளிலும் பற்களிலும் செலெனியம் ரசாயன முறையில் சேர்ந்திருக்கிறது.

பொதுவான குறிகள்

தகுதி:—வெளுத்த உடலுள்ளவர்களுக்கு ஏற்றது; பொன் போல் மஞ்சளும் பழுப்பும் கலந்த தலை மயிருள்ள பெண்கள்.

மனம்:—மனவேகில கலைப்பை உண்டாக்கும். சமூகக் கூட்டங்களில் கலந்து கொள்ளப் பயம். அளவு கடந்த வருத்தம். எல்லை மீறிய மறதி, விசேஷமாக வியாபார விஷயங்களில்; விழித்துக் கொண்டிருக்கும் போது மறதி அதிகமாய் இருக்கும்; ஆனால் அரைத் தூக்கமாய் இருக்கும் போது தெளிவான ஞாபகம் உண்டாகும். முகம் எண்ணெய் தடவியது போல் பளபள வென்று மின்னும்.

உடல்: மிகச் சுலபமாக, சிறிதளவு வேலை செய்தாலும் வியர்வை உண்டாகும். சிறிது வேலை செய்தாலும் கலைப்பு அதிகம் தோன்றுதல். திக்கித் திக்கிப் பேசுதல். பிராந்தி முதலிய சாராயம் கலந்த பானங்களையும் மது போன்ற பானங்களையும் விரும்புவார். பல சமயங்களிலும் இவ்விருப்பம் அடக்க முடியாத அளவு அதிகமாய் இருக்கும். நாக்கில் தித்திப்புச் சுவை. இரவில் பசி ஏற்படுதல். குறிப்பிடத் தக்க நாடித் துடிப்புகள்.

உபாதி கூடுதல்:—சூரிய வெப்பம் சிறிது கூட வியா

தியஸ்தருக்கு ஒத்துக் கொள்ளாது. காற்று அடித்தால் அக்காற்று குடாகவோ, சில்லிப்பாகவோ, ஈரக் கசிவு டனே அல்லது எப்படி இருந்தாலும் வியாதியஸ்தருக்கு ஒத்துக் கொள்ளாது. இவ்விதம் காற்று வீசுவது வியாதியஸ்தருக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்காது.

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே:— தலைவலியும் மற்ற கோளாறுகளும் டீ, காப்பி, ஒயின் ஆகிய பானங்களைக் குடித்தால் கூடுதலாகும். அளவுமீறி டீ குடித்ததினால் ஏற்படும் கெடுதலான விளைவுகள். குடிகாரர்களின் தலைவலி. காற்று அடித்தால் அது குடான காற்றாயிருந்தாலும் குளிர்ந்த காற்றாய் இருந்தாலும் தலை, கை கால்கள் முதலிய இடங்களில் வலியை உண்டாக்கும். புணர்ச்சி செய்த பிறகு மனக்குறிகள் யாவும் அதிகமாகும். இந்திரியம் தானாக வெளியான பிறகு தலைவலி, மனவேதனை, பாரிசவாதப் பலவீனம் முதலிய கோளாறுகள் தோன்றும். தூங்கிய பிறகு, விசேஷமாகக் கோடைக் காலங்களில், உபாதிகள் அதிகமாகுதல்.

உபாதி குறைதல்:—சூரியன் மேற்கே சாய ஆரம்பித்தவுடன் வியாதியஸ்தருக்குச் சௌகரியமாய்த் தோன்றும். படுக்கையில் படுத்துத் தூங்க வேண்டுமென்ற பலமான விருப்பம், விசேஷமாகப் பகலில் அதிக வெய்யல் உள்ள நேரத்தில். (ஆனால் தூங்கியெழுந்த பிறகு குறிகள் அதிகமாகின்றன).

விசேஷக் குறிகளின் விளக்கம்

பலவீனம்:—சிறிது வேலை செய்தாலும் அதிகக் களைப்பும் பலவீனமும் உண்டாகுதல், விசேஷமாகக் கோடைக் காலத்தில் வேலை செய்யும் போது. கோடைக் காலத்தில் திடீரென்று பலவீனம் தோன்றுதல், எரா

ஏற்படுவது அல்ப காரணங்களாலும் ஏற்படும். (இந்நிலை சமயங்களில் ஸெலெனியம் வியாதியஸ்தருக்கு ஒரு சில இடங்களில் மட்டும், அதுவும் உடலின் முன்பக்கத்தில் உண்டாகும்).

உடல் வேலையினால் தான் மிகச் சீக்கிரத்தில் களைப்பு ஏற்படுவதாக நினைக்க வேண்டாம். மன வேலையினாலும் இரவில் கண் விழித்தாலும் கூட களைப்புத் தோன்றும். ஆனால் மிக விசேஷமான குறி என்னவென்றால் ஸெலெனியம் வியாதியஸ்தர் கோடைக் காலத்தில் அதாவது சூரிய வெப்பத்தால் மிகச் சீக்கிரமாய்க் களைத்துப் போவதுதான். சூரியன் மேற்குத் திக்கில் சாய ஆரம்பித்தவுடன் இக்களைப்பு குறைய ஆரம்பிப்பதும் கவனிக்கத் தக்கது; உடல் வலிமையும் ஊக்கமும் சூரியன் மறைந்தவுடன் விருத்தியாகும். சூரிய வெப்பத்தினால் களைத்துப் போய்த் தூங்க வேண்டு மென்ற பலமான ஆவல் ஸெலெனியம் வியாதியஸ்தருக்கு ஏற்படுவது மற்றொரு விசேஷக் குறி. ஸெலெனியம் வியாதியஸ்தரை மனித உருவிலுள்ள தர்மாமீட்டர் என்று கூறலாம். நிஜ தர்மாமீட்டரின் உள்ளே இருக்கும் பாதரஸம் சூட்டின் அளவுக்குத் தக்கபடி ஏறவும் இறங்கவும் செய்கிறது. மனித உருவிலுள்ள தர்மாமீட்டராகிய ஸெலெனியம் வியாதியஸ்தருக்கு பலவீனம் பகலின் வெப்பத்துக்குத் தக்கபடி ஏறவும் இறங்கவும் செய்கிறது.

இந்திரியம் தானாக வெளிப்பட்டாலும் வியாதியஸ்தருக்குக் கோளாறுகள் உண்டாகும். புணர்ச்சி, இயற்கைக்கு மாறான முறையில் சிற்றின்பம் அனுபவித்தல் ஆகிய இரு வகைக் காரியங்களும் வியாதியஸ்தருக்கு மிகுந்த பலவீனத்தை அளிக்கும். தலை வலி, பாரிச-

வாதப் பலவீனம், அதிக வருத்தம், மன வேதனை முதலிய குறிகள் இந்திரியம் தானாக வெளியேறிய பிறகு தோன்றும்.

வாரத்துக்கு இரண்டு அல்லது மூன்று தடவைகள் இரவில் தானாகவே இந்திரியம் வெளியாகிக் காலையில் கண் விழித்தவுடன் முதுகில் மூடமாய்விட்ட உணர்ச்சி உண்டாகும்.

பல நாட்களுக்கு விடாமல் சுரம் அடித்த பிறகு ஏற்படும் பலவீனம். டைபாய்டு சுரம் அடித்துவிட்ட பிறகு வியாதியஸ்தர் நடமாட ஆரம்பித்தவுடன் உடம்பில் பொதுவான அதிகப் பலவீனம், கால்களில் பலவீனம், முதுகெலும்பில் பலவீனம், பாரிசவாதம் வந்து விடுமோ வென்று பயப்படுதல் முதலிய குறிகள் காணப்பட்டால் ஸெலெனியம் 200 ஒரு வேளை கொடுக்கப்பட்டவுடன் வியாதியஸ்தருக்குப் புத்துயிரைப் புகுத்தி விரைவில் ஊக்கத்தையும் ஊட்டுகிறது. வைடமின்கள், டானிக்குகள் ஆகியவைகளைக் கொடுக்க வேண்டுமென்ற பேச்சுக்கு இடமில்லாமல் போகிறது. ஸெலெனியம் உறங்கிக் கிடந்த உயிர்ப்புச் சக்தியை ஊக்குவிக்கிறது.

தளர்ச்சி:—உடல் தளர்ச்சி மிகவும் அதிகமாகிக் கீழ் உள்ள குறிகள் காணப்படும். 1. நடக்கும் போது அல்லது மூத்திரம் கழித்த பிறகு அல்லது மலம் கழித்த பிறகு மூத்திரம் சொட்டுச் சொட்டாய் ஒழுகுதல். 2. இந்திரியம் தானாகவே ஒழுகுதல், விசேஷமாக மலம் கழிக்க முக்கும் போது, வெளியாகும் இந்திரியம் பல சமயங்களிலும் தண்ணீர் போல் நீர்த்து இருக்கும். இந்திரியம் தானாக வெளியாவதற்கு இது மிகச் சிறந்த தோர் ஒளஷதம். 3. அடிக்கடி இரவில் இந்திரியம் வெளிப்படுதல்.

சூமானி மெதுவாக விரைத்தல்; பலவீனமாகவும் இருக்கும்; புணர்ச்சி செய்யும் போது மிகச் சீக்கிரத்தில் இந்திரியம் வெளியாகுதல்; பிறகு வேதனையும் பலவீனமும் உண்டாகும். 5. புணர்ச்சி செய்ய ஆரம்பித்தவுடன் மானி தளர்ந்து போகுதல். 6. சிற்சில சமயங்களில் இந்திரியமும் சுக்கிலத் தண்ணீரும் ஒன்று சேர்ந்து அனேகமாய் இடைவிடாமல் கசிந்து கொண்டே இருக்கும். 7. கோடைக் காலத்தில் திடீரென்று பலம் குன்றி உடல் தளர்ந்து போகும்; கீழே படுத்துத் தூங்க விரும்புவார்.

பலவீனமடைந்த வியாதியஸ்தர் சாராயம் கலந்த பானங்களை விரும்புவார்; ஆனால் அவைகளால் குணம் உண்டாகாது. இது ஓர் அதிசயமான குறி.

தலை, புருவங்கள், பிறப்பு உறுப்புகள் ஆகியவைகளிலும் உடம்பு முழுவதுமே மயிர் உதிருதல் என்பதையும் இவைகளுடன் சேர்த்துக் கொள்ளலாம்.

காம வெறி :—சிற்றின்ப நினைவுகளுடனும் காம வெறியுடனும் ஆண் தன்மைக் குறைவு. மானி சிறிதளவு விரைத்து மிக விரைவில் இந்திரியம் வெளியேறியவுடன் காம வெறியுள்ள உணர்ச்சி நீண்ட நேரம் நீடித்திருக்கும்.

உடல் மெலிவு :—ஸெலெனியத்தில் குறிப்பிடத் தக்க அளவுக்கு உடலில் பொதுவான மெலிவு காணப்படும். முகம், கைகள், பாதங்கள், கால்கள், தொடைகள் ஆகியவைகளில் மெலிவு தோன்றுவது மிகவும் குறிப்பிடத் தக்கது. ஏதோ ஒரு உறுப்பு மட்டும் இளைக்கக் கூடும். வியாதியுற்ற உறுப்பு அல்லது கால் மெலிந்து போய் விடும்.

மேகக் கிரந்தியின் சுவடுகள் :—மேலே விளக்கப்பட்ட

மயிர் உதிருதல், உடல் மெலிவு ஆகியவை குறிகள் மேகக் கிரந்தியிலுள்ள குறிகளுக்குச் சமமாய் இருக்கின்றன. உள்ளங் கைகளில் அதிக அறிப்புடன் காய்த்துப் பேர்ந்துக் குகள் செதில் செதிலாக உரியும் சருமக் கோளாறுதான் லெலெனியம் குணம் செய்திருக்கிறது. கால்களில் ஊறும் இல்லாத சீழ்ப் புண்கள் (மேகக் கிரந்தியுடன் சம்பந்தப் பட்டிருக்கலாம்).

பயங்கரத் தன்மை:—மலம் பயப்படும்படியான அளவுக் குக் கட்டையாகவும் உருண்டைகள் ஒன்றோடொன்று சேர்ந்து அடைந்தும் இருக்கும். மலச் சிக்கலில் மலம் மிகக் கட் டையாகவும் கடினமாகவும் அடைந்தும் இருப்பதால் அதை வெளியேற்ற வெளிச் சாதனங்கள் தேவைப்படும்; வியா தியஸ்தர் தன் விரல்களின் உதவியால் எடுக்க ஆரம்பிப் பார். ஆனல் பல சமயங்களில் அவ்வாறு எடுக்க முடி யாது. மலம் கழித்த பிறகு இரத்தம் பெருக்கெடுத்தல். மலம் கழிக்க மிகவும் கஷ்டமாய் இருக்கும். மலம் மிகக் கட்டையாய் இருப்பதால் ஆசனவாய் கிழிந்து போகலாம்; ஓயாமல் முயற்சி செய்வார்; பொறுக்க முடியாத கஷ்டம் உண்டாகும். இவ்வித மலம் வேடிக்கையான விஷயமல்ல.

அறிப்பு:—உடலில் திட்டு திட்டாகப் பல இடங் களில் சரக் கசிவுள்ள அறிப்பு. சருமத்தில் மடிப்புள்ள இடங்களிலும் எலும்பு மூட்டுகளிலும் விசேஷமாகக் கணுக்கால் மூட்டுகளிலும் அறிப்பு. விரல்களுக்கு நடுவில் அறிப்பு (இவ்வித அறிப்பு சாதாரணமான சொறி சிரங்குகளில் பல சமயங்களிலும் காணப்படும்).

மூக்கு முழுவதும் அடைப்பட்டுப் போதுதல் (நாட் பட்ட நிலைமை). இது ஒரு பயங்கரமான விஷயம் தான் அல்லவா?

திக்கித்திக்கிப் பேசுதல். சேர்க்கைகளின் சில எழுத்துக்களைத் தவறாய் உச்சரித்தல். இரவில் பயங்கர சாராயம் கலந்த பானங்களில் விருப்பம், விருப்பத்தை அடக்க முடியாது. வெறிபிடித்தவர் போல் இருப்பார். கடிய சம்பிரமுள்ள குரல். வீக்காட்டின் ஆரம்ப நிலைமை. நீக்கோர்வை வயிற்றுப் போக்கில் முடியும். குரல் கம்மிவிடுதல். நீண்ட நேரம் குரலை உபயோகித்த பிறகு. பாட்டு ஆரம்பிக்கும் போது குரலில் கரகரப்பு. பேசுதல் அல்லது உரக்கப் பாடுதல். தொண்டைப்பைக் காறினல் சோமையும் சிறு இரத்தக் கட்டிகளும் வெளியாகுதல்.

உறவு :—சைனு, ஓயின் ஆகியவை ஸெலெனியத்துக்கு முரிவாகும். (பிறப்பு உறுப்புகளின் பலவீனத்தில்) கலேடியம், நேட்ரம் கார்ப், ஸ்டாபிஸாக்ரியா, பாஸ்பாரிக் ஆஸிட் ஆகியவைகளுக்குப் பின் நன்றாக வேலைசெய்யும். மெர். சொலு அல்லது ஸல்பர் ஆகியவைகளால் தடை செய்யப் பட்ட சொறி சிரங்குகளுக்கு ஸெலெனியம் உபயோகமாகும்.

ஒப்பிடுதல் :—கோடைக் காலத்தினல் கஷ்ப்பு (நேட்ரம் கார்ப், நேட்ரம் மூர், லாச்சஸிஸ்). சருமத்தின் மடிப்புகளில் அறிப்பு (ஸல்பர்). டீ குடித்த பிறகு உபாதிகள் அதிகமாகுதல் (பெர்ரம் மெட், தூஜா).

குறிப்புகள் :—நாட்பட்ட மேகவெட்டை (அதாவது மெல்லிய ஒழுக்கு வெளியாகும் நிலைமை) யில் ஸெலெனியம் மிக உபயோகமான ஔஷதம்" என்று கென்ட் சொல்கிறார்.



காரணங்களாலும் மத மதப்பான உணர்ச்சி உண்டாகுதல். அல்ப காரணங்களாலும் குமட்டல் தோன்றுதல். அல்ப காரணங்களாலும் உடம்பு சில்லிடுதல். மூத்திரம் (இரவில்) தானுகவே வெளிப்படுதல்.

பொதுவான குறிகள்

தகுதி :—பெண்களுக்கு விசேஷமாக ஏற்றது; ஏனென்றால் பெண்களின் வியாதிகளைப் பற்றிய குறிகளே அதிகமாய்க் காணப்படுகின்றன. உயரமான, ஒல்லியான, தளர்ந்த தசைகளும் தசை நார்களும் உள்ள பெண்கள்: "தோள்பட்டையிலிருந்து ஆசனத் தட்டுகள் வரை எந்த இடத்திலும் உடலில் வளைவு நெளிவுகள் இல்லாமல் நேராய் இருக்கும்" உடலுள்ள பெண்கள். பெண்களின் வியாதிகள், முக்கியமாக கருவுற்ற போதும் பிள்ளைப் பெற்று அறையில் இருக்கும் போதும் குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுத்துக் கொண்டிருக்கும் போதும் தோன்றும் கோளாறுகளுக்கு மிக ஏற்றது. சங்கா குணம் உள்ள உடல்வாகும் உள்ளப் பாங்கும். திடீரென்று உடற் சோர்வு ஏற்படுதல்; அடிக்கடி மயக்கம் வருதல். புலன் உணர்ச்சிகள் அதிகரித்து தாங்க முடியாமல் போகும்.

கறுத்த தலைமயிரும் உறுதியான தசை நார்களும் உள்ள ஆனால் அடக்கமான குணம் அல்லது சிக்கிரத்தில் பணிந்து போகும் குணம் படைத்தவர்கள். உடல் பருத்துக் கொள கொளப்பான தசைகளுடன் அழுக்கடைந்து பல இடங்களில் பழுப்பு நிறத் திட்டுகள் காணப்படும் சருமம் உள்ளவர்கள். சட்டி போல் வயிறு படைத்த தாய்மார்கள். சுரப்பிகளில் வீக்கம். க்ஷய ரோக சம்பந்தமுள்ள கோளாறுகள்.

மனம் :—கண்ணீர் வடித்துக் கொண்டு மிகுந்த வருத்தமாய் இருத்தல். தனியே இருக்கப் பயம்; ஆண்களிடத்தில் பயம்; நண்பர்களைச் சந்திக்கப் பயம் ஆகிய பயக் குறிகள் கருப்பைக் கோளாறுகளில் காணப்படும். பேராசைக் குணம், கருமித் தனம். தூங்கி வழிந்த வண்ணம் இருத்தல், எந்தக் காரியத்திலும் ஆர்வம் இல்லை; வேலை செய்யவோ, விளையாடவோ. மூளையை உபயோகித்து வேலை செய்யவோ எதிலும் விருப்பம் இல்லாமை; அறிவை உபயோகித்துச் செய்ய வேண்டிய காரியங்களுக்கு வியாதியஸ்தர் தகுதி இல்லாமல் போய் விடுவார். அளவு கடந்த பர பரப்பு; சிறிய ஓசையையும் தாங்க முடியாது.

உடல் :—வியாதியஸ்தர் மிகச் சீக்கிரத்தில் களைத்துப் போவார். வயிற்றில் காலியாய் உள்ள உணர்ச்சி, சாப்பிட்ட பிறகும் நீங்குவதில்லை. குறிகள் முதுகில் வந்து தங்கி விடும். அடிக்கடி கருச்சிதைவு ஏற்படும் குணம். சருமத்தில் பழுப்பு நிறமுள்ள திட்டுகள். தூக்கத்தில் உறக்கப் பேசுதல். திடீரென்று உடலில் பலவீனம் உண்டாகிப் பிறகு சூடான ஆவி உடலில் வீசும் உணர்ச்சியும் மயக்கம் வருவது போல் தோன்றுவதும். கைகள் சூடாகவும் கால்கள் சில்லென்றும் அல்லது கைகள் சில்லென்றும் கால்கள் சூடாகவும் இருத்தல். நாக்கு தோல் உறியப்பட்டது போல் இருத்தல். கீழ் உதடுகள் வீங்கி வெடித்திருக்கும். கண்களைச் சுற்றிலும் கறுப்பான வளையங்கள். முகம் மஞ்சள் நிறமாய் வியாதி பிடித்த தோற்றத்துடன் இருக்கும். மாலையில் கண்களில் பளபளப்பும் கண்ணீர்ப் பெருக்கும் ஏற்படும். மூச்சுக் காற்று அழுகிய நாற்ற மடித்தல். உடலில் இருக்க

வேண்டிய குட்டின் அளவு குறைவாய் இருத்தல். புளிப்பான பொருள்கள் அல்லது ஊறுகாய்களில் அதிக ஆவல். உணவு மிகவும் உப்பாய் இருப்பது போல் தோன்றுதல். பெரும் பான்மையான கோளாறுகள் மலச் சிக்கலுடன் சேர்ந்திருக்கும்.

உபாதி கூடுதல் :—குளிர் காற்று, விசேஷமாக வடக்குத் திசையிலிருந்து வீசும் காற்று வியாதியஸ்தருக்குச் சிறிது கூட ஒத்துக் கொள்ளாது, அதனல் அடிக்கடி தவறுமல் நீர்க்கோர்வை பிடிக்கும்.

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே) :— தொட்டால், இடது பக்கமாய்ப் படுத்தால், மண்டியிட்டுக் குனிந்தால், மனவேலை செய்தால், பிற்பகல் அல்லது மாலை வேளையில், புழுக்கமும் ஈரக்கசிவுமுள்ள பருவக் காலங்களில், இடியுடன் மழை பெய்வதற்குமுன் ஆகிய காரணங்களால் உபாதிகள் அதிகமாகும். மாலையில் சுவாசிக்கக் கஷ்டமாய் இருத்தல். மாலை நேரத்தில் பயத்துடன் ஏக்கம்.

சலவைத் தொழிலில் ஈடுபட்டவர்களுக்குத் தோன்றும் கோளாறுகள் (இக் காரணத்தினல் ஸேபியா சலவைத் தொழில் செய்யும் பெண்களுக்கு ஏற்ற ஔஷதம் எனப் பெயர் பெற்றிருக்கிறது). அளவு மீறிய சிற்றின்ப ஈடுபாடு, சாராயம், பால், கொழுப்புள்ள உணவு, புளிப்புப் பொருள்கள் ஆகியவைகளால் உண்டாகும் கோளாறுகள். காய்ச்சிய பாலைக் குடித்ததால் ஏற்படும் வயிற்றுப் போக்கு.

உபாதி குறைதல்:—படுக்கையின் சூட்டினல் வியாதியஸ்தருக்குச் சௌகரியம் உண்டாகும்.

உபாதி குறைதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே):—படுக்கையின் சூட்டினல் அல்லது சூடான ஒற்றி

டங்களால் உபாதிகள் குறையும். சிலசமயங்களில் திறந்த இடங்களில் இருக்கும்போது உபாதிகள் குறைவாகும். மிகக் கடுமையான உடற்பயிற்சி செய்தால் (குதிரைச் சவாரியை இதில் சேர்க்கமுடியாது) உபாதிகள் மறையும். கடுமையான அசைவினால் தலைவலி சௌகரியமாய் இருக்கும்.

விசேஷக் குறிகளின் விளக்கம்

தளர்ச்சி :—கருப்பையும் யோனியும் வெளியே நழுவி வருதல்; அதனால் கனமான உணர்ச்சி; கீழே இழுப்பது போல் இருத்தல். அடிவயிற்றினுட் புறத்திலுள்ள எல்லா உறுப்புகளும் வெளியே பிதுங்கி வந்து விடும் போல் தோன்றுதல்; அவ்வாறு உறுப்புகள் வெளியே பிதுங்குவதைத் தடை செய்ய வியாதியஸ்தர் கால் மேல் கால் போட்டுக் கொண்டு உட்காருவார்; மூச்சுவிடக் கஷ்டமும் ஏற்படும். அடிவயிறு, கருப்பை, யோனித் துவாரத்துக்கும் ஆசனவாய்க்கும் நடுவிலுள்ள இடம், மலப்பை, கீழ்முதுகு, கீழ்க்குடல்கள் ஆகிய இடங்களில் கனத்த உணர்ச்சி காணப்படுமென்று பாரிங்டன் கூறுகிறார். இமைகளை மேலே தூக்க முடியாமை. குழந்தை எப்பொழுதும் முதல் தூக்கத்தில் மூத்திரம் கழித்தல். இரவில் இந்திரியம் தானாகவே வெளியாகுதல். சுக்கிலத் தண்ணீர் ஒழுக்கு.

மயக்க உணர்ச்சி :—அல்ப காரணங்களாலும் மயக்கமாய்விடுதல்; அதிக வெய்யல், அதிகக் குளிர் முதலிய வைகளாலும் கோவிலில் மண்டியிட்டுத் தொழும் போதும் வண்டிகளில் சவாரி செய்யும் போதும் மயக்கமாய் விடுதல்.

சூடான ஆவிபடும் உணர்ச்சி: மேற்பக்கம் பரவுதல் :—

மாதவிடாய் மறையும் காலத்தில் உடலில் சூடான ஆவி படும் உணர்ச்சியும் வியர்வையும் தோன்றும். முகத்திலும் தலையிலும் சூடான ஆவிபடும் உணர்ச்சி. சிறிது அசைந்தாலும் சூடான ஆவிபடும் உணர்ச்சி உண்டாகும்; கவலையும் மயக்கமும் தோன்றும்; இவைகளுடன் உடம்பு முழுவதும் வியர்வை ஏற்படும்; இக்குறிகள் யாவும் மாதவிடாய் மறையும் காலத்தில் காணப்படும். சூடான உணர்ச்சி (அடிவயிற்றுப் பாகத்தில் ஆரம்பித்து) மேலே பரவி பிறகு மயக்கத்துடனும் பலவீனமான உணர்ச்சியுடனும் கூடிய வியர்வையாக முடியும். தலை, ஆசனவாய், யோனி ஆகிய பல்வேறு இடங்களில் வலியும் அவ்வலி மேல்பக்கமாகத் தாவுவதும். யோனியில் மேல்பக்கமாகப் பாய்ந்து செல்லும் கண முள்ள குத்து வலிகள். கருப்பையிலிருந்து தொப்பூழுக்குச் செல்லும் கத்தியால் கிழிப்பது போன்ற கூர்மையான வலிகள்.

மற்ற திசைகள்:—வலிகள் மற்ற இடங்களிலிருந்து முதுகுக்குப் பரவும். பிறகு அவை முதுகிலே தங்கிவிடும்; இத்துடன் உடலில் நடுக்கம் ஏற்படும் இரவில் வியர்வை முதலில் உடலின் மேல் பகுதிகளில் தோன்றிப் பிறகு கீழேயும் வியர்வை உண்டாகும். தலையில் வலிகள் உட்புறத்திலிருந்து வெளிப்பக்கம் வரும்.

காலியான உணர்ச்சி:—காலியாய் இருப்பது போல் வலியுடன் கூடிய உணர்ச்சி: வயிற்றினுள்ளே "ஒன்றுமே இல்லாத வெற்று உணர்ச்சி", உணவு உட் கொண்டாலும் இவ்வுணர்ச்சி நீங்காமல் இருக்கும்.

பால் போன்ற கழிவுகள்:—வெள்ளை ஒழுக்கில் பால் போன்ற கழிவு பகல் வேளையில் மட்டும் ஏற்படும்; அத்

துடன் பிறப்பு உறுப்புகளில் புண்ணுள்ள உணர்ச்சி. அடிக்கடி மூத்திரம் கழிக்கத் தூண்டுதல்; மூத்திரம் பால் போல் இருக்கும்; நெருப்புப் போல் எரியும். மூக்கின் அடிப்பாகத்திலிருந்து பால் போன்ற சளி வெளிப்படுதல். பால் போன்ற பொருள் வாந்தி செய்யப்படுதல்.

மஞ்சள் நிறம் :—வெள்ளை ஒழுக்கில் யோனியில் அறிப்புடன் மஞ்சள் நிறமுள்ள கழிவு வெளியாகும். மஞ்சள் நிற உடலுள்ள வியாதியஸ்தர்கள். முகத்தில் மஞ்சள் அல்லது பழுப்பு நிறமுள்ள திட்டுகள். மஞ்சள் நிறமுள்ள முகம். கண்களின் உட்புறத்திலுள்ள சளிச் சவ்வுகள் மஞ்சளாய் இருத்தல். மார்பில் மஞ்சளான திட்டுகள். மஞ்சட் காமாலை. கன்னங்களின் மேற் பாகங்களிலும் மூக்கிலும் மஞ்சளாய் இருத்தல். மூக்கினுள் மஞ்சள அலைது பச்சையான பொறுக்குகள் சேருதல்; அப் பொறுக்குகளைச் சிந்தி எறிய முடியாது. வாயைச் சுற்றிலும் மஞ்சள் நிறமுள்ள படர் தாமரை போன்ற சருமக் கோளாறுகள்.

திட்டுத் திட்டாக நிறம் மாறி இருத்தல்: பொறுக்குத் தட்டுதல்: அறிப்பு: புண்ணாய் இருத்தல் :—சருமத்தில் கல்லீரல் சம்பந்த முள்ள திட்டுகள். அடிவயிற்று, முதுகு ஆகியவைகளிலும் மற்ற இடங்களிலும் பழுப்பான அல்லது மஞ்சளும் பழுப்பும் கலந்த நிறமுள்ள திட்டுகள். மூக்கினுள் மஞ்சள் அல்லது பச்சை நிற முள்ள, கெட்டியான பொறுக்குகள், சிந்தி எறிய முடியாது. வியாதியுள்ள இடங்களில் புண்ணுள்ள உணர்ச்சி. (வெள்ளை ஒழுக்கில் இருப்பதைப் போல). எலும்பு மூட்டுகளின் பின்பக்க வளைவில் கச கச வென்று ஈரக் கசிவுடன் புண்ணுள்ள உணர்ச்சி. அழுகுணிச் சிரங்கு

கனைப் போல் உள்ள; வறண்ட, அறிப்புள்ள சருமக் கோளாறுகள். முகம், கைகள், புஜங்கள், முதுகு, சப்பை, அடிவயிறு முதலிய பல இடங்களில், விசேஷ மாகப் பிறப்பு உறுப்புகளின் வெளிப் புறத்தில் அறிப்பு. பெண்களுக்கு யோனிக்கு மேலுள்ள முனை போன்ற உறுப்பில் கடுமையான அறிப்பு தோன்றி கருச் சிதைவு நேரும். சேபியாவின் அறிப்பு சொறிவதினால் தணிவ தில்லை; அறிப்பு எரிச்சலாய் மாறும். ஸ்தனக் காம்பு களில் தோல் உறிந்து புண்ணாகும்.

வியர்வைக் குணம்:—அல்ப காரணங்களாலும் வியர் வை தோன்றுதல். ஒரு சில உறுப்புகளில் மட்டும் வியர் வை ஏராளமாய் உற்பத்தியாகுதல். வியர்வை நாற்றம் வீசும்.

அழுகிய நாற்றம்:—வெள்ளை ஒழுக்கு, வியர்வை, யாவும் அழுகிய நாற்றம் அடிக்கும். வெள்ளை ஒழுக்கில் சுழிவு சில சமயங்களில் தயிர் போலவும் சகிக்க முடியாத நாற்றமாகவும் இருக்கும். மூக்கினுள் நாற்ற முள்ள, பெரிய பெரிய பொறுக்குகள் அல்லது சளிக் கட்டிகள். சகிக்க முடியாத நாற்றம் வீசும் இளகிய மலம். மூத்தி ரம் மிகுந்த நாற்றமாய் இருப்பதால் கழித்தவுடன் அதை அறையை விட்டு வெளியேற்ற நேரும்.

கல் போல் கடினமாகுதல்: கெட்ட சதை வளர்ச்சி: விகாரமான வளர்ச்சி:—புற்று நோயில் காணப்படுவதைப் போன்ற கடினமான சருமக் கோளாறு. உதடுகளின் ஒரு பாகம் மட்டும் கடினமாய் இருக்கும்; அவ்விடம் வெடித்து இரத்தப் பெருக் கெடுக்கும். கண் இமைகள், மூக்கின் பக்கத் தோல் ஆகிய இடங்களில் இவ்விதம் கடினமாவது காணப்படும். சருமத்தில் முண்டுகள்

தோன்றும். இம்முண்டின் கடுவில் குழி விழுந்து விட்டால் வளையம் போல் காணப்படும்; இதற்கு ஸேபியா நிச்சயமாய்த் தேவை யாகும். கடினமாகும் இடங்கள் ஊதா நிறமாய் இருந்தால் அவைகளுக்கு ஏற்றது ஸேபியாவே. கழுத்து, கைவிரல்கள், பிறப்பு உறுப்புகள் ஆகியவைகளில் பாலுண்ணிகள். விரல் நகங்கள் விகாரமாய் வளருதல்.

பந்து போன்ற உணர்ச்சி: உருண்டை உணர்ச்சி:—உள் உறுப்புகளில், விசேஷமாய் மலப் பையில், பந்து இருப்பது போல் (கனமாகவும் இருக்கும்) தோன்றுதல். வயிற்றுப் போக்கு, மலச் சிக்கல் ஆகிய கோளாறுகளில் இவ்வுணர்ச்சி ஏற்படும். வெள்ளை ஒழுக்கு, கருப்பைக் கோளாறுகள் ஆகியவைகளுடன் சேர்ந்து யோனியிலும் கருப்பையிலும் இவ்வுணர்ச்சி உண்டாகலாம். மலப் பையில் உள்ள பந்து உணர்ச்சி மலம் கழிந்த பிறகும் நீங்காமல் இருக்கும். நாட்பட்ட வயிற்றுப் போக்கில் மலம் குழகுழப்பாகவும் உருண்டைகள் கலந்தும் காணப்படும். மலச் சிக்கலில் மலம் கடினமாகவும் முடிச்சுகளுடனும் ஆசனவாயில் கனம் அல்லது உருண்டை இருக்கும் உணர்ச்சியுடனும் வெளியேற்றச் சிரமத்துடனும் இருக்கும். கனம் அல்லது உருண்டை உணர்ச்சி மலம் வெளியான பிறகும் அப்படியே இருக்கும். தொண்டையில் உருண்டை உணர்ச்சி.

சில்லிப்பு:—படுக்கையில் இருக்கும் போது கால்களும் பாதங்களும் சில்லென்றிருக்கும். முழங் கால் அல்லது முதுகால் சில்லென்றிருத்தல். பாதங்கள் சூடாக மாறியவுடன் கைகள் சில்லிப்பாகவும் கைகள் சூடானவுடன் பாதங்கள் சில்லென்றும் ஆகும். தலை

யின் உச்சியில் சில்லிப்பு உணர்ச்சி. சிற்சில இடங்களில் மட்டும் (திட்டுகள்) சில்லிப்பு. தோள்பட்டைகளுக்கு கடுவில் சில்லிப்பு உணர்ச்சி. சுரமுள்ள போது கை கால்கள் சில்லென்றிருத்தல்.

அல்ப காரணங்களாலும் கோளாறுகள் தோன்றுதல்:— அல்ப காரணங்களாலும் விடர்வை உண்டாகும். அல்ப காரணங்களாலும் விசேஷமாக உடல் வேலையினால் கை கால்களில் மத மதப்புத் தோன்றுதல். கை கால்களில் அடிக்கடி சுளுக்கிக் கொள்வதும் எலும்பு மூட்டுகள் நழுவுவதும்.

வேகமாய் வளரும் கோளாறுகள்:—குழந்தையின் உடம்பு மிக வேகமாய் மெலியும்; உடலின் இயற்கைச் சூடு அளவு குறைந்திருக்கும்; கணுக் கால்களில் அதிகப் பலவீனம் உண்டாகி நடக்கும் போது அடிக்கடி மூட்டு பிசகி விடும்; மேக வெட்டை உள்ளே அமுக்கப்பட்டதால் மிக வேகமாய் அதிகரிக்கும் குண முள்ள சுவாச கோச க்ஷயம் தோன்றினால் தக்க சமயத்தில் ஸேபியாவைக் கொடுத்தால் வியாதியை மேலும் வளராமல் தடை செய்துவிடலாம்.

உள்ளே அமுக்கப்படுதல்: மாதவிடாய் அமுக்கப்படுதல் அப்போக்கு குறைவாய் இருத்தல்:—மேக வெட்டை உள்ளே அமுக்கப்பட்ட பிறகு சுவாசகோச க்ஷயம் தோன்றுதல். மாதவிடாயில் அளவு குறைந்த போக்குடன் தலைவலியும் சேர்ந்திருக்கும். ஆசனவாயைச் சுற்றி கெட்ட சதை வளர்வதும் காணப்படும். மானிறுனித் தோலைச் சுற்றி மேக வெட்டை சம்பந்தமுள்ள, வெல்வெட்டுத் துணி (Velvet) போல் மிருதுவான பாலுண்ணிகள். கடைசியாக உள்ள இரு குறிகளும் மேகவெட்டை

உள்ளமுக்கப் பட்டதால் தோன்று மென்று கான் நினைக்கிறேன்.

விரைப்பாய் இருத்தல் : இறுகலாய் இருத்தல் :—கை கால்களில் விரைப்பு; தூங்கியெழுந்த பிறகு அதிக மாய் இருக்கும். கருப்பையை இறுகிப் பிடித்திருப்பது போல் தோன்றும். கருப்பைப் பாகத்தில் விரைப்பான உணர்ச்சி. கழுத்தை மூடியுள்ள சட்டைக் காலர், முதலியவை மிகவும் இறுகிப் போய் விட்ட உணர்ச்சி ஏற்பட்டு அடிக்கடி அவைகளைத் தளர்த்தி விட நேரும்.

மற்ற குறிகள்

உடலின் மேல் பாகத்தில் ஒன்றுக் கொன்று சம்பந்த மில்லாமல் பல இடங்களில் படர் தாமரை. கருவுற்ற ஐந்தாவது மாதத்திலிருந்து ஏழாவது மாதத்துக்குள் வழக்கமாய்க் கருச் சிதைவு ஏற்படும் உடல்வாகு. நாட்பட்ட மேகவெட்டையில் காலை வேளைகளில் மட்டும் சிறிதளவு போக்கு வெளிப்படுதல். மூத்திரத் துவாரம் காலையில் ஒட்டிக் கொண்டு அடை பட்டி ருத்தல். கழிவு மஞ்சள் நிறமாயிருக்கும்; வலி இருக்காது. பயங்கரமான அதிர்ச்சிகளுடன் அல்லது தலையில் ஆட்டத் துடன் வலிகள் தோன்றும். கண் இமைகள் மேலே தூக்க முடியாமல் தொங்கிப் போகுதல். உணவைக் கண்ணால் கண்டவுடன் அல்லது அதன் மணம் மூக்கில் பட்டவுடன் குமட்டல். தூங்கும் போது உறக்கப் பேசுதல். நாட் பட்ட மேக வெட்டையில் காணப்படுவதைப் போல் மூத்திரக் குழாயிலிருந்து சளிப்பொருள் வெளிப்படுதல். மாதவிடாய் மறையும் காலத்தில் அல்லது நாட்பட்ட தலைவலியினால் தலைமயிர் ஏராளமாய் உதிருதல். "அழுகு ணிச் சிறங்குகளில் அறிப்பெடுக்கும் புண்களுக்கு நடுவில்

கொப்பளங்கள் தோன்றும் போது ஸல்பருக்குப் பிறகு ஸேபியா பயன்படும்." (பாரிங்டன்), "உடலின் ஒரு பகுதி மட்டும் உழைப்புக்குட் படுத்தப்படும் தொழிலில் ஈடு பட்டவர்களுக்கு ஏற்படும் மூளைச் சோர்வுக்கு ஸேபியா மிகவும் உபயோகமுள்ளது." (பாரிங்டன்).

உறவு :—முன்னும் பிறகும் வேலை செய்யக் கூடியது நேட்ரம் மூர். லாச்சஸிசை ஸேபியா முறிக்கும். ஆகையால் ஸேபியாவுக்கு முன்போ அல்லது பிறகோ லாச்சஸிசை உப யோகிக்கக் கூடாது. பல்ஸடில்லாவுக்கும் ஸேபியா முறிவு. ஆதலால் ஸேபியாவைப் பல்ஸடில்லாவுடன் எச்சமயத்தி லும் மாற்றிக் கொடுப்பது கூடாது. (H. C. அல்லென்).

ஸைலீஷியா, ஸல்பர் ஆகியவைகளுக்குப் பிறகு பல சமயங்களி லும் ஸேபியா தேவைப்படும்.

ஒப்பிடுதல் :—உணவு சமைக்கப்படும் போது உண்டா கும் மணம் குமட்டலை உண்டாக்கும் (ஆர்ஸனிகம், கோல் சிகம்), உணவைக் கண்களால் பார்த்தால் அல்லது மன தால் நினைத்தால் குமட்டல் (நக்ஸ் வாமிகா). மாதவிடாய் மறையும் காலத்தில் உடலில் சூடான ஆவிபடும் உணர்ச்சி (லாச்சஸிஸ். ஸாங்வினேரியா, ஸல்பர். ட்யுபர்குலினம்). வலிகள் மற்ற இடங்களிலிருந்து முதுகுக்குப் பரவுதல் (ஸபீனாவில் இதற்கு நேர் எதிராய் இருக்கிறது). பேராசை, கருமித்தனம் (லைகபோடியம்). கழுத்தைச் சுற்றியுள்ள காலர் முதலிய பட்டைகளைத் தளர்த்திக் கொள்ள நேரு தல் (லாச்சஸிஸ்). தூங்க ஆரம்பித்த உடனேயே குழந்தை படுக்கையில் மூத்திரம் கழித்தல் (க்ரீஸோட்). தன் தொழி வில் அலட்சியம் (ப்ளூவாரிக் ஆஸிட், பாஸ்பாரிக் ஆஸிட்); மாதவிடாய்க் காலத்தில் எல்லையற்ற வருத்தம (லைகபோடி யம், நேட்ரம் மூர், நைட்ரிக் ஆஸிட்). அதிக நாற்றமுள்ள மூத்திரம் (கல். கார்ப், மெர். ஸொலு, நைட்ரிக் ஆஸிட்,

ரோடோடெண்ரன்). இரத்தம் கலந்த மூத்திரம் (கந்தாரிஸ், பாஸ்பாரிக் ஆஸிட், பல்ஸடில்லா, தெரிபிந்திஞ).

குறிப்புகள் :—ஸேபியா மிகவும் ஆழ்ந்து செய்யும் ஔஷதம். நான் 200க்குக் குறைந்த வீரியத்தில் எச்சமயத்திலும் உபயோகித்ததில்லை. 200 வீரியத்தில் ஒரு வேளை கொடுத்தால் ஒரு மாதத்துக்குக் குறையாமல் வேலை செய்கிறது. ஒரு தடவை 15 நாட்களுக்குப் பிறகு மறுபடி கொடுக்கலாம் என்ற சபலம் ஏற்பட்டு அவ்வாறு கொடுத்தவுடன் மிக வேகமாய்ப் பழய குறிகள் திரும்பவும் வந்து விட்டன.

ஸைலீஷியா

(SILICEA)

முன்னுரை:—சுத்தம் செய்யப்படாத நிலைமையில் இவ் வௌஷதத்துக்குச் சக்தி எதுவுமே கிடையாது. ஔஷதமாய் உபயோகப்படும் தகுதியும் இல்லை. ஹானிமனால் கண்டு பிடிக்கப்பட்ட முறைப்படி வீரியப்படுத்தப்படும் போது நமது வைத்திய முறையிலுள்ள, விலை உயர்ந்த, ஆழ்ந்தும் பல நாட்கள் உடலில் தங்கியும் வேலை செய்யக் கூடிய ஔஷதங்களில் ஒன்றாக மாறி விடுகிறது.

பொதுவான குறிகள்

தகுதி:— ஸோரா விஷமுள்ளவர்கள்; பலவீனம், பரபரப்பு, அல்ப காரணங்களாலும் ஆத்திரம் அடைதல், பலவீனமான இருதயம் ஆகிய குணங்கள் உள்ளவர்கள். அழகான உடல் நிறமும் வெளுத்த முகமும் பலவீனமான உடலும் உள்ளவர்கள்: மங்கிய உடல் நிறமும் தளர்ந்த தசைகளும் உடையவர்கள்; உண்ணும் உணவிலுள்ள சத்து உடலில் ஒட்டாமல் ஊட்

டக்குறைவு ஏற்பட்டு அதன் காரணமாய்ப் பல கோளாறுகளை உடையவர்கள் ஆகியவர்களுக்கு ஏற்றது.

வைக்கோல் உறுதியாக இருப்பதற்குக் காரணம் அதன் வெளிப்புறத்தில் உள்ள வழுவழுப்பான பொருளே. இப்பொருள் ஸைலீஷியா ஆகும். மன உறுதி இல்லாதவர்களுக்கு ஸைலீஷியா தேவைப்படுவது இக் காரணத்தினால் இருக்கலாமல்லவா!

மனம் :—உடல், மனம் ஆகிய இருவகை உணர்ச்சி களும் அதிகரித்தல், மன உறுதி இல்லாமை. மேடை களில் ஏறிப் பேசும் பழக்கமுள்ள பிரசங்கி தன்னால் பேச முடியாமல் போய்விடுமோ என்று நினைத்தல். குழந்தை பிடிவாத குணமுள்ளதாகவும் அகம்பாவ மாகவும் இருக்கும்; அன்பாகப் பேசினால் கதறி அழும். பணிவும் அடக்கமும் கவலையுமுள்ள குணம், பலவீன மான இருதயம், ஆழ்ந்த துக்கம், தான் இறந்து விடு வோம் என்று நினைப்பார். நிலை கொள்ளாமை, உடம் பில் பரபரப்பு, சிறிய ஓசை உண்டானாலும் திடுக்கிடுதல். மூளையை உபயோகித்துச் செய்ய வேண்டிய வேலை மிக வும் கஷ்டமாய்த் தோன்றுதல்; படிப்பதும் எழுது வதும் கஷ்டப்பை உண்டாக்கும். யோசனை செய்வது சிரமமாய் இருத்தல். மாறுத அபிப்பிராயம் கொள்ளு தல்; குண்டூசிகளைப் பற்றியே நினைப்பார்; அவைகளைக் கண்டு பயப்படுவார்; குண்டூசிகள் எங்கே இருக்கின்றன என்று தேடுவார்; அவைகளைக் கவனமாய் எண்ணிப் பார்ப்பார். பைத்தியக்காரர்களிடம் இக்குறி காணப் படும்.

உடல் :—உடல் வலிமை குறைந்திருத்தல்; அதனால்

தான் கீழ் உள்ள குறிகள் ஸைலீஷியாவில் இருக்கின்றன. நரம்புகளில் அதிகப் பலவீனம்; உடலில் பரபரப்புடன் பலவீனம்; கீழே படுத்துக்கொள்ள விரும்புவார். "சாதாரணமாக ஏற்படும் அதிர்ச்சிகளைக்கூட மூளையினாலும் முதுகெலும்பினாலும் தாங்க முடியாது." குழந்தை தாமதமாக நடக்க ஆரம்பித்தல். எழுதும்போது நடுக்கம். எலும்பு மூட்டுகள், முக்கியமாய்க் கணுக்கால் மூட்டு பலவீனமாய் இருப்பதுபோல் தோன்றும். எப்போதோ ஒருதடவை புணர்ச்சி செய்தாலும் அதனால் ஒவ்வொரு தடவையிலும் களைப்புத் தோன்றி ஒரு வாரம் அல்லது மேலும் நீடித்து இருக்கும்.

உடலின் இயற்கைச் சூடு குறிப்பிடத்தக்க அளவுக்குக் குறைவாய் இருக்கும். உடல் பயிற்சி செய்யும் போதும் அப்படியே இருக்கும்; எப்பொழுதும் உடம்பில் குளிர்ச்சி. சூடுள்ள உணவில் வெறுப்பு; குளிர்ச்சியான பொருள்களையே விரும்புவார். பசி ஏற்படும்; ஆனால் சாப்பிடமுடியாது; உணவு விஷம்போல் தோன்றும். பாதங்களில் நாற்றமுள்ள வியர்வை. இளகிய மலமும் வெளியேறக் கஷ்டமாய் இருத்தல். நீங்காத நீர்க்கோர்வையுள்ளவர்கள் (ஸைலீஷியாவின் வியாதியஸ்தர்கள் எல்லோருக்குமே இக்குறி இருக்குமென்று சொல்ல முடியாது). நாக்கில் மயிர் சிக்கியிருக்கும் உணர்ச்சி. நகங்கள் வளர்ச்சி குறைந்து கோளாருக வளருதல். இரவில் நடத்தல்; அதாவது தூங்கிக் கொண்டிருக்கும் போது எழுந்து விடுவார்; அங்குமிங்கும் சற்று நடந்து விட்டுப் பிறகு மீண்டும் படுத்துக் கொள்வார். தூக்கக் கலக்கமாய் இருப்பார், ஆனால் தூங்க முடியாது.

உபாதி கூடுதல்:—வியாதியஸ்தருக்குக் குளிரும்

உணர்ச்சி இருக்கும். நீர்க்கோர்வை பிடிக்கும், விசேஷ மாகப் பாதங்களையும் தலையையும் மூடாமல் திறந்து வைத்திருந்தால்.

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே) :— குளிர்ச்சியான ஈரக் கசிவுள்ள பருவங்களாலும் பருவ மீலியில் குளிர் தோன்றினாலும் கோளாறுகள் ஏற்படுகின்றன. சில சமயங்களில் குளிர்ந்த வறண்ட காற்றினால் உபாதிகள் சௌகரியமடைகின்றன. மாத விடாய்க் காலத்தில், அமாவாசை அல்லது பௌர்ணமி நாட்களில், உடலை, முக்கியமாகத் தலையைத் திறந்து வைத்திருத்தல், கீழே படுத்தல் ஆகிய காரணங்களால் உபாதிகள் அதிக மாகும்.

கீழே படுத்தால் காச நோய் கடுமையாக மாறும். தாய்ப் பாலில் வெறுப்பு; குடித்தவுடன் குழந்தை பாலை வாந்தி செய்தல்.

உபாதி குறைதல் :—தலையைப் போர்த்தி வைத்துக் கொண்டால் வியாதியஸ்தருக்குச் சௌகரியமாய்த் தோன்றும்.

விசேஷக் குறிகளின் விளக்கம்

வியர்வை :—குழந்தைகளுக்குத் தலையில் எந்நேரமும் வியர்த்துக் கொண்டிருத்தல்; தலை வியர்வையினால் நனைந் திருக்கும், விசேஷமாக இரவில். வியர்வை மண்டைத் தோல், கழுத்து, முகம் ஆகிய இடங்களில் இருக்கும் அல்லது கழுத்துக்கு மேலுள்ள இடங்களில் மட்டு மாவது இருக்கும்; நாற்றமாக இருக்கும். பாதங்களிலும் கால்களிலும் குளிர்ச்சியான வியர்வையும் அவை சில் லென்றிருப்பதும். பாதங்களில் நாற்ற முள்ள வியர்வை கால் விரல்களின் நடுவில் புண்களுடன் கெட்ட நாற்றம் வீசும்

வியர்வை பாதங்களில் உண்டாகும். பாதங்களில் வழக்க மாக வியர்வை தோன்றும் உடல் வாகு.

உடல் வேலை செய்த பிறகு முகம், மண்டை ஆகிய இடங்களில் வியர்வை உண்டாகி உடலின் மற்ற பகுதி களில், விசேஷமாகக் கீழ்ப் பகுதியில் வியர்வை இல்லா மல் காய்ந்து இருக்கும். மிக மிக அதிகமாய் உடல் வேலை செய்தால் தான் வியாதியஸ்தருக்கு உடம்பு முழு வதும் வியர்வை தோன்றும். ஆனல் தூங்க ஆரம்பித்த வுடன் வியர்வை உண்டாகும்.

வியாதி உள்ளே அமுக்கப்படுதல்:—பாதங்களில் ஏற் படும் வியர்வையை அமுக்கியதால் வலிப்புகள், கண் பார்வை மங்குதல், காடராக்ட் (Cataract) எனப்படும் கண்களில் மெல்லிய சதை படருதல், பாரிச வாதம், முதலிய பல கோளாறுகள் தோன்றுதல். மேகவெட் டையை உள்ளே அமுக்கியதால் உண்டாகும் காசம், மாதவிடாய் சிறிது கூட வெளிப்படாமல் மாதக் கணக் கில் அமுக்கப்பட்டிருத்தல்.

அம்மை குத்திக் கொண்டதால் ஏற்படும் கெடுதலான விளைவுகள்:—சீழ்க் கொப்புளங்கள் உண்டாவதும் வலிப் புகளும் கெடுதலான விளைவுகளுக்கு அடையாளங்கள். தூஜா என்னும் ஔஷதத்தைப் பார்க்கவும்.

சீழ்ப் பிடித்தல்: ஆழமான குழி உள்ள புண்கள்: பவுத் திரச் சிரங்குகள்: கல் போல் கடினமாகுதல்:—ஸைலீஷியா பொதுவாக உடலில் சீழ்ப் பிடிப்பதை மட்டுப்படுத்து கிறது; தேவையான போது சீழ்க் கட்டிகளைச் சீக்கிரத் தில் பழுக்கச் செய்கிறது; சீழ்ப் பிடித்து விட்ட சமயங் களில் சீழ் அளவு மீறி உற்பத்தியாவதைத் தடை செய்கிறது. "ஹிப்பார் ஸல்பர் அல்லது கல்கேரியா ஸல்ப் உபயோகப்

படக் கூடிய நிலைமைகளுக்கு அப்பாற்பட்ட சமயங்களிலே ஸைலீஷியா தேவைப்படு மென்று தோன்றுகிறது. முதல் இரண்டு ஔஷதங்களும் ஏற்கனவே உற்பத்தியான சீழை வேகமாய் வெளியேற்றுகின்றன. ஸைலீஷியாவோ சீழ் முழுவதும் வெளியான பிறகு புண்ணை ஆற்ற உதவுகிறது" என்று நாஷ் சொல்லுகிறார். சீழ் வெளியான பிறகு ஸைலீஷியா புதிய சதை வளரவும் கழுப்பிடவும் உதவி செய்கிறது. சீழ்ப் பிடித்த இடங்கள் கல் போல் கடினமாகும் போது அதைக் கரைத்துவிடும். ஸ்தனங்களில் கடினமான உருண்டைகள். சுரப்பிகளில் சீழ்ப் பிடிப்பதை ஸைலீஷியா கட்டுப்படுத்தக் கூடும். சீழ் அதிகமாய் இல்லாவிட்டாலும் விஷத் தன்மை வாய்ந்த சீழ்ப் பிடித்த உபாதிகளில், விசேஷமாகச் சவ்வுத் தோல் உள்ள இடங்களில் ஸைலீஷியா உபயோகமாகும். பவுத்திரச் சிரங்குகள்; சிரங்குகளைச் சுற்றியுள்ள இடம் கடினமாகவும் வீங்கியும் நீலம் கலந்த சிவப்பு நிறமாகவும் இருக்கும். பற்களில் பவுத்திரச் சிரங்கு.

சுவாசகோச க்ஷயத்தில் சீழ்க் கொள்ளும் நிலைமை;

சுரப்பிகள், விசேஷமாய்த் தாக்கப்படுதல்:—சுரப்பிகள் கல் போல் கடினமாகும், வீங்கும். வேக்காடு இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம். கழுத்து, காதுப் பக்கம், அக்குள், அரை இடுக்கு ஆகிய இடங்களிலுள்ள சுரப்பிகளே விசேஷமாகத் தாக்கப்படும். இவ்விதச் சுரப்பிகளில் வீக்கத்துடன் சில சமயங்களில் தொந்தரவைத் தரும் குணமுள்ள அறிப்பு சேர்ந்து இருக்கலாம்.

நாற்ற குணம்:—புண்களில் மிகுந்த கெட்ட நாற்றம்

அடிக்கும். மூச்சுக் காற்று, வியர்வை, விசேஷமாகப் பாதங்களில் உண்டாகும் வியர்வை ஆகியவைகளும் இதேபோல் நாற்றம் வீசும். கெட்டியான, நாற்ற மூள்ள கழிவு வெளியாகும் நாட்பட்ட மேக வெட்டை.

புண்ணுகுதல்: தூங்கி வழிதல்: கெட்டுப் போகுதல்:— வியாதி பிடித்த சருமம்; ஒவ்வொரு காயமும் சீழ்ப் பிடிக்கும். சிறிய காயங்களிலிருந்து ஏராளமாய்ச் சீழ் வரும்; ஆறும் அறிகுறிகள் இருக்காது. ஸைலீஷியாவின் புண்களைச் சுற்றிப் பல சமயங்களிலும் சிவப்பாய் இருக்கும். நாற்றமுள்ள, பவுத்திரம் போன்ற, பரவும் குணமுள்ள புண்கள். புற்று நோய் சம்பந்த மூள்ள புண்கள். சதையைத் தின்று கொண்டு பரவும் குண முள்ள படர் தாமரை. பாதரஸத்தைக் கண் மூடித்தனமாகக் கொடுத்துத் தோன்றிய புண்கள். ஸ்தனக் காம்புகள் புண்ணுகுதல்.

எலும்புகள் வளைதல், சொத்தையாகுதல்; தொட்டால் வலி உண்டாகுதல். முதுகெலும்பு வளைந்து விடுதல். முதுகெலும்பு வீங்கிக் கோணல் மாணலாகும். ஸைலீஷியாவில் எலும்புகளில் வேக்காடு, வீக்கம், புண்ணுகுதல், சொத்தையாகுதல் ஆகிய கோளாறுகள் இருக்கின்றன.

நகங்கள் அழுக்குப் படிந்த மஞ்சள் நிறமாய், தடைப்பட்ட வளர்ச்சியுடன் நொறுங்கும். நகத்தைச் சுற்றிலும் புண்கள். தாய்ப் பால் கெட்டுப் போகுதல்; அதனால் குழந்தை தாய்ப் பாலைக் குடிக்க மறுக்கும் அல்லது குடித்தவுடனே வாந்தி செய்து விடும்.

குழந்தைகளின் எலும்பு வீக்கம்: வளர்ச்சிக் குறைவு: கோளாருன உருவம்: அதிக வளர்ச்சி:— ஸைலீஷியா நிச்சய

மாகத் தேவைப்படும் குழந்தை கீழே உள்ள இலட்சணங்கள் பொருந்தியதாய் இருக்கும்: முகம் வெளுத்து மங்கி இருக்கும். "கை கால்கள் சுருங்கி, அதன் கண்கள் குழியினுள் சென்று, முகம் ஒட்டிப் போய்க் கிழத் தோற்றம் அளிக்கும்". எலும்புகளில் வீக்கம்; உடல் இளைப்பு, வளர்ச்சிக் குறைவு; உடல் மெலிந்திருக்கும் ஆனால் அடிவயிறு பருத்துக் கடினமாய்ச் சூடாகவும் இருக்கலாம்; தலை பருத்து உச்சிக் குழிகள் மூடப்படாமல் இருக்கும்; உடல் முழுவதும் மெலிந்திருந்தாலும் தலை அளவு மீறிப் பருத்திருக்கும்; தலையில் புளிப்பு நாற்றமடிக்கும் வியர்வை ஏராளமாய்ப் பெருகும்; ஆனால் உடம்பு காய்ந்திருக்கும். (வியர்வை என்ற தலைப்பின் கீழுள்ள குறிப்புகளைப் பார்க்கவும்). முதுகெலும்பில் பலவீனம்; கணுக் கால்களில் பலவீனம்.

யானைக் கால் வியாதி விரைப் பையைத் தாக்குதல். விரைப் பையில் நீர்ச் சுரப்பு ஏற்பட்டுப் பெரியதாகுதல்.

நாட்பட நீடித்தல்: விஷத் தன்மை: கடுமைக் குணம்:— சீழ்ப் பிடித்தால் அவை பல நாட்களுக்கு நீடித்துப் பிடிவாத குண முள்ளவைகளாய் இருக்கும். விஷத் தன்மை வாய்ந்த சீழ்க் கட்டு. கடுமையான தொண்டைச் சுரப்பி வேக்காடு. (12X வீரியத்தில் லைலீஷியா இவ்வியாதிக்கு ஓர் சஞ்ஜீவி என்றே சொல்லப்படுகிறது). பல காலமாய் இருந்து வரும். இரவில் மட்டும் தோன்றும் குண முள்ள காக்கை வலிப்பு, விசேஷமாக அமாவசை நாட்களில் தோன்றும். "நீர்க் கோர்வை மார்பில் தங்கி காச நோய்க் குறிகளைத் தோற்றுவிப்பது நீண்ட காலமாகவே வழக்கமாய் இருத்தல்". நாட்பட்ட மார்ச் சளி. சுவாச கோச வேக்காட்டைப் பின் பற்றி நாட்பட நீடிக்கும் கோளாறுகள்

உண்டாகுதல். சுவாச கோசங்களைப் பற்றிய நாட்பட்ட வியாதிகளில், (க்ஷய ரோக சம்பந்தமும் இருக்கலாம்). மார்பில் ஆண்ட்டிமனியம் டார்ட்டாரிகத்தில் காணப்படுவதைப் போல் களகளத்த ஓசை காணப்படும். மேகக் கிரந்தி வியாதியில் மூக்கு எலும்புகள் அழுகிப் போய் (மூக்கு சப்பையாகும்) பயங்கரமான நாற்ற முள்ள சளி வெளிப்படும்.

மயிர் உணர்ச்சி: துரும்பு உணர்ச்சி:—நாக்கு, தொண்டை முதலிய இடங்களில் மயிர் உள்ள உணர்ச்சி. நுனி நாக்கில் மயிர் இருப்பதுபோல் தோன்றுதல்; தொண்டை வரை பரவி இருக்கும். விரல்களில் துரும்பு இருக்கும் உணர்ச்சி. தொண்டையில் குண்டூசி உள்ள உணர்ச்சி. கண்களின் மேல் இமைகளில் துரும்பு இருக்கும் உணர்ச்சி.

ஔஷதப் பரீக்ஷை நடத்தப்பட்ட போது ஸைலீஷியா துரும்பு உள்ள உணர்ச்சியை உண்டாக்கியது. இதை அடிப்படையாய் வைத்து உடல் அணுக்களில் நுழைந்துவிடும் வேற்றுப் பொருள்களை இவ்வௌஷதத்தினால் வெளியேற்றி விடலாம் என்று நினைத்து ஹோமியோபதியர்கள் அவ்வாறு உபயோகிக்கத் தொடங்கினர். அவர்களின் யூகம் சரியானதே என்று அனுபவத்தில் மெய்ப்பிக்கப் பட்டது. தொண்டையின் உட்புறத்தில் சென்றுவிட்ட மீன் எலும்பு போன்ற பொருள்களை வெளியே எடுக்கத் தங்களால் ஆகாது என்று சர்ஜன்கள் கையை விரித்து விடும் சமயங்களில் ஸைலீஷியாவை 30 வீரியத்தில் ஒரே ஒரு வேளை மட்டும் கொடுத்தால் போதுமானது. அருமையான முறையில் சர்ஜன்களால் சாதிக்க முடியாததை அது செய்து முடிக்கிறது. உள்ளே இருப்பது மீன் எலும்பானாலும்,

முள்ளோ ஊசியோ மற்ற எதுவாய் இருந்தாலும் வேற்றுப்பொருள் உள்ள இடத்தில் சீழ்ப் பிடிக்கச் செய்து அதை வெளியே தள்ளிவிடும்.

பாறுங்கல்லை உடைக்கும் அல்லது செதுக்கும் வேலையில் ஈடுபட்டவர்களுக்குக் கல் தூசி கலந்த காற்றைச் சுவாசிக்க நேருவதால் பல சமயங்களிலும் சுவாச கோசங்களைப் பற்றிய வியாதிகளாலும் மிகுந்த உடல் பலவீனத்தாலும் அவர்கள் கஷ்டப் படுவார்கள். கல் தூசி சுவாசகோசங்களினுள்ளே புகுந்து தங்கி அவ்விடங்களில் சூடத்தை ஏற்படுத்துவதால் சுவாசகோசக் கோளாறுகள் உண்டாகலாம். வீரியப் படுத்தப்பட்ட ஸைலீஷியாவைக் கொடுத்தால் சுவாசகோசங்களிலுள்ள கல் தூசிகளை வெளியேற்றி மற்ற எல்லாக் கோளாறுகளையும் குணம் செய்துவிடும். மற்றொரு குறியாகிய உடல் பலவீனம் கல்லை இரும்பு உளியால் உடைக்கும் போது ஸைலீஷியாப் பொருள் மிக நுண்ணிய அளவிலே உடலினுள்ளே சென்று விடுவதால் ஏற்படுகிறது. பாறுங் கல்லில் ஸைலீஷியாப் பொருள் இருக்கிறது.

வேலை செய்யாமை :—உடம்பில் சூடு உண்டாகும் படிச் செய்ய வேண்டிவரும். மலப்பை வேலை செய்யாமை ; மிகுந்த கஷ்டத்துடன் மலம் ஒரு சிறிது வெளியே வந்து பிறகு மறுபடியும் உள்ளே சென்றுவிடும். அவருடைய உடல் முழுவதுமே வேலை செய்யாமல் அல்லது மந்த குணத்துடன் இருக்கும் ; உடலாலோ, மனதாலோ வேலை செய்வதை அவர் வெறுப்பார் ; அதுமட்டுமல்ல ; வேலையைக் கண்டாலே பயந்து நடுங்குவார் ; ஆனால் வேலை செய்ய ஆரம்பித்து உடம்பில் சிறிது சூடு ஏற்பட்டவுடன் மந்தகுணம் நீங்கி எடுத்த வேலையை ஒழுங்காய்ச்

செய்ய அவரால் முடியும். காலையில் தூங்கி எழுந்த வுடன் பலவீனமாய்த் தோன்றும்; அச்சமயத்தில் நடக் கவே முடியாது; ஆனல் சிறிது உடல் பயிற்சி செய்த வுடன் சீராகும்.

மேல் நோக்கிப் பரவுதல்:—குறிகள் மேல்பக்கமும் வெளிப்பக்கத்திலும் கூடப் பரவும். காக்கை வலிப்பில் முன் அறிவிப்புக் குறி வயிற்றில் ஆரம்பித்து மேலே பரவும். நீடித்த மண்டை இடியில் வலி கழுத்தின் பின் பக்கத்திலிருந்து பின் தலைக்கு ஏறும். காதுகளில் வலி வெளிப்பக்கமாய்ப் பாயும். கண்களின் வெளிப்பக்கத்தில் பாயும் வலிகள்.

மாறித் தோன்றுதல்:—ஆசனவாய்ப் பவுத்திரமும் சுவாசகோசக் கோளாறுகளும் மாறி மாறித் தோன்றுதல்.

மற்ற குறிகள்

கீழே வைத்துப் படுத்த பாகங்கள் தூங்கிப் போகுதல். உள்ளங் காலிலிருந்து உள்பக்கமாகக் குதிகால்கள்வரை வலி யுள்ள உணர்ச்சி. நாட்பட்ட மண்டை இடி; கழுத்தின் பின்பக்கம், பின்தலை, உச்சந்தலை, கண்கள் ஆகியவை களில் வலி காணப்படுதல்; வலி மிகக் கடுமையாய் மாறும்போது குமட்டலும் வாந்தியும் உண்டாகும்; பல சமயங்களிலும் வலி ஒரு கண்ணில், விசேஷமாக வலது கண்ணில் மட்டும் இருக்கும், தலையைத் துணி யால் மூடினலும் ஏராளமாய் மூத்திரம் கழிந்தாலும் சௌகரியம் தோன்றும். கண்களைப் பற்றிய வியாதி களுடன் வியாதியஸ்தருக்குக் குளிர் சிறிதுகூட ஒத்துக் கொள்ளாமல் இருப்பதும், சூடு உண்டாகும்படியாகப் போர்த்திக் கொள்ள விருப்பமும் (முக்கியமாகத் தலையை) இருத்தல். கால் விரல்களின் நகங்கள் உட்புற

மாகச் சதையைக் குத்திக்கொண்டு வளருதல். உடல் பலவீனத்துடனும் இரவில் ஏராளமான வியர்வையுட னும் விடாமல் அடிக்கும் சுரம். மாதவிடாய்க்கு முன் னும் அச்சமயத்திலும் வழக்கமாய் மலச் சிக்கல் தோன்று தல். குழந்தை தாய்ப் பால் குடிக்கும்போது ஒவ்வொரு தடவையும் யோனியிலிருந்து இரத்தம் வெளிப்படுதல். யோனியில் ஆரஞ்சுப் பழம்போல் பெரியதாய் நீருள்ள தசைக் கட்டிகள் இருத்தல். முதுகெலும்பின் கீழ் நுனியில் வலி.

உறவு:—கல். கார்ப், ஹிப்பார் ஸல்பர், நைட்ரிக் ஆஸிட், பாஸ்பரஸ் ஆகியவைகளுக்குப் பின் ஸைலீஷியா நன்முய் வேலை செய்கிறது. தூஜா, ஸானிகுலா, பல்ஸடில்லா ஆகிய வைகளுக்கு முன்பும் பிறகும் ஸைலீஷியா உபயோகமாகும். பல்ஸடில்லா முற்றினால் ஸைலீஷியா. மெர். சொலு பகை யாகையால் அதை ஸைலீஷியாவுக்கு முன்போ அல்லது பிறகோ கொடுப்பது கூடாது.

ஒப்பிடுதல்:—உடல் பயிற்சி செய்து கொண்டிருக்கும் போதும் குளிரும் உணர்ச்சி (லேடம், ஸேபியா). ஆசன வாய்ப் பவுத்திரமும் சுவாச கோசக் கோளாறுகளும் மாறி மாறித் தோன்றுதல் (பெர்பெரீஸ், கல். பாஸ்). ஸ்தனக் காம்பு உட் குழிந்து புனல் (Funnel) போல் இருத்தல் (ஸர்ஸ பரில்லா). வியாதி பிடித்த சருமம், ஒவ்வொரு சிறு காய மும் சிழ்க் கொள்ளுதல் (கிராபைடிஸ், ஹிப்பார் ஸல்பர், மெர். சொலு, பெட்ரோலியம்). தலையில் வியர்வையும் உச் சிக் குழி திறந்து இருத்தலும் (கல். கார்ப்). ஸைலீஷியா வில் வியர்வை பொதுவாக உடம்பு முழுவதும் நெற்றி யிலும் இருக்கும்; தவிர நாற்றமாகவும் இருக்கும். இவை களைக் கொண்டு தக்க ஔஷதம் எது என்பதை அறிய லாம். கல். கார்பைப் போலவே ஸைலீஷியாவிலும் நெற்றி

சில்லென்று இருக்கும்; ஆயினும் ஸைலீஷியாவில் நெற் றியை லேசாக மூடி வைத்திருந்தால் சூடு உண்டாகும். குளி ரும் ஈரக் கசிவு முள்ள பருவ நிலைகளால் உபாதிகள் அதி கரித்தல் (பாரிடா கார்ப்). துர்நாக்கும் குண முள்ள புண் கள் (நைட்ரிக் ஆஸிட், காலி பைக்). கணுக் கால்களில் பல வீனம் (காஸ்டிகம், ஸல்ப்யூரிக் ஆஸிட்). நாக்கில் மயிர் உள்ள உணர்ச்சி (நேட்ரம் மூர், காலி பைக்) பிடிவாத குண முள்ள குழந்தைகள்; அன்பாய்ப் பேசினால் கதறி அழுதல் (ஐயோடியம்). நகங்கள் கோளாறாய் வளருதல் (ஆண்ட்டி மனியம் க்ரூடம்). கால்களைத் திறந்து வைத்துக் கொண் டால் நீர்க் கோர்வை உண்டாகுதல் (கோனியம், குப்ரம் மெட்). பல் சம்பந்தப்பட்ட பவுத்திரச் சிரங்கு (ப்ளூவாரிக் ஆஸிட்).

ஸ்பைஜீலியா

(SPIGELIA)

முன்னுரை :—நரம்புகளைப் பற்றிய வியாதிகளுக்கே, விசேஷமாகத் தலை, கண் (அனேகமாய் இடது கண்). இரு தயம் ஆகியவைகளிலுள்ள நரம்புகள், ஸ்பைஜீலியா பெரும் பாலும் உபயோகமாகிறது. வயிற்றிலும் குடலிலும் பூச் சிகள் இருப்பதால் உண்டாகும் கோளாறுகளுக்கும் தகுந் தது.

ஒரு சில வியாதிகளுக்கு மட்டுமே உபயோகமாகிறது என்றாலும் இடது கண்ணில் தோன்றும் மிகக் கடுமை யான நரம்பு வலிகளை ஸ்பைஜீலியா மகேந்திர ஜாலமோ என்று நினைக்கு மளவுக்கு மிக வேகமாய்க் குணம்செய்து விடுகிறது. இவ்வாறு எழுத என்னுடைய சொந்த அனு பவமே சாக்ஷி கூறும்.

பொதுவான குறிகள்

தகுதி:—வாத ரோக அறிகுறிகளுடன் இரத்த சோகையும் பலவீனமும் உள்ளவர்கள்; வயிற்றிலும் குடல்களிலும் பலவிதமான புழு பூச்சிகள் உற்பத்தியாகிச் சுரப்பிகளில் வீக்கமுள்ள குழந்தைகள்; கறுமை இல்லாத தலைமயிர்; உடல் வெளுத்து, மெலிந்து முகம் உப்பிப் பலவீனமாய் இருத்தல்; சரீரம் சுருங்கி, மஞ்சளாய், மங்கி இருத்தல்; ஆகிய குறிகள் உள்ளவர்களுக்குத் தகுந்தது.

மனம்:—ஞாபக சக்தி குறைதல். வருங் காலத்தைப் பற்றி ஏக்கமும் பரபரப்பும். ஊசிகள், குண்டூசிகள் முதலிய கூர் உள்ள பொருள்களைக் கண்டால் பயம்.

உடல்:—முகம் வெளுத்து, கண்களைச் சுற்றி மஞ்சள் நிற முள்ள வளையம் காணப்படும். கன்னங்களும் உதடுகளும் ஒரு சமயம் செக்கச் செவேலென்று சிவந்தும் மற்றொரு சமயம் வெளுத்தும் இருக்கும். முகம் உப்பி இருத்தல், விசேஷமாகத் தூங்கி எழுந்தவுடன். மூச்சுக் காற்று நாற்றமாய் இருத்தல். அழுகிய சுவை. வெள்ளையான வண்டல் தங்கும் மூத்திரம். கைகள் வெளுத்த மஞ்சள் நிறமாய் இருக்கும். உட்கார்ந்து விட்டு எழுந்திருக்கும் போது உடல் கனமாய் இருக்கும் உணர்ச்சியும் புண் இருப்பது போல் வலியும். அதிகப் பலவீனம், விசேஷமாகக் காலை வேளைகளில். உடல் வெளுத்துச் சுருங்கிப் போய்விடும்.

உபாதி கூடுதல்:—குளிர்ச்சியான காற்றுச் சிறிது கூட வியாதியஸ்தருக்கு ஒத்துக் கொள்ளாது; குளிர் காற்றில் நடந்து சென்றால் அவருடைய உபாதிகள் பழயபடி உண்டாகும், கூடுதலாகும். குளிர், ஈரக் கசிவு,

மழை, புயல் ஆகியவை உள்ள காலங்களில் உபாதிகள் அதிகமாகும்.

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):— சிறிதளவு அசைவினலும் இருதயப் பட படப்பு அதிக மாகும். திறந்த இடங்களில் கண்களில் வலி உண்டாகும். வலிகள் இரவிலும், காலையிலும் குளிர், ஈரக் கசிவுள்ள பருவக் காலங்களிலும் அதிகமாகும்; சிறிய அதிர்ச்சியினலும் அசைவினலும் அதிகரிக்கும். சாப்பிட்ட பிறகு பல் வலி (சாப்பிடும் போது அல்ல).

உபாதி குறைதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே):— அமுக்குவதினல், பல சமயங்களில் பலமாய் அமுக்குவதி னல், நரம்பு சம்பந்தமான வலிகள் குறையும். தலையை உயரமான இடத்தில் வைத்துப் படுத்தால் தலை வலி குறை யும். புகை இலையைப் புகைத்தாலும் படுக்கையின் சூட்டி னலும் பல் வலி குறையும். மூச்சுத் திணறல் என்ற விசே ஷக் குறியைப் பாக்கவும்.

விசேஷக் குறிகளின் விளக்கம்

கடுமைக் குணம்: நரம்பு வலிகள்: இடது பக்கமே அதி கம் தாக்கப்படுதல்:—கடுமைக் குணம் ஸ்பைஜீலியாவின் முக்கிய குறிகளில் ஒன்றாகும். இடது கண்ணில் கூர்மை யான, மிகக் கடுமையான நரம்பு வலி. வலிகள் கழுத்தின் பின் பக்கம் ஆரம்பித்து மேலே தலைக்குத் தாவி முடிவில் இடது கண்ணுக்கு மேலே தங்குகின்றன. இடது பக்கத்தில் வலி உள்ள தலை வலியும் விழிகளில் ஏற்படும் நரம்பு வலியும் இறுக அமுக்கினல் தணியும். தலை, முகம், கண் ஆகியவைகளின் இடது பக்கத்தில் நரம்பு வலி; முறை வைத்துத் தோன்றுதல்; வலியுள்ள கண்ணிலிருந்து கண்ணீர் வடிதல்; வேதனை பொறுக்க முடியாது. "பெருங் குடல், மலப்பை முதலிய இடங்களில் பொறுக்க முடியாத வலி தரும் கடினமான புற்று நோய்க் கட்டிகள்" (H. C. அல்லென்).

ஸ்பைஜீலியாவுக்கும் இடது பக்க உறுப்பாகிய இருதயத்துக்கும் நெருங்கிய உறவு இருக்கிறது. கடுமையான, வெளிப்புறம் தெரியக் கூடிய, காதுகளுக்கும் கேட்கக் கூடிய பட படப்புடன் உள்ள இருதய வியாதிகள். இருதயத்துடன் நெருங்கிய உறவு என்ற தலைப்பின் கீழேயும் பார்க்கவும்.

முறை வைத்துத் தோன்றுதல் : சூரியனுடைய கதியை அனுசரித்தல் :—மேலே உள்ள தலைப்பின் அடியில் விவரிக்கப்பட்டுள்ள நரம்பு வலிகள் பல சமயங்களிலும் முறை வைத்துத் தோன்றும். அவை சூரியனுடன் தோன்றி மறையும்; வெய்யல் ஏற ஏற வலியும் கொஞ்ச கொஞ்சமாய் அதிகரிக்கும், வெய்யல் உச்சிக்கு வந்தவுடன் வலியும் மிகக் கடுமையாகும். பிறகு வெய்யலின் உக்கிரம் குறையக் குறைய அதற்குத் தக்கபடி வலியும் குறைந்து கொண்டே வந்து சூரியன் மறைந்தவுடன் மறைந்துவிடும்.

இருதயத்துடன் நெருங்கிய உறவு :—இருதயப் பட படப்பு மார்பை முன் புறமாய் வளைக்கும் போது அதிகமாகும். இருதயம் ஒழுங்கில்லாமல் வேலை செய்தல். பூனையைப் போல் இருதயம் பர் என்று சீறும். மனத் துயரத்துடன் பட பட்டப்பு. இருதயத்தின் உறுப்பு சம்பந்தப்பட்ட வியாதிகளில் துருத்தியில் காற்று நுழையும் போது ஏற்படுவதைப் போன்ற ஓசை உண்டாகும். இருதயம் கையினால் நசுக்கிப் பிழியப்படுவது போன்ற உணர்ச்சி.

சேர்ந்தும் எதிரொலியாகவும் கோளாறுகள் தோன்றுதல் :—அமுக்கப்படும் உணர்ச்சி தலைக்குப் பரவுதல்." திடீரென்று தோன்றும் வாத ரோகத்திலும் மற்ற திடீர் வியாதிகளிலும் இருதயம் பட படப்பாய் வேலை செய்தல்". இருதயக் கோளாறுகளில் மார்பின் இடது பக்

கம் முழுவதும் இருதயக் கோளாறுகளின் எதிரொலியே போல் வலியுடன் இருக்கும். இருதயத்தில் ஏற்படும் கூர்மையான வலி கீழே கைக்குப் பரவுதல். இருதயக் கோளாறுகளுடன் இடது கண்ணில் அல்லது இரு கண்களிலுமே புண்ணுள்ள உணர்ச்சி. சில சமயங்களில் இருதயக் கோளாறுகளுடன் தலை, கண்கள் ஆகிய இரு உறுப்புகளிலும் வலிகள் தோன்றும்.

இருதயத்தில் குத்தும் வலிகள் அல்லது தெரிக்கும் வலிகள்; சில சமயங்களில் நாடித் துடிப்புடன் சேர்ந்திருக்கும். மந்தமான வலிகளுடன் கூடிய மார்புக் கோளாறுகள் நாடித் துடிப்புடன் சேர்ந்திருத்தல் (இவ்விதக் குத்து வலிகள் இருதயத் துடிப்பு ஏற்படும் இடத்தில் காணப்படுவதுடன் நாடித் துடிப்புடன் சேர்ந்து உண்டாகும்).

இருதயத் துடிப்புகள் நாடித் துடிப்புடன் சேர்ந்திருப்பது கிடையாது.

நாற்ற குணம்:—மூச்சுக் காற்று நாற்றம் அடித்தல், அபான வாயு நாற்றம் வீசுதல். நாற்ற முள்ள சுவை. வாயிலிருந்து நாற்றம் வெளிப்படும்; ஆனால் அது மற்றவர்களுக்குத்தான் தெரியும். மூக்கின் உட்புறத்திலிருந்து நாற்ற முள்ள சளி ஏராளமாய்ச் சொட்டுச் சொட்டாக ஒழுகிக் கொண்டிருப்பதுடன் இரவில் மூச்சை அடைக்கும்.

உணர்ச்சி அதிகரித்தல்:—தொடுவதினாலும் மிக மெதுவான அசைவினாலும் உணர்ச்சிகள் அதிகரிக்கும். உடம்பைத் தொட்டால் அல்லது அதன் மீது ஏதாவது பட்டால் உடல் முழுவதும் வலியுள்ள உணர்ச்சியுடன்

தொடப்பட்ட பாகங்களில் சில்லிப்பு அல்லது உடல் முழுவதும் பாய்ந்து செல்லும் நடுக்கம் ஏற்படும். கண்களின் நரம்பு வலிகளில், விசேஷமாக அதிகப் புண்ணுள்ள வலியும் தொடுவதைப் பொறுக்க முடியாத தன்மையும் உள்ள போது ஸ்பைஜீலியா உபயோகப்படும். வெளிச்சத்தைச் சிறிதுகூடப் பார்க்க முடியாமல் கண் கூச்சம்.

மூச்சுத் திணறல்:—திரும்பிப் படுக்கும் போது ஒவ்வொரு தடவையும் கடுமையான மூச்சுத் திணறல்; சிறிதளவு அசைவினலும் கடுமையான மூச்சுத் திணறல். வலது பக்கமாய்த் தான் படுக்க முடியும்; அல்லது தலையை மிகவும் உயரமான இடத்தில் வைத்துத் தான் படுக்க முடியும். மூச்சு அடைத்துப் போகும் அபாயம், விசேஷமாகக் கையை மேலே தூக்கும் போது. கண் விழிகளில் பொறுக்க முடியாத, அமுக்குவது போன்ற வலி; விழிகளைக் கொஞ்சம் அசைக்கவும் முடியாமல் போகும் அல்லது வலி மிகக் கடுமையாக அதிகரித்துவிடும்; "உடல் முழுவதையும் திருப்பாமல் கண்களைத் திருப்ப முடியாது; நடக்கும் போது தவறுதலாக அடி எடுத்து வைப்பதால் ஏற்படும் அதிர்ச்சி வலியை மிகவும் அதிகமாக்கும்". உடலில் ஏற்படும் அல்பமான அசைவுகளும் உடலில் சில்லிப்பை உண்டாக்கும்.

பொய்த் தோற்றங்கள்: பொய் உணர்ச்சிகள்:—ஒளி வீசும் வெளிச்சம் முதலிய விநோதமான பொருள்களைக் காண்பதாகப் பொய்த் தோற்றம். கண்கள் மிகவும் பெரியதாகவும் அவை இருக்கும் குழிகள் மிகச் சிறியவையாகவும் இருப்பதாகத் தோன்றும். தலையைச் சுற்றிப் பட்டையினல் கட்டியிருக்கும் உணர்ச்சி. தொண்டையிலிருந்து புழு வாய்க்கு ஏறிக் கொண்டிருக்கும் உணர்ச்சி.

வெளியே அமுக்கித் தள்ளப்படுதல்: மேலே நகருதல்:— வலிகள் அனேகமாக வெளியே அமுக்கித் தள்ளப்படுவது போல் அல்லது கீழே அமுக்கி மேலே தள்ளப்படுவது போல் இருக்கும். கண்கள் அமுக்கப்பட்டு குழியிலிருந்து வெளியே வந்துவிடுமென்று தோன்றும்.

அறிப்பு: குடைச்சல்:—மலப்பை, ஆசனவாய் ஆகிய இடங்களில் அறிப்பும் ஏதோ ஒன்று குடைவது போன்ற உணர்ச்சியும். தொண்டையிலிருந்து புழு வரும் உணர்ச்சி; சாப்பிட்ட பிறகு சௌகரியமாகும்.

மற்ற குறிகள்

திக்கு வாய்; முதல் வார்த்தையின் முதல் எழுத்தைப் பல முறை திருப்பிச் சொல்லுதல்; அதன் பிறகு தாராளமாகப் பேசுவார்; புழுக் கோளாறுகளுடன் இக் கோளாறு சேர்ந்திருக்கலாம். சுரப்பிகளில் வலியுள்ள வீக்கங்கள். இருதயத்தின் வாத ரோகம்; இருதயத்தில் குத்து வலிகள், இருதய அசைவுகள் மார்பின் மேலே உள்ள துணியையும் தாண்டி வெளியில் தெரியும் அளவுக்குக் கடுமையான துடிப்புகள். ஒவ்வொரு நாளும் காலையில் காலை உணவு உட் கொள்வதற்கு முன் குமட்டல். உணவு உட்கொண்ட பிறகு குறைந்து விடும். ஓரைக் கண். தொப்பூழைச் சுற்றி வயிற்று வலி. கண்களை ஒரே இடத்தில் நிலையாய் நிறுத்திப் படிக்கவோ பார்க்கவோ முடியாது; அடிக்கடி மாற்றிக் கொண்டே இருத்தல்.

ஒப்பிடுதல்:—இடது கண்ணில் நரம்பு வலி (தெரிடியன்) புருவங்களில் நரம்பு வலி (மெஸெரியம், தூஜா). தொட்டால் உபாதிகள் அதிகமாகுதல் (காலி கார்ப்).

குறிப்புகள்:—மூக்கினுட் புறத்திலிருந்து இரவு நேரங்

களில் ஏராளமான சளி வெளியாகிக் கொண்டிருந்த ஒரு கேசை நான் கொரால்லியம் ருப்ரம் என்ற ஔஷதத்தினுல் குணம் செய்தேன். இதைப்போன்ற ஒரு குறி ஸ்பை ஜீலியாவிலும் இருக்கிறது; அது ஒரு முக்கிய குறி என்றும் சொல்லப் படுகிறது: ஆயினும் அது நம்பிக்கை வாய்ந்த தல்ல என்று நான் நினைக்கின்றேன்.

ஸ்பாஞ்சியா டோஸ்டா

(SPONGIA TOSTA)

முன்னுரை :—இருதயம், குரல்வளை, சுரப்பிகள் ஆகிய இவ்வுறுப்புகளுக்கும் ஸ்பாஞ்சியாவுக்கும் நெருங்கிய உறவு இருக்கிறது. ஆழ்ந்து வேலை செய்யும் ஔஷதங்களில் இதுவு மொன்று.

முக்கிய குறிகளின் விவரம்: சளிச் சவ்வுகள் காய்ந் திருத்தல். மார்பில் பச்சைப் புண் இருக்கும் உணர்ச்சி. தொண்டைக் கற கறப்பு, மூச்சுத் திணறல். ஓசையுள்ள சுவாசம். சுரப்பிகள் கல்போல் கடினமாகுதல். கவலை, பயம். தூக்கத்தினுல் அதிகரித்தல். (தூங்கும்போது மூச்சு அடைக் கும் உணர்ச்சி உண்டாகி விழித்துக் கொள்வார்)

பொதுவான குறிகள்

தகுதி :—சிறுவர்களுக்கும் பெண்களுக்கும் ஏற்படும் வியாதிகள்; கறுமை இல்லாத தலைமயிரும் தளர்ந்த தசைகளும் நல்ல நிறமும் உள்ளவர்கள்; க்ஷயரோகம் உண்டாகக்கூடிய அறிகுறிகள்: ஆகியவர்களுக்கு ஏற்றது.

மனம் :—கவலையுடன் பயப்படும் குணம்; கோழைத் தனம்.

உடல் :—கண்கள் குழி விழுந்திருக்கும் அல்லது வெளியே பிதுங்கி முறைத்துப் பார்ப்பதுபோல் இருக்கும்

தசைகள் தளர்ந்து கொளகொள வென்றிருத்தல். பலவீனம். திறந்த இடங்களில் நடக்கும்போது உடம்பு கனமாய்த் தோன்றி கீழே உட்கார வேண்டிவரும். உடுத்தியுள்ள உடைகள் உபத்திரவமாகவும் அழுக்குவது போலவும் தோன்றும்; அடிக்கடி மனத்துயரத்துடன் இருதயப் பாகத்தில் வலி.

உபாதி கூடுதல் :—சூடுள்ள அறையில் வியாதியஸ்தருக்கு அசௌகரியமாய்த் தோன்றும்; சூட்டைப் பொறுக்க முடியாது.

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே):—தித்திப்புப் பொருள்கள், குளிர்ந்த பானங்கள். படித்தல், பாடுதல், பேசுதல், விழுங்குதல், தலையைத் தாழ்வாக வைத்துக்கொண்டு படுத்தல் ஆகிய காரணங்களால் இருமல் அதிகமாகும். மன உணர்ச்சிகளில் அதிகரிப்பு, மனதில் பரபரப்பு ஆகியவைகளாலும் இருமல் கூடுதலாகும். தொண்டை இழுப்பு நோயில் கவலையுடன் உறத்த ஓசையுடன் சுவாசித்தல்; காற்றை உள்ளே இழுக்கும்போது இழுப்பு ஓசை பலமாய் இருக்கும். தித்திப்பான பொருள்களைத் தின்ற பிறகு தொண்டை வலி அதிகரிக்கும். வறண்ட குளிர் காற்றினால் இருமல் அதிகமாகுதல் (ஈரக்கசிவுள்ள பருவக் காலங்களில் இருமல் அவ்வளவு அதிகரிக்காது). தொண்டை இழுப்பு நோயில் நள்ளிரவுக்கு முன் இருமல் அதிகமாகும். பௌர்ணமி நாட்களில் (கண்டமாலை முதலிய கோளாறுகள்) அதிகரித்தல். தன்னுடைய வியாதிக் குறிகளைப் பற்றி நினைக்கும்போது அவை கூடுதலாகும்.

உபாதி கூடுதல் :—அமைதியாய்ப் படுத்திருந்தால் உபாதிகள் குறைந்து சௌகரியமாகத் தோன்றும்.

உபாதி குறைதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே):—சூடான உணவு அல்லது பானங்களால் இரு

மல் குறையும். மூன் பக்கமாய் உடம்பை வளைத்துக் கொண்டால் மூச்சுத் திணறல் குறைவாகும்.

விசேஷக் குறிகளின் விளக்கம்

வறட்சி :—சுவாசப் பாதைகளில் உள்ள சளிச் சவ்வுகளில் தொண்டையிலிருந்து காற்றுக் குழாய்களின் கீழ்ப் பெருங் கிளைகள்வரை (தொண்டை, குரல்வளை, மேல் காற்றுக் குழாய், கீழ்ப் பெருங் கிளைகள்) அதிக வறட்சி, குரல்வளை மிகவும் காய்ந்து வறண்ட, அதிக ஓசையும் கறகறப்பும் உள்ள இருமல். வறட்சியுள்ள நீர்க் கோர்வை; மூக்கு அடைபட்டிருக்கும். மூக்கில் வறட்சியுடன் நாட்பட்ட நீர்க்கோர்வை. குரல்வளையில் அதிக வறட்சி, தொண்டையைக் காறினால் அதிகமாகும். வறட்சியான காசநோய்.

இருமல் எல்லா வகைகளிலும் வாண்டிருக்கும். வறண்ட, குளிர் உள்ள பருவங்களில் குரல்வளையும் மேல் காற்றுக் குழாயும் காய்ந்து போய் அதனால் இருமல் தோன்றும். இருமலின் ஓசையும் வறண்டதாகவே இருக்கும். வைரம் பாய்ந்த மரப் பலகையை வாளால் அறுப்பது போன்ற ஓசையுள்ள இருமல். இருமும்போது சளி உள்ள ஓசை இருப்பதில்லை. எல்லா விஷயங்களும் வறட்சியுடனும் பிடிப்புடனும் இருக்கும். ஸ்பாஞ்சியா இருமல் நாய் குரைப்பது போலவும், காக்கை கறைவது போலவும், பாம்பு சீறுவது போலவும், கறகறவென்ற ஓசையுடனும் ஊதல் கருவியினால் ஊதுவது போலவும் பலவிதமாய் இருக்கலாம். ஆனால் கோழையுள்ள ஓசை மட்டும் இருக்காது. மிகுந்த வேதனையைத் தரும் இருமலுள்ள தொண்டை இழுப்பு நோய்க்கு (நல்ல உடல் நிறமுள்ள குழந்தைகளுக்கு ஏற்படும்) ஸ்பாஞ்சியா மிகச் சிறந்தது.

தொண்டைக் கறகறப்பு : பச்சைப் புண் உள்ள உணர்ச்சி: எரிச்சல் :--குரல்வளையில் வலியுடனும், எரிச்சலுடனும் தொண்டையில் அதிகக் கறகறப்பு, கறகறவென்ற குரல்; குரல் உடைந்தோ அல்லது மெல்லியதாகவோ கேட்கும்; மூச்சு அடைக்கும் உணர்ச்சியும் இருக்கலாம்; பாடும்போது அல்லது பேசும்போது குரல் இடக்குச் செய்யும்; பேசினால் குரல்வளையில் வலி ஏற்படும்; குரல் வளையைத் தொட்டாலும் கழுத்தைத் திருப்பினாலும் குரல்வளையில் வலி உண்டாகும். குரல்வளையைப் பற்றிய கூய ரோகத்தில் இக்குறிகள் காணப்படுகின்றன.

மார்பில் பச்சைப் புண் உள்ள உணர்ச்சி. இருமிய பிறகு தொண்டையில் எரிச்சல் உணர்ச்சி உண்டாகும்.

மூச்சு அடைத்தல் :--இது ஸ்பாஞ்சியாவின் மிக விசேஷமான குறிகளில் ஒன்று. வியாதியஸ்தர் தூக்கத்தின் நடுவில் விழித்துக் கொள்வார். மூச்சு அடைத்துப்போய் விடும்போல் தோன்றும். கண்டமாலை என்று சொல்லப்படும் வியாதியில் இக்குறி காணப்படும். இரவில் அடிக்கடி மூச்சு அடைக்கும் உணர்ச்சி உண்டாகுதல்; பீதியுடன் வியாதியஸ்தர் விழித்துக் கொள்வார்; முகத்தில் கவலைத் தோற்றத்துடனும் சிவ சிவப்புடனும் படுக்கையில் எழுந்து உட்கார்ந்து கொள்வார். குரல்வளையில் மூளைபோன்ற பொருள் அடைத்துக் கொண்டிருக்கும் உணர்ச்சி. தூங்க ஆரம்பித்தவுடன் மூச்சு அடைத்தல். தலையைத் தாழவைத்து மல்லார்ந்து படுக்க முடியாது; அவ்வாறு படுத்தால் உடனே தவறாமல் மூச்சுத் திணறல் உண்டாகும்.

சுரப்பிகளைப் பற்றிய கோளாறுகள் :--தைராய்டு சுரப்பி

வீங்கி முகவாய்க் கட்டையோடு சேர்ந்து காணப்படும்; இரவில் அடிக்கடி மூச்சு அடைத்தல். கண்டமாலை. எல்லாச் சுரப்பிகளும் தாக்கப்படுவதும் உண்டு. அவை கொஞ்சங் கொஞ்சமாய்ப் பருத்து வருவதுடன் அதே போலக் கொஞ்சங் கொஞ்சமாய்க் கடினமாகியும் வரும். இருதயத்தில் கொழுப்புச் சதைப்பிடிப்பு. சுரப்பிகளில் வீக்கத்துடன் இருதயமும் பாதிக்கப் பட்டால் அதற்கு ஸ்பாஞ்சியா பல சமயங்களிலும் உபயோகமாகும். விழிகள் வெளியே பிதுங்கி வந்திருப்பதை இவ் வௌஷதம் குணம் செய்கிறது. சினைப்பைகள் கடினமாவதும் பருத்தலும்.

தூக்கம், கெடுதி செய்தல்:—லாச்சஸிஸைப் போல ஸ்பாஞ்சியாவிலும் வியாதியஸ்தருக்குத் தூக்கம் கெடுதி செய்யும். வியாதியஸ்தர் தூங்க ஆரம்பித்தவுடனே வியாதி தோன்றும் அல்லது தூங்கியெழுந்த பிறகு அதிகமாகும். தூங்கும்போது மூச்சுத்திணறும் அல்லது மூச்சு அடைக்கும் உணர்ச்சி உண்டாகி வியாதியஸ்தரை விழிக்கச் செய்துவிடும்.

வியாதி உள்ளே அமுக்கப் படுதல்:—சரியான படி சிகிச்சை செய்யப்படாத விரை வேக்காடு அல்லது மேக வெட்டை உள்ளே அமுக்கப்பட்டு விரைகளில் வேக்காடும் வீக்கமும் உண்டாகுதல்.

காயம்பட்ட உணர்ச்சி: நசுக்கும் உணர்ச்சி:—விரைகளில் வீக்கம் ஏற்பட்டபோது அவைகளில் காயம்பட்ட உணர்ச்சியோ அல்லது நசுக்கும் உணர்ச்சியோ காணப்பட்டால் ஸ்பாஞ்சியா உபயோகப்படும் என்பதற்கு அடையாளமாகும். இந்திரிய நரம்புகளில் வீக்கத்துடன் நசுக்கப்படும் உணர்ச்சி.

மற்ற குறிகள்

இருதயத்தின் உறுப்பு சம்பந்தமுள்ள வியாதிகள். இருதயத் தசை மூடிகள் ஒழுங்காய் வேலை செய்யாமை; துருத்தியால் காற்று அடிக்கும்போது ஏற்படும் ஓசையைப் போன்ற முணுமுணுப்பு. இருதயம் துடிக்கும் போது ஒவ்வொரு துடிப்புடனும் பலமான ஓசை. மார் வலியில் இருதயத்தில் சுருங்கும் உணர்ச்சியுடன் வலி; உடம்பில் சூடான உணர்ச்சி. மூச்சுத்திணறல், மயக்கம் வருவது போல் இருத்தல், கவலை; வியர்வை பொழிதல்; மார்பில் கனத்த உணர்ச்சி; நள்ளிரவுக்குப் பிறகு அதிகரித்தல். அடிக்கடி தொண்டையைக் கனைத்துக் கொள்வார். "சிறிது வேலை செய்தாலும் மார்பு, முகம் ஆகிய இடங்களில் அதிக இரத்தம் சேர்ந்து கனப்பும் உடம்பு கனமாய் இருக்கும் உணர்ச்சியும் உண்டாகும். சருமக் கோளாறுகள் எதுவும் தென்படாமல் அறிப்பு.

உறவு:—அகோனைட், ஹிப்பார் ஸல்பர் ஆகியவைகளுக்குப் பிறகு (வறண்ட ஓசையுள்ள இருமலிலும் தொண்டை இருப்பிலும்) ஸ்பாஞ்சியா நன்றாக வேலை செய்யும். இக் கோளாறுகளில் சளி இருப்பது போன்ற ஓசை இருந்தால் ஹிப்பார் ஸல்பர் உபயோகிக்கப்பட வேண்டும். ப்ரோமியம், கார்போ வெஜ், ஹிப்பார் ஆகியவை ஸ்பாஞ்சியாவுக்குப் பின் நன்றாக வேலை செய்யும்.

ஒப்பிடுதல்:—உணவு உட் கொண்ட பிறகு இருமல் சௌகரியமாகுதல் (அனகார்டியம்). இருதயத்தில் கொழுப்புச் சதைப் பிடிப்பு (கால்மியா, நாஜா, ஸேபியா). சருமக் கோளாறுகள் எதுவும் தென்படாமல் அறிப்பு (டோலிகோஸ்).

ஸ்டான்னம் மெட்டாலிகம்

(STANNUM METALLICUM)

முன்னுரை :—நரம்புகள், சுவாச உறுப்புகள், சளிச் சவ்வுகள் ஆகிய இடங்களிலேயே ஸ்டான்னம் அதிக வேலை செய்கிறது. இவைகளுக்கு அடுத்தபடியாகப் பெண்களின் பிறப்பு உறுப்புகளுக்கும் ஸ்டான்னத்துக்கும் நெருங்கிய உறவு இருக்கிறது. மனித உடலில் ஸ்டான்னம் ஏற்படுத்தும் பலவகைப்பட்ட கோளாறுகளையும் அறியும் வாய்ப்புக் கிடைத்த ஒரு ஹோமியோபதி வைத்தியருக்கு க்ஷய ரோகத்தை அடிப்படையாய் வைத்து சுவாச கோசங்களைத் தாக்கிப் பிறகு அளவு கடந்த பலவீனத்தை ஏற்படுத்தும் குறியே மற்றவைகளை விட மிகப் பெரியதாகத் தோன்றும். ஒரே ஒரு வேலை ஔஷதம் (நான் எப்பொழுதும் 200 வீரியத்திலேயே உபயோகிக்கிறேன்) இப்பலவீனத்தைப் பெருமளவு குறைத்து முழு குணம் ஏற்படக் குறிகள் இல்லாத சமயங்களிலும் வியாதியஸ்தருக்கு இன்னும் சிறிது காலம் உயிரோடிருக்க உதவுகிறது.

பாப்டீஷியா, டிரோஸிரா, நைட்ரிக் ஆஸிட் ஆகிய ஔஷதங்களிலும் மற்றும் சில ஔஷதங்களிலும் இருப்பதைப் போல சுவாச கோச க்ஷயத்தில் வியாதி என்ன நிலைமையில் இருந்தாலும் ஸ்டான்னம் வியாதியைக் கடுமையான வகையில் அதிகரிப்பது கிடையாது.

முக்கியமான குறிகள் தெள்ளத் தெளிவாய் உள்ள ஔஷதங்களில் ஸ்டான்னம் ஒன்று.

பொதுவான குறிகள்

தகுதி :—மனதிலும் உடலிலும் மிகவும் களைத்துப் போய் இருப்பவர்கள் ; வருஷக் கணக்கில் நீடித்துக் கொஞ்சங் கொஞ்சமாக பலவீனம் அதிகரித்து வரும் கோளாறை உடையவர்கள் ; உடல் வேலை, மன வேலை

ஆகிய இரண்டும் களைப்பைத் தருவதோடு மட்டும் இல்லாமல் மனதுக்கு வேதனையையும் அளிக்கும் குறி உள்ளவர்கள். உடல் வெளுப்பு, இரத்த சோகை, பல வீனம், உடல்மெலிவு ஆகிய குறிகள் நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டே இருக்கும் நிலைமை.

மனம் :—சுவாசகோச க்ஷயமுள்ளவர்களிடம் பொது வாகக் காணப்படும் "தான் பிழைத்து விடுவோமென்ற நம்பிக்கை" பாப்டிஷியாவைப் போலவே ஸ்டான்னத் திலும் இல்லை. மற்ற குறிகள் அனுசரிக்கும்போது இவ்விரு ஔஷதங்களாலும் பலன் ஏற்படாது என்ற சமயங்களிலும் வியாதி சுவாசகோச க்ஷயமாக இருந்து வியாதியஸ்தருக்கு மனத் தளர்ச்சி காணப்பட்டால் இவ்விரண்டும் நல்ல குணத்தை அளிக்கக் கூடியவை.

"வருத்தமாகவும் மனத் தளர்ச்சியடைந்தும் எப்பொழு தும் அழுதுகொண்டே இருந்தால் தேவலை என்று நினைக்கும் குணமும்; ஆனல் அழுதால் உபாதிகள் அதிகமாகும்." வெளியில் காட்டிக் கொள்ளாத கோபகுணம்; விருப் பம் இல்லாமலும் வெடுக்கு வெடுக் கென்றும் பதில் சொல்வார்; பிறருடன் சம்பாஷிக்கவும் கூட்டங்களில் கலந்து கொள்ளவும் வெறுப்பு; நம்பிக்கை இல்லாமை. மாதவிடாய்ப் போக்கு வெளியாக ஆரம்பித்தவுடன் அவ ளுடைய மனவேதனை நின்றுவிடும்.

உடல் :—மூச்சுக்காற்று அழுகிய நாற்றம் வீசும். சீரணச் சக்தி மிகவும் குறைவாய் இருத்தல். மெலிந்த உட லுள்ள பெண்களுக்குக் கணுக்கால்களில் வீக்கம். அளவுகடந்த உடல் மெலிவு. மாடியிலிருந்து கீழே இறங்கிவரும் போது மயக்கம் ஏற்படுதல். இரவில் மிகுந்த உடல் பலவீனத்தை உண்டாக்கும் வியர்வை.

உள்ளங் கைகளிலும் உள்ளங்கால்களிலும் எரிச்சல். இடைவிடாமல் சிறிது நேரம் குரலை உபயோகித்தால் (பேசுவது, பாடுவது) வியாதியஸ்தருக்குப் புதிய சக்தி ஏற்படுவதுபோல் தோன்றும். பசி அதிகமாகுதல்; ஆனால் அதைத் திருப்தி செய்ய முடியாது. அதிகக் கனமான உணர்ச்சியும் மந்த குணமும்.

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):— வலது பக்கமாய்ப் படுத்தால் இருமல் அதிகமாகும். மாடிப்படி ஏறினாலும் சிறிய அசைவினாலும் கூட மூச்சுத் திணறும். ஆனால் மாடிப்படி வழியாகக் கீழே இறங்கும் போது மயக்கம் ஏற்படுதல் என்பதே ஸ்டான்னத்தின் மிக விசேஷமான குறியாகும்.

சிற்சில குறிகள் மெதுவான அசைவினாலும் கூடுதலாகும். (ஆனால் வேகமான அசைவினாலும் சில சமயங்களில் சௌகரியம் ஏற்படும்). சூடான பானங்களைக் குடித்தால் உபாதிகள் அதிகரித்தல். சூடான பானங்களால் இருமல் உண்டாகும்.

குரலை உபயோகித்தால் உபாதிகள் கூடுதலாகும். அவை பலவீனத்தை உண்டாக்கும்.

உபாதி குறைதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):— இவை விசேஷக் குறிகளின் விளக்கம் என்ற பகுதியிலே எழுதப்பட்டுள்ளன.

விசேஷக் குறிகளின் விளக்கம்

பலவீனம்: காலி உணர்ச்சி: நடுக்கம்:—உடல், மனம் இரண்டிலும் அளவு மீறிய களைப்பு. மார்பினுள்ளே ஒன்றுமே இல்லாமல் காலியான உணர்ச்சியுடன் அதிகப் பலவீனம். இருமும் போதும் கோழையைத் துப்பிய பிறகும் மார்பினுள்ளே ஒன்றுமே இல்லாத காலி உணர்ச்சி

உண்டாகி வியாதியஸ்தரால் பேசவே முடியாமல் போகும் அல்லது மிகவும் மெல்லிய குரலில் பேசுவார். உடம்பு முழுவதும் பொதுவான பலவீனம் இருக்கும்; ஆனால் மார்புப் பகுதியில் தான் பலவீனம் அதிகமாய் இருக்கும். பலவீனம் மிக அதிகமாய் இருப்பதினால் இளைப்பாறுவதற்காக உட்கார முயற்சிக்கும் போது அவ்வாறு உட்கார முடியாமல் நாற்காலியில் பொத்தென்று விழுந்துவிடுவார். பாடும்போதும் குரலை உபயோகிக்கும் மற்ற காரியங்களாலும் பலவீனமும் தோள்பட்டை, புஜம் ஆகிய இடங்களில் இசிவு வலியும் உண்டாகும். இது நம் மெட்டீரியா மெடிகாவிலுள்ள மிகத் தெளிவான குறிகளில் ஒன்று; அது அதிகமாகும் காரணமும் விநோதமாய் இருக்கிறது; அதாவது பாடும் போதும் குரலை உபயோகிக்கும் போதும் தான் ஏற்படுகிறது. குரலை உபயோகித்தால் குறிப்பிடத்தக்க அளவுக்குக் களைப்பைத் தரும். மெதுவான அசைவினால் உபாதிகள் கூடுதலாவது மற்றொரு தெளிவான குறி. உடல் நடுக்கத்துடன் குறிப்பிடத் தக்கதான பலவீனம் மெதுவாக நடக்கும் போது தான் மிக அதிகமாய் இருக்கும். மற்றொரு விநோதமான குறியும் இருக்கிறது. ஸ்டான்னம் வியாதியஸ்தரின் பலவீனம் மாடிப் படியில் ஏறும் போது இருப்பதை விட இறங்கும் போது அதிகமாய் இருக்கும். காலியான உணர்ச்சி மார்பில் மட்டும் ஏற்படாமல் வயிற்றிலும் காணப்படும். கை கால்களில் நடுக்கம். கடைசியாக நரம்புச் சோர்வு.

மெதுவாய் வளரும் குணம்:—வலிகள் ஆரம்பத்தில் அல்புமாக இருக்கும்; மெதுவாக அதிகமாகும்; கொஞ்சம் கொஞ்சமாய் அதிகரித்து முடிவில் மிகக் கடுமையாகிப் பிறகு மெதுவாகவும் படிப்படியாகவும் குறையும்.

உடல் மெலிவு அளவு கடந்து இருக்கு மென்றாலும் அது கொஞ்சம் கொஞ்சமாய்ப் பல வருஷங்களில் ஏற்பட்ட தாய் இருக்கும். வியாதியஸ்தரின் "உடல் வெளுப்பு படிப் படியாக அதிகரிக்கும்." படிப் படியாக அதிக மாகி உச்ச நிலையை அடைந்து அதன் பிறகு படிப் படி யாகத் தணியும் குண முள்ள காச நோய்; மார்பில் கள கள வென்றும் கற கற வென்றும் ஓசை.

மஞ்சள் நிறம்:—கோழை மஞ்சளாய் இருக்கும். வெள்ளை ஒழுக்குக் கழிவும் அப்படியே இருக்கும். அதிக பலவீனத்துடன் மஞ்சளான சளிப் பொருள் வெளி யாகும் வெள்ளை ஒழுக்கு. நாக்கும் மஞ்சளாய் இருக் கும். நாக்கின் மேல் மஞ்சளான சளிப் பொருள் படிந் திருக்கலாம். கோழை பச்சை நிறமாய் இருக்கலாம்.

ஏராளமாய் இருத்தல்: அழுகிய நாற்றம் வீசுதல்: உப் புக் கரித்தல்:—கோழை ஏராளமாகவும் (காலையில் ஏராள மாய் இருக்காது) மஞ்சள் அல்லது பச்சை நிறமாக வும் தித்திப்பாகவும் அல்லது உப்புக் கரிப்புடனும் அழு கிய நாற்றத்துடனும் இருக்கும். கோழை ஒட்டும் குண முள்ளதாகவும் உருண்டைகளாகவும் இருக்குமென்று இங்கே குறிக்கலாம்; ஆனால் அது ஏராளமாகவும் மூட் டையின் வெள்ளைப் பொருளைப் போலவும் இருக்கலாம். கோழை புளிப்புச் சுவையாகவோ அல்லது மனதுக்குப் பிடிக்காத இலேத்த சுவையாகவோ இருப்பதும் உண்டு. ஸ்டான்னத்தில் காணப்படும் மஞ்சள் அல்லது பச்சை நிற முள்ள கோழை பல சமயங்களில் சீழைப் போல் இருக்கு மென்பதையும் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். "ஏராளமான, கெட்டியான, மஞ்சள் கலந்த பச்சை நிற முள்ள, இரத்தம் கலந்த, தித்திப்புச்

சுவையுள்ள கோழையும்" ஸ்டான்னத்தில் காணப்படும். ஏராளமான, நிறம் குன்றிய மூத்திரம் (குடல்களில் பூச்சிகள் உற்பத்தியாகி உண்டாகும் கோளாறுகளில்).

வியர்வை ஏராளமாகவும் பலவீனத்தை ஏற்படுத்துவதுமாகவும் இருக்கும்;

தொண்டைக் கற கறப்பு:—குரல் கம்மி கற கறப்பாகும்; சளிப் பொருளைக் காறித் துப்பிய பிறகு குரலை (பாடுவதற்காக) உயர்த்த முடியும்; இருமினால் அல்லது சளிப் பொருளைக் காறித் துப்பினால் தொண்டைக் கம்மல் சிறிது நேரம் குறைவாய் இருக்கும்.

புண்ணுள்ள வலி:—ஸ்டான்னத்தின் கவனிக்கப்படாத குறி இது. தொண்டையினுள்ளே சுரண்டி விட்டது போலவும் கறடு முறடாயிருப்பது போலவும் உணர்ச்சி. தாகம் இல்லாமல் தொண்டை காய்ந்து பச்சைப் புண்ணாய் இருக்கும். இத்தகைய உணர்ச்சி தொண்டையில் நிரந்தரமாகவே இருப்பதும் உண்டு; விழுங்கும் போது அவ்விடங்களில் தோலை உறித்து விட்டது போல் தோன்றுதல். இருமும் போதும் பிறகும் மார்பினுள்ளே (தோல் உறிந்து விட்டது போல்) புண்ணுள்ள வலி. மேல் காற்றுக் குழாயில் புண் இருப்பது போல் குடையும் உணர்ச்சி. நடக்கும் போது அல்லது உட்காரும் போது ஆசனவாயில் புண் உள்ள உணர்ச்சியும் எரிச்சலும் (புழு, பூச்சிக் கோளாறுகளால்).

தரம் குறைதல்:—தாய்ப் பாலின் தரம் குறையும்; குழந்தை தாய்ப் பால் குடிக்க மறுக்கும்.

புழு, பூச்சிக் குறிகள்:—உணவு உட் கொண்ட பிறகு குமட்டல்; பசி இருக்கும்; ஆனால் மாலை நேரம் தவிர

மற்ற சமயங்களில் போதிய அளவு உட் கொள்ள முடியாது; சாப்பிட்ட பிறகும் வயிறு காலியாய் இருக்கும் உணர்ச்சி; முகம் வெளுத்து ஒட்டிப் போய் கண்களைச் சுற்றிலும் கறுப்பு வளையங்களுடன் இருக்கும்; இறுக அமுக்கினால் சௌகரியமாய் இருக்கும்; புழு பூச்சிகளுடன் குடல்களிலிருந்து சளிப் பொருள் வெளிப்படுதல்; அடிவயிற்றில் புழு பூச்சிகளால் வயிற்று வலி அடிக்கடி தோன்றும்; அச்சமயத்தில் குழந்தை தன் அடி வயிற்றை ஏதாவது ஒன்றின் மீது வைத்து அழுத்திக் கொள்ள விரும்பும்; அவ்வாறு செய்தால் சௌகரியம் தோன்றும்; குழந்தை தூக்கத்தில் முனகும்; வயிற்றைக் கீழே வைத்துப் படுத்தால் சௌகரியம் தோன்றும்; வலிப்புகளும் உண்டாகலாம்.

வயிற்று வலி : நரம்பு வலி :—புழு பூச்சிகளால் ஏற்படும் வயிற்று வலி மேலே விவரிக்கப்பட்டிருக்கிறது. தலை வலி, பல் வலி, முக வலி, மார்பு வலிகள், அடி வயிற்று வலிகள் அல்லது நரம்பு வலிகள் ஆகிய எல்லா வலிகளும் ஏற்கனவே குறித்தபடி கொஞ்சங் கொஞ்சமாய் அதிகமாகி அதே போல் கொஞ்சங் கொஞ்சமாகக் குறையும். மூளைச் சுரத்தில் கொயினுவை அளவு மீறி உபயோகித்ததினால் அதாவது அவ்வகையான சுரங்கள் கொயினுவினால் உள்ளே அமுக்கப்பட்டதால் உண்டாகும் முக வலிக்கு ஸ்டான்னம் உபயோகமாகிறது என்று லிலியந்தால் எழுதியுள்ளார்.

ஸ்டான்னத்தின் வயிற்று வலி இறுக அமுக்குவதினால் எல்லாச் சமயங்களிலும் சௌகரியமாகும் ஸ்டான்னம் தேவைப்படும் குழந்தையை அதன் தாயோ அல்லது வேறு யாரோ அக் குழந்தையின் அடிவயிறு தோள்

பட்டையில் அழுத்திப்படும்படியாகவே எப்பொழுதும் தூக்கி வைத்துக் கொண்டிருப்பதை நாம் பார்க்கலாம்; அவ்வாறு செய்யாவிட்டால் குழந்தை கதறும். (இப் படித் தூக்கும் போது அடிவயிறு இறுக அமுக்கப்படுவ தால் வயிற்று வலி குறைகிறது.

இழுப்புகள்: வலிப்புகள்:—இவை இரண்டும் ஸ்டான் னத்தின் குறிப்பிடத் தக்க குறிகளே. வலிப்புகளில் கைக்கட்டை விரல்கள் உட்புறமாக மடக்கப்பட்டிருக் கும்.

உணர்ச்சி அதிகரித்தல்: மிகச் சீக்கிரத்தில் புணர்ச்சி இன்பம் வந்துவிடுதல்:—வாசனையோ நாற்றமோ ஒத்துக் கொள்ளாது; உடனே குமட்டலும் வாந்தியும் உண்டா கும்; விசேஷமாகக் காலையில், உணவு சமைக்கும் வாசனை மூக்கில் பட்டவுடன். சிற்றின்ப வேட்கை மிகக் கடுமையாய் இருப்பதால் "கையைச் சொறிந்தால் கூடப் பிறப்பு உறுப்புகளில் கருப்பை வரை பரவும் ஒரு விதத் தாங்க முடியாத இன்ப உணர்ச்சி உண்டாகிப் புணர்ச்சி இன்பம் ஏற்படும்." ஸ்டான்னத்தில் புணர்ச்சி யில் ஆசை அதிகரிப்பதுடன் புணர்ச்சி இன்பம் மிகச் சீக்கிரத்தில் ஏற்படும்.

தளர்ச்சி:—கடினமான மலம் வெளியாகும் போது யோனி கீழே நழுவும் அல்லது அச்சமயத்தில் நழுவுதல் அதிகமாகும். கருப்பை, யோனி ஆகிய இரு உறுப்பு களும் நழுவுதல்; கருப்பைப் பாகத்தில் கீழே இழுக்கும் உணர்ச்சி உண்டாகும். இவ்விதம் நழுவிய உறுப்பு முறுக்கிக் கொண்டு சாக்காடு ஏற்படக் கூடும்.

கடுமைக் குணம்:—ஸ்டான்னம் வலிகள் சிற்சில சம யங்களில் மிகக் கடுமையாகி மூளையில் அடிபட்டது

போல் இருக்கும்; வியாதியஸ்தர் மயக்கமாய் விடுவதும் உண்டு. பிரசவ வலிகள் விட்டு விட்டு ஏற்படுதல், கலைப்பை உண்டாக்கும்; அவளால் சரியாக மூச்சு விட முடியாது. கடுமையான வயிற்றுப் போக்கு. கடுமையான வயிற்றுக் கடுப்பு; மலம் இரத்தமாகவும் சளியுடனும் வெளிப்படும்; தாங்க முடியாத கடுப்பு. இந்திரியம் வெளியாகும் போது கடுபையான ஆசை. படுத்திருக்கும் போது கடுமையான, வறண்ட இருமல் காலையில் மிகக் கடுமையாய் இருக்கும்.

மற்ற குறிகள்

பாரிச வாதப் பலவீனம்; கையில் வைத்திருக்கும் பொருள்களைக் கீழே நழுவவிடுவார். மூத்திரம் கழிக்க வேண்டு மென்ற உணர்ச்சி இல்லாமை. மானியைச் சேஷ்டை செய்யும் குழந்தைகளுக்கும் குடலில் புழு பூச்சிகள் உள்ள குழந்தைகளுக்கும் தோன்றும் வலிப்புகள். புளிப்பான உமிழ் நீர்ப் பெருக் கெடுத்தல். வறண்ட, உடலைக் குலுக்கிவிடும் இருமல் விட்டு விட்டு வருதல்; ஒவ்வொரு தடவையும் மூன்று தடவை இருமும்.

ஒப்பிடுதல் :—வலிகள் படிப்படியாக அதிகமாவதும் குறைவதும் (பிளாட்டினு) ஸ்டான்னத்தில் பலவீனம் மார்பிலிருந்து ஆரம்பிக்கும். பாஸ்பரஸ், ஸேபியா ஆகியவைகளில் பலவீனம் அடிவயிற்றிலிருந்து ஆரம்பிக்கும். உணவு சமைக்கும் வாசனை மூக்கில் பட்டவுடன் குமட்டல் (ஆர்ஸனிகம், கோல்சிகம்). பேசினால் கலைப்பு உண்டாகுதல் (காக்குலஸ், ஸல்பர், கல். கார்ப்). இறுக அமுக்கினால் சௌகரியம் ஏற்படுதல் (காலோஸிந்திஸ், ப்ளம்பம்). ஆசனவாயிலிருந்து புழு பூச்சிகள் வெளியாகுதல் (ஸல்பர், கல். கார்ப்).

புணர்ச்சி இன்பம் மிகச் சுலபமாய் ஏற்படுதல் (நக்ஸ் வாமிகா. பாஸ்பரஸ், ஸல்பர்). அடிவயிற்றைக் கீழே வைத்துப் படுத்தல் (பெல்லடொன்ன, ஸீனு, காலோஸிந்திஸ், போடோபில்லம், ஸ்ட்ரமோனியம்). மார்பில் காலியான உணர்ச்சி (காக்குலஸ், பாஸ்பரஸ்). உடலும் மனமும் அளவு மீறிச் சோர்ந்திருத்தல் (காலி பாஸ்). பசியாய் இருக்கும்; ஆனால் சாப்பிட முடியாது (லீகபோடியம்). தணிக்க முடியாத பசி (ஆர்ஸனிகம், செலிடோனியம், ஐயோடியம், ட்யுபர்குலினம்)

குறிப்பு:—ஸ்டான்னத்தின் குறிகள் பலவும் சுவாச கோச க்ஷயத்தில் காணப்படும் குறிகளை ஒத்திருப்பது மிகவும் ஆச்சரியமான விஷயம். பலவீனம், காலி உணர்ச்சி, கோழை, தொண்டைக் கறகறப்பு, புண்ணுள்ள உணர்ச்சி, நரம்புவலி, உணர்ச்சி அதிகரித்தல், புழுபூச்சிக் குறிகள் ஆகிய இக்குறிகள் யாவும் ஸ்டான்னத்தைக் குறிக்கின்றன. சிறிது விளக்கம் தேவையென்று நினைக்கிறேன். கடுமையான நரம்புவலி சில சமயங்களில் மறைந்தவுடன் அல்லது உள்ளே அமுக்கப் பட்டவுடன் அதிக பலவீனத்துடன் ஏராளமான, கெட்டியான, மஞ்சள், பச்சை நிறமுள்ள வெள்ளை ஒழுக்குத் தோன்று மென்று ஸ்டான்னத்தைப் பற்றி கெண்ட் எழுதியிருப்பதிலிருந்து தெரிகிறது. அவர் மேலும் எழுதுவதாவது.''இந்த வெள்ளை ஒழுக்கு சுவாச கோச க்ஷயத்திலிருந்து அவளைக் காப்பாற்றியது''. ஆகவே அந்தக் கடுமையான நரம்பு வலி சுவாசகோச க்ஷயத்தின் அடையாளமே தவிரவேறு இல்லை. சுவாசகோச க்ஷயமுள்ள கேசுகளில் ஸ்டான்னத்தைக் கொண்டு சிகிச்சை செய்யப்படும் போது சில சமயங்களில் (மிக அபூர்வம்) உடலைக் குடைந்து முன்பு ஒரு காலத்தில் இருந்த நரம்பு வலியைத் திரும்பிக் கொண்டுவரும். ஆனால் வியாதி குணமாக இடம் இல்லை, வியாதியஸ்தர் நாள் கணக்கில்தான் உயிருடன்

இருப்பார் என்று தோன்றும் சமயங்களில் திரும்பிவந்த வலியைத் தானே நின்று போகட்டுமென்று விட்டு விடக் கூடாது ; ஏனென்றால் அவ்விதக் கேசுகளில் நரம்பு வலி தானுகவே நிற்பது கிடையாது ; வியாதியஸ்தருக்கும் பூரண குணம் ஏற்படாது. இச்சமயத்தில் ஸ்டான்னத்தை முறிக்க அதன் முறிவு ஔஷதங்களில் ஒன்றுகிய பல்ஸடில்லாவைக் கொடுக்கவேண்டும்.

அடுத்த விஷயம் புழு பூச்சிகளைப் பற்றியது. பல சமயங்களிலும் அக்குறி க்ஷயரோக அடிப்படை உள்ளது.

சிற்றின்ப வேட்கையைப் பற்றியும் இங்கே கவனிக்க வேண்டுமல்லவா ? க்ஷயரோகவியாதியஸ்தர்களுக்கு உடல் பலவீனம் இருந்த போதிலும் சிற்றின்ப ஆசை மிக அதிக மாய் இருக்கும். வியாதியைத் துரிதமாய் அதிகரிப்பதற் காக இயற்கை செய்யும் காரியமாகவும் இக்குறி இருக்க லாம். காய்ந்து சருகாய் மாறிவிட்ட போதும் விடாப்பிடி யாய் மரத்தில் ஒட்டிக் கொண்டிருக்கும் இலைகளைச் சூறு வளிக் காற்று மரத்திலிருந்து பிய்த்தெறிந்து விடுவது இயற்கையின் நியதி அல்லவா ? ஆகவே இவ்வித நிலைமையி லுள்ள கேசுகளைக் குறிகளுக்கேற்ற ஔஷதங்களினுல் சிகிச்சை செய்ய முன்வருவது கூடாது ; அக்கேசுகளுக்கு ஆண்டவனிடமிருந்து அழைப்பு வந்திருக்கிறது.

ஸ்டாபிஸாக்ரியா

(STAPHISAGRIA)

முன்னுரை :—மிக அதிகமான, வெறுப்புடன் கலந் துள்ள கோபத்துக்கு ஸ்டாபிஸாக்ரியா ஏற்றதோர் ஔஷ தம். இயற்கைக்கு மாருன வழிகளில் புணர்ச்சி இன்பத் தைப் பெறும் செய்கையினுல் ஏற்படும் கெடுதலான குறி களைப் போன்ற குறிகள ஸ்டாபிஸாக்ரியா தோற்றுவிக்கி

றது. விசேஷமாகப் பற்களிலும் நரம்புகளிலும் வேலை செய்கிறது. மணப்பெண்களுக்கும் புதிதாய் மணம் செய்து கொண்ட பெண்களுக்கும் இவ்வௌஷதம் 30 வீரியத்தில் ஒரு நண்பனைப்போல் உதவுகிறது.

பொதுவான குறிகள்

தகுதி :—அளவுகடந்த புணர்ச்சியினாலும் விசேஷமாக இயற்கைக்கு மாறான முறையில் புணர்ச்சி இன்பத்தைப் பெற்றதாலும் உடல் வெளுத்து, முகம் ஒட்டி, தளர்ச்சியும் களைப்பும் ஏற்பட்டவர்களுக்கு ஏற்றது. ஸோரா, ஸிபிலிஸ், ஸைக்கோஸிஸ் ஆகிய மூவகைத் தோஷங்களின் அறிகுறிகளுக்கும் ஏற்றது.

மனம் :—1. உணர்ச்சி அதிகரிப்பு :—அல்ப காரணங்களாலும் மன உணர்ச்சிகள் அதிகரிக்கும். "குற்றம் இல்லாத வார்த்தைகளிலும் குற்றம் கண்டுபிடித்தல்". மிகச்சீக்கிரத்தில் கோபம் தோன்றும். தன்னைப் பற்றிப் பிறர் சொல்வதை அதிக உணர்ச்சியுடன் கேட்பார். 2. கோபம்: தலைகால் தெரியாமல் கூத்தாடுவார்; அடிக்கடி கடுமையான முன் கோபம் ஏற்படுதல். குழந்தை தனக்கு வேண்டுமென்று பல பொருள்களைக் கேட்கும்; கொடுத்தால் வாங்கிக்கொள்ள மறுக்கும் அல்லது வாங்கிக் கொண்டு வேண்டாமென்று தள்ளிவிடும் அல்லது தூர எறிந்துவிடும். பிறரால் அல்லது தன்னால் செய்யப் பட்ட காரியங்களைப் பற்றி அதிக வெறுப்புடன் கூடிய கோபம்; அவைகளால் ஏற்படக்கூடிய விளைவுகளை நினைத்து வருந்துவார். 3. அடக்கப் பட்ட கோபம்: பிறரால் அவமதிக்கப் பட்ட போது மானத்துக்குப் பயந்து சண்டை போடாமல் தன் ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு வீடு திரும்பும் போதே உடம்பு சரிப்படா

மல் உடலில் நடுக்கமும் கனவுத்த உணர்ச்சியும் ஏற்படு தல். நக்ஸ் வாமிகாவில் இதற்கு நேர் எதிரான குறி இருக் கிறது. 4. உற்சாகக் குறைவு : அளவு மிஞ்சிய சிற் றின்பத்தில் ஈடு பட்டதால் வருத்தம், ஏக்கம், வெறுப்பு, அலட்சியம், பலவீனம் ஆகியவை ஏற்படும். 5. வெட்கம் : யோசனையில் ஆழ்ந்திருத்தல்; மனச் சோர்வு, தனியாய் இருப்பதையே விரும்புதல், ஆண் களைக் கண்டால் வெட்கமும் கூச்சமும்.

உடல் :-சுற்றிலும் கறுப்பு வளையங்களுடன் கண்கள் குழி விழுந்திருக்கும். மூக்கில் கிள்ளி எடுத்தது போல் சதையே இல்லாமல் கூர்மையாய் இருக்கும். ஈறுகள் வெளுத்துப் பஞ்சுபோல் மிருதுவாகித் தொட் டால் இரத்தப்பெருக்கெடுக்கும். உமிழ் நீர் அதிகம் ஊறுதல் : வயிறு நிறைந்திருக்கும் போதும் அடிக்கடி கொஞ் சங் கொஞ்சமாகச் சாப்பிட விரும்புதல். பகல் முழுவதும் தூக்கக் கலக்கமாய் இருக்கும் ; இரவு முழுவதும் விழித் துக் கொண்டிருப்பார் ; உடம்பு முழுவதும் இசிவு வலி இருக்கும். கடுமையான கொட்டாவிகளும் சோம்பல் மூறிப்பதும் ; இதனால் கண்களிலிருந்து கண்ணீர் வெளிப் படுதல். உடம்பு முழுவதும் தொட்டால் வலியும் பல வீனமும். ஊக்கம் தரும் பொருள்களைச் சாப்பிட ஆவல். புகை இலையில் அதிக விருப்பம். பேசும்போது இடைவிடாமல் விழுங்கிக் கொண்டே இருப்பார்.

உபாதி கூடுதல் :—வெறுப்புடன் கூடிய கோபத்தி னால் மன உணர்ச்சிகள் மிகவும் அதிகரித்தல். மூத்திரம் கழிக்காத சமயங்களில் மூத்திரக் குழாயில் எரிச்சல், இழு வர்களுக்கு சுக்கிலச் சுரப்பிகளின் கோளாறுகளால்

மூத்திரம் கழித்தவுடன் மறுபடி கழிக்கத் தூண்டுதலும் வலியும் உண்டாகும்.

உபாதி குறைதல்:—எப்பொழுதும் படுத்துக் கொண்டே இருக்க விரும்புதல்; படுத்துக் கொண்டால் பொதுவாக எல்லா வியாதிகளிலும் சௌகரியமாய் இருக்கும்.

விசேஷக் குறிகளின் விளக்கம்

உணர்ச்சி அதிகரித்தல்:—உடல், மனம் இரண்டிலும் உணர்ச்சிகள் அதிகரிக்கும். மனம் என்ற தலைப்பின் கீழே பார்க்கவும். யோனியின் மேலுள்ள மூலை போன்ற உறுப்பில் வலியுடன் கூடிய உணர்ச்சி. அதனால் அவ்விடத்தில் ஆடை பட்டால் கூட உணர்ச்சி அதிகமாகும். அதிக வலியும் தொட்டால் வலி உணர்ச்சியுமுள்ள புண்கள்.

மன உணர்ச்சிகள் அதிகரித்து வியாதியஸ்தர் (அனேகமாக இயற்கைக்கு மாறான வழிகளில் புணர்ச்சி இன்பத்தைப் பெற்றவராய் இருப்பார்) எந்நேரமும் சிற்றின்ப விஷயங்களையே சிந்தனை செய்து கொண்டு அதிலேயே நாட்டம் கொள்வார். விஷத் தன்மை உள்ள உணர்ச்சி அதிகரிப்பு என்று இதைச் சொல்லலாம்.

ஸ்டாபிஸாக்ரியாவின் உடல் உணர்ச்சிகளின் அதிகரிப்பு புதிதாக மணம் செய்து கொண்ட பெண்களுக்கு ஆணுடன் சேர்ந்து புணர்ச்சியில் ஈடுபட்ட பிறகு ஏற்படும் கோளாறுகளை ஒத்திருக்கிறது. இக்கோளாறுகளுக்கு ஸ்டாபிஸாக்ரியா மிகவும் உபயோகமுள்ளது.

குத்து வலிகள்: கிழிக்கும் வலிகள்:—நரம்புகள் செல்லும் பாதையிலே குத்துவது போலவும் கிழிப்பதுபோல

வும் வலிகள் ஏற்படும்; இருதயத்தில் இவ்வலிகள் தோன்றும் (மூச்சை அடைக்கும்); மார்பு வழியாய் முதுகுக்குப் பரவும். தொண்டைச் சுரப்பி வேக்காட்டில் தொண்டையிலிருந்து ஒரு குத்து வலி ஆரம்பித்துக் காதுப் பக்கம் ஓடும். சுரப்பிகளில் குத்தும், கிழிக்கும் வலிகள்.

சுரப்பிகள் :—சுரப்பிகளில் வீக்கம். கழுத்து, பின் கழுத்து, அக்குள்கள் ஆகிய இடங்களிலுள்ள சுரப்பி களில் வலியுடன் வீக்கம். சிறுப் பைகளும் வீரைகளும் பெரியவை ஆகிக் கடினமாகும். வியாதியுற்ற சுரப்பி களில் குத்தும், கிழிக்கும் வலிகள்

கறுமை நிறம் :—பற்களின் நிறம் கறுப்பாய் மாறும்; அல்லது கறுப்பான கோடுகள் காணப்படும்; சீக்கிரத்தில் நொறுங்கும். பற்கள் கறுப்பாகுதல், நொறுங்குதல், சொத்தையாகுதல். பற்களின் ஓரங்கள் தேய்ந்து விடுதல்.

தளர்ச்சி :—வயிறும் அடிவயிறும் தளர்ந்து போய்த் தொங்கிக் கொண்டிருக்கும் உணர்ச்சி. பிறப்பு உறுப்பு கள் தளர்ந்து போகுதல் அல்லது இறைத்து விடுதல் (அளவு மீறிய புணர்ச்சியினல் அல்லது இயற்கைக்கு எதிரான வழிகளில் புணர்ச்சி இன்பத்தைப் பெற்ற தால்).

அழுகிய முட்டையின் நாற்றம் :—வியர்வை இவ்வித நாற்றத்துடன் இருக்கும். அபான வாயு கூடாகவும் அழுகிய முட்டை நாற்றத்துடனும் இருக்கும்.

கெட்ட சதை வளர்ச்சி :—கண் இமைகளில் அல்லது மேல் இமைகளில் ஒரு சமயம் வலது பக்கமும் மறு சமயம் இடது பக்கமுமாக மாறி மாறிக் கிறுக் கட்டிகள் உண்டாகி அவை உடைந்து ஆறிய பிறகு அவ்விடங்களில் கடினமான முண்டு கள் ஏற்படுதல். இத்துடன் இமைகளின் ஓரங்களில் வேக்

காடும் அறிப்பும் காணப்படலாம். இமைகளின் ஓரங்கள் காய்ந்து கடினமான உருண்டைகளுடனும் (முண்டுகள்) வேக்காடு, அறிப்பு ஆகியவைகளுடனும் இருத்தல்; மயிர்க் கால்கள் அழிந்து போகும். எலும்பு மூட்டுகளில் வாதரோக சம்பந்த முள்ள முண்டுகள். மேகவெட்டை அல்லது மேகக் கிரந்தி சம்பந்த முள்ள கெட்ட சதை வளர்ச்சிகள். பாலுண்ணிகள் காய்ந்து முட்டைக் கோசு போல் காணப்படும். மானிக் கொண்டையின் பின்பக்கத்தில் மேக வெட்டை சம்பந்த முள்ள கெட்ட சதை வளர்ச்சி. யோனியில் பல சிறு முளைகள் போன்ற கெட்ட சதை வளர்ச்சி.

வேதனை (மூத்திரப் பையில்) :—மணமான சிறு பெண்களுக்குப் புணர்ச்சிக்குப் பிறகு மூத்திரம் கழிக்க அடிக்கடியும் வலியுடனும் தூண்டுதல் தோன்றினால் அக்கோளாறை ஸ்டாபிஸாக்ரியா நீக்குகிறது. சிற்சில சமயங்களில் இத்தூண்டுதல் அதிகமான வேதனையை உண்டாக்கி அதனால் வியாதியஸ்தர் மணிக் கணக்கில் உட்கார்ந்து கொண்டு மூத்திரம் கழிக்க நேரும். கரப்பான் படை பிலும் மற்ற வகைச் சரும வியாதிகளிலும் அறிக்கும் இடத்தில் சொறிந்தவுடன் அறிப்பு குறைந்து உடனே வேறு ஒரு இடத்தில் அறிப்பு உண்டாகும்.

காயங்கள் :—கூர்மையான, வெட்டக் கூடிய ஆயுதங்களால் ஏற்படும் காயங்கள்; ஒழுங்காக வெட்டப்பட்ட காயங்கள், ஆப்பரேஷன் செய்த காயங்கள். மூத்திரப் பை அல்லது சினைப்பையில் ஆப்பரேஷன் செய்த பிறகு உண்டாகும் வயிற்று வலி.

மற்ற குறிகள்

இயற்கைக்கு மாறான வழிகளில் சிற்றின்பத்தைப்

பெற்றதால் அல்லது அளவு மீறிச் சிற்றின்பத்தில் ஈடு பட்டதால் ஏற்படும் கோளாறுகள் : குழி விழுந்த முகம் : குற்றம் செய்து விட்டவனைப் போன்ற முகத் தோற்றம்; ஞாபக சக்தி அழிதல்; வருத்தம்; ஏக்கம்; இரவில் இந் திரியம் தானாக வழுவுதல்; முதுகு வலி; கால்களில் பல வீனம்; ஒளி இல்லாத கண்கள்; தலை மயிர் உதிருதல்; சுக்கிலத் தண்ணீர் சேதமாகுதல்; பொதுவான பல வீனம்; புணர்ச்சி உறுப்புகள் தளர்ந்திருக்கும்; அடிக் கடி நீர்க் கோர்வை பிடித்தல். மிக மோசமான கேசுகளில் விரைப்பையில் காமத்தைக் கிளப்பும் அறிப்பும் பிறப்பு உறுப்புகள் சிறுத்துப் போவதும் காணப்படும்.

புணர்ச்சி செய்து முடிந்தவுடன் அல்லது பிறகு மூச் சுத் திணறல். மாதவிடாய்க் காலத்தில் பல் வலி. சொத் தைப் பற்களில் பிடுங்குவது போலவும் கிழிப்பது போல வும் வலிகள் காதுகளினுள்ளே பாயும்; பொட்டுகளில் துடிப்பு. பல்லைத் தொட்டாலும் உணவு, பானங்கள் ஆகிய வைகளை உட் கொண்டாலும் பல் வலி உண்டாகும்; ஆனால் கடித்தாலோ, மென்றாலோ வலி இருப்பதில்லை. நரம்பு சம்பந்தமான பலவீனம்; மிகவும் கடுமையான வேலை செய்து உடம்பு களைத்துப் போனது போல் தோன்றும் முதுகு வலி; இரவில் படுத்திருக்கும் போதும் காலையில் படுக்கையை விட்டு எழுந்திருப்பதற்கு முன்பும் கடுமை யாய் இருக்கும். சுரம் தோன்றச் சில நாட்களுக்கு முன்ன தாக அளவுகடந்த பசி உண்டாகும். தலை, காதுகள், முகம், உடல் ஆகிய இடங்களில் கரப்பான் படைகள்; பொருக்கு களின் அடியிலிருந்து மஞ்சள் நிறமும் கார குணமு முள்ள நீர் கசிதல். மண்டைத் தோலில் கடினமான

மஞ்சள் நிறமுள்ள பொறுக்குகள் உண்டாகி அவை களின் உட் புறத்தில் நாற்ற மூள்ள சீழ் காணப்படும். இதனால் தலையில் பேன் விருத்தியாகும். சொறிந்தால் அந்த இடத்திலுள்ள அறிப்பு நீங்கி மற்றோர் இடத்தில் அறிப்பு உண்டாகும்; அறிப்புடன் தோல் செதில் செதி லாக உதிரும்; மயிர் கொட்டும். கோடைக் காலத்தில் தொண்டை இழுப்பு நோயில் காணப்படுவதைப் போன்ற இருமலும் கோடைக்காலத்தில் தொடை நரம்பு வாதமும் மாறி மாறித் தோன்றுதல். புகை இலைப் புகையினால் இருமல் அதிகரிக்கும். பகலில் மட்டும் இருமல், அல்லது வயிறு நிறையச் சாப்பிட்ட பிறகு அதிக மாகும்; மாமிசம் உண்டபின் அதிகமாகும். "அதிக வயிற்று வலியுடனும் புழு பூச்சிகளுடனும் சட்டி போல் பருத்த வயிறுள்ள குழந்தைகள்." வியர்வையே ஏற்படுவ தில்லை. மூத்திரம் மெல்லிய தாரையாய் வெளிப்படுதல்.

உறவு :—முன்னும் பின்னும் வேலை செய்யக்கூடியது காலோஸிந்திஸ். ஒற்றுமையாய் வேலை செய்வது காஸ்டிகம். முதலில் காஸ்டிகம், பிறகு காலோஸிந்திஸ், அதன் பிறகு ஸ்டாபிஸாக்ரியா ஆக இந்த வரிசைப்படி உபயோகிக்க வேண்டும். ரானங்குலஸ் இதற்கு முறிவு ; ஆகவே மூன்போ பிறகோ கொடுப்பது கூடாது.

ஒப்பிடுதல் :—இமைகளில் சிறுக்கட்டி தோன்றிய பிறகு கடினமான முண்டுகள் இருத்தல் (கோனியம், கல். கார்ப்). புணர்ச்சியின் முடிவில் மூச்சுத் திணறல் (காலி பைக்). இயற்கைக்கு மாறான வழிகளில் சிற்றின்பத்தை அடைந்ததினால் மானிக்கொண்டை கொளகொள வென்று தளர்ந்து விடுதல் (கலேடியம்).

———

ஸ்ட்ரமோனியம்

(STRAMONIUM)

முன்னுரை ;—ஸ்ட்ரமோனியம் மனதிலும் உடலிலும் மிகக் கடுமையான வியாதிக் குறிகளை உண்டாக்குகிறது. இதுவரை நடத்தப்பட்ட ஔஷதப் பரீக்ஷைகளில் வேறு எந்த ஔஷதமும் இவ்வளவு கடுமையான குறிகளை உற்பத்தி செய்யவில்லை. "ஸ்ட்ரமோனியம் ஒரு பூகம்பத்தைப் போலவே கடுமைக் குணம் பொருந்தி இருக்கிறது" என்று கெண்ட் எழுதுகிறார். ஸ்ட்ரமோனியத்தின் கடுமைக் குணத்தைப் படம் பிடித்துக்காட்ட இதைவிடத் தகுந்தவார்த்தைகள் கிடைக்காது. பிள்ளைப் பெற்றுப் பைத்தியம் பிடித்த ஒரு கேசில் வியாதியின் கடுமையான குறிகளைப் பார்த்து நான் திடுக்கிட்டேன். அவர் உடலில் காணப்பட்ட அளவு மிஞ்சிய பலம் எங்கிருந்து உண்டாகிறது என்பது எனக்கு புரியாத புதிராக இருந்தது. ஸ்ட்ரமோனியத்தை 200 வீரியத்தில் கொடுத்தேன். வியாதி தணியவில்லை. பிறகு 30 வீரியத்தில் கொடுத்தேன். வியாதி முழுவதும் பணிந்து விட்டது. இருநூறு வீரியம் பயனற்றுப் போனதன் காரணம் என்ன என்பதை விளக்க முடியாது. ஆனால் இது ஞாபகத்தில் வைத்துக் கொள்ளப்பட வேண்டிய முக்கிய மானவிஷயம். சுரங்களில் உண்டாகும் அறிவுத் தடுமாற்றத்துக்கும் (சன்னி) மனம் பற்றிய எல்லாக் கோளாறுகளுக்கும் 30 வீரியத்தில் உபயோகிக்கவும்.

பொதுவான குறிகள்

தகுதி :—இளமைப் பருவமும் அதிக இரத்தமும் உள்ளவர்களுக்கு, முக்கியமாகச் சிறுவர்களுக்கு உண்டாகும் கோளாறுகள் (முகத்தசைத் துடிப்பு, பைத்தியம், சுரத்தில் தோன்றும் அறிவுத் தடுமாற்றம் (சன்னி.)

மனம் :—இவ்வௌஷதத்தில் ஏராளமான மனக்

குறிகள் காணப்படுகின்றன. அக்குறிகளே மட்டும் ஆதாரமாய் வைத்துப் பற்பல கோளாறுகளில் இவ் வௌஷதம் உபயோகமாகிறது. விசேஷக் குறிகளின் விளக்கம் என்ற பகுதியில் மனக் குறிகளைப் பற்றி விவரிக்கப் பட்டிருக்கிறது.

உட்ல் :—முகம் சூடாய்ச் சிவந்து உப்பி இருக்கும்; கைகளும் கால்களும் சில் லென்றிருக்கும்; கன்னங்களில் வட்டமாய்ச் சிவந்திருக்கும். வாய் காய்ந்திருத்தல். வாய் காய்ந்திருந்த போதிலும் தண்ணீர் குடிக்க விருப்பம் இல்லாமை. கடுமையான தாகமும் இருக்கலாம். உதடுகள் காய்ந்து ஒட்டிக் கொள்ளும். உதடுகளில் நடுக்கம். ஏராளமாய் உமிழ்நீர் உற்பத்தியாகுதல். வழக்கத்தை விடத் தலையில் அதிகமான வியர்வை உண்டாகும். மெல்லுவதுபோல் வாயை அசைத்தல். வாயைத் திறக்க முடியாமல் போகுதல். தலையைத் தலையணையில் அழுத்திக் குடைதல். தூக்கக் கலக்கமாய் இருக்கும்; ஆனல் தூங்க முடியாது. மலம், மூத்திரம் இரண்டும் அடக்கப்படுதல். பிண நாற்றம் அடிக்கும் மலம். குளறலுடன் பேச்சு, திக்கித் திக்கிப் பேசுதல். பேசவே முடியாமல் போகுதல். நாக்கு நடுங்குதல். பரபரப்புள்ள உடல் அசைவுகள். விழுங்கும் போது கஷ்டம். படுத்துக் கொண்டிருக்கும் போது அடிக்கடி தலையைத் தூக்கித் தூக்கிப் பார்த்தல். புளிப்புப் பொருள்களில் அதிக ஆவல்.

உபாதி கூடுதல் :—தனியாய் அல்லது இருட்டான இடங்களில் இருப்பது வியாதியஸ்தருக்குப் பிடிக்காது.

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே) :—தூங்கிய பிறகு; பிரகாசமான பொருள்கள்.

தண்ணீர் ஆகியவைகளில் வேலை செய்வது; அமுக்குதல், அசைவு முதலிய காரணங்களால் உபாதிகள் கூடுதலாகும்.

பிரகாசமான வெளிச்சம், பளபளவென்று ஒளி வீசும் பொருள்களைப் பார்த்தல் அல்லது அருகே செல்லுதல் ஆகியவைகளால் வலிப்புகள் மறுபடி உண்டாகும். அசைவும் வலிப்புகளை மறுபடி தோன்றச் செய்யும். இருட்டாய் உள்ள இடங்களில் நடக்க முடியாது.

உபாதி குறைதல் :—வியாதியஸ்தர் வெளிச்சத்தை விரும்புவார். பிறருடன் சேர்ந்திருக்கவும் விரும்புவார்.

விசேஷக் குறிகளின் விளக்கம்

கடுமைக் குணம் :—ஸ்ட்ரமோனியத்தின் புத்தித் தடுமாற்றம் பெல்லடொன்னு, ஹயஸ்யாமஸ் ஆகியவைகளில் இருப்பதைவிட உக்கிரமாய் இருக்கும் (இவை மூன்றும் புத்தித் தடுமாற்றத்துக்கு முக்கிய ஔஷதங்கள்). கட்டுக்கு அடங்காத ஆத்திரம், கடிக்கவும் அடிக்கவும் கொல்லவும் விரும்புதல். ஒரு ஸ்ட்ரமோனியம் வியாதியஸ்தர், அவரருகே நான் சென்றபோது என் தலைமயிரைப் பிடித்துக்கொண்டு விட்டாள். பிடி மிகவும் வலுவாய் இருந்ததால் அதிலிருந்து விடுபடுவது மிகக் கஷ்டமாய்ப் போய்விட்டது. போனால் போகிறதென்று அவளே பிடியைத் தளர்த்தி விட்டாள். அவளுடைய ஆத்திரம் ஸ்ட்ரமோனியம் 30-க்கு அடங்கியது. ஔஷதம் மூக்கினருகே வைக்கப்பட்டது.

புத்தித் தடுமாற்றமும் பைத்தியமும். பெல்லடொன்னுவிலும் ஹயஸ்யாமஸிலும் இருப்பதைவிட ஸ்ட்ரமோனியத்தில் கடுமையாய் இருக்கின்றன. இரத்தம் அதிகமாய்ச் சேரும் குறி பெல்லடொன்னுவில் தான் மிக அதிகம்.

ஸ்ட்ரமோனியத்தில் அதைவிடச் சற்றுக் குறைவாகவும் ஹயஸ்யாமஸில் இன்னும் குறைவாகவும் இருக்கும்.

புத்தித் தடுமாற்றத்தில் வியாதியஸ்தர் தப்பித்து ஓட விரும்புவார். படுக்கையைவிட்டு எழுந்திருக்க (பலம் கொண்டு படுக்கையில் அவரை அமுக்கிவைத்துக் கொண்டிருந்தாலும்) மிகவும் பாடுபடுவார்.

கடுமையான டைபாய்டு சுரம். கடுமையான இரத்தப் பெருக்குடன் கடுமையான வலிப்புகள். "கடுமையான, நீர்க்கோர்வை சம்பந்தமுள்ள வேக்காடுகள், விஷத்தன்மை வாய்ந்த, இரத்தத்தில் விஷம் கலந்த நிலைமைகள்" கடுமையான வியர்வை.

பயம்: பீதி:-இருட்டிலும் தனிமையாய் இருந்தாலும் வியாதியஸ்தருக்குப் பயம் ஏற்படும். சாவை நினைத்துப் பயப்படுவதும் எந்நேரமும் அழுது கொண்டிருத்தலும். பொருள்களை அல்லது மனிதர்களை முதலில் பார்த்தவுடன் வியாதியஸ்தருக்குப் பயம் உண்டாகும்; அப்பொருள்களையும் மனிதர்களையும் பீதியுடன் வியாதியஸ்தர் வெறித்துப் பார்ப்பார்; பயத்துக்கு இடமில்லை என்று தெரிந்தபிறகே வெறித்துப் பார்ப்பதை நிறுத்துவார். "குழந்தை பீதியுடன் விழித்துக் கொள்ளும்; யாரையும் புரிந்துகொள்ளாது; பயத்தினால் கதறும்; பக்கத்தில் இருப்பவரை இறுகப்பிடித்துக் கொள்ளும்" "முதலில் பார்க்கும் பொருள்களைக் கண்டு பயப்படுவது போலக் கண்களை இடுக்கிக்கொண்டு விழித்தல்." பீதியை உண்டாக்கும் பொய்த் தோற்றங்கள்.

வாயாடித் தனம்:—புத்தித்தடுமாற்றத்திலும் பைத்தியம் பிடித்தபோதும் வாய் ஓயாமல் பேசுதல். இடைவிடாமல் பேசிக்கொண்டே இருக்க விரும்புதல்;

ஒன்றுக் கொன்று சம்பந்தமில்லாத பேச்சு. மாதவிடாயின்போது வாயாடித் தனம் அளவு கடந்திருக்கும்; முகம் அதிக இரத்தம் சேர்ந்து உப்பி இருக்கும்; கண்களில் நீர் பெருகக் கடவுளைத் துதிப்பதும் உள்ளம் உருக அடிபணிந்து வேண்டிக் கொள்வதும்.

கடவுளைத் துதிக்கும் குணம்:—மாதவிடாய் உள்ளே அமுக்கப்பட்ட போது இக்குறி காணப்படும்.

பொய்த் தோற்றங்கள்:-தன் உடல் மிகவும் பெரியதாகி விட்டதுபோல், தன் உருவம் எப்படியோ மாறிவிட்டது போல், தன் உறுப்புகளில் ஏதோ ஒன்று இரண்டாய் இருப்பதுபோல அல்லது தன் உடலின் ஒருபாதி வெட்டி எறியப் பட்டதுபோல பல வகைப்பட்ட தோற்றங்கள். தலை வெடித்துச் சிதறிப்போய் விட்டதுபோல் தோன்றும்.

பயங்கரமான தோற்றங்கள்: எலிகள், பூனைகள், நாய்கள் இன்னும் பல பிராணிகள் எல்லா இடங்களிலும் இருப்பதுபோல் தோன்றுதல். பூதங்களையும் பிசாசுகளையும் காண்பதாகவும் அவை பேசுவது காது கேட்பதாகவும் அவைகளுடன் பேசுவதாகவும் சொல்வார்; விசேஷமாக இருட்டில்.

வலி இல்லாத தன்மை:—ஸ்ட்ரமோனியம் தேவைப்படும் கேசுகளில் பெரும்பாலும் வலி இருப்பது கிடையாது. இடுப்பெலும்பு மூட்டில் கடுமையான வலி; கடுமையான, வியாதியஸ்தரைத் திணறவைக்கும் வலியுடன் கூடிய சீழ்க்கட்டிகள் இடுப்பில், விசேஷமாக இடது பக்கத்தில்; ஆகியவை விதிவிலக்குகளாகும்.

காம வெறி:—ஆண், பெண், இருபாலாருக்கும் சிற்

றின்ப ஆசை அதிகரித்துவிடும். காம விகாரமான பேச்சு குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகமாய் இருக்கும். பிறப்பு உறுப்புகளை மூடியுள்ள ஆடைகளை அடிக்கடி விலக்கிக் கொள்வார்; ஒழுங்கீனமான பேச்சு, அசிங்கமான பாட்டுக்களைப் பாடுவார். "ஆண் குழந்தைகள் அடிக்கடி மானியைக் கைகளால் பிடித்து இழுத்துக் கொள்ளுதல்."

துடிப்புகள் : வலிப்புகள் :—முகத் தசைகளில் அல்லது ஒரு சில தசைகளில் மட்டும், முக்கியமாக உடலின் மேற் பகுதியில் துடிப்புகள். உதடுகளில் நடுக்கம். காக்கை வலிப்பில் காணப்படுவதைப் போன்ற வலிப்புகள்; ஆனால் வியாதியஸ்தர் தன் நினைவுடன் இருப்பார். ஒரு பக்கம் வலிப்புகளுடனும் மறு பக்கம் பாரிச வாதத்துடனும் இருத்தல். நெற்றியில் சுருக்கங்கள். புருவத்தில் சுருக்கங்களுடன் முகம் சுருங்கி இருக்கும். தொண்டை, குரல்வளை ஆகியவைகளில் வலிப்பு. விழுங்குவது சிரமமாய் இருத்தல்.

தலையைத் தலையணையிலிருந்து அடிக்கடித் தூக்கிப் பார்ப்பதும் பிறகு முன்போல் தலையைக் கீழே போடுவதும்.

குழந்தையைக் கண்டித்தால் அதன் கரு விழிகள் விரிவடைதல். மெல்லுவது போல் வாய் அசைதல்.

வலியுடன் உருவம் விகாரமாய் முறுக்கப் பட்டிருத்தல். பல்லைக் கடித்துக்கொண்டு சிரிப்பதுபோல் முகத் தோற்றம். முகம் கோணல் மாணலாகித் திக்கித் திக்கிப் பேசுதல்.

அசைவுகள் :—எல்லாவித அசைவுகளும் மிக வேகமாய் நடை பெறும்; எவ்வளவு முடியுமோ அவ்வள

வுக்கு வேகமாய் ஓடுவார். முகத் தசைத் துடிப்பில் முது கெலும்பில் உடம்பு முழுவதும் விட்டு விட்டுத் துடிப்பு கள் ஏற்படுவதும் அத்துடிப்புகளால் பலவிதமான விகாரமான அசைவுகளும் சைகைகளும் காணப்படுதல். கைகளும் கால்களும் வட்டமாய் அசைவது ஸ்ட்ரமோனி யத்தில் காணப்படும் ஒரு விசேஷக் குறி. இவ்வசைவு கள் சில சமயங்களில் பார்வைக்கு அழகாகவும் இருக்க லாம்.

ஸ்ட்ரமோனியத்தில் தசைகளை மிகச் சுலபமாகவும் அதிகமாகவும் அசையச் செய்யலாம். விருப்பத்துக்குக் கட்டுப்பட்டு அவை வேலை செய்யும்.

உமிழ் நீர்ப் பெருக்கு:—உமிழ் நீர்ப் பெருக்கு ஏராள மாய் இருக்கும். வாயிலிருந்து ஓட்டும் குண முள்ள உமிழ் நீர் சொட்டிக் கொண்டே இருத்தல்.

உள்ளே அமுக்கப்படுதல்:—எல்லா விதக் கழிவுகளும் சுரப்புகளும் அடக்கப்படுதல், சருமக் கோளாறுகள் அடக்கப்பட்டதால் ஏற்படும் கோளாறுகள். காதுகளிலிருந்து வெளியாகிக் கொண்டிருந்த கழிவை அடக்கியவுடன் மூளைச் சவ்வு வேக்காடு தோன்றுதல்.

மற்ற குறிகள்

கை கால்களில் ஊசி குத்தும் உணர்ச்சி. சன்னி யில் படுக்கைத் துணிகளைப் பிடித்துச் சேஷ்டை செய் தல். சுரத்தில் கை கால்கள் சில்லிப்பாய் இருத்தல். "குழந் தைகளுக்கு நினைவு தவறி தான் எங்கே இருக்கிறோ மென்பது புரியாமல் பெற்றோர் அருகில் நின்று தேறு தல் சொல்லிக் கொண்டிருந்தாலும் அப்பா, அம்மா என்று கூப்பிடும்." தண்ணீரைக் கண்டால் நடுக்கம்;

தண்ணீரில் அளவு கடந்த வெறுப்பு: அளவு கடந்த பீதி; கண்கள் குத்திட்டு இருத்தல்; அடிக்கடி எச்சிலைத் துப்புதல்; உடல் முழுவதும் விரைப்பாய் இருக்கும்; தொண்டையில் வலிப்புகள்; பல பளப்பாய் உள்ள எல்லாப் பொருள்களும் சன்னியைத் தூண்டி விடும்; இழுப்புகளும் வலிப்புகளும்." திக்கித் திக்கிப் பேசுதல்; ஒரு வார்த்தை சொல்வதற்கு முன் உடம்பை மிகவும் சிரமப்படுத்த நேரிடும்; பேசுவதற்குப் பலமான முயற்சி களைச் செய்வார்; முகத்தைக் கோணிக் கொள்ளுதல் (போவிஸ்டா, இக்னேஷியா, ஸ்பைஜீலியா). சுரத்தில் வியர்வை எண்ணெய் போல் ஒட்டும் குண முள்ளதாக வும் நாற்றமாகவும் இருக்கும். தலை யணையிலிருந்து தலை யைத் தூக்கியவுடன் வாந்தி செய்தல். கிழவர்களுக்கு மூத் திரம் மெதுவாக வெளியாகுதல். மாதவிடாயின் போது பெண்ணின் உடலிலிருந்து கடுமையான நாற்றம் வீசுதல்.

உறவு :—பெல்லடொன்னு, குப்ரம் மெட் ஆகியவைகளுக் குப்பிறகு நன்முக வேலை செய்கிறது. முறிவு : காபியா.

ஒப்பிடுதல் :—பிரகாசமான ஒளி வலிப்புகளை உண் டாக்குதல் (காலி ப்ரொ). உடம்பு முழுவதும் ஏராளமான சூடான வியர்வையினல் குளித்ததுபோல் இருத்தல் (ஓபி யம்). கைகள் இடைவிடாமல் பிறப்பு உறுப்புகளைத் தொட்டுக் கொண்டிருத்தல் (ஸிங்க்கம் மெட்). தூங்கிய பிறகு உபாதிகள் அதிகரித்தல் (அபிஸ், லாச்சஸிஸ், ஓபி யம், ஸ்பாஞ்சியா). இரவில் கண் தெரியாமை (பெல்ல டொன்னு, நக்ஸ் வாமிகா). தூக்கக் கலக்கமாய் இருந்தா லும் தூங்க முடியாமை (பெல்லடொன்னு, சாமோமில்லா, ஓபியம்). தனியாய் இருக்க முடியாமை (பிஸ்மத்). படுக்கையி லிருந்து தப்பி ஓட முயற்சி செய்தல் (பெல்லடொன்னு). சந்தோஷமாய் இருந்தவர் திடீரென்று வருத்தமாய் மாறு

தல் (இக்னேஷியா). பெரும்பாலான தோலாறுகளில் வலி இல்லாத தன்மை (ஓபியம்). இருட்டைக் கண்டால் பயம் (ஆர்ஸனிகம், பெல்லடொன்ன). வெளிச்சமான இடங்களில் இருப்பதையும் பிறருடன் சேர்ந்திருப்பதையும் விரும்புதல் (பெல்லடொன்ன, கல். கார்ப், ஜெல்ஸிமியம், லாக் கானினம்). தூக்கத்தில் குழந்தைகள் கதறுதல் (அபிஸ், பெல்ல டொன்ன);

ஸல்பர்

(SULPHUR)

முன்னுரை :—உலகில் வைத்திய அறிவு தோன்றிய காலத்திலிருந்து ஸல்பர் ஒரு ஔஷதமாக உபயோகப் படுத்தப் பட்டு வந்திருக்கிறது. வீரியப்படுத்தும் முறையால் அதன் வியாதி நீக்கும் குணங்களை ஒழுங்காய் விருத்தி செய்து மனித உடலில் வியாதி தோன்றிய நிலைமைகளில் அதன் உண்மையான உபயோகத்தைக் கண்டு பிடித்தவர் ஹானிமனே ஆகும். ஸோரா விஷத்தை அடக்கும் ஔஷதங்களின் அரசன் என்று இதைச் சொல்லலாம்.

பொதுவான குறிகள்

தகுதி :—கீழே உள்ள குறிகள் உள்ளவர்களுக்கு ஸல்பர் விசேஷமாகத் தகுந்தது.

1. மெலிந்த உடலும் வளைந்த தோள்பட்டைகளும் உள்ளவர்கள். கூனிக் கொண்டே நடப்பதும் உட்காருவதும்.
2. நின்று கொண்டிருப்பது மிக வேதனையான காரியமாகத் தோன்றுதல்.
3. பரபரப்பு; வேகமாகக் காரியங்களைச் செய்தல்; மிகச் சீக்கிரத்தில் கோபம் கொள்ளுதல்; சுறு சுறுப்பாய்

இருத்தல்; அதிக இரத்தம் உள்ளவர் போல் தோற்றம் அளித்தல்; பருவ நிலை மாறுதல்களால் தவறுமல் சருமக் கோளாறுகள் ஏற்படுதல்.

4. அழுக்கும் நாற்றமும் சருமக் கோளாறுகளும் உள்ளவர்கள்.

5. க்ஷய ரோகம் தோன்றும் உடல் வாகு; பல்வேறு இடங்களில் அதிக இரத்தம் சேருதல்; விசேஷமாகக் கல்லீரலில்.

6. குளிக்க வெறுப்பு உள்ளவர்கள்; குளித்த பிறகு தவறுமல் உபாதிகள் அதிகமாகுதல்.

7. சூட்டில் வெறுப்பு உள்ளவர்கள்.

8. அடிக்கடி குளித்தாலும் உடலில் கெட்ட நாற்றம் உள்ளவர்கள்.

9. வியர்வை, முக்கியமாக அக்குள்களில் ஏற்படும் வியர்வை, கெட்ட நாற்றம் வீசுதல்.

10. ஸோரா விஷத்தை அடிப்படையாய்க் கொண்டும் சருமக் கோளாறுகள் உள்ளே அமுக்கப்பட்டதாலும் ஏற்பட்ட காட்பட்ட வியாதிகளால் துன்பப்படுவோர்.

11. அழுக்குப் பிடித்த தோற்ற முள்ளவர்கள். "கந்தலான உடைகளையும் கிழிந்து போன தொப்பிகளையும்" உபயோகிக்கிறவர்கள்; மத சம்பந்தமான அல்லது வேதாந்த விஷயங்களைப் பற்றிய விசாரணையில் இறங்கிவிடுதல். ஒரே வார்த்தையில் ஹெரிங் கூறியது போல் "வறட்டு வேதாந்திகள்" என்று சொல்லிவிடலாம்.

12. கடினமாகவும் கறடு முறடாகவும் அருவருக்கத் தக்கதாகவும் உள்ள சருமத்தை உடையவர்கள்.

13. முகம், புஜம் ஆகிய இடங்களில் வட்ட வட்டமான, மங்கிய பழுப்பு நிறமுள்ள புள்ளிகளை உடையவர்கள்.

14. சாராயம் கலந்த பானங்களில் விருப்பமுள்ளவர்கள்.

15. அளவு மீறிய சிற்றின்ப ஈடுபாடு, இயற்கைக்கு மாறான வழிகளில் புணர்ச்சி இன்பத்தைப் பெறுதல் முதலிய வரலாறு உள்ளவர்கள்.

16. மெலிந்த உடல், நிழக்கள் உள்ள முகம். பருத்த வயிறு, காய்ந்து தொள தொள வென்று தொங்கும் சருமம் ஆகிய குறிகளும்,

17. நிலை கொள்ளாமல் உடம்பில் சூடும் இரவில் போர்வையை உதைத்துத் தள்ளும் குணமும் வயிற்றில் புழு பூச்சிகளும் உள்ள குழந்தைகளுக்கும் ஸல்பர் ஏற்றது.

மனம்:—அதிக ஞாபக மறதி. பெயர்களை ஞாபகத்தில் கொஞ்சம் கூட வைத்துக் கொள்ள முடியாத அவ்வளவு அதிகமான ஞாபகசக்திக் குறைவு. அதிகச் சுயநலம் பாராட்டுவார்; பிறரை மதிக்க மாட்டார். பேசும் போது தகுந்த சொற்கள் நினைவுக்கு வராது; சொற்களைத் தவறான இடங்களில் உபயோகித்தல். மதசம்பந்தமான அல்லது வேதாந்த சம்பந்தமுள்ள விஷயங்களிலேயே ஆழ்ந்திருத்தல். எதற்கெடுத்தாலும் அழும் குணம், கோழைத் தனமும் அல்ப காரணங்களாலும் பயப்படும் குணமும். பெரியவர்கள் குழந்தையைப் போல் கோபித்தலும் புகார் சொல்வதும். தற் கொலை செய்து கொள்ளப் பலமான தூண்டுதல். தான் ஆசைப்

படும் ஒவ்வொரு பொருளும் மிக அழகாய் இருப்பதாக வியாதியஸ்தர் சொல்வார்; அழுக்குப் பிடித்த கந்தைத் துணி கூட அவருக்குப் பட்டாடையாய்த் தோன்றும்.

உடல் :—உடல் பற்றிய பல குறிகள் தகுதி என்ற தலைப்பின்கீழே எழுதப்பட்டுள்ளன. மற்றவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன. உள்ளங்கால்களிலும் உள்ளங் கைகளிலும் எரிச்சல்; அவைகளைக் குளிரச் செய்வதற்காக இரவில் கைகளையும் கால்களையும் படுக்கைக்கு வெளியே வைத் திருத்தல். முகம் சிவத்தல். மூக்கில் நாட்பட்ட நீர்க்கோர்வை யில் காணப்படுவது போன்ற நாற்றம் : காலையில் வாய் கசப் பாய் இருத்தல். இரவில் சாப்பிடுவதற்காகத் தூக்கத்தி லிருந்து எழுந்திருத்தல். அதிகமாய்க் குடிப்பார்; சாப்பிடு வது கொஞ்சமாய் இருக்கும். காலை 11 மணிக்கு வயிற்றினுள் ஒன்றுமே இல்லாத காலியான, பலவீனமான உணர்ச்சி உண்டாகும். சாராயம் கலந்த பானங்களில் விருப்பம். பால் உடலுக்கு ஒத்துக் கொள்வதில்லை. உணவில் அதிக உப்பு இருப்பதுபோல் தோன்றுதல். இரவில் அடிக்கடி மூச்சுத் திண றல் உண்டாகும்; அதனால் கதவுகளையும் ஜன்னல்களையும் திறந்து வைத்திருக்க விரும்புவார்; இரவில் திடீரென்று விழிப்புக்கண்டு பிறகு தூக்கமே வருவதில்லை. "தித்திப் புப் பொருள்களில் விருப்பம்; அவைகளைச் சாப்பிட் டால் வயிறு புளித்து மேல் வயிற்றில் எரிச்சல் முதலிய வேதனைக் குறிகள் தோன்றும்." காடிபோல் புளிப் பான மூத்திரம். பாதங்கள் சில்லென்றிருத்தல். சிறிது நேரமே தூங்க முடியும். பகல் வேளையில் தூங்காமல் இருக்கமுடியாது; இரவு முழுவதும் விழித்துக் கொண் டிருத்தல்., சிறிய ஓசையினாலும் தூக்கம் கலைந்துவிடும். தூக்கத்தில் அதிகமாகப் பேசுதல். குழந்தை தன் கைக்கு எட்டக்கூடிய எல்லாப் பொருள்களையும் எடுத்துத் தன் வாயி

ஜுள் திணித்துக் கொள்ளும். தூங்க ஆரம்பித்தவுடன் கை கால்கள் திடீரென்று துள்ளுதல். நாக்கில் வெண்மையான அழுக்கும் நுனியிலும் ஓரங்களிலும் சிவந்தும் இருத்தல்; இக்குறி பெரும்பாலும் திடீர் வியாதிகளில் காணப்படும். மலம் கழித்த பிறகு ஒரு மணி நேரம் ஆசனவாயில் கடுகடுப்பு.

உபாதி கூடுதல்:—வியாதியஸ்தருக்குச் சூடு ஒத்துக் கொள்ளாது; ஆனல் குளிரும் ஒத்துக் கொள்ளாது. இருப்பினும் திறந்த இடங்களில் இருக்கும்போது சௌகரியமாய்த் தோன்றும். (அதிகச்சூடோ, குளிரோ இல்லாமல் மிதமான வெப்பதட்ப நிலைமையை அவர் விரும்புவார்). திறந்த இடங்களில் இருக்கும் போதும் காற்று வீசினலும் உபாதிகள் கூடுதலாகும்; நீர்க் கோர்வை பிடிக்கும்.

உபாதி கூடுதல்:—(ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே:—நிற்கும்போது; படுக்கையின் சூட்டினல்; தண்ணீரில் குளித்தல், உடலைக் கழுவுதல்; வெப்பதட்ப நிலைமைகளில் மாறுதல் ஏற்படும்போது; ஆகிய காரணங்களால் உபாதிகள் அதிகமாகும். உலோகங்களைக் கொண்டுதயாரிக்கப்படும் ஔஷதங்களை (எந்த உலோகமாய் இருந்தாலும் சரி, அளவுமீறி உபயோகித்தால் உண்டாகும் கோளாறுகள்.

உபாதி குறைதல்:—திறந்த இடங்களில் வியாதியஸ்தருக்குச் சௌகரியமாய்த் தோன்றும். இரவில் தான் இருக்கும் அறையிலுள்ள எல்லா ஜன்னல்களையும் திறந்துவைத்துக் கொள்ள விரும்புவார்.

விசேஷக் குறிகளின் விளக்கம்

சூடு: எரிச்சல்: சிவத்தல்:—உடலில் பல இடங்களில்

எரிச்சல். தலையின் உச்சியில் இடைவிடாத சூடு. உச்சந்தலை சூடாகவும் பாதங்கள் சில்லென்றும் இருத்தல். கண்களில் எரிச்சல். உதடுகள் காய்ந்து எரிச்சலுடனும் இருக்கும். வயிற்றில் எரிச்சல். மூத்திரம் கழிக்கும்போது மூத்திரக் குழாயில் எரிச்சல். யோனியில் எரிச்சல்; அவளால் சும்மா இருக்க முடியாது. உள்ளங் கைகளில் எரிச்சல். விசேஷமாகப் படுக்கையில் படுத்துச் சூடு கண்டவுடன் எரிச்சல் தோன்றும்; அதனால் கால்களைக் குளிர்ச்சிசெய்தற்காகப் படுக்கைக்கு வெளியே வைத்துக் கொண்டிருப்பார். சுரத்தில் அடிக்கடி சூடான உணர்ச்சி; சுரம் இல்லாமலும் ஏற்படும் முகத்தில் சூடான உணர்ச்சி. மாதவிடாய் மறையும் காலத்தில் பெண்களுக்கு ஏற்படும் சூடான உணர்ச்சி. "பகலில் பலவீனமான, மயக்கம் வருவது போன்ற உணர்ச்சியுடன் உடம்பில் குடு கண்டு பிறகு சிறிது வியர்வையுடன் மறையும்." அல்ப காரணங்களாலும் இரத்தப் பெருக்கெடுத்து நெருப்புப்போல் எரியும் குணமுள்ள சீழ்ப் புண்கள். புணர்ச்சி செய்த பிறகு அல்லது இந்திரியம் வெளியே வரும்போது மூத்திரக் குழாயில் எரிச்சல். இரத்தம் அதிகமாய்ச் சேர்ந்துள்ள இடங்களில் எரிச்சல். சருமத்தில் சூடான உணர்ச்சி. சுரப்பிகளில் எரிச்சல். சுவாசகோசங்களில் எரிச்சல். குடல்களிலும் மலப்பையிலும் எரிச்சல். மூலங்களில் எரிச்சலும் அறிப்பும். தோள்பட்டைகளின் இடை வெளியில் சிற்சில இடங்களில் எரிச்சல்.

சிவசிவப்பு :—உடல் துவாரங்கள் சிவப்பாய் இருக்கும். காதுகள் மிகவும் சிவந்திருக்கும்! மூக்குத் துவாரங்கள் சிவந்திருத்தல்; கண் இமைகளும் சிவப்பாய் இருக்கும்; ஆசனவாயில் சிவ சிவப்பு; மூத்திரத் துவாரம் சிவப்பாய் இருத்தல்; யோனிக்கு மேலே உள்ள மூலை போன்ற உறுப்பு சிவந்திருத்தல்; வெடித்துப்போய் இரத்தம் கொட்

டுமோ வென்று நினைக்கும் அளவுக்கு உதடுகளில் அதிகமான சிவ சிவப்பு.

தோல் உறிதல் :—உடல் துவாரங்கள் சிவப்பாய் இருப்பதுடன் புண்ணுள்ள உணர்ச்சியுடனும் இருக்கும்; தோல் உறிந்தும் இருக்கும். மலம், மூத்திரம் போன்ற கழிவுகள் வெளியேறும் போது பச்சைப் புண் இருப்பது போன்ற உணர்ச்சியும் வலியும் காணப்படும். கழிவுகள் நாற்றமாகவும் தோலுறியச் செய்யும் குணமுள்ளவையாகவும் இருக்கும். நீர்க்கோர்வையில் வெளியாகும் கழிவுகள் அவை பட்ட இடங்களைத் தோலுறியச் செய்யும். வெள்ளை ஒழுக்குக் கழிவு பெண்ணின் பிறப்பு உறுப்புகளில் புண்ணையும் வலியையும் உண்டாக்கும். ஆசனவாயைச் சுற்றிலும் குண்டித் தட்டுகளுக்கு இடையே தோலுறிந்திருத்தல். காதுகளின் பின் பக்கத்தில் தோலுறிதல். உடம்பில் தோலில் மடிப்பு விழும் இடங்கள் எல்லாவற்றிலும் ஸல்பர் தோலுறியச் செய்யும்

ஊதா நிறம் :—வேக்காடு உள்ள இடங்கள் ஊதா நிறமாய்த் தோன்றும். சின்னம்மை ஊதா நிறமாய் இருக்கும். அக்கிப் படுவன் ஊதா நிறமாய் இருக்கும். தொண்டைப் புண்ணும் அவ்வாறே இருக்கும்.

அதிக இரத்தம் சேருதல் :—"ஒரு சில இடங்களில் மட்டும், அதாவது கண்கள், மூக்கு, மார்பு, அடிவயிறு, சிறுநீர்ப்பைகள், கைகள், கால்கள் அல்லது உடலின் ஏதோ ஒரு உறுப்பில், அதிக இரத்தம் சேர்ந்து தசைக் கட்டிகள் அல்லது விஷத்தன்மையுள்ள கெட்ட சதை வளர்ச்சி தோன்றுவதற்கு அடையாளமாய் விளங்கும்;

இக்குறி அனேகமாய் மாதவிடாய் மறையும் காலங்களில் ஏற்படும். காதுகளில் கார்ஜீன செய்யும் ஓசைகள் (செவி நரம்புகளின் அருகே அதிக இரத்தம் சேருவதால்).

அறிப்பு :–இரவில் சருமத்தில் கடுமையான அறிப்பு; சொறிந்தால் எரிச்சல்; அந்த இடங்களில் காற்றுப் பட்டாலும் தண்ணீரினுல் கழுவினுலும் வலி ஏற்படும். பெண்ணின் பிறப்பு உறுப்புகளின் வெளிப்புறத்தில் வேதனையை அளிக்கும் அறிப்பு. படுத்துக் கொண்டவுடன் பிறப்பு உறுப்புகளில் அறிப்பு. சருமம் காய்ந்து, கறடு முறடாய்ச் செதில்களாய் மாறிக் காமத்தைக் கிளப்பும் அறிப்புடன் இருக்கும்; சொறிந்தால் அறிப்பு குறைந்த போதிலும் பிறகு எரிச்சல் ஏற்படும்.

குத்தும் வலிகள் :–"இடது சுவாசகோசத்தின் வழியாகச் செல்லும் கூரிய குத்து வலிகள்; மல்லார்ந்து படுத்தாலும் சிறிய அசைவினுலும் கூட வலிகள் அதிகரிக்கும். இடது காதில் குத்து வலிகள்.

நாற்ற குணம் :—நாட்பட்ட காதுச் சீழ்; வெளிப்படும் கழிவுப் பொருள் அழுக்கடைந்தும் நாற்றமாகவும் இருக்கும். மூக்கிலிருந்து வெளியாகும் சளி நாட்பட்ட நீர்க்கோர்வையில் இருப்பதைப் போல் நாற்றம் வீசும்.கந்தகம் கலந்த ஐலவாயுவைப் போல் நெடியடிக்கும் மலம். மலத்தின் நாற்றம் வியாதியஸ்தரைப் பல மணி நேரம்விடாமல் சூழ்ந்துகொண்டிருக்கும்.நாற்றமும் பட்ட இடங்களில் தோலை உறிக்கும் காரகுணமும்உள்ள வெள்ளை ஒழுக்கு. வியர்வை நாற்றமாகவும் அருவருக்கத் தக்க வாசனை உள்ளதாகவும் அல்லது புளிப்பு நாற்றமாகவும் இருக்கும். உடம்பில் மனதுக்குப் பிடிக்காத

ஒரு வித நாற்றம் இருக்கும்; குளித்தாலும் நீங்காமல் வியாதியஸ்தருக்கு வெறுப்பை உண்டாக்கும்.

காலி உணர்ச்சி : மயக்க உணர்ச்சி :—காலை 10 அல்லது 11 மணிக்கு வயிற்றில் பலவீனமான, காலியாய் ஒன்றுமே இல்லாத அல்லது மயக்கம் வரும் உணர்ச்சி உண்டாகும்; எதையாவது சாப்பிட்டுத்தான் ஆகவேண்டும்; பகலில் அடிக்கடி பலவீனமான, மயக்கம் வருவது போன்ற உணர்ச்சி. மார்பு காலியாய்ப் பலவீனமாய்த் தோன்றுதல்; பேசுவது கஷ்டத்தை உண்டாக்கும்.

காற்றுப் பசி :—மூச்சுவிடத் திணறுதல்; அறையின் கதவுகளையும் ஜன்னல்களையும் திறந்து வைத்திருக்க விரும்புதல், முக்கியமாக இரவில்.

வியாதி பிடித்த சருமம் :—ஸல்பர் வியாதியஸ்தர்கள் சுபாவமாகவே அசுத்தமான பழக்க வழக்கங்கள் உள்ளவர்களாய் இருப்பார்கள். பலவகைப்பட்ட சரும வியாதிகளும் அவர்களைப் பிடித்துக் கொள்ளும். இவ்வளவு கோளாறுகள் இருந்த போதிலும் வியாதியஸ்தருக்குக் குளிக்கவோ அல்லது உடலைக் கழுவவோ வெறுப்பாய் இருக்கும். குளித்தால் அவருடைய உபாதிகள் அதிகமாகின்றன என்பதும் உண்மையான விஷயமே.

சருமம் காய்ந்து, செதில்களாய் மாறி வியாதி பிடித்திருக்கும்; ஒவ்வொரு சிறு காயமும் தவறாமல் வேக்காடுற்றுப் புண்ணாகும். மிக விரைவில் சீழ்க் கொள்ளும் குணமும் இருக்கிறது. சருமத்தில் முக்கியமாக மடிப்புகள் விழும் இடங்களில் தோல் உறியும்.

உடலின் பல்வேறு இடங்களிலும் அடை அடையாகச் சிரங்குக் கட்டிகள் தோன்றிய வண்ணம் இருக்

கும். அல்லது ஒரே ஒரு சிரங்குக் கட்டி மட்டும் தோன்றி அது ஆறியவுடன் மற்றொரு கட்டி தோன்றும்.

இரத்தத்தில் விஷப் பொருள்கள் கலந்த நிலைமைகள்:— பிள்ளைப் பெற்ற பிறகு கருப்பையிலிருந்து வெளியாக வேண்டிய கழிவு உள்ளே அமுக்கப்பட்டால் அல்லது சீழ்ப் போல் மாறி அச்சமயம் உண்டாகும் சுரத்தின் ஆரம்பத்தில் ஸல்பருக்கு உரிய பொதுக் குறிகள் சில இருந்திருந்தால் அந்நிலைமைகளை ஸல்பர் போற்றத் தக்க அளவுக்குச் சீர்படுத்துகிறது.

"டைபாய்டு சுரத்திலோ அல்லது இரத்தத்தில் விஷப் பொருள் கலந்த நிலைமைகளிலோ ஸல்பர் விசேஷமாகத் தேவைப்படுவதில்லை" என்று பாரிங்டன் கூறுவதை நான் ஆமோதிக்கிறேன். சுரம் ஏறி இறங்கும் வகையிலோ அல்லது விடாமல் அடிக்கும் வகையிலோ சேர்ந்ததாய் இருந்து டைபாய்டு நிலைமையை நெருங்கிக் கொண்டிருக்கும் போது கீழ்க் காணும் குறிகள் காணப்பட்டால் ஸல்பர் உபயோகமாகுமென்று அவர் சொல்கிறார். "வியாதியஸ்தர் சுரத்துடன் மந்தமாய்விடுவார். அவர் நாக்கு காய்ந்து ஓரங்களும் நுனியும் சிவந்திருக்கும். உங்கள் கேள்விகளுக்கு மிகவும் தாமதமாகவே பதில் அளிப்பார். சுரத்தினால் அவர் எரிந்து கொண்டிருக்கிறார் என்றே சொல்லலாம். இக்கேசுகளில் ஸல்பர் வியப்புறும் வகையில் வேலை செய்கிறது".

கோளாருண ஊட்டம்:— அழுக்குப் பிடித்து, வெளுத்துப் பஞ்சத்தில் அடிபட்டது போல் தோற்ற முள்ள குழந்தை. "குழந்தை சிறு கிழவனைப் போல் உடல் காய்ந்து சுருங்கிக் காணப்படும். தோல் தளர்ந்து மடிப்பு மடிப்பாய்த் தொங்கும்; சருமம் அனேகமாய் மஞ்சள் நிற

மாய்ச் சுருக்கங்களுடனும் தொள தொள என்று தொய்ந்தும் இருக்கும்". இவ்விதமான குழந்தை பல சமயங்களிலும் தன் கண்களைப் பாதி திறந்து கொண்டே தூங்கும்; தூக்கத்தில் துள்ளிக் குதிக்கும்; அடிக்கடி விழித்துக் கொள்ளும்.

தளர்ச்சி:—ஸல்பரில் காணப்படும் தளர்ச்சி ஆணின் பிறப்பு உறுப்புகளில் தான் பிரதானமாகக் காணப்படுகிறது. விரைகளும் விரைப் பையும் தளர்ந்து தொள தொள வென்று தொங்கும். மானி சில்லிப்பாய் இருக்கும்; மிக அபூர்வமாகவே விரைக்கும். புணர்ச்சி செய்ய முயற்சித்தால் அது அனேகமாகத் தோல்வியாகவே முடியும்; மிகச் சீக்கிரத்தில் இந்திரியம் நழுவிவிடும்.

முறை வைத்துத் தோன்றும் குணம்:—கடுமையான பசி (விசேஷமாக உடல் மெலியும் நோயில்) ஒவ்வொரு நாளும் காலை 11 மணிக்குத் தோன்றும். ஒவ்வொரு நாளும் காலை 11 மணி சுமாருக்குப் பலவீனமான, காலி உணர்ச்சி உண்டாகும்; சாப்பிட்டால் நீங்கும். வார மொரு முறையும் மாத மொரு முறையும் முறை வைத்துத் தோன்றும் குண முள்ள தலை வலி. பௌர்ணமி கழிந்த பிறகு ஒவ்வொரு தடவையிலும் தவறாமல் தோன்றும் கோளாறுகள். எட்டு நாட்களுக் கொரு முறையாகத் தோன்றும் காச நோய்.

மேல் ஏறும் குணம்:—கால்களின் பாரிச வாதத்தில் மத மதப்பு தொப்பூழ் வரை பரவி இருக்கும். வாத ரோகத்தில் வேக்காட்டினால் ஏற்படும் வீக்கம் உடலின் மேற் பகுதிக்குச் செல்லும் குண முள்ளவையாக இருக்கும்; அதாவது கால்களில் ஆரம்பித்து உடம்பின் மேல் பக்கம் வரை பரவி இருக்கும்.

திரும்பித் தோன்றும் குணம்:—இடைவிடாமல் திரும்பத் திரும்பத் தோன்றிக் கொண்டே இருக்கும் கோளாறுகள் (மாதவிடாய், இரத்தப் பெருக்கு, வெள்ளை ஒழுக்கு, முதலியவை); வியாதி அனேகமாகக் குணம் ஆகிவிட்டது என்று தோன்றும் சமயத்தில் மறுபடியும் மறுபடியும் பழையபடியே வியாதி திரும்பவும் தோன்றுதல்.

உள்ளே அமுக்கப்படுதல்:—ஸோரா விஷம், ஷய ரோக அறிகுறிகள் ஆகியவைகளை அடிப்படையாய்க் கொண்டு, உடம்பின் மேற் புறத்தில் களிம்புகள் முதலிய ஔஷதங்களைத் தடவி உள்ளே அமுக்கப்பட்ட சரும வியாதிகளின் காரணமாகத் தோன்றும் நாட்பட்ட வியாதிகள். காதுகளிலிருந்து வெளியாகிக் கொண்டிருந்த கழிவை அடக்கியதால் தோன்றும் கோளாறுகள்; காது கேட்பது மந்தமாகும்; காதுகளில் ஓசைகள் உண்டாகும். சருமக் கோளாறுகளை அமுக்கியதால் உண்டாகும் மூளைக் கோளாறுகள். சரும வியாதிகளை உள்ளே அமுக்கியதால் தோன்றும் கேசுகளில் ஸல்பர் வியாதியை உள்ளிருந்து வெளியே தள்ளுகிறது. சருமக் கோளாறு பழையபடி சருமத்தில் தோன்றி வியாதியஸ்தர் குணமடைகிறார்.

அம்மைக் குத்திக் கொண்டதால் நேரும் கோளாறுகள்:—"அம்மை குத்திக் கொண்டதால் உண்டாகும் பயங்கரமான விளைவுகளைப் பல சமயங்களிலும் ஸல்பர் நீக்கிக் குணம் செய்கிறது. இவ்விஷயத்தில் தூஜா, மலாண்டினம் ஆகிய ஔஷதங்களுடன் போட்டி போடுகிறது" என்று கெண்ட் எழுதுகிறார். இந்த வழியில் ஸல்பரை நான் உபயோகித்ததே இல்லை. எல்லாக் கேசுகளையும் வியக்கத் தக்க வகையில் தூஜாவைக் கொண்டே குணம் செய்திருக்கிறேன்.

உடலின் எதிர்ப்புச் சக்தி குறைவாய் இருத்தல் :—மிகவும் கவனத்துடன் தேர்ந் தெடுத்துக் கொடுக்கப்பட்ட ஔஷதங்களாலும் எதிர்பார்த்த குணம் ஏற்படாமல் போகும் சமயங்களில், ஸல்பரை அது உபயோகிக்கப்பட வேண்டிய குறிகள் இல்லாவிட்டாலும் கூட ஒரு வேளை கொடுக்கலாம். அவ்வாறு கொடுத்தால் பெரும்பாலான கேசுகளில் அது உடலில் உறங்கிக் கிடக்கும் எதிர்ப்புச் சக்திகளைத் தட்டி எழுப்பி வியாதியைக் குணம் செய்து விடும் அல்லது அவ்வியாதியிலுள்ள சிக்கல்களை அறுத்து வேறு ஏதோ ஒரு ஔஷதம் உபயோகிக்க வேண்டிய தெளிவான குறிகளைத் தோன்றச் செய்யும். அதனால் அந்த வேறு ஏதோ ஒரு ஔஷதம் கொடுக்கப்பட்டவுடன் குணம் ஏற்படும். குறிகளுக்குத் தகுந்த ஔஷதம் ஸோரா விஷம் அதிகமாய் இருந்ததினால் குணம் செய்யமுடியாமல் போய் இருக்கிறது.

இவ்வகையைச் சேர்ந்த திடீர் வியாதிகளில் ஸல்பரை ஒரு வேளை கொடுத்துச் சில மணி நேரத்துக்குப் பிறகு வேறு ஔஷதம் கொடுக்கலாம். ஆனால் நாட்பட்ட வியாதிகளில் ஸல்பரை ஒரு வேளை கொடுத்து விட்டால் ஒரு வாரம் அல்லது பத்து நாள் காத்திருந்து பிறகே வேறு ஔஷதம் கொடுக்கலாம்.

"கவனமாகத் தேர்ந் தெடுக்கப்பட்ட ஔஷதங்கள் வியாதியைக் குணம் செய்யத் தவறும் போது உடலின் எதிர்ப்புச் சக்திகளைத் தட்டி எழுப்பப் பல சமயங்களில் ஸல்பர் தேவைப்படுகிறது (விசேஷமாகத் திடீர் வியாதிகளில் ஸல்பரும் நாட்பட்ட வியாதிகளில் ஸோரினமும்)" என்று க்ளார்க் குறிப்பிடுகிறார்.

உறிஞ்சும் வல்லமை : வெளியே தள்ளும் சக்தி :—"உட

லில் தோன்றும் வேற்றுப் பொருள்களை வெளி யேற்ற ஆர்னிகாவும் ஸல்பரும் பெரிதும் உதவி செய்கின்றன; இவை இரண்டும் நம்மிடம் உள்ள மிகப் பெரிய உறிஞ் சும் கருவிகளாகும். சுவாச கோச உறை, சுவாச கோசங் கள், மூளைச் சவ்வுகள், எலும்பு மூட்டுகள் ஆகிய இடங் களில் நீர்ச் சுரந்தோ அல்லது வேக்காடு ஏற்பட்ட தாலோ உண்டாகும் கழிவுப் பொருள்களை ஸல்பர் உறிஞ்சுகிறது. பிரயோனியாவுடன் ஸல்பர் ஒற்றுமையாய் வேலை செய்யக் கூடியது; சுவாச கோச உறை வேக்காட் டிலும் சுவாச கோச வேக்காட்டிலும் பிரயோனியாவைக் கொடுத்த பிறகு கழிவுகளை உறிஞ்சி யெடுக்கப் பல சம யங்களில் ஸல்பர் தேவைப்படுகிறது.

சருமத்திலுள்ள மச்சங்களை நீக்குகிறது.

மற்ற குறிகள்

"கடினமான, முடிச்சுகள் உள்ள, சுட்டது போல் காய்ந்த மலத்துடன் கூடிய மலச் சிக்கல்; மலம் கட்டை யாகவும் வலியுடன் வெளியாவதுமாக இருக்கும்; வலியினால் குழந்தை மலம் கழிக்கப் பயப்படும் அல்லது வலியினால் முதல் தடவைக்குப் பிறகு குழந்தை மலம் கழிக்க முயற்சி செய்யாது; மலச் சிக்கலும் வயிற்றுப் போக்கும் மாறி மாறித் தோன்றும்" "வயிற்றுப்போக்கு, வலி இல் லாமல் மலம் வெளியாகும்: விடியற் காலையில் படுக்கையை விட்டெழுந்து ஓடச்செய்யும்; உள்ளே உள்ள பொருள்களை நிறுத்தி வைத்துக் கொள்ள முடியாத அளவுக்குக் குடல் கள் பலவீனமாய் இருப்பது போல் தோன்றும்." மாத விடாய் வழக்கத்தை விட மிக முன்னதாகத் தோன்றும்; ஏராளமான போக்குடன் இருக்கும்; பல நாட்கள் நீடிக் கும். குழந்தை இருப்பது போல் அடிவயிற்றில் அசைவு-

கல்லீரலில் நாட்பட்ட வேக்காடு. குழந்தையின் உச்சிக் குழி மிகத் தாமதமாய் மூடிக் கொள்ளுதல். தூங்கும் போது உறக்கப் பேசுதல். இந்திரியம் நீர்த்துத் தண்ணீர் போலவும் அதன் இயற்கை வாசனை கெட்டும் இருக்கும். எலும்பு மூனைகளில் வீக்கம் முதலிய எலும்புக் கோளாறுகளும் முதுகெலும்பு வலைந்து போவதும். கடைசியாக ஏற்பட்ட கருச் சிதைவுக்குப் பிறகு மாதவிடாய்க் காலங்களில் ஒவ்வொரு தடவையும் ஏராளமான இரத்தப் பெருக்கு. இன்பமான கனவுகள், பாடிக் கொண்டே விழித்துக் கொள்ளுதல். இரவில் தானாகவே மல்லார்ந்து படுத்துக் கொள்வார். மார்பில் சளியினால் அதிகமான கற கறத்த ஓசை.

உறவு :—பின் கொடுக்கப்படக் கூடியவை : கல். கார்ப், கல். பாஸ், லூகபோடியம், ஸர்ஸபரில்லா, ஸேபியா, பல்ஸடில்லா. ஸல்பர், கல். கார்ப், லூகபோடியம்; ஸல்பர், ஸர்ஸபரில்லா, ஸேபியா இவ்வௌஷதங்களை இங்கு எழுதப் பட்டுள்ள வரிசைப்படியே உபயோகிக்கவேண்டு மென்பது குறிப்பிடத் தக்கது.

கல். கார்புக்கு, ஸல்பர் முறிவாகும். ஆதலால் ஸல்பருக்குப் பிறகு தான் கல். கார்பைக் கொடுக்கலாம். மெர். சொலு. வுக்குப் பிறகு ஸல்பர் நன்முய் வேலை செய்யும்.

அகோனைட், ஆலோ, நக்ஸ் வாமிகா, பல்ஸடில்லா ஆகிய வைகளுக்குப் பிறகு ஸல்பர் நன்முய் வேலை செய்யும். அகோனைட் முற்றினால் ஸல்பர். சுவாசகோச வேக்காட்டிலும் மற்ற திடீர் வியாதிகளிலும் அகோனைட்டுக்குப் பிறகு ஸல்பர் மிக நன்முய் வேலை செய்கிறது.

ஒப்பிடுதல் :—மாதவிடாய் மறையும் காலத்தில் சூடான உணர்ச்சிகள் (அமில் நைட்ரேட், காலி பைக். கல். கார்ப், ஸ்டான்னம்; வெராட்ரம் ஆல்பம்). குளிக்க வெறுப்பு

(ஆண்ட்டிம், க்ரூடம், க்ளமேடிஸ், ஹிப்பார் ஸல்பர், ரஸ் டாக்ஸ், ஸேபியா, ஸ்பைஜீலியா). மூச்சுக் காற்று சூடாய் இருத்தல் (கல். கார்ப், ரஸ் டாக்ஸ்). புணர்ச்சி உறுப்புகள் சில்லிட்டுத் தளர்ந்து விரைப்பு இல்லாமல் இருத்தல் (கலேடியம், லூக போடியம், நேட்ரம் மூர்). பாதங்கள் சில்லென்றிருத்தல் (பெல்லடொன்னா, கல். கார்ப், ஸேபியா). தூக்கத்தில் அதிக மாய்ப் பேசுதல் (பல்ஸடில்லா). பால் உடலுக்கு ஒத்துக் கொள்வதில்லை. (கார்போ வெஜி, ஸேபியா). அடிக்கடி கொஞ்சங் கொஞ்சமாகச் சாப்பிடும் பசி (ஸீனா. நேட்ரம் மூர். பாஸ்பரஸ், ஸ்டாபிஸாக்ரியா). இரவில் சாப்பிடுவதற் காகத் தூக்கத்திலிருந்து எழுந்திருக்கவேண்டி வருதல். (பாஸ்பரஸ், ஸோரினம்).

குறிப்புகள் :—தூக்கம் இல்லாத வியாதியஸ்தருக்கு ஸல்பரை இரவில் கொடுத்தால் தூக்கத்தை உண்டு பண்ணும். மற்றவர்களுக்குத் தூக்கம் வராமல் செய்துவிடும் அல்லது நல்ல தூக்கம் வராது. இதன் உண்மையை நன்கு அறிந்து கொண்டதான் ஒரு இரவில் ஸல்பர் 30 ஒரு வேளை சாப்பிட்டேன். அன்றிரவு முழுவதும் கண்களை ஒரு தடவைகூட கொட்டவில்லை என்று தான் நினைக்கி றேன்.

———

ஸல்ப்யுரிக் ஆஸிட்

(SULPHURIC ACID)

முன்னுரை:—உடலைக் கடுமையாய் உள்ளூரத் தாக்கும் கோளாறுகளால் (அக்கோளாறுகள் அனேகமாய் மேக வெட்டை அல்லது க்ஷய சம்பந்தமுள்ளதாய் இருக்கும்) பலவீனம் தோன்றி அப்பல வீனம் வியாதிகளுக்குத் தகுந்த படியாக இல்லாமல் அளவு கடந்து இருப்பதுடன் வியாதியஸ்தருக்கு உடலின் உட்புறத்தில் நடுங்கும்

உணர்ச்சியும் உண்டாகும். மிக நுண்ணிய அளவு களிலுள்ள நமது ஔஷதங்களுக்கு உடலுக்கு வலுவை ஊட்டும் சக்தி இருப்பதை நம்பாதவர்கள் இவ்விதப் பல வீனமுள்ள வியாதியஸ்தருக்கு இவ்வௌஷதத்தை 200 வீரியத்தில் ஒரே ஒரு வேளைமட்டும் கொடுத்துப் பார்க்க வேண்டும். அரைமணி நேரத்துக்குள்ளாக வியாதி யஸ்தர் பலம் பெறுவார். இவ்விதம் மிக விரைவில் ஏற் பட்ட பலம் உட்கொள்ளப்பட்ட சில மாத்திரைகளின் எடையைவிடப் பல கோடி மடங்கு அதிகமாய் இருக்கும். எத்தனையோ தடவைகள் இவ்விதமான நிலைமைகளில் ஸல்ப்யுரிக் ஆஸிட் ஒரு வேளை கொடுத்து நான் மேலே கூறப்பட்ட விஷயம் உண்மையென்பதைக் கண் கூடாகக் கண்டிருக்கிறேன். ஔஷதம் வியக்கத்தக்க முறையில் வேலை செய்திருக்கிறது. சில சமயங்களில் உடம்பின் உட் புறத்தில் நடுங்கும் உணர்ச்சி என்னும் குறி காணப்படுவ தில்லை. அப்போதும் இவ்வௌஷதம் நன்முகவே வேலை செய்திருக்கிறது.

பொதுவான குறிகள்

தகுதி :—வயதானவர்கள் ; விசேஷமாகப் பெண் களுக்கு மாதவிடாய் மறைந்த பிறகு ; அதிகக் கறுமை இல்லாத தலைமயிர் உள்ளவர்கள் ; உடலை உள்ளூர அறித்துக் கொண்டிருக்கும் ஏதோ ஒரு வியாதியுள்ள வர்கள் ; உடலில் புளிப்பு நாற்றம் உள்ள குழந்தைகள்.

மனம் :—மனதில் வெறுப்பு. தனக்கு மிகவும் அவ சரம் என்று நினைத்தல் ; எல்லா விஷயங்களையும் அவ சரமாகச் செய்யவேண்டும். அறிவுத்திறமை மங்கு தல். "கேள்விகளுக்குப் பதில் சொல்ல விரும்பாமை ; இது பிடிவாதத்தினால் ஏற்படவில்லை ; திறமையின் மையே காரணம்.

உடல்:—முகம் வெளுத்தல். முகத்தில் சில இடங்கள் காய்ந்து சுருங்கி இருக்கும். உதடுகள் வெடித்துத் தோல் உறியும். ஈறுகள் வீங்கி அல்ப காரணங்களாலும் இரத்தப் பெருக் கெடுக்கும். மூச்சுக் காற்று மிக நாற்றமாய் இருக்கும். உமிழ்நீர் ஏராளமாக உற்பத்தியாகுதல். புளிப்பான ஏப்பங்கள். உடம்பு புளிப்பு நாற்றம் அடித்தல். உடலின் உட்புறத்தில் நடுக்கத்துடன் பலவீனம். சாராயம் குடிக்க அதிக விருப்பம். பற்கள் மிகச் சீக்கிரமாகச் சொத்தையாகுதல். தலைமயிர் நரைத்து உதிர ஆரம்பித்தல்.

உபாதி கூடுதல்:—திறந்த இடங்களில் இருப்பது வியாதியஸ்தருக்கு ஒத்துக் கொள்ளாது.

உபாதி கூடுதல்: (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):—தண்ணீர் குடித்தால் வயிற்றினுள் சில்லிப்பு உணர்ச்சி உண்டாகும்; அதனால் தண்ணீரை வேறு பானங்களுடன் கலந்தே சாப்பிடவேண்டும். உபாதிகள் காலை வேளையில் கூடுதலாகும்.

விசேஷக் குறிகளின் விளக்கம்

மெதுவாய் அதிகரித்தல்: திடீரென்று மறைதல்:—வலிகள் மெதுவாய் ஆரம்பிக்கும்; கொஞ்சங் கொஞ்சமாய் அதிகரித்து உச்சநிலையை அடையும்; பிறகு திடீரென்று மறைந்துவிடும். இவ்விதம் அடிக்கடி ஏற்படும். திடீரென்று தோன்றுவதும் மறைவதுமாய் உள்ள வலிகளுக்கு நமது மெட்டீரியா மெடிகாவில் இரண்டாவது ஔஷதமாக இதுவரை எதுவுமே அமையவில்லை. இவ்விதமான வலி காதுகள் (காது வேக்காடு), முகம் (முகத்தில் நரம்பு சம்பந்தமான வலி), பற்கள் (நரம்பு சம்பந்தமுள்ள பல்வலி) ஆகிய இடங்களில் காணப்படும்.

பலவீனம்: உடலின் உட்புறத்தில் நடுக்கம்:—பலவீனமும் சோர்வும். பலவீனம் வியாதிக்குத்தக்கதாய் இல்லாமல் அளவுகடந்திருத்தல். பல சமயங்களில் முக்கியம் என்று சொல்லக் கூடிய குறி ஒன்றுகூட இல்லாமல் இருப்பதும் உண்டு. அவ்விதப் பலவீனத்தை ஸல்ப்யுரிக் ஆஸிட் நிச்சயமாய் நீக்கும். ஆனால் அப்பலவீனம் நீடித்ததாகவும் உடலை உள்ளூரத் தாக்கிக்கொண்டிருக்கும் கோளாறினால் ஏற்பட்டதாகவும் இருக்க வேண்டும்.

உடலை உள்ளூரத் தாக்கிக் கொண்டிருக்கும் கோளாறுகளை அதனதன் முக்கியத்துக்குத் தக்கபடி வரிசைக்கிரமமாகக் கீழே குறிப்பிட்டிருக்கிறேன். ஆனால் இது என்னுடைய சொந்த அபிப்பிராயமே. கூயரோகம், மேகக்கிரந்தி, மேகவெட்டை.

விசேஷத்தன்மை வாய்ந்த இப்பலவீனம் பல சமயங்களில் உடலின் உட்புறத்தில் நடுங்கும் உணர்ச்சியுடன் சேர்ந்து காணப்படும் (உண்மையான நடுக்கம் இருக்காது). அச்சமயத்தில் ஸல்ப்யுரிக் ஆஸிட் நிச்சயமாய் வேலை செய்யும். செய்ய வில்லையென்றால் காலம் கடந்து போய் விட்டதென்றுதான் கூற வேண்டும்.

பேசச் சிரமத்துடன் மார்பில் அதிகப் பலவீனம்.

குடிகாரர்களுக்கு உடலினுட்புறத்தில் உண்டாகும் நடுக்கம்.

புளிப்புக் குணம்:—குழந்தையின் உடல் கவனமாய்க் குளித்து விட்ட பிறகும் புளிப்பு; நாற்றம் வீசும். வயிற்றில் புளிப்பு; வயிற்றிலும் தொண்டையிலும் எரிச்சல்; புளிப்பான, காரமான ஏப்பங்கள். மேல் வயிற்றில் கடுமையான எரிச்சல். பற்களைக் கூசச் செய்யும் புளித்த

ஏப்பங்களுடன் மேல் வயிற்றில் எரிச்சல். (ஏப்பம் கெட்ட நாற்றமாகவும் இருக்கலாம்).

இரத்தப் பெருக் கெடுக்கும் குணம் (கறுப்பு நிற முள்ள இரத்தம்):—உடலின் துவாரங்கள் எல்லாவற்றிலிருந்தும் கறுப்பு நிறமுள்ள இரத்தப் பெருக் கெடுத்தல். நாட் பட்ட, தூங்கி வழிந்து கொண்டிருக்கும் புண்களிலிருந்து மெல்லிய, கறுப்பான இரத்தம் கசியும். சுவாச கோசங் களிலிருந்து ஏராளமான இரத்தப் பெருக்கு.

விரைப்பான உணர்ச்சி:—"நீர்க் கோர்வையுடன் நெற் றியில் விரைப்பான உணர்ச்சி." "முகத்தில் விரைப்பு அல்லது முட்டையின் வெள்ளைப் பொருளைத் தடவிக் காய்ந்து விட்டது போன்ற உணர்ச்சி", வயிற்றில் விரைப்பு. கணுக் கால்களில் பிடிப்பு.

புண்ணுகுதல்: சாக்காடு: தோல் உறிதல்:—தாய்ப் பால் குடிக்கும் குழந்தையின் அல்லது அதன் தாயின் வாய் புண் ணுய் இருத்தல்; ஈறுகளிலிருந்து அல்ப காரணங்களாலும் இரத்தம் வருதல். புண்கள் வேகமாய்ப் பரவும். வாயிலுள்ள புண்கள் மிக வேகமாய்ப் பரவும். "வாய், ஈறுகள் அல்லது அவ்விடம் முழுவதுமே புண்ணுகும்". கால்களில் அழுகிய புண்கள். குடிகாரர்களுக்கு உண்டா கும் புண்கள். காயம் பட்ட பிறகு அவ்விடத்தில் சாக் காடு தோன்றும் குணம், விசேஷமாக வயதானவர் களுக்கு. நடக்கும் போதும் எழுந்திருக்கும் போதும் இவ்விதமான அல்ப காரணங்களால் கூட தோல் உறிதல்.

அடிபட்டதால் ஏற்படும் கோளாறுகள்:—காயம்படுதல், கீழே விழுதல், இடித்துக் கொள்ளுதல், கூர்மை இல் லாத முனைகளுள்ள பொருள்களால் அழுத்தப்படுதல்,

ஊமைக் காயங்கள் முதலிய காரணங்களால் தோன்றும் கோளாறுகள். படுக்கைப் புண்களைப் பல சமயங்களிலும் ஸல்ப்யுரிக் ஆஸிட் ஆற்றிவிடுகிறது. கறுப்பும் நீலமும் கலந்த, பல நாட்களாக நீடித்திருக்கும் புள்ளிகள் (அடிபட்டதின் விளைவு) ஸல்ப்யுரிக் ஆஸிட்டினால் மறைகின்றன.

"உடலின் மிருதுவான இடங்களில் ஏற்படும் காயங்களில் ஆர்னிகாவுக்குப் பிறகும் சுரப்பிகளில் ஏற்படும் காயங்களில் கோனியத்துக்குப் பிறகும் எலும்புகளில் ஏற்படும் காயங்களில் ரூடாவுக்குப் பிறகும் ஸல்ப்யுரிக் ஆஸிட் வேலை செய்கிறது" என்று க்ளார்க் எழுதியிருக்கிறார்.

கரு நீல நிறம்; இரத்தச் சிவப்பு: நீலம்:—கரு இரத்தம் குழம்பும் விஷயம் மேலே குறிக்கப்பட்டுள்ளது. பழய தழும்புகள் இரத்தச் சிவப்பாக அல்லது நீலமாக மாறி வலி உண்டாகும். சருமத்தில் நிறம் மாறிய, சிவந்த, அறிப்புள்ள அடை போன்ற கோளாறுகள். சருமத்தில் இரத்தம் போல் சிவந்த புள்ளிகள் (இது மேகக் கிரந்தியினால் ஏற்பட்டிருக்கலாம்). அடிதடிக் காரணங்கள் எதுவும் இல்லாமல் கரு நீலப் புள்ளிகள் தானாகவே ஏற்படுவதும் உண்டு. (என்னுடைய வியாதியஸ்தருக்கு அடிதடிக் காரணம் எதுவும் இல்லாமல் தொடைகளில் பல காலமாய் நீடித்திருந்த இவ்விதப் புள்ளிகளை ஸல்ப்யுரிக் ஆஸிட்டினால் நீக்கிக் குணம் செய்திருக்கிறேன்.

மந்தமான அமுக்கும் உணர்ச்சி:—கூர்மையற்ற முனையுள்ள ஒரு கருவியினால் அழுத்திக் கொண்டிருப்பதைப் போன்ற வலி.

தளர்ச்சி:—யோனி தளர்ந்து வெளியே நழுவிச் சாக்காடு உண்டாகும். விரைப்பை தளர்ந்து தொங்கும். காம உணர்ச்சி எதுவும் இல்லாமல் இந்திரியம் வெளிப்படும். வயிற்றில் சில்விப்பான, தளர்ந்து விட்ட உணர்ச்சி. "வலிகள் அதிகமாவதும் திடீரென்று தளர்ந்து விடுவதும்" (அதாவது மறைந்து விடுதல்).

சில்லிப்பு உணர்ச்சி:—வயிற்றினுள் சில்லிப்பு உணர்ச்சி. தண்ணீர் வயிற்றினுள் சில்லிப்பை உண்டாக்கும். கூடான உணவு உட் கொண்ட மறுகணமே சில்லிப்பான வியர்வை தோன்றுதல்.

கூடான உணர்ச்சி: எளிதிலே வியர்வை உண்டாகுதல்:—கூடான உணர்ச்சி, விசேஷமாக மாதவிடாய் மறையும் காலத்தில். இடைவிடாமல் கூடான உணர்ச்சிகளும் பலவீனமும், நடுங்கும் உணர்ச்சியும் பரபரப்பும்.

நாட்பட நீடிக்கும் குணம்:—மேல் வயிற்றில் நாட்பட்ட எரிச்சல். கண்களில் நாட்பட்ட வேக்காடு. பல காலமாகக் குடியில் ஈடுபட்டவர்களுக்குப் பல காலமாய் இருந்து வரும் பலவீனம். கால்களில் பல காலமாய் நீடித்தும் தூங்கி வழிந்து கொண்டும் இருக்கும் புண்கள்; அவைகளிலிருந்து அல்ப காரணங்களாலும் கறுப்பு நிற மூள்ள இரத்தம் கசிய ஆரம்பித்தல். சருமத்தில் கறுப்பாகவும் நீலமாகவும் பல காலமாய் இருந்து வரும் புள்ளிகள் நாட்பட்ட வயிற்றுப் போக்கு. அடி வயிறு நீண்ட நாட்களாய்த் தளர்ச்சியுற்றுக் கீழே தொங்கும்.

மற்ற குறிகள்

இருமிய பிறகு ஏப்பம் விடுதல். எழுதும்போது விரல்களில் நடுக்கம். குழந்தைக்கு ஏற்படும் வயிற்றுப் போக்

கில் மலம் சிறு சிறு துணுக்குகளாகவும் ஆரஞ்சு கலந்த மஞ் சள் நிறமாகவும் சளிப்பொருள் கலந்தும் வெளிப்படும். தூண்டுதல் ஏற்பட்ட உடனேயே மூத்திரம் கழிக்காததி னல் மூத்திரப்பையில் வலி. விஸ்கி (Whiskey) எனப் படும் பானங்களைப் பல காலமாய்க் குடித்து வரு வோருக்கு ஏற்படும் நாட்பட்ட சீரணக் கோளாறுகள்.

ஒப்பிடுதல்:—பற்களைக் கூச வைக்கும் புளிப்புக் குணம் (ரொபினியா). தண்ணீர் வயிற்றினுள் சில்லிப்பை உண் டாக்குதல் (எலாப்ஸ்). நன்றாய்க் குளித்த பிறகும் நாற்றம் வீசும் உடலுள்ள குழந்தைகள் (ஹிப்பார் ஸல்பர், மெக். கார்ப், ரீயம்). உள்ளூர உடலைத் தாக்கும் கோளாறுகளால் பலவீனமும் தளர்ச்சியும் தோன்றி வேறு குறிகள் இல்லா மல் இருத்தல் (ஸோரினம், ஸல்பர்). தனக்கு மிகவும் அவசரம் என்று நினைத்தல் (அர்ஜண்டம் நைட்ரிகம்). முட்டையின் வெள்ளைப் பொருள் முகத்தில் தடவிக் காய்ந்துவிட்ட உணர்ச்சி (அலுமினா).

குறிப்புகள்:—ஸல்ப்யூரிக் ஆஸிட் ஒரு பங்கும் சாரா யம் மூன்று பங்குமாகக் கலந்து அவ்வாறு கலந்ததைத் தினந்தோறும் மூன்று வேளைகள், வேளைக்கு 10 அல்லது 15 சொட்டுகள் வீதம் மூன்று அல்லது நான்கு வாரங்கள் சாப்பிட்டு வந்தால் சாராயம் குடிக்கவேண்டும் என்ற ஆசை அடங்கிப்போகும் என்று ஹெரிங் கூறுகிறார்.

ஸிபிலினம்

(SYPHILLINUM)

முன்னுரை:—மனித இனத்தின் மாபெரும் வைரி மேகக் கிரந்தியாகும். வியாதியுள்ளவருடன் புணர்ச்சி யில் ஈடுபடுவதாலும் பெற்றோர் மூலம் மக்களைப் பிடிக் கும் குணமுள்ளதாகையாலும் இவ்வியாதி உலக முழுவ

தும் பரவி இருக்கிறது. இந்நிலைமையிலே ஹோமியோபதி முறையில் இவ்வியாதிப் பொருளிலிருந்து தயாரிக்கப்பட்ட ஔஷதத்தை உபயோகிப்பது அவசியம்தான் என்பதை மறுக்க முடியாது. ஸிபிலினம் மேகக்கிரந்தி வியாதியின் முதல் நிலைமையில் ஒருபொழுதும் உபயோகமாவதில்லை. அல்லோபதி வைத்திய முறையினால் அணு அளவும் குணம் இல்லை என்று முடிவாகும் சமயத்தில் அதாவது பிறவியிலிருந்தே மேகக்கிரந்தியினால் தாக்கப்பட்டுள்ளவர்களுக்கும் வியாதி உடலிலே வேரூன்றிவிட்ட சமயத்திலும் ஸிபிலினம் தன் வெற்றி முரசைக் கொட்டிக்கொண்டு உபயோக மாகிறது.

முக்கியத் தன்மை பெற்ற இப்பல காரணங்களை முன்னிட்டு இவ்வௌஷதத்தைப் பற்றிச் சற்று விரிவாகவும் ஓரளவு விளக்கமான நடையிலும் எழுதவேண்டி இருப்பதாக இந்நூல் ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

பொதுவான குறிகள்

தகுதி:-மேகக்கிரந்தியை அடிப்படையாய்க் கொண்டு உண்டாகும் கோளாறுகள்; பிறவியிலிருந்தே மேகக்கிரந்தியினால் தாக்கப்பட்டு அவ்வியாதியின் பொதுவான சில குறிகள் காணப்படும் குழந்தைகள்; மேகக்கிரந்தி வியாதியுள்ளவர்களுக்கு ஏற்படும் வாதரோகக் கோளாறுகள். உடல் நரித்துத் தோல் சுருங்கிக் கிழக்களை யுடன் காணப்படும் சிறு குழந்தைகள். வழிச பரம்பரையாகச் சாராயம் குடிக்கும் பழக்கம் ஏற்படுதல்.

மேகக்கிரந்தியின் குறிகள் சமீபத்திலோ அல்லது பல நாட்களுக்கு முன்னதாகவோ உள்ளே அமுக்கப்பட்டு அதிக உடல் பலவீனமும், வியாதியின் அல்பமான ஏதோ ஒரு சில குறிகளும் மட்டும் உள்ள நிலைமையில் ஸிபிலி

னம் விசேஷமாகத் தேவைப்படுகிறது. இவ்வௌஷதத் தைப் பற்றித் தெளிவாய் அறிந்துகொண்ட ஹோமியோ பதியர்களுக்கு வியாதி என்ன என்பதைக் கண்டு பிடிக்க அதிகக் கஷ்டம் ஏற்படாது.

கீழே உள்ள குறிகளில் சில காணப்படும்.

ஞாபக சக்தி அழிதல். வெறுப்பும் அலட்சியமும். இரவைக் கண்டால் பயம். தலைமயிர் கொட்டுதல். இரவில் சிறிது வலி. வாயில் உமிழ்நீர் பெருகுதல். தூங்கி எழுந்த வுடன் குறிப்பிடத்தக்க அளவுக்குப் பலவீனம். வெளிச் சத்தைக் காணப் பிடிக்காது. முகத்தில் சுருக்கங்கள். உடல் மெலிவு. நாக்கின் நடுவில் நீளவாட்டில் வெடிப்பு. தூக்கம் இல்லாமை. இரவு நேரங்களில் வியர்வை.

"மேகக்கிரந்தி உள்ளவர்களுக்கும் வெளிப்பூச்சு ஔஷதங்களால் பறங்கிப் புண்ணை உள்ளே அமுக்கிய தால் தொண்டையிலும் சருமத்திலும் கோளாறுகள் தோன்றி வருஷக்கணக்கில் கஷ்டப்பட்டவர்களுக்கும் சிகிச்சை செய்ய ஆரம்பிக்கும் போது வேறு ஔஷதம் தேவைப்படும் குறிகள் தெளிவாய் இல்லாவிட்டால் இதனால் (ஸிபிலினம்) நன்மை உண்டாகும்." (H. C அல்லென்).

மனம் :—1. ஞாபகச் சக்தி அழிதல். பெயர்களையும் (புத்தகங்கள், மனிதர்கள், ஊர்கள் ஆகியவைகளின்) தேதி, நடந்த காரியங்கள் முதலியவைகளையும் நினைவுக் குக் கொண்டு வரமுடியாது. கணக்குப் பார்ப்பது கஷ்ட மாகவும் பெரிய வேலைபோல் தோன்றுவதும். வியாதி உண்டாவதற்கு முன்பு நடைபெற்ற விஷயங்கள் ஒவ் வொன்றையும் வியாதியஸ்தர் மறந்து விடாமல் இருப்

பது ஒரு வினோதமான விஷயம். 2. கவனம் இல்லாமை: பைத்தியம்: கவனம் இல்லாமல் இருப்பதுடன் மூளை கலங்கியும் இருக்கும். பெண்களைப் பற்றிய வரையில் அவர்கள் எந் நேரமும் தம் கைகளைத் தண்ணீரில் கழுவிக் கொண்டே இருப்பார்; இதை அடக்கவே முடியாது. கடைசியாக வருவது அறிவு மந்தம் (மேகக்கிரந்தி சம்பந்த முள்ள பைத்தியம்). 3. மனச் சோர்வு. நம்பிக்கை இழத் தல். தான் பிழைக்க மாட்டோமென்று நினைத்துப் புலம் புதல்; தன் வியாதி எப்பொழுதாவது குணமாகுமென்று நினைக்க மாட்டார். 4. பயம். தனக்குப் பைத்தியம் பிடித்துவிடும் அல்லது பாரிசவாதம் அனேகமாய் ஏற் பட்டுவிட்ட தென்று பயப்படுதல். இரவை நினைத்தால் பயம்; தூங்கி எழுந்தவுடன் உடல் களைப்பு ஏற்படும். அதன் காரணமாய் உண்டாகக் கூடிய கஷ்டங்களை நினைத்துப் பயம். இரவு நேரத்தில் உடல், மனம் ஆகிய இரு வகையிலும் தோன்றும் களைப்பு, காலையில் பயங்கரமாய்க் காணப்படுமே என்ற கவலையினால் இரவைக் கண்டால் பயம்; இரவைக்கண்டு பயப்படுவது பொறுக்க முடியாத அள வுக்கு அதிகமாகி இப்படிப் பயப்படுவதைவிடச் சாவதே மேலானது என்று தோன்றும். குறிகள் அதிகரிக்கும் சமயமான இரவில் கடுமையான பயம் ஏற்பட்டுப் பொழுது விடிய வேண்டுமென்று கடவுளை வேண்டுவார். பொழுது விடிந்து விட்டால் அவருடைய கோளாறுகளும் இரவுப் பயமும் மறைந்து விடுமல்லவா! (இது மாலையிலிருந்து காலை வரை உபாதிகள் கூடுதலாய் இருக்கும் குறி). ஸிபிலினத்தில் இரவுப் பயத்துடன் காலை வேளைப் பய மும் சேர்ந்திருக்கும். 5. கோபமும் பர பரப்பும்: ஆத்தி ரப் படுவார்; முறையிட்டுக் கொண்டே இருப்பார். அதி கப் பர பரப்பு; பெரும் பொழுது நடந்து கொண்டிருப் பார். காரணம் இல்லாமல் அழுவார்.

உடல் :—பார்வை மங்குதல். மேல் இமைகளில் வீக்கம். முகம் வெளுத்திருத்தல். மண்போல் மங்கிய நிறமுள்ள உடல். உதடுகளிலும் முகவாய்க் கட்டையிலும் புண்கள். நாக்கு சிவந்து தடிப்பாய் இருக்கும்; நீளவசத்தில் ஆழமான இரண்டு வெடிப்புகள் காணப்படும்; நாக்கின் நடுப் பாகத்துக்கு இரு பருங்கிலும் வெடிப்புகள். மூச்சுக் காற்று நாற்றம் வீசுதல். உடம்பே கெட்ட நாற்றம் அடிக்கும். மாமிசத்தில் வெறுப்பு. சாப்பிட விருப்பம் இல்லை. உணவில், அது எவ்வகையானதாய் இருந்தாலும், வெறுப்பும் ஏற்படலாம். சாராயம் கலந்த பானங்களில் மட்டுமே விருப்பம் இருக்கும். நாட்பட்ட மலச்சிக்கல். மூத்திரக் குழாயின் நுனியில் அறிப்பு. இரவில் மூத்திரம் கழிக்க அடிக்கடி தூண்டுதல் ஏற்படும். உடலில் பல்வேறு இடங்களில் மூட்டைப் பூச்சிகள் கடிப்பது போன்ற கடிக்கும் உணர்ச்சி இரவில் மட்டுமே உண்டாகும்; இரவில் அதிக நிலை கொள்ளாத தன்மை; காலை ஒரே விதமாக வைத்திருப்பது முடியவே முடியாது. துளிக்கூடத் தூக்கம் இல்லாமை. நள்ளிரவு கழிந்தவுடன் மிகச் சீக்கிரத்தில் விழிப்பு உண்டாகிப் பிறகு விடியற் காலை 6 மணி வரை தூக்கம் வராது. தலைமயிர் கொட்டுதல். கண்களில் குளிர்ந்த காற்று வீசும் உணர்ச்சி. வெளிச்சத்தில் கடுமையான கண் கூச்சம். நகங்கள் ஒழுங்கீனமாய் வளரும்.

உபாதி கூடுதல் :—இரவில் வியாதியஸ்தருக்கு உபாதிகள் அதிகரிக்கும்; சூரியன் அஸ்தமித்த திலிருந்து உதயமாகும்வரை உபாதிகள் கூடுதலாய் இருக்கும். கடுமையான குளிரோ அல்லது கடுமையான வெப்பமோ வியாதியஸ்தருக்குத் தாங்காது. ஈரக் கசிவுள்ள பருவக்காலம்;

வெப்பமும் ஈரக்கசிவும் சேர்ந்துள்ள பருவநிலை ஸிபிலினம் வியாதியஸ்தரைப் பாடாய்ப் படுத்தும். கடல் அருகே உபாதிகள் அதிகமாகுதல்.

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே:– இரவில்; சூரியன் அஸ்தமித்த திலிருந்து உதயமாகும்வரை; ஈரிக்கசிவுள்ள பருவநிலை; இடி இடித்து மழை பெய்யும் போது; குளிர்காலத்தில்; கடல்அருகே இருந்தால் ஆகிய காரணங்களால் உபாதிகள் கூடுதலாகும்.

எல்லாக் கோளாறுகளும் இரவில் அதிகமாகும். மஞ்சள் நிறமுள்ள, ஏராளமான வெள்ளை ஒழுக்கு இரவில் அதிகரிக்கும். வலது சினைப்பையில் வலி இரவில் அதிகமாகித் தூக்கத்தைத் தடைசெய்யும். கடினமான இருமல் இரவில் அதிகமாகிவிடும்; அடிக்கடி இருமல் ஏற்பட்டால் தூங்குவதற்கு முடியாமல் போகும். சப்பைகள், தொடைகள், முதுகு, எலும்புகள் ஆகியவைகளில் உள்ள வலிகள் இரவில் கூடுதலாகும். நரம்புவலி, தொடைநரம்பு வாதம், தலைவலி, காசம், இருமல்கள் முதலியவை சூரிய அஸ்தமனத்திலிருந்து உதயம் வரை அதிகமாய் இருக்கும். காலையில் கண் விழித்தவுடன் விவரிக்கமுடியாத அளவு களைப்பு. முதுகு வலி (மூத்திரக்காய்களின் அருகில்) மூத்திரம் கழித்த பிறகு அதிகமாகும். கோளாறுகள் குளிர்காலம், வெப்பம் மிகுந்த கோடைக்காலம் ஆகிய இரு பருவங்களிலும் கூடுதலாகும். இடிஇடித்து மழை பெய்யும்போது தோன்றும் காச வியாதி.

உபாதி குறைதல்: மலைகளை வியாதியஸ்தர் விரும்புவார். அங்கு சென்றால் அவருக்குச் சௌகரியமாய் இருக்கும்.

உபாதி குறைதல் :—(ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே):—தலைவலி பொழுது விடியும்போது நின்றுவிடும்.

குட்டினுல் தலைவலி தணியும். கண்களைப் பற்றிய வலிகள் குளிர்ந்த தண்ணீரினுல் குறையும். கால்களில் உள்ள வலி அவ்விடங்களில் குளிர்ந்த தண்ணீரை ஊற்றினுல் மட்டுப் படும்.

விசேஷக் குறிகளின் விளக்கம்

கடுமைக் குணம்: நரம்பு வலி: எலும்பு வலிகள்:— கடுமையான வலிகளும் உபாதிகளும் சூரியன் அஸ்தமித்த வுடன் ஆரம்பித்து உதயமானவுடன் மறையும். மேகக் கிரந்தி யினுல் குற்றுயிரும் குலை உயிருமாகி விட்ட வியாதியஸ்தர் களுக்கு நரம்பு சம்பந்த மூள்ள கடுமையான தலை வலி. இக்கடுமையான வலியினுல் இரவில் தூக்கம் கெடுவது டன் வாய் பிதற்றலும் தோன்றும். "தலையில் மாலை 4 மணிக்கு நரம்பு சம்பந்தமான தலை வலி ஆரம்பித்து நள்ளிரவு வரை சிறிது சிறிதாக அதிகமாகிப் பிறகு படிப்படியாய்க் குறைந்து கொண்டே வந்து பொழுது விடிந்தவுடன் நின்று விடும்." "பின் தலையில் நசுக்கு வது போல் கடுமையான வலிகள்." எலும்புகளில் கடுமை யான வலிகள்; அவைகளை வாள் கொண்டு அறுப்பது போல் தோன்றுதல். இரவில் படுக்கையில் படுத்திருக்கும் போது நீளமாய் இருக்கும் எலும்புகளில் (விசேஷமாகக் குதிரை முக வெலும்புகளில்) கடுமையான வலி. மேகக் கிரந்தி சம்பந்த மூள்ள விழித் திரை வேக்காடு; வலி ஒவ்வொரு இரவிலும் அதிகமாய்க் கொண்டே போகும்; வலி சரியாக இரவு 2 மணிக்கு ஆரம்பித்து விடியற் காலை 5 மணிக்கு நின்றுவிடும். அளவு மீறிய வலியுள்ள மாதவிடாய், ஒவ்வொரு தடவையும் போக்கு ஒழுங்கு தவறியும் தாமதித்தும் தோன்றுவதும் அளவு குறை வாகவும் இருக்கும்.

நாட்பட நீடிக்கும் குணம்: விடாப் பிடியாகப் பிடித்திருத்தல்: திரும்பத் திரும்பத் தோன்றுதல்:—உடலின் ஏதோ ஒரு இடத்தில் விடாப் பிடியாய் வலி காணப்படுதல். சீழுள்ள கட்டிகள் ஒன்றன் பின் ஒன்றாகத் தோன்றிக் கொண்டே இருத்தல். விழித் திரையில் அடிக்கடி தோன்றும் நாட்பட்ட வேக்காடு. பல வருஷங்களாய் இருக்கும் பிடிவாத குணமுள்ள மலச் சிக்கல்; மலப்பை அடிக்கடி சுருங்கிக் கட்டப்பட்டது போல் இருத்தல்; எனிமாக் கொடுத்தால் பிரசவ வலிகளை யொத்த வேதனை உண்டாகும். மூச்சுக் காற்று நாற்றமடித்தல், உடல் நிறம் மங்கிப் போகுதல், வாடி வதங்கிய தோற்றம் ஆகிய குறிகளுடன் நாட்பட்ட மலச் சிக்கல்.

அங்கும் மிங்கும் ஓடும் குணம்:—வலிகள் உடல் முழுவதும் ஓடும். "அங்கு மிங்கும் கூரிய வலிகள்". ஸிபிலினத்தில் காணப்படும் இடம் மாறும் குண முள்ள இவ் வலிகள் வியாதியஸ்தரை அடிக்கடி இடம் மாறச் செய்யும். அங்கு மிங்கும் இடம் மாறும் அக்கிப்படுவன்.

நீளவாட்டில் வலி:—ஒரே நேர் கோட்டிலுள்ள உறுப்புகளில் வலி ஏற்படுதல். நீளவாட்டில் வலியுள்ள தலை வலி. தொடை நரம்பு வாதம் இரவில் அதிகமாகிப் பொழுது விடியும் சமயத்தில் சௌகரியமாகும்.

சிறிது சிறிதாக அதிகமாவதும் மறைவதும்:—வலிகள் படிப்படியாக அதிகமாகி அதே போல் குறையும்.

வாத ரோகம்:—தோள்பட்டை எலும்பு மூட்டில் அல்லது தசைகளில் வாத ரோகம்; கையைப் பக்கவாட்டில் தூக்கினால் வலி அதிகரிக்கும்.

சொத்தையாகுதல்: புண்ணாகுதல்: வெடிப்பு: பவுத்திரச் சிரங்கு:—எலும்புகளில் சொத்தை விழுதல்; முது

கெலும்பும் மற்ற எலும்புகளும் வளைந்து போகுதல்; இவ்வெலும்புகளைத் தொட்டால் புண் இருப்பது போல் தோன்றும்: இடைவிடாத வலியும் இருக்கும்; வலி இரவில் அதிகமாகும். நீள எலும்புகளில் வலி.

வாய், மூக்கு, உதடுகள், குரல்வளை (குரல் அழிந்து போகும்), கால்கள், கருப்பையின் வாய் முதலிய உறுப்புகளில் புண்கள். இப்புண்களில் ஆறும் அறிகுறிகளே காணப்படாமல் இருப்பது ஒரு விநோதமான விஷயம். மூக்கு தாக்கப்பட்டால் மிகக் கடுமையான நாற்ற முள்ள நீர் ஒழுக்கும் நாற்ற முள்ள பொறுக்குகளும் உண்டாகும். காதுகளிலிருந்து நாற்றமுள்ள சீழ் வருதல். கைகளின் பின பக்கங்களில் ஒழுங்கு இல்லாத புண்கள்.

வெடிப்புகளும் பவுத்திரச் சிரங்குகளும் ஸிபிலினத் திஞல் குணம் செய்யப்படக் கூடியவை. மேகக் கிரந்தி விஷ முள்ளவர்களுக்கு ஆசனவாயிலும் மலப்பையிலும் வெடிப்புகள்; நாக்கில் நீளவாட்டில் ஆழமான வெடிப்புகள்.

இவ்விதமான வெடிப்புகளை மேகக் கிரந்தி வியாதி யஸ்தர்களிடம் நான் பார்த்திருக்கிறேன். கத்தியினல் கிழிக்கப்பட்டது போலவே அவ்வெடிப்பு இருந்தது. இவ்வெளஷதம், அதாவது வீரியப் படுத்தப்பட்ட வியாதி விஷம், ஔஷதப் பரீட்சையில் வியாதியின் விளைவுகளைப் போலவே விசேஷத் தன்மை வாய்ந்த இவ் வெடிப்புகளை உண்டாக்கியிருப்பது ஆச்சரியமான விஷயமே. இவ்விதமான கேசுகளில் ஒன்றைக் கூட நான் சிகிச்சை செய்தது கிடையாது; ஆகையால் ஸிபிலினத் திஞல் இவ்வெடிப்புகள் குணமாகுமா என்று சொல்ல என்னல் முடியாது; ஆயினும் உயர்ந்த வீரியத்தில்

ஸிபிலினம் கொடுத்தால் குணமாகாது என்ற சந்தேகம் எனக்குக் கிடையாது.

அழிவு :—சுறுகளுடன் சேர்ந்திருக்கும் பாகத்தில் பற்கள் சொத்தையாகி உடைந்து விடும். குழந்தைகளின் பற்களில் குழி விழுந்திருத்தல். பற்கள் முழுவதுமே சிறுத்து இருப்பதுடன் நுனியில் குவிந்து (உளிப் பற்களைப் போல்) இருக்கும். பற்களின் நுனிகள் வாளின் பற்களைப் போல் காணப்படும் (பிறவியிலிருந்தே மேகக் கிரந்தி இருக்கிறது என்பதற்குப் பல சமயங்களில் இது ஓர் அறி குறி. மேகக் கிரந்தியினால் கைகளிலும் வாயின் மேல் அண்ணத்திலும் அழுகுதல்.

புண்ணுள்ள உணர்ச்சி :—உடலில் பல இடங்களில், முக்கியமாய் எலும்புகளில், தொட்டாலும் அமுக்கினாலும் வலி. தலையின் மேலே தொட்டால் புண் இருப்பதுபோல் அதிகமான வலி. கால் குதிரை முகவெலும்பில் மிகக் கடுமையான புண்ணுள்ள வலி.

ஏராளமான கழிவுகள் :—பிறந்த குழந்தைகளின் கண் வேக்காட்டில் ஏராளமான சீழ் வெளியாவதும் இரவில் தூங்கும்போது இமைகள் ஒட்டிக் கொள்வதும் (இரவில் உபாதிகள் அதிகமாவதற்கு ஓர் உதாரணம்); குளிர்ந்த தண்ணீரினால் சுத்தம் செய்தால் சௌகரியம் ஏற்படும். ஏராளமான, மஞ்சள் நிறமுள்ள வெள்ளை ஒழுக்கு ; தண்ணீர்போல் நீர்த்தும் இருக்கலாம் அல்லது வேறு விதமாகவும் இருக்கலாம் ; ஒவ்வொரு நாளும் ஆடைகளை மனைத்து விட்டுத் தொடைகள் வழியாக கீழ்க் கால்களுக்குக்கூட வழிந்து ஓடும். வியாதிபிடித்த குழந்தைகளுக்கு (பெண்) ஏராளமான, மஞ்சள் நிற

முள்ள வெள்ளை ஒழுக்கு (பிறவியிலிருந்தே மேகக்கிரந்திக்கு அடையாளம்). ஏராளமான உமிழ்நீர் உற்பத்தியாகித் தூங்கும்போது வாய் வழியாய் வழிந்தோடுதல்.

உடல் மெலிவு :—உடல் முழுவதுமே அதிகமாய் மெலிந்திருத்தல். உடல் வளர்ச்சி குன்றி மெலிந்தும் பலம் இல்லாமலும் இருக்கும் குழந்தைகள் (பிறவியிலிருந்து மேகக்கிரந்தி).

களைப்பு :—காலைவேளையில் பலவீனமும் மிகுந்த களைப்பும். மேகக்கிரந்தி வியாதியின் வரலாற்றுடன் இரவில் வியர்வை ஏற்படுவதும் அதிகப் பலவீனமும் உள்ளவர்கள்.

தூக்கம் இல்லாமை :—தூக்கம் இல்லாமை, விசேஷமாகச் சிறிது தூக்கம்கூட இல்லாமை என்பதும் ஸிபிலினத்தின் ஒரு முக்கிய குறியே. சில சமயங்களில் கடுமையான வலிகளால் வியாதியஸ்தருக்கு இரவில் தூங்க முடியாமல் போகும். மூட்டைப் பூச்சிகளால் கடிக்கப்படுவது போன்ற உணர்ச்சி, ஸிபிலினம் வியாதியஸ்தருக்கு இரவில் மட்டும் ஏற்படும்.

மஞ்சள் கலந்த பச்சை நிறம் :—கழிவுகள் மஞ்சள் அல்லது மஞ்சளும் பச்சையும் கலந்த நிறமாய் இருக்கும். வெள்ளை ஒழுக்கு மஞ்சளாக இருக்கும். உட்புறம் அழுகிப்போய் வெளிப்படும் கழிவு மஞ்சளாய் இருக்கும்; கெட்டியாகவும் மஞ்சளும் பச்சையும் கலந்த நிறமாகவும் நாற்றமாகவும் இருக்கும். "கெட்டியான, மஞ்சள் நிறமுள்ள நாற்றம் வீசும் வெள்ளை ஒழுக்குடன் முதுகின் குறுக்கில் இடைவிடாத வலி இருக்கும்."

கெட்ட சதை வளர்ச்சிகள் : சருமக் கோளாறுகள் : முண்டுகள் :—உடலின் பல்வேறு இடங்களில் குறிப்பாகச் சருமத்தை ஒட்டி எலும்புகள் அமைந்துள்ள இடங்

களில், கொப்புளங்கள் உள்ள சருமக் கோளாறுகள் அவைகளிலிருந்து மெல்லிய, காரகுணமுள்ள சீழ் வெளியாகி ஆறித் தழும்பாய் மாறியவுடன் குழிகுழியாய்க் காணப்படும். மேகக்கிரந்தியின் மூன்றுவது நிலைமையில் ஏற்படும் பிசின் போன்ற பொறுக்குகள். முகத்தில் அழுகுணிச் சிறங்குகளைப் போன்ற சருமக் கோளாறுகள். "வீரைகள், இந்திரிய நரம்புகள், விரைப்பை ஆகிய இடங்களில் தோன்றும் முண்டுகளை இவ்வௌஷதம் குணம் செய்திருக்கிறது." என்று கெண்ட் சொல்கிறார். தசைகள் கடினமான முண்டுகளாகவோ உருண்டைகளாகவோ மாறும் வாதரோகத்தில் ஸிபிலினம் தேவைப்படுகிறது. பாலுண்ணிகள், தலையில் முண்டுகள்கள் (மேகக்கிரந்தியின் மூன்றும் நிலைமை). வாயின்மேல் அண்ணம் வீங்கி முண்டுகளுடன் இருத்தல்.

சுரப்பிகள் தாக்கப்படுதல்: ஏராளமான வீக்கம்:—உடலின் பல்வேறு இடங்களிலுள்ள சுரப்பிகள், குறிப்பாகக் கழுத்தருகே இருப்பவை, பெரியதாகும்; கடினமாகிச் சிறிது வலியுடன் இருக்கும். முகம், தொண்டை, தலை ஆகிய இடங்களில் நிறைந்த உணர்ச்சியும் உப்பி இருத்தலும். தலையிலும் முகத்திலும் உள்ள சுரப்பிகள் ஏராளமாய் வீங்கியிருத்தல். கண் இமைகள் ஏராளமாய் வீங்கி இருத்தல். தொண்டைச் சுரப்பிகளில் நாட்பட்ட வீக்கம் (பிறவியிலிருந்து மேகக்கிரந்தி). கடைசிக் குறியைத்தடித்த எழுத்தில் குறிப்பிட்டது நான்தான்.

செப்பு நிறம்:—சருமக் கொப்புளங்கள் ஆறித்தழும்பிட்ட இடங்கள் குழியாய்ச் செப்புப் போன்ற நிறத்துடன் இருக்கும். "மனதுக்குப் பிடிக்காத ஒரு நாற்றத்துடன் செப்புப்போல் சிவப்பும் பழுப்பும் கலந்த நிறமுள்ள சருமக் கோளாறுகள் உடல் முழுவதும் காணப்படுதல்."

பாரிசவாதம்:—கை கால்களின் பாரிசவாதம், செவி நரம்புகளின் பாரிசவாதம்; அதனல் காது செவிடாகுதல், முழுச் செவிடாகவும் ஆகலாம். (ஸிபிலினத்தில் நீர்க்கோர்வையுடன் காதுகள் செவிடாவதும் உண்டு). செவிட்டுத்தன்மை கொஞ்சங் கொஞ்சமாக அதிகமாகி முடிவில் முழுச் செவிடாகுதல். கண் இமைகளில் பாரிசவாதம்; மேல் இமைகள் கவிந்து கொள்வதால் வியாதியஸ்தர் தூங்குவதுபோல் தோன்றும். முகத்தின் வலது பக்கத்தில் பாரிசவாதம். முகம் ஒரு பக்கமாய்க் கோணலாகிப் பேசவும் மெல்லவும் வாயினல் ஊதவும் சிரமம் உண்டாகும். கண் தசைகளின் பாரிசவாதம். இதனல் ஒரைக் கண்பார்வை, பார்க்கும் பொருள்கள் இரண்டிரண்டாகத் தோன்றுதல் முதலிய கோளாறுகள் ஏற்படும். மலப்பையின் பாரிச வாதம்; ஆசனவாய் நழுவி வெளியேவருதல். நாக்கு பாரிசவாதத்தினல் தாக்கப்பட்டது போல் இருத்தல்.

மேகக்கிரந்தி வரலாறு:—மேகக்கிரந்தி வியாதி ஏற்பட்ட வரலாற்றுடன் நாட்பட்ட தலைவலி. பல சமயங்களிலும் கடுமையாக இருக்கும். "மேகக் கிரந்தி வரலாற்றுடன் கூடிய கருப்பை, சினைப்பை பற்றிய கோளாறுகள்". (கெண்ட்). மேகக் கிரந்தியினல் உண்டாகும் வாதரோகம். மேகக் கிரந்தியினல் ஏற்படும் பைத்தியம்.

பரம்பரையாகவோ அல்லது வியாதியுள்ளவருடன் நெருங்கிப் பழகியதாலோ மேகக்கிரந்தி வியாதி உள்ளவர்களுக்கு அதை அடிப்படையாய்க் கொண்டு பல கோளாறுகள் தோன்றுகின்றன என்பது உண்மையே. ஆயினும் மேகக்கிரந்தியை அடிப்படையாகக் கொள்ளாமல் தோன்றும் வியாதிகளில் ஸிபிலினம் உபயோகமாகாது என்று சொல்ல இடம் இல்லை.

காச வியாதியைப் போன்ற நிலைமை :—ஸிபிலினம் விசேஷமாக காச வியாதிக் குறிகளைக் கொண்டதாய் இருப்பது போல் தோன்றுகிறது. காச வியாதியிலுள்ள குறிகள் தெளிவாகவும் உறுதியாகவும் அதில் காணப்படுகின்றன, அனேகமாகக் குணம் செய்ய முடியாதென்று கருதப்படும் இவ்வியாதியைச் சிற்சில சமயங்களில் குணம் செய்யக்கூடிய ஔஷதங்கள் மிகச் சிலவே. அவைகளில் மிக முக்கியமானவை, என் அபிப்பிராயப்படி கல். கார்பும் ஸிபிலினமும். மற்ற ஔஷதங்களால் பெரும்பாலும் சில காலமே குணம் நீடிக்கும். ஸிபிலினம் கேசுகளில் வியாதியஸ்தர் இரவில் கீழே படுத்துக் கொண்டவுடன் அல்லது இடியுடன் கடும் மழைபெய்யும் போது வியாதி தோன்றும். இவ்விதக் காச வியாதியில் வியாதியஸ்தருக்குத் தூக்கம் இல்லாமல் இருப்பதும் விசேஷமாய்க் காணப்படும்.

வியாதியஸ்தர் தூங்க ஆரம்பித்தவுடன் வியாதி தோன்றி, விழித்துக் கொண்டவுடன் இழுப்பு மறைந்து விடுகிறது என்னும் குறி ஸிபிலினத்தில் இருப்பதாக என் சிகிச்சைக் குறிப்புகளிலிருந்து தெரிய வருகிறது. இவ்விதக் கேசுகளில் லாச்சஸிஸ் என்னும் ஔஷதம் நினைவுக்கு வரக் கூடும். ஆனல் பெரும்பாலும் ஸிபிலினமே உபயோகமாகும்.

ஸிபிலினம் தேவைப்படும் காச வியாதியில் மிக முக்கியமான விசேஷக்குறி ஒன்று இருக்கிறது; நடுமார் பெலும்பு சிறிது சிறிதாக பின்பக்கமுள்ள முதுகுப் பக்கமாக இழுக்கப்படுவது போன்ற உணர்ச்சியே அது. (இவ்வௌஷதத்தில் உள்ள "நீளவாட்டில் வலி" என்பதைப் போன்றதே இதுவும்). மார்பை விரியச் செய்வது

மிகவும் கஷ்டமான காரியமாய் இருக்கும். ஒவ்வொரு தடவையும் காசம் வந்து போன பிறகு பலவீனம்.

குளிர் காலத்தில் கடுமையான மார்ச்சளி இருமலும் அதன் பிறகு காச வியாதியும் ஏற்படுதல்.

வெப்பமும் ஈரக்கசிவும் உள்ள பருவக் காலங்களில் இரவு நேரங்களில் காச வியாதி தோன்றுதல்.

"இருபத்தைந்து வருஷங்களாய் இரவில் படுத்துக் கொண்டவுடனும் இடியுடன் பெருமழை பெய்யும் போதும் அடிக்கடி தோன்றிப் பல இரவுகளில் தூக்கம் இல்லாமல் செய்த மார்ச்சளியுடன் கூடிய காச வியாதி".

இருபத்தைந்து வருஷங்களாய் நீடித்திருந்த காச நோய் இருந்த ஒரு பெண்மணிக்கு, இரவில் படுத்துக் கொண்டவுடனும் இடியுடன் பெருமழை பெய்யும் போதும் ஆக இச்சமயங்களில் மட்டும் உபாதி இருந்த போது ஸிபிலினம் ஸி. எம். (C. M.) வீரியத்தில் குணம் செய்து விட்டதென்று க்ளார்க் சொல்கிறார்.

மற்ற குறிகள்

பயங்கரமான வாந்தியுள்ள கக்குவாய் இருமல். மார்பெலும்பின் பின் பக்கத்தில் வலியும் அமுக்கும் உணர்ச்சியும். முழங்கால்களிலும் சப்பைகளிலும் பலவீனம். பார்வை நரம்புகள் பலம் குன்றி விடுதல். காற்றை உள்ளே இழுக்கும் போது மூக்கில் வலியுள்ள உணர்ச்சி. தும்மல்கள். பற்கள் ஒட்டிக் கொண்டிருப்பது போல் தோன்றுதல். நுரை உள்ள மூத்திரம். சிரங்குத் தழும்புகள் வெள்ளை நிறமாய் இருத்தல்.

ஒப்பிடுதல் :—வலிகள் மெதுவாக அதிகமாகி மெதுவாகக் குறைதல் (ஸ்டான்னம்). பிள்ளைப்பெறும் போது

ஏற்படும் வலிகளைப் போன்ற வலிகளுடன் மலச் சிக்கல் (லாக் டிப், ட்யுபர்குலினம்). கைகளைப் பக்கவாட்டில் தூக்கினால் தோள்பட்டையிலுள்ள வாதரோகம் கூடுதலாகுதல் (ரஸ் டாக்ஸ், ஸாங்வினேரியா இவை வலது தோள்பட்டை) பெர்ரம் மெட் (இடது தோள்பட்டை). நம்பிக்கை குறைந்து தான் பிழைக்கமாட்டோ மென்று எண்ணி பிரலாபித்தல் (ஸோரினம், நைட்ரிக் ஆஸிட்). மூக்கெலும்புகளில் சொத்தை விழுதல் (ஆரம் மெட், காலி அயோட்). மேகக் கிரந்தி சம்பந்தமுள்ள நாட்பட்ட தலைவலி (ஆரம் மெட், காலி பைக், நைட்ரிக் ஆஸிட், ஸைலீஷியா). மேகக்கிரந்தி உள்ளவர்களுக்கு ஏற்படும் வாதரோகம் (ஆரம் மெட், காலி பைக், நைட்ரிக் ஆஸிட், ஸைலீஷியா). இரவில் ஏராளமாய் உமிழ்நீர் உற்பத்தியாகுதல் (மெர். சொலு., ரஸ் டாக்ஸ்). யோனி உதடுகளில் புண்கள் (மெர். சொலு., நைட்ரிக் ஆஸிட்).

குறிப்புகள் :—ஸிபிலினம் எச்சமயத்திலும் 200-க்குக் குறைவான வீரியங்களில் உபயோகிக்கப்படக் கூடாது.

தூஜா
(THUJA)

முன்னுரை :—மேக வெட்டைக்கு உபயோகமாகும் ஔஷதங்களில் தூஜாவை ஓர் அரசன் என்றே சொல்ல வேண்டும். மேக வெட்டையை அடிப்படையாய்க் கொண்டு அதாவது மேக வெட்டை விஷம் உடலில் ஊறிப் போய் விட்டவர்களுக்கு ஏற்படும் நாட்பட்ட வியாதிகளில் இது முக்கியமாகத் தேவைப்படுகிறது. உபாதிகள் இடது பக்கத்தில் அதிகம் காணப்படுகின்றன என்பதைத் தவிர தலையோ வாலோ கண்டு பிடிக்க முடியாமல் குழப்பமாயிருக்கும் கேசுகளில் பெரும் பாலானவைகளில் தூஜா

அற்புதமாய் வேலை செய்கிறது; மேகவெட்டை விஷ வரலாறும் இருந்து விட்டால் கேட்கவேண்டியதில்லை.

மண்ணீரலுக்குச் சற்றுக் கீழாக வலியுடன் ஒரு வியாதியஸ்தர் என்னிடம் கதறிக் கொண்டு வந்தார். வலி மிகக் கடுமையாய் செக்கில் வைத்துத் திரிப்பது போல் இருந்ததால் உடம்பை வளைத்துக் குனிந்த நிலையில்தான் நடந்து வந்தார். பல வருஷங்களுக்கு முன் அவருக்கு மேகவெட்டை ஏற்பட்டதென்பது எனக்குத் தெரியும். ஆகவே ஒரு கேள்வி கூடக் கேட்காமல் தூஜா 200 ஒரு வேளை கொடுத்தேன்; அனேகமாக உடனேயே வலி மறைந்து போய் விட்டது.

பொதுவான குறிகள்

தகுதி;—க்ராவோகிள் என்பவரால் விவரிக்கப் பட்ட ஹைட்ரோஜெனாய்டு (Hydrogenoid) எனப்படும் உடல் வாகு உள்ளவர்கள்; அதாவது ஈரக்கசிவு, தண்ணீரில் குளித்தல், தண்ணீரில் நனைதல், உடலில் நீரை அதிகரிக்கும் குணமுள்ள உணவுப் பொருள்களைச் சாப்பிடுதல், ஆறு, ஏரி முதலிய நீர் நிலையங்களின் அருகே குடியிருத்தல் முதலிய காரணங்களால் வியாதி உண்டாகும் உடல்வாகு உள்ளவர்களுக்கு விசேஷமாய்த் தகுந்தது. இவ்விதமான உடல்வாகு உள்ளவர்களை மேகவெட்டை விஷமும் அம்மைத் தடுப்பு ஊசி மருந்தும் படாத பாடு படுத்தி வைக்கின்றன. இதனால்தான் மேகவெட்டை விஷம் உடலில் ஊறி விட்டவர்களுக்கும் அம்மைத் தடுப்பு ஊசி குத்திக் கொண்டதினால் ஏற்படும் கெடுதலான விளைவுகளுக்கும் தூஜா தகுந்தவோர் ஔஷதமாகிறது. மேகவெட்டை உள்ள அமுக்கப்பட்ட அல்லது ஒழுங்காகச் சிகிச்சை செய்யப்படாத வரலாறு

உள்ள சமயங்களில் தூஜாவையே முதலில் நினைக்க வேண்டும்.

தளர்ந்த தசைகள் (அதிகச் சதைப் பிடித்தவராய் இருப்பார்), கறுத்த உடல், கறுத்த தலைமயிர், வியாதி பிடித்த சருமம் ஆகிய குறிகள் உள்ளவர்களுக்கும் ஏற்றது.

ஹைட்ரோஜெனெய்டு, மேகவெட்டை, மேகக்கிரந்தி ஆகியவிஷங்கள் உள்ள உடலுள்ளவர்கள்.

"மிகப் பிடிவாதமுள்ள குழந்தைகள்; சிறிதளவு தடுத்துப் பேசினாலும் கோபத்துடன் தரையில் விழுந்து மூச்சுவிட முடியாமல் திணறுதல்". காச வியாதியுடன் மேகவெட்டை விஷமுள்ள குழந்தைகள்.

மனம்:—நிலையான அபிப்பிராயங்கள்; அதாவது தன் பக்கத்தில் வேற்று மனிதர் ஒருவர் இருப்பது போல்; உடலிலிருந்து பிரிந்து ஆவி தனியாய் இருப்பது போல்; அடிவயிற்றில் உயிருள்ள பிராணி இருப்பது போல்; அதிக வல்லமையுள்ள தோர் சக்தி தன்னைப் பிடித்து ஆட்டுவது போல்; தன் உடல், முக்கியமாகக் கால்கள், கண்ணுடியால் செய்யப்பட்டிருப்பதாகவும் அதனால் அவை எளிதிலே உடைந்து போகுமென்றும் நினைத்தல். பைத்தியம் பிடித்த பெண்கள் பிறர் தம்மை நெருங்கவோ தொடவோ விடமாட்டார்கள். வருங் காலத்தைப் பற்றிக் கவலையுடன் பீதியடைதல். அதிக மனச் சோர்வும் முன் கோபமும். வாழ்க்கையில் வெறுப்பு. சங்கீதம் அழுகையையும் உடல் நடுக்கத்தையும் உண்டாக்கும். அவசரக் குணமும் பொறுமை இல்லாமையும். வேகமாகப் பேசுதல். "எல்லாக் காரியங்களிலும்

சுபாவத்துக்கு மாறுக அவசரமாகவும் சுறு சுறுப்பாகவும் இருப்பார்".

உடல் :—முகம் எண்ணெய் தடவியது போல் இருக்கும். ஈறுகளுக்கு மேலுள்ள இடங்களில் பற்கள் சொத்தை யாகுதல். உப்பில் அதிக விருப்பம். குளிர்ந்த பானங்களி லும் உணவுகளிலும் ஆவல். பசி சிறிது கூட இல்லாமல் போகுதல். காலை உணவை உட்கொள்ள முடியாமல் போகும். சாப்பிடும் போது மிகச் சீக்கிரத்தில் வயிறு நிறைந்து விட்ட உணர்ச்சி உண்டாகும். புதிய மாமிசத்திலும் உரு ளைக் கிழங்கிலும்வெறுப்பு. மூத்திரம் கழிக்க அடிக்கடி அவசரமான தூண்டுதல். மூத்திரத்தில் சர்க்கரை இருக் கும். மூத்திரத்தில் மேகம் போன்ற வண்டல். கை கால் களை நீட்டும் போது எலும்பு மூட்டுகளில் உடையும் ஓசை. எலும்பு மூட்டுகளைச் சுற்றி நீர்ச் சுரப்பு. நடக்கும் போது உடல் நெட்டி போல் லேசாக இருக்கிற தென்று தோன்றும். கவலையை உண்டாக்கும் கனவுகள் : இறந்த மனிதர்கள் தோன்றுதல்; கீழே விழுதல்; ஆபத்துகள் முதலிய கனவு கள். பல நாட்களுக்குச் சேர்ந்தாற் போல் தூக்கம் இல் லாமை. கைவிரல் நகங்களும் கால்விரல் நகங்களும் ஒழுங்காக வளராமை. சருமம் அழுக்குப் படிந்த பழுப்பு நிறமாய் இருக்கும். சருமத்தில் பல இடங்களில் பழுப் பான அல்லது வெண்மை கலந்த பழுப்பு நிற முள்ள திட்டுகள். சருமத்தின் நிறம் மாறியிருக்கு மென்று ஒரே வார்த்தையில் சொல்லிவிடலாம். கை கால்கள் மறத் துப் போகுதல். தலையில் வெண்மையான பொடுகுகள். தலை மயிர் கொட்டும் அல்லது மெதுவாக வளருவதுடன் நுனி யில் இரண்டாகக் கிளைவிடும். தலை மயிர் காய்ந்து கட்டை பாய்ந்து பளபளப்புக் குறைவாகிக் கொட்ட ஆரம்பிக் கும். தசைகளில் அடிபட்டு அவை எலும்புகளை விட்டு

விலகிப் போய்விட்டது போன்ற உணர்ச்சி. வியாதியுற்ற பாகங்கள் மெலிந்து சாக்காடு அடைதல். அரையிடுக்குகளில் அதிக வியர்வை. சூடான அறைகளில் மூச்சு அடைப்பது போல் தோன்றுதல்.

உபாதி கூடுதல் :-வியாதியஸ்தருக்குக் குளிரும் உணர்ச்சி இருக்கும்: குளிர்ந்த, ஈரக் கசிவுள்ள காற்று ஒத்துக் கொள்ளாது

உபாதி குறைதல் :--வியாதியஸ்தர் சூடு உண்டாகும் படித் தலையை (முகத்தையும்) போர்த்திக்கொள்ள விரும்புவார்.

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே) :-காச வியாதி பேசினால் அதிகமாகும். படுக்கையின் சூடும் வெப்பமும் உபாதிகளை அதிகரிக்கும். தலையில் குல்லாய், தலைப்பாகை, தொப்பி முதலியவைகளை அணிந்து கொள்ள முடியாது. அளவு மீறிச் சிற்றின்பத்தில் ஈடுபடுதல், உடம்பில் அதிகச் சூடு உண்டாகுதல் முதலிய காரணங்களால் தலை வலி தோன்றுதல். இடது பக்கமாய்ப் படுத்தால் கவலையை ஏற்படுத்தும் கனவுகள் தோன்றுதல். அம்மைத் தடுப்பு ஊசி குத்திக் கொண்ட பிறகும். அளவு மிஞ்சிய டீ குடிப்பது, அபினி போன்ற போதைப் பொருள்களைச் சாப்பிடுதல், புகையிலை, வெங்காயம், பீர் என்னும் பானம், தித்திப்புப் பொருள்கள், கொழுப்பு மிகுந்த மாமிசம், ஸல்பர் அல்லது பாதரஸத்தை அளவு மீறி உபயோகித்தல் ஆகிய காரணங்களாலும் உண்டாகும் கோளாறுகள்.

வெய்யல், ஒளியுள்ள வெளிச்சம், வளர் பிறை நாட்கள், விடியற் காலை 3 மணி நேரம், பொழுது விடியும் சமயம், உடல் உறுப்புகளை நீட்டுதல் ஆகிய காரணங்களாலும் உபாதிகள் கூடுதலாகும்.

உபாதி குறைதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே) :- அமுக்குதல், தேய்த்தல், சொறிதல், ஒரு கால் மேல் மற்றொரு காலைக் குறுக்காகப் போட்டுக் கொள்ளுதல், ஆகிய வைகளால் உபாதிகள் குறையும். சருமக் கோளாறுகளில் பலவும் தொடுவதினால் குறையும். போர்த்திக் கொள்வதினால் வலிகள் குறையும்.

தொடுவதினாலும் தேய்ப்பதினாலும் உபாதிகள் குறைகின்றன என்னும் விஷயம் எல்லாப் புத்தகங்களிலும் காணப்படுகிறது.

ஆனால் என்னுடைய சிகிச்சைக் குறிப்புகளிலிருந்து மிருதுவாகவும் மிக லேசாகவும் தேய்ப்பதினால் உபாதிகள் குறைதல் என்பது முதல் தரமான விசேஷக் குறி என்று விளங்குகிறது. சருமத்தில், விசேஷமாக ஆடைகளால் மூடப்பட்டுள்ள இடங்களில் ஏற்படும் சருமக் கோளாறுகளில் இக்குறி பல சமயங்களில் தென்படுகிறது. அடிவயிற்றை மிருதுவாக தடவிக் கொடுத்தால் வியாதியஸ்தருக்கு மிகவும் சௌகரியமாய் இருந்தது என்ற ஒரு குறியை ஆதாரமாய் வைத்து ஒரு வயிற்றுக் கடுப்புக் கேசை நான் குணம் செய்திருக்கிறேன். தூஜாவின் மற்றொரு விசேஷக் குறியாகிய எண்ணெய் போல் பள பளப்பான மலமும் அக்கேசில் இருந்தது என்பதை நான் ஒப்புக் கொள்ள வேண்டும்.

விசேஷக் குறிகளின் விளக்கம்

இடது பக்கமே உபாதிகள் அதிகம்:—இடது பக்கமே காணப்படும் உபாதிகள். தூஜாவின் கோளாறுகள் முக்கியமாக உடலின் இடது பக்கத்திலேயே காணப்படுகின்றன. உடலின் ஒரு பக்கம் மட்டும் உபாதிகள் காணப்பட்டால் அவைகளுக்குத் தூஜா தேவை.

தூஜாவின் இந்த விசேஷக் குறியில் எனக்கு அதிக

நம்பிக்கை இருக்கிறது; இச்சமயத்தில் மேகவெட்டை வரலாறும் இருந்துவிட்டால் என் நம்பிக்கை மேலும் உறுதியாகும். பல நாட்களாக நீடித்து வந்த இடது பக்க அரையிடுக்குக் குடல் பிதுக்கத்தை ஒரே ஒரு வேளை தூஜா 200 கொடுத்துக் குணம் செய்திருக்கிறேன். குடல் பிதுக்கம் உள்ளவர்கள் பிதுக்கம் அதிகமாகாமல் இருக்க இடுப்பில் ஒரு தோல் பட்டையைக் கட்டிக் கொள்வார்கள். இம்மாதிரிப் பட்டை யொன்றை வாங்கிக் கொண்டு போவதற்காக வியாதியஸ்தர் நேப்பாளத்திலிருந்து கல்கத்தாவுக்கு வந்திருந்தார். பட்டையை வாங்கிய பிறகு தற்செயலாக என்னைக் கண்டு என்னிடம் சிகிக்சை செய்து கொள்ள விரும்பினார். ஒரு மாதத்துக்கு பட்டையைக் கட்டிக் கொள்ளக் கூடாது என்று புத்திமதி கூறி தூஜா 200 ஒரு வேளை கொடுத்தேன். அந்த ஒரு மாதத்துக்குள் வியாதி முழுவதும் குணமாகிவிட்டதால் பட்டைபைக் கட்டிக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லாமல் போய்விட்டது. தூஜா இதே போல் மற்றொரு கேசையும் குணம் செய்திருக்கிறது.

இடது பக்கப் பாரிசவாதம் அல்லது ஏதோ ஒரு பக்கத்தில் மட்டும் பாரிச வாதம். இடது அரையிடுக்குப் பாகங்களில் கடுமையான வலி. இடது சீனைப்பையில் வலிகள். நடக்கும் போதும் சவாரி செய்யும் போதும் இடது சீனைப்பையில் பொறுக்க முடியாத வேதனையை உண்டாக்கும் வலிகளால் வியாதியஸ்தர் உட்காரவோ அல்லது படுத்துக் கொள்ளவோ நேரும்; மாதவிடாய்க் காலங்களில் ஒவ்வொரு தடவையும் இவ்வலி கூடுதலாகும். இடது பக்கத் தலை வலி. உடலின் ஒரு பக்கம் சில்லென்றிருத்தல். இடது பாதத்தில் மதமதப்பு.

தேய்த்தல்: நீட்டுதல் (இவைகளால் ஏற்படும் விளைவுகள்):—இவை நியாயமாக உபாதி கூடுதல் குறைவு என்னும் வகையில் சேர்க்கப்பட வேண்டியவை என்பது எனக்குத் தெரியும். மெதுவாகத் தேய்ப்பதினால் சௌகரியம் ஏற்படு மென்பது ஏற்கனவே கூறப்பட்டது. காலை அல்லது கையை நீட்டினால் அல்லது இழுத்தால் வலியும் விரைப்பும் அதிகமாகும். மடக்கிக் கொண்டால் சௌகரியம் ஏற்படும். காலை அல்லது கையைக் கீழே தொங்கவிட்டுக் கொண்டிருந்தாலும் (தொங்க விடுவதும் நீட்டுவதில் சேர்ந்தது தான்) உபாதிகள் கூடுதலாகும். "சிறு குழந்தைகளுக்கு இடது அரையீடுக்கில் குடல் பிதுக்கம்; குழந்தை ஓயாமல் அழுது கொண்டே இருக்கும்; அதன் அரையீடுக்கில் அழுத்திக் கொண்டிருந்தால் அல்லது தொடையை அடி வயிற்றில் வைத்து அமுக்கிக் கொண்டிருந்தால் சௌகரியம் தோன்றி அழுகையை நிறுத்தும்." J. H, க்ளார்க்.

பரவி இருத்தல்: ஒரே இடத்தில் இருத்தல்:—இக்குறிகள் வலிகளைப் பற்றியவை. வலி முதலில் ஏற்பட்ட இடத்திலிருந்து பல இடங்களிலும் பரவிக் கொண்டே இருத்தல் (இதை ஒரு விசேஷக் குறி என்று கூப்பர் கருதுகிறார்). "திட்டு திட்டாகப் பல இடங்களில் வலி" (கெண்ட்).

கெட்ட சதை வளர்ச்சி:—சளிச்சவ்வுகளிலும் சருமத்திலும் பாலுண்ணி போன்ற கெட்ட சதை வளருதல். அவை அங்குமிங் குமாகப் பல இடங்களில், குறிப்பாகக் கைகளிலும் பிறப்பு உறுப்புகளிலும் தோன்றும். மானிக் கொண்டை. அக்கொண்டையை மூடும் தோல், கைகள் ஆகிய இடங்களில் மேகவெட்டையினால் நீர்க் கசிவுடன் கூடிய கெட்ட சதை வளர்ச்சி. கருப்பையின் கழுத்

துப் பாகத்தில் மேகவெட்டையினுல் கெட்ட சதை வளருதல். பாலுண்ணிகளின் கழுத்துப்பாகம் குட்டையாய் இருக்கும். பாலுண்ணிகள் கடினமாகவும் வெடிப்புகளுடனும் விரைகள் போலவும் இருக்கும். அல்ப காரணங்களாலும் அவை பிளந்துபோகும். அவைகளிலிருந்து இரத்தப் பெருக்கு ஏற்படலாம்; அறிப்பும் இருக்கும். மேகக்கிரந்தியினுல் ஏற்படும் கெட்ட சதை வளர்ச்சி; காதுகள், கருப்பை, யோனி ஆகிய இடங்களில் கெட்ட சதை வளருதல். காதுகளிலுள்ள கெட்ட சதை வெளுத்தும் சிவந்தும் தொட்டவுடனே இரத்தம் கொட்டுவதாகவும் இருக்கும். பல சிறு முளைகள் காணப்படும் கெட்ட சதை வளர்ச்சி. "பல வகையான பாலுண்ணிகளும் கெட்ட சதை வளர்ச்சிகளும்". (க்ளார்க்).

சுரப்பிகள் தாக்கப்படுதல்:—தூஜா சுரப்பிகளில் குறிப்பிடத்தக்க வேலை செய்கிறது. கழுத்திலுள்ள சுரப்பிகள் பருத்தல், சுரப்பிகளில் குத்தும் கிழிக்கும் வலிகள். தூஜாவுக்கு மிகவும் பிடித்தமான சுரப்பிகள் சினைப்பைகள். அதிலும் விசேஷமாக இடது சினைப்பை. இருதயப் பாகத்தில் குத்து வலி.

வியாதி உள்ளே அமுக்கப்படுதல்:—மேகவெட்டை உள்ளே அமுக்கப் பட்டதால் ஏற்படும் கோளாறுகள்; அதாவது கடுமையான ஔஷதங்களை உட்கொள்ளுதல், அல்லது இஞ்சக்ஷன் செய்து கொள்ளுதல், குளிரில் அடிபடுதல் முதலிய ஏதோ ஒரு காரணத்தால் மேகவெட்டைப் போக்கு தடைப்பட்டு நின்று விடுதல். (இவ்வாறு அடக்கப்பட்டபோது விரைகளில் வேக்காடு ஏற்பட்டால் பல்ஸடில்லா கொடுக்கப்பட வேண்டும்). மேகவெட்டை உள்ளே அமுக்கப்பட்ட பிறகு பாதங்களி

லும் கணுக்கால்களிலும் வலி உண்டாகி வியாதிஸ்தரால் நடக்க முடியாமல் போகும். மேகவெட்டை உள்ளே அமுக்கப்பட்ட பிறகு இந்திரிய நரம்புகளில் வலி தோன்றுதல். மேலே சொன்ன காரணத்தினால் எலும்பு மூட்டுகளில் வாதரோகம் ஏற்படுதல். மேகவெட்டை உள்ளே அமுக்கப்பட்டதைக் காரணமாய்க் கொண்டு ஆண் தன்மை குறைந்து போகுமானால் அதற்குத் தூஜா மிக அற்புதமாக வேலை செய்யும். இவ்வாறு அமுக்கப்பட்ட பிறகு சுக்கிலச் சுரப்பிகளில் வேக்காடு. மேகவெட்டைப் போக்கு வெளியாவதைத் தடை செய்தல், கெட்ட சதைகளை அறுத்தெறிதல் முதலிய காரணங்களால் உண்டாகும் காசவியாதி, பாதங்களில் ஏற்படும் வியர்வையைத் தடை செய்த பிறகு தோன்றும் கோளாறுகள். மேகவெட்டை அமுக்கப்பட்டதினால் பல காலமாக நீடித்திருக்கும் சுவாசகோச வேக்காடு.

அம்மைத் தடுப்பு ஊசி குத்திக் கொள்வதால் ஏற்படும் கோளாறுகள் : விஷப் பிராணிகளின் கடிகள் :—"பாம்பு கடித்தல், பெரியம்மை ஏற்பட்டது, அம்மைத் தடுப்பு ஊசி குத்திக் கொண்டது முதலிய பிராணிகளின் விஷம் உடம்பில் இருக்கும் விவரம் வியாதியஸ்தரின் வரலாற்றில் காணப்படும் போது தூஜா மிகவும் வல்லமையுள்ள ஔஷதமாகிறது. அம்மைத் தடுப்பு ஊசி குத்திக் கொண்ட பிறகு வயிற்றுப் போக்கோ அல்லது ஏதோ ஒருவகைச் சரும வியாதியோ தோன்றினால், முக்கியமாகக் குழந்தைகளுக்கு, தூஜா உபயோகப்படும்.

சொத்தை விழுதல் :—பற்களின் வேர்கள் சொத்தையாகும் அல்லது பற்களின் பக்கங்களில் மட்டும் சொத்தை விழுந்து நுனி பழுதில்லாமல் இருக்கும். பற்

களில் ஊத்தைப் பொறுக்குகள் சேருதல்; பற்கள் நொறுங்குதல். நகங்கள் வளர்ச்சி குறைந்து நிறம் மாறி நொறுங்கும்.

நிற மாற்றம்:—சருமம் அழுக்குப் படிந்த பழுப்பு நிறமாய் மாறும். பழுப்பு நிறமுள்ள திட்டுகள், உடல் என்ற தலைப்பின் கீழே பார்க்கவும். பற்களின் நிறம் மஞ்சளாய்மாறி நொறுங்கிப் போகும்.

எண்ணெய்ப் பளபளப்பு :—சருமம் எண்ணெய் தடவப்பட்டது போல் பளபள வென்றிருக்கும். முகம் பளபளப்பாய், மெழுகு அல்லது எண்ணெய் தடவப்பட்டது போல் இருக்கும், மலம் மெழுகு அல்லது எண்ணெய் கலந்தது போல் தோன்றும். எண்ணெய் போன்ற வியர்வை.

ஏராளமாய் இருத்தல்: நாற்றமாய் இருத்தல் (தித்திப்புச் சுவை, இலேத்த சுவை முதலியவை) :—மேகவெட்டையில் சர்க்கரை இருப்பது போல் தித்திப்புச்சுவை. ஆணின் பிறப்பு உறுப்புகளில், குறிப்பாக விரைப்பையில் ஏராளமான வியர்வை; ஆடையில் மஞ்சள் கறையை ஏற்படுத்தும். பிறப்பு உறுப்புகளில் கெட்ட நாற்றம்; கொப்பளங்களில் கெட்டநாற்றம். "கெட்ட, காரமான, இலேத்த அல்லது தித்திப்பான வாசனைகள்." ஏராளமான், புளிப்பு நாற்றம் வீசும் வியர்வை. வியர்வை பூண்டு போலவும் நாற்றமாய் இருக்கலாம். காதுகளிலிருந்து அழுகிய மாமிசம்போல் நாற்றமடிக்கும் சீழ்க்கலந்த, தண்ணீர் போன்ற கழிவு வெளியாகும். இந்திரியம் நாற்றமாய் இருத்தல். மேகக்கிரந்தியினால் உண்டாகும்கெட்டசதைகள். 'பழயதயிர் போல் அல்லது பதம் செய்யப்பட்ட மீன்போல் நாறுதல். மூக்கிலிருந்து பச்சை நிறமும்

காற்றமுமுள்ள கழிவு வெளியாகுதல்; மூக்குத்துவாரங்களில் வலியுள்ள புண்களும் பொறுக்குகளும்.

உணர்ச்சி அதிகரித்தல் : யோனியில் உணர்ச்சி மிகவும் அதிகமாகிப் புணர்ச்சி செய்ய முடியாமல் போகுதல் அல்லது மிகவும் சிரமமாய் இருத்தல்.

பாரிசவாத நிலைமை:—இருமும்போது மூத்திரம் ஒழுகுதல். மூத்திரப்பை பாரிசவாதத்தினால் தாக்கப்பட்டது போல் மூத்திரம் கழிக்கச் சக்தி இல்லாமை. மூத்திரப்பையிலுள்ள மூத்திரம் முழுவதும் வெளியாவதற்குள் பல தடவை நின்று நின்று வெளிப்படும். மூத்திரம் கழிக்கத் தன்னால் இனி பாடுபட முடியாதென்று நினைப்பார். பிடிவாத குணமுள்ள மலச்சிக்கல்.

வெடிப்பு : **பவுத்திரச் சிரங்கு** :—ஆசனவாய், ஆசனவாய்க்கும் பிறப்பு உறுப்புகளுக்கும் இடையிலுள்ள இடம்,—விரைப்பை முதலிய இடங்களிலும் மானிக் கொண்டையை மூடியுள்ள தோலிலும்கூட வெடிப்புகள். இவ்வெடிப்புகளைத் தொட்டால் வலி உண்டாகும். ஆசனவாய் வெடிப்புகளைச் சுற்றிப் பாலுண்ணிகள் வளர்ந்திருத்தல். தூஜாவின் வெடிப்புகள் ஆழமாகவும் சீழுடனும் இருக்கும். ஆசனவாய்ப் பவுத்திரச் சிரங்கு.

வியர்க்கும் குணம்:—"ஆடைகளால் மூடப்பட்டுள்ள பாகங்களில் மட்டும் அல்லது தலை தவிர மற்ற எல்லா இடங்களிலும் வியர்வை; தூங்கும் போது வியர்வை உண்டாகும். விழித்துக் கொண்டவுடன் வியர்வை ஏற்படாது"

நீர்ச்சுரப்பு:—முகம் நீர்ச்சுரப்புடன் உப்பி இருக்கும். முகத்தில் நீர்ச்சுரப்பு வீக்கத்துடன் அக்கிப்படுவன். எலும்பு மூட்டுகளின் அருகே நீர்ச்சுரப்புள்ள வீக்கம்.

நிலைத்த தன்மை:—நிலைத்த அபிப்பிராயங்கள். (மனம் என்ற தலைப்பின் கீழே பார்க்கவும்). கண்ணீர் வெளியே வழிந்து ஓடாமல் கண்களில் அப்படியே இருக்கும். மலச் சிக்கலில் மலம் ஓரளவு வெளியே வந்த பிறகு உள்ளே போய் விடுதல். (அதாவது முயற்சி செய்து சிறிதளவு மலம் வெளியே தலைகாட்டிய பிறகும் மறுபடி உள்ளே சென்று விடும்).

களகள வென்ற ஓசை: அதிக ஓசை:—விடியற் காலையில் வயிற்றுப்போக்கு; அதிக வாயுவுடன் மிக வேகமாகவும் குறுகிய வாயுள்ள பாத்திரத்தில் தண்ணீர் புகும் போது ஏற்படுவதைப்போல் களகள வென்ற ஓசையுடனும் வெளிப்படும். தண்ணீர் போன்ற பானங்களைக் குடிக்கும் போது அவை வயிற்றினுள்ளே உருளும் ஓசை கேட்கும். அதிக ஓசையுடன் மலம் கழித்தல், அதிக ஓசையுடன் குடித்தல் ஆகிய இரண்டும் இருக்கின்றன. அதிக ஓசையுடன் ஏப்பம் விடுதல். கருப்பையிலுள்ள சிசு கடுமையாய் அசையும் (இவ்வசைவு வியாதியஸ்தருக்கு அனேகமாகக் கேட்கும்).

மஞ்சள் கறை:—வியர்வை, வெள்ளை ஒழுக்குக் கழிவு ஆகியவை ஆடையில் மஞ்சள் கறையை ஏற்படுத்தும்.

முறை வைத்துத் தோன்றும் குணம்:—விடியற் காலை 3 மணிக்கு: வருஷமொரு முறை: மாதவிடாய் உள்ள போது; வளர்பிறை நாட்களில்: இவ்வண்ணம் முறை வைத்து வியாதி தோன்றும்.

மேகக்கிரந்தியின் அறிகுறிகள்:—மேகக்கிரந்தியினால் ஏற்படும் தலைவலி. மேகக்கிரந்தி சம்பந்தமுள்ள கெட்ட சதை வளர்ச்சி, சிறு குழந்தைகளுக்கு ஏற்படும் மேகக் கிரந்தி. துரும்புகள் குத்துவது போன்ற வலிகளுடன் பறங்கிப்புண்கள்.

உணர்ச்சிகள்:—உணர்ச்சிகளின் அரசன் என்ற பெயரைத் தூஜாவுக்குச் சூட்ட வேண்டுமென்ற ஆசை எனக்கு உண்டாகிறது. நூற்றுக் கணக்கிலுள்ள மற்ற ஔஷதங்களில் பல வகைப்பட்ட பலப்பல உணர்ச்சிகள் இருக்கின்றன என்பதில் சந்தேகம் இல்லை. ஆயினும் வேறு எந்த ஔஷதத்திலும் தூஜாவில் இருப்பதைப் போன்ற "போல்" "போல்" என்ற விசேஷத்தன்மை வாய்ந்த உணர்ச்சிகள் அதிகம் இல்லை. மிக விசேஷமான உணர்ச்சிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

உடல், குறிப்பாகக் கால்கள், கண்ணாடியினால் செய்யப்பட்டிருப்பது போலவும் அதனால் அவை சீக்கிரத்தில் உடைந்து போய் விடுமென்றும் உணர்ச்சி. உச்சந்தலையில் ஆணியை வைத்து அழுக்கிக்கொண்டிருப்பதுபோல்உணர்ச்சி. கண்களின் வழியாகக் குளிர்ந்த காற்று ஓடிக்கொண்டிருப்பது போல் தோன்றுதல். அடி வயிற்றில் உயிருள்ள பிராணி இருப்பதுபோல் உணர்ச்சி. மூத்திரக் குழாயினுள்ளே ஈரக் கசிவு ஓடிக்கொண்டிருப்பது போல் உணர்ச்சி. மூத்திரக் குழாயில் ஒரு சொட்டு மூத்திரம் சொட்டிக் கொண்டிருப்பது போல் தோன்றுதல். நடக்கும்போது கால்கள் மரத்தினால் செய்யப்பட்டிருப்பது போல் தோன்றுதல். நடக்கும்போது உடம்பு நெட்டிபோல் கனமில்லாமல் இருப்பதாகத் தோன்றுதல். உயரமான இடத்திலிருந்து கீழே விழுந்து விடுவதுபோல் அடிக்கடி கனவுகள். கண் இமைகள் ஈயத்தினால் செய்யப்பட்டிருப்பதுபோல் கனத்தல். தசைகளில் அடிபட்டு அவை எலும்புகளிலிருந்து விலகிப்போனது போல் உணர்ச்சி. (இவ் வுணர்ச்சி நடக்கும்போது உள்ளங்கால்களில் ஏற்படுவதை நான் பார்த்திருக்கிறேன்). "தான் கருவுற்று இருப்பதாக" நினைப்பார் (கெண்ட்).

கெண்ட் அவர்களால் குறிப்பிடப் பட்ட மேலே உள்ள கடைசிக் குறியை என் சிகிச்சை அனுபவத்தில் நானும் கண்டிருக்கிறேன். பிள்ளைப் பெறுவதற்காகவும் பிறக்கப்போகும் குழந்தைக்காகவும் வேண்டிய ஒவ் வொரு காரியத்தையும் வியாதியஸ்தர் செய்துவர ஆரம் பித்தார். தான் கருப்பமாயிருப்பது உண்மை என்று நம்பும்படியும் பிள்ளைப் பெறுவதற்காக மேற்கொண்டு செய்யவேண்டிய காரியங்களில் தனக்கு எந்நேரமும் உதவி செய்யும்படியும் வேலைக்காரியைக் கட்டாயப் படுத்தினர். வயிற்றில் குழந்தை நகருவது அவளுக்கு நன்றாகத் தெரிந்தது. அவளுடைய இந்த நிலையான அபிப்பிராயங்களைத் தூஜா நீக்கியது.

வீரியப்படுத்தல் என்னும் தம்முடைய புத்தப்புதிய முறையினால் இவ்வளவுதத்தினுள் மறைந்து கிடந்த அபூர்வ சக்தியைக் கண்டு பிடித்தவர் ஹானிமன் தான்.

ஹோமியோபதியில் என்ன இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள அக்கரை இல்லாமல் ஹோமியோபதி ஒரு பித்தலாட்டம் என்று சொல்வோர் கால தேவனுக்கு எதிரில் கொடிய குற்றவாளிகள் ஆவார்கள்.

அதிக முக்கிய மில்லாத மற்ற உணர்ச்சிகளாவன: உடலும் மனமும் தனித்தனியாய்ப் பிரிந்திருப்பதுபோல் தோன்றுதல்; அந்த இடத்தில் சினைப்பைகள் இருப்ப தாகத் தோன்றுதல் (கெண்ட்).

மற்ற குறிகள்

மலம் கழிக்கும்போது மலப்பையில் கடுமையான வலி; மலம் சிறிதளவு வெளியேவந்து மீண்டும் உள்ளே சென்று விடும். கண்களை மூடியவுடன் தலைச்சுற்றல். தலையில் உச்

சந்தலியில், பக்கங்களில் அல்லது நெற்றியில் வலி; ஆணியினால் துளைக்கப்படுவது போன்ற வலி. மூலங்கள் வீங்குதல்; உட்காரும்போது வலி மிகக் கடுமையாய் இருக்கும் (நடக்கும் போது இருக்காது). மூத்திரம் வெளிப்படும்போது கடைசியில் கடுமையான வெட்டும் வலிகள். கிட்டப்பார்வை, உணவை மெல்லும்போது வாய் மிகவும் காய்ந்து போதுதல். கருவுற்ற பெண்களுக்கு மூன்றுவது மாத முடிவில் கருச்சிதைவு; ஆரம்பத்தில் சில நாட்களுக்குச் சிறிதளவு இரத்தம் மட்டும் வெளிப்படும் (5 நாட்கள்); பிறகு இரத்தப்போக்கு மேன்மேலும் அதிகமாகும். தொடைகளில் குளிர் ஆரம்பித்தல். மூத்திரம் கழிக்கும்போது (மேக வெட்டையில் இருப்பதுபோல்) அடிக்கடி நின்று நின்று வெளியாகுதல். இருமலே இல்லாத காச வியாதி; ஆனால் இடது விலா வெலும்புப்பகுதியில் ஏதோ ஒன்று வேகமாய் வளர்ந்துவரும் உணர்ச்சி. மதுமேகம்; மூத்திரத்தில் சர்க்கரை.

உறவு :—மெதாரினம், மெர். சொலு, நைட்ரிக் ஆஸிட் ஆகியவைகளுக்குப் பின் நன்றுக வேலை செய்கிறது. மெர். சொலு, ஸல்பர், கல். கார்ப், இக்னேஷியா, லேகபோடியம், காலி கார்ப், பல்ஸடில்லா, ஸைலீஷியா, ஆகியவைகளுக்குப் பின் தூஜா நன்றுய் வேலைசெய்யும். மெதாரினம், ஸபீனே, ஸைலீஷியா, நைட்ரிக் ஆஸ்ட் (மேகக்கிரந்தி விஷமுள்ள நிலைமைகளில்) ஆகியவைகளுக்கு முன்பும் பிறகும் தூஜா வேலை செய்கிறது.

ஒப்பிடுதல் :—தண்ணீர் போன்ற பானங்களைக் குடிக்கும்போது களகள என்ற ஓசை ஏற்படுதல் (ஆர்ஸனிகம், குப்ரம் மெட்). குளிர்ந்த பொருள்களில் விருப்பம் (பாஸ்பரஸ்). மூத்திரம் கழிக்கும்போது முடிவில் கடுமையான வெட்டும் வலிகள் (ஸர்ஸபரில்லா), பற்கள் நொறுங்கு

தல், அழுக்குப் படிந்த மஞ்சள் நிறமாய் மாறுதல் (**ஸிபிலினம்**). பற்களின் வேர்ப் பாகத்தில் சொத்தை விழுதல் (**மெலெரியம்**). கண்களை மூடியவுடன் தலைச் சுற்றல் (**லாச்சலிஸ், தெரிடியன்**). கருப்பையிலுள்ள சிசு கடுமையாய் அசைதல் (**ஒபியம், க்ரோகஸ், ஸைலீஷியா, ஸல்பர்**). டீ குடிப்பதால் உண்டாகும் தலைவலி (**ஸெலெனியம்**). மலம் சிறிதளவு வெளியே வந்தவுடன் மீண்டும் உள்ளே சென்று விடுதல் (**ஸானிகுலா, ஸெலெனியம்**). யோனியில் உணர்ச்சி மிகவும் அதிகமாகிப் புணர்ச்சி செய்ய முடியாமல் போகுதல் (**ப்ளாட்டினா**). தசைகளில் அடிபட்டு அவை எலும்புகளிலிருந்து விலகிப் போய்விட்ட உணர்ச்சி (**பைடோலக்கா**). மாதவிடாய்க் காலங்களில் ஸ்தனங்கள் வீங்கி உணர்ச்சி அதிகமாய் இருத்தல் (**கோனியம், கல். கார்ப்**). கைகால்கள் மறத்துப் போகுதல் (**அனகார்டியம், நக்ஸ் வாமிகா, பல்ஸடில்லா**). தலையில் வெண்மையான பொடுகுகள் (**மெர். சொலு, ஸல்பர்**). காதுகளின் மேல் கெட்டசதை வளர்ச்சி (**கல். கார்ப், நக்ஸ் வாமிகா, பல்ஸடில்லா**). முகம் எண்ணெய் தடவியதுபோல் பளபளவென்று இருத்தல் (**நேட்ரம் மூர்**) குளிர் தொடைகளில் ஆரம்பித்தல் (**சாமோமில்லா, ரஸ் டாக்ஸ், தெரிடியன்**). கீழே வைத்துப் படுக்கும் பாகத்தில் வியர்வை (**பென்ஸாயிக் ஆஸிட், ஸானிகுலா**). மூத்திரம் அடிக்கடி நின்று நின்று வெளியாகுதல் (**கந்தாரிஸ், காஸ்டிகம், மெர். சொலு, மெர். கரோ, பெட்ரோலியம், ரஸ் டாக்ஸ்**). மேகவெட்டை உள்ளே அழுக்கப்பட்டதால் ஏற்படும் கோளாறுகள் (**க்ளமேடிஸ், பல்ஸடில்லா, ஸைலீஷியா**). கருவுற்ற மூன்றுவது மாதத்தில் கருச்சிதைவு (**ஸபீனா, ஸீகேல்**).

ட்யுபர்குலினம்

(TUBERCULINUM)

முன்னுரை :—சுவாசகோச க்ஷயத்தில் (மனிதர்களுக்கு ஏற்படும் வகை) காணப்படும் சீழை வீரியப்படுத்தி ட்யுபர் குலினம் தயாரிக்கப்படுகிறது. சுவாசகோசங்களில் பூதக் கண்ணுடியின் உதவியால் பார்க்கும்போது காணப்படும் க்ஷயக்கிருமிகளைக் கொண்டு தயாரிக்கப்படும் ஔஷதம் பாஸில்லினம் என்று வழங்கப்படுகிறது.

இவ்விரு ஔஷதங்களையும் ஒன்று போலவே கருது கிறார் க்ளார்க். "ஒன்று உபயோகமாகும் குறிகள் உள்ள போது மற்றொன்றை உபயோகிக்கலாம்" என்று அவர் கூறுகிறார். வீரியப்படுத்தப்பட்ட நிலைமையில் இரு ஔஷ தங்களுக்கும் வித்தியாசம் இருப்பதாக H. C. அல்லெனும் நினைக்க வில்லை.

பொதுவான குறிகள்

தகுதி:—வெளுத்த உடல், நீலக்கண்கள், உயரமான உடல், மெலிந்தஉருவம், மார்பு குறுகலாகவும் கொழுப்புச் சதை நிறைந்தும் காணப்படுதல், சுறு சுறுப்பான சிந்தனைகளும் அதிசயிக்கத்தக்க கூர்மையான அறிவும் உள்ளவர்கள், எல்லா விதமான வேலைகளிலும், குறிப் பாக மூளையை உபயோகித்துச் செய்யவேண்டிய வேலை களில், வெறுப்பு, உடலில், குறிப்பாகக் கால்களில், நன் றுகச் சாப்பிட்டபின், பலவீனம்.

மனம்:—வருத்தம், மனத்தளர்ச்சி; முன்கோபம், புகார் சொல்லிக்கொண்டே இருத்தல், வார்த்தைகளை அளந்து பேசும் குணம், ஏக்கம். சங்கீதம் கேட்டால் உணர்ச்சிகள் அதிகமாகும். தன் இடத்தை விட்டு வேறு ஏதோ புதிய இடத்தில் இருப்பதைப்போல அறையிலுள்ள

எல்லாப் பொருள்களும் புதியவையாகத் தோன்றுதல். **நாய்களைக் கண்டால் பயம்.**

உடல்:—குறிகள் எப்பொழுதும் இடம் மாறிக்கொண்டே இருக்கும். மூளை, சுவாசகோசங்கள், கல்லீரல், மூத்திரக் காய்கள், வயிறு, நரம்புகள் முதலிய பல உறுப்புகளில் ஒன்றைமாற்றிமற்றொன்றைத் தாக்கிக்கொண்டே இருக்கும். குறிகள் திடீரென்று தோன்றி அவ்வாறே மறையும். சுரப்பிகள் பருத்திருத்தல், அக்குள்களில் நாற்றம் வீசும் வியர்வை. நாக்கில் ஏராளமான மூளைகள் தோன்றுதல். மூக்கிலிருந்து இரத்தப் பெருக்குடன் காலையில் தலைவலி. முகப், மேலுதடு, கண் இமைகள் ஆகியவை நீர்ச்சுரந்திருப்பதுபோல் உப்பி இருத்தல். காதுகளிலும் பற்களிலும் அதிக இசிவு வலி. மூச்சுக் காற்று நாற்றம் வீசுதல். இரவு பகல் எந்நேரமும் தாகம்; காலையில் எரிக்கும் தாகம். பசி இல்லாமை, விசேஷமாகக் காலையில். ஆசனவாயில் அறிக்கும் உணர்ச்சி. இரண்டு சுவாசகோசங்களிலும் மார்ச்சளி இருப்பதுபோல் ஓசைகள், களைத்த உணர்ச்சி, கால்களில் குறிப்பாக முழங்கால்களிலிருந்து பாதங்கள் வரை அதிகப் பலவீனம். மயக்கம் வரும்போல் தோற்றம்; நம்ப முடியாத அளவு வேகமாக அதிக உடல் மெலிவு ஏற்படுதல் (உடல் நிறை 14 நாட்களில் 6 பவுண்டுகளும் 5 வாரங்களில் 20 பவுண்டுகளும் குறைந்துபோய் இருக்கிறது). நன்றாகச் சாப்பிட்டுவரும் போதும் உடல் இளைத்து வருதல். நெற்றியிலும் பொட்டுகளிலும் வெண்கலத்தின் நிறத்தையொத்த பெரிய புள்ளிகள். காலை வேளைகளில் தூங்க விருப்பம். படுத்திருக்கும்போது பாதங்களில் இல்லிப்பு. அடிக்கடி தூக்கம் கலைந்துபோகுதல் அல்லது

தூக்கமே வராமை. விடியற்காலே 3 மணிக்குப்பிறகு நல்ல தூக்கம் இல்லாமை. கனவு காணும்போது கதறுவார். அல்ப வேலே செய்தால் அல்லது சிறிது நடந்தால் வியர்வை ஏராளமாய் உற்பத்தியாகுதல். இரவில் ஏராளமான வியர்வை, விசேஷமாகத் தலேயில். தூங்க ஆரம்பிக்கும்போது உடம்பில் குளிர் நடுக்கம். மாலேயில் முதுகில் பனியினுல் உறைந்துபோய் விட்டதுபோல் தோன்றுதல்.

கடைசியாகச் சொல்லப்பட்ட குறியின் உண்மையை என் அனுபவத்தில் உணர்ந்திருக்கிறேன், மேலே சொல்லப்பட்டது போல் அது முதுகில் ஏற்படும் குளிர்ந்த உணர்ச்சி, முதுகைப்போர்த்திக் கொண்டாலோ, படுக்கை மீது வைத்துப் படுத்துக் கொண்டாலோ குறைவது கிடையாது, குடைவதுபோல் ஓரளவுக்குத்தோன்றும், ஆனல் அப்படியும் சொல்ல முடியாது.

உபாதி கூடுதல், குறைதல் :—வியாதியஸ்தரால் மூடிய அறையில் இருக்கமுடியாது. காற்றுப் பசி ; திறந்த இடங்களில் இருக்க ஆவல் : அறையின் கதவுகளேயும் ஜன்னல்களேயும் திறந்தே வைத்திருக்க விரும்புதல் ; பலமாகக் காற்றடிக்கும் இடங்களில் இருக்கும்வரை மிகவும் சௌகரியமாய் இருப்பதாகத் தோன்றுதல். உடலில் குளிரும் உணர்ச்சி இருந்தபோதிலும் சுத்தமான காற்றையே விரும்புவார். பருவகிலேயில் ஏற்படும் மாறுதல்கள் ஒத்துக் கொள்வதில்லே. உடுத்தியிருக்கும் ஆடை ஈரமாய் இருப்பதுபோல் தோன்றுதல். கருவுற்ற பிறகு மிகச் சிக்கிரத்தில் மாதவிடாய் தோன்றுதல். சிறிது வேலே செய்தாலும் வியர்வை உண்டாகுதல். காரணம் எதுவும் தெரியாமல் அடிக்கடி நீர்க்கோர்வை பிடித்தல். சுத்தமான காற்றை உள்ளிழுக்கும்போது ஒவ்வொரு தடவையும் தனக்கு நீர்க்கோர்வை பிடிக்கிற

தென்று நினைப்பார். ஒரே இடத்தில் பல நாட்கள் வசிக்கப் பிரியம் இல்லாமை; ஊர் சுற்றிக் கொண்டிருக்க விரும்புதல். இவ்விதம் பல ஊர்களைப் பார்க்க வேண்டும் என்ற மனப் பாங்கு இவ்வௌஷதத்தின் மிக விசேஷமான ஒரு குறி. குளிர்ந்த பால் அல்லது தித்திப்புப் பொருள்களில் விருப்பம். மாமிசத்தில் வெறுப்பு.

முக்கிய குறிகள்

கழுத்திலிருந்து நெற்றிவரை வலியுள்ள தலைவலி, எரிச்சலுடனும், பாய்வது போலவும் இருக்கும். நாட்பட்ட, க்ஷய சம்பந்தமுள்ள தலைவலி; வலி கடுமையாகவும் வெட்டுவது போலவும் வலது கண்ணுக்கு மேலிருந்து பின் தலைவரை பரவியும் இருக்கும். மூளை இரும்புப் பட்டையினால் நசுக்கிப் பிழியப்படும் உணர்ச்சி. மூளைச் சவ்வு வேக்காட்டில் இரவில் பலவிதமான பயங்கரமான பொய்த் தோற்றங்கள்; பயந்துகொண்டு விழித்துக் கொள்வார். வயிற்றில் ஒன்றுமே இல்லாமல் பசிக்கும் உணர்ச்சி. மூக்கில் பல சிறிய கொப்பளங்கள், அடை அடையாகத் தோன்றும்; மிகக் கடுமையான வலியுடன் இருக்கும்; பச்சை நிறமுள்ள, நாற்றமான சீழ் வெளிப்படும். இடது சுவாசகோசத்தின் மேற்பகுதி வழியாய் மூளுக்குச் செல்லும் வலி. க்ஷயரோக சம்பந்தமான கழிவுப் பொருள்கள் சுவாசகோசங்களின் அடி அல்லது நுனிப்பகுதியில் ஏற்படுதல், விசேஷமாக இடது சுவாசகோசத்தில். கடி. (கடியை க்ஷய சம்பந்தமுள்ள தென்று புர்னெட் (Burnett) கருதுகிறார்). தலைமயிரில் பேன்களால் சடை விழுதல். சிறு குழந்தைகளுக்கு க்ஷய சம்பந்தமுள்ள அடிவயிற்றுச் சுரப்பிகளின் வியாதி. விடியற்காலையில் மிக அவசரமாகத் தோன்றும் வயிற்றுப் போக்கு; மலம் கரும் பழுப்பு நிறமாகவும் தண்ணீர் போலவும் நாற்றமாகவும்

மிக வேகமாகவும் வெளிப்படும். உடல் முழுவதும் க்ஷய சம்பந்தமுள்ள கரப்பான் படை; கடுமையான அறிப்பு; இரவில் ஆடைகளைக் களையும்போதும் குளித்தாலும் அதிகமாகும். காதுகளின் பின்பக்கம், மண்டைத்தோல், சருமத்தில் மடிப்பு உள்ள இடங்கள் ஆகியவைகளில் புண்ணுள்ள உணர்ச்சியுடனும் நீர்க்கசிவுடனும் கரப்பான் படை; அவ்விடங்கள் நெருப்புப்போல் சிவந்திருக்கும். "மாதவிடாய் வழக்கத்தைவிட மிக முன்னதாகத் தோன்றும்; ஏராளமான போக்கு இருக்கும்; பல நாட்கள் போக்கு நீடித்திருக்கும்; ஆரம்பத்தில் போக்கு ஒழுங்காய் இருக்காது; பயங்கரமான வலிகள்; இக்குறிகள் க்ஷயரோக வரலாறு உள்ள வியாதியஸ்தர்களிடம் காணப்படும். பள்ளியில் படிக்கும் பெண்களின் தலைவலி; படித்தால் அல்லது சிறிதளவு மன வேலையினால் அதிகமாகும். காச வியாதி. கழுத்திலுள்ள சுரப்பிகளில் க்ஷயம். தொண்டைச் சுரப்பிகள் பருத்தல்.

உறவு:—ஸோரினம், ஸல்பர் ஆகியவைகளுக்கும் முன்பும் பிறகும் நன்றாக வேலை செய்யும்.

ஒப்பிடுதல்:—குடல்வால் பகுதியில் வலி (ஆர்ஸனிகம், லாச்சஸிஸ்). சங்கீதம் கேட்டால் உணர்ச்சிகள் அதிகரித்தல் (அகோனைட், அம்ப்ரா, நேட்ரம் கார்ப், நக்ஸ் வாமிகா, பாஸ்பாரிக் ஆஸிட், ஸேபியா, தூஜா.) நன்றாகச் சாப்பிட்டு வரும்போது உடல் இளைத்துக் கொண்டு வருதல் (அப்ரொடேனம், கல். கார்ப், கோனியம், ஐயோடியம், நேட்ரம் மூர்) தலையைச் சுற்றி இரும்புப் பட்டை இருக்கும் உணர்ச்சி (அனகார்டியம், ஸல்பர்). குளிரும் உணர்ச்சி இருந்தபோதிலும் சுத்தமான காற்றில் விருப்பம் (பல்ஸடில்லா). நாய்களிடம் பயம் (பெல்லடொன்ன, காஸ்டிகம், சைனு, ஹயஸ்யாமஸ். ஸ்ட்ரமோனியம்).

குறிப்புகள் :—க்ஷயரோக வியாதியஸ்தர்களுக்கு அதிக இரத்தம் சேருதல், வேக்காடு ஆகிய குறிகளுடன் திடீரென்று தோன்றும் குறிகளுக்குப் பல சமயங்களிலும் பெல்லடோன்னா சிறிதளவு சௌகரியத்தை அளிக்கும்.

ட்யுபர்குலீனத்தால் குணம் செய்யப்பட்ட வியாதியஸ்தர்களின் உடம்பு புஷ்டியாகப் பல சமயங்களில் ஹைட்ராஸ்டிஸ் உதவும்.

"வேறு பெரிய வியாதிகளுடன் க்ஷயம் சேர்ந்து காணப்பட்டு ஔஷதங்களால் மிக அல்பமான குணமே ஏற்படும் நிலைமைகளில்" ட்யுபர்குலினம் உபயோகமாகுமென்று ஹெரான் எழுதுகிறார்.

"மேகக்கிரந்தியுள்ள கேசுகளில் எதிர்ப்புச் சக்தி தவறான வழியில் செல்லுதல்" (ஹெரான்).

"சிறுவர்கள் சிகிச்சையைச் செவ்வனே தாங்குகின்றனர்" (கெண்ட்).

அடிக்கடி திரும்பிவரும் குணமுள்ள பலமுறைச் சுரங்களில் சிற்சில சமயங்களில் ட்யுபர்குலினம் தேவைப்படும்; ஆனால் இவ்வௌஷதத்தின் குறிகளில் சிலவாவது காணப்படவேண்டும் என்பது உண்மையே. இக்கேசுகளில் அவ்விதக் குறிகள் காணப்படுவதும் உண்மையான விஷயம்.

வியாதியின் குறிகளுக்கு ஏற்றது என்று மிகக் கவனமாகத் தேர்ந்தெடுத்துக் கொடுக்கப்பட்ட ஔஷதங்களால் குணம் ஏற்படாமை, அதாவது வியாதியை ஓரளவு மட்டும் கட்டுப்படுத்த முடிதல். இச்சமயங்களில் உடல் வலிமை படிப்படியாகக் குறைந்துகொண்டும் வந்தால் ஏதோ ஒரு வகை விஷம் உடலில் ஆழமாகப் புதைந்து கொண்டிருக்கிறது என்றும் அவ்விஷத்தைக் குறிகளுக்குத் தக்கபடி கொடுக்கப்படும் ஔஷதங்களால் நீக்க முடியவில்லை யென்றும் நாம் ஊகித்தறிய வேண்டும். இவ்

விதமான கேசுகள் அனேகமாக க்ஷயரோக சம்பந்தமுள்ள தாய்த்தான் இருக்கின்றன. எவ்விதமான சோதனைகளா லும் க்ஷயரோகக் கிருமிகளைக் கண்டுபிடிக்க முடியாது. ஆனல் பல சமயங்களிலும் ட்யுபர்குலினம் தேவைப்படும்.

க்ஷயரோகமுள்ள குடும்பங்களில் பிறக்கும் குழந்தை களுக்கும் சிறுவர்களுக்கும் அவர்கள் உடலிலுள்ள க்ஷய ரோகச் சின்னங்களை அகற்ற ட்யுபர்குலினத்தை 10 M, CM. ஆகிய வீரியங்களில் ஒவ்வொன்றிலும் இரண்டிரண்டு வேளைகள் பல மாதங்களுக்கொரு முறையாகக் கொடுக்க லாம் என்று கெண்ட் அபிப்பிராயப் படுகிறர்.

பைத்தியம் பிடிக்கும் என்று தோன்றும் நிலைமையில் ட்யு பர்குலினம் முக்கியமானதோர் ஔஷதம். "பைத்தியத் தின் எல்லைக் கோட்டில் நிற்கும் வியாதியஸ்தர்கள்" (கெண்ட்).

க்ஷயரோகமும் பைத்தியமும் மாற்றிக் கொள்ளக் கூடிய வியாதிகள். ஒன்றுமாறி மற்றொன்றாகும் என்பது உண்மை. சுவாசகோச க்ஷயம் குணமாகி விட்டதென்று வெளியே சென்ற கேசுகளில் பலருக்கு முடிவில் பைத்தி யம் பிடித்தது. பைத்தியம் தெளிந்து குணமான பலருக்கு சுவாசகோச க்ஷயம் கண்டு மரணம் ஏற்பட்டிருக்கிறது. இதிலிருந்து இவ்விரு வியாதிகளும் எவ்வளவு ஆழமாய் உடலில் புதைந்திருக்கின்றன என்பது தெரியவரும். அறிவு பற்றிய குறிகளும் சுவாசகோசக் குறிகளும் மாறிமாறித் தோன்றும்" என்று கெண்ட் கூறுகிறர். வியாதி மனதை விட்டு உடலுக்கும் உடலைவிட்டு மனதுக்கும் மாறும் குறி சந்தேக மில்லாமல் ட்யுபர்குலினத்தைக் குறிக்கிறது.

———

வெராட்ரம் ஆல்பம்

(VERATRUM ALBUM)

முன்னுரை :–வெராட்ரம் ஆல்பத்தில் விசேஷம் என்று கருதக்கூடிய வியாதிக் குறிகள் சிலவே இருக்கின்றன. ஆயினும் அது ஏஷியாடிக் காலார (Asiatic Cholera) என்று வழங்கப்படும் மிகப் பயங்கரமான வியாதியினால் மனித உடலில் ஏற்படுத்தப்படும் மிகக் கடுமையான நிலைமைகளிலும் மிகக் கடுமையான வகையைச் சேர்ந்த பைத்தியம் பிடித்தவர்களுக்கும் உபயோகமாகிறது. உடலைப் பற்றிய வரை அது கடுமையான குமட்டல், கடுமையான வாந்தி, கடுமையான வயிற்றுப் போக்கு முதலிய குறிகளையும் மனதைப் பற்றியவரை எல்லாப் பொருள்களையும் வெட்டவும் கிழித் தெறியவும் விரும்பும் கடுமையான பைத்தியக் குறிகளையும் ஏற்படுத்துகிறது. உடல் குறிகள் மேலும் அதிகரித்தால் உடல் பனிக்கட்டிபோல் சில்லிட்டு நீல நிறமாகி வார்த்தைகளால் விவரிக்க முடியாத அளவு சோர்வு தோன்றும். இதேபோல் மனக்குறிகள் அதிகரித்தால் வியாதியஸ்தர் பிறருடன் பேசமறுத்துப் பிடிவாதமௌனமாய் விடுவார். "பைத்தியக்கார விடுதிகளில் உள்ள வியாதியஸ்தர்கள் எல்லோருக்கும் வெராட்ரம் ஆல்பத்தைக் கொடுத்தால் அவர்களில் மூன்றில் ஒரு பங்கு குணம் அடைவார்கள்" என்று ஹானிமன் குறிப்பிட்டுள்ளார்.

பொதுவான குறிகள்

தகுதி :—*1.* குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் (வாழ்க்கையின் இரு எல்லைகளிலும் இருப்போர்). *2.* எப்பொழுதும் உடலில் குளிர்ந்த உணர்ச்சியுடன் உடலின் எதிர்ப்புச் சக்தி குறைந்து இருப்பவர். *3.* பரபரப்பும் தைரியமும் உள்ள இளவயதினர். பெண்கள். (இக்குறி டெஸ்டே என்பவரின் அடிப்பிராயப்படி மகிழ

யேறும் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களிடமும் இருக்கிறது). 4. இரத்த சோகை உள்ளவர்கள்.

மிக வேகமாகவும் அனேகமாகத் திடீரென்றும் உடல் வலிமை குறைந்து போகுதல்; மிகக் கடுமையான சோர்வும் க்ஷீணமும் ஆகிய குறிகளுடன் காணப்படும் வியாதிகளுக்கு வெராட்ரம் விசேஷமாகத் தகுந்தது.

உடல்:—உடல் முழுவதும் பனிக்கட்டியைப் போல் சில்லிடுதல். உடல் வலிமை திடீரென்று அழிதல். குரல் பலவீனமாகும். மிகக் கடுமையான சோர்வு. முகம் ஓட்டிக் குழிவிழுதல். நெற்றியில் குளிர்ந்த வியர்வை. தசைகளில் இழுப்புகள் (குப்ரத்தில் இருப்பது போல் அவ்வளவு கடுமையாய் இருக்காது). நிலைக் குத்திட்ட பார்வை; கண்கள் மேல் பக்கமாகச் செருகப்பட்டிருக்கும். குளிர்ந்த தண்ணீரை வேண்டும் தாகம்; ஆனால் குடித்த சிறிது நேரம் கழித்து வாந்தி செய்யப்படுதல். கைகளிலும் பாதங்களிலும் சருமம் சுருக்கம் விழுந்து இருக்கும். மூக்கு மிகக் கூர்மையாக வளர்ந்து விட்டது போலவும் நீளமாய் இருப்பது போலவும் தோன்றும். பேச முடியாது. வயிற்றின் அடித்தளத்தில் மிகக் கடுமையான வேதனை. கடுமையான குமட்டலும் வாந்தியும்; மயக்கம்; பல சமயங்களில் சிறிதளவு அசைவினாலும் தோன்றும். நீல நிறமாகுதல்; சில்லிப்பு; க்ஷீணம். வயிற்றில் கடுமையான வலி. அடிவயிற்றில் சில்லிப்பு உணர்ச்சி. மலம் கழித்த பிறகு வயிற்றல் ஒன்றுமே இல்லாமல் காலி உணர்ச்சி. நாடி மிகவும் பலவீனமடைந்து கைகளுக்குத் தென்படாமல் போகும்.

உபாதி கூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):—வெராட்ரத்தின் உபாதிகள் திரவ உருவிலுள்ள பானங்களைக்

குடிக்கும் போது பல சமயங்களிலும் கூடுதலாகும். தண்ணீர் குடித்தாலும் சிறிது அசைந்தாலும் வாந்தி உண்டாகும். அசைவினல் குமட்டல் தோன்றும். வாந்தி செய்த பிறகு உடல் சோர்வு. குளிர்ந்த பானங்களைக் குடித்தால் உபாதிகள் அதிகமாகும். குளிர்ந்த பானங்களைக் குடிக்க வேண்டுமென்று விருப்பம் இருந்த போதிலும் குடித்தவுடனேயே அவை வாந்தியாகும். சிறிது வேலை செய்தாலும் மயக்கம் உண்டாகும். மலம் கழிக்க முயற்சி செய்யும் போது ஒவ்வொரு தடவையும் மயக்கம் ஏற்படுதல். மாதவிடாய் உள்ள போதும் ஏற்படுவதற்கு முன்பும் உபாதிகள் அதிகமாய் இருத்தல். வியர்வை ஏற்படும் போது உபாதிகள் கூடுதலாகுதல். பயந்து கொண்ட காரணத்தை ஒட்டித் தோன்றும் காலரா.

உபாதி குறைதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித் தனியே):— அங்கு மிங்கும் நடந்து கொண்டிருந்தால் வலிகள் குறைவது போல் தோன்றுதல் (வியாதியஸ்தரால் நடக்காமல் இருக்க முடியாது). ஆகவே நடப்பதினல் உண்மையில் சௌகரியம் எதுவும் இல்லையென்றே கூற வேண்டும். படுத்த நிலைமையில் இருந்தால் வாந்தி குறையும். (பல குறிகள் எழுந்திருந்தால் அதிகமாகிக் கீழே படுத்தால் குறையும்).

விசேஷக் குறிகளின் விளக்கம்

சில்லிப்பு:—இவ்வெளஷதத்தில் சில்லிப்பு இல்லாத இடம் இல்லை. உடல் முழுவதும் சில்லிப்பு. பிணம் போல் சில்லிப்பு. முகம், மூக்கின் நுனி, பாதங்கள், கால்கள், கைகள், நாக்கு முதலிய எல்லா உறுப்புகளும் கழிவுகளும் கடைசியாக மூச்சுக் காற்றும் பனிக்கட்டி போல் சில்லென்றிருக்கும். சருமம் நீல நிறமாய்ச் சில்லென்றிருக்கும். நெற்றியில் குளிர்ச்சியான வியர்வை. இது

வெராட்ரத்தின் மிக விசேஷமான குறி; பல கோளாறுகளில் தவறுமல் காணப்படும்.

சில்லிப்பு உணர்ச்சி :—அடிவயிற்றில் சில்லிப்பு உணர்ச்சி. தலையின் உச்சியில் பெரிய பனிக் கட்டியை வைத்திருப்பது போன்ற உணர்ச்சி. இரத்தம் பனிக்கட்டி கலந்த தண்ணீர் போல் மாறிய உணர்ச்சியுடன் கடுமையான சில்லிப்பு உணர்ச்சி.

கடுமைக் குணம் :—கடுமையான குமட்டல்; கடுமையான (மிக வேகமாய் ஏற்படும், ஏராளமாய் இருக்கும்) வாந்தி; ஏராளமான மலம். ஏராளமான வயிற்றுப் போக்குடன் கடுமையான வாந்தி. வாந்தியும் வயிற்றுப் போக்கும் பல சமயங்களில் சேர்ந்தாற் போல் தோன்றும். அளவு கடந்த சோர்வுடன் அதிகக் குமட்டலும் வாந்தியும். கடுமையான வேக்காடு.

மயக்கமும் கடுமையாய் இருக்கும். மலம் கழிக்க முயற்சிக்கும் போது ஒவ்வொரு தடவையும் மயக்கம் தோன்றும். அது மட்டுமல்ல, குமட்டல் ஏற்படும் போதும் மன உணர்ச்சிகள் அதிகரித்தாலும் கூட மயக்கம் உண்டாகும்.

இளம் பெண்களுக்குக் கடுமையான, பயங்கரமான வலியுடன் தோன்றும் மாதவிடாய்; வயிற்றுப் போக்கு, பனிக்கட்டி போல் சில்லிப்பு, நீல நிறம், கூணம் வந்து விட்டது போன்ற உணர்ச்சி முதலிய குறிகளும் காணப்படும். கை கால்களில் சில்லிப்புடன் தலையில் மிகக் கடுமையாகவும் வேகமாகவும் இரத்தம் சேருதல். நீர்க் கோர்வையில் அடிக்கடி கடுமையான தும்மல். அபான வாயு, ஏப்பம் ஆகியவை மிக வேகமாய் வெளியாகுதல்.

கடுமையான மனக் குறிகள்:—எல்லாப் பொருள்களை யும் கடிக்க வேண்டும், கிழிக்க வேண்டும் என்று தூண்டு தலுடன் மூர்க்க குணமும் இருக்கும் (பைத்தியம்). எல் லாப் பொருள்களையும் நறுக்க வேண்டும், கிழிக்க வேண்டு மென்ற ஆவலுடன் கூடிய சித்தப்பிரமை; வெட்க மில்லாமல் காமவிகாரமான பேச்சுகள்.

ஏராளமாய் இருத்தல்:—மலம் ஏராளமாய் இருப்பது காலராவில் ஒரு விசேஷக் குறியாகும். காம்போரா தேவையாகும் காலராக் கேசுகளில் சில்விப்பு அதிகமாய் இருந்தாலும் மலம், வியர்வை, வாந்தி ஆகியவை குறை வாய் இருப்பது ஒரு விசேஷக் குறியாய் இருக்கிறது. வெராட்ரம் ஆல்பம் கேசுகளில் வியர்வையும் வாந்தியும் ஏராளமாய் இருக்கும்.

தசை இழுப்புகள்:—கை கால்களிலுள்ள தசைகளில் இழுப்புகள். தோள்பட்டைகளுக்கு இடையில் இழுப்பு கள். கால் கெண்டைத் தசைகளில் இழுப்புகள். மலம் கழிக்கும் போது இழுப்புகள். (குப்ரம் மெட்டில் காணப் படும் தசை இழுப்புகள் மிகக் கடுமையாய் இருக்கும்).

திடீர்க் குணம்:—வாந்தி திடீரென்றும் ஏற்படுதல். திடீரென்று மலம் ஏராளமாய் வெளிப்படுதல். உட லில் வலிமை திடீரென்று குறைந்து போகுதல். திடீ ரென்று உடல் முழுவதும் பொதுவான பாரிசவாதப் பலவீனம் தோன்றுதல்.

வறட்சி:—மூக்கு, வாய், தொண்டை, வாயின் மேற் கூரை, கண் இமைகள் முதலிய இடங்களில் வறட்சி. வாய் காய்ந்து பிசு பிசு வென்று ஒட்டிக் கொள்ளும். கண் இமைகளில் ஈரப்பசை சிறிது கூட இல்லாமல்

காய்ந்திருத்தல். மூக்கில் வேதனையை உண்டாக்கும் காய்ந்த உணர்ச்சி.

எரிச்சல்:—மூளையில் எரிச்சலுடன் வலி. "குளிர்ச்சியான வியர்வை ஏற்படும் போது எரிச்சல்".

நீல நிறம்:—சில்லிப்புடன் நிறம் நீலமாகுதல். முகம் நீல நிறமாய் இருத்தல். சில்லிப்பினால் நகங்கள் நீல நிறமாய் மாறும். பிராண வாயு சேர்ந்த இரத்தம் போதிய அளவு உடலில் ஓடாததினால் உடல் முழுவதும் பொதுவாக நீலமாய் இருக்கும்.

குத்தும் உணர்ச்சி:—சுவாசக் குழாய்களில் ஆழத்தில் குத்தும் உணர்ச்சி. "மார்பின் அடித்தளத்தில் குத்தும் உணர்ச்சியும் அதனால் இருமல் உண்டாகும் போல் தோன்றுவதும்". தொண்டையிலிருந்து மார்பின் உட்புறம் முழுவதும் பரவும் குத்தும் உணர்ச்சி.

பைத்தியம்: பைத்தியம் பிடிக்கும் நிலைமை: வெட்கம் இல்லாமை:—தனியாக இருப்பதைத் தாங்க முடியாது. ஆயினும் பேச மறுப்பார். மாதவிடாய் தோன்றுவதற்கு முன், எல்லோரையும் முத்த மிடுவார். மத சம்பந்தமாக வாய் ஓயாமல் பேசுவதும் கடவுளை வேண்டுவதும். தனக்கு மோக்ஷம் கிடைக்காது என்று எண்ணி ஏக்கமடைவார். அளவு மீறிக் குதூகலமாகவும் வாய் ஓயாமல் பேசிக் கொண்டும் இருத்தல். பாடுதல், ஊதுதல், கடகட வென்று சிரித்தல், ஒரு இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு ஓடுதல் முதலிய குறிகள் உள்ள பைத்தியம். தான் கழிக்கும் மலம் முத்திரங்களை உட்கொள்ளுதல். கண்டவர்களுடன் வலுவில் புணர்ச்சி செய்வதும் காம விகாரமான பேச்சுக்களைப் பேசுவதுமான மூளைக் கோளாறுகள். ஏதோ துரதிர்ஷ்டம் வரப் போகிறதென்று எண்ணுதல்.

மற்ற குறிகள்

காலராவில் அதிகக் குளிரும் குளிர்ச்சியான உணர்ச்சியும்; ஏராளமான, குளிர்ந்த வியர்வை. நெற்றியில் குளிர்ந்த

வியர்வை; அதிகக் குமட்டல்; ஏராளமான வாந்தி; ஏராளமான, தண்ணீர் போன்ற மலம்; வெளிப்படும் மலத்தின் அளவுக்கு ஏற்றபடியே உடற் சோர்வு காணப்படும். மலம் அரிசிக் கஞ்சி போல் அல்லது டச்சை நிற முள்ள தண்ணீர் போல் இருக்கலாம். அடிவயிற்றில் வெட்டுவது போன்ற கூர்மையான வலிகள். பனிக்கட்டி போல் குளிர்ச்சியாய் இருக்கும் தண்ணீரைக் குடிக்கத் தாகம்; ஆனல் அவ்வாறு குடித்தால் வாந்தி ஏற்படும். கால் கெண்டைத் தசைகளிலும் கை கால்களிலும் தசை இழுப்புகள். முகம், உதடுகள், சருமம் ஆகியவை நீல நிறமாய் இருத்தல். மூத்திரம் வெளியாகாமல் அடக்கப்படுதல்.

வயிற்றுப் போக்கில் மலம் பச்சை நிறமாய்த் தண்ணீர்போல், துணுக்குகள் கலந்து அடிக்கடி மிக வேகமாய் வெளிப்படும்; தசைகளில் இழுப்புடன் வயிற்றில் வெட்டுவது போன்ற வலிகள்; சிறிது அசைந்தாலும் வயிற்றுப் போக்கும் பொதுவான மற்ற குறிகளும் அதிகமாகும்.

விஷத்தன்மை வாய்ந்த மலேரியாச் சுரம்:-மிகக் கடுமையான சில்லிப்பு உணர்ச்சி; மிகக் குளிர்ந்த தண்ணீரைக் குடிக்க வேண்டும் என்ற நீக்கமுடியாத தாகம்; ஆனல் குடித்தவுடன் வாந்தியாகுதல்; முகம், கை கால்கள் ஆகியவை பனிக்கட்டி போல் சில்லிப்பாய் இருக்கும்; எல்லே கடந்த உடற்சோர்வு; முகம் பிணம்போல் வெளுத்து விடுதல்; நெற்றியில் குளிர்ந்த வியர்வை. உடலின் வெளிப்புறத்தில் சில்லிப்புடன் சுரம்.

மலச்சிக்கல் :—சிறு குழந்தைகளின் மலச்சிக்கல். மலம் மிகக் கட்டையாகவும் கடினமாகவும் இருக்கும்; உருண்டையாய்க் கறுப்பு நிறமுள்ள பந்துகளைப்போல் இருக்கும்; மலம் கழித்த பிறகு அதிகக் களைப்பு அல்லது உடம்பு முழுவதும் குளிர்ச்சியான வியர்வை ஏற்படும் வரை மலம் கழிக்க முயற்சி செய்து பிறகு நிறுத்தி விடுவார்; அதைத் தொடர்ந்து களைப்புத் தோன்றும்; குளிர்ந்த ஊக்கம் அளிக்கக்கூடிய பொருள்களில் விருப்பம்.

சுரம்:—"குளிரும் குடும் மாறி மாறித் தோன்றும்; சிற்சில இடங்களில் மட்டும் ஒரு சமயம் ஒரு இடத்திலும் மறு சமயம் வேறோர் இடத்திலுமாக மாறும். பானங் களைக் குடிக்கும்போது தலையிலிருந்து கால் கட்டை விரல்கள் வரை உள்ளூரக் குளிர்ந்த உணர்ச்சி ஓடிக் கொண்டிருப்பதுபோல் தோன்றுதல்."

உறவு:—ஆர்ஸனிகம், ஆர்னிகா, சைனா, குப்ரம் மெட், இபிகாக் ஆகியவைகளுக்குப்பின் நன்முக வேலை செய் கிறது, காலராவிலும் காலராவைப்போன்ற வயிற்றுப் போக்கிலும் காம்போராவுக்குப் பிறகும் (வாந்தி, வயிற்றுப் போக்கு ஆகியவைகளுடனும் வலியுடனும் தோன்றும் மாதவிடாயில்) அம்மோனியம் கார்ப். கார்போ வெஜி, போவிஸ்டா ஆகியவைகளுக்குப் பிறகும் நன்முக வேலை செய்யும்

ஒப்பிடுதல் :—காமவிகாரமாய்ப் பேசுதல், வெட்கம் இல்லாமை அல்லது மத சம்புந்தமான பேச்சு (ஹயஸ்யாமஸ், ஸ்ட்ரமோனியம்). தலையின் உச்சியில் பனிக்கட்டி இருக்கும் உணர்ச்சி; சில்லிப்பும் இருத்தல் (ஸேபியா). எல் லோரையும் முத்தமிடுதல் (அகோரிகஸ்). இரவில் கண் குருடாகுதல் (பெல்லடொன்னா, நக்ஸ் வாமிகா). பீதியினல் காலரா தோன்றுதல் (அகோனைட்). வாந்தி செய்த பிறகு உட்டற் சோர்வு (ஆர்ஸனிகம், டபாகம்). மலம் உருண்டை யாய்க் கறுப்பு நிறமுள்ள பந்துகளைப்போல் இருத்தல் (செலிடோனியம், ஓபியம், ப்ளம்பம்). சருமம் சில்லிப்பாய், நீலநிறமாய் இருத்தல் (காம்போரா, கார்போ வெஜி, குப்ரம் மெட், லாச்சஸிஸ்). உடலின் பல இடங்கள் பனிக்கட்டி போல் சில்லிப்பாய் இருத்தல் (கார்போ வெஜி). வாய் ஓயா மல் பேசும் குணம் (பெல்லடொன்னா, லாச்சஸிஸ், ஹயஸ்யாமஸ், ஸ்ட்ரமோனியம்), மத சம்பந்தமான பேச்சுக்களும் கடவுளை வேண்டுவதும் (ஸ்ட்ரமோனியம்).

குறிப்புகள் :—காலராவிலும் வயிற்றுப் போக்கிலும் வலி இல்லாத கேசுகளில் வெராட்ரம் ஆல்பம் உபயோகமா காது என்றே சொல்லலாம்.

"பைத்தியக்கார விடுதிகளில் உள்ள பெண்களில் பலரை, விசேஷமாகக் கருப்பைக்கோளாறுகளுடன் கூடிய

பெண்களை வெராட்ரம் ஆல்பம் குணம் செய்து வெளியேற உதவும்" என்று கெண்ட் கூறுகிறார்.

ஸிங்க்கம் மெட்டாலிகம்
(ZINCUM METALLICUM)

முன்னுரை:—ஸிங்க்கம் வியாதியஸ்தர் உடல் மிகச் சோர்த்து, நரம்புத்தளர்ச்சியுற்று மிகுந்த பலவீனத்துடன் இருப்பார். உடல் வேலை செய்யவோ, சீக்கிரத்தில் விஷயங்களைப் புரிந்து கொள்ளவோ சக்தி இல்லாமல் அதிகப் பலவீனம். நடுக்கம், துடிப்புகள், துள்ளல்கள், பர பரப்பு ஆகியவை இவ்வௌஷதத்தில் காணப்படும் குறிகளைப் போல் இருக்கின்றன. சருமக்கோளாறு உள்ளே அமுங்கி விட்டால் அல்லது ஒழுங்காக வெளியே தோன்றுவிட்டால் உண்டாகும் கோளாறுகளை எதிர்த்துப் போராடும் முக்கிய ஔஷதங்களில் இதுவும் ஒன்று.

பொதுவான குறிகள்

தகுதி:—உடல் சோர்த்துவிட்ட எல்லா நிலைமைகளுக்கும் அதாவது உடல் அணுக்களின் உற்பத்தியைவிட அழிவு அதிகமாய் இருக்கும் நிலைமைகளுக்கு ஏற்றது. உடலின் உயிர்ப்புச் சக்தி கோளாறாய் இருத்தல்.

மனம்:—ஞாபகச் சக்தி குறைதல், விஷயங்களைச் சீக்கிரத்தில் புரிந்துகொள்ள முடியாமை. வேலை செய்யவும் பேசவும் வெறுப்பு. யோசனைகள் தோன்றுமை. ஒன்றுக்கொன்று சம்பந்தம் இல்லாத யோசனைகள். அறிவு மழுங்குதல். பதில் சொல்வதற்குமுன் குழந்தை கேட்ட கேள்விகள் எல்லாவற்றையும் திருப்பிச் சொல்லும்.

உடல்:—முகம் வெளுத்து மங்கி இருக்கும். முகம் ஒரு சமயம் வெளுத்தும் மறுசமயம் சிவந்தும் மாறி மாறி ஏற்படும். வாயில் இரத்தம் இருப்பதுபோல் சுவை. வாயில் உப்புக்கரிப்பான சுவை. சுவை திக்திப்பாகவோ, உலோகம் போலவோ அல்லது அழுகியதயிர் போலவோ, இருக்கலாம். எவ்வளவு சாப்பிட்டாலும் அடங்காத பசி, விசேஷமாய்க் காலை 11 அல்லது 12 மணிக்குத் தோன்றும்.

நாக்கில் ஒருவித அழுக்கும் இல்லாமல் சுத்தமாக இருப்பதும் பசி இல்லாமையும். குறிகள் மாறுபடும் குணமுள்ளவைகளாய் இருத்தல். பாதங்களில் பரபரப்பு. மூத்திரம் அடக்கப்படுதல். காலையில் மூத்திரம் கலங்கி இருக்கும். அல்ப காரணங்களாலும் பரபரப்பு உண்டாகும். பாதங்களில் வியர்வையும் கால் கட்டைவிரல் அருகே புண்ணும் இருப்பதும்.

உபாதிகூடுதல் (ஒவ்வொரு குறிக்கும் தனித்தனியே):- உபாதிகள் அசைவினால், (மெதுவான அசைவாய் இருந்தாலும் வேகமான அசைவாய் இருந்தாலும் ஒன்றே) அதிகரிக்கும். "குழந்தையை நகர்த்தினால் அது கதறும்." முதுகெலும்பில் மந்தமான இசிவுவலி; உட்கார்ந்திருக்கும்போது அதிகமாய் இருக்கும். ஓயின் குடித்தால் அது ஒத்துக்கொள்ளாது. எல்லா உபாதிகளையும் ஓயின் அதிகரிக்கும். சர்க்கரை, பால் ஆகியவைகளாலும் உபாதிகள் அதிகமாகும். மூளைபற்றிய கோளாறுகள் உள்ள குழந்தைகள் மிக மூன்கோபத்துடன் இருக்கும். பின்பக்கமாக உடலை வளைத்து உட்கார்ந்து கொண்டால்தான் மூத்திரம் கழிக்க முடியும். வியர்வை ஏற்படும்போது உடலைப் போர்த்திக் கொண்டிருப்பதைத் தாங்க முடியாது.

உபாதி குறைதல்:—கழிவுகள் வெளியேறுதல், சரும கோளாறுகள் தோன்றுதல் ஆகியவைகளால் உபாதிகள் குறையும். உள்ளே அமுக்கப்படுதல், தாராளமாய் வெளிப்படும் கழிவுகள் (அதனால் சௌகரியம்) என்ற தகவல்களின் மீதையும் பார்க்கவும்.

விசேஷக் குறிகளின் விளக்கம்

உடல் சளைத்தல்:—உடல் அணுக்களின் உற்பத்தியை விட அழிவு அதிகமாய் விட்டால் உடல் சளைத்து விடுகிறது. இக்குறி ஸிங்க்கத்தில் காணப்படுகிறது. இந்நிலைமை மூளை, நரம்புகள், தசைகள் ஆகியவைகளில் தோன்றும். அளவு மிஞ்சிய படிப்பு, மூளையை உபயோகித்துச் செய்யவேண்டிய காரியங்களில் அளவு மீறி

சுடுபடுதல், இரவில் கண் விழித்தல் முதலிய காரணங்களால் உண்டாகும் மூளைச்சோர்வு.

உயிர்ப்புச் சக்தி குறைவாய் இருத்தல்:-உடலின் உயிர்ப்புச் சக்தி குறைவாய் அல்லது கோளாறாய் இருத்தல் என்பது ஸிங்க்கத்தின் மிக விசேஷமான ஒரு குறி. இவ்விதமான உடல் நிலைமையினால் உடல் வேலைகள் சில நடைபெறுமல் தடைப்பட்டு நின்றுவிடும்.

இரத்த ஓட்டம் சில இடங்களில் கோளாறுனால் அல்லது தடைப்பட்டால் பனிப்புண்கள் தோன்றும். மூடப்படாத உடல் பாகங்களில், முக்கியமாக மூக்கின் நுனியில், மிகச் சுலபமாகப் பனிப் புண்கள் ஏற்படுதல். பனி வெடிப்புகளில் வலி. தேய்த்தால் அதிகமாகும். வியாதியுற்ற பாகங்களில் வேக்காட்டுடன் வெடிப்பும் உண்டாகும். பற்கள் ஒழுங்காக வளராமை. தாமத வளர்ச்சி என்ற தலைப்பின் கீழேயும் பார்க்கவும். கண் பார்வை மங்கலாகவும் பலவீனமாகவும் இருக்கும். காகிதத்தைக் கசக்கும்போது உண்டாகும் சிறிதளவு ஓசைகூட அவரைத் திடுக்கிடச் செய்யும்.

சருமக் கோளாறுகள் வெளியே தோன்றியவுடன் உள்ளே சென்று விடுதல் அல்லது வெளியே தோன்றுமல் உள்ளேயே அடக்கப் பட்டிருத்தல் என்பது மற்றொரு விஷவு.

அடக்கப் பட்டிருக்கும் கழிவுகளும் போக்குகளும் வெளியேறினால் அல்லது வெளியேற ஆரம்பித்தால் கோளாறுகள் குறையும்.

உள்ளே அடக்கப்பட்டிருத்தல்: வெளியே தோன்றிப் பிறகு உள்ளே சென்று விடுதல்:—பல சரும வியாதிகளில் ஸிங்க்கத்தினால் தயாரிக்கப்படும் களிம்பு எப்படிக் குணம் செய்கிறது (?) என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். களிம்பு வியாதியை உள்ளே அமுக்கத்தான் செய்கிறது. ஆகவே வியாதி சருமத்தை விட்டு வேறோர் இடத்தைத் தேடிச் செல்லவேண்டியிருக்கிறது. (மூக்

கியமாக மூளையும் நரம்பு மண்டலமும் தாக்கப் படுகின்றன). சரும வியாதியைவிட நூறு பங்கு கடுமையான புதிய கோளாறுதான் அதன் விளைவு. இச்சமயத்தில் காணப்படும் பொதுவான குறிகளைக் கொண்டு ஸிங்க்கம் உபயோகப்படுமென்று தோன்றி அதைக் கொடுத்தால் சருமக் கோளாறைப் பழயபடி வெளியே கொண்டு வந்து புதிய வியாதியை நீக்கிவிடும்.

நாட்பட்ட ஏதோ ஒரு சரும வியாதியை உள்ளே அமுக்கியதால் பிள்ளைப்பெற்ற பிறகு வலிப்புகள் தோன்றுதல். சரும வியாதி உள்ளே அமுக்கப்பட்ட பிறகு தசைகளில் துடிப்புகள் ஏற்படுதல்.

பலவீனமான உடலுள்ள குழந்தைக்குச் சரும வியாதிகளில் கோளாறு ஒழுங்காகத் தோன்றுமல் மூளை தாக்கப்பட்டு மயக்கம், பற்களை அறைத்தல், தூக்கத்தில் திடுக்கிட்டு எழுந்திருத்தல், கதறுதல், கண் விழிகள் செருகப்படுதல், தலையை உருட்டுதல், முகம் ஒரு சமயம் வெளுத்தும் மறுசமயம் சிவந்தும் இருத்தல் முதலிய குறிகள் காணப்படும்போது ஸிங்க்கத்தைக் கொடுத்தால் சருமக் கோளாறை ஒழுங்காகத் தோன்றச்செய்து குழந்தையைக் குணம் செய்துவிடும்.

கழிவுகள் அடக்கப்படுதல்:—மிகுந்த பலவீனம் காரணமாக மூத்திரம் கழிக்க முடியாது; கோழையைத்துப்ப முடியாது; மாதவிடாய்ப் போக்கு தோன்றாது. கழிவுகள் வெளியேறும்போது சௌகரியமாய் இருக்கும். கோழையைத் துப்ப முடியாமல் போகும்போது காச வியாதி கடுமையாகும். "வியாதியஸ்தரால் கோழையைத் துப்ப முடியாது; துப்ப முடிந்தவுடன் சௌகரியம் உண்டாகும்." கோழை வெளியேறியவுடன் மூச்சுத் திணறல் குறையும் என்பதே இதன் பொருள். வயிற்றுப் போக்கு திடீரென்று நின்று அதற்குப் பதிலாக மூளைபற்றிய கோளாறுகள் முளைக்கும். காதுகளிலிருந்து வரும் சீழ் நின்றவுடன் விரைகளில் வேக்காடு உண்டாகும். பிள்ளைப்பெற்ற பிறகு வெளியாகும் கழிவு நின்று விட்ட

தால் சிற்றின்ப ஆசை அதிகமாகுதல். ஸ்தனங்களில் சுரக்கும் பாலைத் தடை செய்ததால் உண்டாகும் கோளாறுகள். பாதங்களில் உண்டாகும் வியர்வையைத் தடை செய்ததால் (பாதங்களில்) பாரிசவாயு தோன்றுதல். இந்திரியம் தானாக வெளியான பின் முதுகுவலி குறைவாய் இருக்கும் (இது சிறிது நேரமே). மாதவிடாய்ப் போக்கு வெளிப்பட ஆரம்பித்தவுடன் எல்லாக் குறிகளும் குறைவாய் இருத்தல்.

பொதுவான வளர்ச்சி :—பற்கள் மிக மெதுவாக வளருதல். (உடலின் உயிர்ப்புச் சக்தி கோளாறுறுவ் இருப்பதால் இது ஏற்படுகிறது.) குழந்தைகளுக்குப் பல் முளைக்கும் காலத்தில் பற்கள் வெளியே வராவிட்டால் ஸிங்க் கத்தின் குறிகள் தோன்றுகின்றன. மந்த குணம்; தலையைத் தலையணையினுள்ளே அழுத்திவைத்துக் கொண்டு படுத்திருத்தல்; கண்கள் பாதி மூடியபடி இருத்தல்; கண்கள் செருகப்படுதல்; முகம் மாறிமாறி வெளுக்கும், சிவக்கும்; உறக்கக் கதறும் (அபிஸில் காணப்படுவதைப்போல் அவ்வளவு பலமான கதறல் இருக்காது); கை கால்கள் தூக்கிப் போடுதல்.

நடுக்கம்: பரபரப்பு: தூக்கிப் போடுதல்: வலிப்புகள்:—உடம்பு முழுவது நடுக்கம் அல்லது துடிப்பு; பல சமயங்களிலும் கடுமையாய் இருக்கும், விசேஷமாக மனவேலையினால் கடுமையாகும். ஒரு சில தசைகளில் மட்டும் துடிப்புகளும் தூக்கிப் போடுவதும், குறிப்பாகக் குழந்தைகளுக்கு. தசைகளில் துடிப்பு. கைகால்களில் பலவீனமும் நடுக்கமும்; எழுதும்போது கைகளில் நடுக்கம்; மாதவிடாய்க் காலத்தில் இக்குறி உண்டாகலாம். தூங்கும்போது அடிக்கடி உடம்பு தூக்கிப் போடுதல். இருதயப் பகுதியில் திடீரென்று அதிர்ச்சியும் துடிப்பும் உண்டாகும். கால்களில் தசை இழுப்புகளும் வலியும் விட்டு விட்டுத் தோன்றுதல். உடம்பில் சூடு இல்லாமல் முகத்தில் வெளுப்புடன் வலிப்புகள். இரவு படுக்கையில் படுத்துக்கொண்ட பிறகும் தூங்கும்போதுகூட கால்களில் நரம்பு

சம்பந்தமான அசைவுகள் அனேகமாக இடைவிடாமல் ஏற்படும். இவ்விதமான அசைவு சிற்சில சமயங்களில் மிகக் கடுமையாகவும் இருக்கலாம்.

இச்சமயத்தில் நரம்பு சம்பந்தமுள்ள இன்னும்சில குறிகளையும் நாம் மறந்து விடக்கூடாது. அவை மத மதப்பு; ஊசி குத்தும் உணர்ச்சி, எறும்பு ஊரும் உணர்ச்சி.

தானாகவே ஏற்படும் அசைவுகள்:—மேலே குறிக்கப் பட்டுள்ள எல்லாக் குறிகளும் இவ்வகையைச் சேர்ந் தவை. கைகளிலும் தலையிலும் வியாதியஸ்தரின் இஷ்டம் இல்லாமல் அசைவுகள் அல்லது ஒரு கையிலும் தலையிலும் அசைவுகள்.

சிற்றின்ப ஆசை அதிகரித்தல்:—பலமான சிற்றின்ப ஆசை; இந்திரியம் கஷ்டப்பட்டு வெளிப்படும் அல்லது மிகச் சீக்கிரமாய் நழுவிவிடும். இரவில் மானி இடை விடாமல் விரைத்தல். கைகள் இடைவிடாமல் பிறப்பு உறுப்புகளையே தொட்டுக் கொண்டிருக்கும் (ஆண், பெண் இருபாலாருக்கும்). இருமும்போது குழந்தை அதன் பிறப்பு உறுப்புகளையும் இறுக்கிப் பிடித்துக் கொள்ளும். யோனிக்கு மேலுள்ள முளை போன்ற உறுப்பில் அறிப்பு உண்டாகி அதனால் இயற்கைக்கு மாறான வழிகளில் புணர்ச்சி இன்பத்தைப் பெறுதல். பெண்களுக்கு இரவில் அடக்க முடியாத சிற்றின்ப ஆசை தோன்றி இயற்கைக்கு மாறான வழிகளில் இன் பம் பெறுதல்.

முதுகெலும்புக் கோளாறுகள்:—முதுகெலும்பு முழுவ தும் எரிச்சல்; முதுகுவலி உட்கார்ந்தால் மிகவும் அதிகமா கும்; அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்தால் குறைவா கும். முதுகைத் தொடுவதை அவரால் பொறுக்கமுடி யாது; உணர்ச்சி அவ்வளவு அதிகமாய் இருக்கும்.

மற்ற குறிகள்

மேலிருந்து கீழ் இறங்கும் பாரிசவாதம். இடது

பக்கமாகக் கீழே விழுந்துவிடுவார் போல் தோன்றும் தலைச் சுற்றல். கண்களில் நீர்ப் பெருக்கும் சூரிய வெளிச் சத்தைக் கண்டால் கூச்சமும். இமைகள் தடித்தல். பாதங்களில் ஏராளமான வியர்வை. இமைகளின் சளிச் சவ்வுகள் தடித்து ஏராளமான இரத்தக் குழாய்களு டன் இருத்தல். கண்களின் வெளி மூலையில் வெடிப்பு களும் இருத்தல். "விசேஷமாக உள் மூலைகளில் எரிச்ச லும் கொட்டு வலிகளும் இருந்தால்". சூடான அறை யில் இருந்தால் வலிகள் குறையும். தலைவலியும் அதனல் கண்பார்வை மங்குவதும்; தலைவலியுடன் சேர்ந்தாற் போலவே கண் மங்கும்; பனி மூட்டத்தின் வழியாய்ப் பார்ப்பதுபோல் தோன்றும்.

உறவு:—சாமோமில்லாவும் நக்ஸ் வாமிகாவும் இதற்கு முறிவுகள். இவ்விரண்டையும் ஸிங்க்கத்துக்கு முன்னே அல்லது பிறகோ உபயோகிப்பது கூடாது.

ஒப்பிடுதல்:—நரம்புச்சோர்வு (பிக்ரிக் ஆஸிட்). கால் களில் பரபரப்பு (டாரெண்டுலா). முதுகைத் தொட்டால் பொறுக்க முடியாமை (சின். ஸல்ப், டாரெண்டுலா, தெரிடி யன்). சிறு குழந்தைகளின் வலிப்புகள் (பெல்லடொன்னு, குப்ரம் மெட்). இயற்கைக்கு மாறுன வழிகளில் சிற்றின்பம் பெற அடக்கமுடியாத ஆசை (நக்ஸ் வாமிகா, பாஸ்பாரிக் ஆஸிட், ஸ்டாபிஸாக்ரியா). மானி நீண்ட நேரம் கடுமை யாய் விரைத்தல் (கந்தாரிஸ், பாஸ்பரஸ், பிக்ரிக் ஆஸிட்). ஒரு சில தசைகள் மட்டும் துடித்தல் அல்லது தூக்கிப் போடுதல் (அகேரிகஸ், இக்னேஷியா). கைகளும் தலையும் அல்லது ஒரு கையும் தலையும் வியாதியஸ்தரின் விருப்பம் இல்லாமல் அசைதல் (அகேரிகஸ், பிரயோனியா, ஹெல்லபோரஸ்).

———

அபிஸ் நைக்ரா
(ABIES NIGRA)

வயிற்றில் வலி எப்பொழுதும் சாப்பிட்ட பிறகு தோன்றுதல். வயிற்றின் மேல் பக்கத்தில் அதாவது இருதயத்தைஒட்டியுள்ள பகுதியில் வேக வைத்துக் கடினமாய் விட்ட முட்டை போன்ற பொருள் வைக்கப்பட்டு இருப்பது போல உருண்டையான அல்லது கடினமான பொருள் இருக்கும் உணர்ச்சி. உண்ட உணவு வயிற்றினுள் அப்படியே இருப்பது போல் தோன்றுதல்.

வயிற்றைச் சுற்றிலும் முண்டுகளும் முடிச்சுகளும் ஏராளமாய் இருப்பதுபோல் வேதனை அளிக்கும் உணர்ச்சி இடை விடாமல் காணப்படும்; உடல் பல வீனமடையும் போது இவ்வுணர்ச்சி கூடுதலாகும்.

இருதயத்தில் கூர்மையான வெட்டும் வலிகள்; மெதுவாகவும் அழுத்தமாகவும் இருதயம் வேலை செய்யும்.

அப்ஸிந்தியம்
(ABSINTHIUM)

எழுந்திருந்தவுடன் தலைச் சுற்றல் தோன்றிப் பின் பக்கமாய் விழுந்துவிடும் குணம்.

நாக்கு, இருதயம் ஆகியவைகளில் லேசான நடுக்கம்.

காக்கை வலிப்பை ஒத்த வலிப்புகள்: வலிப்பு ஏற்படுவதற்கு முன்னதாக நரம்புகளில் நடுக்கம்; முகம் கோணிக் கொள்ளும்; நாக்கு கடிபடும்; வாயில் இரத்தம் கலந்த நுரை; ஞாபகம் முழுவதும் அழிந்து போவதில்லை; வலிப்புகளுக்குப்பிறகு ஞாபகச் சக்தி அழிவதும் மூடத்தனமாய் நடப்பதும்.

காலத்துக்கு மிக முன்னதாக மாதவிடாய் மறைதல்.

முகத் தசைகளில் விட்டு விட்டு இழுப்புகள் தோன்றுதல்.

அக்னஸ் காஸ்டஸ்
(AGNUS CASTUS)

சிறிது கூடக் கவனம் செலுத்த முடியாமை; நடந்த விஷ

யங்களை நினைவுக்குக்கொண்டு வரமுடியாது. ஏக்கத்துடன் வருத்தம்; சாவு நெருங்கிவிட்டது என்ற பயம்; தான் சிக்கிரம் இறந்து போகப்போவதாகத் திரும்பத்திரும்பச் சொல்வார்.

பிள்ளைப் பெற்ற பிறகு தோன்றும் பைத்தியத்தில் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணங்கள், குழந்தை. கணவன், புணர்ச்சி ஆகியவைகளில் வெறுப்பு ஆகிய குறிகள் காணப்படும்.

ஆண் தன்மை குறைவாகுதல்; **"பெண்ணைக் கட்டித் தழுவியவுடன் தன் உடலின் வலிமை குறைந்து லேசாக இருப்பது போல் தோன்றுதல்"**; மானி சிறுத்துச் சில்லிட்டுத் தளர்ந்திருக்கும்; மிக அதிகமான தளர்ச்சியினால் எவ்வளவு முயற்சி செய்தாலும் மானியில் விரைப்பு உண்டாவதில்லை.

ஆண் தன்மை அடியோடு அழிந்துவிடுதல்: மானி சிறுத்துச் சில்லிட்டுத் தளர்ந்து போகுதல்; புணர்ச்சியில் ஆசையும் இருக்காது; ஈடுபடச் சக்தியும் இல்லை.

விரைகள் சில்லிட்டு வீங்கிக் கடினமாகவும் வலியுடனும் இருத்தல்.

மூத்திரக் குழாயிலிருந்து மெல்லிய ஒழுக்குடன் (விசேஷமாக அடிக்கடி மேகவெட்டை ஏற்பட்டவர்களுக்கு) ஆண் தன்மைக் குறைவு

புணர்ச்சியில் ஆசையோ அல்லது ஈடுபடச் சக்தியோ இல்லாமல் மேலே கூறிய மெல்லிய ஒழுக்கு வெளிப்படுதல்.

மலம் கழிக்க முக்கும்போதும் மூத்திரம் கழிக்கும் போதும் சுக்கிலத் தண்ணீர் ஒழுகுதல்.

அளவு மீறிய புணர்ச்சியினால் இளம் வயதுள்ளவர்களுக்கு **காலத்துக்கு முன்னதாகக் கிழப் பருவம் ஏற்படுதல்.** எல்லா விஷயங்களிலும் அலட்சியம், ஏக்கம், தன்னைத் தானே நிந்தனை செய்தல், பொதுவான பலவீனம் முதலிய குறிகள் தோன்றும்.

வயதானவர்களுக்கு இளமைப் பருவத்தில் அளவு மீறிச் சிற்றின்பத்தில் ஈடுபட்ட காரணமாக ஆண் தன்மை குறைதல். உடல் சக்தி குன்றியபோதிலும் இளமைப் பருவத்தில் இருந்ததைப் போலவே புணர்ச்சியில்

அளவு கடந்த ஆசை இருக்கும். இவர்களுக்குப் பல சமயங்களிலும் **அக்னஸ் காஸ்டஸ்** பயன்படும்.

சிற்றின்பத்தில் முன்னொரு காலத்தில் மிக அதிகமாய் ஈடுபட்டதின் காரணமாக இந்திரியம் தானாகவே ஒழுகிக் கொண்டிருத்தல்.

மண மாகாதவர்களுக்கு ஏற்படும் நரம்புச் சோர்வு.

எலும்பு மூட்டுகள் அல்ப காரணங்களாலும் புறண்டு போகுதல். சுளுக்குகளுக்கும் மூச்சுப் பிடிப்புகளுக்கும் (கனமான பொருள்களைத் தூக்குதல்) ஓரளவு முக்கியமான ஔஷதம்.

உடலின் பல உறுப்புகளில், விசேஷமாகக் கண்களில், கடிப்பது போன்ற அறிப்பு.

மேகவெட்டை உள்ளே அமுக்கப்பட்டதன் விளைவாகத் தோன்றும் கோளாறுகள். இந்திரிய நரம்புகளில் இழுக்கும் உணர்ச்சி.

வெள்ளை ஒழுக்கில் போக்கு ஊடுருவிப் பார்க்கக் கூடியதாக இருக்கும்; ஆனால் ஆடைகளில் மஞ்சள் நிற முள்ள கறையை உண்டாக்கும்; உறுப்புகள் மிகவும் **தளர்ந்து** இருப்பதால் ஒழுக்கு வெளியாவதே தெரியாது; போக்கு ஏராளமாய் இருப்பதில்லை.

குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்கும் பெண்களுக்கு ஸ்தனங்களில் பால் குறைதல்; பல சமயங்களில் வியாதியஸ்தர் வருத்தமாகவும் இருப்பார். பால் சொட்டுக்கூட வெளியே வராமல் உள்ளே அடக்கப்படுவதும் உண்டு.

"நடந்தால் சருமத்தில் சிராய்ப்புகள் தோன்றும் தன்மையை நீக்குகிறது."

ஐலாந்தஸ்
(AILANTHUS)

வியாதியின் ஆரம்பத்திலேயே உடல் சோர்வு தோன்றுதல்; பலவீனமாகவும் மந்தமாகவும் மயக்கமாகவும் இருத்தல்.—மூத்திரம் அளவு குறைதல் அல்லது அடக்கப் படுதல். நாடி அளவு குறைந்து வேகமாய்த் துடிக்கும். சருமம்

ஊதா நிறமாகும். மயக்கமாகவும் நிலை கொள்ளாமலும் மிக விரைவில் உணர்ச்சி இல்லாமல் போவதுமாக இருத்தல்.

"அளவு மீறிய உடல் சோர்வு, வேதனை, வாந்தி முதலிய குறிகளுடன் மிக மெதுவாகத் தோன்றும் வியாதிகள்."

விஷத்தன்மை வாய்ந்த ஸ்கார்லேடினா ஆரம்பத்திலிருந்து மிக மெதுவாக வளரும்; தொண்டை வீங்கிக் கறுப்பு நிறமாகிப் புண்களுடன் இருக்கும்; ஒழுங்கு இல்லாமல் திட்டு திட்டாகச் சருமக்கோளாறுகள் தோன்றுதல்; விரல்களால் அமுக்கினால் மறைந்து போய்ப் பிறகு மிக மெதுவாக மீண்டும் ஏற்படும்.

அளவுகடந்த சோர்வுடன் கூடிய டிப்தீரியா. தொண்டை பளபளப்பாய், அனேகமாக ஊதா நிறமாகவும் வீங்கியும் இருக்கும்; தொண்டைச் சுரப்பிகளில் கோரமாக வாயைப் பிளந்து கொண்டு ஆழமான குழிப்புண்கள் காணப்படும்; அவைகளிலிருந்து நாற்றமுள்ள சீழ் சிறிதளவே வெளிப்படும்; கழுத்தின் வெளிப்பக்கத்தில் வீக்கமும் தொட்டால் வலியும்.

அல்லியம் ஸடிவம்

ALLIUM SATIVUM

குடிக்கும் பானங்களின் அளவை விடப் பன்மடங்கு கூடுதலாக உணவு உட்கொள்வோருக்கு ஏற்றது. குறிப்பாக ஏராளமான அளவு மாமிசம் புசிப்போருக்கு இவ்வௌஷதம் தகுந்தது. அதிகச் சதைப் பிடித்த உடலுள்ளவர்களுக்கும் சுகமான வாழ்க்கை நடத்துகிறவர்களுக்கும் ஏற்றது தான்.

உடலின் உட்புறத்திலிருந்து வெளிப்பக்கமாக அமுக்குவது போல் வலி.

வலிகள் பல சமயங்களில் கொட்டுவது போலவும் எரிச்சலுடனும் இருக்கும்; கொஞ்சங் கொஞ்சமாக அதிகமாகி உச்ச நிலையை அடைந்தவுடன் கொஞ்சங் கொஞ்சமாகக் குறையும்.

நாக்கில் மயிர் இருக்கும் உணர்ச்சி, படிக்கும் போது அதிகமாகும்.

சப்பைகளில் வலி (பல சமயங்களில் இழுப்பது போல் இருக்கும்).

கீழ் முதுகிலும் அடிவயிற்றிலும் உள்ள தசைகளின் நுனிப் பாகங்களில் தாங்க முடியாத வலி; சிறிது அசைந்தாலும் அதிகமாகும்; ஒரு காலின்மேல் மற்றொரு காலைக் குறுக்காகப் போட முயற்சி செய்தால் பொறுக்க முடியாத வலி உண்டாகி வியாதியஸ்தர் கதறுவார்; ஆனால் காலைக் கையினால் மெதுவாகத் தூக்கினால் வலி எதுவும் உண்டாகாது.

உடலின் மற்ற பகுதிகளைப்போல் கால்கள் அவ்வளவு வேகமாக வளருவதில்லை.

சுவாசகோச கூயரோகம்.

ஏராளமான, தித்திப்புச் சுவையுள்ள, உமிழ்நீர்.

உணவு விஷயத்தில் சிறிதளவு ஒழுங்கு தவறினாலும் சீரணக்கோளாறு தோன்றுதல்.

யோனிக்கு மேலுள்ள மூளைபோன்ற உறுப்பில் சீழ்ப் பிடிக்கும் கொப்பளங்கள், விசேஷமாக மாதவிடாய்க் காலங்களில். மாதவிடாய்க் காலங்களில் தொடைகளின் உட்புறம் முழுவதும் ஏராளமாய்த்தோல் உறிந்து புண்ணாகுதல்.

மூலைக்காம்புகளைச் சுற்றியும் ஸ்தனங்களுக்கு இடையிலும் சிவந்த நிறமுள்ள சருமக் கோளாறுகள்.

அழுகிய நாற்றமும் சீழ்ப்போன்ற தோற்றமும், மஞ்சள் நிறமும் இளகிய தன்மையும் இரத்தம் தோய்ந்தும் உள்ள கோழை வெளிப்படுதல்.

சுவாசகோசங்களிலிருந்து இரத்தப் பெருக்கு.

முன்னும் பிறகும் வேலை செய்யக்கூடியது ஆர்ஸனிகம் ஆல்பம்; ஆலோ, அல்லியம் ஸிபா, இவ்விரண்டும் பகை.

———

அலுமென்
(ALUMEN)

உடலின் பல்வேறு இடங்களில் காய்ந்திருப்பது போலவும் சுருங்கிவிட்டது போலவும் உணர்ச்சி.

பல நாட்களுக்கு மலம் கழிக்க வேண்டு மென்ற உணர்ச்சி ஏற்படாது. மலம் கழிக்கக் கடுமையான தூண்டுதல்; ஆனால் மலம் வெளியாகாது. மலம் கல்போல் கடினமாய் இருக்கும். வெண்மை நிறமுள்ள மலம் ஏராளமாய் வெளிப்படுதல்; அப்படி வெளியானாலும் மலப்பை நிரம்பி இருக்கும் உணர்ச்சி இருக்கும்.

பற்களைப் பிடுங்கிய பிறகு இரத்தப் பெருக்கு,

யோனியில் விட்டு விட்டு ஏற்படும் வலி; யோனியைத் தொட்டால் வலி அதிகமாகுதல்; பல அளவுள்ள வீக்கங்கள் உண்டாகி யோனி குறுகிப்போகுதல்.

தொண்டைச் சுரப்பிகள் பருத்துக் கடினமாகுதல்.

வலது பக்கமாகக் கீழே படுத்தால் இருதயப் படபடப்புத் தோன்றுதல்.

கண்களில் படரும் மெல்லிய சதையை (காடராக்ட்–Cataract) ஆப்பரேஷன் செய்து எடுத்த பிறகு விழித்திரை வெளியே நழுவிவருதல்.

மூத்திரம் கழித்த பிறகு பல சமயங்களிலும் மூத்திரப்பை பாதி நிரம்பி இருப்பதுபோல் தோன்றும்.

வேக்காடு தோன்றிய இடங்கள் கல்போல் கடினமாகுதல்.

மூத்திரக் குழாயின் உட்புறத்தில் சிறிதளவு கடினமாகி மஞ்சள் நிறமுள்ள மெல்லிய கழிவு வெளிப்படுதல்.

அம்ப்ரா க்ரிஸியா
(AMBRA GRISEA)

"ஒட்டி உலர்ந்த உடலும்" பரபரப்பும் உள்ளவர்கள். மெலிந்து தோலும் எலும்புமாய் உள்ள பெண்கள்.

உடலின் வெளிப்புறம் முழுவதும் மதமதப்பாய் இருக்கும் உணர்ச்சி, முக்கியமாகக் காலை வேளையில்.

பெரும்பாலான குறிகள் தூங்கும்போது உண்டாகும்: விழித்து எழுந்தவுடன் குறையும்.

விஷயங்களைச் சீக்கிரத்தில் புரிந்து கொள்ள முடியாமை; ஒரு வாக்கியத்தைப் பலமுறை திருப்பித் திருப்பிப் படிக்கவேண்டி இருத்தல்; அப்படிப் படித்தாலும் புரியாது: சிந்தனை செய்யும் சக்தி மிகக்குறைவாகும்.

கூச்சம்: நான்கு பேருக்கு நடுவில் இருப்பது அவருக்குச் சங்கடமாகத் தோன்றும்.

சங்கீதம் கேட்டால் அழுகை உண்டாகும். "அதிக வருத்தம், பல நாட்களுக்கு விடாமல் அழுது கொண்டே இருத்தல்."

சிறு குழந்தைகளுக்கு ஏற்படும் வலிப்புகளும் மற்ற வலிப்புகளும்.

கிழப்பருவத்தில் தோன்றும் தலைச்சுற்றல்.

பல மனிதர்கள் உள்ள இடத்திலும் புதிய மனிதர்கள் உள்ள இடத்திலும் இருமல் அதிகமாகும். அடிக்கடி ஏப்பத்துடன் கடுமையான இருமல் விட்டு விட்டு வருதல். கடுமையான இருமல், பேசினாலும் உறக்கப் படித்தாலும் அதிகமாகும்.

மூத்திரம் கழிக்கும் போதும் மலம் கழிக்கும் போதும் மற்றவர்கள் எதிரில் இருப்பது பிடிக்காது.

"கவலையினால் தூக்கம் வருவதில்லை: எழுந்து உட்கார நேருதல்."

குழந்தைகளுக்கும் கிழவர்களுக்கும் ஏற்படும் காச வியாதி: மார்பில் அமுக்கும் உணர்ச்சியும் காற்றுக் குழாய்களில் கறகறத்த ஓசையும்; இருதயம் பற்றிய குறிகளுடன் சேர்ந்து காணப்படும். புணர்ச்சி செய்ய முயற்சித்தவுடன் தோன்றும் காச வியாதி.

அம்மோனியம் காஸ்டிகம்
(AMMONIUM CAUSTICUM)

தொண்டையில் புண் இருப்பதுபோல் எரிச்சலுடன் பேச முடியாமல் போகுதல்; குரல் தணிவாகவும் பலவீனமாகவும் இருக்கும்.

நாக்கின் மேலும் கன்னங்களின் உட்புறத்திலும் வெண்மை நிறமுள்ள அழுக்கு அடை அடையாக இருத்தல்.

ஆழ்ந்து சுவாசித்தால் தொண்டையில் வலி.

எரிச்சலும் தோலை அரிக்கும் குணமுமுள்ள கழிவுகள் உள்ள டிப்தீரியா மூக்கில் தோன்றுதல்.

அம்மோனியம் மூரியாடிகம்
(AMMONIUM MURIATICUM)

கொழுத்த உடலுள்ளவர்களுக்கு ஏற்றது. உடலின் மேற்பாகம் பெரியதாகவும் கொழுத்தும் இருந்தபோதிலும் கால்கள் மெலிந்து குச்சிகள்போல் இருக்கும் மனிதர்களுக்குத் தகுந்தது.

ஏராளமான அபானவாயுவுடன் பிடிவாதகுணமுள்ள மலச்சிக்கல். பெரியதாகவும் கடினமாகவும் மலம் இருப்பதால் அதை வெளியேற்றப் பலமான முயற்சி செய்ய வேண்டியிருத்தல்; ஆசனவாய்க்கு வெளியே வந்தவுடன் மலம் துண்டு துண்டாய் நொறுங்கி விடும். மலத்தைச் சுற்றி பளபளப்பான உறுதியான சளிப்பொருள் மூடியிருக்கும். ஆசனவாய்க்கு வெளியே வந்தவுடன் மலம் நொறுங்கும் குறிமெக்னீஷியா மூரிலும் காணப்படுகிறது. மலத்தின் நிறம் அடிக்கடி மாறும்; ஒரு தடவை போல் மற்றொரு தடவையில் இருக்காது.

மூலம்; எரிச்சல், கொட்டும் வலிகள், மலப்பையில் புண்ணுள்ள வலி. மலம் கழித்த பிறகு நெடுநேரம் விடாமல் காணப்படும்; வெள்ளை ஒழுக்கை உள்ளே அமுக்கியதால் உண்டாகும் மூலம்; மூலங்களைச் சுற்றி வேக்காட்டுடன் கூடிய கொப்பளங்கள்.

உடலின் பல்வேறு இடங்களில் புண்ணுள்ள உணர்ச்சி.

நீர்க்கோர்வையில் மூக்கிலிருந்து காரமான, தண்ணீர் போன்ற கழிவு வெளியாவதும் அதனால் மூக்குத் துவாரங்களும் மேல் உதடும் புண்ணுதல்.

வெள்ளை ஒழுக்கு; முட்டையின் வெள்ளைப் பொருள் போன்ற கழிவு; கழிவு வெளியாவதற்கு முன் தொப்பூழைச்

சுற்றிக் கிள்ளுவதுபோல் அல்லது இறுகப் பிடிப்பதுபோல் வலி; அல்லது மூத்திரம் கழித்த பிறகு வலி ஏதுவும் இல்லாமல் குழ குழப்பான, பழுப்பு நிறமுள்ள கழிவு வெளியாகுதல்.

உடலின் வெவ்வேறு இடங்களில் சீழ் உள்ள புண்கள் இருப்பது போல் வலி.

முதுகிலும் தோள் பட்டைகளின் இடையிலும் சில்லிப்பு உணர்ச்சி.

நடக்கும்போது தொடை நரம்புகள் சுருங்கிவிட்டது போல் வலி; முழங்கால் மூட்டில் விரைப்பும் பிடிப்பும்.

உடலின் வலது பக்கம் இடது பக்கத்தைவிட அதிக மாய்த் தாக்கப்பட்டிருப்பது போல் தோன்றுதல்.

'மார்பில் அதிக ஒசையுடனும் இழுப்புடனும் பிசுக்கென்று ஒட்டிக்கொள்ளும் குணமுள்ள களி.''

தொடை நரம்பு வாதத்தில் உட்கார்ந்தால் வலி அதிகமாகிக் கீழே படுத்துக் கொண்டால் சௌகரியமாகும்.

பாதங்களில் நாற்றமுள்ள வியர்வை.

மாதவிடாயின்போது வயிற்றுப்போக்கும் வாந்தியும்; குடல்களிலிருந்து இரத்தம் கலந்த போக்கு வெளியாகுதல்; கால்களில் நரம்பு சம்பந்தமான வலிகள்; போக்கு கறுப்பு நிறமாகவும் கட்டிகள் கலந்தும் இருத்தல்.

அமிலெனம் நைட்ரோஸம்
(AMYLENUM NITROSUM)

பரபரப்பும் அதிக இரத்தம் இருப்பது போன்ற தோற்றமும் உள்ள பெண்களுக்கு ஏற்றது.

ஏதோ ஒரு பொருளைச் சுவைத்துப் பார்ப்பதுபோல் உதடுகளைச் சப்புக் கொட்டுதல், மன உணர்ச்சி சிறிது அதிகமானாலும் முகம் சிவத்தல். இவ்வாறு முகம் சிவத்தல் திடீரென்று ஏற்பட்டதாகவும் இருக்கலாம். நீடித்து இருப்பதாகவும் இருக்கலாம். உணவை மெல்லுவதுபோல் கீழ்த்தாடைகளை அசைத்தல். கழுத்துப்பட்டை மிகவும் இறுகிவிட்டதுபோல் தோன்றி அதைத் தளர்த்தி விட

விரும்புதல். புதிய காற்று வேண்டுமென்பார்; கூட்டைப் பொறுக்க முடியாது; போர்வைகளைத் தூர எறிந்துவிட்டு அறையின் கதவுகளையும் ஜன்னல்களையும் திறந்துவைத்துக் கொள்வார். குளிர்காலத்தில்கூட இவ்விதம் செய்வார். தலையிலும் முகத்திலும் ஏராளமான அளவு இரத்தம் சேருதல்.

மனதிலோ உடலிலோ உண்டாகும் மிகச் சிறிய பரபரப்பினாலும் இருதயம் படபடவென்று அடித்துக் கொள்ளும்.

மார்பில் வலி: இருதயம் கடுமையாகத் துடித்தல்; இருதயத்திலும் கழுத்திலும் உள்ள சுத்த இரத்தக் குழாய்களில் கடுமையான துடிப்புகள்.

அடிக்கடி, மிக நீளமான கொட்டாவிகள்; விக்கலும் கொட்டாவிகளும்.

சுரத்தில் உடம்பு முழுவதும் எல்லா இடங்களிலும் துடிப்புகள்.

''இன்புளூயன்ஸா சுரத்துக்குப் பிறகு அளவு கடந்த வியர்வை''.

பல மணி நேரம் சேர்ந்தாற்போல் உடம்பை சோம்பல் முறித்துக் கொண்டே இருத்தல்; சோம்பல் முறிக்கும் ஆசையைத் தீர்க்க முடியாது; கடைசியில் தன்னால் உடம்பை இனி முறிக்க முடியாது என்று தோன்றியவுடன் பிறரை விட்டு முறிக்கச் சொல்வார்.

பிள்ளைப்பெற்ற உடனே வலிப்புகள். இவ்வளவுத சுத்தை மூக்கினால் முகர்ந்தவுடன் வலிப்பு நின்று போய்விடும்.

தாய்த் திரவத்திலும் குறைந்த வீரியங்களிலும் தற்கால சாந்தியை அளிக்கிறது. உயர்ந்த வீரியங்களில் தான் நல்ல குணம் ஏற்படும்.

அங்குஸ்டுரா
(ANGUSTURA)

காப்பியில் அடக்க முடியாத விருப்பம்.

இருமலுடன் ஏப்பம் விடுதல். இருமிய பிறகு விக்கல்.

நீள எலும்புகளில் சொத்தை விழுவதும் சீழுள்ள புண்கள் தோன்றுவதும் அவைகளின் நடுப்பாகம் வரை துளை ஏற்படுவதும்.

விரைப்பையில் கடுமையான அறிப்பு.

———

அபோஸினம் கன்னபினம்
(APOCYNUM CANNABINUM)

கழிவுகள், குறிப்பாக மூத்திரமும் வியர்வையும், அளவு குறைந்திருத்தல்.

அடிவயிற்றில் காயமுள்ள உணர்ச்சியுடன் நீர்ச்சுரப்பு.

ஊனீர்ச்சவ்வுகளில் வேக்காட்டினாலும் திடீரென்றும் தோன்றும் நீர்ச்சுரப்பு.

தாகத்துடன் கூடிய நீர்ச் சுரப்பு; ஆனால் தண்ணீர் குடித்தால் வேதனை ஏற்படும்; வயிற்றில் அதிக வேதனை ஏற்பட்டு உண்ணும் உணவும் குடிக்கும் தண்ணீரும் உள்ளே சென்ற மறுகணமே வாந்தியாகும்; வயிற்றிலும் மார்பிலும் அமுக்கும் உணர்ச்சி. உடல் முழுவதும் பொது வாய் உள்ள நீர்ச்சுரப்பு, அடிவயிற்றில் நீர்ச்சுரப்பு, மார்பில் நீர்ச்சுரப்பு முதலிய பல வகைப்பட்ட நீர்ச்சுரப்புகளிலும் அந்நீர்ச்சுரப்பு உறுப்புகளைப் பற்றிய கோளாறுகளால் ஏற்படாமல் இருந்தால் இவ்வௌஷதம் பயனளிக்கும். "மூத்திரக்காய் வியாதி சம்பந்தமாக ஏற்படும் நீர்ச்சுரப்புகளைவிட இருதய வியாதி சம்பந்தமுள்ள நீர்ச்சுரப்புகளில் அது நன்றாக வேலைசெய்கிறது."

"சாராயம் கலந்து தயாரிக்கப்படும் மீரியங்களைவிடக் கஷாயம் செய்து உபயோகித்தால் இது சில சமயங்களில் நன்றாக வேலை செய்கிறது. அப்படி நன்றாக வேலைசெய்யும் காலத்தில் மூத்திரம் தாராளமாக வெளிப்படுவதற்கு முன்பாகவே வறட்சியாய் இருந்த சருமம் வியர்வை கண்டு ஈரப்பசையுடன் இருக்கும்." (லிலியந்தால்).

எலும்பு மூட்டுகளின் அருகே நீர்ச்சுரப்புள்ள வீக்கம்.

மானியும் விரைப்பையும் வீங்கி நீர்ச்சுரப்புடன் இருக்கும்.

ஏராள்மான, மஞ்சள் அல்லது பழுப்பு நிறமுள்ள வயிற்றுப் போக்கு ; மலம் மிக வேகமாய் வெளியாகும். வயிற்றுப் போக்கும் நீர்ச்சுரப்பும் மாறி மாறித் தோன்றுதல். அடி வயிற்றில் பலவீனமான, ஒன்றுமே இல்லாத உணர்ச்சி.

"தலையில் நீர்ச்சுரப்பு ; மண்டை ஓடுகளின் இணைப்பு பிரிந்து பிளந்து விடுதல் ; நெற்றிப்பக்கம் வீங்கியதுபோல் முன்பக்கமாய்ப் பருத்திருத்தல் ; ஒரு கண்பார்வை அடியோடு மறைந்து மற்றொரு கண்பார்வை சிறிதளவு இருக்கும் ; மயக்கம் ; ஒரு காலும் ஒரு கையும் வியாதியஸ்தரின் விருப்பம் இல்லாமல் அடிக்கடி அசைந்து கொண்டு இருத்தல் (ஹெல்லபோரஸ்) ; மூத்திரம் அடக்கப்படுதல் ; மயக்கத்துடன் வாந்தி."

அரேலியா ரஸிமோஸா

(ARALIA RACEMOSA)

காச வியாதியில் மூச்சு அடைத்துப் போகும் என்ற உணர்ச்சியுடன் கறகறத்த ஓசையுடன் சுவாசித்தல் ; மூச்சுத்திணறல் மிக வேகமாய் அதிகமாகும் ; கீழே படுத்தவுடன் நள்ளிரவில் பலமான கறகறத்த ஓசையுடன் சுவாசிப்பது தோன்றும் ; காற்றை உள்ளே இழுக்கும் போதும் வெளியே விடும்போதும் பலமான, காதுக்கு இனிமையான, ஊதும் ஓசை உண்டாகும்.

முதல் தூக்கம் தூங்கி எழுந்தவுடன் அதாவது நள்ளிரவுச் சமயத்தில் வறண்ட இருமல் உண்டாகிச் சிறிது நேரம் விடாமல் இருக்கும்.

அர்ஜண்டம் மெட்டாலிகம்

(ARGENTUM METALLICUM)

குழிந்த கண்கள், வெளுத்த உடல், உயரமாகவும் மெலிந்தும் இருத்தல், முன்கோபம் முதலிய குறிகள் உள்ளவர்களுக்கு ஏற்றது.

மிகவும் வயதானவர்களைப்போல் உடல் வாடி வதங்கிப்போன இளவயதினருக்கு ஏற்படும் குரல்வளை பற்றிய க்ஷயரோகம்.

பல குறிகள் ஒய்வாய் இருக்கும்போது அதிகமாகும்.

இமைகள் தடித்துக் கடினமாய் இருத்தல்.

"காதுகளில் இரத்தம் வரும்வரை சொரிந்து விடுதல்."

"எட்டு மாத காலமாய் நீடித்துள்ள, ஆரம்பத்திலிருந்தே தூங்கி வழிந்து கொண்டிருக்கும் குணமுள்ள, மஞ்சளும் பச்சையும் கலந்த நிறமுள்ள போக்கு வெளிப் படும் மேக வெட்டை."

"பழுப்பு நிறமுள்ள, பாகுபோல் குழகுழப்பான அல்லது கஞ்சி போலுள்ள கோழை மிகச் சீக்கிரத்தில் வெளிப்படுதல் சிரித்தால் அதிகமாகும்."

இடது சினைப்பையிலும் முதுகிலும் வலியுடன் கருப் பை நழுவுதல்.

மாடியிலிருந்து கீழே இறங்கும்போது கால் ஆடுதசை கள் மிகவும் குட்டையாய் விட்டதுபோல் தோன்றுதல்; பிடிப்பும் மதமதப்பும்.

இருதயம் துடிக்காமல் நின்று விட்ட உணர்ச்சி, அதைத் தொடர்ந்து உடலில் நடுக்கம். பிறகு இருதயம் ஓழுங்கு இல்லாமல் கடுமையாய்த் துடித்தல்.

குதிகால்களிலும் குதிகால் தசைகளிலும் மத மதப்பு.

தொண்டைக் கறகறப்பு (அல்லது பாடகர்கள், பேச் சாளர்கள் முதலியவர்களுக்கு, குரலே இல்லாமல் போகு தல்); தொண்டையில் ராவி விட்டதுபோன்ற உணர்ச்சி. கொட்டாவி விடும்போது தொண்டையில் வலி.

வடித்த கஞ்சியைப்போல் சளிச்சவ்வுகளிலிருந்து கழிவு கள் வெளியாகுதல். பிடுங்கும் உணர்ச்சியுடன் பசி; உணவு உட்கொண்டால் குணம் ஆவதில்லை.

இயற்கைக்கு மாறுன வழிகளில் சிற்றின்பத்தைப் பெற்ற தால் ஆண்தன்மைக் குறைவு, மானி சிறுத்துப்போகுதல், விரைகளில் நசுக்கப்பட்டது போல் வலி முதலிய கோளாறு கள் ஏற்படுதல்.

மதுமேகம் எனப்படும் நீரழிவில் அடிக்கடியும் ஏராளமாக வும் மூத்திரம் வெளியாகுதல்; ஏராளமாகவும் கலங்கியும் தித்திப்பாகவும் சில சமயங்களில் வே (Whey) தண்ணீர்

போலவும் உள்ள மூத்திரம் இரவில் அடிக்கடி கழிக்கப்படுதல்; பாதங்களில் கீர்ச்சுரப்பு; விரைப்பையிலும் கீர்ச் சுரப்பு இருக்கும்; சாக்காடு ஏற்படும் குணம்.

எலும்பு மூட்டுகளில் புண் இருப்பதுபோல் வலியுள்ள உணர்ச்சி.

தொண்டையில் பிசுக் கென்று ஒட்டும் குணமும் பழுப்பு நிறமும் பாகு போலவும் உள்ள சளி; விடியற் காலையில் மிகச் சுலபமாகக் காறி உமிழப்படும்;.

மார்பில் அதிகப் பலவீனம்; இடது பக்கத்தில் அதிகமாய் இருக்கும்.

வலிகள் கொஞ்சம் கொஞ்சமாய் அதிகரித்து திடீரென்று மறையும்.

சிற்றின்ப ஆசை ஏற்படாமல் இந்திரியம் நழுவுதல்.

உறக்கப் படித்தவுடன் தொண்டையைக் கனைத்துக் கொள்ளவும் காறிக் கொள்ளவும் நேரும்.

சிரித்தால் குரல் வளையில் கோழையை உண்டாக்கி இருமலைக் கொண்டு வரும்.

மூக்கின் கீர்க் கோர்வையில் தும்மலுடன் கழிவு ஏராளமாகவும் தாராளமாகவும் வெளியாகிக் கனைப்பை உண்டாக்கும்; சிற்சில சமயங்களில் மூக்கிலுள் ஊருவது போலவும் குடைவது போலவும் இருக்கும்.

விரைகளில் நசுக்கப்பட்டது போல் வலி; ஆடை படுவதால் வலி அதிகமாகும்.

காற்றுக் குழாய் இரண்டாகப் பிரியும் இடத்துக்கு மேற்புறத்தில் புண்ணுள்ள உணர்ச்சி; பாடும் போதும் பேசும் போதும் அதிகமாகும்.

எல்லா விஷயங்களிலும் அவசரம்; பொழுது மெதுவாகப் போவதுபோல் தோன்றுதல்; வருத்தம்.

கருப்பையின் கழுத்து அதிக வீக்கமாய்ப் பஞ்சு போல் மிருதுவாய் ஆழமான புண்களுடன் இருக்கும்.

———

அஸபோடிடா
(ASAFOETIDA)

நாற்ற முள்ள கழிவுகள். உடலின் உட்புறத்திலிருந்து வெளிப்பக்கம் வரும் குத்துவலிகள். உடம்பின் மேல் படுவதைப் பொறுக்க முடியாது. வலிகளுடன் மதமதப்பும் சேர்ந்து தோன்றும். பல குறிகள் ஓய்வாய் இருக்கும் போது தோன்றி அசைவினால் குறையும்.

உடல் கொழுத்து, தசைகள் தொள தொள வென்று தொங்கி, பரபரப்பும் சங்கா குணமும் உள்ளவர்களுக்குத் தகுந்தது. மேகக் கிரந்தி வியாதியஸ்தர்; விசேஷமாகப் பாதரஸம் சம்பந்தப்பட்ட ஔஷதங்களை அளவு மீறி உபயோகித்தவர்கள்.

சளிச்சவ்வுகளிலிருந்தும் கீழ்ப் புண்களிலிருந்தும் வெளியாகும் கழிவுகள், மலம் ஆகியவை பொறுக்க முடியாத நாற்றமாய் இருக்கும் (ஔஷதச் சரக்கே நாற்றமாய் இருக்கிறது).

ஏப்பம் விட்டால் பூண்டு நாற்றமாய் இருக்கும்; வாயில் புளித்த அல்லது அழுகிய சுவை.

மூக்கிலிருந்து நாற்றமுள்ள கழிவு; பச்சை நிறமாய் இருக்கும்; எலும்புகளில் வீக்கமும் வேக்காடும்.

வாயு மேல் நோக்கியே வருதல் (ஏப்பம்); கீழ்ப் பக்கம் போவதில்லை (அபானவாயு); அடிவயிற்றில் ஏராளமான உப்பிசம்.

கைகளில் உட்பக்கத்திலிருந்து வெளிப்பக்கமாய் அமுக்குவது போல் வலி.

எலும்புகளில் ஆரம்பித்து அவைகளின் மேல் பக்கத்துக்குப் பரவும் குத்துவலி (மேகக் கிரந்தி.)

மார்பில் குத்து வலிகள்.

காதுகளில் குத்து வலிகள், **காதுகளின் உட் பக்கத்திலிருந்து வெளிப்பக்கம் பரவும்; அடிக்கடி உண்டாகும்.**

பல வகையான காச வியாதி. "காற்றுக் குழாயில் காச வியாதி இருக்கும் உணர்ச்சி." "அவள் வாழ் நாள் முழுவதும் ஒவ்வொரு நாளும் தவறாமல் ஒரு தடவை காச

வியாதி தோன்றும். எவ்விதமான வேலை செய்தாலும் சிற்றின்பத்தில் ஈடுபட்டாலும் திருப்தியாக உணவு உட்கொண்ட பிறகும் தவறாமல் வியாதி தோன்றும்.' வயிறு நிறையச் சாப்பிட்ட காரணத்தால் வியாதி தோன்றியதை ஆதாரமாய்க்கொண்டு அஸ்போடிடாவிஞல் காச வியாதியை நான் குணம் செய்திருக்கிறேன்.

சுவாச கோசங்களைப் போதிய அளவு விரியச் செய்ய முடியாது என்ற உணர்ச்சியுடன் சுவாசிக்கக் கஷ்டம் (காச வியாதி).

சங்கா குணத்தில் பந்து உணர்ச்சி. தொண்டையில் ஒரு பந்து ஏறி வரும் உணர்ச்சி. உணவுக் குழாய் வயிற்றிலிருந்து தொண்டைப் பக்கமாகத் தள்ளப்படும் அல்லது மேல் பக்கமாக அமுக்கப்படும் உணர்ச்சி.

வயிற்றின் அடித் தளத்தில் நாடித் துடிப்புகள். இத் துடிப்புகள் பல சமயங்களில் பலமாக இருக்கும்.

மூக்கு எலும்புகள் சொத்தை யாகுதல். எலும்புகளில் ஏற்படும் சீழுள்ள புண்கள்; மெல்லிய, நாற்றம் வீசும் சீழ் வெளியாகுதல்.

குழிப் புண்களின் ஓரங்களைத் தொட்டால் பொறுக்க முடியாத வேதனை தோன்றும்; அல்ப காரணங்களாலும் இரத்தப் பெருக்கு தோன்றும்; மெல்லிய, அழுகிய நாற்றமுள்ள சீழ்.

ஆப்பரேஷன் செய்து கை அல்லது காலை வெட்டி எடுத்த பிறகு மீதி இருக்கும் துண்டில் நரம்பு வலி.

மேகக் கிரந்தியின் விளைவாகத் தோன்றும் கண் வியாதிகளில் (சீழ்ப் புண்கள், வேக்காடு முதலியவை) எரிச்சல், குத்துவலிகள் (உள்ளே இருந்து வெளியே வரும் குத்து வலி), திறந்த இடங்களில் உபாதி குறைதல், இரவில் அதிகரித்தல், கண்களில் மதமதப்பு முதலிய குறிகள் காணப்பட்டால் இவ்வௌஷதத்தை நினைக்க வேண்டும்.

கழிவுகளை அடக்கியதால் ஏற்படும் சங்கா குணம்.

அஸாரம் யுரோபியம்
(ASARUM EUROPAEUM)

நரம்புகளில் ஒரு விதமான உணர்ச்சி அதிகரிப்பு. உடல் லேசாய் இருப்பதுபோல் உணர்ச்சி.—அமுக்குதல், விரைப்பாய் இருத்தல், சுருங்கி இருத்தல்.—தக்கை உள்ள உணர்ச்சி.

பரபரப்பும், ஏக்கமும் முன் கோபமும் எளிதிலே உணர்ச்சி வசப்படும் குணமும் உள்ளவர்கள்.

நரம்புகளில் ஒரு விதமான் உணர்ச்சி அதிகரிப்பில்; பட்டு அல்லது கம்பள ஆடைகளின் சல சலப்பு, காகிதத்தைக் கசக்குதல் அல்லது அவ்விதக் காரியங்களால் உண்டாகும் ஓசையை நினைத்தால்கூட அவருக்குத் தாங்கமுடியாது. அவ்விதமான நினைவுகளால் சில சமயங்களில் உடலில் பொறுக்க முடியாத ஒரு அதிர்ச்சி உண்டாகி அதனால் யோசனை செய்யவோ வேலை செய்யவோ முடியாமல் போகும்.

நரம்புகளின் உணர்ச்சி அளவு மீறி அதிகரித்த காரணமாய்க் கருச்சிதைவு உண்டாகும் போல் தோன்றுதல்.

மன உணர்ச்சி அதிகரித்தால் உடலில் குளிருடன் "நடுக்கம்."

திறந்த இடங்களில் நடக்கும் போது ஆகாயத்தில் பறந்து செல்வது போல் தோன்றும். கால்கள் மிக லேசாக இருப்பது போலவும் தான் ஆகாயத்தில் மிதந்து செல்வது போலவும் தோன்றும்.

மண்டைத்தோல் முழுவதும் விரைப்பாய் இருக்கும்; தலையைச் சீவும் போது வலி உண்டாகும்.

காதுகளில் அமுக்குவது போலவும் விரைப்பாய் இருப்பது போலவும் தோன்றுதல்.

படிக்கும்போது விழிகளில் அவை தெரித்துக் கீழே விழுந்து விடுமென்று தோன்றும் அமுக்கும் உணர்ச்சி.

காலையில் நடக்கும்போது (மித மிஞ்சி மதுபானங்களிலும் சிற்றின்பத்திலும் ஈடுபட்ட பிறகு) வயிற்றில் அமுக்கும் குமட்டல் தோண்டும் உணர்ச்சி.

நடக்கும்போது (குடிகாரர்களுக்கு) வயிற்றில் பயங்கரமான உணர்ச்சி.

மது பானங்களில் தீராத விருப்பம்,

உள்ளங்கைகள், குறிப்பாக முகம், சூடாய் இருக்கும்; குளிர்ந்த தண்ணீரினால் சிறிது நேரமே குறைவாய் இருக்கும்.

பிசுக்கென்று ஒட்டும் குணமுள்ள அல்லது பாகுபோல் குழ குழப்பான சளியுடன் கூடிய வயிற்றுப்போக்கு.

பிசுக்கென்று ஒட்டும் குணமும் மஞ்சள் நிறமுமுள்ள வெள்ளை ஒழுக்கு. மாதவிடாயின் ஆரம்பத்தில் கீழ் முதுகில் கடுமையான வலி, மூச்சு விடக்கூட முடியாது. மாதவிடாயுடன் வயிற்று வலி. யோனியில் பவுத்திரம்.

அதிக மயக்க உணர்ச்சியும் அடிக்கடி கொட்டாவி விடுவதும்.

அஸ்டெரியஸ் ரூபென்ஸ்
(ASTERIAS RUBENS)

மேகவெட்டை விஷமுள்ளவர்கள், தளர்ந்து தொங்கும் தசைகளும் மந்த குணமும் உள்ளவர்கள்.

குளிரும் ஈரக்கசிவும் உள்ள பருவக்காலங்களில் உபாதிகள் அதிகமாகும்.

குளிர்ச்சியான பானங்களில் அதிக ஆவல்.

மன உணர்ச்சிகள் அதிகரித்தால், விசேஷமாகப் பிறர் மறுத்துப் பேசினால் மிக எளிதிலே உணர்ச்சி வசப்படுவார். சிறிய காரணமும் அவர் கண்களில் கண்ணீரை உண்டாக்கும்,

முகம் சிவப்பாய் இருக்கும்; தலையிலும் மூளையிலும் இரத்தம் ஏராளமாய்ச் சேருதல்; தலை சூடாகவும் சூடான காற்றினால் சூழப்பட்டிருப்பது போலவும் தோன்றுதல்.

பிடிவாத குணமுள்ள மலச்சிக்கல் (சுமார் பதினைந்து நாட்களுக்கு மலம் வெளியாகாமல் இருக்கும்) பிறகு கடினமாகவும் கறுப்பாகவும் சிறு சிறு உருண்டைகளாக மலம் வெளியாகும்.

வயிற்றுப்போக்கு; மலம் தண்ணீராகவும் பழுப்பு நிற

மாகவும் பலமாகத் தள்ளப்படுவது போலவும் வெளிப் படும்.

யோனியில் வழக்கத்துக்கு மாறுக ஈரக்கசிவு இருத் தல்; அதனால் சௌகரியமாய் இருப்பது போல் தோன்றும்.

சிற்றின்பத்தில் ஆசை மிகவும் அதிகரித்தல்; விசேஷ மாகப் பெண்களுக்கு; பரபரப்பும் கிளர்ச்சியும்.

சூடான தலையுடன் (சூடான காற்றினால் சூழப்பட்டது போல்) மூளை இரத்தக் குழாயில் வெடிப்பு; பிடிவாத குண முள்ள மலச்சிக்கல்; முகம் சிவப்பாய் இருத்தல்; நாடி கடினமாகவும் முழு அளவுடனும் வேகமாகவும் துடிக்கும்.

காக்கை வலிப்பு: வலிப்பு தோன்றுவதற்குப் பல நாட் களுக்கு (அனேகமாக நான்கு அல்லது ஐந்து நாட்கள்) முன்னதாக உடல் முழுவதும் துடிப்புகள் தோன்றுதல்.

ஸ்தனச் சுரப்பிகளில் புற்று நோய்; முலைக்காம்பு உள்ளே அமுங்கிப்போய் இருக்கும்; புற்றிலிருந்து வெளியாகும் கழிவு மெலிந்தும் காரமாகவும் நாற்றமாகவும் இருக்கும்; **இரவில் கத்தியினால் கிழிப்பதுபோல் வலி;** ஸ்தனங்கள் உட் பக்கமாய் இழுக்கப்பட்டிருப்பது போல் தோன்றும்; புண் ணின் ஓரங்கள் வெளுத்துக் கடினமாகி வெளிப்பக்கமாய் மடங்கி இருக்கும்.

அக்குள் சுரப்பிகள் வீங்கிக் கடினமாகி முடிச்சுகளு டன் காணப்படும்.

ஆரம் மூரியாடிகம் நேட்ரோநேட்டம்
(AURM MRIATICUM NATRONATUM)

பறங்கிப்புண்: மானிக் கொண்டையில் சதையை ஆழ மாகத் தின்றுவிடும் சீழ்ப்புண்கள்.

"சினைப்பை மிக அதிகமாகக் கடினமாகி விடுதல்." **கருப்பையில் தசைக்கட்டிகள்.** கருப்பை கடினமாவதால் ஏற்படும் கருச்சிதைவு. கருப்பையின் கழுத்திலும் யோனி யிலும் சீழ்ப்புண்கள். சினைப்பைகளில் நீர்ச்சுரப்பு.

"நரம்பு மண்டலத்தில் ஏற்படும் கோளாறுகளால் இரத்த விசை அதிகரித்தல்."

பாடியாகா
(BADIAGA)

கோழை வாய் வழியாய்ப் பறந்து ஓடுதல்.
மூக்குத்துவாரங்கள் வழியாகச் சளி பறந்து ஓடுதல்.
விழிகளில் வலி தலைக்குப் பரவும்.

தசைகளிலும் சருமத்திலும் அடிபட்டது போல் புண்ணுள்ள உணர்ச்சி; தொட்டாலும் அமுக்கினாலும் தாங்க முடியாது.

ஸ்தனங்களில் புற்று.

சில சிவப்பும் வெடிப்புகளும்.

அரையாப்புக்கட்டி, விசேஷமாக இடது அரை இடுக்கில். கட்டி கடினமாகவும் மேடு பள்ளங்களுடனும் இருக்கும். இரவில் கடுமையான எரிச்சலுடன் குத்து வலிகள்.

கடினமாய் மாறிவிட்ட, சரிவரச் சிகிச்சை செய்யப்படாத அரையாப்புக் கட்டிகள்.

சிறு குழந்தைகளின் மேகக்கிரந்தி. *அரையாப்புக் கட்டிகளும் மற்றுமுள்ள வீக்கமுள்ள சுரப்பிகளும் கடினமாகி மடிந்து கொள்ளும்.*

இருமலினால் தும்மல் தோன்றும்; மூக்கில் ஏராளமான நீர்க்கோர்வை. முகம், தொண்டை, கழுத்து ஆகிய இடங்களின் இடது பக்கச் சுரப்பிகளில் கூய சம்பந்தமான வீக்கம்; கோழி முட்டையளவு பருத்திருக்கும்; சில கடினமாகவும் சில சீழ்ப்பிடித்தும் இருக்கும்.

லேசான அறிப்புடன் தலையில் ஏராளமான பொடுகு, மயிர் காய்ந்து இருக்கும்.

மாதவிடாய் இடைக் காலங்களில் கருப்பையிலிருந்து இரத்தப் பெருக்கு; இரவில் அதிகமாகும்; தலை பருத்து விட்டதுபோல் தோன்றும்.

ஸல்பர், ஐயோடியம், மெர். சொலு. *ஆகியவைகளுக்கு முன்பும் பிறகும் வேலைசெய்யும்.*

பாரிடா அயோடடா

(BARYTA IODATA)

தொண்டைச் சுரப்பிகளில் கொழுப்புச் சதை வளருதல்; அவைகளில் நாட்டபட்ட வீக்கமும் கல்போல் கடினமாய் இருப்பதும்.

கல்போல் கடினமான ஸ்தனங்கள்.

பாரிடா மூரியாடிகா

(BARYTA MURIATICA)

காதுப்பக்கமுள்ள சுரப்பிகள், விசேஷமாக வலது பக்கத்தில், கடினமாய் வீங்கி இருத்தல்.

தொண்டைச் சுரப்பிகளில் அடிக்கடி வேக்காடு தோன்றுதல். சளிப்பிடித்த பிறகு ஒவ்வொரு தடவையும் தொண்டைச் சுரப்பிகளில் சீழ்ப் பிடித்தல்.

அடிவயிற்றில் தசைக்கட்டி உண்டாகி அக்கட்டியில் வேதனை தரும் துடிப்பு.

பாரிச வாதத்துடன் உடம்பு முழுவதும் பனிக்கட்டிபோல் சில்லென்றிருத்தல்.

"இன்புளூயன்ஸா, டிப்தீரியா ஆகிய வியாதிகளுக்குப் பிறகு தோன்றும் பாரிசவாத நிலைமைகள்."

வயிற்றில் ஒன்றுமே இல்லாத உணர்ச்சி.

உடம்பில் அளவு மிஞ்சித் தூக்கிப் போடுவதுடன் கூடிய வலிப்புகள் முறைவைத்துத் தோன்றுதல்.

குளிர்ந்த தண்ணீரை உறிஞ்சிக் குடித்தால் காதுவலி குறைதல்.

பிஸ்மதம்

BISMUTHUM

தனியாய் இருப்பதைத் தாங்க முடியாது. பிறருடன் சேர்ந்திருக்க விரும்புதல். குழந்தை அதன் தாயின கையை விடாமல் பிடித்துக் கொண்டிருக்கும்.

மனத்துயரம்; உட்காருவார், அதன் பிறகு படுத்துக் கொள்வார், ஒரு இடத்தில் அதிக நேரம் இருக்க மாட்டார்.

குடித்த தண்ணீர் வயிற்றைத் தொட்டவுடன் வாந்தி யாகும்; உணவு இன்னும் சிறிது அதிக நேரம் வயிற்றில் தங்கி நிற்கும். மிகுதியான தாகம்; ஏராளமாய்த் தண்ணீர் குடித்து உடனே வாந்தி செய்வார். ஏராளமாய் வாந்தி எடுப் பதும் கடுமையான தாகமும் இருக்கும். குழந்தைகள் திரவ உருவிலுள்ள எல்லாப் பொருள்களையும் வாந்தி செய்யும். பழுப்பு நிறமுள்ள பொருள் வாந்தியாகுதல். நாற்றமுள்ள ஏப்பங்களுடன் சீரணம் மெதுவாக நடைபெறும்.

வயிற்றினுள் அமுக்கிக் கொண்டிருப்பது போன்ற கனத்த உணர்ச்சியுடன் வயிற்றுவலி (ஏதோ ஒரு இடத்தில் கன மான பொருள் அமுக்கிக் கொண்டிருக்கும் உணர்ச்சி. வயிற்றிலிருந்து முதுகெலும்புக்குப் பாயும் வலிகளுள்ள வயிற்றுவலி.

அடிவயிற்றைக் கிழித்து ஆப்பரேஷன் செய்த பிறகு தொண்டையில் வலிப்புகள் உண்டாகி அடைத்துக் கொள்வ தும் இன்ன தென்று சொல்ல முடியாத வலியும் உண்டாகுதல்.

காலராவை ஒத்த வயிற்றுப்போக்கு; வாந்தியே அதிக மாய் இருக்கும்; குடித்த தண்ணீர் மறுகணமே வாந்தி யாகுதல்; மலம் தண்ணீர் போலவும் பிண நாற்றத்துட னும் அதிகக் கழிப்பை உண்டாக்குவதாகவும் இருக்கும்; தசைகளில் சுருங்குவதுபோல் வலி.

அதிகக் கழிப்பு; ஆனால் உடம்பு சூடாகவே இருக்கும்.

சிறுப் புண்கள் நீலநிறமாகிச் சாக்காடு தோன்றுதல். காய்ந்த தோல்போல் ஈரக்கசிவு இல்லாமல் சாக்காடு.

தலைவலியும் வயிற்று வலியும் மாறி மாறித் தோன்றும். தலைவலி குளிர் காலத்தில் ஒவ்வொரு வருஷமும் வயிற்று வலியுடன் தவறாமல் தோன்றும்.

ப்ளாட்டா ஓரியண்டாலிஸ்

(BLATTA ORIENTALIS)

பருத்த உடலுள்ளவர்கள்.

காச வியாதி; குறிப்பாக மார்ச்சளியுடன் கூடிய காசம்.

மூச்சுத்திணறலுடன் (மார்ச்சளி, சுவாசகோச க்ஷயம் ஆகியவைகளில்) கடுமையான இருமல்.

சீழ்ப் போன்ற கோழை ஏராளமாய் வெளிப்படுதல் (சுவாசகோச க்ஷயத்தில்)

குறிப்புகள் :—காசவியாதி திடீரென்று கடுமையாக மாறும் சமயங்களில் இவ்வௌஷதத்தைத் தாய்த்திரவ உருவிலும் 1x வீரியத்திலும் உபயோகித்தால் நன்மை உண்டாகும். நாட்பட்ட நிலைமைகளில் உயர்ந்த வீரியங்களே தேவையாகும். திடீரென்று கடுமையாக மாறும் சமயங்களில் வியாதி ஒரு தடவை வந்துநின்றவுடனே இவ்வௌஷதத்தை 6 வது வீரியத்தில் அல்லது அதற்கும் அதிகமான வீரியத்தில் கொடுத்தால் மிஞ்சியிருக்கக் கூடிய இருமலை அடக்கும்.

போவிஸ்டா

(BOVISTA)

உடல் முழுவதும் அங்குமிங்குமாகக் கடி போன்ற சரும வியாதிகள் உள்ளவர்களுக்கு ஏற்றது. இச்சருமக் கோளாறுகள் நீர்க் கசிவுடன் இருக்கலாம். வறட்சியாய் இருப்பதும் உண்டு.

இருதயப் படபடப்புடன் கூடிய வயது சென்ற மணமாகாத பெண்கள்.

திக்கித் திக்கிப் பேசும் சிறுவர்கள்.

அடிக்கடி இரத்தப் பெருக்கு தோன்றும் உடல்வாகு உள்ளவர்கள்.

சருமம் தளர்ந்து தொங்கும்; மூன மழுங்கியுள்ள பொருள்களைச் சருமத்தின் மீது அழுத்தினால் ஆழமான குழி விழும்.

உடம்பில் அறிப்பு, விசேஷமாகச் சூடாக இருக்கும் போது; சொறிந்தால் தணிவதில்லை.

அக்குள்களில் பலமான நெடியுடன் கூடிய வியர்வை; வெங்காயம்போல் நாற்றம் அடிக்கலாம்.

இடுப்பைச் சுற்றி ஆடைகளை இறுகக் கட்டமுடியாது (மாதவிடாய்க் கோளாறுகளில்).

கைகளில் வைத்திருக்கும் எல்லாப் பொருள்களும் நழுவிக் கீழே விழுதல் (அபிஸ்). கைகளில் பலம் இல்லாமல் மிக இலேசான பொருள்களும் கீழே நழுவி விழுதல்.

அதிகச் சோர்வும் பலவீனமும், குறிப்பாக எலும்பு மூட்டுகளில். கைகளில் பாரிசவாதப் பலவீனம்.

தலை, முக்கியமாகப் பின்தலை பெரியதாகிக் கொண்டிருக்கும் உணர்ச்சி.

முதுகெலும்பின் கீழ் நுனியில் பொறுக்க முடியாத அறிப்பு; அந்த இடத்தில் தோல் உறிந்து புண்ணாகும்வரை விடாமல் சொறிய வேண்டும்.

மாதவிடாய் இடைக் காலங்களில் சிறிதளவு வேலை செய்தால் மாதவிடாய்ப் போக்கு சிறிதளவு தோன்றுதல்; (அம்ப்ரா). மாதவிடாய்ப் போக்கு இரவில் மட்டும் வெளியாகும்; பகல் வேளையில் வெளியாகாது: பகல் வேளையில் நின்று கொண்டிருக்கும் போதும் நடக்கும் போதும் போக்கு வெளியாகாது. இரவில் கீழே படுத்தவுடன் போக்கு ஏராளமாய் வெளிப்படும்; காலை நேரம் நெருங்கும்போது இன்னும் அதிகமாகும்; இரத்தம் கறுப்பாகவும் கட்டிகளுடனும் அல்லது தண்ணீர்போல் இருக்கும். மாதவிடாய்க்கு முன்னதாக வயிற்றுப் போக்கு.

வெள்ளை ஒழுக்கு: முட்டையின் வெள்ளைப் பொருள் போன்ற கழிவு; மாதவிடாய்க்குச் சில நாட்கள் முன்னதாகவோ அல்லது பிறகோ தோன்றுதல்; மஞ்சள் கலந்த நிறமாகவும் இருக்கலாம். காரகுணமும் புண்ணாக்கும் தன்மையும் ஆடைகளில் பச்சை நிறமுள்ள கறையை ஏற்படுத்துவதாகவும் இருக்கும்.

புணர்ச்சிசெய்த பிறகு தள்ளாடுவதும் மனக் குழப்பமும் தலையில் மதமதப்பும்.

"அடிக்கடி மூத்திரம் கழிக்கத் தூண்டுதல்; கழித்த மறுகணமே தூண்டுதல் உண்டாகும்.

"ஈரக்கசிவுள்ள சிறு கொப்பளங்கள் உள்ள சரும வியாதிகள்; கெட்டியான பொறுக்குகள் உண்டாகுதல்."

"அறிப்புள்ள சரும வியாதிகள்; நீர்க்கசிவு; அடியில் சீழுடன் கெட்டியான பொறுக்குகள் ஏற்படுதல் (மெலெரியம்).

உடம்பு முழுவதும் அறித்து வில்லை வில்லையாகத் தடித்தல்.

மூக்கிலிருந்தும் மற்ற சளிச் சவ்வுகளிலிருந்தும் வெளிப்படும் கழிவு கெட்டியாகவும் கயிறுபோல் இழுபடும் குணமுள்ளதாகவும் பிசுக்கென்று ஒட்டிக் கொள்வதாகவும் இருக்கும் (காலி பைக்).

பற்கள் பிடுங்கிய பிறகு ஏற்படும் இரத்தப் பெருக்கு (ஹமாமெலிஸ்); காயங்களிலிருந்து இரத்தப் பெருக்கு,

"முகப் பருக்கள்; கோடைக் காலத்தில் அதிகமாகுதல்; ஸ்னே, முகப்பவுடர் முதலிய அழகுப் பொருள்கள் உபயோகித்தால் ஏற்படும்".

கரிப் புகையினால் ஏற்படும் கோளாறுகள் (உடல் நீல நிறமாகுதல் முதலியவை) இதுகீக்குகிறது (ஆர்னிகா).

மார்பில் அமுக்கும் உணர்ச்சியுடனும் படபடப்புடனும் இருதயம் மிகவும் பருத்துவிட்டதுபோல் தோன்றுதல்.

புபோ ரானே

(BUFO RANA)

இயற்கைக்கு மாறான வழிகளில் சிற்றின்பத்தைப் பெற்றதால் தோன்றும் காக்கை வலிப்பு; அக்காரியத்தைச் செய்வதற்காகத் தனியாய் இருப்பதைப் பெரிதும் விரும்புவார்; முன்அறிவிப்புக் குறி பிறப்பு உறுப்புகளிலிருந்து அல்லது வயிற்றின் உட்புறத்திலிருந்து தோன்றும்; இரவில் தூங்கும்போது வலிப்புகள் உண்டாகும்; வலிப்பு வருவதற்குமுன் வியாதியஸ்தர் உறக்கக் கதறுவார்; முகத்

தில் ஏராளமான வியர்வை பொழியும். மாதவிடாய்க் காலத்திலும் வளர்பிறை, தேய் பிறைகளின் ஆரம்பத்திலும் வலிப்புகள் தோன்றும்.

திக்கித் திக்கியும் குளறியும் பேசுதல்; பிறர் அதைப் புரிந்து கொள்ளவில்லை யென்றால் கோபம் பிறக்கும்:

ஞாபகச் சக்தி குறைவாய் இருத்தல்; மூடத்தனம்.

இந்திரியம் தானாகவே நழுவுதல்; புணர்ச்சி செய்யும் போது மிகச் சீக்கிரமாய் இந்திரியம் வெளியாகுதல்; ஆண் தன்மைக் குறைவு (இளவயதுள்ளவர்களுக்கு மானியைச் சேஷ்டை செய்து சிற்றின்பம் பெற்றதால்).

கலேடியம் ஸெகினம்

(CALADIUM SEGUINUM)

மந்தகுணம் படைத்தவர்களுக்கு ஏற்றது.

சிறிதளவு ஓசையையும் அறியக்கூடிய அளவு உணர்ச்சி அதிகரித்தல்; தூங்கும்போது சிறிது ஓசை ஏற்பட்டாலும் திடுக்கிட்டு எழுந்துவிடுவார்.

நடமாட விருப்பம் இல்லாமை; ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருக்கவே விரும்புவார்.

அதிக ஞாபக மறதி. கவனம் செலுத்த முடியாமை. இக்குறிகள் சிற்றின்பத்தில் அளவுமீறி ஈடுபட்டதால் ஆண்தன்மைக் குறைவுடன் ஏற்படும். **கெண்ட்** குறிப்பிட்டிருப்பதுபோல "**கலேடியம்** வியாதியஸ்தர்கள் வழியில் போகும் பெண்களின் உடல் அமைப்பைக் கண்டு களிக்கும் போதே அவர்களின் இந்திரியம் நழுவிவிடும்". இந்திரியம் தானாக நழுவுதல்.

மானியைச் சேஷ்டை செய்து சிற்றின்பம் அடையும் கெட்ட பழக்கத்தினால் மானிக்கொண்டை தொள தொளவென்று இளகிவிடும்; கொண்டையை மூடியுள்ள தோலைப் பின்புறம் இழுத்து விட்டால் அதன் சுருங்கும் சக்தி குறைந்துபோய் விட்டதால் அது இழுத்தபடியே இருக்கும்.

ஆண் தன்மைக் குறைவு; **தூண்டிவிட்டாலும் மானி**

தளர்ந்தே இருக்கும். புணர்ச்சியில் ஆசையும் தூண்டுதலும் இருக்கும்; மனச் சோர்வு உண்டாகும்.

பெண்ணைக் கட்டித் தழுவி முத்தமிட்டாலும் மானி விரைப்பதில்லை. புணர்ச்சியின் முடிவில் இந்திரியமும் வெளியாவதில்லை. இன்பம் ஏற்படுவதும் தெரிவதில்லை.

பெண்களின் பிறப்பு உறுப்புகளில் அறிப்பு; சளிப்பொருள் வெளிப்படுவதுடன் யோனியில் அறிப்பு. இவ்வறிப்பினால் பிறப்பு உறுப்புகளைச் சேஷ்டை செய்து சிற்றின்பம் பெறத் தூண்டுதல் உண்டாகும்; கருவுற்றிருக்கும்போது இக் குறிகள் தோன்றும்.

"மாலையில் சுரம் ஆரம்பித்தவுடன் தூங்கி விடுவார்; சுரம் நின்ற பிறகு விழித்துக் கொள்வார்.

வியர்வை தித்திப்பாய் இருப்பதால் உடம்பை ஈக்கள் மொய்த்துக்கொள்ளும்.

காசநோயும் அறிக்கும் குணமுள்ள சருமக்கோளாறுகளும் மாறி மாறித் தோன்றுதல். நீர்க் கோர்வையுள்ள காச வியாதி; சளியை வெளியேற்றுவது மிகவும் கஷ்டமாய் இருக்கும்; சளியை வெளியேற்ற முடிந்தால் சௌகரியம் உண்டாகும்.

கொசு முதலிய பூச்சிகள் கடித்த இடங்களில் கடுமையான அறிப்பும் எரிச்சலும் ஏற்படுதல்.

குடலில் இருக்கும் புழு பூச்சிகள் யோனிக்குள் புகுந்து விடுவதால் அவ்விடத்தில் அறிப்பு.

புகையிலை, சிகரெட் பிடித்தல் ஆகிய பழக்கங்களை நிறுத்த உதவும்.

"பசி இல்லாமல் சாப்பிடுவார்; தாகம் இல்லாமல் தண்ணீர் குடிப்பார்."

நல்ல உடல் பலம் உள்ளவர்களுக்கு மேக வெட்டைப் போக்கைத் தடை செய்ததால் தோன்றும் ஆண் தன்மைக் குறைவு.

———

கல்கேரியா ஆர்ஸனிகா
(CALCAREA ARSENICA)

இருதய வியாதிகளால் ஏற்படும் காக்கை வலிப்பு. வலிப்பு வருவதற்கு முன் தலையில் ஏராளமான இரத்தம் சேருதல்.

சிறு குழந்தைகளுக்கு ஏற்படும் கல்லீரல், மண்ணீரல் ஆகியவை பருத்தல்.

தலையில் வலி; வலி உள்ள பக்கத்தைக் கீழே வைத்துப் படுத்தால் வலி குறைவாகும்.

அசுத்த இரத்தக் குழாய்கள் வீங்கிச் சுருட்டிக் கொண்டு அக்காரணத்தை அடிப்படையாய்க் கொண்டு தோன்றும் புண்கள்; தூங்கி வழியும் குண முள்ளவையாக இருக்கும்.

மூத்திரத்துடன் வெள்ளைச் சளிப் பொருள் வெளியாகுதல்; மூத்திரக் காய்ப் பக்கங்களில் தொட்டால் அதிக வலி; மூச்சுத் திணறல்; இருதயம் பலவீனமாய் வேலை செய்தல்; நீர்ச் சுரப்பு உள்ள வீக்கங்கள்.

குடிகாரர்களுக்குக் குடிப்பதை நிறுத்தியவுடன் தோன்றும் கோளாறுகள்.

கொழுப்புச் சதைப் பிடித்த பெண்களுக்கு மாத விடாய் மறையும் காலத்தில் உண்டாகும் கோளாறுகள்; மன உணர்ச்சி சிறிது அதிகரித்தாலும் இருதயப் பட படப்பு உண்டாகும்.

விடியற் காலை 3 மணிக்குப் பிறகு வியர்வை உண்டாகுதல்.

நாட்பட்ட மலேரியாச் சுரம்.

கல்கேரியா அயோடேட்டா
(CALCAREA IODATA)

தொண்டைச் சுரப்பிகள் பருத்துத் தேன் கூடு போல் பல சிறு துளைகளுடன் இருக்கும்.

பெண்களுக்குப் பருவமடையும் காலத்தில் தைராய்டு சுரப்பிகள் பருத்தல்.

கல்கேரியா ஸல்ப்யுரிகா
(CALCAREA SULPHURICA)

சீழ்ப் பிடிக்கும் நிலைமைகளில் சீழ் வெளியேற ஒரு துவாரம் தோன்றிய பிறகு உபயோகமாகும்.

திறந்த இடங்களில் சௌகரியமாய் இருப்பதாகத் தோன்றும்; திறந்த இடங்களில் இருப்பதை விரும்புவார். சீழ்ப் பிடிக்கும் நிலைமைகளில் தேவைப்படும் மற்றோர் முக்கிய ஔஷதமாகிய ஹிப்பார் ஸல்பருக்கும் இதற்கும் இந்த இடத்தில் வேற்றுமை இருக்கிறது.

"சளிச் சவ்வுகளிலிருந்து வெளிப்படும் கழிவுகள் மஞ்சள் நிறமாய்க் கெட்டியாய் உருண்டைகளுடன் இருக்கும்."

சீழ் கெட்டியாய் மஞ்சள் நிறமாய் கட்டி தட்டிய இரத்தம் சேர்ந்து இருக்கும்.

குழந்தைகளுக்கு நீர்க்கசிவு இல்லாத கரப்பான் படை.

பச்சை, பழுப்பு அல்லது மஞ்சள் நிறப் பொறுக்குகள் தோன்றும் சருமக் கோளாறுகள்.

மண்டைத் தோலில் ஏராளமான பொடுகு.

சுவாச கோச வேக்காட்டில் தசைகள் கடினமாகுதல்.

"கெட்டியான, மஞ்சள் நிறமுள்ள கழிவு வெளிப்படும் கண் வேக்காடு."

காலெண்டுலா
(CALENDULA)

காலெண்டுலா விஷப் பொருள்களை அழிக்க உதவும் ஹோமியோபதி ஔஷதம். வீரியப்படுத்தப்பட்ட உருவில் அதாவது 3, 6, 30 முதலிய வீரியங்கள் உள்ளுக்குச் சாப்பிடவும் தண்ணீருடன் கலந்து உடலுக்கு வெளிப்புறத்தில் உபயோகிக்கவும் பயன்படுகிறது (தாய்த் திரவத்தில் ஒரு டிராம் எடுத்து 4 அவுன்ஸ் முதல் 6 அவுன்ஸ் வரை தண்ணீரில் கலந்து வியாதியுள்ள இடங்களில் வெளிப்பக்கமாக உபயோகிக்கப்படுகிறது).

காயங்கள் அல்லது சீழுள்ள புண்களில் இதை வெளிப்

புறத்தில் உபயோகிப்பதுடன் வீரியப்படுத்தப்பட்ட மிலியில் உள்ளதை உள்ளுக்குச் சாப்பிடக் கொடுத்தால் சீக்கிரத்தில் குணம் ஏற்படும்.

காலெண்டுலா லோஷன் (அதாவது தண்ணீரில் கலக்கப்பட்டது) சூடாக இருந்தால் மிக நன்றாய் வேலை செய்கிறது.

சீழ்க் கட்டிகள் தோன்றும் இடங்களில் சூடான **காலெண்டுலாத்** தண்ணீரினால் ஒற்றிடம் கொடுத்தால் அவை உடையும் அல்லது சீக்கிரமாகப் பழுத்து உடைந்து ஆறும்.

உடலின் வெளிப்புறக் காயங்களில் இரத்தம், சதை முதலிய பொருள்கள் சேதமாகியோ அல்லது சேதமாகாமலேயோ ஏராளமான வலியும் புண்ணுள்ள உணர்ச்சியும் காணப்படும்போது **காலெண்டுலா** மிக விசேஷமாகப் பயன்படுகிறது. நல்ல முறையில் புதிய சதை வளரவும் அளவு மிஞ்சிச் சீழ்ப் பிடிக்காமல் தடுக்கவும் கடைசியாகப் பெரிய தழும்புகள் ஏற்படாமல் இருக்கவும் அது உதவி செய்கிறது.

ஆயுத சிகிச்சையில் ஏற்படும் வெட்டுக் காயங்கள், கிழிந்த காயங்கள் ஆகியவைகளைக் கழுவிச் சுத்தம்செய்யவும் ஏராளமான சீழ் உண்டாகாமல் தடுக்கவும் வெளிப்புறத்தில் உபயோகிக்கக் **காலெண்டுலா**. இன்றியமையாதது. (வீரிய ஔஷதத்தையும் உள்ளுக்குச் சாப்பிடுவது மேலும் நன்மையை அளிக்குமென்று சொல்லத் தேவை இல்லை).

பற்களைப் பிடுங்கியதால் ஏற்படும் இரத்தப் பெருக்கை அடக்க உபயோக முள்ள ஔஷதம்.

"சளிச் சவ்வுகளில் மிக நன்றாக வேலை செய்யும் சக்தி அதற்கு இருப்பதாகத் தோன்றுகிறது; ஏனென்றால் யோனியிலிருந்தும் கருப்பையிலிருந்தும் ஏற்படும் வெள்ளை ஒழுக்கில் அவ்விடங்களைச் சுத்தம் செய்ய வேறு எந்த ஔஷதமும் அதற்கு ஈடாக இல்லை" (W. C. பர்ட்).

"ஹோமியோபதிக்கும் காலெண்டுலாவுக்கும் என்ன எவ்வளவு சம்பந்தமும் இல்லை" என்று ஹூகெஸ் குறிப்பிடுகிறார். உண்மையைச் சொல்ல வேண்டுமானால் காலெண்

டுலா ஔஷதப் பரீட்சைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது: அதிகமான பரீட்சைகள் நடத்தப்படவில்லை யென்றாலும் அதற்கும் ஹோமியோபதிக்கும் சிறிதளவு சம்பந்தம் இருக்கத்தான் செய்கிற தென்பது தெரிகிறது. அக்குறிகள் கீழே எழுதப்பட்டுள்ளன.

"மயிர்கள் குத்திட்டு இருக்கும் குறியுடன் வயிற்றின் மேல் பக்கத்தில் எரிச்சல்."

"தண்ணீர் குடித்தால் உடலெக் குலுக்கும் சில்லிப்பு அல்லது குடைவது போன்ற சில்லிப்பு; சுரத்தில் கூடு உள்ள நிலைமையிலும் இக்குறி தோன்றும்."

சுரத்தில் உடலில் நடுக்கமும் மயிர்க் கால்களில் உள்ள தோல் தூக்கிக் கொண்டு நிற்பதும்; உடம்பைத் தொட்டால் சூடாகவே இருக்கும்.

அடிக்கடி அக்கிப் படுவன் தோன்றும் உடல் வாகு.

சாக்காடு உண்டாகும் போல் தோன்றும் காயங்கள்.

அடிபட்டது போல் சீழ்ப் புண்களில் வலி; ஏராளமான சீழ் வெளிப்படும் சீழ்ப் புண்கள்.

கிழிந்து போன காயங்களால் நரம்புகளில் வேக்காடு தோன்றுதல் (ஹைபரிகும்).

முறிந்த எலும்புகள் ஒன்று கூட உதவும் (ஸிம்பிடம், கல். பாஸ்).

ஒரு சில தசைகளில் மட்டும் அடிதடிகளால் அல்லது அளவு மீறி வேலை செய்ததால் ஏற்படும் கோளாறுகள் (ரூடா, ரஸ்டாக்ஸ்).

அடிக்கடி நீர்க் கோர்வை பிடிக்கும் உடல் வாகு, முக்கியமாக மழைக் காலங்களில்.

காலோட்ரோபிஸ்

(CALOTROPIS)

மேகக்கிரந்தி வியாதியின் முதல் நிலைமையில் மெர்குறி (பாதரஸம்) கொடுக்கப்பட்டு அதன் வேலை தீர்ந்த வுடன் இது உபயோகமாகும்.

மேகக்கிரந்தியின் முதல் நிலைமையில் இரத்த சோகை.

வயிற்றில் சூடான உணர்ச்சி இவ்வௌஷதம் உபயோக மாகுமென்று காட்ட ஒரு முக்கிய குறி.

அடிக்கடி மூதுகெலும்பின் வழியாக மேலே செல்லும் குளிரும் உணர்ச்சி. தலையும் முகமும் சூடாய் இருக்கும்.

வியாதியஸ்தர், மனச் சோர்வுற்றும் கலைத்தும் இருப் பார்; உடல் சில்லிப்பாகும்; தலைச் சுற்றல், மனக்குழப்பம், தலையில் வலி, கைகளிலும் கால்களிலும் வலி, மணிக்கட்டு களில் அசைக்கும்போது வலி. மூச்சுத் திணறல்.

யானைக்கால் வீக்கம், சுரம்.

மிகவும் பயங்கரமான, அனேகமாகத் தீர்க்க முடியா தது என்று கருதப்படும் குஷ்ட ரோகத்துக்கு ஏற்றதோர் ஔஷதமென்று இது பெயர் பெற்றிருக்கிறது. (ஸிகேல்). தாய்த்திரவ உருவில் வேளைக்கு ஒன்றுமுதல் ஐந்து சொட் டுகள் வீதம் ஒவ்வொரு நாளும் மூன்று வேளைகள் கொடுக்க லாம்.

வீரியங்களில் பொதுவாக உபயோகிக்கப் படுவதில்லை.

கன்னபிஸ் இண்டிகா
(CANNABIS INDICA)

மறதி மிக அதிகமாய் இருக்கும்; ஒரு வாக்கியத்தை முழுவதும் சொல்லி முடிக்க முடியாது. தான் பேச அல்லது எழுத எண்ணியதை மறந்து விடுவார்.

மனதில் பலவகையான எண்ணங்கள் சூழ்ந்து கொள்வ தால் தான் எண்ணிய அல்லது செய்து முடித்த காரியங் களை நினைவுக்குக் கொண்டுவர முடியாமை.

பேசும் சக்தி திடீரென்று அழிந்து விடுதல்: ஒரு வாக்கி யத்தை ஆரம்பிப்பார்; ஆனால் அதை முற்றும் சொல்ல முடியாமல் போகும்.

ஞாபகச் சக்தி திடீரென்று அழிந்து போகுதல்.

எப்பொழுதும் யோசனை செய்துகொண்டே இருத்தல்.

மிகவும் அற்பமான விஷயங்களில் கடகடவென்று கைகத்தல்.

வேடிக்கையும் விஷமத்தனமும் ஏராளமாய் இருக்கும். அளவுமீறி நகைப்பார்.

வாய் ஓயாமல் பேசுவதும் உற்சாகம் அளவு கடந்து இருப்பதும்.

சாவு நெருங்கிவிட்டதென்று எண்ணிப் பயப்படுவார்.

நேரம், தூரம் ஆகிய விஷயங்களை அதிகப் படுத்திச் சொல்வார். அதாவது சில நிமிஷங்கள் யுகங்களாகவும் சில அடி தூரம் பல மைல்கள் போலவும் அவருக்குத் தோன்றும்.

கால்களில் பாரிசவாதம் பூர்த்தியாக இருத்தல்.

திக்கியும் குளறியும் பேசுதல்.

வலது மூத்திரப்பையில் மந்தமான வலி இடைவிடாமல் இருக்கும்.

ஓசைகளைக்கேட்கும் உணர்ச்சி அதிகரித்தல்; தூரத்தில் இரகசியமாய்ப் பேசுவது அவருக்குத் தெளிவாய்க் கேட்கும்.

தான் ஒரு பந்தின்மேல் உட்கார்ந்து கொண்டிருப்பது போல் ஆசனவாயில் உணர்ச்சி.

தூங்கியவுடன் பயங்கரமான கனவுகள்.

கார்பாலிகம் ஆஸிடம்

(CARBOLICUM ACIDUM)

வாசனை அறியும் உணர்ச்சி மிகவும் அதிகரித்தல். வாயிலிருந்து வயிறு வரை எரிச்சல்.—ஊக்கம் அளிக்கக் கூடிய பொருள்களிலும் புகை இலையிலும் விருப்பு. மூத்திரம் அனேகமாகக் கறுப்பு நிறமாய் இருக்கும் அல்லது கறுத்த பச்சையாய் இருக்கும். காரச்சத்து மிகுந்த மூத்திரம். சிறிது நடந்தாலும் களைத்துப் போகுதல். கைகளும் கால்களும் சில்லென்றிருத்தல். **முகம், வாய் ஆகிய இடங்களைச் சுற்றிலும் வெளுப்பாய் இருக்கும்.** முகம் கறுத்தும் இருக்கலாம். நாடியின் அளவு மிகவும் குறைந்திருத்தல். உடல் சோர்வு. இரத்தத்தில் விஷப்பொருள்கள் கலந்த நிலைமை. **விஷத்தன்மை வாய்ந்த வியாதிகள்.**

சூடு குறைவாய் உள்ள சுரம். அழுகும் குணம். கால்களில் இழுப்பு வலிகள்.

வலிகள் கடுமையாய் இருக்கின்றன; திடீரென்று தோன்றிச் சிறிது நேரம் தங்கிப் பிறகு திடீரென்று மறையும்.

நெற்றிப்பக்கத்தில் மந்தமான தலை வலி; நெற்றியைச் சுற்றிலும் (ஒரு பொட்டிலிருந்து மற்றொரு பொட்டு வரை) ரப்பர் பட்டையினால் கட்டியிருப்பது போன்ற உணர்ச்சி இருக்கும்.

"அதிக நிலை கொள்ளாமையுடன் கறும் பச்சை அல்லது கறுப்பு நிறமுள்ள தண்ணீர் போன்ற பொருள் வாந்தி செய்யப்படுதல்."

வயிற்றுப் போக்கு; அரிசிக் கஞ்சி போன்ற மலம்; அழுகிய முட்டை போல் நாற்றமடிக்கும்; அல்லது தண்ணீர் போல் நீர்த்து, கறுப்பு நிறமாய் அதிக நாற்றத்துடன் வியாதியஸ்தர் அறியாமலேயே மலம் வெளியாகுதல்.

"நாற்ற முள்ள, உடல் கலேப்பை உண்டாக்கும் வயிற்றுப் போக்கில் கார்போ வெஜி, ஸோரினம் ஆகியவைகளால் குணம் காணவிட்டால் கார்பாலிக் ஆஸிடைக் கொடுங்கள்" என்று C. பியர்ஸன் கூறுகிறார்.

"உடல் வேலையினால், அதிகமாக நடப்பதினாலும், உடலின் ஏதோ ஒரு இடத்தில், குறிப்பாக வலது காதில் சீழ்க் கட்டி தோன்றுதல் (R. T. கூப்பர்).

சளிச் சவ்வுகளிலிருந்து துருவி எடுக்கப்பட்டது போன்ற சளிப் பொருள் கலந்த மலமும் அதிகக் கடு கடுப்பும் உள்ள வயிற்றுக் கடுப்பு.

"சிறு குழந்தைகளின் காலராவை ஒத்த வயிற்றுப் போக்கில் அழுகிய முட்டைகள் போல் நாற்ற முள்ள மலம் வெளிப்படும்."

கழிவுகள் இல்லாமலோ அல்லது நாற்ற முள்ள கழிவுகள் இல்லாமலோ கருப்பை இடம் மாறி இருக்கும் நிலைமையைக் குணம் செய்யும் என்று பெயர் பெற்ற ஔஷதம் இது.

ஏப்பத்துடன் அடிவயிற்றில் வாயு சேர்ந்து உப்பி

இருக்கும். விஸ்கியிலும் உற்சாக மூட்டும் மற்ற பானங்களிலும் அதிக விருப்பம் ஏற்படும்.

கருப்பையின் கழுத்தில் புண்ணுகுதல்.

குஷ்டரோகம். அழுகிய சதையுள்ள காயங்கள். நாட்பட்ட புண்கள். விஷத் தன்மை வாய்ந்த ஸ்கர்ர் லேடினு. கொப்பளங்கள் ஒன்றே டொன்று சேர்ந்து கொள்ளும் (விஷத் தன்மையுள்ள) பெரியம்மை.

வாய், தொண்டை, மூக்கு மலப்பை, யோனி முதலிய பல இடங்களிலிருந்து வெளிப்படும் கழிவுகள் யாவும் அழுகிய நாற்றம் வீசும்.

குடிகாரர்களின் வாந்தி. பெண்களுக்குக் கருவுற்ற காலத்தில் வாந்தி. வயிற்றுப் புற்றில் வாந்தி. எல்லா சமயங்களிலும் வாந்தியாகும் பொருள் கறுப்பாகவும் கறும் பச்சை நிறமாகவும் இருக்கும்.

குடலைக் குழப்பும் கடுமையான நாற்ற முள்ள மூச்சுக் காற்றுடன் மலச் சிக்கல் (ஓபியம், ஸோரினம்).

மூத்திரம் கழிக்கும் போது ஆசனவாயிலிருந்து சளிப் பொருள் வெளிப்படுதல்.

பெண் குழந்தைகளின் வெள்ளை ஒழுக்கு. "காரமாகவும், ஏராளமாகவும் நாற்றமாகவும் பச்சை நிறமாயும் உள்ள வெள்ளை ஒழுக்கு." வேதனை யளிக்கும் வெள்ளை ஒழுக்கு அறிப்பையும் எரிச்சலையும் உண்டாக்கும்.

நெருப்புச் சுட்ட புண்கள் சீழுள்ள புண்களாய் மாறி மெல்லிய, காரகுண முள்ள சீழ் வெளிப்படுதல்.

அதிகச் சோர்வும் க்ஷீணமும்; உடல் சில்லிட்டு வியர்வை ஆறுப்ப் பெருகும்.

மயக்கமாகவும் உணர்ச்சி இல்லாமலும் நீண்ட நேரம் நீடித்திருத்தல்.

"முனை கூர்மையாய் இல்லாத கருவிகளால் இழிபட்ட காயங்கள்; எலும்புகள் வெளியே தெரிந்து நசுக்கப்பட்டிருத்தல்; மிருதுவான இடங்களில் சதை ஏராளமாய் அழுகி இருத்தல்" (H. C. அல்லென்).

டிப்தீரியாவில்; அதிகச் சூடு இல்லாத சுரம்; மிகக் கெட்ட நாற்றம்; கழுத்துச் சுரப்பிகளில் வீக்கம்; திரவ உரு

விலுள்ள பொருள்களை உட்கொண்டால் மூக்கு வழியாய் வெளியே வந்துவிடும்; மிகுந்த சோர்வு; மெல்லிய நாடி.

இன்புளுயன்ஸாவுக்கு இது (8X வீரியத்தில்) அனேகமாக ஒரு சஞ்சீவியே. இன்புளுயன்ஸாவுக்குப் பிறகு உண்டாகும் பலவீனத்துக்கு 30 வீரியத்தில் உபயோகியுங்கள்.

கார்டுஸ் மரியேனஸ்
(CARDUS MARIANUS)

கல்லீரல் சரப்பிட்ட பிறகும் தூங்கி எழுந்தவுடனும் அதிகமாகக் காணப்படும்; கொட்டாவியும் கூட இருக்கும். இரவில் குளிரும் உணர்ச்சி; **கண் விழித்தவுடன்.** முழங்கால்கள் சில்லென்றிருத்தல். தலையில் சிறிதளவு குளிர்ந்த காற்று வீசினாலும் தாங்க முடியாது. மூத்திரம் புகை படிந்து அல்லது பொன் போல் மஞ்சள் நிறமாய் இருக்கும். **காச வியாதியுள்ளவர் போல் சுவாசித்தல்.** பலவீனம் பாதங்களில் தெரியும், விசேஷமாக உட்காரும் போது.

சுரங்கங்களில் மிக ஆழத்தில் வேலை செய்வோருக்கு உண்டாகும் வியாதி பிடித்த நிலைமைகள்.

கல்லீரல் கோளாறுகள்; கல்லீரல் பக்கத்தை அமுக்கினால் வலி உண்டாகும்; கல்லீரல் குறுக்கு வாட்டில் பருத்திருக்கும் (செலிடோனியத்தில் சற்று செங்குத்தாகப் பருத்திருக்கும்). "கல்லீரலும் மண்ணீரலும் மிகவும் பருத்து அடிவயிற்று முழுவதும் நிரம்பி இருப்பது போல் தோன்றுதல்." இடது பக்கமாய்ப் படுத்தால் கல்லீரலில் அமுக்குவது போலவும் விரைப்பாய் இருப்பது போலவும் தோன்றுவதுடன் குத்து வலிகளும் இருக்கும். நாட்பட்ட கல்லீரல் வியாதிகளில் சுவாச கோசங்கள் தாக்கப்பட்டு அதனால் இரத்தம் வாந்தி செய்யப்படுதல். மஞ்சட் காமாலையில் மந்தமான தலை வலி, நாக்கில், குறிப்பாக நடு நாக்கில் வெண்மையான அழுக்கு, புளிப்பும் பச்சை நிறமும் முள்ள பொருள் வாந்தியாவதும் குமட்டலும் முதலிய குறிகள் தோன்றுதல்.

பித்தக் கற்கள்; மஞ்சட் காமாலை; கல்லீரல் பாகத்தில் வேதனை தரும் நிறைந்த உணர்ச்சி.

ஸீயனோதஸ் அமெரிகேனஸ்

(CEANOTHUS AMERICANUS)

மூச்சுத் திணறல்; கடுமையாகவும் இருக்கலாம். வாயில் புண். பச்சை நிறமுள்ள மூத்திரம். அடிக்கடி மூத்திரம் கழிக்கத் தூண்டுதல். நடமாட வெறுப்பு; மிகவும் பல வீனமாய்த் தோன்றும். வலது பக்கத் தலை வலி. முதுகின் கீழ்ப் பக்கத்தில் குளிரும் உணர்ச்சி. குளிர் காலத்தில் கூடுதலாகும்.

மண்ணீரல் கோளாறுகளில் இது மிகச் சிறந்த ஔஷதம். மண்ணீரல் அளவு மீறிப் பருத்திருக்கும். மண்ணீரலில் நாட்பட்ட வேக்காடு, மண்ணீரல் பகுதியில் வலி ஆரம்பித்து இடது பக்கத்தில் அதற்கு மேலுள்ள எல்லா இடங்களிலும் பரவி இருக்கும்; இடது பக்கமாய்ப் படுக்க முடியாது; மார்பில் அமுக்கும் உணர்ச்சி; அடிக்கடி குளிரும் உணர்ச்சி; நெருப்பின் அருகே உட்கார நேரும்.

"மலேரியாவினால் ஏற்பட்டதல்ல" என்று லிலியந்தால் மேற் கண்ட குறிகளுடன் சேர்த்து எழுதியிருக்கிறார் ஆயினும் மண்ணீரலில் நாட்பட்ட மலேரியா காரணமாக ஏற்பட்டிருந்தால் ஸீயனோதஸ் மிக நன்றாக வேலை செய்வது உண்மை. மண்ணீரல் அளவு மீறிப் பருத்து விட்ட சமயத்தில் லிக்கத்தைக் குறைக்க வேறு ஒரு ஔஷதத்தையும் உபயோகித்துப் பார்த்திருக்கிறேன். அது என்ன என்று ஒருவராலும் ஊகிக்க முடியாது. அவ்வௌஷதம் அகோரிக்ஸ்.

கல்லீரலிலும் முதுகிலும் வலி.

இடது பக்கத்தில் வலியுடன், கெட்டியான, மஞ்சள் நிற முள்ள வெள்ளை ஒழுக்கு ஏராளமாய் வெளியாகுதல்.

பொதுவாக தாய்த் திரவமும், 1X, 2X வீரியங்களுமே உபயோகமாகின்றன. தண்ணீருடன் கலந்து நாளொன்றுக்கு மூன்று அல்லது நான்கு வேளைகள் சாப்பிடலாம்.

———

சனபோடியம் ஆந்தஹ்மெண்டிகம்

கொக்கிப் புழு, வட்டப் புழு ஆகியவைகளை அழிக்க சனபோடியத்தின் எண்ணெய் மிகவும் உபயோகமுள்ளது.

"புழு பூச்சிகளை அழிப்பதற்காகக் கொடுத்தால் அது சிறிது சிறிதாக அதிகரித்துப் பல காலம் நீடித்திருக்கும் செவிட்டுத் தன்மையைப் பல சமயங்களிலும் உண்டாக்குகிறது" (J. H. க்ளார்க்). இவ்விதமான சமயங்களில் சனபோடியத்தை உயர்ந்த வீரியத்தில் உபயோகியுங்கள். ஏனென்றால் ஔஷதப் பரீட்சையில் சனபோடியம் கீழ் உள்ள குறிகளை உண்டாக்கி இருக்கிறது.

மனிதர்களின் பேச்சுக் குரலைக் கேட்கும் சக்தி படிப் படியாகக் குறைந்து கொண்டே வருதல்; ஆனால் மணி அடிப்பது, வண்டிகள் ஓடும் போது உண்டாகும் ஓசைகள் முதலியவை மிகவும் அதிகமாகவே கேட்கும்.

குறட்டை விடுவதுபோல் ஓசையுடன் சுவாசித்தல்,

வலதுதோள் பட்டையெலும்பின் கீழ்ப் பக்கத்தி லுள்ள உள் கோணத்தில் கடுமையான வலி மார்புக்குள் ஓடுதல். வலது தோள்பட்டையெலும்பிலும் வலதுதோள் பட்டையிலும் வலி.

ஏதோ ஒரு அங்கசேஷ்டையைத் திரும்பத் திரும்பச் செய்து கொண்டிருப்பார். (ஒரு வியாதியஸ்தர் கைகளை அடிக்கடி உதறிக் கொண்டே இருந்திருக்கிறார்).

சிமாபிலா அம்பெல்லேட்டா

(CHIMAPHILA UMBELLATA)

மிகப் பருத்த ஸ்தனங்களுடன், வியாதி பிடித்த தோற்றமும் கட்டு உடைந்த உடலும் சுரப்பிகளில் வீக்கமும் உள்ள பெண்கள்.

வாயின் மேற் கூரையில் சூடான தண்ணீரோ உணவோ பட்டால் புண் இருக்கும் உணர்ச்சி தோன்றும்.

உடல் கட்டு உடைந்து போனவர்களுக்கும் மிதம்

மீறிய குடியில் ஈடுபட்டவர்களுக்கும் அடிவயிறு, மூத்திரக்காய்கள் ஆகிய உறுப்புகளின் வியாதியினால் உண்டாகும் கீர்ச்சுரப்பு.

மூத்திரத்தில் வெள்ளைச் சளிப்பொருள் கலந்து வெளியாகும் வியாதி மிகவும் முற்றிவிட்ட நிலைமை.

"கல்லீரலின் உறுப்பு சம்பந்தமான, விட்டு விட்டுத் தோன்றும் குணமுள்ள கோளாறுகளால் உடல் முழுவதும் பொதுவான நீர்ச் சுரப்பு; அடிவயிற்றிலும் ஏற்படும்".

மூத்திரம் அளவு குறைந்து சளிப்பொருளும் சீழும் கலந்த வண்டலுடன் இருக்கும். மூத்திரத்தில் கயிறுபோல், கெட்டியான சளிப்பொருள் ஏராளமாய் இருத்தல் (மூத்திரம் வெளியாகும்போது வலி இருக்கலாம்; இல்லாமலும் இருக்கலாம்). மூத்திரத்தில் இரத்தம்.

சுக்கிலச் சுரப்பிகளின் வேக்காட்டில் உட்காரும் போது ஆசனவாய்க்கு மேலும் விரைப்பைக்குக் கீழும் உள்ள இடத்தில் பந்தை வைத்து அழுத்திக் கொண்டிருப்பதுபோல் வீங்கிய உணர்ச்சி.

மூத்திரப்பைப் பாகத்தில் அமுக்கிக் கொண்டிருக்கும் நிறைந்த உணர்ச்சி. மூத்திரப்பையில் கடுகடுப்பு. மூத்திரம் வலியுடன் சொட்டுச் சொட்டாக கழிக்கப்படுதல்; மூத்திரம் கழிக்க அடிக்கடி விரும்புதல்.

மூத்திர அடைப்பு; மூத்திரம் வெளியாகும்போது வெட்டுவது போலவும் சுட்டுவிடுவது போலவும் வலி; நின்று நின்று மூத்திரம் வெளிப்படுதல்; விரைகளில் அடிபட்ட வலி.

மூத்திரப்பையின் கழுத்திலிருந்து மூத்திரத்துவாரம் வரை மூத்திரக் குழாய் முழுவதும் எரிச்சலுடன் வலி (வலியுள்ள வேதனையாகவும் இருக்கலாம்).

கால்களை அகற்றிவைத்து உடலை முன்பக்கமாய் வளைத்தால் தான் மூத்திரம் கழிக்க முடியும்.

மூத்திரத்தில் சர்க்கரை.

மூத்திரக் காய்களின் அருகில் படபடவென்று இறக்கை அடித்துக் கொள்வது போன்ற உணர்ச்சி.

ஸ்தனங்கள் மிக வேகமாய் ஓட்டிப் போகுதல். ஸ்தனங்களில் வலியுள்ள சதைக்கட்டிகள்; விசேஷமாக அவை மிகப் பெரியதாக இருத்தல். மணமாகாத இளம் பெண்களுக்கு ஸ்தனங்களில் அளவு மீறிப் பால் உற்பத்தியாகுதல் அல்லது அடக்கப்படுதல்.

விழிகளில் மெல்லிய சதைவளரும் நோயின் (Cataract காடராக்ட்). ஆரம்பநிலைமையிலும் அது படிப்படியாக அதிகமாய்க் கொண்டுவரும் போதும்.

சின்னினம் ஆர்ஸனிகோஸம்
(CHINNINUM ARSENICOSUM)

நீர்ச் சுரப்புக் குறிகளுடன் கூடிய இருதய வலி; அதிகச் சோர்வுடனும் எரிச்சலுள்ள வலியுடனும் முறைவைத்துத் தோன்றுதல்.

சுவாசகோச கூயரோகத்தில்; கவலை; அடங்காததாகம்; மூச்சுவிடத் திணறல்; எழுந்திருந்து முன்பக்கமாகச் சாய்ந்து உட்கார நேரிடுதல், உதடுகள், கைகள் முதலிய நீலநிறமாகும். குளிர்ச்சியாகவும் பிசுபிசு என்று ஒட்டிக் கொள்ளும் குணமும் உள்ள வியர்வை. முகம் வெளுத்து உப்பி இருக்கும். கை கால்களும் முழங்கால்களும் பனிக்கட்டிபோல் சில்லென்றிருக்கும். அதிகச் சோர்வு. மனவேலை செய்யப் பிரியம் இல்லாமை.

காச வியாதியில், காலையிலிருந்து நடுப்பகல்வரை அடிக்கடி மூச்சை அடைத்தல். திறந்த சன்னல்களுக்கு எதிரே முன்பக்கமாய்க் குனிந்து உட்கார்ந்து கொண்டிருந்தால் சௌகரியமாய் இருக்கும். அதிகச் சோர்வுடனும் குளிர் உணர்ச்சியுடனும் முறைவைத்துத் தோன்றுதல்.

மாடிப் படிகளில் ஏறும்போது காச வியாதியஸ்தரைப்போல் சுவாசித்தல்.

மேகக்கிரந்தியின் மூன்றும் நிலைமையில் வியாதி எனும் பின் மேற்பாகத்தைப் பீடித்தல்.

முறைச் சுரம், தலைவலி ஆகியவைகளில் வியாதி ஏற்படுவதற்கு முன்னதாகக் கொட்டாவி விடுவதும் உடலை

முறிப்பதும் தொடர்ச்சியாக ஏற்படும் (வலிப்பு போல வும் இருக்கும்.) குளிர் எப்பொழுதும் முற்பகலிலேயே உண் டாகும்.

கோலெஸ்டெரினம்
(CHOLESTERINUM)

கல்லீரல் புற்றில் இவ்வௌஷதம் 3X வீரியத்தில் (மாவு உருவம்) மிகச் சிறந்தது.

கல்லீரலிலுள்ள இரத்தக் குழாய்களில் அதிக இரத்தம் சேர்ந்து பிடிவாத குணமுள்ளதாய் இருத்தல்.

பித்தக் கற்களினால் ஏற்படும் வயிற்று வலிக்குப் பல சமயங்களில், விசேஷமாக மஞ்சட்காமாலையுடன் சேர்ந் திருந்தால் பயன்படும்.

எிமெக்ஸ்
(CIMEX)

முறைச் சுரம், குளிர் நிலைமையில் எல்லா எலும்பு மூட்டுகளிலும் வலி; தசைகளை எலும்புகளுடன் இணைத்திருக் கும் நார்கள் மிகக் குட்டையாகி விட்டதுபோல் தோன்றும்; முழங்கால்கள் சுருங்கி விட்டதுபோல் தோன்றி அதனால் கால் களை நீட்டமுடியாமல் போகும். மார்பில் அமுக்கும் உணர்ச்சி யினால் அடிக்கடி பெருமூச்சு விட நேருதல். அடக்கமுடி யாத தூக்கம். சூடுள்ள நிலைமையில் தண்ணீர் குடிக்கும் போது உணவுக் குழாயின் வாய் சுருங்கி இருப்பதுபோல் தோன்றும்.

"கீழே படுத்தால் குளிர் கூடுதலாகும். குளிர் நிலைமை யில் தண்ணீர் குடித்தால் இருமல் அதிகமாகும்". குளிர் காற் றில் அடிபட்டதுபோல் முழங்கால்கள் சில்லென்றிருக்கும்.

மலம் கடினமாகவும் சிறு உருண்டைகளாகவும் இருக் கும்.

ஸின்னுபாரிஸ்
(CINNABARIS)

மேகக்கிரந்தி, மேகவெட்டை, மேகக்கிரந்தி—வெட்டை (அதாவது இருவகை விஷங்களும் ஒன்று சேர்ந்திருத்தல்).

உடலின் பல்வேறு இடங்களில் அறிப்பு. ஏராளமான சீழ்ப் பெருக்குடன் மானிக் கொண்டையின் மேட்டில் கடுமையான அறிப்பு.

ஆசனவாயைச் சுற்றி எரிச்சலுடனும் அறிப்புடனும் சிறிய கொப்பளங்கள்.

சருமம் சிவப்பாய் இருத்தல். (ஸின்னுபாரிஸ், மெர்கூறிக் ஸல்பைட், இவ்விரண்டும் சிவந்த நிறமாய் இருக்கும்), சிவந்த திட்டுகள். முகம் சூடாய்ச் சிவந்து வீங்கி இருக்கும், பெரும்பாலும் கண்களைச் சுற்றி.

தொண்டை, வாய், கால்கள் முதலிய இடங்களில் மி. கவும் சிவப்பான (நெருப்புப்போல் சென்னிறம்) சீழ்ப் புண்கள்.

மிகப் பயங்கரமாய்க் காணப்படும் பறங்கிப் புண்கள்.

மானிக் கொண்டையில் சிறிய, பளபளப்பான, சிவந்த புள்ளிகள். மேகக்கிரந்தியின் முதல் நிலைமையில் இப்புள்ளிகளை நான் பார்த்திருக்கிறேன். குண்டூசித் தலையைவிடச் சற்று சிறிதாக இருக்கும். இவ்வௌஷதத்துக்கு அவை அடிபணிந்தன.

மானியின் நுனித் தோலில் சிவசிவப்பும் வீக்கமும் ஏற்படும் மேக வெட்டையைப் போன்ற ஒரு போலி வியாதி.

நடக்கும்போது விரைப்பைக்கும் தொடைகளுக்கும் இடையில் நாற்றமுள்ள, புண்ணை உண்டாக்கும் வியர்வை.

வெள்ளை ஒழுக்கில் கழிவு வெளிப்படும்போது யோனியில் அழுக்கும் உணர்ச்சி.

சுரப்பிகள் பருத்தல்.

மூக்கின் பின்பக்கத்திலிருந்து கட்டி கட்டிகளாகச் சளி கீழே விழுதல்.

மலம் கழிக்கும்போது மலப்பை நழுவி வெளியே வருதல்.

அசக்கம் இல்லாமை.

ஸின்னமோனம்
(CINNAMONUM)

கருவுற்றிருக்கும்போது ஏராளமான இரத்தப்பெருக்கெடுத்துக் கரு சிதைந்துவிடும்போல் தோன்றுதல்.

பின்னப்பெற்று சில நாட்கழித்து கருப்பையிலிருந்து இரத்தப்பெருக்கு.

கருப்பை இடம் மாறிப் பிறண்டு விட்டதால் கருப்பையிலிருந்து இரத்தப்பெருக்கு பல காலமாய் நீடித்திருத்தல்.

மாதவிடாய் காலத்துக்கு மிக முன்னதாகத் தோன்றும்; போக்கு மிக அதிகமாய் இருக்கும்; சிறிய வேலையினாலும் அதிகமாகும்; போக்கு நல்ல சிவப்பாகவும் தெளிவாகவும் இருக்கும்; பல நாட்களுக்கு நீடித்திருத்தல்; விசேஷமாக மூக்கில் அறிப்புள்ள பெண்களுக்கு.

ஸிஸ்டஸ் கனடென்ஸிஸ்
(CISTUS CANADENSIS)

ஆழ்ந்து வேலைசெய்யும். ஸோரா விஷத்தை அடக்கும் ஔஷதம்.

குளிர்காற்று சிறிதுகூட ஒத்துக்கொள்ளாது (வலியை உண்டாக்கும்); சுரப்பிகளின் வியாதிகள்.

"சற்றே குளிர்ந்த காற்றை உள்ளிழுத்தாலும் தொண்டைப்புண் உண்டாகும்; சூடுள்ள அறையிலுள்ள காற்றை உள்ளிழுத்தால் இவ்வாறு ஏற்படாது."

தொண்டை, வாய், மூக்கு, நெற்றி, அடிவயிறு முழுவதும் ஆகிய இடங்களில் குளிர்ச்சியான உணர்ச்சி.

சாப்பிடுவதற்கு முன்பும் சாப்பிட்ட பிறகும் வயிற்றில் தில்லிப்பான உணர்ச்சி. உமிழ்நீர், ஏப்பம் முதலானவை

களும் சில்லிப்பாய் இருக்கும். பாதங்கள் சில்லென்றிருத்தல், மூச்சுக்காற்று குளிர்ச்சியாய் இருக்கும்.

தொண்டையில் மிருதுவான அல்லது பஞ்சுபோன்ற உணர்ச்சி.

தொண்டையில் பஞ்சு இருக்கும் உணர்ச்சி. தொண்டைமேல் மிக வறண்ட குளிர்ந்த காற்றுப்படுவது போல் வலி ஏற்படுதல்.

பொறுக்க முடியாத அளவுகாய்ந்து போவதால் அடிக்கடி உமிழ்நீரை விழுங்க நேரும்; விசேஷமாக இரவில்.

கெட்டியான, பிசின்போன்ற, ஒரு சுவையும் இல்லாத சளியைக் காறித் துப்புதல்; காலையில் அதிகமாகும்.

கழுத்துச்சுரப்பிகள் வீங்கிக்கடினமாகுதல்: க்ஷய சம்பந்தமுள்ளது.

மற்ற சுரப்பிகளும், விசேஷமாக ஸ்தனங்களிலுள்ள சுரப்பிகள், வீங்கிக்கடினமாகுதல் (ஸ்தனங்களிலும் முக்கியமாக இடது பக்க முள்ளதில்).

முழங்கால் மூட்டில் வெள்ளையான வீக்கம்.

நாக்கை நீட்டும்போது வலி.

குறிப்பு :—இவ்வௌஷதத்தின் வியாதிக் குறிகளில் சில்லிப்பு உணர்ச்சி அதிகமாய்க் காணப்படுகிறது. இச்செடியின் வேர்களைக்கொண்டே இவ்விஷயத்தை ஊகிக்கலாம். (பனிக்கட்டிச்செடி என்று இதற்குப்பெயர் வைத்திருப்பது சரியென்றே தோன்றுகிறது. இச்செடியின் வேர்களைச்சுற்றி பனிக்காலத்தின் ஆரம்பநிலைமையிலேயே பனிக்கட்டி தோன்ற வசதி இருக்கிறது.) இவ்வாறு எழுதியிருப்பவர் J. H. க்ளார்க்.

கோகா

(COCA)

மலை ஏறுகிறவர்களின் நண்பன், மிக உயரமான மலைச்சிகரங்களில் ஏறுவது அதிக உடல் சோர்வை உண்டாக்கும். அவ்விடங்களில் காற்றின் அமுக்கும் சக்தி குறைவாய் இருக்கும். மலை ஏறுவது உடலுக்கு அளவு

மீறிய வேலையாகும். இக்காரணங்களால் உண்டாகும் மூச்சுத்திணறல், தலைவலி, மார்பில் படபடப்பு, சோர்வு, மயக்கம் வருவதுபோல் இருத்தல், தூக்கம் இல்லாமை முதலிய பல கோளாறுகளை **கோகா** அற்புதமாய் நீக்குகிறது. இதற்குமுன் இமயமலையில் ஏறியவர்கள் மிகவும் உயரமான இடங்களுக்குச் சென்றவுடன் தங்களுக்குப்பசி என்பதே இல்லாமல் போய்விட்டதென்றும் தித்திப்புப் பொருள்களில் மட்டுமே விருப்பம் இருந்ததென்றும் குறிப்புகள் எழுதியுள்ளனர். ஔஷதப் பரீட்சையில் **கோகா** இக்குறியையும் தோன்றச் செய்திருக்கிறது.

மனச்சோர்வும் மந்த குணமும்.

அளவுமீறிய உடல் மன வேலைகளால் ஏற்படும் சுரம் புச்சோர்வு.

மலை ஏறியதால் அடிக்கடி மயக்கம் வருதல், நாடியின் அளவும் பலமும் குறைந்து நூல்போல் துடிக்கும்.

மலையின் உயரமான இடங்களில் செல்லும்போது தோன்றும் தலை வலிகள்.

நெற்றி முழுவதும் இறுகக்கட்டியிருக்கும் உணர்ச்சியுடன் தலை வலி.

காதுகளில் மணி அடிப்பது போலவும், தேனீக்கள் ரீங்காரம் செய்வது போலவும் ஓசைகள்.

தித்திப்புப் பொருள்களைத் தவிர வேறு எவ்வகையான உணவிலும் விருப்பம் இல்லாமை.

கண்பார்வை மங்குதல்.

இருதயப் பலவீனம், வலியுடன் மூச்சுவிடத்திணறல் ஆகிய குறிகளுடன் மார்பு படபடத்தல். படபடப்பு கடுமையாகவும் காதுகளுக்குக் கேட்குமளவு பலமாகவும் இருக்கும்.

சாராயம், புகை இலை ஆகியவைகளை அளவுமீறி உபயோகிப்போருக்கு ஏற்படும் மூச்சுத்திணறல்.

உடல் பயிற்சி செய்வோருக்குக் கிழப்பருவத்தில் ஏற்படும் மூச்சுத்திணறல்.

நாடி மிக மெதுவாகவும் விட்டு விட்டும் துடிக்கும்.

குரல் இல்லாமை. குரல் பலவீனமாய் இருக்கும். தொண்டையில் வேதனையினால் குரல்வளையில் க்ஷயரோகம் தோன்றுதல்; வயிற்றில் எந்த உணவும் தங்காது.

தனக்கு மானி இல்லை என்ற உணர்ச்சி.

அளவு மீறிச்சிற்றின்பத்தில் ஈடுபட்டதால் ஏற்படும் நரம்புச்சோர்வு.

கோக்கஸ் காக்டி

(COCCUS CACTI)

கக்குவாய் இருமல்; ஒவ்வொரு தடவையும் இருமல் மூடிந்தவுடன் வாயிலிருந்து பளபளப்பான, கயிறு போன்ற கோழை மிக நீளமாய்த் தொங்கும்; காலையில் கண் விழித்தவுடன் மறுகணமே குழந்தை இரும ஆரம்பிக்கும்; இருமலினால் உடல் முழுவதும் கடுமையாய்க் குலுக்கப்படும்; **முகம் ஊதா கலந்த சிவப்பு நிறமாகவும் உள்ளூரச் சூடும் இருக்கும்.** "கக்குவாய் இருமலுக்குப் பிறகு பல நாட்களுக்கு மார்ச்சளி நீடித்திருத்தல்."

தொண்டையில் நூல் இருக்கும் உணர்ச்சி.

கறுப்பு நிறமுள்ள, பெரிய கட்டிகளுடன் கலந்து வெளிப்படும் இரத்தப்பெருக்கு, விசேஷமாகக் கருப்பையிலிருந்தும் மூத்திரக் காய்களிலிருந்தும்.

குரல்வளையில் கடுமையான, பொறுக்க முடியாத; குத்தும் உணர்ச்சி.

சுவாசகோசங்களில் குத்துவலிகளுடன் **நீர்க்கோர்வையுள்ள க்ஷயரோகம்;** தலை வெடித்துப் போகுமோ என்று தோன்றும் வலிகளுடன் மூச்சுத்திணறலை உண்டாக்கும் இருமல்; **கெட்டியான, கயிறு போன்ற, வெள்ளைச் சளிப் பொருள்** வெளிப்படுதல்.

காலின்ஸோனியா கனடென்ஸிஸ்
(COLLINSONIA CANADENSIS)

மூலங்கள்: **இரத்தப்பெருக்குடன் இருக்கலாம்;** இரத்தப் பெருக்கு இல்லாமலும் இருக்கலாம்; மலப்பையில் கனம் இருக்கும் உணர்ச்சி; மலப்பையில் **துரும்புகள், கல் அல்லது மண்** இருக்கும் உணர்ச்சி; வழக்கமாய்ப் பிடிவாதமாய் இருக்கும் மலச்சிக்கல். **நாட்பட்ட, வலியுள்ள, இரத்தப் பெருக்குள்ள மூலங்களுக்கு விசேஷமாகப் பயன்படும், ஆசனவாயில் அறிப்பு.**

மூல வியாதியுடன் கருப்பை வெளியே நழுவிவரும் கோளாறு.

மூல வியாதியில் மலப்பை நழுவி வெளியே வருதல்.

மூலம், மலச்சிக்கல் ஆகியவைகளால் வலியுடன் மாத விடாய் தோன்றுதல்.

இருதயக் கோளாறுகள் சௌகரியமானவுடன், பழய மூல வியாதியோ அல்லது அடக்கப்பட்ட மாதவிடாய்ப் போக்கோ தோன்றுதல்.

மூலமும் மார்பு வலிகளும் மாறி மாறித் தோன்றுதல்.

குரலை அளவுமீறி உபயோகித்ததால் இருமல்.

கருவுற்றிருக்கும்போது மூல வியாதியுடன் **யோனிக்கு மேலுள்ள முளைபோன்ற உறுப்பில் அறிப்பு;** கீழே படுக்க முடியாது.

இருதய் வியாதிகளால் ஏற்படும் நீர்ச்சுரப்பு.

பிடிவாத குணமுள்ள மலச்சிக்கல்; மலம் கடினமாகவும் உருண்டைகளாகவும் முடிச்சுகளுடனும் இருத்தல்; மலம் கழிக்கும் போது வலி; **அதிக வாயு உப்பிசம்.**

பல நாட்களுக்கு மலம் வெளியாகாமல் இருத்தல்; அடிவயிற்றில் கனமான பொருள் கீழே இழுக்கப்படுவது போல் வலியுள்ள உணர்ச்சியுடன் மலப்பையில் இடைவிடாத அமுக்கும் உணர்ச்சி.

———

கோபைவா
(COPAIVA)

மூத்திரம் பச்சை நிறமாகவும் கலங்கியும் இருக்கும்.

மேகவெட்டையில்: அடிக்கடி மூத்திரம் கழிக்க உணர்ச்சியுடன் பால் போன்ற, தோலில் புண்ணை உண்டாக்கும் குணமுள்ள அல்லது மஞ்சளாய், சீழ்ப்போலுள்ள போக்கு வெளிப்படுதல்; மூத்திரத்துவாரம் வீங்கி, வேக்காடுற்று வாய் விரிந்து இருக்கும்.

அருவருக்கத்தக்க நாற்றத்துடன் பச்சையும் பழுப்பும் கலந்த நிறமும் சீழ்ப்போலவும் உள்ள கோழை ஏராளமாய் வெளிப்படுதல்.

———

கொரால்லியம் ருப்ரம்
(CORALLIUM RUBRUM)

ஸோரா, மேகக்கிரந்தி ஆகிய இருவகை விஷங்களும் ஒன்று சேர்ந்த நிலைமை.

கடுமையான, விட்டு விட்டுத்தோன்றும், இருமல்; ஒன்றன் பின்னென்றுக மிக வேகமாய் இருமுதல். சிணுக்கு இருமல், அதாவது ஏறக்குறைய அரை நிமிஷத்துக்கு ஒரு முறையாக சிறிய, ஒற்றை இருமல் ஒழுங்காக வந்து கொண்டே இருக்கும்.

"உள்ளங்கைகளில் சிவந்த திட்டுகள்; ஆரம்பத்தில் அவை பவழம் போன்ற நிறமாகவும் போகப் போக கறுப்பாகவும் முடிவில் செப்புப் போலவும் மாறும்." இது மேகக்கிரந்தியினால் ஏற்படுகிறது.

பவழம்போல் சிவந்த நிறமுள்ள சருமக் கோளாறுகள்.

பவழம் போல் சிவந்த, தட்டையான, பறங்கிப் புண்கள்.

"கக்குவாய் இருமல் அல்லது மற்ற வகை இருமலில் மிக வேகமாய் இருமல் உண்டாவதும் அடிக்கடி இருமல் தோன்றுவதுமான நிலைமை."

"மிகக்கடுமையான, விட்டு விட்டுத்தோன்றும், அனேக மாக இடைவிடாமல் இருக்கும் இருமல்; இருமுவதற்குமுன் மூச்சுத்திணறல்; இருமும்போது முகம் ஊதா நிறமாகிப் பிறகு கனப்பும் கயிறு போன்ற கோழை வாந்தியாவதும் காணப்படும்." .(கக்குவாய் இருமல்).

க்ரடேகஸ்

(CRATAEGUS)

தூக்கம் இல்லாமை; இரத்த சோகை; இரத்த விசை குறைவாய் இருத்தல்; கை கால்கள் சில்லென்றிருத்தல்; காற்றுப் பசி; தலைச் சுற்றல்.

சிறிது வேலை செய்தாலும் இருதயம் வேலை செய்வது நின்றுவிடும் போல் தோன்றுதல்.

இருதயம் வேகமாய்ச் செல்வதால் பரபரப்பான உணர்ச்சி; மார்பில் பட-படப்பு.

இருதயத்தில் நீர்ச் சுரப்பு.

இருதயம் ஒழுங்கு இல்லாமல் வேலை செய்தல்; பல வீனமாய்த் துடித்தல்.

சிறிது வேலை செய்தாலும் கடுமையான மூச்சுத் திணறல்.

இருதயப் பாகத்திலும் இடது கழுத்துப்பட்டை யெலும்பின் கீழேயும் வலி.

"தொற்று வியாதிகளில் இருதயம் பலவீனமடையா மல் பாதுகாக்கிறது."

தாய்த் திரவத்தில் இரண்டு முதல் பத்து சொட்டுகள் வரை ஒரு வேளை ஔஷதமாகக் கொடுக்கலாம்.

குறிப்பு:—இவ் வௌஷதத்தை க்ரிடேஜஸ் என்று சொல்வது உண்டு. ஆனால் க்ரடேகஸ் என்பதே சரி.

க்ரோகஸ் ஸடிவா

(CROCUS SATIVA)

உடல் உணர்ச்சிகளிலும் மனக் குறிகளிலும் நேர் விரோத மான மாறுதல்கள் அடிக்கடி ஏற்படுதல்.

குதூகலமாகவும் குஷியாகவும் இருந்தவர் திடீரென்று எல்லையில்லா வருத்தத்தில் ஆழ்ந்து விடுதல்,

மாறி மாறித் தோன்றும் மனக் குறிகள்; ஒரு சமயம் சந்தோஷமாகவும் எல்லோரிடத்திலும் அன்பாகவும் இருப்பார்; மறு சமயம் எல்லோரிடத்திலும் வெறுப்பாகவும் மாறுவார்; ஆனால் உடனேயே தான் அவ்வாறு இருந்ததற்காகப் பச்சாத்தாபப்படுவார்.

எல்லோரையும் முத்தமிட விருப்பம் (அகேரிகஸ்) ஆனால் அன்பு ததும்பும் இம்மனக் குறி திடீரென்று மறைந்து மன ஏக்கமோ, அல்லது ஆத்திரமோ தோன்றும்.

இரத்தப் பெருக்கு; உடலின் எந்த இடத்திலிருந்தும் வெளிப்படலாம்; இரத்தம் பிசுக் கென்று ஒட்டும் குணமும் கறுப்பு நிறமும் பெருக்கு ஆரம்பிக்கும் துவாரத்திலிருந்து நீண்ட கயிறுகளாய்த் தொங்கும் குண முள்ளதாகவும் இருக்கும்.

மூக்கிலிருந்து இரத்தப் பெருக்கு: இரத்தம் கறுப்பாகவும் பிசுக் கென்று ஒட்டும் குணம் உள்ளதாகவும் இருக்கும். பல சமயங்களில் மூக்கின் ஒரு துவாரத்திலிருந்து மட்டும் இரத்தம் பெருகும்; ஒவ்வொரு சொட்டு இரத்தத்தையும் கயிறு போல் நீளமாய் இழுக்கலாம்; இத்துடன் நெற்றியில் வியர்வை; பல சமயங்களில் வியர்வை பெரிய துளிகளாய் இருக்கும்; சில சமயங்களில் மயக்கமும் உண்டாகலாம்.

ஒரே வார்த்தையில் கறுப்பு நிற முள்ள கயிறு போல் நீளும் குண முள்ள இரத்தம் இருந்தால் அனேகமாக க்ரோகஸ் தான் தேவைப்படு மென்று கூறலாம். கருச் சிதைவு நேரும் போல் தோன்றுதல்; வலியுள்ள மாதவிடாய், கருப்பையிலிருந்து இரத்தப் பெருக்கு, பிள்ளைப் பெற்ற பிறகு உண்டாகும் இரத்தப் பெருக்கு முதலிய நிலைமைகளில் இக்குறி காணப்படும். மாதவிடாயில் போக்கு கறுப்பு நிறமாகவும் கயிறு போல் நீளும் குண முள்ளதாகவும் கெட்ட நாற்றத்துடனும் இருக்கும்.

புகையுள்ள இடத்தில் இருப்பது போல் கண் பார்வை மங்கி இருத்தல். அழுது கொண்டிருந்தது போலக் கண்களில்

உணர்ச்சி. கண்களினூடே குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருக்கும் உணர்ச்சி (ப்ளுவாரிக் ஆஸிட், ஸிபிலினம்).

மாதவிடாய்க் காலத்தில் அதிகரிக்கும் தலை வலி.

வயிறு, அடிவயிறு, கருப்பை முதலிய உள் உறுப்புகளில் உயிருள்ள ஏதோ ஒன்று அசைந்து கொண்டிருக்கும் உணர்ச்சி; குமட்டலும் வாந்தியும் கூட இருக்கும்.

வலது ஸ்தனத்தினுள்ளே உயிருள்ள ஏதோ ஒன்று குதிப்பது போன்ற உணர்ச்சி.

தசைகளில் துடிப்பு ஏழு எட்டு நாட்களுக்கொரு முறையாக வருதல்; தசைகள் குதித்தல்; ஒரு சில தசைகளில் விட்டு விட்டுச் சுருக்கமும் துடிப்பும். மேலே குறிப்பிட்ட மாறுபடும் மனக் குறிகளுடன் சங்கா தோஷ சம்பந்த முள்ள தசைத் துடிப்புகள்.

சங்கா தோஷம்; மனக் குறிகள் மாறி மாறித் தோன்றுதல். சங்கீதத்தினால் கோளாறு உண்டாகுதல் (டாரென்டுலா).

க்ரோடேலஸ் ஹாரிடஸ்

(CROTALUS HORRIDUS)

இரத்தப் பெருக் கெடுக்கும் உடல் வாகு. இரத்தத்தில் விஷப் பொருள்கள் கலந்துள்ள நிலைமைகள். சாராயத்தை அளவு மீறி உட்கொண்டதால் தோன்றும் வியாதிகள். டைபாய்டு சுரத்தில் இருப்பது போன்ற உடல் வலிமை குன்றிய நிலைமைகள். உடல் கட்டு உடைந்தவர்கள். உடலின் வலிமை குறைந்திருந்த காரணமாகத் தோன்றிய வியாதிகள். விஷத் தன்மை.

தூக்கக் கலக்கம், ஆனால் தூங்க முடியாது. தூங்கும் போது பற்களைக் கடித்தல். மூச்சுக் காற்று நாற்றம் வீசும்; வாயிலிருந்து பிடிக்காத நாற்றம். வயிற்றைச் சுற்றி ஆடைகள் இருப்பதைப் பொறுக்க முடியாது, வியாதியுள்ள பாகங்கள் கறுப்பாய் அல்லது நீலமாய் இருக்கும். ஊக்கம் ஊட்டும் பானங்களில் விருப்பம். கழிவுகள் பிடிக்காத நாற்றம் வீசும். வியாதியுள்ள பாகங்களில்

மீர்ச் சுரப்பு. பயங்கரமான கனவுகள். கறுத்துக் களை இழந்த முகம். உடலின் உயிர்ப்புச் சக்தி குன்றுதல். நாடி கைக்குப் பிடிபடாமல் இருக்கும். "தூங்க ஆரம்பித்தவுடன் உபாதிகள் தோன்றுதல்." அனேகமாக வலது பக்கம் தோன்றும் வியாதிகளிலேயே இது உபயோகமாகிறது.

இரத்தத்தில் விஷப் பொருள் கலந்துவிட்ட வியாதிகள் அல்லது மலேரியாவுக்குப் பிறகு நரம்புகளில் வலி தோன்றுதல்.

உணர்ச்சி அளவு கடந்து அதிகரித்தல்; மிகச் சிறிய காரணங்களாலும் அழுகை உண்டாகும்.

வலிகள் திடீரென்று தோன்றும்; சிறிது நேரம் நீடித்திருந்து பிறகு திடீரென்று மறையும்.

இரத்தப் பெருக்கு. உடல் துவாரங்கள் எல்லா வற்றிலிருந்தும், சருமத் துவாரங்களிலிருந்தும் தோன்றும். இரத்தம் கலந்த வியர்வை. கண்களிலிருந்து கூட இரத்தம் வடியும்.

உடலில் விஷப் பொருள்கள் சேர்ந்ததால் அல்லது அழுகிப் போன மரம், செடி, கொடி, பிராணிகளின் உடல்கள் ஆகியவைகளிலிருந்து தோன்றும் கெட்ட நாற்றமுள்ள காற்றைச் சுவாசித்ததால் உண்டாகும் வியாதிகள் (முக்கியமாக டைபாய்டு) குடல்களிலிருந்து இரத்தப் பெருக்கு எடுத்தல். இரத்தம் கறுப்பு நிறமாகவும் தண்ணீர் போலவும் உறையும் குணம் இல்லாமலும் (ஓரளவு உறைந்திருக்கலாம்) இருக்கும்; இருதயப் பலவீனம்; பல வீனமான நாடி; சருமம் நீல நிறமடைதல்; மயக்கம்; சோர்வு.

க்ரொடேலஸில் இரத்தம் கறுப்பாகவும் தண்ணீர் போலவும் சற்றே உறையும் குண முள்ளதாகவும் இருக்கிறது. சருமம் மஞ்சளாய் இருக்கும். எலாப்ஸில் இரத்தம் கறுப்பு நிறமாகவும் சிறிது கூட உறையாமல் தண்ணீர் போலவும் இருக்கும். காதுகளிலிருந்து சீழ் வடிதல், வலது சுவாச கோச வியாதிகள் ஆகியவைகளிலேயே லாரஸ் விசேஷமாய் உபயோகமாகிறது. லாச்சஸிஸில்

வெளியே கசிந்து வந்த இரத்தத்தில் கறுகிய வைக்கோல் போன்ற வண்டல் சிறிதளவு சேர்ந்திருக்கும்; சருமம் சில்லிட்டுச் சில சமயங்களில் பிசு பிசு வென்று ஒட்டும் குண முள்ள வியர்வையும் இருக்கலாம். நாஜாவில் இரத்தம் நீளமான கயிறு போல் உறையும்; உண்மையில் இரத்தப் பெருக்குகளுக்கு நாஜா அதிகம் தேவைப்படுவதில்லை. இரத்தத்தில் விஷப் பொருள் கலந்த நிலைமைகளில் சிறிதளவும் பயன்படுவதில்லை யென்று கூறலாம். இவ்விரு குறிகளும் க்ரொடேலஸ், லாச்சஸிஸ் ஆகியவைகளுக்குப் பொதுவாய் இருக்கின்றன. நாஜாவில் அதிக நரம்புக் குறிகள் இருக்கின்றன. இவை யாவும் பாம்பு விஷங்கள்.

கண்கள் மஞ்சள் நிறமாய் இருத்தல்.

விழி வேக்காடு; விழிகளிலும் விழித் திரைகளிலும் வேக்காடு ஆகியவைகளுக்குப் பிறகு கோளாறுன பார்வையை ஒழுங்கு செய்யு மென்று H. C. அல்லென் எழுதுகிறார்.

விஷத்தன்மை வாய்ந்த மஞ்சட் காமாலை; மூத்திரம் நிறம் கறுத்து அளவு குறைந்திருக்கும்.

விஷத்தன்மை வாய்ந்த டிப்தீரியா; மூக்கிலிருந்தும் வாயிலிருந்தும் இரத்தம் கசிதல்: விழுங்குவதற்குச் சிரமம்; விழுங்குவதுபோல் பாவனை செய்தால் வலிகள் அதிகமாகும், வாந்தியும் வயிற்றுப் போக்கும்; தொண்டையிலும் தொடைச் சுரப்பிகளிலும் சாக்காடு.

இரத்தத்தில் விஷப் பொருள்கள் சேருதல்: நாடி மிகவும் பலவீனமாய் இருக்கும்; **உடலின் உயிர்ப்புச் சக்தி சோர்வுற்றிருத்தல்;** மயக்கம். நாற்றம் வீசும் மூச்சுக் காற்று; கை கால்கள் சில்லிட்டிருத்தல்: தூங்கி எழுந்த பிறகு உபாதிகள் அதிகரித்தல்.

விஷத்தன்மை வாய்ந்த கருப்பைக் கோளாறுகள்; அடிக்கடி இரத்தப் பெருக்கெடுக்கும் தன்மை; கறுப்பு நிறமுள்ள, தண்ணீர்போல் நீர்த்த, நாற்றமுள்ள இரத்தம்.

வயிற்றுப் புற்று: இரத்தம் கலந்த குழகுழப்பான சளிப்பொருள் வாந்தி செய்யப்படுதல் அல்லது ஏராளமான இரத்தப் பெருக்கு, இரத்தம் கறுப்பு நிறமாகவும்

தண்ணீர்போல் நீர்த்தும் நாற்றமாகவும் இருக்கும்; இத் திப்பு அல்லது உஷ்ணம் ஊட்டும் பொருள்களில் விருப்பம்.

நாக்குப் புற்று: இரத்தம் கலந்த உமிழ்நீர் பெருக்கு டன் வாயில் புண்களும் அழுகிய நாற்றமும்; அடிக்கடி இரத்தப் பெருக்கு.

வயிற்றுப் போக்கு; மலம் கறுப்பு நிறமாய்த் தண்ணீர் போல் அல்லது காப்பித் தூள்போல் இருக்கும்: நாற்ற மாய் இருத்தல்; உணவு அல்லது குடிதண்ணீர் ஆகியவை களில் விஷப் பொருள்கள் சேர்ந்ததால் தோன்றியிருக்கும். அழுகிய நாற்றமுள்ள காற்றைச் சுவாசித்ததால் உண்டா கும் வயிற்றுப் போக்கு.

விஷப் பொருள்கள் உடலில் சேர்ந்ததால் உண்டா கும் வயிற்றுக் கடுப்பு; கெட்ட உணவு அல்லது தண்ணீரை உட் கொண்டதால்; இரத்தம் கறுப்பாகவும் நீர்த்தும் இருக்கும்; அதிகப் பலவீனமும் மயக்கமும்.

ஆப்பரேஷன் செய்யும்போது ஏற்படும் காயங்கள்.

அம்மைத் தடுப்பு ஊசி மருந்தைக் குத்திக் கொண்ட தால் ஏற்படும் கோளாறுகள்.

விஷப் பிராணிகளின் கொட்டுகள், கடிகள்.

உடல் முழுவதும் மஞ்சள் நிறமாய் இருக்கும்.

பழய, தழும்பிட்ட காயங்கள் மறுபடி புண்ணுதல்.

இரத்தக் கட்டிகள்.

"பித்த சம்பந்த முள்ள, சூடு ஏறி இறங்கும் சுரங்கள், மஞ்சள் நிறம், இரத்தத்தில் சீழ்ப் பொருள் கலந்து தோன் றும் சுரங்கள், விடாக் காய்ச்சல், டைபஸ், திரும்பத் திரும் பத் தோன்றும் குணமுள்ள சுரம் முதலிய பல ஆபத்தான வியாதிகளில் தேவைப்படும் மிக முக்கியமான ஔஷதங் களில் க்ரொடேலசும் ஒன்று: வயிற்றுப் போக்கு அவ் வௌஷதத்தில் காணப்படும் குறிகளுடன் இருந்தால்". (J. B. பெல்).

———

க்ரோடன் டிக்லியம்
(CROTON TIGLIUM)

காலராவில் (1) மலம் மஞ்சள் நிறமுள்ள தண்ணீர் போல் இருக்கும் போதும் (வெள்ளைத் துணுக்குகளுடன் கலந்தும் இருக்கலாம்), (2) மலம் திடீரென்று குண்டு பாய்வதுபோல் மிக வேகமாக (அதாவது ஒரே தடவையில் குபீரென்று) வெளியாகும் போதும், (3) உணவு, தண்ணீர் ஆகியவைகளை உட்கொள்ளும்போது அல்லது உட்கொண்ட பிறகு உபாதி கூடுதல் ஆகும்போதும் (சில சமயங்களில் நடந்தாலும் மலம் கழிக்க அவசரமான துண்டுதல் உண்டாகும்), (4) மலம் கழித்த பிறகு மயக்கம், தலைச் சுற்றல் முதலிய குறிகளுடன் அதிகச் சோர்வு தோன்றும் போதும் இவ்வௌஷதம் உபயோகமாகும்.

அவ்வளவு முக்கியமில்லாத மற்ற குறிகள் பின்வருமாறு : குடல்களில் இறுக்கிப் பிடிக்கும் வலிகள் ; மலம் கழித்த பிறகு நெற்றியில் வியர்வை ; வெளுத்த மஞ்சள் நிறமும் நுரைகளும் உள்ள தண்ணீர் வாந்தியாகுதல் ; வயிற்றில் எரிச்சலும் கனத்த உணர்ச்சியும் ; கண் இருண்டு வருவதுடன் அளவுகடந்த குமட்டல்.

வயிற்றுப் போக்கு, விசேஷமாக [மேலே காலராவில் குறிப்பிடப் பட்டுள்ள முதல் மூன்று குறிகளும் காணப்படும்போது.

மலம் கழிக்க இடைவிடாத தூண்டுதல் ஏற்பட்டுப் பிறகு திடீரென்று மலம் வெளிப்படும். குடல்களில் களகளவென்ற ஓசையுடன் எல்லாச் சமயங்களிலும் மலம் வேகமாக ஒரே தடவையில் வெளியாகிவிடும். மலம் கழிப்பதற்குமுன் குடல்களில் தண்ணீரை விட்டு அலசுவது போலவோ அல்லது களகளவென்றே ஓசை தோன்றும்.

க்ரோடன் டிக்லியத்தின் மலம் பற்றிய கோளாறுகளில் வலி அனேகமாக இருப்பதில்லை. ஆனால் "தொப்பூழின் மேல் கையை வைத்து அமுக்கினால் குடல்கள் முழுவதும் மலப்பை வரையில் பரவி இருக்கும் வலியுள்ள உணர்ச்சி உண்டாகும் ; அதனால் மலப்பை ஓரளவு வெளியே பிதுங்

கும்'' எப்பொழுதாவது வலி இருந்தால் அது மலம் கழிக்கு முன் வயிற்றில் ஏற்படலாம்.

கோடையின் வெப்பம் தாங்காமல் வயிற்றுப் போக்கு ஏற்படும்.

இடது மார்பின் வழியாக முதுகுப் புறம் செல்லும் இழுப் பது போன்ற வலி.

சருமக் கோளாறுகள், கரப்பான் படை, காதுகளி லிருந்து சீழ் வருதல் முதலிய வியாதிகளில் அதிக அறிப்பு இருக்கும்; ஆனல் அவ்விடங்களைத் தொட்டாலே அதிக வலி தோன்றுவதால் வியாதியஸ்தரால் சொறியவே முடியாமல் போகும். க்ரோடனின் அறிப்பு ஊசி கொண்டு குத்துவதைப்போல் இருக்கும்; எரிச்சலாகவும் மாறலாம். மெதுவாகச் சொறிந்தால் அல்லது தடவிக் கொடுத்தால் அறிப்பு சௌகரியமாகும்.

உடல் முழுவதும் கடுமையான அறிப்புடன் கரப்பான் படை.

அளவு கடந்த அறிப்புள்ள அக்கிப் படுவன்.

ஆண், பெண் இரு பாலாருக்கும் பிறப்பு உறுப்புகளில் கடுமையான அறிப்பு (ரஸ் டாக்ஸ்).

வினரப்பையில் கடி போன்ற சரும வியாதி; விரை மிகவும் புண்ணுகவும் வலியுடனும் இருப்பதாகத் தோன்று வதால் மெதுவாகக் கூடச் சொறிய முடியாது.

அடிக்கடி, தோல் உறியும் குணமுள்ள அறிப்புடன் மானியி லும் விரைப்பையிலும் கொப்பளங்களுடன் கூடிய சரும வியாதி (ரஸ் டாக்ஸ்).

முகத்திலும் பிறப்பு உறுப்புகளிலும் உள்ள சருமத் துக்கும் க்ரோடனுக்கும் நெருங்கிய உறவு இருக்கிறது.

மார்பு வழியாக முதுகுக்குச் செல்லும் இழுக்கும் வலியுடன் இருமல், இடது பக்கத்தில் அதிகம்.

கீழே படுத்தவுடன் விட்டு விட்டு இருமல் தோன்று தல், மூச்சு அடைப்பதுபோல் இருத்தல்; எழுந்து நடமாட நேரும், நாற்காலியில் உட்கார்ந்தபடியே தூங்க நேரும்; இருமும்போது அடிவயிற்றில் புண் இருப்பதுபோல் தோன்றும்.

காச வியாதியில் நள்ளிரவில் தூக்கத்தைக் கெடுத்து விடும்: மார்பை விரியச் செய்யமுடியாது: போதிய அளவு ஆழ்ந்து சுவாசிக்க முடியாது.

உணவுக் குழாயின் ஆரம்பத்தில் (தொண்டையில்) எரிச்சல். ஒவ்வொரு தடவையும் குழந்தை பால் குடிக்கும் ஸ்தனத்தில் வலி தோன்றி மார்பு வழியாகத் தோள்பட்டை எலும்புக்குப் பரவும்; ஸ்தனக் காம்பில் அதிக வலி.

இமைகளில் நீர்ச்சுரப்பு உள்ள வீக்கங்கள்.

கண்வேக்காடு; கண்களைச் சுற்றிச் சிறிய, பெரிய கொப்பளங்கள்; முகத்திலும் தலையிலும்கூட இருக்கலாம்; கண்களிலும் முகத்திலும் நெருப்புப் பிடித்து எரிவது போல் சூடான உணர்ச்சி; ஏராளமான கண்ணீர் வடிதல்; கண்கள் சிவந்திருக்கும் இமைகளின் உட்புறத்தில் சிறு முளைகள், சிறிய, பெரிய கொப்பளங்கள் காணப்படும். கண்களைப் பின்பக்கத்திலிருந்து ஒரு கயிற்றைக் கட்டி இழுப்பது போன்ற உணர்ச்சி.

வயிற்றுப் போக்கும் சருமக் கோளாறுகளும் மாறி மாறித் தோன்றுதல்.

ஸைக்ளமென்
(CYCLAMEN)

மந்தகுணம்; இரத்த சோகை; மாதவிடாய்க் கோளாற்றளால் ஏற்படும் இரத்த சோகை.

மிக எளிதிலே உடல் களைத்துப் போவதால் எவ்வித மான வேலையையும் செய்ய விருப்பம் இல்லாமை.

உமிழ்நீர் உப்பாய் இருக்கும்; அதனால் உண்ணும் பொருள்கள் யாவும் அதிக உப்பாய் இருப்பதுபோல் தோன்றுதல்.

விழிகள் மூக்கின் பக்கமாகச் சொருகப்படுதல்.

பார்வை, காது கேட்பது, முகர்தல் ஆகிய உணர்ச்சிகள் குறைவாய் இருக்கும்.

கண்களின் முன்னே பூச்சி பறத்தல் (வலியுடன் சேர்ந்

இருக்கலாம்). கண்களுக்கு முன்னே நெருப்புப் பொறிகள் அல்லது பலவித நிறமுள்ள பொறிகள் கூத்தாடுவதுபோல் தோற்றம்.

அடிவயிறு, வயிறு, கல்லீரல், சுக்கிலச் சுரப்பிகள் ஆகியவைகளில் குத்து வலிகள்.

எதற்கெடுத்தாலும் அழும் குணம்; தனிமையாய் இருக்க விருப்பம்; மாறும் குணம்.

சொட்டி, வெண்ணெய், மாமிசம், கொழுப்புச் சத்துள்ள உணவு ஆகிய வழக்கமான உணவுப்பொருள்களில் வெறுப்பு. ஆகவே இவ்விஷயத்தில் பல்ஸடில்லாவைப்போல் இருந்தாலும் ஸைக்ளமெனில் திறந்த இடங்களில் வெறுப்பு இருக்கிறது. பல்ஸடில்லாவைப் போலவே தாகம் இல்லாத குறி ஸைக்ளமெனிலும் இருக்கிறது.

மாதவிடாய் காலத்துக்கு மிக முன்னதாகத் தோன்றும்; போக்கு ஏராளமாய்க் கறுப்பு நிறமாகவும் கட்டிகளுடனும் இருக்கும்; மெல்லியதோல் வெளியாகும்; நடமாடிக் கொண்டிருக்கும் போது போக்கின் அளவு குறைவாய் இருக்கும்.

மண்டை இடி, கண் பார்வை மறைதல் முதலிய குறிகளுடன் கூடிய மாதவிடாய்க் கோளாறுகள்.

குறிகால்களில் புண்ணுள்ள உணர்ச்சி; உட்கார்ந்து கொண்டோ அல்லது நின்று கொண்டோ இருக்கும்போது அதிகமாய் இருக்கும்; நடக்கும்போது அவ்வளவு தெரியாது.

விக்கல்; கருவுற்றிருக்கும் போது விக்கல்.

"தலைவலி, தலைச்சுற்றல் ஆகியவைகளுடன் மாதவிடாய்ப் போக்கு வெளியாகாமல் இருத்தல் அல்லது அளவு குறைவாய் இருத்தல்."

மாதவிடாய்க்குப் பிறகு ஸ்தனங்களில் பால் உற்பத்தியாகி அலை வீங்குதல்.

டிப்தெரினம்

(DIPHTHERINUM)

டிப்தீரியாவில் ஆரம்பத்திலிருந்தே விஷத்தன்மை காணப்படுதல். மூக்கிலிருந்து இரத்தப்பெருக்கு, அதிகச்

சோர்வு, க்ஷீணம், பலவீனமாய் ஆனல் வேகமாய்த் துடிக்கும் நாடி ஆகியவை விஷத்தன்மையை வெளிப்படுத்தும் குறிகள்.

டிப்தீரியாவில் உடலின் உயிர்ப்புச் சக்தி சோர்வடைதல்; நிலைகொள்ளாமை; ஆனல் வலி இருப்பதில்லை; மயக்கம் இருந்தாலும் சிரமமில்லாமல் எழுப்பி விடலாம்; மிகவும் பலவீனமாகவும் அலட்சிய குணமும் இருப்பதால் அனேகமாகப் புகார் சொல்லமாட்டார்; மூச்சுக்காற்று நாற்றம் வீசும். டிப்தீரியாவில் தோன்றும் போலிச்சவ்வு கெட்டியாகவும் கறும் பழுப்பு நிறமாகவும் இருக்கும். திரும்பத் திரும்ப வியாதி தோன்றும் குணம்.

டிப்தீரியாவைப் பற்றிய வரையில் அவ்வியாதி வராமல் தடை செய்ய இவ்வௌஷதம் வெற்றி பெற்றிருக்கிறது. 200 வீரியத்தில் உபயோகியுங்கள் (குறைவாக வேண்டாம்).

உணவை விழுங்கும் போது வலி இருக்காது; ஆனல் தண்ணீர் போன்ற திரவ உருவிலுள்ள பானங்களைக் குடித்தால் அவை வாந்தி செய்யப்படும் அல்லது மூக்கு வழியாகத் திரும்பி வந்துவிடும்.

டிப்தீரியாவுக்குப் பிறகு தோன்றும் பாரிசவாயுவில் ஜெல்ஸிமியம், காஸ்டிகம் இவ்விரண்டிலும் குணம் ஏற்படத் தவறும்போது இவ்வௌஷதம் குணம் செய்யக் கூடும்.

பிடிவாத குணமுள்ள தொண்டைச் சுரப்பி வேக்காடு.

டோலிகோஸ் புரியன்ஸ்

(DOLICHOS PURIENS)

சருமக் கோளாறுகளோ அல்லது தெளிவான காரணமோ இல்லாமல் அனேகமாக உடல் முழுவதும் அறிப்பு அல்லது கடுமையான அறிப்பு. அறிப்பு இரவில் கூடுதலாகித் தூக்கத்தைக் கெடுக்கும்.

சருமத்தில் அறிப்புடன் மஞ்சட்காமாலை; மலச்சிக்கலுடன்.

பல் முளைக்கும் பருவக் குழந்தைகளுக்கு ஈறுகளில் வலி; அதனல் தூக்கம் இல்லாமை; மலச்சிக்கலும் இருக்கும்.

எக்கினீஷியா அங்குஸ்டிபோலியா
(ECHINACEA ANGUSTIFOLIA)

இரத்தத்தில் விஷப்பொருள்கள் சேர்ந்து விட்ட நிலைமைகளில் இது உபயோகமாகிறது.

"பலவீனமாகவும் தளர்ச்சியுடனும் இசிவு வலிகளுடனும்." வாயின் மூலைகளும் உதடுகளும் வெடித்திருக்கும்.—பொதுவான உடல் அசதி. **மூளையை உபயோகித்து வேலை செய்ய முடியாது.** பேச்சு, நடை, பதில் சொல்வது ஆகிய யாவும் மெதுவாக நடைபெறும். நாக்கின் ஓரங்கள் சிவந்து மற்ற இடங்களில் வெண்மையான அழுக்கு இருக்கும். நாற்றமுள்ள கழிவுகள். நாக்கு, உதடுகள், தொண்டை ஆகிய இடங்களில் கடிப்பது போலவும் ஊசிகொண்டு குத்துவதுபோலவும் உணர்ச்சி. குரல் கட்டையாகிவிடும். படுக்கைப் புண்கள்.

இருதயத்தைப் பற்றிய கவலை; இருதயம் வழக்கத்தை விட வேகமாக வேலை செய்யும் அல்லது குறைவாய் வேலை செய்யும்.

அடிவயிற்றில் வலி திடீரென்று தோன்றி அவ்வாறே திடீரென்று மறையும்; உடலைக் குனிந்து இரண்டாக வளைத்தால் வலி குறையும்.

விஷப்பிராணிகளின் கொட்டுகளுக்கும் கடிகளுக்கும், **பாம்புக் கடிகளுக்குங் கூட உபயோகமுள்ளது.**

பிள்ளைப்பெற்ற பிறகு உடலில் விஷம் கலந்த நிலைமைகளில் கழிவுகள் தடைப்பட்டும் வயிற்றில் வாயுச் சேர்ந்து உப்பிசம் ஏற்பட்டும் மூத்திரம் அளவு குறைந்து நிறம் கறுத்தும் உள்ள சமயங்களில் ஏற்றது.

எலாப்ஸ் கொரால்லினஸ்

(ELAPS CORALLINUS)

பிரேஸில் (Brazil) நாட்டிலுள்ள இப்பாம்பின் விஷம் கறுப்பு நிறமுள்ள கழிவுகளையும் இரத்தப் பெருக்கையும் ஏற்படுத்துகிறது.

காதுக் குறும்பி கறுப்பாய் இருத்தல்.

நாக்கின் நிறங்கூடக் கறுப்பாகும் (கருஞ்சிவப்பாகவும் இருக்கலாம்).

கருப்பைப்புற்று : அவ்வுறுப்பில் ஏதோ நெருப்பினால் சுடப்பட்டது போன்ற உணர்ச்சியும் அதன் பிறகு, ஏராள மாய்க் கறுப்பு நிறமுள்ள இரத்தம் கட்டிகள் கலந்து வெளிப்படுதல்.

"மூக்கைப் பலமாகச் சிந்தியதால் அல்லது அவ்விடத் தில் அடிபட்டதால் இரத்தப்பெருக்கெடுத்தல்: திடீரென்று தோன்றும், ஏராளமாய் இருக்கும்; நடக்கும்போது வெளிப் படும்."

வியாதியுள்ள உறுப்புகளில் **கனத்த உணர்ச்சி** ஒரு முக்கிய குறி. யோனி, கருப்பை முதலிய உறுப்புகளில் கனம்.

மாதவிடாய் ஒழுங்கினமாகவும் காலத்துக்கு மிக முன்ன தாகவும் தோன்றும்; கூர்மையான வலிகளுடன் யோனியில் கனம்; யோனியில் கடுமையான அறிப்பு.

மூக்கிலும் தொண்டையிலும் சேர்ந்து காணப்படும் நாட் பட்ட நீர்க்கோர்வை.

கன்னங்களில் பொறுக்கு உண்டாகும் சருமக்கோளா றுகள்.

யூபடோரியம் பர்பூரியம்

(EUPATORIUM PURPUREUM)

முறைச்சுரத்தில்: குளிர் நிலைமையில் தாகம், குளிர் கீழ் முதுகில் ஆரம்பித்து மேலும் கீழும் ஏறி இறங்கிப் பிறகு உடல் முழுவதும் பரவும்; சிறிதளவு குளிர்கூட இல்

லாமல் கடுமையான உடல் நடுக்கம். சூடு உள்ள நிலைமையில் எலும்புகளில் கடுமையான வலி. வாந்தி; உதடுகளும் நகங்களும் நீலமாகுதல்.

உணவின் வாசனை பட்டாலும் உணவைக் கண்களால் பார்த்தாலும் குமட்டல் அல்லது புரை ஏறுதல்.

கருவுற்ற மூன்றுவது அல்லது நான்காவது மாதத்தில் கருச்சிதைவு வழக்கமாய் ஏற்படுதல்.

தாயகம் செல்லவேண்டுமென்ற துடிதுடிப்பு.

தொடை நரம்பு வாதத்தில்: இடது தொடை நரம்பு முழுவதும் கடுமையான பாயும் வலிகள்; பாரிசவாயு வந்து விட்ட உணர்ச்சி; நடக்கும் போது மிக அதிகமாகும்.

க்ளோனையின்

(GLONOINE)

கடுமைக் குணத்தில் ஸ்ட்ரமோனியம் ஒரு பூகம்பத்தைப்போல் இருக்கிறது. ;க்ளோனையின் ஒரு சூறாவளிக் காற்றுபோல் திடீரென்றும் கடுமையாகவும் தோன்றுகிறது. குறிகள் கடுமையாய் இருக்கின்றன; திடீரென்று தோன்றுகின்றன.

கடுமையான நாடித் துடிப்புகள். உடல் முழுவதும் நாடி துடிக்கும் உணர்ச்சி. துடிக்கும் வலிகள்.

இரத்தம் உடலின் மேற் பகுதிக்கு மிக வேகமாய் ஓடும்.

கருவுற்ற பெண்களுக்குத் தலைப் பக்கம் மிக வேகமாக இரத்தம் ஓடுதல்.

தலைக்கும் இருதயத்துக்கும் மிக வேகமாக இரத்தம் ஓடுதல்.

ஒரு சமயம் தலையிலும் மறு சமயம் இருதயத்திலுமாக மாறி மாறி அதிக இரத்தம் சேருதல்.

"தலைப் பக்கத்தில் எவ்விதமான சூட்டையும் தாங்க முடியாது; வெய்யலில் நடக்க முடியாது; நிழலில் நடக்க வேண்டும் அல்லது குடை பிடித்துக் கொள்ளவேண்டும்."

தலையில் துடிப்புகளும் பருத்த உணர்ச்சியும்; வலி இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம்.

தலை பெரியதாகிவிட்டது போலவும் உப்பி இருப்பது போலவும் தோன்றும்.

கண்கள், தலை முதலிய உறுப்புகள் வெடித்துப் போய் விடும் என்ற உணர்ச்சி.

"சமீபத்தில் வெய்யலில் சென்றதால் ஏற்படும் தலை வலி."

ஒவ்வொரு நாளும் சூரியனின் கதிக்குத் தக்கபடி கூடுதலாகிக் குறையும் குணமுள்ள தலைவலி.

மாதவிடாய் தோன்றத் தாமதமாவதால் அல்லது போக்கு வெளியாகாமல் தடைப் பட்டதால் மூளையில் மிக அதிகமான இரத்தம் சேருதல்.

மாதவிடாய்க்குப் பதிலாகத் தலைவலி தோன்றுதல்.

"சூரிய இடியில்: முகம் வெளுத்தல், நாடி முழு அளவு டன் துடித்தல்" கஷ்டப் பட்டுச் சுவாசித்தல், கண்கள் குத்திட்டு நிலைத்து நிற்பது, மூளைக் கோளாறு காரணமாக வாந்தி, வெளுத்த நாக்கு, வயிற்றின் அடித் தளத்தில் ஒன்றுமே இல்லாத உணர்ச்சி."

"தலையில் அதிக இரத்தம் சேரும்போது அடிக்கடி வலிப்புகள் உண்டாகும்"

"இருதயம் கடுமையாய் வேலை செய்தல்; துடிப்புகள் உடம்பு முழுவதும், குறிப்பாகக் கழுத்தின் பின் பக்கத்திலும் தலையிலும், தெளிவாய்க் காணப்படும்."

மனக் குழப்பம், தான் எங்கே இருக்கிறோமென்று அவரால் சொல்ல முடியாது, நன்றாகத் தெரிந்த தெருக்கள் புதியவைபோல் தோன்றும்; தெருவின் எந்த வரிசையில் தன் வீடு இருக்கிற தென்பதை மறந்து விடுவார்.

வயதானவர்களுக்கு இரத்த விசை அதிகரிப்பு.

மூளையில் அதிக இரத்தம் சேருவதால் குழந்தைகளுக்குத் தோன்றும் வலிப்புகள்; கைகால் விரல்கள் யாவும் விரிந்து நீட்டப்படும்.

திறந்த அடுப்புகளின் அருகே உட்காருவதால் குழந்தைகளுக்கு உண்டாகும் கோளாறுகள்.

மாதவிடாய் மறையும் காலத்தில் சூடான உணர்ச்சி

உடலில் ஏற்படுதல் (அமில் நைட்ரேட், பெல்லடொன்னா, லாச்சஸிஸ்).

"இருதய வலிகள்; எல்லா இடங்களுக்கும் கைகளுக்கும் பரவுதல்."

"மேல் வயிற்றில் ஒன்றும் இல்லாத உணர்ச்சி."

தலைமயிர் வெட்டிக் கொண்டதால் ஏற்படும் கோளாறுகள் (அகோனைட், பெல்லடொன்னா).

தலைவலியில் சிறிதளவு அதிர்ச்சி தோன்றினாலும் வலி அதிக மாகுதல். பின் தலையில் கடுமையான வலி கண்களுக்கும் பொட்டுகளுக்கும் பரவுதல். ஒளியுள்ள வெளிச்சத்தில் வெறுப்பு.

பழய தழும்புகளில் சீழ்க் கொள்ளுதல்.

ஞாபால்லியம்
(GNAPHALLIUM)

தொடை நரம்பு வாதத்தில் வலியும் மதமதப்பும் மாறி மாறித் தோன்றுதல்; தொடை நரம்பின் வெளிப்பக்கம் முழுவதும் எரிச்சலுடன் கடுமையான தெறிப்பு வலி; அசைவினால் அதிகமாகி நாற்காலியில் உட்கார்ந்து கொண்டால் சௌகரியமாகும்; வலது பக்கம் அதிகம் தாக்கப் பட்டிருக்கும்.

க்ரனேடம்
(GRANATUM)

புழு பூச்சிக் கோளாறுகளில்: மூக்கில் ஊரும் உணர்ச்சியுடன் அறிப்பு; முகத்தில், முக்கியமாகக் கன்னங்களில், கடிப்பது போன்ற உணர்ச்சியுடன் அறிப்பு; அளவு கடந்த பசி; அடிக்கடி பசி; முகம் வியாதித் தோற்றமும் மஞ்சள் நிறமும் அல்லது மங்கிய நிறமாக இருக்கும்; குமட்டல்; ஏராளமான உமிழ்நீர் உற்பத்தியாகுதல். சில சமயங்களில் தித்திப்பாய் இருக்கும். ஆசனவாயில் அறிப்பும் ஊசிதளால் குத்தும் உணர்ச்சியும்; உடல் மெலிவு.

உள்ளங் கைகளில் அறிப்பு.

ஹிப்போஸேனியம்

(HIPPOZAENIUM)

காற்றுக் குழாய்களைப்பற்றிய காச வியாதியில் இது மிகவும் புகழ்பெற்றுள்ள ஔஷதம்.

" நீர்க் கோர்வை தோன்றும் குணத்தை நீக்குகிறது."

"மார்ச்சளியில் மிகக்கடுமையான கேசுகளில், விசேஷமாக வயதானவர்களுக்கு, அளவு கடந்த சளி உற்பத்தியாவதினால் மூச்சு அடைத்துப் போகுமென்று தோன்றும் சமயங்களில்."

"சுவாசகோச கூடியத்தில் கொடுக்கப் பட்டால் அது கோழையைக் குறைத்து அடிக்கடி வேக்காடு அதிகமாவதைத் தணித்து நீர்க்கோர்வையுள்ள கோளாறுகளை நீக்குகிறது."

பிளேக்கு, கொப்பளங்கள் ஒன்றோடொன்று சேர்ந்து பெரிதாகும் பெரியம்மை.

———

ஹைட்ரோஸியனிக் ஆஸிட்

(HYDROCYANIC ACID)

"க்ஷீணம்; வலிப்புகள்; மூளை இரத்தக் குழாய் வெடிப்பு முதலிய திடீரென்று விளையும் கோளாறுகள்."

பக்ஷவாதம், **முதலில் கால்களிலும், பிறகு கைகளிலும்** தோன்றும்; கைகால்கள் பாரிசவாதத்தில் செயலற்று எப்படித் திருப்பிவைத்தாலும் மாறுமல் அப்படியே இருக்கும்.

வலிப்புகளில் உடல் விரைத்து பின்பக்கமாய் வளைந்து போகும்; ஒழுங்கு இல்லாமலும் வலிப்புகள் போலவும் சுவாசித்தல். முகம் சிறிது நீலம் கலந்த சிவப்பு நிறமாய் இருக்கும்; பின்கழுத்தில் தசை இழுப்புகள்.

தண்ணீர் குடிக்கும்போது **கள கள வென்ற ஓசை** உண்டாகும்; **அதிகமான சோர்வு.**

இருதயத்தை இறுக்கிப் பிடிக்கும் உணர்ச்சிகள்.

உடலின் உட்புறமும் வெளிப்புறமும் கடுமையான சில்லிப்புடன் இருத்தல்.

சருமம் நீல நிறமாகுதல்.

ஹைட்ரோபோபினம்

(HYDROPHOBINUM)

உணர்ச்சிகள் அதிகரித்திருத்தல்.

ஓடும் அல்லது மேலிருந்து கீழே விழும் தண்ணீரைக் கண்ணுல் கண்டாலும், அவ்வோசையைக் கேட்டாலும் அல்லது மனதால் நினைத்தாலும் கோளாறுகள் தோன்றும் அல்லது அதிகமாகும்.

விளக்கமாய்ச் சொல்லும்போது : பொறுமை இல்லாமை, ஆத்திரப்படுதல், பரபரப்பு, மலம், மூத்திரம் ஆகியவைகளைக் கழிக்க விரும்புதல், இவை போன்ற பல கோளாறுகளும் வலிப்புகளும் கூட மேலே சொல்லப்பட்ட காரணங்களால் உண்டாகும். ஏற்கனவே இருந்து வரும் நரம்புத் தலைவலியும் மற்றகோளாறுகளும் அக் காரணங்களால் அதிகரிக்கும். ' குடிக்கவைத்துக் கொள்ளும் பாத்திரத்தில் தண்ணீர் இருப்பதைக் கண்களால் கண்டவுடனேயே பொறுமையை இழந்து விடுவார் ; முகத்தை அப்பால் திருப்பிக் கொள்வார் ; உறக்க ஓலமிடுவார் ; பேச முடியாமல் போவதும் மூச்சுத்திணறலும் தோன்றுவதினுல் அப்பாத்திரத்தை அங்கிருந்து அகற்றும்படிக் கவலையுடன் கைகளால் சைகை செய்வார்.

தண்ணீர் அல்லது கண்ணுடி ஆகியவைகளிலிருந்து வரும் எதிர் ஒளியை அல்லது ஒளியுள்ள வெளிச்சத்தைப் பார்த்தாலும் எவ்வளவு மெதுவாகத் தொட்டாலும் வலிப்புகள் தோன்றுதல்.

வியாதியஸ்தருக்கு அருகில் நின்று சம்பாஷணை செய்தால் அவருக்கு மிகக் கடுமையான ஆத்திரம் உண்டாகும்

கடுமையான வாசனைகளை முகர்ந்தால் வலிப்புகள் ஏற்படலாம்.

10389

யோனியில் உணர்ச்சி மிகவும் அதிகமாகி அதனுல் புணர்ச்சி செய்யும்போது அதிக வலி ஏற்படுதல்.

மேலே கூறிய எல்லாக் குறிகளும் இவ்வெளஷதத்தில் காணப்படும் உணர்ச்சி அதிகரிப்புக்கு உதாரணங்கள். ஆயினும் கடைசியாகக் கூறப்பட்டதை அவ்வளவு முக்கிய மென்று கருத முடியாது.

வெய்யல் சூட்டைத்தாங்க முடியாது (ஜெல்லிமியம், க்ளோனுயின், லாச்சஸிஸ், நேட்ரம் கார்ப்).

சிற்றின்பத்தில் அளவு மீறிய ஆசை இருப்பதால் தோன்றும் கோளாறுகள்.

தண்ணீர் குடிக்க முயற்சிக்கும் போது ஒவ்வொரு தட வையும் வலிப்புகள் ஏற்படுதல்.

தண்ணீரில் விருப்பம் இருக்கும்; ஆனல் குடிக்க முடி யாது.

காயங்கள் நீலநிறமாய் மாறி இருத்தல் (லாச்சஸிஸ்).

புணர்ச்சி செய்யும்போது இந்திரியம் மிகத்தாமதமாய் வெளியாகுதல் அல்லது வெளியாவதே இல்லை. புணர்ச்சி செய்யும்போது இந்திரியம் வெளியாகாமல் பிறகு தூக்கத் தில் வியாதியஸ்தருக்குத் தெரியாமல் தானுகவே நழுவி விடுதல்.

ஒட்டிக்கொள்ளும் உமிழ்நீர்; அடிக்கடி துப்புதல்.

அடிக்கடி விழுங்க விருப்பத்துடனும் அதிக உமிழ் நீருடனும் தொண்டைப்புண்.

ஏழு வருஷமாக நழுவி இருந்த கருப்பையைக் குணம் செய்திருக்கிறது.

"பைத்தியம் பிடிக்காத நாய்களின் கடிகளால் தோன் றும் கோளாறுகளை இவ்வெளஷதம் நீக்கி இருக்கிறது" (J. H- க்ளார்க்.)

நாய்க்கடியினல், பைத்தியம் பிடித்ததோ பிடிக் காததோ எதுவாய் இருந்தாலும் சரி, உண்டாகும் தலை வலி (H. C. அல்லென்).

——

இரிடியம்
(IRIDIUM)

உடல் சிறுத்துக் கை கால்கள் பலவீனமாய் வேகமாக வளரும் சிறுவர்களுக்கும், வியாதியினால் உடல் சீனித்துப் போய் இருப்பவர்களுக்கும் இது விசேஷமாக ஏற்றது.

இரத்த அணுக்களை அதிகரிக்கும் வல்லமை இதற்கு இருப்பதால் எல்லா வகைப்பட்ட இரத்த சோகைகளுக்கும் இது அனேகமாக ஓர் சஞ்சீவியெனப் பெயர் பெற்றிருக்கிறது.

காதுகளிலும் உடல் முழுவதும் மத மதப்பான உணர்ச்சி, இவ்வுணர்ச்சி சிறிது நேரம் நீடித்து இருக்கக் கூடியது.

கருப்பையில் உண்டாகும் சதைக்கட்டிகள் சீழ்ப் பிடித்தல்.

மனம் என்ற பொருள் இல்லாதது போன்ற சூன்ய மான உணர்ச்சி.

மூத்திரக்காய்ப் பாகங்களில் பலவீனம்; அத்துடன் கால்களிலும் பலவீனம் இருக்கும்.

முதுகைப்பற்றிய பாரிசவாத நிலைமைகள்; விசேஷ மாக வயதானவர்களுக்கும் வியாதிக்குப் பிறகும் ஏற்படும் வகை.

நடக்கும்போது இரு தொடைகளிலும், விரைப்பாய் இருக்கும் உணர்ச்சி; இடது காலில் அதிகமாய் இருக்கும்.

ஜட்ரோபா
(JATROPHA)

வயிற்றுப் போக்கில்: ஏராளமான, தண்ணீர் போன்ற மலம் குழாயைத் திறந்து விட்டதுபோல் வேகமாய் வெளிப் படும்; மலம் வெளியாவதற்கு முன் அடி வயிற்றில் பலமான ஓசை; மலம் வெளியான பிறகும் குறைவதில்லை; தூண்டு தல் திடீரென்று ஏற்படும்; அடக்க முடியாத தாகம்; குளிர்ந்த தண்ணீரை அதிகமாய்க் குடிப்பார்; படுக்கை விரிப்புகளைத் தூர எரிந்து தரையில் படுத்துக் கொள்வார்; இதைப்

பார்ப்போருக்கு வியாதியஸ்தர் தன் உடம்பைக் குளிர்ச்சியாய் வைத்துக் கொள்ள முயற்சி செய்வதுபோல் தோன்றும்; "அடி வயிற்றில் எரிச்சல் இருப்பதால் அதைத் தணிக்கத் தரையில் குப்புறப்படுப்பார்;" உடலில் சில்லிப்பு; சருமத்தில் நீலநிறத்திட்டுகள்; குளிர்ந்த வியர்வை, அனேகமாகப் பிசு பிசுவென்று ஒட்டும்.

காலராவில்: ஆரம்ப நிலைமையில் கூனம் தோன்றுவதற்கு முன், மேலே வயிற்றுப்போக்கில் குறிப்பிடப்பட்டுள்ள குறிகள்யாவும் காணப்படும்போது.

காலராவில் கீழுள்ள குறிகள் மிக முக்கியமானவை: 1. ஏராளமான, தண்ணீர் போன்ற, முட்டையின் வெள்ளைப் பொருளை ஒத்த பொருள் வாந்தி செய்யப்படுதல். 2. மலம் கெட்டியாகவும், கட்டிகளாகவும் முட்டையின் வெள்ளைப் பொருள் போலவும் இருக்கும். தண்ணீர் போல் நீர்த்து இருப்பதில்லை.

ஜட்ரோபா தேவைப்படும் காலராக் கேசுகளில் கீழ்க் காணும் குறிகளும் காணப்படுகின்றன. அக்குறிகளில் சில வயிற்றுப் போக்கிலும் தோன்றும்.

1. குமட்டல் ஏற்படுவதால் தண்ணீர் குடிக்கப் பயம். குடித்த உடனேயே தண்ணீர் வாந்தியாகும்.

2. வடித்த அரிசிக்கஞ்சி போன்ற மலம்.

3. கால்களிலும் பாதங்களிலும் கடுமையான தசை இழுப்புகள்: இத்தசை இழுப்புகளால் கெண்டைக் கால் தசையின் உருவம் தட்டையாகிவிடும்.

4. அடி வயிற்றில் பந்துகள் உருண்டோடும் உணர்ச்சி.

5. வியாதியஸ்தர் வலியினால் படுக்கையில் படுத்துப் புழுப்போல் துடிப்பார்.

6. மூத்திரம் வெளியாகாமல் அடக்கப்படும்.

7. கண்களைச் சுற்றி நீல வளையங்களுடன் முகம் வெளுத்திருத்தல்.

8. பலவீனமாக, வேகமாகச் செல்லும் நாடியுடன் உடல் சோர்வு.

புறங்கைகள், கன்னங்கள், பின் கழுத்து முதலிய பல இடங்களில் தோன்றும் பருக்களுக்கு ஜட்ரோபா ஏற்றது.

குதிகால்களில் வலி; நடக்கும்போது வலி உணர்ச்சி மிகவும் அதிகமாகும்.

காலி ஆர்ஸெனிகோஸம்
(KALI ARSENICOSUM)

நீர்க்கசிவு இல்லாத நாட்பட்ட கரப்பான் படைக்கு இது மிகவும் உபயோகமுள்ளதாக எனக்குத் தெரிகிறது. இவ்விதக் கரப்பான் படையில் அறிப்பு இருந்தால் (அறிப்பு இருக்கலாம்; இல்லாமலும் இருக்கலாம்) அது சூட்டினாலும் ஆடைகளைக் களையும்போதும் அதிகமாகும்.

சாம்பல் படை, குஷ்டம் ஆகியவைகளில் சருமம் நிறம் மாறுதல்.

அதிக அறிப்புடன் அடை அடையாக உள்ள சாம்பல் படை; அடைகள் விருத்தியாகித் தோல் உறிந்து மறுபடி சிறு சிறு அடைகளாய்த் தோன்றும்; இச்சிறு அடைகளும் உறிந்தவுடன் சருமம் சிவந்திருக்கும்.

ஆரம்ப நிலையிலுள்ள பெரியம்மைக் கொப்பளம் போல் உள்ள முகப் பருக்கள்.

அழுகும் புண்கள்; ஆழமான குழியுடனும் விளிம்புகள் வெளிப்புறம் மடிந்தும் இருக்கும்.

"அடி வயிற்றிலிருந்து பந்து போன்ற பொருள் குரல் வளைக்கு ஏறும் உணர்ச்சியினால் மூச்சு அடைத்தல்."

வாதரோகம், கீல்வாதம், மேகக்கிரந்தி ஆகிய வியாதிகளால் உண்டாகும் வலிகள்.

காலி ப்ரொமேடம்
(KALI BROMATUM)

உடல் பருக்கும் குணமுள்ளவர்கள். குழந்தைகள். பரபரப்புக் குணமுள்ள பெண்கள்.

வலது பக்கம் தோன்றும் கோளாறுகளுக்கே பெரும்பாலும் தேவைப்படுகிறது.

ஞாபகச்சக்தி அறவே அழிதல்: பேசுவது எப்படி என் பதைக் கூட மறந்துவிடுவார்; முன்னதாகச் சொல்லிக் கொடுத்தால் தான் அந்த வார்த்தையை அவரால் சொல்ல முடியும்; அலட்சியமாய் இருத்தல்.

எழுதும்போது நடுவே நடுவே வார்த்தைகளை விட்டு விடு வார். அதனல் எழுதியதைப் புரிந்து கொள்ள முடியாது.

இரத்த சோகையினல் அளவு கடந்த மன ஏக்கம்.

அடிக்கடி கண்ணீர் வடித்தல்; உற்சாகம் குறைந்தும் சிறுபிள்ளைத் தனமாகவும் இருத்தல்.

பரபரப்பாகவும் சுறு சுறுப்பாகவும் எந்நேரமும் இடை விடாமல் ஏதோ ஒரு வேலையில் ஈடுபட்டுக் கொண்டும் இருப் பார்; கைகளும் விரல்களும் இடைவிடாமல் ஆடிக்கொண்டே இருக்கும்; கைகளில் பரபரப்பு. விளக்கம் கூறுமிடத்து: "வியாதியஸ்தர் அடிக்கடி தன் பூட்ஸ் கயிறுகளைக் கட்டிக் கொண்டோ, சட்டைப் பைகளைத் துழாவிக் கொண்டோ அல்லது ஆடையிலுள்ள நூல்களைப் பிடித்து இழுத்துக் கொண்டோ, இது போன்ற ஏதோ ஒரு காரியத்தைச் செய்து கொண்டே இருப்பார்." விரல்கள் ஏதோ ஒரு வேலையைச் செய்து கொண்டே இருக்கும்.

தசைகள் ஒற்றுமையாய் வேலை செய்வதில்லை; நரம்பு சம்பந்தமான பலவீனம்; மதமதப்பும் பாரிச வாதத்தினல் நடக்க முடியாமல் போவதும்.

க்ஷய சம்பந்தமுள்ள அல்லது மேகக்கிரந்தி சம்பந்த முள்ள காக்கை வலிப்பு; வியாதியஸ்தர் மிக மெதுவாகப் பேசுவார்;. ஞாபகச் சக்தி அழிதல்; தன் அறிவு அழிந்து விடும் என்று நினைப்பார். சினைப்பைக் கோளாறுகளால் உண்டாகும் காக்கை வலிப்பு. மாதவிடாய்க் காலங்களி லும் அக்காலத்துக்குச் சற்று முன்பும் பிறகும் காக்கை வலிப்புத் தோன்றுதல். வலிப்பு வந்துபோன பிறகு தலைவலி.

பலமான சிற்றின்ப ஆசையினல் சினைப்பைகளில் வேதனை தோன்றி அக்காரணமாக மாதவிடாய்ப் போக்கு அதிகமாகும்.

பெண்களுக்குப் புணர்ச்சிக் காலத்தில் இன்ப உணர்ச்சி இல்லாமை.

கருப்பையிலிருந்து அதிக இரத்தப் பெருக்கு, விசேஷமாகச் சிறு பெண்களுக்கு.

குழந்தைகளுக்கு இரவில் தூங்கும்போது பயங்கரக் கனவுகள் (காலி பாஸ்); தூக்கத்தில் பற்களைக் கடித்தல்; முனகுதல்; கதறுதல்; பயங்கரமான கனவுகள்; ஆறுதல் சொல்ல முடியாது; இவைகளுக்குப் பிறகு ஓரைக் கண் பார்வை ஏற்படும்.

திக்கிப் பேசுதல்: நாக்கு ஒழுங்கு இல்லாமல் வேலை செய்யும்; மெதுவாகவும் கஷ்டப்பட்டும் பேசுவார் (போவிஸ்டா, ஸ்ட்ரமோனியம்).

மூளையில் வேதனையுடன் கூடிய, குழந்தைகளின் காலராவை ஒத்த வயிற்றுப் போக்கு.

"காலராவில் முதல் நிலைமை; வாந்தி, தசைகளில் இழுப்பு, அரிசிக் கஞ்சி போன்ற மலம்: மூத்திரம் அடக்கப்பட்டிருந்தால் அக்கோளாறை இவ்வௌஷதம் நீக்கும்."

'முகப்பருக்களுக்கும் பிறப்பு உறுப்புகளுக்கும் நெருங்கிய உறவு இருக்கிறது; அதாவது முதல் மாதவிடாய் தோன்றும் போதும் மற்ற மாதவிடாய்க் காலங்களிலும் பருக்கள் தோன்றும். சாதாரண முகப்பருக்களில் காலிப்ரோமெடத்தை (30 வீரியம்)ப் போன்ற உபயோகமான வேறு ஒரு ஔஷதத்தை நான் கண்டதே இல்லை."

முகத்தில் நீலமும் சிவப்பும் கலந்த நிறமுள்ள கொப்பளங்கள்.

சிறு கொப்பளங்கள், முக்கியமாய் முகம், முதுகு, மார்பு, வயிறு ஆகிய இடங்களில் மட்டும், அடுத்தடுத்துத் தோன்றிக் கொண்டே இருத்தல்: சகிக்க முடியாத அறிப்பு இருக்கும்.

அளவு மீறிச் சிற்றின்பத்தில் ஈடுபட்டதால் தோன்றும் கோளாறுகள். அவைகளில் முக்கியமானவை: நிதானம் இல்லாத நடை; கால்கள் பலவீனமாய் இருப்பதால் நிமிர்ந்து நிற்க முடியாமை; தசைகள் ஒற்றுமையாக வேலை செய்யாமை; கை கால்களில் மதமதப்பும் ஊசி குத்தும் உணர்ச்சியும்; மனக் குழப்பம்; ஆண்தன்மைக் குறைவு; கடைசியாக வலிப்புகள்; பாரிசவாதமும் இருக்கலாம்.

மந்த குணம்: "தூக்கக் கலக்கமாய் நாற்காலியில் பொத் தென்று விழுவார்; தட்டி எழுப்பினால் மறுகணமே மீண் டும் தூங்கிவிடுவார்."

பார்வை மங்குதல்: அனேகமாய்க் குருடாகும்.

சிறு குழந்தைகளுக்கு (தினந்தோறும்) காலையில் சுமார் 5 மணிக்கு மூறைவைத்து வயிற்றுவலி தோன்றுதல்.

கருவுற்றிருக்கும்போது வறண்ட, கடினமான, நரம்பு சம்பந்தமுள்ள இருமல், அனேகமாக இடைவிடாமல் ஏற் பட்டுக் களைப்பை உண்டாக்கிக் கருச் சிதைவு நேரும் போல் தோன்றுதல்.

காலி மூரியாடிகம்

(KALI MURIATICUM)

ஷூஸ்லரின் உயிர் உப்புக்களில் இது ஒன்று.

கழிவுகள், போக்குகள், சருமக் கோளாறுகள் ஆகிய யாவும் வெண்மை நிறமாய் இருக்கும். நாக்கின்மேல் பின் பக்கத்தில் வெண்மை அல்லது பழுப்பு நிறமுள்ள அழுக்கு.

சருமத்தில் காய்ந்த, மாவு போன்ற செதில்கள்.

வாயில் வெண்மையான குழிப் புண்களுடன் வாய் வேக்காடு.

கண்களிலிருந்து வெண்மையான பீளை வெளிப்படுதல்.

தொண்டையில் வெண்மையான அழுக்குப் படிந் திருத்தல்.

தொண்டையில் பழுப்பான திட்டுகள் அல்லது புள்ளி கள்.

தொண்டைச் சுரப்பிகளில் வெண்மையான அல்லது பழுப்பான புள்ளிகள்.

வெள்ளை ஒழுக்கில் பால்போல் வெளுத்த, கெட்டி யான, அறிப்பை ஏற்படுத்தாத கழிவு வெளிப்படுதல்.

கெட்டியான, வெண்மையான, நார்ப் பொருள்கள் கலந்த கழிவுகள், கோழை முதலியவை வெளிப்படுதல்.

வயிற்றுப் போக்கில் குழ குழப்பான, இரத்தம் கலந்த மலம் அடிக்கடி கடுகடுப்புடனும் கடுமையான வலியுடனும் வெளியாகும்.

சுரப்பிகளின் வீக்கத்துக்கு ஷூஸ்லரின் முக்கியமான ஔஷதம் இது. சுரப்பிகளில் க்ஷய சம்பந்தமுள்ள வீக்கங்கள்.

பல முனைகளுள்ள தொண்டைச் சுரப்பி வேக்காடு.

சுரப்பிகளில் வீக்கத்துடன் நடுக்காதிலிருந்து நீர், சீழ் முதலிய கழிவுகள் நீடித்து வெளியாகுதல்.

காதுச்சுரப்பிகளில் வீக்கத்துடன் தாளம்மை.

மேகவெட்டைக்கு ஷூஸ்லரின் முக்கிய ஔஷதம் இது. வீக்கம் காணப்படும்போது மிகவும் உபயோகமுள்ளதென்று சொல்லப்படுகிறது.

மேகவெட்டையை உள்ளே அமுக்கியதால் விரைகளில் வேக்காடு தோன்றுதல்.

சூலுக்குகளுக்கு இரண்டாவது ஔஷதமாக இதை ஷூஸ்லர் உபயோகித்திருக்கிறார்.

மூலங்களில் கெட்டியான, கறுப்பு நிறமும், கட்டி தட்டியும் நார்ப்பொருள்கள் கலந்துமுள்ள இரத்தம் வெளிப்படுதல்.

எல்லா வகைப்பட்ட நெருப்புச்சுட்ட புண்களுக்கும், கொப்பளங்கள் ஆகியவைகளுக்கும் ஷூஸ்லர் இதை உபயோகித்திருக்கிறார். (ஔஷதத்தை வெளியிலும் உபயோகிக்கலாம்).

கொழுப்புச்சத்து நிறைந்த அல்லது ஊட்டமுள்ள உணவு அசீரணத்தை உண்டாக்குதல். சாப்பிட்ட பிறகு அடி வயிற்றில் நிறைந்த உணர்ச்சி.

காதுகளில் ஓசைகள்.

மூச்சுவிடக் கஷ்டமாய் இருத்தல்.

———

காலி ஸல்ப்யுரிகம்

(KALI SULPHURICUM)

ஷூஸ்லரின் உயிர் உப்புக்களில் இதுவும் ஒன்று.

ஏராளமான, நல்ல மஞ்சள் நிறமுள்ள கழிவுகள்; மெல்லியதாக அல்லது ஒட்டும் குணமுள்ளதாய் இருக்கலாம்.

வேக்காட்டுக்குப் பிறகு மெல்லிய, நல்ல மஞ்சள் நிறமுள்ள, நீர் உற்பத்தியாகுதல்.

மஞ்சள் நிறமுள்ள, குழ குழப்பான சளி வெளிப்படும் மூக்கின் நீர்க்கோர்வை.

குழ குழப்பான, பசுமையான மஞ்சள் நிறமுள்ள, கழிவுடன் கூடிய மேகவெட்டை.

இருமலுடன் மார்பில் சளியினுல் கறகறவென்ற ஒசை.

வலிகள் இடம் மாறுவதும் இடைவிடாமல் சஞ்சாரம் செய்து கொண்டே இருப்பதும்.

"அல்ப காரணங்களாலும் ஏராளமாய் வியர்வை தோன்றுதல்."

லாக்டிகம் ஆஸிடம்
(LACTICUM ACIDUM)

மதுமேகம் எனப்படும் நீரழிவு வியாதியில் மூத்திரத்தில் சர்க்கரை இருக்கும்; அதிகத்தாகம்; அடிக்கடி, ஏராளமாய் மூத்திரம் வெளிப்படுதல்; சருமம் காய்ந்தும் கறடுமுறடாகவும் இருத்தல்; இடைவிடாத குமட்டலும் இருக்கலாம்.

பாதங்களில் ஏராளமான வியர்வை.

ஒவ்வொரு நாளும் காலையில் மூக்கிலிருந்து இரத்தம் கொட்டுதல்.

கருவுற்றிருக்கும்போது காலை வேளைகளில் உமிழ் நீர் ஏராளமாய் உற்பத்தியாகுதல், குமட்டலும் வாந்தியும் ஏற்படும். காலை உணவு உட்கொண்டபிறகு உமிழ் நீர்ப் பெருக்கு குறையும்.

சாப்பிட்டால் குமட்டல் குறைவுபடும்.

லாபிஸ் ஆல்பஸ்

(LAPIS ALBUS)

சுரப்பிகள் பற்றிய கோளாறுகளில் இவ்வௌஷதம் மிகச்சிறப்பாய் உபயோகமாகிறது.

கண்டமாலையில் அதிகமாய் உபயோகப்படும்.

வியாதியுற்ற சுரப்பிகள் கடினமாவதில்லை. இழுத்தால் இழுபடும். இச்சமயங்களில் **லாபிஸ் ஆல்பை** 6x **வீரியத்தில்** (மாவு உருவம்) தினமும் 3 அல்லது 4 வேளைகளாகச் சில வாரங்களுக்கு (இரண்டு முதல் நான்கு வாரங்கள்) கொடுத்து வரவேண்டும். தேவையானால் மூன்று அல்லது நான்கு வாரங்கள் சென்ற பிறகு மறுபடியும் இதேபோல் கொடுக்கவேண்டும்.

யோனிக்கு மேலுள்ள முளைபோன்ற உறுப்பில் கடுமையான அறிப்பு.

மாதவிடாயின் ஆரம்பத்தில் வலி ; மிகக் கடுமையாய் இருப்பதால் மயக்கம் ஏற்படும். மாதவிடாய்க்கு முன் கடுமையான வலி. கருப்பையில் சதைக்கட்டிகள்.

சுரப்பிகள் இல்லாத இடங்களில் சுரப்பிகள் போன்ற சதைக்கட்டிகள் தோன்றுதல்.

க்ஷயரோகத்தை அடிப்படையாய்க் கொண்டு உண்டாகும் தசைக்கட்டிகளில் புண் ஏற்படாதவரையில் இது உபயோகப்படும்.

லெப்டாண்ட்ரா

(LEPTANDRA)

கறுப்பு நிறமுள்ள, மலம் போன்ற தண்ணீர் குடல்களிலிருந்து அருவிபோல் பெருக்கெடுத்தோடும். மலம் தார்போல் கறுப்பாகவும் நாற்றமாகவும் இருக்கும். மலம் கழிப்பதற்கு முன் அடிவயிற்றில் பலமான ஓசையும் கடுமையான வலியும் இருக்கும் ; மலம் கழித்த பிறகு தொப்பூழ்ப் பாகத்தில் கடுமையான வெட்டும் வலிகளும் வேதனையும்.

மஞ்சட்காமாலை, தார்போல் கறுப்பான மலம் ஆகிய குறிகளுள்ள கல்லீரல் கோளாறுகள்.

தார் போலுள்ள மலம் வெளிப்படும் பித்த சம்பந்தமான சுரம். டைபாய்டு சுரம், ஆகியவை.

கல்லீரல் கோளாறுகளில் "வயிற்றின் மேல் வலது பக்கத்திலும் கல்லீரலின் அடிப்புறத்திலும் மந்தமான வலியும் வலியுள்ள உணர்ச்சியும்."

கூட்டமாக வெளியூர்களுக்குச் செல்லும் பிரயாணிகளுக்கும் போர்வீரர்கள் ஆகியவர்களுக்கும் ஏற்படும் வயிற்றுப் போக்குக்கு இது தேவைப்படும் என்று லிலியந்தால் கொட்டை எழுத்தில் எழுதியிருக்கிறார்.

லிலியம் டிக்ரினம்

(LILIUM TIGRINUM)

மிகுந்த அவசரம் காட்டுவார்; ஆலல் நோக்கம் எதுவும் இல்லாமல் காரியங்களைச் செய்வார்; அத்துடன் காரியங்களைச் செய்யச் சக்தி இல்லாமை.

சிற்றின்ப ஆசையை அடக்குவதற்காக எந்நேரமும் ஏதையாவது செய்து கொண்டே இருக்க நேருதல்.

தனக்கு மோக்ஷம் கிடைக்குமா என்ற விசாரம் கரை கடந்து இருத்தல் (கருப்பைக் கோளாறுகளுடன்).

மன உற்சாகம் மிகவும் குறைந்திருத்தல்; அழுவார்: தலையின் உச்சியில் பலமான ஏதோ ஒரு வித வேதனை காணப்படுதல். பயந்த சுபாவம்.

மிக முக்கியமான குறி அடி வயிற்றிலும் இடுப்பிலும் கீழே இழுக்கும் உணர்ச்சி; உள்ளே உள்ள எல்லா உறுப்புகளும் வெளியே வந்து விடுமென்று தோன்றுதல்.

கீழ் இழுக்கும் உணர்ச்சியைக் குறைக்கக் கால் மேல் கால் போட்டுக் கொண்டு உட்கார நேருதல். உள்ளே உள்ள உறுப்புகள் யோனி வழியாய் வெளியே பிதுங்கி வராமல் இருக்கத் தன் கைகளை யோனிக்கு மேலுள்ள முனை போன்ற உறுப்பின் மீது வைத்துக் கொள்வார்.

கீழே இழுக்கும் உணர்ச்சி தோள் பட்டைகள், மார்பு, மேல் வயிற்றிலிருந்து அடிவயிறு வரையிலும், இடுப்பிலிருந்து யோனிவரையிலும் ஆகிய இடங்களில் காணப்படும். மூத்திரப்பையில் இடைவிடாமல் காணப்படும் கனத்த உணர்ச்சியும் இவ்வகையில் சேர்ந்ததே என்று கூறலாம்.

மாதவிடாய்ப் போக்கு வெளியாகப் போகிற தென்ற உணர்ச்சி.

அடிக்கடி மூத்திரம் கழித்தல்; மூத்திரப்பையில் இடைவிடாத கனத்த உணர்ச்சி.

ஔஷதப் பரீட்சையில் இவ்வௌஷதம் கருப்பையை இடம் நழுவும்படிச் செய்தது; விசேஷமாக முன்பக்கமாக நழுவியது. இருநூறு வீரியத்தில் உபயோகித்தால் இவ் வௌஷதம் எப்பொழுதும் வியாதியை அதிகரிப்பதைக் கண்டதாக க்ளார்க் கூறுகிறார். ஆதலால் அவர் 30 வீரியத்தையே சிபாரிசு செய்கிறார்.

இருதயத்தைப் பலமாய் நசுக்கிப் பிழியும் உணர்ச்சி; அல்லது ஒரு சமயம் இறுக்கிப் பிடிப்பது போலவும் மறு சமயம் பிடியைத் தளர்த்தி விடுவதுபோலவும் இருத்தல். இருதயம் இறக்கை கட்டிப் பறப்பதுபோல் படபட வென்று துடித்தல்; தேய்த்தாலும் அமுக்கினாலும் குறைவுபடும். "இருதயம் நிமிஷ மொன்றுக்கு 150 முதல் 170 தடவைகள் வரை துடிக்கும்."

"கண் இமைத் தசைகளின் பலவீனத்தைப் போக்கி மீண்டும் பலத்தை அளிக்கிறது."—W. போரிக்.

இரவில் இடது மார்பில் கடுமையான வலி உண்டாகி வியாதியஸ்தரைத் தூக்கத்திலிருந்து எழுப்பிவிடும்.

மாதவிடாய்ப் போக்கு நடமாடிக் கொண்டிருக்கும்போது தான் வெளிப்படும்; கீழே படுத்தவுடன் நின்றுவிடும்.

எழுந்திருந்தவுடன் கருப்பை அதனுடைய கனம் காரணமாகவே நழுவும். அடிக்கடி மூத்திரம் மலம் கழிக்கத் தூண்டுதலுடன் (கருப்பை மலப்பையை அழுத்துவதால்) கருப்பை இடம் நழுவி இருத்தல். கருப்பையில் புண்ணுள்ள உணர்ச்சியும் வலியும். சிறுப்பைப் பாகத்தில் கூரிய வலிகள்.

பிள்ளைப்பெற்ற பிறகு கருப்பை அதன் பழைய உருவத்தை அடையாமல் இருத்தல்.

லிதியம் கார்பானிகம்

(LITHIUM CARBONICUM)

மூத்திரம் பற்றிய கோளாறுகள் : 1. மூத்திரப்பையில் புண்ணுள்ள உணர்ச்சி; வலது மூத்திரக்காயிலும் மேல் மூத்திரக் குழாயிலும் வலி. 2. சளிப் பொருள்கள் கலந்து குழ குழப்பாய் உள்ள மூத்திரம். 3. பலமான, மிக விரைவில் தோன்றும் கடுகடுப்பு. 4. "மூத்திரம் கழிக்கும் போது ஓரளவு சிரமமும் பிறகு கடுமையான கடுகடுப்பும்." 5. மூத்திரம் அளவு குறைந்து, கறுத்து அதிகக் காரகுணமுள்ளதாய் இருத்தல். 6. மூத்திரம் கழிக்க எழுந்திருந்தவுடன் இருதயப்பாகத்தில் அமுக்கும் உணர்ச்சி உண்டாகிக் கடைசிவரை அவ்வலி விடாமல் இருத்தல்; காலை வேளைகளில்.

இருதயப் பாகத்தில் வாதரோகம் காரணமாகப் புண்ணுள்ள உணர்ச்சி.

"எலும்புகள், எலும்பு மூட்டுகள், தசைகள், ஆகிய வைகளிலும் உடல் முழுவதும் அடிபட்டதுபோல் புண்ணுய்த் தோன்றுதல்."

"மாதவிடாய்ப் போக்கு திடீரென்று நின்று தலைவலி தோன்றும்."

உடல் முழுவதும் அடிபட்டதுபோல் பாரிசவாத சம்பந்தமுள்ள விரைப்பு.

மலாண்ட்ரினம்

(MALANDRINUM)

பெரியம்மை வராமல் தடுக்க இது மிகச் சிறந்த ஔஷதம் என்பது என் அபிப்பிராயம். எத்தனையோ தடவைகளில் இந்த உண்மையை நான் அறிந்திருக்கிறேன். பெரியம்மைத் தடுப்பு ஊசி போட்டுக் கொள்ளச் சில நாட்

களுக்கு முன்னதாக மலாண்ட்ரினம் 30 வீரியத்தில் ஒரு வேளை சாப்பிட்டு விட்டுப் பிறகு ஊசி போட்டுக் கொண்டால் அது "பூரித்துப் பலிப்பது" இல்லை என்பதை நூற்றுக் கணக்கான கேசுகளில் நான் பார்த்திருக்கிறேன். ஆகவே ஹோமியோபதித் தடுப்பு ஔஷதம் (மலாண்ட்ரினம்), அம்மைத்தடுப்பு ஊசி மருந்து, இவ்விரண்டில் எது அம்மையைத் தடுப்பதில் அதிக பலம் பொருந்தியது என்பதை நீங்களே இப்பொழுது தீர்மானிக்கலாம். அம்மைத் தடுப்பூசி மருந்து குத்திக் கொள்வதால் இரத்தத்தில் விஷம்கலக்கிறது. என்பது நினைவில் இருக்கட்டும். இது தவிர மக்கள் நினைப்பதுபோல் பெரியம்மை வராமல் தடுக்க ஊசிமருந்து அப்படியொன்றும் சிறந்ததில்லை என்பதையும் அதனால் பல சமயங்களிலும் ஆபத்தை விளைக்கும்கோளாறுகள் தோன்றும் என்பதையும் கவனிக்க வேண்டும்.

பெரியம்மை பெருவாரியாகத் தோன்றும் சமயங்களில் மலாண்ட்ரினம் 30 வீரியத்தில் ஒரு வேளை அல்லது வாரத்துக்கு ஒரு தடவையாக இரண்டு வேளைகள் சாப்பிட்டால் வியாதி தொற்றிக் கொள்ளாமல் பாதுகாக்கப் போதுமானது.

அம்மைத் தடுப்பு ஊசி குத்திக்கொண்டதால் உண்டாகும் கோளாறுகளிலும் இது தேவைப்படுகிறது. ஆனால் இச்சமயங்களில் தூஜா தான் மிக முக்கியமான ஔஷதம். அம்மைத் தடுப்பு ஊசி குத்திய பிறகு சருமம் காய்ந்து கறடு முறடாகுதல்.

சின்னம்மை வராமல் தடுக்கவும் உபயோகமுள்ளது.

சருமம் எண்ணெய் தடவியது போல் இருத்தல்; அத்துடன் கொப்பளங்களும் இருக்கலாம்.

கால்களில் சிறிய, கறும் சிவப்பு நிறமுள்ள புள்ளிகள்: அழுத்தினால் மறைவதில்லை.

மங்கானம் அஸெடிகம்

(MANGANUM ACETICUM)

பெர்ரம் மெட், மங்கானம் ஆகிய இரு ஔஷதங்களும் இரத்த அணுக்களை நாசம் செய்து இரத்த சோகையை

உண்டாக்குகின்றன. மேடு படுத்தால் இருமல் சௌகரியமாகும் குறி இரண்டிலும் காணப்படுகிறது. பெர்ரம் மெட்டில் வலி, மன உணர்ச்சி அதிகரிப்பு, உடல் வேலை ஆகியவை சிறிதளவே இருந்தாலும் முகம் சிவக்கும்; மங்கானத்தில் மன உணர்ச்சிகள் அதிகரித்தால் முகம் சிவந்து காதுகளில் ஊது குழலால் ஊதும் ஓசையும் உண்டாகிறது. மாதவிடாய் மறையும் காலத்தில் முகம் சிவப்பதற்கும் மங்கானம் ஏற்றதே. இரு ஔஷதங்களிலும் சுவாச கோசங்களிலிருந்து இரத்தப் பெருக்கு ஏற்படும் குறி இருக்கிறது.

மங்கானத்தைப் பற்றி J. T. கெண்ட் அவர்களைப்போல வேறு ஒருவருமே அவ்வளவு அழகாய் எழுதவில்லை.

மாதவிடாய்க் கோளாறுகளால் இரத்த சோகை உண்டாகிச் சுவாசகோச கூயமும் தோன்றுமோ வென்று நினைக்கக்கூடிய உடலுள்ள பெண்கள்.

"டல காலமாக மாதவிடாய்ப் போக்கு அளவு குறைவாய் இருக்கும் வரலாறு உள்ள அல்லது வியாதியஸ்தருக்குப் பதினெட்டு அல்லது இருபது வயது வரை மாதவிடாய் வெளிப்படவில்லை என்னும் கேசுகளில் மங்கானம் உபயோகமாகும்"—கெண்ட்.

"அது ஆழ்ந்து வேலை செய்கிறது; இரத்த அணுக்களை அழிக்கிறது; சுவாசகோச கூயம் ஏற்பட அடி கோலுகிறது; விசேஷமாகக் குரல்வளையில் கூயம்."—கெண்ட்.

"அடிக்கடி குரல்வளையில் வேக்காடு தோன்றி ஒவ்வொரு தடவையும் அதற்கு முன்பு இருந்ததைவிட அதிகமான கெடுதல்களைச் செய்யும்."—கெண்ட்.

மிக அபூர்வமாகக் கிடைக்கக்கூடிய மாங்கனீஸ், (மங்கானம்), ஸெலெனியம் ஆகிய இரு உலோகங்களிலும் குரல்வளைபற்றிய கூயரோகம் மிக முக்கியமான குறியாய் இருப்பது விநோதமாய் இருக்கிறதல்லவா?

எலும்புகளின் மேல் தோலில் அதிக வலியுள்ள உணர்ச்சி. நடக்கும்போது எலும்புகளில் புண் இருப்பதுபோல் தோன்றுதல். தொட்டால் அல்லது சிறிதளவு அதிர்ச்சியினால் உடலின் எல்லா இடங்களிலும் புண் இருப்பது போல்

தோன்றுதல் (இக்குறி கூயரோகமோ அல்லது அதைப் போன்ற வேறு ஏதோ ஒரு கொடுமையான வியாதியோ தோன்றியிருப்பதற்கு அடையாளம்). இரத்தச் சேதமோ அல்லது உயிர்த் தண்ணீர்ச் சேதமோ இல்லாமல் தோன்றும் இரத்த சோகை, விசேஷமாகக் கடுமையான இரத்த சோகையும் விஷத்தன்மையுள்ள இரத்த சோகையும். எல்லாக் குறிகளும், விசேஷமாகத் தொண்டையைப் பற்றிய வை, **குளிரும் ஈரக்கசிவும் உள்ள பருவக்காலங்களில்** அதிகமாகும். வயிறு, காது பற்றிய குறிகளும் அதிகமாகலாம். **நேர் எதிர்கோண வலிகள்.**

இரவில் தாங்கமுடியாத வலிகளுடன் எலும்புகளில் வேக்காடு.

குரல்வளை கூயரோகம். குரல் வளையில் புண்ணுள்ள உணர்ச்சி. தொண்டைக் கறகறப்பும் குரல் இல்லாமையும். குளிர், ஈரக்கசிவு உள்ள பருவநிலைகளில் ஒவ்வொரு தடவையும் குரல்வளை தாக்கப்பட்டு முடிவில் **குரல் வளை கூயரோகம் ஆரம்பித்தல்.**

"எப்பொழுதும் தொண்டையைக் கனைத்துக்கொண்டு மற்றவர்களுக்குத் தொந்திரவை உண்டு பண்ணுவார்." "ஒவ்வொரு தடவை கனைக்கும் போதும் வாய் நிறையச் சளிப்பொருள் வருதல்;" – கெண்ட்.

மூக்கில் நீர்க்கோர்வை பிடித்தால் ஒவ்வொரு தடவையும் மார்ச்சளி உண்டாகுதல் (**ஹிப்பார் ஸல்பர், காலி கார்ப், லகபோடியம், நேட்ரம் ஸல்ப், ஸைலீஷியா**).

"பயங்கரமான ஏதோ ஒரு காரியம் நடைபெறப் போகிறது" என்ற எண்ணத்தினால் கவலையும் அதிக பீதியும். இக்கவலையை நீக்க வியாதியஸ்தர் தரையில் நடமாடிக் கொண்டிருப்பார் அல்லது தன் புத்தியை வேறு இடத்தில் செலுத்துவார். ஆனால் இந்த முயற்சிகள் கவலையை அதிகரிக்கவே செய்கின்றன. படுக்கையில் படுத்துக் கொண்டவுடன் சூரியனைக் கண்ட பனிபோல் வியாதியஸ்தருடைய கவலை மாயமாய் மறைந்து போய்விடும். ஆரம்பத்திலேயே படுத்துக் கொள்ளத் தனக்கு அறிவில்லாமல் போய்விட்டதே என்று வியாதியஸ்தர் நினைப்பார். ஆனால் படுக்கையிலிருந்து எழுந்திருந்தவுடன் பழயபடியே மனக்

கவலையும் பிதியும் அவரைக் கவ்விக் கொண்டுவிடும். பகல் முழுவதும் அவர் நடமாடும் போதெல்லாம் மனக்கவலை விடாமல் அவரைப் பீடித்து இரவில் கீழே படுத்தவுடன் சௌகரியமாகும்.

"அருகிலுள்ள பொருள்களை, குறிப்பாக பக்கத்திலுள்ள விளக்கை, பார்க்கும் போது கண்களில் இசிவு வலி." தையல், பொடியான அச்சு, எழுத்துக்களைப் படித்தல் ஆகிய வேலைகளைச் செய்யக் கூர்ந்து கவனிக்கும்போது கண்களில் வலி. இக்குறிகள் கெண்ட் அவர்களால் குறிக்கப்பட்டுள்ளன; பரிசோதித்து அறியப் பட்டவைகளுமாகும்.

மஞ்சட் காமாலையையும் பித்தக் கற்களையும் மங்கானம் குணம் செய்திருப்பதாகக் கெண்ட் எழுதுகிறார்.

மாதவிடாய்ப் போக்கு மிகவும் குறைவாய் ஒன்று அல்லது இரண்டு நாட்களே இருக்கும்; மிகச் சீக்கிரத்தில் மீண்டும் தோன்றும்; இரத்த சோகையும் சேர்ந்திருக்கும்.

மாதவிடாய் மறைந்த பிறகு இரத்த சோகையுடன் ஏதோ சில சமயங்களில் சிறிதளவு மாதவிடாய்ப் போக்கு வெளிப்படுதல்.

'பல்வலியில் வலி திடீரென்று உடலின் மற்றப் பகுதிகளுக்குத்தாவுதல்.'

"மூக்கைச் சிந்தும்போதும் விழுங்கும்போதும் காதுகளில் பலமான உடையும் ஓசை."

சுவாசகோசங்களிலிருந்து இரத்தப் பெருக்கு.

"சருமத்தில் நீல நிறமுள்ள முண்டுகள்."

"சிறிய காயம் பட்டபிறகு சுற்றிலும் நீல நிறத்துடன் விஷத்தன்மையுள்ள புண்கள் தோன்றுதல்."

காயங்கள் சீக்கிரம் ஆறுவதில்லை. சிறுகாயமும் தவறுமல் சீழ்க்கொள்ளும்.

தள்ளாடும் நடையுடன் பாரிசவாதம்; நடக்க முயற்சித்தால் முன்பக்கமாக ஓட ஆரம்பித்தல்.

கால்களில் பாரிசவாதம்; பிறகு மேல் பக்கத்திலும் பரவும்.

———

மெலிலோடஸ்

(MELILOTUS)

இரத்தக்குழாய்களில் அதிக இரத்தம் சேர்ந்து இரத்தப் பெருக்கெடுக்கும் குணம்; உடலின் எந்த இடத்திலும் ஏற்படலாம்.

இரத்தப்பெருக்கில் இரத்தம் ஏராளமாகவும் நல்ல சிவந்த நிறமாகவும் இருக்கும். இரத்தம் வெளியேறிய பிறகு சௌகரியம் உண்டாகும்.

தலைவலியிலும் மற்ற கோளாறுகளிலும் முகத்தில் அதிகச் சிவ சிவப்பு அல்லது ஊதா நிறமாய் இருந்தால் இது தேவையாகும்.

கழுத்திலுள்ள சுத்த இரத்தக் குழாய்களில் துடிப்புடன் தலைவலி; மூக்கிலிருந்து இரத்தப் பெருக்கு வெளியான பிறகு பல சமயங்களிலும் சௌகரியமாகும்.

மூக்கிலிருந்து இரத்தம் வெளியாவதற்கு முன் முகத்தில் மிகக்கடுமையான சிவசிவப்பு. இரத்தப் பெருக்கு வெளியான பிறகு பொதுவாக எல்லா விஷயங்களிலும் சௌகரியம் ஏற் படும்.

இரத்தம் பெருக் கெடுப்பதற்கு முன்னதாக முகத்தில் மிகக் கடுமையான சிவப்பு காணப்பட்டால் அது எந்த இடத் திலிருந்து ஏற்பட்டாலும் இவ்வௌஷத்தை நினைக்க வேண்டு மென்றே கூறலாம்.

"தலையில் வலியுடனும் நிறைந்த உணர்ச்சியுடனும் அதிக இரத்தம் சேருதல்."

"மூளை நெற்றி வழியாக வெடித்து வெளியே வந்து விடும்போல் தோன்றும்."

"தலையில் அதிக இரத்தம்சேர்ந்து மந்தமான தலைவலி உண்டாகுதல்; ஏராளமாய், தண்ணீர் போன்ற மூத்திரம் கழித்தபிறகு சௌகரியமாகும்.

தலைவலி மிகக் கடுமையாகி அதனால் முகம் ஊதா கலந்த நிறமாகிக் கண்கள் கோவைப்பழம்போல் சிவந்து கடைசியில் மூக்கிலிருந்து இரத்தம் பெருக்கெடுக்கும்; அதனால் சௌகரி யம் ஏற்படும்.

மூச்சுத்திணறும் உணர்ச்சி; விசேஷமாக வேகமாய் நடக்கும்போது; வேண்டிய அளவு காற்று கிடைக்க வில்லைபோல் தோன்றுதல். மூக்கிலிருந்து இரத்தப் பெருக் கெடுக்கும்போது சுவாசிக்கக் கஷ்டமாய் இருத்தல்.

இழுப்புகள், பிள்ளைப் பெறும்போதும் பிறகும் ஏற் படும் வலிப்புகள், காக்கை வலிப்பு."

தலையில் அடிபட்டதால் தோன்றும் காக்கை வலிப்பு சுவாசகோசங்களிலிருந்து இரத்தப்பெருக்கு.

மெபைடிஸ்

(MEPHITES)

கக்குவாய் இருமலுக்கு இது அனேகமாக ஒரு சஞ்ஜீவி என்று சொல்லப்படுகிறது. பொதுவாக 3 x வீரியத்தில் உபயோகப் படுத்தப்படுகிறது. ஒரு நாளைக்குச் சுமார் 3 வேளைகள் கொடுக்கலாம். " இந்த ஔஷதத்தை உப யோகித்ததினால் பல சமயங்களிலும் வியாதி அதிகமாவது போல் தோன்றுகிறதாயினும் வியாதியின் கால அளவை நிச்சயமாகக் குறைக்கிறது என்பதை நான் கண்டு கொண் டேன் " என்று பாரிங்டன் கூறுகிறார்.

கீழ் உள்ளவை கக்குவாய் இருமலில் காணப்படும் முக் கியமான குறிகளாவன.

1. "இருமலில் இழுப்புமட்டுமே இருக்கும்;" நீர்க்கோர் வைக் குறிகள் மிக அல்பமாகவே இருக்கும்; தொண்டைக் கறகறப்பு ஏற்படும்.

2. " வூப் என்ற ஓசை அதிக நேரம் நீண்டிருக்கும்; கோழை சிறிதளவே இருக்கும் அல்லது கொஞ்சம் கூட இருக்காது.

3. மூச்சடைக்கும் உணர்ச்சி; குழந்தை மூச்சுக் காற் றை வெளியே விடமுடியாது. (ஸாம்புகஸ் கேசுகளில் மூச்சுக் காற்றை உள்ளே இழுக்க முடியாது).

4. உட்கொண்டஉணவு முழுவதும் வாந்தியாகுதல்; சில சமயங்களில் சாப்பிட்டுப் பல மணி நேரம் சென்ற பிறகும் வாந்தியாகும்.

5. சுவாசகோசங்களின் மேல் பகுதியில் சளி இருப்பது போன்ற ஓசைகள்.

6. மிகக்கடுமையான, இழுப்புகளுடன் கூடிய இருமல்; ஒவ்வொரு தடவையும் இருமும்போது உயிர் போய்விடும் போல் தோன்றும்.

7. முகம் உப்பி இருத்தல்.

8. விழுங்க முயற்சிக்கும்போது உணவு தவறுன பாதையில் செல்லுதல் (அதாவது சுவாசக் குழாயினுள் போகும்).

9. வலிப்புகளும் உண்டாகலாம்.

10 இரவிலும் கீழே படுத்தாலும் (இருமலும் வாந்தியும்) அதிகமாகும்.

சுவாசகோச க்ஷயமுள்ளவர்களுக்கு காசநோய் தோன்றும்போது டிரோஸிரா கொடுத்துக் குணம் காணுத சமயங்களில் இது தேவைப்படும். **தூங்கும்போது காசநோய்.** கடுமையான குளிரைத் தாங்கக்கூடிய சக்தியை மெபைடிஸ் வியாதியஸ்தருக்கு அளிப்பதால் குளிருள்ள பருவக் காலங்களில் அவருக்கு அதிகக் குளிர் உணர்ச்சி ஏற்படுவதில்லை.

"உடல் களைத்து இருக்கும்போது இவ்வௌஷதத்தைக் குறைவான ஒரு வீரியத்தில் சாப்பிட்டால் நரம்பு மண்டலத்தை வலுப் படுத்திக் களைப்பைப் போக்குகிறது" என்று **பாரிங்டன்** எழுதியிருக்கிறார்.

மில்லபோலியம்

(MILLEFOLIUM)

கனமான பொருள்களைத் தூக்குதல், அளவு மீறிய உழைப்பு, கீழே, விழுதல் (உயரமான இடத்திலிருந்து) முதலிய காரணங்களால் உண்டாகும் கோளாறுகள். சுளுக்குகள்.

ஏராளமாய் இரத்தம் கொட்டும் காயங்கள், விசேஷமாகக் கீழே விழுந்ததினால் உயரமான இடத்திலிருந்து).

மூக்கிலிருந்து இரத்தப் பெருக்கு. (இவ்வொரு குறியே

இவ்வௌஷதம். தேவைப்படும் என்பதற்கு அடையாளம்). வேறு விசேஷக்குறிகள் எதுவும் இல்லாமல் மூக்கிலிருந்து இரத்தப்பெருக்கு எடுப்பதற்கு மற்றொரு சிறந்த ஔஷதம் **ஆர்னிகா** என்பது என் அபிப்பிராயம்.

தலையிலும் மார்பிலும் அதிக இரத்தம் சேர்ந்து மூக்கிலிருந்து இரத்தம் வெளிப்படுதல்.

பல்வேறு உறுப்புகளிலிருந்து இரத்தப் பெருக்கு. உடலில் உள்ள துவாரங்கள் எல்லாவற்றிலிருந்தும் இரத்தப் பெருக்கு. **மில்லபோலியம்** தேவைப்படும் கேசுகள் எல்லாவற்றிலும் பெருக்கெடுக்கும் இரத்தம் ஏராளமாகவும் வலி இல்லாமலும் நல்ல சிவந்த நிறமாகவும் கட்டிகள் இல்லாமல் தண்ணீர் போலவும் இருக்கும்.

மூலங்களிலிருந்து இரத்தப் பெருக்கு; குடல்களிலிருந்து ஏராளமாய் இரத்தம் வெளியாகுதல்.

சுவாச கோசங்களிலிருந்து இரத்தப் பெருக்கு; தண்ணீர் போல் திரவமாய் உள்ள இரத்தம்; உயரமான இடத்திலிருந்து கீழே விழுந்ததால் அல்லது மூல வியாதி காரணமாகத் தோன்றலாம்.

பிள்ளைப் பெறுதல், கருச் சிதைவு, அல்லது அளவு மீறிய உடல் உழைப்பு ஆகிய காரணங்களால் வலி இல்லாமல் இரத்தப் பெருக்கெடுத்தல்.

"பிள்ளைப் பெற்ற பிறகு இரத்தப் பெருக்கு ஏற்படாமல் பாதுகாக்கக் கூடியது." H. C. அல்லென்.

மூத்திரத்துடன் இரத்தம் கலந்து வெளிப்படும் சமயங்களில் மூத்திரத்தை ஒரு பாத்திரத்தில் பிடித்து வைத்திருந்தால் சிறிது நேரம் கழித்து அதனடியில் இரத்தம் கட்டி போல் தேங்கும்.

மாதவிடாய் காலத்துக்கு மிக முன்னதாகத் தோன்றும்; போக்கு ஏராளமாகவும் பல நாட்களுக்கு நீடித்தும் இருக்கும்.

மில்லபோலியம் தேவைப்படும் இரத்தப் பெருக்குக் கேசுகளில் அனேகமாக வலி இருப்பதில்லையாயினும் மூல வியாதியிலும் மூத்திரத்துடன் இரத்தம் வெளிப்படும் போதும் வலி இருக்கக் கூடும். இரத்தம் வெளியாவதற்கு

முன் மூத்திரக் குழாயில் அழுக்குவது போல் வலி. மூலங்களில் அதிக வலி. மில்லபோலியம் தேவைப்படும் கருப்பை இரத்தப் பெருக்குக் கேசுகளில் வலி இல்லாமலும் இருக்கலாம். அல்லது சுருட்டி இழுக்கும் வலிகள் இருக்கலாம். சுவாச கோசங்கள், கருப்பை, குடல்கள், மூக்கு முதலிய பல உறுப்புகளிலிருந்தும் இரத்தப் பெருக்கு ஏற்பட்டால். அச்சமயத்தில் வலி இல்லாமலும் இரத்தப் பெருக்கைக் கண்டு வியாதியஸ்தர் கவலை கொள்ளாமல் இருத்தல் ஆகிய குறிகள் காணப்படும்போது அக்கேசுகளுக்கு ஏற்றது மில்ல போலியம் என்பதில் சந்தேகத்துக்கு இடமே இல்லை. (கவலை இருந்தால் அகோனைட்).

ஏராளமான, கறுப்பான, சாக்கலேட்டு நிறமும் இரத்தம் கலந்தும் உள்ள மலம் வெளிப்படும் கடுமையான வயிற்றுப் போக்கு.

கருவுற்றிருக்கும்போது பெண்களின் பிறப்பு உறுப்புகளிலுள்ள அசுத்த இரத்தக் குழாய்கள் வீங்கிப் புடைத்து வலியுடன் இருத்தல்.

மாத விடாய் போன்ற கழிவுப் பொருள்கள் வெளியாவது தடைப்பட்டதால் ஏற்படும் இழுப்பு வலிப்புகள்.

அடி வயிற்றில் சுருட்டி இழுக்கும் வலிகளுடன் மாத விடாய் அடக்கப்படுதல்.

நல்ல சிவந்த நிறமுள்ள இரத்தம் வெளிப்படும் இருமல்.

தினமும் மாலை 4 மணிக்கு இரத்தம் வெளிப்படும் இருமல் (லீகபோடியம்).

மோஸ்சஸ்

(MOSCHUS)

அல்ப காரணங்களாலும் மயக்கமாய் விடுதல் – சில்லிப்பு உணர்ச்சி—அழுக்கும் உணர்ச்சி.

மன உணர்ச்சிகள் சிறிது அதிகமானாலும் வியாதியஸ்தர் மயக்கமடைவார் (இக்னேஷியா); கடுமையான கோபம் கொள்வார்; பட படப்பாகப் பேசுவார்; மயக்க

மடையும் வரை ஏசிக்கொண்டே இருப்பார். மாதவிடாய்க் காலத்தில் மயக்க மடைவார்; போக்கு வழக்கத்தைவிட மிக முன்னதாகத் தோன்றும்; ஏராளமாய் இருக்கும். இருதய வியாதிகளால் மயக்க மடைதல்.

வியாதியஸ்தருக்குக் குளிர் காற்று சிறிதுகூட ஒத்துக் கொள்ளாது; குளிர்காற்று மேலே பட்டால் உடலை நடுக்கிக் கொள்வார்.

நரம்பு சம்பந்தமுள்ள கோளாறுகளிலும் விட்டு விட்டுத் தோன்றும் குணமுள்ள கோளாறுகளிலும் வியாதியஸ்தருக்கு அதிகக் குளிர் உணர்ச்சி தோன்றினால் இவ் வெளஷதத்தை நினைக்க வேண்டும்.

காக்கை வலிப்புகளில் வியாதியஸ்தருக்கு அதிகக் குளிர் இருப்பதுபோல் உடல் நடுக்கம் அல்லது சில்லிப்பு காணப்படும்.

சருமத்தில் சில்லிப்பு உணர்ச்சி.

உடலின் வெளிப்பக்கத்தில் மார்பு, பாதங்கள் போன்ற தனி உறுப்புகளில் சில்லிப்பு.

உடல் உறுப்புகளின்மேல் குளிர் காற்று வீசும் உணர்ச்சி.

உடலின் வெளிப்புறத்தில் சூட்டுடன் உட்புறத்தில் சில்லிப்பு.

மார்பு, குரல்வளை போன்ற தனி உறுப்புகளில் வலிப்பு.

பொதுவான வலிப்புகள்.

சங்காகுணக் குறிகள்: மயக்கம், சில்லிப்பு; சிறிதுகூட கவனமில்லாமை; கோப குணம்; ஒரு சமயம் கதறுவார்; அடுத்த சமயம் அடக்க முடியாமல் நகைப்பார். "நரம்பு சம்பந்தமான மூச்சுத்திணறல் அல்லது கவலைதரும் படபடப்பு திடீரென்று ஏற்படும்; ஆழ்ந்து சுவாசிக்க விரும்புவார்."

மாதவிடாய்க்கு முன் வலிகள் தோன்றி போக்கு வெளிப்பட ஆரம்பித்தவுடன் சௌகரியமாகுதல் (லாச்சஸிஸ்).

"அமுக்குவது போன்ற உணர்ச்சியுடன் வலி அல்லது மிகக்கடுமையாக அமுக்கும் உணர்ச்சியுடன் வலி உள்ள போது இது உபயோகப்படும்."

மூரெக்ஸ் பர்பூரியா
(MUREX PURPUREA)

ஏக்கம் பிடித்த குணமுள்ளவர்கள். பெண்களுக்கு மாதவிடாய் மறையும் காலம்.

மன உற்சாகம் மிகவும் குறைவாய் இருத்தல்.

மாதவிடாய் ஒழுங்கு தவறி, வழக்கத்தைவிட மிக முன்னதாகத் தோன்றி ஏராளமான போக்குடன் இருக்கும்; போக்கு ஏராளமாய் இருக்கும்போது கருப்பையில் புண்ணுள்ள அல்லது காய்ந்தும் இறுக்கக் கட்டியுமுள்ள உணர்ச்சி காணப்படும். இப்புண்ணுள்ள உணர்ச்சியைப் பற்றி லிலியந்தால் பின்வருமாறு எழுதியுள்ளார்: புண்ணுள் இருக்கும் இடத்தில் ஏதோ ஒரு பொருளை வைத்து அழுத்திக் கொண்டிருப்பது போல் அடி வயிற்றில் கடுமையான வலி. வயிற்றில் ஒன்றுமே இல்லாத, பள்ளம் பறித்து விட்டது போன்ற உணர்ச்சி இடை விடாமல் காணப்படும். (ஸேபியா).

உள்ளே உள்ள உறுப்புகள் வெளியே நழுவி வந்து விடும்போல் கீழ் இழுக்கும் உணர்ச்சியுடன் கருப்பை நழுவுதல்; இந்த உணர்ச்சியைக் குறைக்க வியாதியஸ்தர் தன் கால்களை ஒன்றின்மீது ஒன்றுகக் குறுக்கில் வைத்து அமுக்கிக் கொள்வார்.

சிற்றின்பத்தில் ஆசையும் தூண்டுதலும் மிகக்கடுமையாய் இருப்பதால் (காமவெறி ஏற்படும்) பகுத்தறிவைத் தளரச் செய்யும் (லிலியம் டிக்ரினம்); பிறப்பு உறுப்புகளை மிக மெதுவாகத் தொட்டாலும் இவ்வுணர்ச்சி மீண்டும் தோன்றும்.

தன் கருப்பையைப் பற்றி எந்நேரமும் சிந்தனை செய்தல்.

மூத்திரம் அளவு கடந்து உற்பத்தியாகும்; இரவில் அடிக்கடி மூத்திரம் கழித்தல்; தூண்டுதல் மிக அவசரமாக ஏற்படுவதால் திடுக்கிட்டு எழுந்திருப்பார்; மூத்திரம் நிறம் வெளுத்தும் தெளிவாகவும் இருக்கும். அகோரமான பசியும் சாப்பிட்ட பிறகும் வயிறு காலியாக இருக்கும்

உணர்ச்சியும், கால்களில் அளவு கடந்த தளர்ச்சியும் அளவு மீறிய சோர்வும். இக்குறிகளை ஆதாரமாய் வைத்து மது மேகம் எனப்படும் நீரிழிவு வியாதியில் மூரெக்ஸ் உப யோகப்படுத்தப்பட்டிருக்கிறது.

கடுமையான சிற்றின்ப ஆசையுடன் சங்கா தோஷம்.

மாலையில் சுவாசிக்கும்போது மார்பில் கற கறவென்ற ஓசை.

நாஜா
(NAJA)

நமது தேசத்திலுள்ள படமெடுக்கும் பாம்பாகிய நாகப் பாம்பு தென் அமெரிக்காவிலுள்ள சுருகுகு (Surukuku) எனப்படும் பாம்பை விட அதிக விஷமுள்ளதாகவே இருக்குமென்று நான் நினைக்கிறேன். இது வரை இவ் விஷம் மிகக் குறைந்த வீரியங்களில் ஔஷதப் பரீட்சைக்கு உட் படுத்தப் பட்டது. ஆனால் அதனுடைய விசேஷக் குறிகளை மேலும் நன்றாய் அறிய 30 வீரியத்தில் மறுபடியும் ஔஷதப் பரீட்சைக்கு உட்படுத்தப் பட வேண்டும். தற்சமயத்தில் இவ் வௌஷதத்தைப் பற்றிய விவரம் நமது மெட்டீரியா மெடிகாவில் மிகக் குறைவாகவே இருக்கிறது. விஜ்ஞதமான, விசேஷத் தன்மை வாய்ந்த குறிகள் சில காணப்படுகின்றன என்றாலும் சிகிச்சை செய்யும்போது அவை உபயோகமாய் இல்லை யென்றே கூறலாம். இந்தியர்களாகிய நாம்தான் இவ்வௌஷதத்தை ஔஷதப் பரீட்சை செய்யும் காரியத்தை ஏற்று நடத்த வேண்டும். இவ்வௌஷதத்தின் குறிகள் யாவும் தெளிவாய் வெளியாகுமானால் நாகப் பாம்பு வாழும் இந் நாட்டில் காணப்படும் பலவகைக் கடுமையான வியாதிக் குறிகளை அவை ஒத்திருக்கக் கூடும்.

"உடல் சில்லிட்டும் க்ஷீணித்தும் இருத்தல்," நாடித் துடிப்பு கைகளுக்குப் புலப்படாமல் இருப்பதும் சுவாசக் கஷ்டமும் (காலராவில் இருப்பது போல்). நாடி மெதுவாகவும் ஒழுங்கில்லாமலும் துடித்தல். அடிக்கடி தொண்டையை அடைத்துக் கொள்வது போல் தோன்றுதல்.

முகம் பச்சை நிறமாய் மாறும். இருதயத்தில் குத்து வலிகள். வலியுடன் நிலை கொள்ளாத் தன்மை அளவு கடந்திருக்கும். "தன் உடம்பில் பயங்கரமான சூடு" இருக்கும் உணர்ச்சி. எல்லா உறுப்புகளும் குறிப்பாகச் சிறைப் பைகளும் இருதயமும் ஒன்றுகச் சேர்த்து இழுக்கப்படும் உணர்ச்சி. மயக்க உணர்ச்சி. அடிக்கடி மயங்கி விழுதல். முகம் வெளுத்துக் களை இழந்து போகும். தொடு உணர்ச்சி அழிதல். குறிப்பாக வலது பாகத்தில், கீழ்ப் பக்கமாக, தசைகளில் நடுக்கம். ஆழ்ந்த தூக்கம், குறட்டை யுடன் சுவாசிப்பதும் இருக்கலாம். கைகளிலும் பாதங்களி லும் நிறைந்த உணர்ச்சி. சட்டையின் கழுத்துப் பட்டை இறுகி இருப்பதைத் தாங்க முடியாது. வியாதியஸ்தர் மூச்சுத் திணறலுடன் விழித்துக் கொள்வார். உடலின் வெளிப்புறம் நீல நிறமாகுதல், உள்ளங் கைகளில் வியர்வை. உணர்ச்சி அறியும் சக்தியும் பேச்சும் அழிதல். இருதயப் படபடப்பால் பேச முடியாமல் போகுதல். இரத் தம் உடலின் மேல் பக்கமாகப் பாயும். கை கால்களில் சில்லிப்பும் தலையில் சூடும், எல்லாக் கோளாறுகளும் இரு தயத்தைச் சுற்றியே தங்கும் குணம் உள்ளவையாய் இருத் தல். தற்கொலை செய்து கொள்ளத் தூண்டுதல். வலது பக்க மாகப் படுத்தால் வலியும் மூச்சுத் திணறலும் பெரும் அள வுக்குக் குறைந்திருக்கும். தூங்கி எழுந்த பிறகு உபாதி கள் கூடுதலாகுதல் (லாச்சஸிஸ்). இடது பக்கமாய்ப் படுத் தால் உபாதிகள் கூடுதலாகுதல். உபாதிகள் இடது பக் கத்திலிருந்து வலது பக்கம் போகும் என்று கெண்ட் குறிப் பிடுகிறார். ஆனல் க்ளார்க்கோ லாச்சஸிஸில் காணப்படும் விசேஷக் குறியாகிய "உபாதிகள் இடமிருந்து வலம் செல் லும்" என்பது நாஜாவின் ஔஷதப் பரீட்சையில் வெளிப் படவில்லை என்று கூறுகிறார்.

காற்றுக் குழாயிலும் குரல் வளையிலும் அதிகப் புண் உள்ள உணர்ச்சி.

அடிக்கடி கடுமையான மார்ச்சளி தோன்றும் குணம்.

"இடது சிறைப் பையிலிருந்து இருதயம் வரை வலி."

"மூச்சுத் திணறவைக்கும் அடைப்பு; தொண்டையை இறுகப் பிடித்துக் கொள்வார்.

ஒவ்வொரு நாளும் காலையில் கண் விழித்தவுடன் தலை வலி, வேலை செய்ய ஆரம்பித்தால் மறைந்து விடும்.

காச வியாதி, விசேஷமாக இருதயக் கோளாறுகளுடன் கூடிய காச வியாதி; கீழே படுத்தால் மூச்சுத் திணறல் கூடுதலாகும்; முதுகை வளைக்காமல் நேராய் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டாலும் சுவாச கோசங்களை விரியச்செய்தாலும் மூச்சுத் திணறல் அதிகரிக்கும்.

வறண்ட, தொந்திரவைத் தரக்கூடிய இருமலுடன் இருதயத் தசை மூடிகளைப் பற்றிய கோளாறுகள். இருதயப் படபடப்பால் பேச முடியாமை. இருதயப் பாகத்தில் கடுமையான குத்து வலிகள். டிப்தீரியாவுக்குப் பிறகு இருதயத்தில் பாரிச வாயு தோன்றும் போல் இருத்தல்.

"நாடியின் வேகம் ஒழுங்கு இல்லாமல் அது ஏற்படும் காலம் மட்டும் ஒழுங்காய் இருக்கும்."

பொதுக் கூட்டத்தில் பேசிய பிறகு தொண்டையில் அடைப்பு உண்டாகிப் பேச முடியாமல் போகுதல்.

இருமும்போது இடது சிறைப்பையில் வலி.

நக்ஸ் மாஸ்சாடா

(NUX MOSCHATA)

மந்த உணர்ச்சியை உண்டாக்கும் அல்லது அதனுடன் சேர்ந்து காணப்படும் எல்லா வியாதிகளிலும் நக்ஸ் மாஸ்சாடாவை நினைத்துக் கொள்ளுங்கள். "இத்துடன் சில்லிப்பு உணர்ச்சியும் தாகமில்லாமையும் சேர்ந்திருந்தால் நக்ஸ் மாஸ்சாடா தான் கொடுக்கப் படவேண்டும்" என்று க்ளார்க் எழுதுகிறார்.

கடுமையான மந்த குணம். அதிக வறட்சி, சில்லிப்பு உணர்ச்சி, மயக்க உணர்ச்சி.

கோளாறுகள் தூக்கத்தை உண்டாக்கும். வியாதியஸ்தர் தூக்கக் கலக்கமாகவும் மயக்கமாகவும் இருப்பார். எல்லா வியாதிகளுடனும் விசேஷமாக வலிகளுடன் அதிகத் தூக்கக் கலக்கம்.

முறைச் சுரத்தில் சூடுள்ள நிலைமையில் தூக்கக் கலக்கம் (அபிஸ், ஜெல்ஸிமியம், ஓபியம்).

வறட்சி: காய்ந்த உணர்ச்சி மட்டுமோ அல்லது உண்மையான வறட்சியோ இருக்கும். வாயும் நாக்கும் மிகவும் காய்ந்து இருக்கும், ஆனால் தாகம் இருப்பதில்லை (சில சமயங்களில் தாகம் இருக்கலாம்); நாக்கு மிகவும் காய்ந்து வாயின் மேல் அண்ணத்துடன் ஒட்டிக் கொள்ளும்; தொண்டை காய்ந்து விரைப்பாகும்; ஆனால் தாகம் இருப்பதில்லை.

கண்கள் காய்ந்திருத்தல்; அதனால் இமைகளால் மூட முடியாமை.

உள் உறுப்புகளில் காய்ந்திருக்கும் உணர்ச்சி.

சருமம் காய்ந்திருக்கும்; மிக அபூர்வமாய் வியர்வை உண்டாகும்.

நாக்கு மிகவும் காய்ந்திருக்கும் உணர்ச்சி; ஆனால் தாகம் இருக்காது; கண்களால் பார்த்தாலும் காய்ந்திருக்காது.

"தூங்கும்போது வாயும் நாக்கும் காய்ந்து போவதைப் பற்றி மிகவும் கவலைப் படுவார்; கண் விழித்தவுடன் தவறுமல் நாக்கு காய்ந்தே இருக்கும்; ஆனால் தாகம் இருக்காது."

உமிழ் நீர் கெட்டியாய்ப் பருத்திப் பஞ்சுபோல் இருப்பதாகத் தோன்றும்.

வாயில் ஈரப்பசை இருந்த போதிலும் காய்ந்திருப்பது போல் தோன்றும்.

வியாதியஸ்தருக்குக் குளிரும் உணர்ச்சியும், குளிர், ஈரக் கசிவுள்ள பருவக் காலங்கள் ஒத்துக் கொள்ளாமையும் இருக்கும். ஹைட்ரோஜெனாய்டு எனப்படும் உடல் வாகு உள்ளவர்கள்.

எதிர் காற்றில் நடந்து சென்றால் திடீரென்று தொண்டை கட்டி விடுதல்.

மயக்க உணர்ச்சி; மயங்கியும் போவார்; அடிக்கடி மயக்கம் உண்டாகும் குணமும் இருக்கும்.

மிக எளிதிலே மயக்கமாய் விடும் குணம்; அதாவது

இரத்தத்தைப் பார்த்தால்; வெகுநேரம் நிற்பதால் (உதாரணமாக பயந்த சுபாவமுள்ள பெண்களுக்குப் புடவை அல்லது உடை கட்டிக் கொள்வதற்குப் பொருத்தமாய் இருக்கிறதா என்பதைப் பார்ப்பதற்காக நிற்கும்போது).

குறைந்த அளவு வலியிலும் மயக்கமாகும் குணம்.

"மயக்கமும் இருதயப் படபடப்பும் ஏற்பட்டுப் பிறகு தூக்கமும் வருதல்."

மலம் கழிக்கும்போது மயக்க உணர்ச்சி அல்லது மயக்கமாய் விடுதல்.

கீழே வைத்துப் படுத்த உடல் பாகம் புண்ணுய்த் தோன்றுதல். மெத்தென்ற படுக்கையில் படுத்திருந்தாலும் கீழே வைத்துப் படுத்த உடல் பாகத்தில் வலி உண்டாகுதல்.

ஈரக்கசிவுள்ள, குளிர் உள்ள பருவக் காலங்களில் கை கால்களில் வலி.

காலை உணவுக்குப் பிறகு தலைவலி. "சிறிதளவு அதிகமாக உணவு உட்கொண்டதால் உண்டாகும் தலைவலி."

சாப்பிடும் போது அல்லது சாப்பிட்ட மறுகணமே வயிற்றில் வேதனையும் வலியும்.

உணவு உட்கொண்ட பிறகு ஒவ்வொரு தடவையும் அடிவயிறு ஏராளமாய்ப் பருத்தல்; எல்லா உணவும் வாயுவாக மாறும்; குமட்டல், அடிவயிற்றில் பலமான இரைச்சல்.

வாயு உப்பிசத்துடன் வயிற்று வலி.

உடல் முழுவதும் சிறிய சிறிய திட்டுகளில் மட்டும் வலி; சிறிது நேரமே நீடித்திருக்கும்; ஆனல் விரைவில் மீண்டும் தோன்றும்.

மாதவிடாயின் போது முதுகில் உட்புறத்திலிருந்து வெளிப்பக்கமாக அமுக்கும் உணர்ச்சி கடுமையாய் இருத்தல்; அடி வயிற்றில் கனத்த உணர்ச்சி. கீழ் முதுகிலும் முழங்கால்களிலும் அசதி.

"மாதவிடாய்க் காலத்தில் ஒவ்வொரு தடவையும் வாய், தொண்டை, நாக்கு ஆகியவை தவருமல் காய்ந்து போகும்; விசேஷமாகத் தூங்கும் போது."

வண்டியில் ஏறிச்செல்லும் போது முதுகு வலி.

களைப்பு; மிகச் சிறிய வேலை செய்தாலும் கீழே படுத்துக் கொள்ள நேரும்.

ஞாபகச் சக்தி பலவீனமாகுதல் அல்லது அழிதல். தன் பழய வாழ்க்கையைப் பற்றிய ஞாபகம் சிறிதுகூட இல்லாமை.

கவனம் இல்லாமை. யோசனை செய்ய முடியாது. படிக்கும் போதும் எழுதும் போதும் பேசும் போதும் எண்ணங்கள் மறைந்து போகுதல்.

வார்த்தைகளைச் சரியானபடி உபயோகிக்க முடியாமை; தகுந்த வார்த்தைகள் நினைவுக்கு வராததால் பேசி வந்ததை நடுவில் நிறுத்தி விட்டு முற்றிலும் புதிதான வார்த்தைகளை உபயோகித்து மறுபடியும் பேச ஆரம்பிப்பார்.

வெளிச்சம், தொடுவது ஆகியவைகளால் உணர்ச்சி அதிகமாகுதல்.

சற்றுத் தொலைவில் பிறர் தணிந்த குரலில் பேசுவது அவருக்குக் கேட்கும்; அதாவது சாதாரண காலங்களில் அவ்விதம் பேசுவது காது கேட்காது.

வாசனையறியும் உணர்ச்சியும் அதிகமாகுதல்.

ஓஸிமம் கானம்

(OCIMUM CANUM)

பதினைந்து நிமிஷங்களுக்கு ஒரு முறை கடுமையான வாந்தியுடன் மூத்திரக் காய் சம்பந்தமான வயிற்று வலி (அனேகமாக வலது பக்கம் தாக்கப்பட்டிருக்கும்); உடலை முறித்துக் கொள்வார்; கதறுவார், முனகுவார்; வலி வந்து போன பிறகு சிவந்தும் இரத்தம் கலந்தும் மூத்திரம் வெளியாகும்; அதைப் பிடித்து வைத்தால் பாத்திரத்தின் அடியில் சிவந்த செங்கல் தூள்போல் வண்டல் தங்கும்; கஸ்தூரியைப்போல் சகிக்க முடியாத ஒருவித வாசனையுடன் கெட்டியான, சீழ்க் கலந்த மூத்திரம் வெளிப்படுதல்.

வெண்மை நிறமுள்ள, முட்டையின் வெள்ளைப் பொருள் போன்ற வண்டல் தங்கும் குழம்பிய மூத்திரம்.

மூத்திரக்காய்களில் சுருட்டிப் பிடிக்கும் வலிகள்.

மேல் மூத்திரக் குழாய்களில் புண்ணுள்ள வலி.

வல்து மூத்திரக்காயின் மேல் பக்கத்தில் வலி; பிறப்பு உறுப்புகளுக்கு மேலே மயிருள்ள இடம் வரை பரவி இருக்கும்; இத்துடன் பித்தமும் புளிப்பும் உள்ள வாந்தி அடிக்கடி ஏற்படும்; வேதனையினால் துள்ளிக் குதிப்பார்; அதனால் சௌகரியம் ஏற்படாது. இவை சிகிச்சை அனுபவத்தில் காணப்பட்ட குறிகள்.

யோனி வெளியே நழுவி வருதல்.

ஸ்தனக்காம்புகளில் அதிக வலி; அவைகளை மெதுவாகத் தொட்டாலும் பலமாய்க் கதறுவார்.

பித்த சம்பந்தமுள்ள ஏறி இறங்கும் சுரம்.

வீரியம்: மூத்திரக்காய் சம்பந்தமான பல கேசுகளிலும் மற்ற வியாதிகளிலும் 3 x வீரியத்தினால் குணம் தோன்றி இருக்கிறது. இருநூறு வீரியமும் உபயோகிக்கப் பட்டிருக்கிறது.

ஓலியாண்டர்

(OLEANDER)

அபான வாயு கொஞ்சம் கூட இல்லாமல் மெல்லிய மலம் வியாதியஸ்தருக்குத் தெரியாமல் வெளியாகுதல் (விசேஷமாக நாட்பட்ட வயிற்றுப் போக்கில்).

முதல் நாள் உண்ணப்பட்ட உணவு சீரணமாகாமல் மலத்தில் காணப்படும். இவ்விதமான (மெல்லிய) மலமும் அபான வாயு சிறிதும் இல்லாமல் வெளிப்படும்.

"மலம் அனேகமாகத்தானாகவே வெளிப்படும்; சீரணமாகாத உணவுப் பொருள்களுடன் இருக்கும்; வியாதியஸ்தர் அபான வாயுவை வெளியேற்றுவதாகவே நினைப்பார்."

உண்ட உணவு சிறிது கூடச் சீரணமாகாமல் கழிக்கப் படுதல்.

குழந்தைகள் அபான வாயுவை வெளியேற்றும்போது ஒவ்வொரு தடவையும் மலம் கழித்தல்.

அழுகிய நாற்றம் வீசும் அபான வாயு ஏராளமாய் வெளிப்படுவதுடன் அடி வயிற்றில் உறுமும், களகள வென்றிருக்கும் ஓசை.

தலையில் பேன் இருப்பது போல் கடுமையான கடிக்கும் அறிக்கும் உணர்ச்சி; சொறிந்த பிறகு புண்ணாகி விட்டது போல் எரிச்சல்.

பார்வை ஒரு கணம் மறைந்து போகுதல் (**ஸைக்ளமன், காலி பைக், பாஸ்பரஸ், ஸேபியா**).

பக்கவாட்டில் திரும்பிப் பார்த்தாலும் கண்களைக் கோணலாகத் திருப்பினாலும் தலைவலி குறைவாய் இருத்தல்.

தலையின் பின்பக்கத்திலும் காதுகளிலும் சருமக் கோளாறுகள் உண்டாகி ஒட்டும் குணமுள்ள நீர் கசிய ஆரம்பித்து பேன் வளர இடம் அளிக்கும் (**கிராபைடிஸ், மெஸெரியம், பெட்ரோலியம்**).

கைகளிலும் கால்களிலும் மத மதப்பு.

ஞாபகச்சக்தி பலவீனமாய் இருத்தல்: விஷயங்களைச் சீக்கிரத்தில் புரிந்து கொள்ள முடியாமை. சிறிதுகூட கவனம் இல்லாமல் இருத்தல்.

அடிக்கடி அல்பப் பசி; அவசரமாகச் சாப்பிடுவார்; உணவில் ஆசை இருக்காது. வயிற்றுப் போக்குடன் அகோரமான பசி.

பாரிசவாதக் குறிகள்: விஷயங்களைச் சீக்கிரத்தில் புரிந்து கொள்ள முடியாமை. மலமும் மூத்திரமும் தாமாகவே வெளிப்படுதல். பேசும் சக்தி அழிதல். கண்பார்வை ஒரு கணம் மறைந்து போகும். சருமத்தில் மதமதப்பு. உடல் முழுவதும் உணர்ச்சி இல்லாமல் இருத்தல். நிற்கும் போது முழங்கால்களில் நடுக்கம்; எழுதும்போது கைகளில் நடுக்கம். நடக்கவும் முடியாத அளவுக்கு அதிகமான பலவீனம். கை கால்களில் பாரிசவாத சம்பந்தமுள்ள விரைப்பும் வலி இல்லாத பாரிசவாதமும். தாடைத் தசைகளில் விரைப்பு. மலத்தில் சீரணமாகாத உணவு வெளிப்படுதல் (சீரண வேலைகளைப் பற்றிய பாரிசவாதம்). ஒலியாண்டரின் பாரிசவாதக் குறிகளில் மதமதப்பு, நடுக்கம், வலி இல்லாத தன்மை ஆகியவை ஓரளவு காணப்படும்.

"பாரிசவாதம் ஆரம்பிப்பதற்குப் பல நாட்கள் முன்னதாகத் தலைச் சுற்றல்."

கால்களில் இயற்கையாய் இருக்க வேண்டிய சூடு இல்லாமை.

கொஞ்சங் கொஞ்சமாக உடல் தசைகள் முழுவதும் தசை இழுப்புகள். கால்கள், பாதங்கள், கைகள் ஆகிய இடங்களிலுள்ள தசைகளில் இழுப்பு.

குறிப்புகள்:—பாரிசவாயுவைத் தடுக்கும், குணம் செய்யும் மிக முக்கியமான ஔஷதங்களில் இதுவும் ஒன்று.

ஆக்ஸாலிக் ஆஸிட்

(OXALIC ACID)

இடது பக்கமே அதிகம் தாக்கப்படுதல் (இது மிகப் பெரிய விசேஷக் குறி); முக்கியமாக இடது சுவாசகோசத்தைப் பற்றி இருக்கும். வலிகளைப் பற்றி நினைத்தால் அவை திரும்ப வந்து விடும். வார்த்தைகளால் சொல்ல முடியாத அளவுக்குக் கொடுமையான வலிகள். சிறு சிறு இடங்களில் வலி; சில்லிப்பு, மதமதப்பு, நீல நிறமடைதல் (நகங்கள், கால்கள் முதலியவை); சருமத்தில் நீல நிறப்புள்ளிகள். குரல் மாறியிருத்தல்; மிகவும் தணிவான குரலில் பேசுதல். சுவாசிக்கக் கஷ்டம். சில்லிப்பான, பிசு பிசுவென்று ஒட்டும் குணமுள்ள வியர்வை.

இடது பக்க வாதரோகம்.

இடது சுவாசகோசத்தில் வலி.

இடது சுவாசகோசத்தில் கூர்மையான கத்தியால் கிழிப்பது போல் வலி திடீரென்று தோன்றி ஒரு சில கணங்களுக்கு மூச்சை அடைத்து விடும்.

இருதயத்தில் குத்து வலிகள்; பின்பக்க மிருந்து முன் பக்கமாகவோ அல்லது மேலிருந்து கீழ்ப்புறமாகவோ தாவும்.

மூத்திரம் கழிப்பதைப் பற்றி நினைத்தவுடன் மூத்திரம் கழிக்க அவசரமான தூண்டுதல் உண்டாகும்.

தண்ணீரைப் பற்றி நினைத்தால் எல்லாக் கோளாறுகளும் கூடுதலாகும்.

கடுமையான இழுக்கும் வலிகள்; சிறு சிறு இடங்களில் மட்டும் காணப்படும்; சில கணங்களே நீடிக்கும்; அசைவினால் அதிகமாகும்; அவைகளைப் பற்றி நினைக்கும் போதும் அதிகரிக்கும்.

உடம்பைத் தாங்க முடியாது போல் முதுகு பலவீனமாய் இருத்தல் (பாரிசவாயு).

அடிக்கடி மூச்சுத்திணறல் ஏற்படுதல்.

இந்திரிய நரம்புகளில் பயங்கரமான நரம்பு வலிகள்.

முதுகில் அல்லது கீழ் முதுகில் பயங்கரமான வலிகள், அவை படிப்படியாகக் கீழே தொடைகளுக்கு இறங்கும்; சிறிதளவு அசைவினாலும் வலி மிகக்கொடுமையாக மாறுவதால் வியாதியஸ்தர் பலமாகக் கதறுவார். பொறுக்க முடியாத வலி காரணமாக மூத்திரம் கழிக்க உணர்ச்சி ஏற்பட்டாலும் அடக்கிக் கொண்டிருப்பார்.

சில மணி நேரங்களுக்குப் பிறகு அல்லது ஒரு நாள் விட்டு மறு நாள் குறிகள் விட்டு விட்டுத் தோன்றும்.

மூத்திரம் கழிக்கும்போது மானிக் கொண்டையில் வலி.

இடது சுவாசகோசத்தில் கூர்மையான கிழிக்கும் வலி இருந்தால் "வியாதியின் பெயர் சுவாசகோச வேக்காடோ, சுவாசகோச உறை வேக்காடோ, சுவாசகோச க்ஷயமோ அல்லது மற்ற எதுவாய் இருந்தாலும்" சந்தேக மில்லாமல் ஆக்ஸாலிக் ஆஸிட் உபயோகமாகுமென்று க்ளார்க் கூறுகிறார்.

குறிப்பு:—இருதயம், இடது சுவாசகோசம் ஆகியவைகளைப் பற்றி மேலே குறிக்கப்பட்டுள்ள இவ்வௌஷதத்தின் குறிகளைக் கவனிக்கும் போது மார்வலி என்னும் கோளாறுக்கு இது மிகவும் ஏற்றது என்பது விளங்கும்; ஆனால் பல சமயங்களிலும் இவ்வௌஷதம் கவனிக்கப்படாமல் போகிறது.

பாரா ப்ரவா

(PAREIRA BRAVA)

மூத்திரத்தில் மண் அல்லது கல், மூத்திரக்காய் பற்றிய வயிற்று வலி, மேகவெட்டை, இன்னும் மூத்திரப்பை, மூத்

திர உறுப்புகள் பற்றிய வியாதிகளில் இது பல சமயங் களிலும் தேவைப்படுகிறது. மிக முக்கியமான குறிகள் கீழே எழுதப்பட்டுள்ளன.

1. அடிக்கடி கடுமையான வலியும் சொட்டுச் சொட் டாக மூத்திரம் கழிக்கப்படுதல்; பலமாகக் கதறுவார்; முழங்கால்களையும் முழங்கைகளையும் தரையில் ஊன்றிக் கொண்டு இருந்தால் தான் மூத்திரம் வெளிப்படும். இத்து டன் தலையைத் தரையில் அழுத்துவார் (பத்து அல்லது 20 நிமிஷங்களுக்கு); வியர்வை பெருக ஆரம்பிக்கும்; முடிவில் மூத்திரம் சொட்டுச் சொட்டாக விட்டு விட்டு வெளி யாகும்.

2. மூத்திரம் கழிக்க முக்கும் போது மானிக் கொண்டை யில் கொடுமையான வலி.

3. "மூத்திரம் கழிக்கும் போது வலி கீழே தொடை களுக்கும் பாதங்களுக்கும் கூடப் பரவும்."

4. மூத்திரம் கழிக்கக் கஷ்டமாய்ப் பலமாக முக்க வேண்டியிருக்கும்; சொட்டுச் சொட்டாகவே வெளியாகும்: ஆனல் ஏராளமாய் வெளியாகும் போல் தோன்றும்.

5. மூத்திரக்காய்ப் பாகங்களில் காயம் பட்ட உணர்ச்சி.

அவ்வளவு முக்கியம் இல்லாத மற்ற குறிகள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

மூத்திரக் குழாய் முழுவதும் கடுமையான அறிப்பு; மூத்திரம் கழிக்கும் போது நெருப்புச் சுடுவது போல் தோன்றுதல்.

சுக்கிலச் சுரப்பி பருத்து மூத்திரம் வெளியாகாமல் அடக்கப் படுதல்; வலிகள் கீழே தொடைகளுக்குப் பரவி இருக்கும்.

மூத்திரக் குழாய் வேக்காடு; அதன் மிருதுத் தன்மை அழிந்து போகும்.

மூத்திரம் அம்மோனியாவைப் போல் கடுமையான நெடியுடன் இருக்கும்; ஒட்டும் குணமுள்ள, கெட்டியான, வெள்ளைச் சளிப்பொருள் ஏராளமாய் இருக்கும்.

பெட்ரோஸெலினம்

(PETROSELINUM)

மேகவெட்டையில்: மூத்திரம் கழிக்கத் திடீரென்று அடக்க முடியாத தூண்டுதல் ஏற்படும்; மானியின் அடிப் பாகத்தில் வேக்காடு மிக அதிகமாய் இருக்கும்; மூத்திரக் குழாயின் அடித்தளத்தில் கடுமையாகக் கடிக்கும் அறிக்கும் உணர்ச்சி; கழிவு பால் போல் அல்லது மஞ்சள் நிறமுள்ள சளிப்பொருளைப் போல் இருக்கும்; மூத்திரத் துவாரம் சளியினால் ஒட்டிக் கொண்டிருக்கும்.

மூத்திரம் கழிக்கத் திடீரென்று உண்டாகும் தூண்டு தல் ஏற்பட்டவுடன் மூத்திரத்தைக் கழிக்கா விட்டால் கடுமையான வலி உண்டாகும்; அத்துடன் மூத்திரத்தை அடக்கவும் முடியாது.

குழந்தைக்குத் திடீரென்று மூத்திரம் கழிக்கத் தூண்டு தல் உண்டாகும்; உடனே கழிக்கா விட்டால் அது வலி யினால் துள்ளிக் குதிக்கும்.

மூத்திரம் கழிக்கும் போது ஏற்படும் மிகக் கடுமை யான வலியினால் வியாதியஸ்தர் வேதனையுடன் கூத்தாடு வார்.

மூத்திரக் குழாயின் அடித்தளத்தில் அடிக்கடி காமத் தைக் கிளப்பும் குறு குறுத்த உணர்ச்சி.

தாகமும் பசியும் இருக்கும்; ஆனால் குடிக்கவோ, சாப் பிடவோ உட்கார்ந்தவுடன் தாகமும் பசியும் மறைந்து விடும்.

அடிபட்ட பிறகு அல்லது மூத்திரக் குழாயின் நாட் பட்ட வேக்காடு ஆகியவைகளுடன் முறைச் சுரம்; வலியு டன் சொட்டுச் சொட்டாக மூத்திரம் வெளியாவதும் இருக்கும்.

பைஸோஸ்டிக்மா

(PHYSOSTIGMA)

வழக்கத்துக்கு விரோதமாக மனதில் அதிகச் சுறு சுறுப்பு. சிந்தனை செய்வதை நிறுத்த முடியாது. யோசிப்பது சிரமமாய் இருத்தல்; மனதை ஓரிடத்தில் செலுத்த முடி யாது.

பார்வை மங்கி தெளிவாகத் தெரியாது; மூடுபனி, புகை ஆகியவைகளால் மறைக்கப் பட்டது போல் இருத் தல்.

பார்வை குறுகுதல்; புத்தகத்தை கண்களுக்கு மிகவும் அருகே அதாவது நான்கு அங்குல இடைவெளி வரும்படி வைத்துக் கொண்டு படிப்பார்.

கண்களை உபயோகித்து வேலை செய்த பிறகு வலி; இமைகளும் கண் தசைகளும் துடித்தல்; கண்ணீர்ப்பெருக் குடன் கண்களில் பலவீனம்; கண்களில் முறுக்குவது போல வும் இழுப்பது போலவும் வலி; கண்களுக்கு முன்பாகக் கறுப்புப் புள்ளிகள்மிதந்து செல்லுதல்.

கண்களில் விரைத்த உணர்ச்சியுடன் கூடிய கண் கோளாறுகள்; கண்கள் கோவைப் பழம் போல் சிவந் திருத்தல்.

முதுகெலும்பு முழுவதும் விரைப்பும் வலியும்; முதுகுத் தசைகள் விரைப்பாய் இருத்தல்; முதுகெலும்பினுள்ளே ஏற்படும் வேதனையினால் பார்வைப் பலவீனம் அல்லது கண் களில் வலி.

எல்லாத் தசைகளிலும் அதிகச் சோர்வு; அடிக்கடி பெரு மூச்சு விடவேண்டுமென்று தோன்றுதல்; தள்ளாடும் நடை; முதுகெலும்பைத் தொட்டால் வலி; நடக்கும்போது முழங்கால்களிலிருந்து ஆரம்பித்துக் கீழ்க் கால்கள் முழு வதும் ஆடுவது போன்ற உணர்ச்சி தோன்றி அதனால் வியாதியஸ்தர் கவனமாக அடி எடுத்து வைப்பார்; விசேஷ மாகக் கண்களை மூடிக் கொண்டிருக்கும்போது: கால்களின் கீழ்ப் புறத்தில் பாயும் வலிகள்.

தசைகள் நாளுக்கு நாள் இளைத்துக் கொண்டே போகுதல்.

இரவில் கண் தெரியாமை.

இடது பக்கப் பாரிச வாதம். தசைகள் இஷ்டப்படி அசையமாட்டா.

குளிர்ந்த தண்ணீரைக் கண்டால் குலை நடுக்கம் ஏற்படும்; அதனால் குளிப்பதை விட்டு விடுவார்.

''நீனவு தவறிப் போய் விடுமோ என்ற உணர்ச்சி யுடன் தன்னை மீறிய தூக்கம் அடிக்கடி உண்டாகும்.'

திடீரென்று ஒரு வித காரணமும் இல்லாமலோ அல்லது அடிபட்டதாலோ தோன்றும் தனுர்வாயு; பக்கத்தில் செல்வோர் விடும் மூச்சுக்காற்று சிறிது மேலே பட்டாலும் வியாதி தோன்றும் அல்லது அதிகரிக்கும் (ஹைபரிகும், நக்ஸ் வாமிகா, ஸ்ட்ரிக்னியா)

ப்ரூனஸ் ஸ்பைனோஸா

(PRUNUS SPINOSA)

புருவங்களில் நரம்பு வலி, (ஸ்பைஜீலியா). வெடித்துப் போய் விடுமென்று தோன்றும் அளவுக்கு வலது விழியில் வலி. இடது விழியில் திடீரென்று வலி உண்டாகி அது வெடித்துப் போகும்போல் உணர்ச்சி. கண்ணீர் வெளியானால் இவ் வுணர்ச்சி சௌகரியமாகும்.

புருவங்களில் நரம்பு வலி. கண்களினுள்ளே கோளாறுகள் முதலிய கண்களைப் பற்றிய வியாதிகளில் கண்களின் உட் புறத்திலிருந்து வெளிப்புறமாக அல்லது முன் பக்கத்திலிருந்து பின் பக்கமாகத் தாவும் வலிகள் இருந்தால் ப்ரூனஸ் தேவைப் படும்.

வலிகளால் மூச்சுத் திணறும்.

மூத்திரம் கழிக்கத் திடீரென்று தூண்டுதல்; அவசரமாக எழுந்து ஓடவேண்டும்; மூத்திரம் மானிக் கொண்டை வரை வந்து பிறகு பின்னுக்கித் திரும்பி மூத்திரக் குழாயில் கடுமையான வலியை உண்டாக்கும்.

"மூத்திரப் பையின் கழுத்துப் பாகத்தில் தாவும் குணமுள்ள வலிகள்; மூத்திரம் கழித்த பிறகே தணியும்."

"மூத்திரப் பையில் சிறிது அதிக அளவு மூத்திரம் சேர்ந்து விடுமானால் மூத்திரம் கழிப்பது தாமதமாகும்."

"மூத்திரம் கழித்து முடியும் சமயத்தில் மூத்திரப் பையிலும் மலப் பையிலும் கடுகடுப்பு; அத்துடன் மானிக் கொண்டையில் வலி."

"சாதாரணமான அசைவுகளாலும் இருதயத் துடிப்பு பயங்கரமான அளவுக்கு அதிகமாகுதல்."

"மலையில் ஏறிக் கொண்டிருப்பவர் போல் பெரு மூச்சு விடுதல்."

ரானங்குலஸ் பல்போஸஸ்

(RANUNCULUS BULBOSUS)

குளிர் காலமும் மழைக் காலமும் வியாதியஸ்தருக்கு ஒத்துக் கொள்வதில்லை. வலியுள்ள உணர்ச்சி; காயம் பட்டுப் புண்ணாக இருப்பது போல் தோன்றுதல். குத்து வலிகள், எரிச்சல், அசைவினால் அதிகரித்தல்.

மார்பு, வயிறு, முதுகு ஆகிய இடங்களிலுள்ள தசைகளில் வாதரோகம்; அவ்விடங்களைத் தொட்டால் வலியும் காயம் பட்ட உணர்ச்சியும்.

மார்பில் வாத ரோகம்.

கல்லீரல், காதுகள், மார்பு, எலும்பு மூட்டுகள் முதலியவைகளில் குத்து வலி.

பருவ நிலையில் எவ்விதமான மாறுதல் ஏற்பட்டாலும் மார்புத் தசைகளில் குத்து வலிகள்.

"ஐந்தாவது, ஆறுவது விலாவெலும்புப் பகுதியில் குத்து வலிகள்."

"காய்ப்புகளில் அதிக வலி; தொட்டால் வலி அதிகமாகும்; கொட்டும் வலிகளும் எரிச்சலும்."

"மார்புத் தசைகளில் வாத ரோகத்தினால் வீக்கமும் தொட்டால் அளவு கடந்த வலி ஏற்படுவதும்."

விலாவெலும்புகளின் இடை வெளிகளில் வாதரோகமும் நரம்பு வலியும்; மார்பு புண்ணுய் இருப்பது போல் வலி உண்டாகும்; தொட்டாலும் அசைந்தாலும் உடலைத் திருப்பினலும் வலி கடுமையாகும்.

பிரயோனியாவில் இருப்பது போல் அசைவினலும், டல்கமாராவில் காணப்படுவதைப் போல் குளிர், மழைக்காலங்களாலும் உபாதிகள் அதிகமாகும் குறி இவ் வௌஷதத்திலும் இருக்கிறது.'' — கெண்ட்.

குளிர் காற்றில் நின்றல் மார்புத் தசைகளில் காயம் இருப்பது போன்ற வலி உண்டாகும்.

உடலில் அதிகச் சூடு ஏற்பட்ட சமயத்தில் திடீரென்று குளிர் காற்று மேலே தாக்கியதால் உண்டாகும் சுவாசகோச உறை வேக்காடு அல்லது சுவாசகோச வேக்காடு; விசேஷமாகக் குளிரும் மழையும் உள்ள பருவக்காலங்களில்; சூடான நிலையிலிருந்து குளிர்ந்த நிலைக்குத் திடீரென்று மாறுதல் ஏற்பட்டதால் வியாதி தோன்றினலும் இது தேவைப்படும்.

சுவாசகோச உறை வேக்காடு; நரம்பு வலிகள் ஆகியவைகளிலும் மற்ற கோளாறுகளிலும் கூர்மையான குத்து வலிகள் அல்லது பாயும் வலிகள் விட்டு விட்டுத் தோன்றுவது; திடீரென்று சூடு அல்லது குளிர் தாக்கியதால் உண்டாகுதல், தொடுவதினலும் அசைவதினலும் அதிகமாகுதல் ஆகிய குறிகள் காணப் பட்டால் ரானங்குலஸ் தேவைப்படும்.

அடி வயிற்றில் அமுக்கினல் வலி.

நடு மார் பெலும்பு, விலாவெலும்புகள், விலாவெலும்பு இடைவெளிகள் ஆகியவைகளில் காயம்பட்ட, புண்ணுள்ள வலி.

தொண்டையில் புண்ணுள்ள வலி; உள் மூச்சு இழுக்கும்போது அதிகமாகும்.

அதிக எரிச்சலுடன் கொப்புளங்கள் உள்ள சரும வியாதிகள், விசேஷமாக முகத்தில் (இவை பல சமயங்களிலும் நீல நிறமாய் இருக்கும்).

திறந்த இடங்களில் நடந்து செல்லும்போது மார்பில் சில்லிப்பு உணர்ச்சி.

சாராயம் குடித்ததால் ஏற்படும் கெடுதல்களை நீக்க மிகச் சிறந்த ஔஷதம்; கடுமையான விக்கல்; குடி மயக்கம்; காக்கை வலிப்பு போன்ற வலிப்புகள்.

நெருப்புச் சுட்ட பிறகு ஏற்படும் கொப்பளங்களைப் போல் கொப்பளங்கள் உள்ள சரும வியாதிகள்.

கண் விழிகளில் அழுக்கும் உணர்ச்சியும் எரிச்சலும்.

ரடான்னியா

(RATANHIA)

மலம் கழிப்பது மிகக் கஷ்டமாய் இருப்பதால் உறக்கக் கத்துவார்; மூலங்கள் ஏராளமாக வெளியே பிதுங்கி இருத்தல்; நீண்ட நேரத்துக்கு ஆசன வாயில் எரிச்சல் உண்டாகும்; இசிவு வலியும் இருக்கலாம்; மலச்சிக்கல். மலம் கழித்த பிறகு ஆசனவாயிலும் மலப்பையிலும் கண்ணுடித் துண்டுகள் பதிய வைக்கப் பட்டிருப்பது போல் தோன்றுதல்.

அதிக வலியுள்ள உணர்ச்சி, இறுகக் கட்டியிருக்கும் உணர்ச்சி, எரிச்சல் ஆகிய குறிகளுடன் ஆசன வாயில் வெடிப்புகள்.

குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்கும் பெண்களுக்கு ஸ்தனக் காம்புகளில் வெடிப்பு.

கருவுற்றிருக்கும்போது பல் வலி: படுத்திருந்தால் வலி அதிகமாவதால் வியாதியஸ்தர் இரவில் எழுந்திருந்து நடமாடவேண்டி வரும்.

இமைகளில் விரைப்பான உணர்ச்சி.

ஆசன வாயில் நீர் கசிதல். குண்டூசித் தலை போலுள்ள புழுக்கள்.

ரஸ் வெனெடா

(RHUS VENETA)

கொப்பளங்கள்.

பல்வேறு இடங்களில் மிகச் சிறிய கொப்பளங்கள் உள்ள சரும வியாதிகள்; கொப்பளங்களின் அடிப்பாகத் தில் வேக்காடும் அக்கிப்படுவன் போல் இருத்தலும், பொறுக்க முடியாத அரிப்பு; சொறிந்தால் அதிகமாகும்; சொறிந்த பிறகு கொப்பளங்களிலிருந்து கெட்ட நீர் கசிதல்.

மாதவிடாய் தோன்றுவதற்கு ஒரு நாள் முன்னதாக பிள்ளைப் பெறும்போது காணப்படுவதைப் போன்ற, கடுமையான வலிகள்.

வெள்ளைப் பாஷாணத்தை அளவு மீறி உபயோகித்த தால் ஏற்படும் கோளாறுகளை நீக்க மிகச் சிறந்தது.—இது க்ளார்க்கின் சொந்த அனுபவம்.

அரிப்பும் எரிச்சலும் உள்ள, பனியினால் ஏற்படுவது போன்ற சருமக் கோளாறுகள் (தாய்த்திரவத்தை வியாதி உள்ள இடத்தின் மேல் தடவலாம். வேதனையைக் குறைப் பதுடன் வியாதியைக் குணமும் செய்கிறது).—க்ளார்க்.

ரிஸினஸ் கம்யுனிஸ்

(RICINUS COMMUNIS)

காலராவில் உபயோகப்படும் ஔஷதங்களில் இது வும் ஒன்று.

இடைவிடாமலும், தளர்ந்தும், வலியில்லாமலும் மலம் வெளியாகுதல்; அரிசிக் கஞ்சி போன்ற மலம்; தசைகளில் இழுப்பும் நில்லிப்பு உணர்ச்சியும்.

கடுமையான வயிற்றுப் போக்கும் வாந்தியும்.

"வாந்தி ஏராளமாய் இருத்தல்; உணவுக் குழாயில் எரிச்சலும் காலராவில் காணப்படும் மற்ற எல்லாக் குறி களும் காணப்படுதல்."

எரிச்சலை உண்டாக்கும் கடுமையான தாகம்.

குடல் பகுதிகள் ஒன்றுகச் சேர்த்துக் கடுமையாக இழுக்கப்படும் உணர்ச்சி.

"பிள்ளைப்பெற்ற பிறகு காணப்படுவதைப்போல் முதுகில் வலிகள்".

கடுமையான மஞ்சட் காமாலை.

குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்கும் பெண்களுக்கு ஸ்தனங்களில் நிறையப் பாலை உற்பத்தி செய்கிறது.

ரொபீனியா

(ROBINIA)

வயிற்றில் புளிப்புத் தட்டும் கோளாறுக்கு இது மிகவும் உபயோகமுள்ள ஔஷதம். வழக்கமாக 3x வீரியத்தில் கொடுக்கப் படுகிறது.

புளிப்புக் குறிகள் மேலோங்கியுள்ள சீரணக் கோளாறுகள்; உபாதிகள் இரவில் அதிகமாகும் குணம் உள்ளவையாய் இருந்தால் விசேஷமாகப் பயன்படும்.

மிகவும் புளிப்பான திரவப் பொருள் வாந்தியாகி பற்களில் கடுமையான கூச்சம் ஏற்படும்.

மிகப் புளிப்பான திரவப் பொருள் வரும் ஏப்பங்கள்.

இரவு நேரத்தில் கீழே படுத்துக் கொண்டவுடன் மேல் வயிற்றில் எரிச்சலும் வயிற்றுப் புளிப்பும் தோன்றும்; மிகக் கடுமையாகும்.

இரவில் வயிற்றில் எரிச்சலுடன் வலி.

கயிறு போன்ற சளிப்பொருள் வாந்தி செய்யப் படுதல்; இரத்தம் கலந்திருத்தல்: அசீரண வலிகள்.

அடிவயிறு முழுவதும் வாயுவினால் நிரப்பப் பட்டிருப்பதுபோல் ஏராளமான உப்பிசம். அபானவாயு வெளியாலால் சௌகரியம் ஏற்படும்.

ஸபடில்லா

(SABADILLA)

அதிகக் கறுமை இல்லாத தலைமயிரும் நல்ல உடல் நிறமும் தளர்ந்த பலவீனமான தசைகளும் உள்ளவர்கள். குழந்தைகள், மூக்கியமாகப் புழு, பூச்சிக் கோளாறுகள் உள்ள குழந்தைகள். வயதானவர்கள்.

ஸபடில்லா வியாதியஸ்தருக்குச் சில்லிப்பு உணர்ச்சியும் குளிர் நடுக்கமும் இருக்கும்; குளிர் காற்று, குளிர்ந்த உணவு, குளிர்ந்த பானங்கள் ஆகியவைகளும் குளிர்ந்த காற்றைச் சுவாசிப்பதும்கூட அவருக்கு ஒத்துக் கொள்ளாது. நீர்க் கோர்வையிலிருந்து சௌகரியம் ஏற்படுவதற்காக எல்லாப் பொருள்களும் சூடாக இருப்பதை விரும்புவார். உடல் முழுவதும் பொதுவான குளிர் உணர்ச்சி இருப்பதுடன் சிற்சில இடங்களில் மட்டும், குறிப்பாகக் கைகள், முகம் ஆகிய இடங்களில், சூடான உணர்ச்சியுடன் கலந்திருக்கும்.

குளிர்ந்த உணவை விழுங்கும்போதும் குளிர்ந்த பானங்களைக் குடிக்கும்போதும் தொண்டையில் வலி அதிகமாகி விடுவதால் சூடான உணவையும் பானங்களையும் விரும்புவார். நீர்க்கோர்வை நீங்குவதற்காக சூடான காற்றைச் சுவாசிக்க விரும்புவார் (அடுப்பின் அருகே உட்காருவார்).

மூக்கின் நீர்க் கோர்வையில்; அடிக்கடி கடுமையான தும்மல்; அதன் பிறகு கண்ணீர் வடிதல்; மூக்கிலிருந்து தண்ணீர் போன்ற கழிவு ஏராளமாய் வெளியாகும்; இக்கழிவு பிறகு கெட்டியாகும்; நெற்றியில் கடுமையான வலிகள்; முகம் சூடாய் இருத்தல்; கண் இமைகள் சிவப்பாய் இருக்கும்; மூக்கினுள் கடுமையான பச்சைப் புண் இருப்பது போல் தோன்றுகல்; மூக்கில் எரிச்சல்; மூக்கு அடைபட்டிருத்தல்.

இன்புளுயன்ஸாச் சுரத்தில் திறந்த இடங்களில் சென்றவுடன் கடுமையான தும்மலும் கண்ணீர் வடிதலும்; கை கால்களில் அசதியும் இருக்கும்.

பல நாட்களுக்கு நீடித்து இருக்கும் மூக்கைப் பற்றிய நீர்க் கோர்வையில் ஸ்படில்லாவை நினைக்க வேண்டும்.

சிற்சில விஷயங்களைப் பற்றி நினைத்தால் உபாதிகள் கூடுதலாகும். யோசனை செய்தால் தலைவலி, தூக்கம் வராமை முதலிய கோளாறுகள் உண்டாகும்.

தூஜாவில் காணப்படுவதைப்போல பல பொய்த் தோற்றங்களும் வியாதி இருப்பதுபோல் பாசாங்கு செய்வதும் இவ்வௌஷதத்திலும் இருக்கின்றன.

வயிற்றில் வெறும் வாயு சேர்ந்து உப்பி இருக்கும் போது, தான் கருவுற்றிருப்பதாக நினைப்பார். தன்னுடைய பிறப்பு உறுப்பு (மானி) சிறுத்துப்போய்விட்டதாக நினைப்பார். "உடல் வாடிவதங்கி வருகிறது; கால்கள் கோணல் மாணலாய் வளைந்து இருக்கின்றன; முகவாய்க் கட்டை நீண்டு இருக்கிறது; ஒரு பக்கத்தைவிட மற்றொரு பக்கம் பெரியதாய் இருக்கிறது ஆக இவ்வாறெல்லாம் நினைப்பார்." (கெண்ட்). தனக்கு வியாதி வந்து விட்டதாக நினைப்பார்; தனக்குப் பயங்கரமான வியாதி வந்து விட்டதாகவும், புற்றுநோய் வந்து விட்டதாகவும் இவைகளால் தான் இறப்பது நிச்சயம் என்றும் நினைப்பார்.

பரபரப்பு; பயங் கொள்ளித்தனம்; அல்ப காரணங்களாலும் திடுக்கிடுதல்.

புழு பூச்சிகளால் வலிப்புகள். நடுக்கம், துடிப்புகள். வாயில் அருவருப்பைத் தரும் திக்திப்புச் சுவை.

வலிப்புகள், மூக்கிலிருந்து இரத்தப் பெருக்கு, முறை வைத்துத் தோன்றும் சுரங்கள், பைத்தியம் முதலிய கோளாறுகள் குறிப்பிட்ட காலங்களில், அதாவது அமாவாசை அல்லது பௌர்ணமி நாட்களில், ஒழுங்காகத் தோன்றும். வார மொருமுறை, இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை அல்லது நான்கு வாரங்களுக்கு ஒரு முறையாகத் தோன்றும் கோளாறுகள். ஆனால் துரதிர்ஷ்ட வசமாக ஸ்படில்லா ஆழ்ந்து வேலை செய்யும் ஔஷதமல்ல (ஸோரா விஷத்தை நீக்கும் வல்லமை கிடையாது). இக்காரணத்தினால் அது தேவைப்படும் பல வியாதிகளில் அதைக் கொடுத்தால் உபாதிகள் குறைந்து போவதைத் தவிர முழுகுணம் ஏற்படுவது இல்லை.

ஒரே நேரத்தில் தவறுமல் தோன்றும் முறைச் சுரம்; முதலில் குளிர், பிறகு தாகம், பிறகு தலைவலியுடன் தாகம்.

அளவுமீறி யோசனை செய்ததால் தோன்றும் தலைவலி; மிகக் கூர்ந்து கவனித்ததாலும் ஏற்படக் கூடும்.

ஏதோ ஒரு பொருளை ஊன்றிக் கவனித்தால் அல்லது ஒரு விஷயத்தைப் பற்றியே தீவிரமாக யோசனை செய்தால் தலைவலி குறையும்.

தொண்டையில் சதை தொங்கும் உணர்ச்சி; அதனால் அடிக்கடி விழுங்குதல்: உள்நாக்கு நீண்டு விட்டதுபோல் தோன்றுதல்.

தொண்டைப் புண், தொண்டைச் சுரப்பி வேக்காடு, டிப்தீரியா ஆகியவைகளில் சூடான உணவை விழுங்கும் போது அதிகமான சிரமம் ஏற்படுவதில்லை. தொண்டையி னுள்ளே மேடும் பள்ளமுமாய்ப் பச்சைப் புண்ணைப் இருக் கும் உணர்ச்சியுடன் அடிக்கடி விழுங்குதல் அல்லது காறு தல். தொண்டையில் வறட்சி. உள்நாக்கில் வேக்காடு, நாக்கில் கொப்பளங்கள் இருப்பதுபோல் புண்ணுள்ள வலி.

தொண்டைப் புண், டிப்தீரியா ஆகியவைகளில் காணப்படுவதைப் போல குறிகள் இடமிருந்து வலம் செல் லும் (லாச்சஸிஸ்).

மண்டைத் தோலில் கடுமையான அறிப்பு உண்டாகிச் சொறிய வேண்டி வரும்; சொறிந்தால் இரத்தப் பெருக் கெடுக்கும்; அறிப்பு குறையும். தலையின் உச்சியில் பேன் கள் படை எடுத்திருப்பது போன்ற உணர்ச்சியினால் அவ் விடத்தை எந்நேரமும் சொறிந்து கொண்டே இருக்க வேண்டும். ஆசன வாயிலும் மலப்பையிலும் புழுக்களால் ஏற்படுவது போன்ற அறிப்பு.

ஸாம்புகஸ்

(SAMBUCUS)

வியாதி எதுவாய் இருந்தாலும் அதனுடன் ஏராளமான வியர்வை எந்நேரமும் ஏற்பட்டுக் கொண்டிருந்தால் அல்லது சிறிது நேரத்துக்கு ஒரு முறையாகத் தோன்றினால் இவ் வௌஷதத்தை நினைக்க வேண்டும்.

விழித்திருக்கும் நேரங்களில் உடல் முழுவதும் வியர்வை ஆறுப்ப் பெருகும்; தூங்க ஆரம்பித்தவுடன் வறட்சியுடன் சூடு தோன்றும்.—H. C. அல்லென்.

நல்ல சதைக் கட்டும் உடல் வலிமையும் பொருந்திய வர்கள் திடீரென்று உடல் மெலிந்துவிடுதல் (ஐயோடியம், ட்யுபர்குலினம்).—H. C. அல்லென்.

குழந்தைகளின் நச்சுத் தும்மல்களுக்கும் தொண்டை கட்டி இழுப்பதற்கும் மிக முக்கியமான ஔஷதம்.

"அனேகமாக மூச்சடைத்துப் போய்க் குழந்தை திடீ ரென்று விழித்து எழுந்து படுக்கையில் உட்காரும்; உடல் முழுவதும் நீல நிறமாகும்; மூச்சுவிடத் திணறும்; திணறல் அடங்கியவுடன் படுக்கையில் படுத்துக் கொள்ளும். சிக்கி ரத்திலோ அல்லது சிறிது நேரம் கழித்தோ பழயபடி மூச்சுத் திணறல் திடீரென்று ஏற்படும்." லாச்சஸிஸைப் போலவே தூக்கத்தினுல் உபாதிகள் அதிகமாகும் குறி இவ்வௌஷதத்திலும் காணப்படுகிறது.

"மூக்கு நன்றுகக் காய்ந்து முழுவதும் அடைபட்டிருக் கும்; அதனுல் மூச்சுவிடவோ, தாய்ப் பால் குடிக்கவோ முடியாமல் போகும்; இடைவிடாத நச்சுத் தும்மல்கள்." நச்சுத் தும்மலுக்கு இதைத் தவிர இன்னும் இரண்டு ஔஷதங்கள், அதாவது நக்ஸ் வாமிகாவும் அம்மோனியம் கார்பும் உபயோகமாகின்றன.

மூக்கு அடைபட்டுப் போகும் கேசுகள் எல்லாவற்றி லும் குழந்தையால் காற்றை உள்ளிழுக்க முடியும்; வெளி யேற்ற முடியாது (மெபைடிஸ்).

கற கறத்த ஓசையுடன் வேகமாய்ச் சுவாசித்தல்.

தூக்கக் கலக்கமாய் இருக்கும்; ஆனல் தூங்க முடி யாது.

நீர்ச் சுரப்புள்ள வீக்கம் ஒரு விசேஷக் குறி. உடலின் பல்வேறு பாகங்களில், விசேஷமாகக் கால்கள், உள்ளங் கால்கள், பாதங்கள். மூக்கு ஆகியவைகளில் நீர்ச் சுரப் புள்ள வீக்கம். நீர்ச் சுரப்பு மூக்கைத் தாக்கும் போது நச்சுத் தும்மல் உண்டாகிறது. அனேகமாக இந்நிலைக்கு ஸாம்புகஸ் ஏற்றதாகும்.

கோளாறுகள் திரும்பத் திரும்பத் தோன்றும் குண முள்ளவையாய் இருக்கும்.

பெரும்பாலான வலிகள் ஓய்வினல் தோன்றி நடமாடி னல் மறையும். ஆனல் இது அவ்வளவு முக்கியமான விஷயமில்லை.

ஸானிகுலா

(SANICULA)

குழந்தைகளின் வியாதிகளில் கீழ் உள்ள குறிகள் காணப்பட்டால் ஸானிகுலாவை நினைத்துக் கொள்ள வேண்டும்.

1 கோளாருன சரிமானத்துடன் (சீரணச் சக்தி) தலையில் ஏராளமாய் வியர்வை உண்டாகும் குழந்தைகள்.

2. தலையிலிருந்தும் கழுத்திலிருந்தும் வெளிப்படும் ஏராளமான வியர்வையினல் குழந்தையின் தலையணையில் பெரும் பகுதி நனைந்து போகும்.

3. குழந்தை பிடிவாத குண முள்ளதாகவும் அகம்பா வம் மிகுந்தும் இருக்கும்; கோபம்; சரியாக முகம் கொடுத் துப் பேசாது; அதன் அருகே நெருங்கவோ தொடவோ விடாது. "சாமோமில்லா முற்றினல் ஸானிகுலா" என்ப தாக குரன்ஸே மதிப்பிடுகிறார்.

4. குழந்தை கோபம் கொண்டு பின் பக்கமாகச் சாய்ந்து கீழே விழும்.

5. தாய்ப் பால் குடித்தவுடன் குழந்தை பாலை அல்லது கெட்டியான தயிர்க் கட்டிகளை வாந்தி செய்யும். வாந்தி செய்த பிறகு மறுகணமே தூங்கிப் போகும்.

6. மூத்திரம் கழிப்பதற்கு முன் குழந்தை கதறும்.

7. "இரவும் பகலும் இடை விடாமல் நடமாடிக் கொண்டே இருக்க குழந்தை விரும்பும்."

8. தண்ணீருள்ள பாத்திரத்தைக் கண்டவுடன் குழந்தை ஆத்திரப்படும்; அதிக ஆவலுடன் ஏராளமான அளவு தண்ணீரைக் குடிக்கும்.

9. மலம் கழிக்கும் போது குழந்தை மூத்திரம் கழிக்க முக்கும்.

10. வெகு நேரத்துக்கு ஒரு தடவை மிகக் குறைவான அளவு மூத்திரம் கழிக்கும்.

11. குழந்தையின் (ஆண்) பிறப்பு உறுப்புகளில் குளித்த பிறகும் மீன் நாற்றம் நாறுதல்.

12. கீழே செல்லும் போது குழந்தை பயப்படுதல் (போரக்ஸ்).

13. கடுமையான குளிர் காலத்திலும் குழந்தை அதன் போர்வையை உதைத்துத் தள்ளும் (ஸல்பர்).

14. இழட்டுக் கனல்; அழுக்குப் பிடித்த, எண்ணெய் தடவியது போன்ற பழுப்பு நிறமுள்ள உடல் ஆகிய குறிகள் உள்ள குழந்தைகள்; கழுத்திலுள்ள சருமம் சுருங்கி மடிப்புகளாகத் தொங்கும் (அப்ரொடேனம், ஐயோடியம், நேட்ரம் மூர், ஸார்ஸபரில்லா).

15. குழந்தை குளிர்ந்த தண்ணீரைக் குடித்தவுடன் வாந்தி செய்யும்.

16. குழந்தையின் மலத்தின் நிறமும் குணமும் அடிக்கடி மாறும்; தண்ணீராகவும் மஞ்சளாகவும் இருக்கும்.

17. குழந்தையின் கால்கள் மெலியும்.

18. பிறந்து 16 மாதங்கள் கழிந்த பிறகும் குழந்தை பிறர் உதவியில்லாமல் நிற்கவோ நடக்கவோ செய்யாது.

19. பிறக்கும் போதே குழந்தையின் தலை கடினமாய் உச்சிக் குழியோ எலும்பு சேர்க்கப்பட்ட அடையாளமோ இல்லாமல் இருத்தல்.

20. குழந்தைக்கு மாமிசத்திலும் கொழுப்புப் பொருள்களிலும் விருப்பம் இருக்கும்; ஆனல் அவை ஒத்துக் கொள்ளாது.

21. குழந்தை அதன் கைகளை மூடிக் கொண்டு கண்களைத் தேய்த்துக் கொள்ளும்.

22. குழந்தை தூங்கும் போது சிணுங்கிக் கொண்டு இருக்கும்; விழித்தவுடன் கோபமும் ஆத்திரமும் அழுகையும் உண்டாகும்.

மற்ற குறிகள்

குறிகள் அடிக்கடி மாறிக் கொண்டே இருத்தல். தான் செய்யும் தொழிலை அடிக்கடி மாற்றிக் கொண்டே இருப்பார். மலம் ஒவ்வொரு தடவையும் வெவ்வேறு விதமாய் இருக்கும். கைகளும் பாதங்களும் குளிர்ச்சியாய்க் கசகச வென்ற வியர்வையுடன் இருக்கும். கீழே வைத்துப் படுக்கும் பாகத்தில் வியர்வை உண்டாகும். பாதங்களில் நாற்றம் வீசும் வியர்வை. பாதங்களில் ஏற்படும் வியர்வையினால் அவ்விடங்களில் புண்ணுள்ள உணர்ச்சி. ஸ்டாக்கிங்ஸ் (Stockings) எனப்படும் பாதம் சுற்றும் துணி ஓட்டிக் கொள்ளுதல், பூட்சும் சேதமாகும். கால் விரல்களுக்கு இடையில் வியர்வை தோன்றி அதனால் அவ்விடங்களில் புண்ணுள்ள வலியும் கெட்ட நாற்றமும் உண்டாகும். பாதங்களில், முக்கியமாக உள்ளங்கால்களில் எரிச்சல்; அதனால் பாதங்களைக் குளிர்ச்சியான இடத்தில் வைக்க விரும்புவார்; தண்ணீரில் வைப்பார். மேலே உள்ள துணி மணிகளை நீக்குவார்.

க்ஷய சம்பந்த முள்ள கேசுகளில் எரிக்சலினால் பாதங்களைக் குளிர்ச்சியான இடத்தில் வைக்க விரும்பும் குறி காணப்பட்டு, வியாதி அதிகமாகிவிடுமோ என்ற பயத்தால் ஸல்பரைக் கொடுக்கத் தயக்கம் ஏற்பட்ட ஒரு ஹோமியோபதி வைத்தியருக்கு ஸானிகுலாவைக் கொடுத்துப் பார்க்கலாம் என்று யோசனை கூறினேன்.

ஆசன வாயைச் சுற்றி உள்ள தோல் உறிதல்; ஆசன வாயிலிருந்து பிறப்பு உறுப்புகள் வரை பரவி இருக்கும்.

கடுமையான மீன் நாற்றம் அடிக்கும் கழிவுள்ள வெள்ளை ஒழுக்கு (இது ஒரு முக்கிய குறி).

"நடக்கும் போது தலைச் சுற்றலுடன் பார்வை மறைந்து போகுதல்; அக்குறிகள் மறையும் வரை வியாதியஸ்தர் அசையாமல் நின்றுவிடுவார்."

"தோள்பட்டையில், முக்கியமாக இடது பக்கத்தில், வாத ரோக சம்பந்த முள்ள வலிகள், மார்புக்கும் பரவி இருக்கும்."

மலம் ஏராளமாய்ச் சேர்ந்துபோகும்வரை மலம் கழிக்க உணர்ச்சி ஏற்படுவதில்லை; சிறிதளவு மலம்

வெளியே வந்து மறுபடி உள்ளே சென்றுவிடும் (ஸைலீஷியா, தூஜா). மலம் காய்ந்து சிறு சிறு உருண்டைகளாக இருக்கும்; கானுக வெளியாகாது, விரலாலோ அல்லது மற்ற கருவிகளாலோ எடுத்தால் தான் வெளியாகும்.

மலம் மிகக்கடுமையான நாற்றம் அடிக்கும். நன்றுகக் குளித்த பிறகும் மலத்தின் நாற்றம் வியாதியஸ்தரைச் சூழ்ந்து கொண்டிருக்கும் (ஸல்பர்).

சாப்பிடும் போது மலம் கழிக்கத் தூண்டுதல் ஏற்பட்டு அவசரமாகச் சாப்பிட நேரும்.

மலம் கடினமாய், கழிக்கக் கஷ்டமாய் இருக்கும்; ஆசன வாயின் அருகே வந்தவுடன் மலம் தொறுங்கிவிடும் (மெக். மூர்)

. செப்புப்போல் நிறமுள்ள மேகக்கிரந்திப் புண்கள்.

உள்ளே உள்ள உறுப்புகள் வெளியே பிதுங்கி வந்து விடும் என்ற உணர்ச்சியுடன் அடி வயிற்றின் கீழ்ப்பாகத்தில் பலவீனம்; யோனிக்கு மேலுள்ள இடத்தில் கைகளை வைத்து வயிற்றைத் தாங்கிக் கொள்ள விரும்புதல்.

ஸாண்ட்டோனினம்

(SANTONINUM)

"ஸீனுவுக்குப் பதிலாக பலர் இந்தத் தயாரிப்பையே விரும்புகின்றனர். ஸீனுவில் சொல்லப்பட்ட குறிகளே இவ்வௌஷதத்திலும் காணப்படுகின்றன. 1x வீரியத்தில் தினமும் மூன்று வேளைகள் போதுமானதாய் இருக்கும்."—ஜான்ஸன்.

1x வீரியத்தை உபயோகிக்காமல் இருப்பதே நலம். 2x, 3x வீரியங்களே அதைவிடச் சிறந்தவை.

குறைந்த வீரியங்களில் ஸாண்ட்டோனின் வட்டப் புழுக்களை வெளியே தள்ளுகிறதாயினும் மீண்டும் புழுக்கள் தோன்றுமல் இருக்கும்படிச் செய்ய அதற்கு வல்லமை இல்லை. புழுக்களை வெளியேற்றினால் மட்டும் போதுமா? மீண்டும் புழுக்கள் தோன்றுமல் இருக்கச் செய்வதல்லவா சிகிச்சைக்கு அடையாளம்!

வட்டப் புழுக்கள், திரிப்புழுக்கள் (நாடாப் புழுக்களுக்கு அல்ல). மூக்கில் அறிப்பு. மூக்கினுள்ளே குடைதல். கண்களைச் சுற்றிலும் கறுப்பான வளையங்கள். பற்களைக்கடித்தல். குமட்டல். சாப்பிட்டால் சௌகரியமாகும். புழுக்களால் கண் விழிகள் சொருகப்படுதல். இரவில் படுக்கையில் மூத்திரம் கழித்தல். மூச்சடைக்கும் உணர்ச்சி. தலைச் சுற்றல்.

புழுக்களால் குழந்தைகளுக்கு இரவில் இடை விடாமல் இருமல்; காற்றுக் குழாயிலும் குரல் வளையிலும் குறுகுறுக்கும் உணர்ச்சியினால் இருமல் தோன்றும்; அதிகமாகும்.

நிறங்களில் வித்தியாசம் கண்டு பிடிக்க முடியாது அல்லது எதைப் பார்த்தாலும் மாறுதலான வர்ணம் ; தடவப்பட்டது போல் இருக்கும். மஞ்சள் நிறமுள்ள குழம்பு சிவப்பாகவும் நீலவானம் பச்சையாகவும் மற்றப்பொருள்கள் பச்சையாகவும் வெள்ளை நிறம் மஞ்சளாகவும் இன்னும் இதைப் போல் மாறுதலான நிறத்துடன் காணப்படும். முக்கியமாக மஞ்சளே மிகுதியாகக் காணப்படும்.

மூத்திரம் மஞ்சளாய் அல்லது சிவப்புக் கலந்த மஞ்சளாய் இருக்கும்; ஆடைகளில் மஞ்சள் கறையை உண்டாக்கும்.

விழிகளில் மெல்லிய தோல் படரும் வியாதியில் பல கேசுகளை இது குணம் செய்திருக்கிறது.

ஸர்ஸபரில்லா

(SARSAPARILLA)

மூவகை விஷங்களுக்கும், முக்கியமாக மேகவெட்டை, மேகக்கிரந்தி ஆகிய இரு விஷங்களுக்கும், இது ஏற்றது.

மூத்திரம் கழித்த சிறிது நேரத்துக் கெல்லாம் (அதாவது மூத்திரம் கழித்து முடியும் சமயத்தில்) மூத்திரப்பையின் கழுத்தருகே கடுமையான வலி உண்டாகும்.

மூத்திரம் கழித்து முடியும் சமயத்தில் இரத்தமும் வெளிப்படுதல்.

மூத்திரத்தில் மணலும் சிறு கற்களும் காணப்படுதல்.

"மூத்திரத்தில் மணலும் வெளுத்த மணல் போல் காணப்படும் வண்டலுள்ள மூத்திரமும் உள்ளவர்களுக்கு இது ஏற்றது; மூத்திரத்தில் சீழும் இருக்கலாம்."

மூத்திரம் கழிப்பதற்கு முன்பும் கழிக்கும் போதும் குழந்தை கதறுதல்; மூத்திரத்துடன் ஏராளமாய் மணல் வெளியாகும். மூத்திரம் கழிக்கும் சமயத்தில் அது கதறி அழும்; வலி இதோ வரப் போகிறது என்று அதற்குத் தெரிகிறது.

குழந்தை நின்று கொண்டிருந்தால் தான் மூத்திரத்தைக் கழிக்க முடியும்; உட்கார்ந்தால் சொட்டுச் சொட்டாகவே வெளியாகும்.

மூத்திரம் "அளவு குறைவாய், குழ குழப்பாய், மணலுடன் உணர்ச்சி இல்லாமல் வெளியாகும்."

பெண்களின் மூத்திரக் குழாயிலிருந்து ஓசையுடன் காற்று வெளிப்படும். (மூத்திரப்பையில் சளிப்பொருள் புளிப்பதே இதற்குக் காரணமாகும்).

மூத்திரம், பிறப்பு உறுப்புகள் ஆகியவை கெட்ட நாற்றம் அடிக்கும்.

மேகக்கிரந்தியுள்ளவர்களின் குழந்தைகளுக்கு உண்டாகும் உடல் மெலிவு; கிழவர்கள்போல் தோற்றமளிக்கும்; அடி வயிறு பருத்திருத்தல்; சருமம் காய்ந்து, சுருங்கி, மடிப்பு மடிப்பாகத் தொங்கும்; கழுத்தைச் சுற்றி இளைப்பு; செப்புப் போன்ற நிறமுள்ள சருமக் கோளாறுகள்.

மேகவெட்டையை அமுக்கியதால் அல்லது மழையில் அல்லது குளிரில் அடிபட்டு மேகவெட்டைப் போக்குத் தடைப் பட்டதால் உண்டாகும் வாதரோகம்: இரவிலும் மழையுள்ள பருவக்காலங்களிலும் குளிர்ந்த தண்ணீரைக் குடித்தாலும் வலிகள் அதிகமாகும்.

இந்திரிய நரம்புகளில் வீக்கத்துடன் இந்திரியம் தானாகவே நழுவுதல்.

ஸ்தனக் காம்புகள் உள்பக்கமாய் இழுக்கப் பட்டிருக்கும்; சுருங்கிப் போய் என்ன செய்தாலும் விரைக்காது. குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்கும் பெண்களுக்கு ஸ்தனக்

காம்புகள் உள்பக்கமாய் இழுக்கப்படுதல் அல்லது தட்டை யாய் விடுதல்.

பாதரஸத்தை மித மீறி உபயோகித்ததால் ஏற்படும் கரப்பான்படை அல்லது புண்கள்; பாதரஸத்தை உப யோகித்து வியாதி உள்ளே அமுக்கப்பட்ட வரலாறு உள்ள பழய மேகக்கிரந்தி வியாதியஸ்தர்கள்.

குதிரைகளுக்குச் சரும வியாதி ஏற்பட்ட இடங்களில் மயிர் உதிர்ந்து போகுமானால் அதைத் தடுத்து மீண்டும் மயிரை முளைக்கச்செய்ய இது மிகவும் உபயோக முள்ளது.

சருமத்தில் பல சிறிய பாலுண்ணிகள்.

பிறப்பு உறுப்புகளில் அல்லது விரைப் பைக்கும் தொடைகளுக்கும் இடையில் ரீரைக் கக்கும் சருமக் கோளாறுகள்.

மேகக்கிரந்தியில் காணப்படுவதைப் போல் சிவந்த நிற மும் பொறுக்க முடியாத அறிப்பும் உள்ள சருமக் கோளாறுகள்.

சருமம் கடினமாகவும் கறடு முறடாகவும் இருக்கும். கைகளிலும் பாதங்களிலும் வெடிப்பு. "கைகால் விரல் களில் ஆழமான வெடிப்புகள், விசேஷமாகப் பக்கவாட்டில்" சருமத்தில் பல இடங்களில் வேக்காடு.

மாதவிடாய்க் காலங்களில் நெற்றியில் அறிப்புள்ள சருமக் கோளாறுகள்.

கீல்வாயு முண்டுகளில் புண்ணுள்ள உணர்ச்சி அதிகமாய் இருத்தல்.

ஸ்டிக்டா

(STICTA)

மூக்கின் நீர்க்கோர்வையில் இவ்வௌஷதத்தின் முக்கிய குறி மூக்கின் அடிப்பாகத்தில் அமுக்குவது போன்ற அல்லது நிறைந்த உணர்ச்சி.

மூக்கின் சளிச்சவ்வுகளில் அளவு கடந்த வறட்சி; வலி உண்டாகும்; சளிமிக விரைவில் காய்ந்து பொறுக்குகளாய் மாறி அதை வெளியேற்றுவது கஷ்டமாய் இருக்கும். மூக்கு அடைத்துப்போகும். அடிக்கடி மூக்கைச் சிந்த

விருப்பம் அல்லது தூண்டுதல் ஏற்படும்; ஆனல் ஒன்றும் வெளியாகாது.

மேகக்கிரந்தியின் மூன்றும் நிலையில் மூக்கைச் சிந்த இடைவிடாமல் விரும்புதல்; ஆனல் ஒன்றும் வெளியாவ தில்லை.

குரல் வளையில் குறு குறுப்பான உணர்ச்சியினல் வறண்ட, வேதனையை உண்டாக்கும் இருமல்; சுவாச கோசங்களில் கடினமான ஒரு பொருள் குவிந்து இருப்பது போல் அமுக்கும் உணர்ச்சி; பகல் வேளையில் இருமல் அவ் வளவு அதிகமாய் இருக்காது; இரவில் இடைவிடாமல் இருக்கும்.

"விட்டு விட்டுத் தோன்றும் கடினமான, வேதனையை அளிக்கும், பலன் எதுவும் ஏற்படாத' இருமல்."

பரபரப்பினலும் இருமலினலும் தூக்கம் வராமை.

நீர்க்கோர்வையுடனுள்ள காச வியாதியில் இது பயன் படும்.

சுவாசகோச க்ஷயத்திலும் சுவாசகோசங்களிலிருந்து ஏற்படும் இரத்தப் பெருக்குக்கும் இது மிகவும் உபயோக முள்ளது.—க்ளார்க்.

"சின்னம்மை, கக்குவாய் இருமல், இன்புளுயன்ஸா ஆகிய வியாதிகளுக்குப் பிறகு மிச்சமாய் இருக்கும் இரு மலைப் பல சமயங்களில் ஸ்டிக்டா குணம் செய்கிறது."—க்ளார்க். இவ்விருமல் அனேகமாகக் குலைப்பது போல் இருப்பதுடன் இரவிலும் காலையிலும் அதிகமாய் இருக் கும்.

வியாதியுள்ள எலும்பு மூட்டில் வட்டமான புள்ளி போல் காணப்படும் வேக்காடு.

———

ஸ்டில்லிங்கியா

(STILLINGIA)

மேகக்கிரந்தி வியாதிக்கு ஏற்றது.

மேகக்கிரந்தியால் நீளமான எலும்புகள் தாக்கப்படுதல்;

வலிகள் இரவில் அல்லது மழைக்காலங்களில் அதிகமாகுதல்.

கெடுதி நேரப்போகிற தென்ற எண்ணம்; மனத் தளர்ச்சி. கழுத்துப் பக்கமுள்ள சுரப்பிகள் பருத்திருத்தல். மூக்கிலுள்ள எலும்புகளில் சொத்தை விழுதல்.

தொண்டை காய்ந்து வலியுடன் காயம் பட்டதுபோல் இருக்கும்.

கற கறப்பு, வறண்ட விட்டு விட்டுத் தோன்றும் இருமல் ஆகியவைகளுடன் தொண்டை வேக்காடு; விசேஷ மாக மேகக்கிரந்தியினால் ஏற்பட்டிருந்தால்.

மண்டை எலும்புகளில் வலியும் மேகக்கிரந்தி சம்பந்தமுள்ள தலைவலியும்.

மேகக்கிரந்தியினால் தோன்றிய நாட்பட்ட வாத ரோகம் (பைடோலக்கா).

நெற்றி, கால் குதிரை முக வெலும்பு இன்னும் மற்ற இடங்களிலும் முண்டுகள்.

மேகக் கிரந்தி அல்லது மேக வெட்டை சம்பந்தமுள்ள தொடை நரம்பு வாதம்.

மேகக்கிரந்தி அல்லது மேகவெட்டை காரணமாகக் கால்களில் நாட்பட்ட, தூங்கி வழியும் குணமுள்ள, புண்கள்.

யானைக்கால் வியாதி.

STRYCHNINUM

ஸ்ட்ரிக்னினம்

உடல் பின் புறமாக வளைக்கப் படும் தனுர் வாயு; சிறி தளவு தொட்டாலும் வியாதியஸ்தரை நகர்த்த முயற்சித் தாலும் வலிப்புகள் அதிகமாகுதல்.

உடல் முழுவதும் விரைப்புடன் துடிப்புகளும் துள்ளல்களும் அதிர்ச்சிகளும் இருந்தால் அனேகமாக ஸ்ட்டிரிக்னினமே தேவைப்படும்.

கை கால்களில் கடுமையான துடிப்புகள், துள்ளல்கள், நடுக்கம்.

கை கால்களில் தசைகள் சுருங்குவது போல் வலி,

தாடைகளில் விரைப்பு உண்டாகிப் பேச முடியாமல் போகும்.

எலும்பு மூட்டுகளில் பிடிப்புடன் வாதரோகம்.

கழுத்துத் தசைகளில் விரைப்பு.

இன்புளூயன்ஸா சுரத்துக்குப் பிறகு இடை விடாத இருமல் தோன்றினால் அதற்கு இது உபயோகப்படுமென்று சொல்லப் படுகிறது.

வலிகளும் உணர்ச்சிகளும் திடீரென்று தோன்றும்; விட்டு விட்டு உண்டாகும். ஒழுங்காகத் திரும்பித் திரும்பி வரும் வலிப்புகள்.

வாயின் மேற் கூரையில் கடுமையான அறிப்பு.

———

ஸிம்பிடம்

(SYMPHYTUM)

எலும்பு முறிந்து விட்டால் உடனே ஒரு ஸர்ஜனைக் கூப்பிடவேண்டும். அவர் வருவதற்குள் வியாதியஸ்தருக்கு ஆர்னிகா 200 ஒரு வேளை கொடுத்துப் பிறகு சர்ஜன் வந்து முறிந்த எலும்பை ஒழுங்காகப் பொருத்தி வைத்தவுடன் துணியை மடித்து ஸிம்பிடம் தாய்த்திரவத்தில் நனைத்து முறிந்த இடத்தின் மேலே வைத்துக் கட்டிவிட வேண்டும். அதே சமயத்தில் ஸிம்பிடம் 3x அல்லது 30 வீரியத்தில் உள்ளுக்குச் சாப்பிடவும் கொடுக்க வேண்டும்.

எலும்புகளில் ஏற்படும் அடிதடிக் காயங்கள், முறிவு முதலியவைகளுக்கு இவ்வௌஷதம் ஓர் அரசனேயாகும்.

ஸிம்பிடம் முறிந்த எலும்புகளை ஒன்று சேரச் செய்கிறது; ஊசி குத்துவது போல் ஏற்படும் வலிகளைக் குறைக்கிறது.

எலும்புகளிலும் எலும்புகளின் மேல் தோலிலும் ஏற்படும் காயங்கள் எல்லாவற்றிலும் ஆர்னிகாவினால் தசைகளில் உள்ள வலி குணமான பிறகு ஸிம்பிடம் 30 வீரியத்தில் தினம் ஒரு வேளையாகக் கொடுத்தால் எலும்புகளி

லும் எலும்புகளின் மேல் தோலிலுமுள்ள வலிகளை நீக்குகிறது.

கண் விழிகளில் அடி பட்டு அல்லது குத்தப் பட்ட தால் (உதாரணமாகச் சிறு குழந்தை தன் விரல்களால் தாயின் கண்களைக் குத்திவிடுதல், குடையின் காம்பு குத்துதல்.) ஏற்படும் காயங்களுக்கு **லிம்பிடம்** ஒன்றே அனேகமாகப் போதுமானது. ஆனால் **லிம்பிடத்தை** உபயோகிப்பதற்கு முன்னதாக இரண்டு அல்லது மூன்று வேளைகள் **ஆர்னிகாவைக்** கொடுப்பது எப்பொழுதும் நல்லது.

எலும்பு முறிந்த இடத்திலோ அல்லது எலும்பில் அடி பட்டுக் காயம் உண்டாகி அது ஆறிய பிறகோ குத்துவது போன்ற வலிகளோ மற்ற எவ்விதமான வலியோ வேதனையோ இருந்தாலும் அச்சமயங்களில் **லிம்பிடம்** தேவை.

கால் அல்லது கையை வெட்டி எடுத்துக் குணமான பிறகு மிகுதி இருக்கும் பகுதியில் வேதனை.

"கூர்மையில்லாத பொருள்களால் கண்களில் அடி பட்டு வலி ஏற்படுதல்."

குஸ்திச் சண்டை, வேகமாய் ஓடுதல், நடத்தல், சிரமப்பட்டு வேலை செய்தல் முதலிய காரணங்களால் முதுகில் வலி.

அழுகிய புண்களைக் கழுவிச் சுத்தம் செய்யவும் இது உபயோகப்படும்.

அடிபட்ட பிறகு உண்டாகும் **ஊசி குத்தும் வலிகளுக்கும்** எலும்பின் மேற் தோல் வலிகளுக்கும் **ஆர்னிகாவுக்குப்** பின் இது நன்றாக வேலை செய்யும்.

ஸைஸிஜியம் ஜம்போலனம்

(SYZYIGIUM JAMBOLANUM)

இவ்வௌஷதம் ஔஷதப் பரீக்ஷைக்கு உட்படுத்தப் படவில்லை.

மூத்திர உற்பத்தியைக் குறைத்து மூத்திரத்தில் சர்க்

கரை இல்லாமல் அல்லது சர்க்கரையின் அளவைக் குறிப் பிடத் தக்க அளவு குறையச் செய்கிறது.

மது மேகம் எனப்படும் ரீரழிவு வியாதியில் மிக உப யோக முள்ள ஔஷதம் என்று பெயர் பெற்றது.

மது மேகத்தினுல் சருமத்தில் உண்டாகும் புண்களை இவ்வௌஷதம் குணம் செய்திருக்கிறது.

அனேகமாகத் தாய்த் திரவ உருவில் தான் உபயோகப் படுத்தப் படுகிறது.

டபாகம்

(TABACUM)

என்னுடைய அனுபவத்தில் டபாகத்தின் ஒரே ஒரு குறியைத் தான் நான் பார்த்து அதை உபயோகம் செய் திருக்கிறேன். அது பின் வருமாறு.

இருதயப் படபடப்பு இடது பக்கமாய்ப் படுத்தால் தோன்றும்; வலது பக்கமாய்த் திரும்பிப் படுத்தால் மறைந்து போகும் (தடித்த எழுத்தில் குறிப்பிட்டது நான் கண் டறிந்த விஷயம்).

"குறிகள் விட்டு விட்டுத் தோன்றும்.—காச நோய், மண்டைக் குத்து, தலைச் சுற்றல், தும்மல் முதலியவை".— H. C. அல்லென்.

வயிற்றில் பயங்கரமான, பலவீன உணர்ச்சி. குளிர்ந்த வியர்வையுடன் கடுமையான வாந்தி. கடுமையான குமட் டல், தலைச் சுற்றல் ஆகியவைகளும் வாந்தியும். குளிர்ந்த, கசகச வென்று ஒட்டும் குண முள்ள வியர்வை திடீரென்று தோன்றுதல்; அத்துடன் கடுமையான குமட்டல், நாடி பல வீனமாகவும் ஒழுங்கில்லாமலும் துடித்தல், க்ஷீணம் முத லிய குறிகளும் காணப்படும். கால்களில் முழங் கால்களுக் குக் கீழே பனிக்கட்டி போன்ற சில்லிப்பு. உடல் சூடாக வும் கைகள் பனிக்கட்டி போல் சில்லிட்டும் இருத்தல். அளவு கடந்த உடல் மெலிவு. உடம்பில் பொதுவாக அதிக அலுப்பு இருத்தல். கால்களில் நடுக்கம். பீதியுடன்

இரவில் அடிக்கடி தூக்கம் கலைதல். சீரணச் சக்தி கோளாறுகும்.

"உடலில் மிக வேகமாய் மெலிவு ஏற்படுதல்; விசேஷமாகக் கன்னங்களிலும் முதுகிலும்."

"எழுந்திருந்தால் அல்லது அண்ணாந்து பார்த்தால் தலைச் சுற்றல்" (புகை இலைச் சுருட்டை அளவு மீறி உபயோகிப்பதால் இது தோன்றும்).

கண்களைத் திறந்தவுடன் தலைச் சுற்றல்.

குமட்டலுடன் தலைச் சுற்றல்; பல சமயங்களிலும் நினைவு தவறிப் போகச் செய்யும்.

திறந்த இடங்களில் இருக்கும் போதும் வாந்தி செய்த பிறகும் தலைச் சுற்றல் சௌகரியமாகும்.

வயிறு தளர்ந்து தொங்கும் உணர்ச்சி,

அடிவயிறைத் திறந்து வைத்துக் கொண்டால் குமட்டலும் வாந்தியும் குறைவாகும்.

இருமலுக்குப் பிறகு விக்குதல்.

கப்பலில் பிரயாணம் செய்யும் போது உண்டாகும் கோளாறுகள் : கப்பலின் மேல் தளத்தில் இருக்கும் போதும், புதிய குளிர் காற்று வீசும் இடங்களில் இருந்தாலும் சௌகரியமாய் இருக்கும்; கடுமையான குமட்டல், முகம் வெளிறிப் போகுதல்; குளிரும் உணர்ச்சி, ஆகியவை காணப்படும். உடல் முழுவதும் குளிர்ச்சியான வியர்வையும் தோன்றலாம்.

குமட்டல், குளிர்ந்த வியர்வை, க்ஷீணம் ஆகிய குறிகளுடன் மார்வலி.

காலராவில் காணப்படுவது போன்ற க்ஷீண நிலைமை (முதல் பாராவைப் பார்க்கவும்).

கருவுற்றிருக்கும் போது வாயில் உமிழ் நீர் சுரத்தல் முதலிய சீரணக் கோளாறுகளுடன் உடல் முழுவதும் தாங்க முடியாத அறிப்பு (தடித்த எழுத்துகள் என்னுடையவை).

"மூத்திரக்காய் சம்பந்த முள்ள வயிற்று வலி; மேல் மூத்திரக் குழாயில் கடுமையான, விட்டு விட்டு வரும் வலி

கள்; இடது பக்கம்; கடுமையான குமட்டலும் குளிர்ந்த வியர்வையும்.

புகை இலைப் பழக்கத்தைவிட வேண்டுமென்று முயற்சிப்போருக்கு அதில் ஏற்படும் அடக்க முடியாத ஆவலைப் போக்க டபாகம் 200 அல்லது 1000 வீரியத்தில் கொடுக்கப் படலாம் என்று அல்லென் கூறுகிறார்.

டாரெண்டுலா க்யுபென்ஸிஸ்

(TARENTULA CUBENSIS)

எரிச்சலும் கொட்டும் வலிகளும் உள்ள இராஜ பிளவை; அழுகிய சதைகளும் இருக்கும்; அதிகச் சோர்வு; பிளவை உள்ள இடங்கள் ஊதா நிறமாய் இருக்கும்; வயிற்றுப் போக்கு.

"அதிகச் சோர்வு, அக்கிரமமான எரிச்சலுடன் வலிகள், ஏராளமாய்ச் சதை அழுகுதல் ஆகிய குறிகளுள்ள இராஜ பிளவையை ஒத்த சிரங்குகளை இது உண்டாக்குகிறது" என்று W. A. டூவே எழுதுகிறார்.

விஷத் தன்மை வாய்ந்த சீழ் உள்ள பல வகை வியாதிகளிலும் இரத்தத்தில் விஷப் பொருள் சேர்ந்த நிலைமைகளிலும் இது உபயோகப்படும்; இடை விடாத உடல் சோர்வு; விட்டு விட்டு குளிர் உண்டாகுதல்.

விஷத் தன்மை வாய்ந்த புண்கள்; சாக்காடு.

"சீழ்க் கட்டிகள், இரத்தக் கட்டிகள், நகச் சுற்றி ஆகியவைகளில் வியாதியுள்ள இடங்கள் நீல நிறமாகவும் (லாச்சஸிஸ்) அக்கிரமமான எரிச்சலுடனும் வலியுடனும் (அந்த்ராஸினம், ஆர்ஸனிகம் ஆல்பம்)" இருக்கும்.—H. C. அல்லென்.

"நகச் சுற்றியினால் உண்டாகும் வேதனை தாங்காமல் வியாதியஸ்தர் பல இரவுகளில் நடந்து கொண்டே இருப்பார்." H. C. அல்லென்.

பல நாட்களாக, நாற்றமுள்ள சீழ் வெளிப்படும் நீல நிற முள்ள அரையாப்புக் கட்டிகள்.

சுரம், நினைவுத் தடுமாற்றம், அரையிடுக்குச் சுரப்பி

களில் வீக்கம் முதலிய குறிகளுடன் பெருவாரியாகத் தோன்றும், தொற்றும் குண முள்ள பிளேக்கு வியாதி.

அறிப்பு, விசேஷமாய்ப் பிறப்பு உறுப்புகளில்.

வறண்ட இருமலினுல் தூங்க முடியாமை.

மூத்திரம் வெளியாகாமல் அடக்கப்படுதல்.

வயிற்றுப் போக்கு, அதிகச் சோர்வு ஆகிய குறிகளு டன் மாலையில் சுரம் தோன்றும் முறைச் சுரம்.

குறிப்பு :—க்யூபா நாட்டிலுள்ள சிலந்தி, ஸ்பெயின் நாட்டி லுள்ள சிலந்தி ஆகிய இவ்விருவகைப்பட்ட சிலந்திகளையும் டாரெண்டுலா என்ற ஒரே ஒரு தலைப்பின் கீழே H. C. அல் லென் எழுதியிருப்பது ஏனென்று விளங்கவில்லை. இரண் டின் குறிகளிலும் வெளிப்படையான வேற்றுமை இருக் கிறது. ஆதலால் இரண்டின் வியாதிக் குறிகளையும் எப் படி ஒன்றுய்ச் சேர்க்க முடியு மென்று எனக்குப் புரிய வில்லை.

டாரெண்டுலா ஹிஸ்டானியா

(TARENTULA HISPANIA)

இவ்வௌஷதத்தில் நரம்பு சம்பந்தமான குறிகள் ஏராளமாய் இருக்கின்றன. அவை பெரும்பாலும் ஏக்கம், நிலை கொள்ளாத தன்மை, எளிதிலே உணர்ச்சி வசப்படுதல் முதலிய குறிகளாய் வெளிப்படுகின்றன.

அனேகமாக நாட்பட்ட வியாதிகளில் உடல் முழு வதுமோ அல்லது வலது கையும் இடது காலும் முக்கிய மாகத் தாக்கப்பட்டுள்ள நிலைமைகளில் இது உபயோகமா கிறது. (இடது கையும் வலது காலும் முக்கியமாகத் தாக் கப்பட்டிருந்தால் அகோரிகஸ் உபயோகப்படும்).—W. H. பார்ட்.

தற்கொலை செய்து கொள்ளத் தூண்டுதல்கள்.—சங் கீதம் பிடிக்காது. அடிக்கடி குணம் மாறும்.

ஏந்நேரமும் ஏதாவது செய்து கொண்டே இருக்க வேண் டும். மேலும் கீழும் கூத்தாடுவார். நடப்பதை விட ஓடு

வது எளிதாய் இருக்கும் (தசைத் துடிப்பு வியாதியில்). "தலை மயிரை வாரிக் கொள்ள அல்லது தலையைத் தேய்த்துக் கொள்ள விரும்புதல்."—"கால்களில் பரபரப்பு, நடக்க வேண்டுமென்ற தூண்டுதல்." இருதயப் பாகத்தில் அமுக்கும் உணர்ச்சி. சமைக்காத, பச்சை உணவில் அதிக விருப்பம். கடுமையான சிற்றின்ப ஆசை. துடிப்புகள், துள்ளல்கள். உடலில் ஒரு சமயம் குளிரும் மறு சமயம் சூடும் மாறி மாறி ஏற்படுதல். எரிச்சல் ஒரு விசேஷக் குறி. உடம்பு முழுவதும் புண்ணுய் அடிபட்டது போல் தோன்றுதல். விரல்களின் நுனிகளில் அதிக வலி. குறிகள் முறை வைத்து எப்போதும் குறிப்பிட்டஒரே நேரத்தில் தோன்றும். வியாதி உள்ள இடங்களில் எவ்வளவு மெதுவாய்த் தொட்டாலும் உபாதிகள் அதிகமாகும். சங்கீதத்தினுல் முதலில் உபாதிகள் அதிகமானுலும் பிறகு சௌகரியம் ஏற்படும்.

நிலை கொள்ளாமை அளவு கடந்திருத்தல்; அசைவினுல் எல்லாக் குறிகளும் கூடுதலாகு மாயினும் இடை விடாமல் நடமாடிக் கொண்டிருக்க நேரும்.

நிலை கொள்ளாமை கால்களில் விசேஷமாகக் காணப்படும்; கதறி அழ வேண்டுமென்று விரும்புதல்; நடந்தால் உபாதி அதிகமான போதிலும் நடக்க நேரும்.

கால்கள், கைகள், உடல் ஆகிய இடங்களில் தானுகவே இடை விடாமல் அசைவுகள் உண்டாகும்; எந்தக் காரியமும் செய்ய முடியாது. தசைகளில் துடிப்புகள், துள்ளல்கள். "சில சமயங்களில் பேச, விழுங்க, உட்கார, நிற்க அல்லது நடக்க முடியாமல் போகும்; ஆனல் இடை விடாமல் படுத்துக் கொண்டிருக்க வேண்டும்."

மன உணர்ச்சிகள் சிறிது அதிகமானுலும் ஆத்திரமும் அதைத் தொடர்ந்து வருத்தமும் உண்டாகும்.

தசைத்துடிப்புகள் வலது பக்கத்தில் அதிகமாய் இருக்கும்.

"பார்ப்பதற்கு ஒருவரும் இல்லையென்றுல் சங்கா குண வலிப்புகள் ஏற்படுவதில்லை; பிறர் அவளைக் கவனிக்க ஆரம்பித்தால் வலிப்புகள் தோன்றும்."

முதுகெலும்பில் வேதனை; முதுகெலும்பைத் தொட்டால் அதிக வலி; தொடுவதினால் இருதயம், மார்பு முதலிய இடங்களில் வலி உண்டாகும்.

மூளையினுள்ளே ஆயிரக் கணக்கான ஊசிகளைக் கொண்டு குத்துவது போல் தலையில் கடுமையான வலி.

சிற்றின்ப ஆசை அதிகரித்தல். பிறப்பு உறுப்புகளைத் தொட்டால் உணர்ச்சி அதிகரித்தல். கடுமையான சிற்றின்ப ஆசையும் சிற்றின்பங்களைப்பற்றிப் பேசுவதும்; பைத்தியமோ என்றும் நினைக்கும்படி காணப்படும்.

பெண்களுக்குச் சிற்றின்பத்தில் பலமான ஆசை; புணர்ச்சி செய்த பிறகும் ஆசை அடங்கு வதில்லை; பல சமயங்களில் மேலும் அதிகமாகும்; இக்குறியுடன் மாத விடாய் வழக்கத்தை விட முன்னதாகத் தோன்றுவதும் ஏராளமான போக்குடன் இருப்பதும்.

"பலமான, கீழே இழுக்கும் வலிகளுடன் கருப்பையில் நார்ப் பொருளால் ஆக்கப்பட்ட சதைக் கட்டிகள்."

"தசைகளில் அதிகத் தளர்ச்சியும் கருப்பை இடம் நழுவி விடுவதும்."

யோனிக்கு மேலே உள்ள முளை போன்ற உறுப்பில் பொறுக்க முடியாத அறிப்பும் அவ்வறிப்பு யோனியின் உட்புறத்தில் கூட ஆழமாகப் பரவியிருப்பதும்; அவ்விடங்கள் காய்ந்தும் சூடாகவும் இருக்கும்; சொறிந்தால் அதிகமாகும்.

"ஆழமான குழியுள்ள சீழ்ப்புண்களை, சீழை வேகமாய் வெளியேற்றி ஆற்ற உதவுகிறது."

தொண்டையில் வேக்காடு; ஊதா நிறமாய் இருத்தல்.

ஒவ்வொரு வருஷமும் கால் கட்டைவிரல்களில் புண்கள் கிளைத்துக் கடுமையான வலி உண்டாகுதல்.

டெல்லூரியம்

(TELLURIUM)

நடுக்காதில் சீழ்ப்பிடித்தலும் காதுச்சவ்வில் துளைகள் உண்டாவதும்.

"டெல்லூரியம் நடுக்காதில் நீர்க்கோர்வையை உண்டாக்குகிறது; இந்நீர் காது எலும்புகளிலுள்ள தசை அணுக்களைத் தாக்கி அங்கே சீழை உற்பத்தி செய்கிறது அல்லது உட்காதை அல்லது மூளையைத் தாக்குகிறது." பாரிங்டன்.

"காதுகளின் வெளித்துவாரத்தில் வலியுள்ள துடிப்புடன் அறிப்பும் வீக்கமும்; மூன்று அல்லது நான்கு நாட்களில் மீன் ஊறுகாய் போல் நாற்ற மெடுக்கும் தண்ணீர் போன்ற கழிவு வெளியாகும்; அக்கழிவு நீர் பட்ட இடங்களில் கொப்பளங்கள் தோன்றும்; காது வீங்கிவிட்டது போல் ஏராளமான கொப்பளங்களுடன் இருக்கும்; காது கேட்பது குறைவாகும்."— கௌபர்த்வைட் (பல கேசுகள் 6x வீரியத்தினால் குணமாகி இருக்கின்றன; உயர்ந்த வீரியங்கள் பொதுவாக நல்ல வேலை செய்வதில்லை).

உடலில் நீங்காத அழுகிய நாற்றம். மூச்சுக் காற்று பூண்டு போல் நாறும். வியர்வையும் பூண்டு நாற்றம் வீசலாம்.

கடி என்னும் படர் தாமரைக்கு இது மிகச் சிறந்த ஔஷதம். முகத்திலும் உடலிலும் (அனேகமாக உடல் முழுவதும்), கால்களில் அதிகமாகவும் கடி இருக்கும். கடிகளின் மேடான வளையங்களால் உடம்பு முழுவதும் கனமாக மூடப்பட்டது போல் இருக்கும். "கடி உடலின் எந்த இடத்தில் இருந்தாலும் அது சிவந்த நிறமாய் லேசாக அறிக்கும் சிறு கொப்பளங்களுடன் கூடிய மேடான வளையங்களுடன் இருக்கும்; விசேஷமாகக் கால்களில்; இரவிலும் படுத்துக் கொண்டவுடனும் அதிகமாகும்; கொப்பளங்களில் அழுகிய மீனைப்போல் நாறும், பட்ட இடத்தைப் புண்ணாக்கும் நீர் காணப்படும்." விரைப்பையிலும் விரைப்பைக்கும் ஆசன வாய்க்கும் இடையிலுள்ள இடத்திலும் கடி.

"கண் இமைகள் தடித்து வேக்காடும் அறிப்பும் காணப்படுதல்."

காதுகளின் பின்பக்கம் கரப்பான் படை.

வலியுள்ள ஒரு இடத்தை மெதுவாகத் தொடும் போது அவ்விடத்துடன் சம்பந்தம் எதுவும் இல்லாமல் எட்ட உள்ள

ஒரு இடத்தில் வலி உண்டாகுமானால் இவ்வௌஷதத்தை உபயோகித்துப் பார்க்கலாம்.

"முதுகெலும்பில் அதிக வலி."

டெரபிந்தினை

(TEREBINTHINA)

மூத்திரக்காய்கள், மூத்திரப்பை பற்றிய கோளாறுகளில் பெர்பெரீஸ் வல்கெரீஸைப் போல் கீழ் முதுகில் வலி இவ்வௌஷதத்திலும் காணப்படுகிறது. எரிச்சல் ஒரு விசேஷமான குறி.

முளகனைக் கிள்ளி எறிந்து விட்டது போல் நாக்கு வழு வழுப்பாகவும் பளபளவென்றும் சிவந்தும் இருக்கும்.—மந்த குணம்.—அடி வயிறு மிகவும் பருத்துத் தொட்டால் அதிக வலி உண்டாகும்.—அதிகச் சோர்வு.—நீர்ச் சுரப்பு.—கால்களில் குளிர்ந்த வியர்வை. நாட்பட்ட மஞ்சட் காமாலை.

கடுமையான எரிச்சல், மூத்திரக்காய்ப் பாகங்களில் இழுக்கும் வலிகள்; வேதனை தரும் அளவுக்கு வலியுடன் சொட்டுச் சொட்டாக மூத்திரம் வெளிப்படுதல்; அதன் பிறகு புண்ணுள்ள வலி தோன்றுதல்; மூத்திரம் இரத்தம் சேர்ந்து காப்பித் தூள் போன்ற வண்டலுடன் வெளியாகும்; மூத்திரப் பையில் எரிச்சலுடன் மூத்திரம் விடக் கஷ்டம்.

உட்கார்ந்து கொண்டிருக்கும் போது மூத்திரக்காய்ப் பாகங்களில் கனமும் அமுக்கும் உணர்ச்சியும்; நடமாடினால் சௌகரியமாய் இருக்கும்.

மூத்திரப்பையில் அமுக்கும் உணர்ச்சி உட்கார்ந்து கொண்டிருக்கும் போது மூத்திரக்காய்களுக்குப் பரவும்; நடமாடிக் கொண்டிருந்தால் மறையும்.

மூத்திரம் அளவு குறைவாய், புகை படிந்து, நிறம் கறுத்து இருக்கும்.

மூத்திரத்துடன் வெள்ளைச் சளிப்பொருள் சேர்ந்து வெளிப்படும் வியாதி (திரிவகை) யின் ஆரம்பத்தில் மற்றப் பொருள்களைவிட இரத்தமும் வெள்ளைச் சளிப்

பொருளும் அளவு அதிகமாய் இருக்கும் போது இது தேவை.

வலியுடன் சொட்டுச் சொட்டாக இரத்தம் கலந்து மூத்திரம் வெளிப்படுதல் (இரத்தம் மூத்திரத்துடன் நன்றாகக் கலக்கப் பட்டிருக்கும்).

கருப்பைப் பாகத்தில் கடுமையான எரிச்சல்.

மூத்திரக்காய்ப் பாகத்தில் எரிச்சலுடன் வலி.

"உடலின் எல்லாத் துவாரங்களிலிருந்தும் இரத்தப் பெருக்கு, விசேஷமாக மூத்திரம் அல்லது மூத்திரக்காய் பற்றிய கோளாறுகளால் ஏற்படும் வகை."

மந்த குணத்துடன் மூத்திரம் வெளியாகாமல் அடக்கப் படுதல்.

மூத்திரக் குழாயில் அடைப்பு.

பெஸ்ஸாரி (Pessary) எனப்படும் சாதனங்களை உபயோகித்த பிறகு உண்டாகும் கருப்பைக் கோளாறுகள்.

குடல்களில் வலியினுல் அடிக்கடி மூத்திரம் கழிக்க நேருதல்.

புழுக்கள் உடலில் இருப்பதால் மூச்சுக் காற்று நாற்றம் வீசுதல்; தொண்டையில் அடைக்கும் உணர்ச்சி; வறண்ட, உடலைக் குலுக்கும் இருமல்; ஆசனவாயில் குத்தும் உணர்ச்சி (புழுக்கள் உள்ளேயிருந்து வெளியே ஊர்ந்து வருவது போல்); வலிப்பு. வட்டப் புழுக்கள், திரிப்புழுக்கள் ஆகியவைகளுக்கும் நாடாப் புழுக்களுக்கும் கூட ஏற்றது.

வயிற்றுப் போக்கில்: மலம் தண்ணீர் போல், பச்சை நிறமாய் அல்லது தண்ணீர் போலவும் சளிப்பொருள் கலந்தும் இருக்கும்; அடிக்கடியும் ஏராளமாகவும் வெளியாகும். நாற்றம் வீசும். இரத்தம் கலந்திருக்கும்; ஆசனவாயிலும் மலப்பையிலும் எரிச்சல்; மலம் கழிக்கும் போது சுருட்டி இழுக்கும் வலிகள்; மலம் கழித்த பிறகு சோர்வும் மயக்கமும். இவ்விதமான வயிற்றுப் போக்கு டைபாய்டு சுரத்திலும் மூத்திரக்காய் வேக்காட்டிலும் தோன்றும்.

"நாக்கின் தோற்றம், அடி வயிறு அளவு தடந்து உப்பி இருத்தல், மூத்திரக் குறிகள் ஆகியவை ஒன்று

சேர்ந்து காணப்பட்டால் அச்சமயங்களில் தகுந்த ஔஷதம் டெரெபிந்தினை என்று சொல்வது தவறுகாது."

தெரிடியன்

(THERIDION)

மிகுந்த விஷமுள்ள இச்சிலந்தி (ஆரஞ்சுச் சிலந்தி)யை ஔஷதப் பரீக்ஷை செய்த போது நமது மெட்டீரியா மெடிகாவில் எந்த ஔஷதத்திலும் காணப்படாத சில மிக விசேஷமான குறிகள் தோன்றின.

ஓசைகளைத் தாங்க முடியாது என்பது அவ்விசேஷக்குறிகளில் ஒன்று. அசைவு, அதிர்ச்சி, ஆகியவைகளால் உபாதிகள் குறிப்பிடத்தக்க அளவுக்குக் கூடுதலாகும்.

சுரப்பிகள் பற்றிய, க்ஷயரோக சம்பந்த முள்ள கோளாறுகள். உணர்ச்சிகள் அளவு மீறி அதிகரித்தல். எரிச்சல். குத்து வலிகள். அறிப்பு, முதுகெலும்பில் வேதனை.

சிறிதளவு ஓசை, அதிர்ச்சி ஆகியவைகளால் உபாதிகள் அதிகமாகுதல். கண்களை மூடியவுடன் உபாதிகள் அதிகரித்தல். "மாடிப்படி மீது ஏறினால் பெரு மூச்சு விடுவதும் மூச்சுத் திணறுவதும்." உண்ணவும் குடிக்கவும் இடைவிடாத விருப்பம், ஆனால் எதை உண்ண வேண்டும் அல்லது குடிக்க வேண்டுமென்பது தெரியாது. ஒயின், பிராந்தி முதலிய பானங்களைக் குடிக்கத் தாகம். இரவில் அடிக்கடி மூத்திரம் கழித்தல்; பல சமயங்களில் மூத்திரம் ஏராளமாய் இருக்கும். வெளிச்சத்தைப் பொறுக்க முடியாது. குளிர்ந்த தண்ணீர் மிகவும் குளிர்ச்சியாய் இருப்பது போல் தோன்றும். திடீரென்று கடுமையான குறிகள் தோன்றுதல். பல கோளாறுகளுடன் குமட்டல் சேர்ந்து காணப்படும்; பல காரணங்களால் தோன்றும் அல்லது அதிகமாகும். சருமத்தில் கடுமையான அறிப்பு. அனேகமாக இடது பக்கமே அதிகம் தாக்கப்பட்டிருக்கும்.

எல்லா விதமான ஓசைகளாலும், எவ்வளவு மெல்லிய ஓசையாய் இருந்தாலும் தலைச்சுற்றல் அதிகமாகும்.

ஓசையினால் குமட்டல் அதிகமாகும். ஏதோ ஒரு பொருளின் மீது அதிக நேரம் விடாமல் பார்வையைச் செலுத்திக் கொண்டிருந்தால் குமட்டல் உண்டாகும். சிறிது அசைந்தாலும் குமட்டல் கூடுதலாகும். வண்டியில் ஏறி வேக மாய்ச் சவாரி செய்தால் குமட்டல்.

கண்களை மூடினால் குமட்டல். குமட்டல் தலைச் சுற்றலுடன் அல்லது தலை வலியுடன் சேர்ந்திருக்கும். கண்களை மூடும் போதெல்லாம் குமட்டலும் தலைச்சுற்றலும் தோன்றி ஓசையினாலும் அசைவினாலும் அவை அதிகமாகும்.

காலையில் தூங்கி எழுந்திருந்தவுடன் குமட்டல். காலையில் தூங்கி எழுந்திருந்தவுடன் வாய் திறக்க முடியாமல் இருத்தல்.

கப்பலில் அல்லது ரயிலில் பிரயாணம் செய்யும்போது ஏற்படும் கோளாறுகளில்; அசைவினால் உண்டாகும் வேதனையைத் தவிர்க்கக் கண்களை மூடினால் கடுமையான குமட்டல் உடனே தோன்றும். இதற்குத் தேவையான ஔஷதம் தெரிடியனே ஆகும்.

குமட்டலுடன் கடுமையான தலைவலி; சிறிதளவு ஓசையையும் சகிக்க முடியாது.

வெய்யல் தாக்கி மயக்கம் ஏற்பட்ட பிறகு பொறுக்க முடியாத தலைவலி, குமட்டல், வாந்தி, பார்வை மறைதல் அல்லது எல்லாப் பொருள்களும் தொங்கலில் இருப்பது போல் தோன்றுதல் முதலிய குறிகள் தோன்றினால் இது உபயோகப்படும்.

சிறிது வேலை செய்தாலும் மயக்கம்.

நிலை கொள்ளாத தன்மையினால் எந்நேரமும் ஏதாவது ஒரு வேலையில் ஈடுபட்டிருத்தல்; ஆயினும் உருப்படியாக ஒரு வேலையும் நடக்காமை.

எல்லா எலும்புகளிலும் உடைந்து போய் விட்டது போல் வலி.

எலும்புகளில் அழுகிய போதும் சொத்தை விழுந்த போதும் இவ்வௌஷதத்தை இடையில் கொடுத்து எட்டு நாட்களுக்கு வேறு எந்த ஔஷதத்தையும் கொடுக்காமல்

இருந்தால் "மிக்வும் அதிசயிக்கத்தக்க பலன்கள்" ஏற்படு வதைக் கண்டதாக டாக்டர் பாரூச் எழுதுகிறார்.

அவர் மேலும் எழுதியிருப்பதாவது; "குழந்தைகளின் எலும்புக் கோளாறுகள், எலும்புகள் அழுகுதல், சொத் தையாகுதல் ஆகிய வியாதிகளில் தெரிடியனையே முக்கிய மாக உபயோகிக்கிறேன். வெளிப்படையாகத் தெரியும் சுரப்பிக் கோளாறுகளை அது நீக்குவதில்லை யென்றாலும் உள்ளூர வேலை செய்து வியாதியின் மூலகாரணத்தை அழித்துக் குணம் செய்கிறது."

கடுமையான இருமலுடன் தலை முன்பக்கமாகவும் முழங்கால்கள் மேல்பக்கமாகவும் அடிக்கடி ஆடுதல்.

கல்லீரல் பகுதியில் எரிச்சல் என்ற குறியை ஆதார மாய்க் கொண்டு அவ்வுறுப்பில் ஏற்பட்ட சீழ்க்கட்டி யையும் புற்று வியாதியையும் கூட தெரிடியனை உபயோ கித்துத் தான் குணம் செய்திருப்பதாக J. H. க்ளார்க் எழுது கிறார்.

தனுர்வாதத்தில் வாய் திறக்க முடியாமல் போகுதல்.

மாதவிடாய் முதன் முதலாகத் தோன்றும் காலத்தில் சங்கா குணம்.

புணர்ச்சியில் ஈடுபட்ட பிறகு அரையிடுக்குகளில் வலி.

மூக்கில் நாட்பட்ட நீர்க்கோர்வை; கெட்டியான, மஞ் சள் அல்லது பசுமையான மஞ்சள் நிறமுள்ள, நாற்றமடிக் கும் சளி வெளிப்படுதல்.

புணர்ச்சி செய்யும்போது மானியின் விரைப்பு குறை வாய் இருப்பதுடன் ஆசையும் மறைந்துவிடுமானால் அவ் விதமான ஆண் தன்மைக் குறைவுக் கேசுகளில் இவ் வௌஷதத்தை உபயோகித்துப் பார்க்கலாம்.

இடது மார்பின் மேல் பக்க உச்சியில் குத்துவலி (சுவாச கோச க்ஷயம்).

"மிக வேகமாய் முன்னேறும் சுவாசகோச க்ஷயம்."

மிக வேகமாய் முன்னேறும் வகையைச் சேர்ந்த சுவாச கோச க்ஷயத்தில் தெரிடியன் இல்லாமல் ஒன்றும் செய்ய முடியாது; ஆரம்பத்தில் கொடுத்தால் பல சமயங்களில் வியாதியை முழுவதும் குணம் செய்துவிடும். கல். கார்ப்.

அல்லது லாகபோடியம் ஆகியவைகளுக்குப் பிறகு நன்முக வேலை செய்கிறது.

சுவாசகோச க்ஷயத்தில் இவ்வௌஷதம் உபயோக மாகும்போது காணப்படும் குறிகளை லிலியந்தால் மிக அழ காகவும் சுருக்கமாகவும் எழுதியிருக்கிறார்.

"வியாதியின் ஆரம்பத்தில்; இரவில் இருமல்; மார்பின் மேல் பக்கத்தில், இடது தோளின் கீழே கடுமையான குத்துவலிகள். தொண்டையில் கூட இருப்பது போல் தோன்றும்; பெருமூச்சு விட அதிக ஆவல்; இருதயத்தைப் பற்றிக் கவலைப்படுதல்; தலைச்சுற்றலுடன் நாடி மெது வாய்த் துடித்தல்; தலைச்சுற்றல், மயக்க உணர்ச்சி ஆகி யவைகளுடன் இரவில் பனிக்கட்டி போல் குளிர்ச்சியான வியர்வை:-" லிலியந்தால். வியாதியஸ்தருக்கு அல்பகாரணங் களாலும் வியர்வை உண்டாகும் என்பதை இவைகளுடன் சேர்க்க விரும்புகிறேன்.

"மாதவிடாய் முதன் முதலாகத் தோன்றும்போதும் கருவுற்ற காலத்திலும் மாதவிடாய் மறையும் காலத்திலும் நரம்பு சம்பந்தமான உணர்ச்சிகள் அளவு கடந்து அதிக மாவதற்கு இது உபயோகப்படும்.., H C. அல்லென்.

த்லாஸ்பி பர்ஸா பஸ்டோரிஸ்

(THLASPI BURSA PASTORIS)

இரத்தப் பெருக்கை, விசேஷமாகக் கருப்பையி லிருந்து வெளிப்படும் இரத்தப் பெருக்கையும் மூத்திரத் தில் யூரிக் ஆஸிட் (Uric Acid) என்னும் பொருள் காணப் படும் கோளாறையும் இது எதிர்த்துப் போரிடுகிறது.

இரத்தப் பெருக்குகளில் ஏராளமாய் இரத்தம் வெளி யாகும்; முறை வைத்துத் தோன்றும்; இரத்தம் கறுப்பு நிற மாகவும் கட்டிகள் கலந்தும் காணப்படும்.

மாதவிடாய்க் கோளாறுகளினால் ஏற்படும் இரத்த சோகை, கருச்சிதைவு, பிள்ளைப் பெற்ற பிறகு, மாதவிடாய் மறையும் காலம் ஆகிய ஏதோ ஒரு காரணத்தினால் கருப் பையில் கடுமையான வலிகளுடனும் தசைச் சுருக்கங்களுட னும் அவ்வுறுப்பிலிருந்து இரத்தப் பெருக்கு.

கருப்பையின் கழுத்துப் பாகத்தில் புற்று அல்லது தசைக்கட்டிகள் ஆகியவைகளால் அங்கிருந்து இரத்தப் பெருக்கு.

மாதவிடாய் அடிக்கடி தோன்றுவதும் போக்கு ஏராளமாய் இருப்பதும், விசேஷமாக உடல் தளர்ந்து விட்ட பெண்களுக்கு.

மாதவிடாய் வழக்கத்தை விட மிக முன்னதாகத் தோன்றுதல்; போக்கு அளவு கடந்து அதிகமாய் இருத்தல்; பல நாட்களுக்கு நீடித்திருத்தல் (எட்டு முதல் பதினைந்து நாட்கள் கூட இருக்கும்).

வழக்கத்தை விட முன்னதாக மாதவிடாய் தோன்றும் போது முதல் நாளில் போக்கு அனேகமாய்க் கொஞ்சங் கூட இருக்காது; இரண்டாவது நாளில் கடுமையான வயிற்றுவலி, குமட்டல், பெரிய பெரிய இரத்தக் கட்டிகள் வெளிப்படுதல் ஆகிய குறிகளுடன் கருப்பையிலிருந்து இரத்தப்பெருக்கு. இரத்தப்பெருக்கினால் தோன்றிய பல வீனம் நீங்குவதற்குள் மறுமுறை மாதவிடாய் தோன்றும். போக்கு ஒரு தடவை ஏராளமாகவும் அடுத்த தடவை குறைவாகவும் மாறி மாறி ஏற்படுதல்.

வெள்ளை ஒழுக்கில்: கழிவு இரத்தம் கலந்து கறுப்பு நிறமாய் நாற்றத்துடன் இருக்கும்; ஏராளமான, கறுப்பு நிறமுள்ள போக்கு வெளியாகும்; மாதவிடாய்க்குச் சில நாட்கள் முன்னதாகவும் பிறகும் தோன்றும்; கழிவினால் **அதிக பலவீனம் தோன்றும்.**

எழுந்திருந்தால் கருப்பையில் புண்ணுள்ள வலி.

மூத்திரக்காய் சம்பந்தமுள்ள வயிற்றுவலி; **மூத்திரத்தில் செங்கல் தூள் போன்ற வண்டல் தங்குதல்.**

வாதரோகத்தில் மூத்திரம் கழிக்கும்போது ஒவ்வொரு தடவையும் அதனுடன் ஏராளமான **யூரிக்ஆஸிட்** வெளிப்படுதல்.

கருப்பைச் சதையைச் சுரண்டித் தள்ளும் சிகிச்சை முறையினால் குணம் எதுவும் ஏற்படுவது கிடையாது.

இதை என்னுடைய சொந்த அனுபவத்திலிருந்தே சொல்கிறேன். J. H. க்ளார்க் எழுதிய நூலிலிருந்து கீழ் உள்ள விஷயம் எடுத்துப் போடப்பட்டுள்ளது.

ஒரு பெண்மணிக்குக் கருப்பையைப் பல தடவைகள் சுரண்டி எடுத்தும் குணம் ஏற்படவில்லை. மேலும் ஒரு தடவை சுரண்டி எடுத்தால் குணம் ஏற்படும் என்று அவளுடைய வைத்தியர் ஆலோசனை கூறினார். த்லாப்ஸி 1x வீரியத்தில் அவளுக்குக் குணம் செய்து விட்டது. த்லாப்ஸி இரத்தப் பெருக்கை நிறுத்தி மாதவிடாய்ப் போக்கை ஒழுங்கான காலத்தில் தோன்றச் செய்து விட்டதால் வியாதியஸ்தருக்கு ஏற்பட்டிருந்த அளவு கடந்த பலவீனம் உடனேயே மறைந்து உடல் வலிமை ஏற்பட்டது. மறு முறை அக்கோளாறு தோன்றவில்லை.

கருப்பையிலிருந்து ஏற்படும் இரத்தப்பெருக்குக்கு 6x வீரியத்திலும் மாதவிடாய் அடக்கப்பட்ட சமயங்களில் தாய்த் திரவத்திலும் உபயோகிக்கலாம்.

தைராய்டினம்

(THYROIDINUM)

வேகமாக உடல் மெலிதல்.— இரத்த சோகை. நரம்பு சம்பந்தமான அதிர்ச்சி. தசைகளில் பலவீனம். மிக எளிதிலே களைத்துப் போகுதல், மயக்கம் வரும் உணர்ச்சியும் குமட்டலும், அடிக்கடி மயக்கம் தோன்றும் குணம். கை கால்களிலும் உடல் முழுவதும் நடுக்கம். கால்களில் நீர்ச் சுரப்பு வீக்கம். சருமம் காய்ந்தும் ஊட்டம் இல்லாமலும் இருத்தல். சிறிது வேலை செய்தாலும் இருதயப் படபடப்பு. நாடி பலவீனமாகவும் வேகமாகவும் துடிப்பதுடன் கீழே படுத்துக்கொள்ள முடியாமை. குளிர்ந்த தண்ணீர் குடிக்கத் தாகம். தித்திப்புப் பொருள்களில் ஆவல். அளவு கடந்த மனச்சோர்வு. கோப குணம்; சிறிது எதிர்ப்பு ஏற்பட்டாலும் அதிகமாகும். இருதயத் துடிப்பின் எண்ணிக்கை அதிகமாகுதல். சிறிதளவு அசைவினாலும் இருதயம் படபடத்தல். எண்ணெய் போலவும் மனதுக்குப் பிடிக்காத நாற்றத்துடனும் உள்ள வியர்வை. முகத்திலும் கால்களிலும் வீக்கம். உடலில் குளிரும் உணர்ச்சியும் குளிர் ஒத்துக்கொள்ளாமையும். கைகளும் கால்களும் சில்லென்றிருத்தல்; இரத்த விசையின் அளவு குறைவாய் இருத்தல்.

குழந்தைகளின் வளர்ச்சி தடைப்படுதல்.

குழந்தையின் உடல், அறிவு ஆகிய இரு விஷயங்களும் வளர்ச்சி அடையாமை (பல சமயங்களில் கண்டமாலை யுடன் இருக்கும்).

உடலில் அளவு மீறிய சதை போடுதல்.

கண்டமாலை.

விழிகள் பிதுங்குவது போல் காணப்படும் குறியுள்ள கண்டமாலை.— விழிகள் பெரிதாய் இருப்பது போல் தோன்றும் (ஸ்ட்ரமோனியம்).

கருப்பையில் நார்ப்பொருள் சேர்ந்த சதைக்கட்டிகள்

ஸ்தனங்களில் நார்ப்பொருள் சேர்ந்த சதைக்கட்டிகள்.

மூத்திரம் ஏராளமாய் வெளியாகுதல். இவ்வௌஷதத்தினுல் மதுமேகம் தோன்றியிருக்கிறது; குணமாகியும் இருக்கிறது.

குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்கும் பெண்களுக்குத் தாய்ப்பால் குறைவாய் உற்பத்தியானுல் இவ்வௌஷதம் பாலின் அளவை அதிகரிக்கிறது.

பிள்ளைப் பெற்ற பிறகு சுரத்துடன் பைத்தியம்.

சுவாசகோசங்களிலிருந்து சிறிதளவு இரத்தம் வெளிப்பட்டவுடன் அதைத் தொடர்ந்து இருமலும் இடது சுவாசகோசத்தின் மேல் நுனியில் க்ஷயக்குறிகளும் தோன்றுதல்.

தலையிலிருந்த மயிர் முழுவதும் உதிர்ந்து போய்விட்டவர்களுக்கு இதை உபயோகித்துப் பார்க்கலாம்.

மேகக்கிரந்தியின் இரண்டாவது, மூன்றுவது ஆகிய இரு நிலைமைகளிலும் உபயோகமாகும்.

கடினமான வீக்கம் (இதை விசேஷக் குறியாக புர்னெட் கருதுகிறார்).

முறிந்த எலும்புகள் ஒன்று கூடத் தாமதித்தல்.

கண் பார்வை படிப்படியாகக் குறைந்து வருதல்.

உள்ளே பதுங்கிக் கிடந்த சுவாசகோச க்ஷய வியாதி இருந்த பல கேசுகளில் இவ்வௌஷதத்தினுல் அவை வெளியே கிளப்பப்பட்டிருக்கின்றன.

1x, 2x வீரியங்களில் சில சமயங்களில் உபயோகிக்கப்

படுகிறதாயினும் 6, 30 முதலிய வீரியங்களில் உபயோகிப்பதே நலம்.

கண்கள் வெளிப் பிதுங்கும் குறியுள்ள கண்டமாலையில் உயர்ந்த வீரியங்களில் உபயோகிக்க வேண்டும்.

குறிப்பு:-- இவ்வௌஷதம் இருதயத்தின் வேலையை அதிகரிக்கிறது. இருதயத்தில் கொழுப்புச்சதை உள்ள சமயங்களில் அதனால் அதிக வேலை செய்ய முடியாமல் போய்விடும். ஆதலால் உடல் பருமனைக் குறைப்பதற்காகச் சிகிச்சை செய்யும்போது இவ்வௌஷதத்தை மிகுந்த எச்சரிக்கையுடனே உபயோகிக்க வேண்டும்.

ட்ரில்லியம் பெண்டுலம்

(TRILLIUM PENDULUM)

குளிர்ந்த தண்ணீரைத் தவிர மற்ற எல்லாவற்றிலும் வெறுப்பு அல்லது ஐஸ் கலந்த தண்ணீரில் விருப்பம். எல்லாப் பொருள்களும் நீல நிறமாய்த் தெரிதல். இடது பக்கம் அதிகமாய்த் தாக்கப்பட்டிருக்கும். திரவப் பொருள்கள் உடலினுள்ளே அழுகும் குணம்.

இரண்டு வாரங்களுக்கு ஒரு முறையாக ஏராளமான போக்குள்ள மாதவிடாய் தோன்றி ஒரு வாரம் அல்லது அதற்கு மேலும் நீடித்திருக்கும் சமயங்களில் இது விசேஷமாகப் பயன்படும்.

மூக்கு, சுவாசகோசங்கள், மூத்திரக் காய்கள், கருப்பை முதலிய இடங்களிலிருந்து ஏற்படும் பலவகையான இரத்தப் பெருக்குகளிலும் இது உபயோகமுள்ளது. பிள்ளைப் பெறுவதற்கு முன்பும் பெற்ற பிறகும் மாதவிடாய் மறையும் காலங்களிலும் ஏற்படும் இரத்தப் பெருக்குகளுக்கும் நார்ப் பொருள் சேர்ந்த சதைக் கட்டிகளால் கருப்பையிலிருந்து ஏற்படும் இரத்தப் பெருக்குக்கும் உபயோகமுள்ளது. கருப்பை இடம் மாறிவிட்ட காரணத்தால் உண்டாகும் இரத்தப் பெருக்குக்கும் தகுந்தது. இரத்தப் பெருக்கு மெதுவாகக் கசியலாம்; குபீர், குபீர் என்று வேகமாகவும் வெளியாகலாம். இரத்தம் அனேகமாக

நல்ல சிவந்த நிறமாகவும் ஏராளமாகவும் இருக்கும். மாத விடாயில் போக்கு ஏராளமாகவும் வேகமாகவும் நல்ல சிவந்த நிறமாகவும் வெளிப்படும்; சிறிது அசைந்தாலும் அதிகமாகும்; கெட்டியாய, கறுப்பு நிறமுள்ள, கட்டிகள் உள்ள போக்கும் இருக்கலாமென்றாலும் அது விசேஷமான குறியல்ல.

மாதவிடாய் வழக்கத்தைவிட முன்னதாகத் தோன்றுவதும் ஏராளமான போக்குடனும் இருத்தல்; போக்கு முதலில் நல்ல சிவப்பாகவும் பிறகு நிறம் வெளுத்தும் இருத்தல்; உடற் பயிற்சியினால் களைப்பு உண்டாகிப் போக்கு வெளிப்படுதல். மாதவிடாய் மறையும் காலத்தில் ஏராளமான போக்கு. இடுப்பும் கீழ்முதுகும் துண்டு துண்டாக உடைந்து கீழே விழுந்து விடுமென்ற உணர்ச்சியுடனும் அவ்விடங்களை இறுகக் கட்டவேண்டுமென்ற விருப்பத்துடனும் கருப்பையிலிருந்து இரத்தப் பெருக்கு. இறுகக் கட்டினால் சௌகரியம் உண்டாகும்.

மூக்கிலிருந்து ஏராளமான இரத்தப் பெருக்கு.

இடுப்பும் முதுகும் விட்டுப் போய்த் தனித் தனியாய்க் கீழே விழுந்து விடுமென்ற உணர்ச்சி; அவ்வுணர்ச்சி இடுப்பை இறுகக் கட்டினால் குறைவாய் இருத்தல்; உடலில் அசைவு ஏற்படும்போது ஒவ்வொரு தடவையும் இரத்தம் குபீர் குபீர் என்று வெளிப்படுதல் ஆகிய குறிகளுடன் கருச்சிதைவு நேரும்போல் தோன்றுதல் (காலோபில்லம், ஸேபியா).

கருப்பை அடிக்கடி நழுவும் குணம்.

பிள்ளைப்பெற்ற பிறகு வெளிப்படும் கழிவு ஏராளமாகவும் பல நாட்களுக்கு நீடித்தும் இருக்கும்.

அளவுக்கு மிஞ்சிய உழைப்பினால் மாதவிடாய் தோன்றும்.

ட்ரில்லியம் தேவையாகும் இரத்தப் பெருக்கில், குறிப்பாகக் கருப்பையிலிருந்து வெளியாகும் இரத்தப் பெருக்கில் கீழ் உள்ள குறிகள் காணப்படும்.

1. மயக்க உணர்ச்சி. 2. வயிற்றில் பள்ளம் பறிக்கும் உணர்ச்சி 3. கண்பார்வை மங்குதல். 4. இருதயப் படபடப்பு. 5. மூக்கு அடைப்பும் காதுகளில் ஓசைகளும். 6. கை கால்

கள் சில்லிட்டு நாடி வேகமாகவும் பலவீனமாகவும் துடித்தல். 7. எலும்புகள் உடைந்து போய்விட்ட உணர்ச்சி.

சுவாசகோச க்ஷயத்தில் இரத்தம் கலந்த கோழை வெளிப்படும் ஆரம்ப நிலையிலும் ஏராளமான சீழ்ப் போன்ற கோழை, விடாக்காய்ச்சல், வேதனையளிக்கும் இருமல் ஆகிய குறிகள் காணப்படும் முற்றிய நிலைமையிலும் உபயோகமாகும்.

யுரேனியம் நைட்ரிகம்

(URANIUM NITRICUM)

மதுமேக வியாதியை இது குணம் செய்கிறது என்று புகழ் பெற்றிருக்கிறது. ஏராளமான தாகம், நாக்கு காய்ந்திருத்தல்; இரவில் மூத்திரம் ஏராளமாய் வெளியாகுதல்; அளவு கடந்த பலவீனம்; இரத்த சோகை.

அதிக உடல் மெலிவு; உடல் முழுவதும் பொதுவான நீர்ச் சுரப்பு.

வயிற்றிலும் வஸ்திக குடலிலும் புண்கள்.

யூர்டிகா யுரென்ஸ்

(URTICA URENS)

"அறிப்பும் சொறிந்தால் வில்லை வில்லைகளாகத் தடிப்பதுமான சரும வியாதியுடன் கூடிய வாதரோகம்."

சருமம் தடித்து நடுவில் வெண்மையான திட்டும் சுற்றிலும் சிவந்தும் இருக்கும்; எரிச்சலும் கொட்டும் வலிகளும்; அந்த இடங்களைத் தேய்த்து விட்டால் குறையும். நெருப்பினால் சுடப்பட்டதுபோல் சருமத்தில் அறிப்பும் எரிச்சலும். இடைவிடாமல் தேய்த்துக் கொண்டே இருக்கச் செய்யும் வெளுத்த சருமக் கோளாறு.

வலது தோள்பட்டைத் தசையில் வலி.

நெருப்புப் பட்ட காயங்கள் (வீரியப் படுத்திய ஔஷதத்தை உள்ளுக்குச் சாப்பிடக் கொடுப்பதுடன்) காயங்களின் மேலும் தடவலாம்.

தேனீக் கொட்டுகளுக்கு மிகவும் உபயோகமுள்ளது (அனேகமாக ஒரு சஞ்சீவியே).

பாம்பு கடியிலும் உபயோகித்துப் பார்க்கலாம் (உள்ளுக்குச் சாப்பிடுவதுடன் கடியின் மேல் தடவவும் செய்யலாம்) பாம்பு விஷத்துக்கு இது முறிவு எனப் புகழ் பெற்றதாகும். இதற்குக் கீழ் உள்ள விசேஷக் குறிகள் காரணமாய் இருக்கலாம். எரிச்சல், கொட்டும் வலிகள், புண்ணுள்ள வலி, நாடித்துடிப்பின் எண்ணிக்கை அதிகமாகுதல், கடைசியாகப் பல்வேறு உறுப்புகளிலிருந்து இரத்தப் பெருக்கு எடுக்கச் செய்யும் வல்லமையையும் சேர்த்துக் கொள்ளலாம்.

ஒவ்வொரு வருஷமும் அதே சமயத்தில் குறிகள் திரும்பித் தோன்றும். இவ்விதம் முறைவைத்துத் தோன்றும் குணம் ஒவ்வொரு வருஷமும் குறிப்பிட்ட ஒரு பருவக் காலத்தில் தோன்றும் சிலவகை முறைச் சுரங்களுடன் ஒற்றுமையாய் இருக்கிறது. அந்தப் பருவக் காலத்தைக் குறை சொல்ல முடியாது; (முறைச் சுரத்தின் தன்மை அது). இவ்விஷயமாகச் சிந்தனையாளர்களின் சிந்தனையை வரவேற்கிறேன்.

வலேரியானு

(VALERIANA)

"மனக் குறிகளும் உடல் குறிகளும் திடீர் திடீரென்று மாறுதல்". வலிகள் உடலின் உட்பக்கத்திலிருந்து வெளிப்பக்கம் வரும்.

தொண்டையிலிருந்து கீழே ஒரு நூல் தொங்கிக் கொண்டிருக்கும் உணர்ச்சி.

நரம்பு சம்பந்தமான வேதனை; நிலைகொள்ளாமை; சும்மா இருக்க முடியாது.

தொடை நரம்பு வாதத்தில் நிற்கும்போதும் காலைத் தரையில் ஊன்றிக் கொண்டிருக்கும் போதும் வலி அதிகமாகும்.

சிவப்பாய் இருந்த இடம் வெண்மையாய் மாறும்.

குழந்தை தயிர்க் கட்டியாய் மாறிய பாலைக் கட்டி கட்டிகளாக வாந்தி செய்தல்.

தண்ணீர் போன்ற மலத்துடன் தயிராய் மாறிய பால் கட்டி கட்டிகளாகக் காணப்படுதல்; குழந்தைகள் மிகக் கடுமையாய்க் கதறி அழுதல்.

குதிகால்களில் இடைவிடாத வலி.

குதிகால்களில், விசேஷமாக வலது குதிகாலில், வலி உட்கார்ந்திருக்கும் வரையில் விடாமல் இருக்கும். குதிகால் பக்கத்தில், உட்கார்ந்திருக்கும்போது இழுக்கும், பலவீனமான உணர்ச்சி; எழுந்திருந்தால் மறைந்து போகும்.

வெராட்ரம் விரைட்

(VERATRUM VIRIDE)

தீடீர்க் குணம்.—வேகமாய் இரத்தம் சேருதல்.—நிறைந்த உணர்ச்சி. மதமதப்பான உணர்ச்சி.

நாடி மெதுவாக, மிருதுவாகப் பலவீனமாய் ஒழுங்கில்லாமல் விட்டு விட்டுத் துடிக்கும். நாடித்துடிப்பின் எண்ணிக்கை திடீரென்று அதிகமாகிப் பிறகு கொஞ்சங் கொஞ்சமாகக் குறைந்து வந்து வழக்கத்தைவிட சிறிது குறைவாகும். முகம் சிவந்திருத்தல். காதுகளில் உஸ்ஸ் என்ற ஓசை. மார்பில் அமுக்கும் உணர்ச்சி. மூர்ச்சையுடன் உடல் வெளுத்தல். உடுத்தி இருக்கும் ஆடைகள் பொருந்தமாய் இல்லாததுபோல் வேதனை. "தூங்கும் போது வலிப்புகள் ஆரம்பமாகுமோ என்று தோன்றும் அளவுக்கு அங்கு மிங்கும் நடுக்கம்". தலையைத் தாழ வைத்துப் படுப்பார். உடல் முழுவதும் நாடித்துடிப்புகள். மெல்லுவதுபோல் தாடைகளை அசைத்தல். மூச்சுக் காற்று நாற்றம் வீசுதல்.

"மெதுவாகவும் ஆழமாகவும் சுவாசித்தல்; மார்பில் கனமான பொருள் வைக்கப் பட்டிருப்பதுபோல் தோன்றுதல்". மிக விரைவாக கூடு ஏறிக் கொண்டும் இறங்கிக் கொண்டும் வியர்வையுடனும் கூடிய சுரம். குளிர்ச்சியான கசகச வென்று ஒட்டும் வியர்வை. நாக்கு வெண்மையாய்

அல்லது மஞ்சளாய் நடுவில் சிவந்த கோடுடன் இருக்கும். நாக்கில் வெந்து போனதுபோல் தோன்றுதல்.

வலிப்புகள், கண்ணின் கருமணிகள் விரிந்திருத்தல்; உச்சந்தலையும் பாதங்களின் குதிப்பாகமும் பூமியைத் தொட்டுக் கொண்டு மற்றப்பாகம் யாவும் வில்போல் வளைக்கப் பட்டிருத்தல்; குளிர்ச்சியான, கசகச வென்று ஒட்டும் வியர்வை முதலிய குறிகளுடன் மூளை, முள்ளந் தண்டு பற்றிய வியாதிகள்.

வெய்யல் தாக்கி ஏற்படும் கோளாறுகள்; தலை நிறைந்தும் கனமாகவும் தோன்றுதல்; சுத்த இரத்தக் குழாய்களில் துடிப்பு; ஒசைகளை அறியும் சக்தி அதிகமாகுதல்; காதுகளில் உஸ்ஸ் என்ற இரைச்சல்; கண்ணின் கருமணிகள் விரிவடைதல்; பார்க்கும் பொருள்கள் இரண்டிரண்டாக அல்லது அவைகளின் ஒரு பாதிமட்டும் தெரிதல்; வாந்தி; சுவாசிக்க அதிகக்கஷ்டம்; முகம், கைகள், பாதங்கள் ஆகிய இடங்களில் குளிர்ந்த வியர்வை.

அதிக இரத்தம் சேர்ந்த குறியுடன் மூளை இரத்தக் குழாய் வெடித்தல்; கடுமையான தலைவலி; தலை சுடாய் இருத்தல்; கண்கள் கோவைப்பழம் போல் சிவந்திருத்தல்; தடங்கிய பேச்சு; மெதுவாகவும் நிறைந்தும் செல்லும் நாடி; குமட்டலுடனும் வாந்தியுடனும் கண்பார்வை மங்குதல்.

"சுவாசகோச வேக்காட்டின் ஆரம்பத்தில் அவ்வுறுப்பில் அதிக இரத்தம் சேர்ந்துள்ள நிலைமை; உடல் சூடு அதிகமாய் இருக்கும்; நாடி கடினமாகவும் நிறைந்தும் இருப்பதுடன் வேகமாகவும் துடிக்கும். வேகமாகச் சுவாசித்தல்; இவைகளுடன் சீரண சம்பந்தமான வேதனைக் குறிகளும் உண்டாகும்." A. L. ப்ளாக்வுட்.

வெர்பாஸ்கம்

(VERBASCUM)

இருமல்: ஆழ்ந்தும் கடூரமாகவும் தம்பட்டம் அடிப்பது போலவும் இருத்தல்.

"தொப்பூழைச் சுற்றி சுருட்டி இழுக்கும் வலிகள்; குடல்

கள் முறுக்கிக் கொள்வதால் வலி தோன்றுவது போல் உணர்ச்சி. (காலோஸிந்திஸ், குப்ரம், ப்ளம்பம்).''

''சுருட்டி இழுக்கும், நசுக்கிப்பிழியும்,-பாரிசவாதமடையச் செய்யும் குணமுள்ள முகவலி; வலி கன்ன ஏலும்புகளில் இருக்கும்.''

''வாயில் உப்புத் தண்ணீர் சேருதல்.''

காதுகள் அடைத்துப் போனது போல் செவிடர்குதல். செவிட்டுத் தன்மையைப் பல சமயங்களில் குணம் செய்திருக்கிறது.

வெர்பாஸ்கம் எண்ணெய் அல்லது முல்லீன் எண்ணெய் காது வலியை உடனே நீக்குமென்ற புகழ் பெற்றிருப்பவை. (ஆனால் இவ்விதமாகக் கண்களை மூடிக்கொண்டு நான் இவ்வௌஷதத்தை ஒரு பொழுதும் உபயோகித்ததில்லை).

மலம் கல்போல் கடினமாகிக் குடல்களில் அடைப்பு ஏற்படுதல்.

உறக்கப் படித்ததினால் தொண்டை கட்டிப் போகுதல்.

வைபுர்னம் ஓபுலஸ்

(VIBURNUM OPULUS)

திடீரென்று சுருட்டி இழுக்கும் வலிகளும் வயிற்று வலிகளும்.

மாதவிடாய் ஏற்படுவதற்குச் சற்று முன்னதாக கடுமையான வலி கருப்பையிலும் அடி வயிற்றிலும் ஏற்படுதல்; அதிக நீலை கொள்ளாத தன்மையுடன் வலி பல மணி நேரம் நீடித்திருக்கும். சதைத் துணுக்குகள் வெளிப்படும் வலியுள்ள மாதவிடாய்.

வின்கா மைனர்

(VINCA MINOR)

அதிகப் பலவீனம்.—தான் இறந்துவிடுவோ மென்று

தோன்றும் பலவீனம். எல்லா இரத்தக் குழாய்களிலும் நடுங்கும் உணர்ச்சி.

அதிக பலவீனத்துடன் அளவு மீறிய போக்குள்ள மாத விடாய்; போக்கு கறுஞ் சிவப்பாய் இருக்கும்; ஏராளமாக வும் இடைவிடாமலும் வெளிப்படும்.

கருப்பையிலிருந்து மெதுவாக இரத்தம் வெளிப்படுதல். நார்ப்பொருள் சேர்ந்த சதைக் கட்டியிலிருந்தும் இவ்வாறே வெளியாகும்.

மாதவிடாய் மறைந்து நீண்டகாலம் ஆய்விட்ட பெண் களுக்குக் கருப்பையிலிருந்து மெதுவாக வெளிப்படும் இரத் தப் பெருக்கு.

வைபேரா

(VIPERA)

வைபேராவில் (இது ஜர்மனி நாட்டிலுள்ள விரியன் பாம்பு) ஒரே ஒரு முக்கிய குறி இருக்கிறது. ஒரு குறியே ஆயினும் அது சுடர் விட்டுப் பிரகாசிக்கிறது.

கையையோ காலையோ கீழே தொங்க விட்டால் அந்த இடம் கனமாகி வெடித்துப் போய்விடு மென்று தோன்றுவது டன் பொறுக்க முடியாத அளவு வலியும் உண்டாகும்.

கை கால்களைக் கீழே தொங்க விட்டால் அவை கன மாய் வெடித்து விடும் போல் தோன்றுவது இவ்வௌஷதத் தின் மிக விசேஷமான குறி. சம்பந்தப்பட்ட கையை அல் லது காலை வியாதியஸ்தர் மேலே தூக்கிவைத்துக் கொள்ள நேரும் (அதாவது கால்கள் தாக்கப்பட்டிருந்தால் அவை களை உயரமாய்த் தூக்கிவைத்துக் கொள்வார்).

அசுத்த இரத்தக் குழாய்களின் வேக்காட்டிலும் வீக் கத்திலும் சில சமயங்களில் மேலுள்ள குறி காணப்படும். காலில் புண் அழுகிப்போய் விட்ட ஒரு கேசில் இக்குறி யைக் கண்டிருக்கிறேன். இவ்வௌஷதத்தினால் குணம் ஏற்பட்டது.

இறப்பதற்கு முன் சுவாசகோசங்களில் ஏற்படும் நீர் வீக்கம்.

"நீடித்திருக்கும் நீர் வீக்கத்துடன் புண்கள் தோன்றும் குணம்." (என்னுடைய அனுபவத்தைக் கொண்டு இக்குறியைப்பின் வருமாறு மாற்றியும் எழுதலாம்). நீடித்திருக்கும் குணமுள்ள நீர் வீக்கத்துடன் கூடிய புண்கள். இவ்விதம் தாக்கப்பட்டிருந்த ஒரு காலை வைபோராவை உபயோகித்து நானும் குணம் செய்திருக்கிறேன்.

விஸ்கம் ஆல்பம்

(VISCUM ALBUM)

இடது பக்கமாய்ப் படுத்தால் மூச்சுத் திணறும் உணர்ச்சி.

மாதவிடாயில் போக்கு ஒரு பகுதி நல்ல சிவப்பாகவும் மறு பகுதி கறுத்தும் கட்டிகளாகவும் வெளியாகும்; மந்தமான தலைவலி, கண்கள் குழி விழுந்திருத்தல் ஆகிய குறிகளும் காணப்படும். "அது கருப்பையைச் சுருங்கச் செய்து இரத்தப் பெருக்கை நிறுத்துகிறது."

எக்ஸ்-ரே

(X-RAY)

பிறப்பு உறுப்புகளைப்பற்றிய சுரப்பிகளே பெரிதும் தாக்கப்பட்டிருக்கும். சிணைப்பைகள். விரைகள் ஆகியவை சிறுத்தல். மலட்டுத்தன்மை. சிற்றின்பத்தில் ஆசை அழிதல்.

சாம்பல் படை. சருமம் காய்ந்து சுருங்கிப் போகும். வலியுள்ள வெடிப்புகள். நீர்க்கசிவு இல்லாமல் வறண்ட கரப்பான்படை. பாலுண்ணி போன்ற கெட்ட சதை வளர்ச்சி. உள்ளங்கைகள் கறடு முறடாகவும் செதில் செதிலாகத் தோல் உரிவதும். நகங்கள் கட்டையாகுதல்.

களைத்த உணர்ச்சி.

இரத்த சோகை.

விழுங்கினால் தொண்டையில் வலி.

மேகவெட்டைக் குறிகள் உள்ளே அமுக்கப்படுதல் அல்லது மூவகை விஷங்களும் ஒன்று சேர்ந்ததினால் உண்டாகும் குறிகள் உடலின் வெளிப்புறத்தில் தெரிதல்.

உள்ளே அடக்கப்பட்ட மேகவெட்டையை எக்ஸ்-ரே வெளியே தோன்றச் செய்கிறது.

அனுபந்தம்

முறிவு பற்றிய உறவு.

இந்நூலின் முதல் பாகம் முழுவதிலும் இரண்டாம் பாகத்தில் 434 பக்கங்களிலும் விவரிக்கப்பட்டுள்ள மிக முக்கியமான ஔஷதங்கள் ஒவ்வொன்றுக்கும் உள்ள உறவு விஷயங்கள் (முறிவைத் தவிர) சிறிது விளக்க மாகவே எழுதப்பட்டன. இப்பொழுது முறிவு பற்றிய உறவு பற்றிச் சில குறிப்புகள் கொடுக்கப்படுகின்றன. அவை ஏராளமாக இல்லையென்றாலும் வைத்தியத்துறையிலுள்ளவர்களுக்குப் போதுமான அளவு உபயோகமாய் இருக்கும்.

முறிவு ஔஷதம் உடலில் வேலை செய்துகொண்டிருக்கும் ஔஷதத்தை அழிக்கிறது; அல்லது அதற்கு எதிராய் வேலை செய்கிறது. தவறுன ஔஷதம் கொடுக்கப்பட்ட சமயங்களில், நுண்ணிய அளவிலே உடலில் புகுந்துவிட்ட ஔஷத விஷத்தினால் சிற்சில வேளைகளில் புதிய வியாதிக் குறிகள் தோன்ற வாரம்பிக்கின்றன. இவ்விதமான ஒரு சந்தர்ப்பத்தில் தவறுகக் கொடுக்கப்பட்ட ஔஷதத்தை முறிக்கக்கூடிய வேறு ஒரு ஔஷதத்தை உபயோகிக்க வேண்டும்.

புதிதாகத் தோன்றும் வியாதிக்குறிகள் தவறுன ஔஷதத்தினாலும் தோன்றலாம். அல்லது வியாதியினுடைய புதுக் குறிகளாகவும் இருக்கலாம். எதுவாய் இருந்தாலும் அச்சமயத்தில் வியாதியஸ்தருக்குப் பொதுவான சௌகரியம் (அதாவது வியாதியஸ்தர் தனக்குச் சிறிது உடம்பு தேவலை போல் இருக்கிறது என்று சொல்வார்) ஏற்பட்டால் புதுக் குறிகளைப்பற்றிக் கவலைப்படத்தேவையில்லை. அவை தாமாகவே சீக்கிரத்தில் மறைந்து போகும்; அப்படி இல்லாவிட்டால் ஔஷதத்தை முறிக்கத்தான் வேண்டும். துரதிர்ஷ்ட வசமாக முறிவு ஔஷதம் கண்டுபிடிக்கப்படாத சில ஔஷதங்களும் ஹோமியோபதியில் இருக்கின்றன.

சில சமயங்களில் குறிகளுக்கு ஏற்ற ஔஷதமே உபயோகித்தாலும் அவ்வௌஷதம் அளவுக்கு மிஞ்சி வேலை செய்ய ஆரம்பிக்கிறது. இச் சமயங்களிலும் ஔஷதத்தை முறிக்கத்தான் வேண்டும்.

அளவுக்கு மிஞ்சி ஔஷதம் வேலை செய்கிறது என்றால் என்ன? சாதாரணமாகச் சிலருக்கு ஔஷதங்களைத் தாங்கும் சக்தி இருப்பதில்லை. அவ்விதமான நபர்களுக்குக் குறிகளுக்கு ஏற்ற ஔஷதம் கொடுத்தால் நீக்கப்படவேண்டிய வியாதிக்குறிகள் நீங்கிப் பிறகு புதிய வியாதிக்குறிகள் தோன்ற ஆரம்பிக்கும். ஔஷதம் அளவுக்கு மிஞ்சி வேலை செய்வதற்கு இதுவே அடையாளம்.

பின்வரும் பக்கங்களில் முதலிலுள்ள ஒவ்வொரு ஔஷதத்துக்கும் முறிவாக உள்ள ஔஷதங்களை அதன் பின்னால் எழுதியிருக்கிறோம். மிக முக்கியமான முறிவு ஔஷதங்கள் தடித்த எழுத்துக்களில் கொடுக்கப்பட்டுள்ளன.

அக்டியா ரஸிமோஸா:— அகோனைட், பாப்டீஷியா.

அகோரிகஸ் மஸ்கோரியஸ்:— கல். கார்ப், பல்ஸடில்லா, ரஸ் டாக்ஸிகோடெண்ட்ரன்.

அகோனைட்டம் நாபில்லஸ்:— அஸடிக் ஆஸிட்

அர்த்ராஸினம்:— ஆர்ஸனிகம், க்ரீஸோட், காம்போரா கார்பாலிக் ஆஸிட், கார்போவெஜி, பல்ஸடில்லா, ரஸ் டாக்ஸ், லாச்சஸிஸ், ஸைலீஷியா.

அபிஸ் மெல்லிபிகா:— இபிகாக், கந்தாரிஸ், லாச்சஸிஸ், லேடம்.

அம்மோனியம் கார்பானிகம்:— ஆர்னிகா, காம்போரா, ஹிப்பார் ஸல்பர்,

அர்ஜண்டம் நைட்ரிகம்:— ஆர்ஸனிகம்: நேட்ரம் மூர்.

அல்லியம் ஸிபா:— ஆர்னிகா, சாமோமில்லா, தூஜா, நக்ஸ் வாமிகா, வெராட்ரம் ஆல்பம்,

அலாமிஞ:— இபிகாக், காம்போரா, சாமோமில்லா.

அனகார்டியம்:— காபியா, ரஸ் டாக்ஸ்.

அஸ்குலஸ் ஹிப்பகாஸ்டானம்:— நக்ஸ் வாமிகா.

அஸடிக் ஆஸிட்:— அகோனீட், இக்னேஷியா, ஓபியம், காபியா, டபாகம், நேட்ரம் மூர், ஸ்ட்ரமோனியம்.

ஆண்ட்டிமனியம் க்ருடம்:— கல், கார்ப், மெர்கூரியஸ் ஸொலுபுலிஸ். ஹிப்பார் ஸல்பர்.

ஆண்ட்டிமனியம் டார்ட்டாரிகம்:— அஸபோடிடா.

ஆர்னிகா மொண்டானா:—அகோனீட். ஆர்ஸனிகம், இக் னேஷியா, இபிகாக், சைனா.

ஆர்ஸனிகம் ஆல்பம்:—இபிகாக். ஐயோடியம், காம்போரா. கார்போ வெஜி, கிராபைடிஸ். சின்னினம் ஸல்ப், சைனா, டபாகம், நக்ஸ் வாமிகா, பெர்ரம், வெராட்ரம் ஆல்பம், ஸாம்புகஸ், ஹிப்பார் ஸல்பர்.

ஆரம் ட்ரிபில்லம்:—அஸடிக் ஆஸிட், பல்ஸடில்லா, லாக் டிக் ஆஸிட்.

ஆரம் மெட்டாலிகம்:—காக்குலஸ், காபியா, காம்போரா, குப்ரம், சைனா, பல்ஸடில்லா, பெல்லடொன்னா, மெற் கூரியஸ் ஸொலூ, ஸ்பைஜீலியா.

ஆலோ ஸகோட்ரினா:—காம்போரா, நக்ஸ் வாமிகா, லேக போடியம், ஸல்பர்.

இக்னேஷியா:—ஆர்னிகா. காக்குலஸ், காபியா, காம் போரா பல்ஸடில்லா.

இபிகாக்குவானா:—ஆர்னிகா, ஆர்ஸனிகம், சைனா, டபாகம், நக்ஸ் வாமிகா.

ஐயோடியம்:—ஆண்ட்டிம் டார்ட், ஆர்ஸனிகம். ஓபியம், காபியா, காம்போரா, சின்னினம்ஸல்ப், சைனா, பாஸ் பரஸ், பெல்லடொன்னா, ஸ்பாஞ்சியா, ஹிப்பார் ஸல்பர்,

ஐரிஸ் வர்ஸிகலர்:—நக்ஸ் வாமிகா.

ஓபியம்—இபிகாக், நக்ஸ் வாமிகா, பெல்லடொன்னா. ஸ்ட்ர மோனியம்,

க்ரீஸோட்டம்:—அகோனீட், நக்ஸ் வாமிகா, பெர்ரம் மெட். (டெஸ்டே என்பவர் இதை மிகச்சிறந்த முறிவு ஔஷத மென்று கருதுகிறார்.

க்ளமேடிஸ் எரெக்டா:—காம்போரா, பிரயோனியா, மெற் கூரியஸ் ஸொலூ.

கந்தாரிஸ்:—அபிஸ் (மூத்திரப்பை வேக்காட்டை முறிக் கிறது), காம்போரா, பல்ஸடில்லா—

கல்கேரியா கார்பானிகா;—இபிகாக், காம்போரா, நக்ஸ் வாமிகா, பாஸ்பரஸ்.

காக்குலஸ்:—இக்னேஷியா, காம்போரா, குப்ரம் மெட், சாமோமில்லா, டபாகம், நக்ஸ் வாமிகா.

காக்டஸ் க்ராண்டிப்ளோரஸ் :—அகோனைட், காம்போரா, சைனு.

காப்ஸிகம் :—காம்போரா. சைனு. ஹைட்ரோஸியானிக் ஆஸிட் அல்லது ஸல்பரின் வாயு, ஸீனு.

காபியா க்ரூடா:—அகோனைட், இக்னேஷியா, சாமோமில்லா, டபாகம், நக்ஸ் வாமிகா, பல்ஸடில்லா, பெல்லடொன்னு ஸல்பர்.

காம்போரா :—ஓபியம், கந்தாரிஸ், குப்ரம் மெட், டல்கமாரா, பாஸ்பரஸ்.

கார்போ அனிமாலிஸ் —ஆர்ஸனிகம், காம்போரா, நக்ஸ் வாமிகா.

கார்போ வெஜிடபிலிஸ் :—ஆர்ஸனிகம், காபியா, காம்போரா, சைனு, மெர்கூரியஸ் ஸொலூ, லாச்சஸிஸ்.

கால்மியா :—அகோனைட், பெல்லடொன்னு.

காலி அயோடேட்டம் :—ஹிப்பார் ஸல்பர். அல்லோபதி வைத்திய முறையில் மேகக்கிரந்தியினால் ஏற்படும் வியாதிக்குறிகளை நீக்குவதற்காகக் காலி அயோடேட்டத்தைப் பச்சை மருந்தாக உபயோகித்துச் சிகிச்சை செய்யப்பட்ட வியாதியஸ்தர்களுக்குத் தோன்றும் கோளாறுகளை நைட்ரிக் ஆஸிட் 12, 30 அல்லது 3x வீரியத்தில் முறித்து விடுவதாகக் க்ளார்க் கூறுகிறார்.

காலி கார்பானிகம்:—காபியா, காம்போரா.

காலி பைக்ரமிகம் :—ஆர்ஸனிகம், பல்ஸடில்லா, லாச்சஸிஸ்

காலோஸிந்திஸ் :—ஓபியம். காபியா, காம்போரா, காஸ்டிகம், சாமோமில்லா. ஸ்டாபிஸாக்ரியா.

காஸ்டிகம் :—அஸபோடிடா, காபியா, காலோஸிந்திஸ், டல்கமாரா, ப்ளம்பம், நக்ஸ் வாமிகா,

கிராஃபைடிஸ் :—அகோனைட், ஆர்ஸனிகம், நக்ஸ் வாமிகா,

குப்ரம் மெட்டாலிகம்:—இபிகாக், கோனியம், சாமோ

மில்லா, சைனு, டல்கமாரா, நக்ஸ் வாமிகா; பெல்ல டொன்னு, மெர்கூரியஸ் ஸொலூ, ஸிகுடா வீரோஸா, ஹிப்பார் ஸல்பர்.

கோல்சிகம் :—காக்குலஸ், காம்போரா, நக்ஸ் வாமிகா பல்ஸடில்லா, பெல்லடொன்னு, ஸ்பைஜீலியா.

கோனியம் மெகுலேட்டம்:—காபியா, டல்கமாரா, நைட்ரிக் ஆஸிட்.

சாமோமில்லா :—அகோனைட், அலுமினு, இக்னேஷியா, ஓபியம், காக்குலஸ், காபியா, காம்போரா, காலோ ஸிந்திஸ், கோனியம், நக்ஸ் வாமிகா, பல்ஸடில்லா, போரக்ஸ்.

செலிடோனியம்:—அகோனைட், காம்போரா, பிரயோனியா. காடிச்சத்து, ஓயின், காப்பி ஆகியவைகளும் முறி வாகும்.

சைனு அபீஷியனேலிஸ் :—ஆர்ஸனிகம், இபிகாக், கார்போ வெஜி, நக்ஸ் வாமிகா நேட்ரம் மூர். பல்ஸடில்லா, மெர்கூரியஸ் ஸொலூ, யூபடோரியம் பர்போலி யேட்டம், ரஸ் டாக்ஸ் ஸல்பர், ஹிப்பார் ஸல்பர்.

டல்கமாரா :—இபிகாக், காம்போரா, காலி கார்ப். குப்ரம் மெட், மெர்கூரியஸ் ஸொலூ.

டிரேரஸிரா ரோடண்டிபோலியா :— காம்போரா.

டிஜிடாலிஸ் :—ஓபியம், நக்ஸ் வாமிகா.

தூஜா :—காக்குலஸ், காம்போரா, சாமோமில்லா, பல் ஸடில்லா, ஸல்பர்.

நக்ஸ் வாமிகா :—அகோனைட், ஓபியம், காக்குலஸ், காம் போரா, சாமோமில்லா, தூஜா, பெல்லடொன்னு.

நேட்ரம் கார்பானிகம் :—காம்போரா.

நேட்ரம் மூரியாடிகம் :—ஆர்ஸனிகம், நக்ஸ் வாமிகா, போஸ் பரஸ்.

நைட்ரிக் ஆஸிட் :—கல் கார்ப், மெர்கூரியஸ் ஸொலூ, மெஸரியம், ஸல்பர், ஹிப்பார் ஸல்பர்.

ப்ரோமியம் :—அம்மோனியம் கார்ப், ஓபியம், காம்போரா, மெக். கார்ப்.

க்ளம்பம் மெட்டாலிகம் :—அலுமென், அலூமினு, ஆண்ட்டி மனியம் க்ரூடம், ஆர்ஸனிகம் ஆல்பம், எதூஸா ஸைனு பியம் (டெஸ்ட்டே இதை மிகச் சிறந்ததென்று கூறு கிறார்), ஓபியம், க்ரீஸோட், காக்குலஸ், நக்ஸ் வாமிகா, பிளாட்டினம் மெட்டாலிகம், பெட்ரோலியம், பெல்ல டொன்னு, ஸல்ப்யூரிக் ஆஸிட், ஸிங்க்கம். ஸல்ப்யூரிக் ஆஸிடைத் தண்ணீரில் கலந்து பானமாய்க் குடித்தால் காரீயத்தினல் உண்டான நாட்பட்ட கோளாறுகளை மிக நன்றாய் முறிக்கும்.

பல்ஸடில்லா :—இக்னேஷியா, காபியா, கோல்சிகம், சாமோ மில்லா, சைனு, நக்ஸ் வாமிகா, பெல்லடொன்னு. மூக் கின்தீர்க்கோர்வை, இருமல் ஆகியவைகளில் அனுபவ மில்லாதவர்கள் ஆரம்பத்திலேயே பல்ஸடில்லாக் குறி கள் இல்லாதபோதுகூட அவ்வௌஷதத்தைக்கொடுத் துப் பாழ்செய்து விடுகின்றனர். அச்சமயங்களில் தகுந்த ஔஷதம் கல்கேரியா பாஸ்.

பாரிடா கார்ப் :—ஆண்ட்டிம் டார்ட், காம்போரா. டல் கமாரா, பெல்லடொன்னு, மோர்கூரியஸ் சொலூ, ஸிங்க்கம்.

பாஸ்பரஸ் :—காபியா, டெரெபிந்தினு, நக்ஸ் வாமிகா.

பாஸ்பாரிக் ஆஸிட் :—காபியா, காம்போரா, ஸ்டாபி ஸாக்ரியா.

பிரயோனியா ஆல்பா :—அகோனேட், அலூமினு, இக்னேஷியா, க்ளமேடிஸ். காம்போரா, சாமோமில்லா. செலிடோனியம், நக்ஸ் வாமிகா, பல்ஸடில்லா, ரஸ் டாக்ஸ்.

பெட்ரோலியம் :—காக்குலஸ், நக்ஸ் வாமிகா.

பெர்பொரீஸ் வல்கெரீஸ் :—அகோனேட், காம்போரா, பெல்ல டொன்னு.

பெர்ரம் மெட்டாலிகம் :—ஆர்ஸனிகம், இபிகாக், சைனு, பல்ஸடில்லா, ரிப்பார் ஸல்பர்.

பெல்லடொன்னு :—ஓபியம், காபியா, காம்போரா, ஸபடில்லா, ஹயஸ்யாமஸ், ரிப்பார் ஸல்பர்.

போடோபில்லம் :—காலோஸிந்திஸ், நக்ஸ் வாமிகா, லாக்டிக் ஆஸிட்.

போரக்ஸ் :—காபியா. சாமோமில்லா.

மூரியாடிக் ஆஸிட் :—இபிகாக் (இது நிச்சயமான மூறிவு என்று டெஸ்ட்டே கூறுகிறார்). காம்போரா, பிரயோனியா.

மெக்னீஷியா கார்பானிகா :—ஆர்ஸனிகம். நக்ஸ் வாமிகா, பல்ஸடில்லா. மெர்கூறியஸ் ஸொலூ, ரீயம்.

மெதாரினம்:— இபிகாக் (வறண்ட இருமல் தோன்றினால்).

மெர்கூறியஸ் கரோஸிவஸ் :— மெர்கூறியஸ் ஸொலூ, ஸேபியா, ஸைலீஷியா (டாக்டர் ஹெரிங்), லொபேலியா (டெஸ்டே).

மெர்கூறியஸ் ஸொலுபுலிஸ் :—அஸபோடிடா (எலும்புக் கோளாறுகள்); ஆரம் மெட்டாலிகம் (தற்கொலை செய்து கொள்ளும் சித்தப் பிரமை; எலும்புகள் சொத்தையாகுதல்); பெல்லடொன்னா, கார்போ வெஜி, சைனா (வாயில் அளவுகடந்த உமிழ்நீர் பெருகுவது நீண்டகாலமாய் நீடித்திருத்தல்); டல்கமாரா (ஈரக் கசிவுள்ள மழைக்காலங்களில் உமிழ்நீர்ப் பெருக்கு கூடுதலாகுதல்) பெர்ரம் மெட், க்வாய்கம், ஹிப்பார் ஸல்பர் (மனக்குறிகள்); ஐயோடியம் (சுரப்பிகளைப்பற்றிய கோளாறுகள்); லாச்சஸிஸ், மெஸரியம் (நரம்பு வலி) நைட்ரிக் ஆஸிட். (எலும்புக் கோளாறுகள், வாயில், விசேஷமாக ஈறுகளில், குழிப்புண்கள் — இது என் அனுபவம்); தூஜா, விசேஷமாக பைடோலக்கா, ஸ்டாபிஸாக்ரியா, ஸ்டில்லிங்கியா, ஸல்பர்.

மெஸெரியம்:— அகோனைட், கல், கார்ப், காலி அயோட், நக்ஸ் வாமிகா. பிரயோனியா, மெர்கூறியஸ் ஸொலூ.

ரஸ் டாக்ஸிகோடெண்ட்ரன்:—க்ரோடன் டிக்லியம், காபியா, காம்போரா, ப்ளம்பம், ப்ரயோனியா, பெல்லடொன்னா, மெர், சொலூ, ரோடோடெண்ட்ரன், ஸல்பர், ஸாங்வினேரியா.

ரீயம்:— காம்போரா, காலோனிந்திஸ், சாமோமில்லா நக்ஸ் வாமிகா, பல்ஸடில்லா, மெர்கூரியஸ் ஸொலூ.

ரூடாக்ராவியோலென்ஸ்:— காம்போரா.

ரூமெக்ஸ் க்ரிஸ்பஸ்:— காம்போரா, கோனியம், பாஸ்பரஸ், பெல்லடொன்னு, லாச்சனிஸ், ஹயஸ்யாமஸ்.

ரோடோடெண்ட்ரன்:— க்ளமேடிஸ், காம்போரா, பிரயோனியா, ரஸ் டாக்.

லாச்சனிஸ்:—அலுமினு, காபியா, நக்ஸ் வாமிகா, நைட்ரிக் ஆஸிட், பாஸ்பாரிக் ஆஸிட், பெல்லடொன்னு, மெர்கூரியஸ் ஸொலூ, ஸீட்ரான் (டெஸ்ட்டேயின் அபிப்பிராயப்படி இது மிகச் சிறந்தது), ஹிப்பார் ஸல்பர்.

லேடம் பாலஸ்டிரி:— அபிஸ், காம்போரா. ரஸ் டாக், (டெஸ்ட்டேயின் அபிப்பிராயப்படி இது மிகச்சிறந்தது).

லைகபோடியம்:— அகோனைட், காபியா, காம்போரா, காஸ்டிகம், கிராபைடிஸ், சாமோமில்லா, பல்ஸடில்லா.

லொபேலியா இன்ப்ளேடா:— இபிகாக்.

வெராட்ரம் ஆல்பம்:—அகோனைட், ஓபியம், காபியா. காம்போரா, சைனு, ஸ்டாபிஸாக்ரியா (டெஸ்டேயின் அபிப்ராயப்படி இது பெரும்பாலான சமயங்களில் முறிவாகிறது).

வெல்ஸிமியம்:— காபியா, சைனு, டிஜிடாலிஸ், நக்ஸ் வாமிகா.

ஸ்ட்ரமோனியம்:— நக்ஸ் வாமிகா, பெல்லடொன்னு, மெர்கூரியஸ் ஸொலூ, ஹயஸ்யாமஸ்.

ஸ்டாபிஸாக்ரியா:— காம்போரா, தூஜா, மெர். சொலூ.

ஸ்டான்னம்:— பல்ஸடில்லா, (முறிவாய் இருந்தாலும் முன்னும் பிறகும் நல்ல வேலை செய்கிறது).

ஸ்பாஞ்சியா:— காம்போரா.

ஸ்பைஜீலியா:— ஆரம் மெட், காக்குலஸ், காம்போரா, பல்ஸடில்லா.

ஸபீனு:— காம்போரா, பல்ஸடில்லா.

ஸல்ப்யுரிக் ஆஸிட்:— பல்ஸடில்லா.

ஸல்பர்:— அகோனைட், காம்போரா, சாமோமில்லா, சைனு, தூஜா, பல்ஸடில்லா, மெர். ஸொலூ, ரஸ் டாக், ஸேபியா.

ஸிங்க்கம் மெட்டாலிகம்:—இக்னேஷியா, காம்போரா. ஹிப்பார் ஸல்பர்.

ஸீகேல் கார்னூட்டம்:—ஓபியம், காம்போரா.

ஸெலனியம்:—இக்னேஷியா, பல்ஸடில்லா.

ஸேபியா:—அகோனைட், ஆண்ட்டிம், க்ரூடம், ஆண்ட்டிம் டார்ட், ரஸ் டாக்.

ஸைலீஷியா:—காம்போரா, ப்ளூவாரிக் ஆஸிட், ஹிப்பார் ஸல்பர்.

ஸோரினம்:—காபியா.

ஹமாமலிஸ்:—ஆர்னிகா, காம்போரா, சைனு, பல்ஸடில்லா.

ஹயஸ்யாமஸ் நைகர்:—சைனு, பெல்லடொன்னு, ஸ்ட்ரமோனியம்.

ஹிப்பார் ஸல்பர்:—ஆர்ஸனிகம், சாமோமில்லா, பெல்லடொன்னு, ஸைலீஷியா.

ஹெல்லபோரஸ் நைகர்:—காம்போரா, சைனு.

ஹைட்ராஸ்டிஸ்:—ஸல்பர்.

ஹைபரிகும்:—ஆர்ஸனிகம், சாமோமில்லா.